# யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டம்

# Divine Plan of The Ages

## வேதாகமப் பாடங்கள்

VOL . I

# வேதாகமப் பாடங்கள்

"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும்
அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்."

---

தொகுதி – 1

---

# யுகங்களைப்பற்றிய தெய்வீகத் திட்டம்
# The Divine Plan of the Ages

தெய்வீக குணாதிசயத்தையும் மற்றும் தெய்வீக அரசாங்கத்தையும்
சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக விளக்கும் விளக்கவுரை:
வேத வசனப் பகுதிகளை உணர்ந்தறிந்து, இசைவாக்கி,
கடந்தகால மற்றும் தற்கால நிலையின் அனுபவமானது
தீர்க்கதரிசனங்களில் காண்பிக்கப்பட்ட பொற்கால யுகத்திற்குள்
மனுக்குலம் நுழைவதற்கான ஆயத்த வேலையும்,
படிப்பினையுமே எனக் காண்பித்தல்.
மேலும் அப்பொற்கால யுகத்தில், பீடிக்கும் தீமையை அழிக்கிறவரும்,
சீர்பொருந்தச் செய்கிறவருமான இயேசு கிறிஸ்துவின் மூலம்,
பூமியின் முழுக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்பட்டு,
கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்து,
நித்திய ஜீவனை அடையும் முழு வாய்ப்பைப் பெற்றுக்கொள்வர்
எனவும் காண்பித்தல். அப் 3:19–21

மறுபதிப்பு : 2019

சென்னை வேத மாணவர் சபை
22, முதல் தெரு, ராஜீவ் நகர்,
காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,
சென்னை– 600019.

**STUDIES IN THE SCRIPTURES**
**VOL-1**

**DIVINE PLAN OF THE AGES**
Tamil version

I Edition 2009 - 1500 copies
II Edition (Revised) 2019 - 1000 copies

**NOT FOR SALE**

Translated by:
**Coimbatore Bible Students,**
Rathinapuri, Coimbatore.

Revised by :

**Chennai Bible Students,**
No.22, I[st] Street, Rajiv Nagar,
Kaladipet, Thiruvottiyur
Chennai - 600 019.
India.

## அர்ப்பணிப்பு

### ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தருமானவருக்கும்

புத்திர சுவிகாரத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும்
பலியினாலே தேவனோடு உடன்படிக்கை செய்த அவருடைய பரிசுத்தவான்கள்
மற்றும்
கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளும் விசுவாச வீட்டார்கள்
மற்றும்
தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருந்து
பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிகள் ஆகியோரின் நலன்களுக்காக

### இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.

---

"தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம்
இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு."
"அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும்
எங்களிடத்தில் பெருகப்பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது
விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே
கூட்டப்பட வேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானித்திருந்த
தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை
எங்களுக்கு அறிவித்தார்."
– எபே. 3:11; 1:8–10

---

கி.பி.1886ல் பாஸ்டர் ரசல் அவர்களால் எழுதப்பட்டது



## வெளியீட்டாளரின் முன்னுரை

'யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டம்' என்கிற இந்த புத்தகம் ஒரு நவீன சிறந்த தரமான மத புத்தகமாக இருக்கிறது. இது புது சிந்தனைகளையும், கருத்துக்களையும் கொண்டிருக்கிறது. இது அநேக வேதாகம ஆதாரங்களுடன் தேவனுடைய மகா திட்டத்தை விரிவாக எடுத்துரைக்கிறது. வேதாகமத்தின் யுகங்களின் பிரிவுகளை வாசகர் சுலபமாக வேறுபடுத்தி காணும்படி செய்கிறது. அநேகர் வேதாகமத்தை புரிந்துகொள்ள உதவியிருப்பதால், உற்சாகமுள்ள வாசகர்களால் இது வேதாகமத்தின் திறவுகோல் என்று அறியப்பட்டிருக்கிறது.

இது 1886ல் எழுதப்பட்ட புத்தகம். இதன் கருத்து தற்கால போதகத்திலிருந்து மாறுபட்டிருக்கிறது. சாட்சி பகரவும் உலகை ஜெயங்கொள்ளவும் தயாராயிருக்கிற சபைகள், வேதாகமம் மற்றும் மதத்தைப் பற்றி குறைகூறப்படுவதின் மூலம் ஒரு பயங்கர தாக்குதலுக்கு ஆளாகியிருக்கின்றன. இந்த தாக்குதலுக்கு அறிவுப்பூர்வமாக பதிலளிக்க இயலாதிருக்கிறார்கள். இதன் மூலம் அநேகர் வேதாகமத்தின் மீதிருக்கிற நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள். ஆனால், 'யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டம்' ஊக்கமுள்ள கிறிஸ்தவர்களை மத நம்பிக்கையின்மையிலிருந்து திருப்புவதற்கும், அவிசுவாசிகளை ஒரு அடிப்படையான விசுவாசத்திற்குள் கொண்டு வருவதற்கும் உதவியிருக்கிறது.

இதன் ஆசிரியர், உலகளாவிய 'ஆபத்தின் நாட்களைப்' பற்றி குறிப்பிடத்தகுந்த தெளிவுடன் விளக்கியிருக்கிறார். மற்றவர்கள் சமாதானத்தைப் பற்றி பேசும்போது இதன் ஆசிரியர் போர், புரட்சி மற்றும் அராஜகம் ஆகியவற்றின் உச்சகட்டத்தில் உலக அரசாங்கங்களின் அழிவைக்குறித்து தைரியமாக முன் அறிவித்திருக்கிறார். 'ஆபத்தானது' மிகவும் நுணுக்கமாக சித்தரிக்கப்பட்டிருப்பது போல, தற்கால மற்றும் வருங்கால நிகழ்வுகள், ஆபத்தின் இருண்ட தருணங்களைத் தாண்டி தேவனுடைய "இராஜ்யத்தின் வருகையின்" மகிமையை அடையாளம் காண்கிறது. இந்தப் புத்தகத்தை விலைபெறப்பெற்ற பொக்கிஷமாக, 19, 20 மற்றும்

21ம் நூற்றாண்டின் நம்பத்தகுந்த மற்றும் குறிப்பிடத் தகுந்த மத சேவையாக நாங்கள் கருதுகிறோம்.

ஆகவே வாசகர்கள் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளும்படியாக ஜெபத்துடன் இந்த திருத்திய மொழிபெயர்ப்பை அன்புடன் வழங்குகிறோம்.

–வெளியீட்டாளர்



## யுகங்களைப் பற்றிய தெய்வீகத்திட்டம்

### ஆக்கியோனின் முன்னுரை

இப்புத்தகத்தை ஆக்கியோனும், வெளியிடுபவர்களும் இப்புத்தகமானது தேவனுடைய தெய்வீக திட்டங்களின் மேல் பசிதாகமும் கலக்கமுங்கொண்ட ஏராளமான ஜனங்களுக்குக் கிடைக்கவும் அதின் பலனாக அவர்கள் வெளிச்சம், சந்தோஷம், சமாதானம் மற்றும் தேவனோடு ஐக்கியமடைதல் ஆகியவை சர்வவல்ல தேவனுடைய தயவினால் அனுமதிக்கப்பட்டுள்ளதை அவர்கள் எல்லோருக்கும் முன்பாக அறிக்கையிட விரும்புகிறார்கள். இப்புத்தகத்தின் ஆங்கில முதற்பதிப்பானது இப்போதிருக்கிற வண்ணமாய் 1886–ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அதுமுதல் ஒன்றன்பின் ஒன்றாக அநேக பதிப்புகள் 20 வேற்று மொழிகளில் வெகுவிரைவாக உலகம் முழுவதிலும் சுமார் 50 இலட்சம் ஜனங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகமானது அனைவராலும் வாசிக்கப்பட்டிருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால், தொடர்ந்து பெறப்படும் தபால்கள் மூலம் எங்குமுள்ள ஜனங்களின் இருதயங்களிலும், மனதிலும் அது பலமான கிரியை செய்துவருகிறது என்பதை உறுதியாக அறிய முடிகிறது. வேதம் மனுக்குலத்திற்கான தெய்வீக வெளிப்பாடு என விசுவாசியாத ஆயிரக்கணக்கானோருங்கூட இப்புத்தகம் தங்களில் நற்கிரியை செய்கிறதென தெரிவிக்கிறார்கள், வேறு சிலர் தாங்கள் முன்பே மெய்த்தேவனையும் அவருடைய தெய்வீகத் திட்டங்களையும் அறியாதிருந்த காரணத்தினாலும், தங்களுக்கு முன்பே காட்டப்பட்ட மனிதக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டதினாலும், அக்கடவுளை மகிமைப்படுத்தவும் ஆராதனை செய்யவும் அறியாமல் நாத்திகராக அல்லது அவிசுவாசிகளாக இருந்து வந்ததாகவும் தெரிவிக்கிறார்கள்.

இப்புத்தகத்தின் முதற்பதிப்பு வெளியாவதற்கு ஐந்து வருடத்திற்கு முன்பு ஏறக்குறைய இதில் அடங்கியுள்ள அதே காரியங்களை "சிந்திக்கும் கிறிஸ்தவர்களுக்கான ஆவிக்குரிய ஆகாரம்" என்ற வேறு பெயரில் அச்சிட்டு வெளியிட்டோம். முதலாவதாக அது தவறை எதிர்த்துத் தாக்கி, அதை அழித்துவிட்டு, அவ்விடத்தில் சத்தியத்தை நிலை

நிறுத்தும்பொருட்டு வித்தியாசமான முறையில் வெளியிடப்பட்டது. முடிவில் இது ஒரு சிறந்த முறையல்ல என்று உணர்ந்துகொண்டோம்.

எவ்வாறெனில், இதைப் படிக்க முற்படும்போதே, அநேகர் தங்களுடைய தவறுகள் வீழ்வதைக் கண்டதும் எச்சரிக்கையாகி, இன்னும் வெகுதொலைவில் உள்ள மேன்மையான சத்திய அழகின் வெளிச்சத்தைக் காணக்கூடாதபடி, அப்புத்தகத்தை வாசிக்காமல் விட்டுவிட்டார்கள். ஆனால், தற்போதைய தொகுப்போ மாறுபட்ட கோணத்திலிருந்து எழுதப்பட்டுள்ளது. எப்படியெனில், முதலாவது சத்தியத்தையும் அதின் வல்லமையையும் அழகையும் வெளிப்படுத்தி, பின்பு தவறை நீக்கவும், அத்தவறுகள் தேவையற்றது மாத்திரமல்ல, பிரயோஜனமற்றதும், தீமை விளைவிக்கக்கூடியதென்றும் எடுத்துரைக்கின்றது. இவ்விதமாக யுகங்களைப் பற்றிய "தேவனுடைய தெய்வீகத் திட்டங்களை" வாசிக்கும் ஒவ்வொருவரும் படிப்படியாக தங்களுடைய விசுவாசம் பெலப்படுவதையும், தேவனை தாங்கள் அதிகமதிகமாய் கிட்டிச் சேர்வதையும் அறிவதுடன், தாங்கள் சரியான பாதையில்தான் செல்கிறோம் என்பதில் பெலப்படுகிறார்கள். சத்தியத்தை அறிந்து உணர்ந்த பின்பு, தவறான உபதேசங்கள் அனைத்தும் குழப்பத்தை ஏற்படுத்துகிறதும், உபயோகமற்றதும் தீங்கு விளைவிக்கக்கூடியதும், முற்றிலும் மனப்பூர்வமாக வெறுக்கப்பட்டு தள்ளப்பட வேண்டியவைகளுமாயிருப்பது தெரிகிறது.

தேவனுடைய ஜனங்களின் கண்களைத் திறக்கிறதும், தேவனுடைய வேதத்தின்மேல் அவர்களுடைய பயபக்தியை அதிகரிக்கச் செய்கிறதும், மனிதக் கோட்பாடுகள்மேல் அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை சீர்குலைத்து அழித்துவிடுகிறதுமான எந்த விஷயத்தையும் காண, பெரிய எதிராளியானவன் உண்மையிலேயே விரும்புகிறதில்லை. ஆகவே, நாம் எதிர்பார்க்கிற வண்ணமாக பெரிய எதிராளியானவன் இப்புத்தகத்தை மிகவும் வன்மையாக எதிர்ப்பவனாயிருக்கிறான். சாத்தானுடைய வல்லமையும் தந்திரங்களையும் வெகுசிலரே நன்கு புரிந்துள்ளனர். அப்போஸ்தலன் கூற்றுப்படி சத்தியத்தை எதிர்த்து அதை அழிக்கும் முயற்சியாக இந்த இருளின் அதிபதி, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்வான் எனவும், சத்திய வெளிச்சத்தினால் ஜனங்கள் பிரகாசிக்கக்கூடாதபடி தடுத்து, அவர்கள் தேவனுடைய தெய்வீக



திட்டத்தை அறிந்துகொள்ளாதபடி செய்வதற்காக தேவனுடைய பிள்ளைகளுக்குள்ளே உள்ள மிகச் சிறந்தவர்களையும், செல்வாக்குள்ளவர்களையுமே உபயோகிக்கும்படி தந்திரமும் கபடமுமுள்ள எதிராளியானவன் முயலுகிறான் என்பதையும் வெகு சிலரே நன்கு அறிந்துள்ளனர். அநேகருக்கு இதைப்பற்றிப் புரிவதில்லை.

மனிதக் கோட்பாடுகள் ஆரம்பமான கி.பி 325 முதல் அதன்பின்பு 1260 வருடங்கள் வேத ஆராய்ச்சியே நடைபெறவில்லை என்பதையும் அக்காலங்களில்தானே லட்சக்கணக்கான ஜனங்களுடைய மனதில் மனிதக் கோட்பாடுகள் ஆழமாகப் பதியப்பட்டு, அவைகளினால் ஜனங்கள் பயங்கரமான தவறான உபதேசங்களுக்குள்ளாகி, மாபெரும் தேவனுடைய குணநலன்களாகிய ஞானம், நீதி, அன்பு, வல்லமை முதலியவற்றை அறியக்கூடாமல் குருடராகிப்போயினர் என்பதையும் வெகுசிலரே அறிந்துள்ளனர். சீர்திருத்தலின் காலம் துவக்கி, அதாவது வேதம் மீண்டும் இலட்சக்கணக்கான ஜனங்களுடைய கைகளில் திரும்பக் கிடைத்தபோது, நல்லெண்ணமுள்ள, ஆனால் வஞ்சிக்கப்பட்ட சீர்திருத்தவாதிகள் கடந்தகால தவறான கோட்பாடுகளினால் மீண்டும் அந்தகாரத்தில் சிக்குண்டு பிடிபட்டு அவர்களும் ஜனங்கள் இருளில் இருக்கவே உதவினார்கள் என்பதையும் வெகுசிலரே அறிந்துள்ளனர். ஆதிகால சபையில் அப்போஸ்தலரின் நாட்களில் கடைபிடிக்கப்பட்ட எதார்த்தமான வேத ஆராய்ச்சி தற்போது வேதமாணவருக்கு மட்டுமே கிடைத்திருக்கிறதென்பதையும் ஒருசிலரே அறிந்துவைத்துள்ளனர்.

இப்புத்தகத்தின் முதல்கட்ட பதிப்புகளுக்கு "ஆயிரவருட அருணோதயம்" என்ற தலைப்பு உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால், அப்பெயரினால் அநேகர் அது ஒரு கதைப் புத்தகம் என நினைத்து வஞ்சிக்கப்பட்டதையும் அறிவோம். ஆக அவ்வகையில் எவரும் வஞ்சிக்கப்பட்டு அதை வாங்காதபடிக்கும், ஒருவரும் தவறாகப் புரிந்துகொள்ளாதபடிக்கும், "வேதாகம ஆராய்ச்சிப் பாடங்கள்" (Studies in the Scriptures) என்னும் பெயரை நாம் எழுதியிருக்கும் ஆறு புத்தகங்களுக்கும் பொதுவான பெயராகத் தந்துள்ளோம். இப்புத்தகம் ஏன் புத்தகக் கடைகளில் கிடைப்பதில்லை என அநேகர் நம்மிடம் கேட்கிறார்கள். அவர்களுக்கு நாம் தரும் பதில் என்னவெனில், இப்புத்தகத்தை வெளியிடுபவர்களுக்கு கடைகளில் வைத்து விற்க

விருப்பமிருந்தாலும், மதவெறிகொண்ட சிலர் இப்புத்தகத்தை வைத்து விற்கும் கடைகளை அவர்கள் நொறுக்கிவிடுவதாக பயமுறுத்துவதால், அவைகளை அங்கு வைத்து விற்க முடிவதில்லை என்பதே. ஆரம்பத்தில் இதுவும் சத்தியம் பரவாதபடிக்கு தடுக்க எதிராளியால் உபயோகப்படுத்தப்பட்ட ஒரு பெரிய நாசவேலை போல் தோன்றியது. ஆனால், பின்பு தேவ கிருபையினால் இந்தப் புத்தகம் போல், அந்தளவுக்கு வேறெந்த புத்தகமும் அதிகளவிலும் நிலையாகவும் விற்கப்படவுமில்லை, விற்கப்படுகிறதுமில்லை. பொய்களையும் தவறுகளையும் நம்பினவர்களே தவறான எண்ணங்கொண்டு இப்புத்தகத்தை வாசிக்க மறுத்து அதற்கு விரோதமாக போராடினவர்கள் ஆவர். இப்புத்தகத்தில் அநேகம், இதை வாசிக்காத ஜனங்களாலேயே திரிட்டுக்கொளுத்தப்பட்டது. இவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு, வழிநடத்தப்பட்டதாலேயே இவ்வாறு நடந்தது. இருண்ட யுகங்களின்போதும் இயேசுவின் பின்னடியார்கள் இரத்த சாட்சியாக மரித்ததும் இப்படிப்பட்டவர்களாலேயே.

"ஆம் சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள்" என்று பரிசுத்த பேதுரு சொல்கிறபடியே (அப் 3:17) இயேசுவும், அவரையாவது அவருடைய உபதேசங்களையாவது அறிந்துகொள்ளாதவர்களாலேயே துன்புறுத்தப்பட்டு மரணத்துக்குள்ளாயினார். "அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை சிலுவையில் அறையமாட்டார்களே." (1 கொரி.2:8) ஆனால், இப்புத்தகத்திற்கு எதிரான அதின் விரோதிகள் எவ்வளவுக்கெவ்வளவு அதின்மேல் அநீதியும், கசப்பும், உண்மையில்லாதவர்களாயிருந்தார்களோ, அவ்வளவுக்கு அதிகமாய் அதின் நண்பர்கள் அதின்மேல் பற்றுதலும், அன்பும், வைராக்கியமுள்ளவர்களாகவும் இருக்கின்றனர்.

சத்தியத்தின் மேலுள்ள அன்பினால் ஏவப்பட்டு, தங்களுடைய நேரத்தையும் முயற்சியையும் இப்புத்தகத்தை அதிக அளவில் பரவச் செய்வதில் செலவிட்டிருக்கிற அதின் நண்பர்கள் மூலமாய் இலட்சக்கணக்கான இப்புத்தகங்கள் ஜனங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. இம்முன்னுரையை நாம் எழுதும்போதுகூட, இச்சிறிய புத்தகத்தை சத்தியத்தின்மேல் பசிதாகமுள்ள தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு கிடைக்கச் செய்வதின் மூலமாக அவர்கள்



ஆசீர்வாதம் அடையவும், கர்த்தரை மகிமைப்படுத்தவுந்தக்கதாக, பலவிதமான தொழில்களில் ஈடுபட்டிருந்த சுமார் 600 கிறிஸ்தவர்கள், உலகத்திற்குரிய தங்கள் தொழில்கள், ஆசைகள் முதலிய எல்லாவற்றையும் விட்டுவிட்டார்கள் என்று அறிகிறோம். இவர்களில் சிலர் மருத்துவர்களாகவும், நாவிதர்களாகவும் (Barbers), இயந்திரத் தொழில் புரிபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய அன்பினால் ஏவப்பட்டு, தங்கள் அடைந்த ஆசீர்வாதத்தை மற்றவர்களும் அடைந்துகொள்ளும்படி அறிவிக்க ஆவலுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

இப்புத்தகமானது குறைந்த விலைக்கே விற்கப்படுகிறது. அப்படியிருந்தும் பொது ஜனங்களுக்கு விற்கும்படி எடுத்துச்செல்லும் ஊழியர்களுக்கு கிடைக்கும் பணம் அவர்களுடைய செலவுகளுக்குக்கூட போதாததாயிருக்கிறது என்றாலும் சில சமயங்களில் நஷ்டமடையும்போது கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும், சகோதரருக்காகவும் சில அசௌகரியங்களையும் கஷ்டநஷ்டங்களையும் அடையப் பாத்திரவான்களாக இருப்பதினால் அவர்கள் அதிக மன மகிழ்ச்சியடைகிறார்கள். கிறிஸ்துவுக்குள் ஜீவனை அடையலாம் என்னும் நற்செய்தி இப்புத்தகத்தின் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு செல்லும் இந்த நல்ல வேலை தொடர்கிறது. கடந்தகாலத்தில் அது மிகுதியாய் ஆசீர்வாதத்தை அளித்ததுபோலவே, வருங்காலத்திலும் அதினால் உண்டாகும் ஆசீர்வாதம் மிகுதியாய் இருப்பதாக. ஆசிரியரும் வெளியிடுபவர்களும் இதையே எதிர்பார்க்கிறார்கள்.

இப்புத்தகத்தை வாசிக்கும் யாவருக்கும் எனது மனமுவந்த வாழ்த்துக்கள்!

இங்ஙனம்,

புருக்லின், நியூயார்க்
அக்டோபர் 01, 1916

கர்த்தருக்குள் உங்கள் ஊழியன்,
சார்லஸ் தேஸ் ரஸ்ஸல்

# உள்ளடக்கம்


## அத்தியாயம் – 1
## மகிழ்ச்சியின் அதிகாலையின் முடிவுக்கு வரும் பூமியின் பாவ இராக்காலம்

அழுகையின் இரவும் மகிழ்ச்சியின் காலைப்பொழுதும் – சத்தியத்தைத் தேடுவதற்கான இரு வழிமுறைகள் – இங்கே தெரிந்துகொள்ளப்பட்ட வழி – இவ்வேலையின் நோக்கம் – சத்திய வேதத்தை பயபக்தியோடு படிப்பதற்கும், அதை யூகங்களின் அடிப்படையில் படிக்கும் ஆபத்தான பழக்கத்திற்கும் உள்ள வித்தியாசம் – தீர்க்கதரிசனத்தின் நோக்கம் – தற்கால உலகின் மத ரீதியான நிலைமைகளை நோக்கும் இருவித பார்வை – எகிப்தின் இருள் – வாக்குத்தத்தத்தின் வானவில் – நீதிமான்களின் முன்னேற்றப்பாதை – மாபெரும் விசுவாச துரோகத்திற்கான காரணம் – சீர்திருத்தம் – மீண்டும் அதே காரணத்தினால் தடைபடும் உண்மையான வளர்ச்சி – அறிவின் பரிபூரணம் கடந்த காலத்திற்குரியதல்ல, மாறாக எதிர்காலத்திற்குரியது ................ 1

## அத்தியாயம் – 2
## எல்லாவற்றிற்கும் மேலாக சர்வஞானமுள்ள சிருஷ்டிகர் ஒருவர் உண்டென்று நிரூபித்தல்

வேதாகமத்தை சற்று அப்புறப்படுத்தி புத்தியினால் நிரூபித்தல் – ஒரு அடிப்படை ஆதாரமற்ற ஒரு கொள்கை – அறிவுப்பூர்வமான கொள்கை – கடவுளுடைய குணாதிசயங்களை வெளிப்படுத்துதல் – நியாயமான அனுமானமுறைகள் – தேவையில்லாதவைகளை சரியான காரணத்தோடு தள்ளிவிடுதல்........ 27

## அத்தியாயம் – 3
## சத்திய வேதம் தெய்வீக வெளிப்பாடு என புத்தியறிவின் வெளிச்சத்தின்படி நிரூபித்தல்

வேதத்தை நம்புவதற்கு வெளியரங்கமான ஆதாரங்கள் – அதின் பழமையும் அது பாதுகாக்கப்பட்ட விதமும் – நன்னடக்கைக்கு ஏவும் அதின் வல்லமை – அதின் எழுத்தாளர்களின் நோக்கம் – அதிலுள்ள புத்தகங்களின் பொதுவான குணாதிசயங்கள் – மோசேயின் புத்தகங்கள், மோசேயின் பிரமாணங்கள் – மோசேயினால் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க விசேஷங்கள் – அது ஆசாரிய கபட அமைப்பல்ல – மக்களை ஆளுகிறவர்களின் சட்டதிட்டங்கள் – ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் ஒரேவித சட்டம் – ஜனங்களுடைய உரிமைகளைப் பறிக்காதபடிக்கு ஏற்பட்ட பாதுகாப்புச் சட்டம் – ஆசாரியர் விசேஷ வகுப்பாரல்ல – அவர்களுடைய வாழ்க்கைக்கான உதவிகள் – அந்நியர், விதவைகள், அநாதைகள், அடிமைகள், வேலையாட்கள் கொடுமையாய் நடத்தப்படாதபடிக்கு ஏற்பட்ட சட்டம் – வேதத்தின் தீர்க்கதரிசிகள் – தீர்க்கதரிசனம் மற்றும் புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களை இணைத்துக்காட்டும் நியாயப்பிரமாணம் – அற்புதங்கள் புத்திக்கெட்டாதவைகளல்ல – ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிவுரை.......... 35

## அத்தியாயம் – 4
## தேவதிட்டத்தின் வளர்ச்சியை குறிப்பிட்டு விளக்கும் காலப்பகுதிகளும் யுகங்களும்

முறையான தெளிவான தேவ திட்டம் – உலக சரித்திரத்தை விளக்கும் மூன்று பெரிய காலப்பகுதிகள் – அவைகளின் தனிச்சிறப்பு வாய்ந்த அம்சங்கள் – "பூமி என்றென்றைக்கும் நிலைநிற்கும்" – இனிவரும் உலகம், புதிய வானங்களும் புதிய பூமியும் – மூன்று பெரிய காலப்பகுதிகளின் உட்பிரிவுகள் – முக்கிய அம்சங்கள் கொண்ட தேவ திட்டம் அதன் மூலம் வெளியாக்கப்படுதல் – வெளியாக்கப்பட்டு அறியப்படும் தேவ திட்டம் இசைவும் இணக்கமுமுள்ளது – சத்திய வசனத்தை நிதானமாக பகுத்தறிதல்............................ 69

## அத்தியாயம்–5
## யுகங்களுக்கும் தலைமுறை தலைமுறைக்கும் மறைக்கப்பட்டு இப்போது பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம்–கொலோ. 1:25

முதலாம் வாக்குத்தத்தத்தின் மங்கலான வெளிச்சம் – ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் – நிறைவேறாத நம்பிக்கை பெந்தெகொஸ்தே நாளில் வெளிப்பட தொடங்கிய இரகசியம் – அந்த இரகசியம் என்ன? – ஏன் அதிக வருடம் இரகசியமாயிருந்தது? – உலகத்திற்கு இன்னும் அது இரகசியமாகவே உள்ளது – ஏற்ற காலத்தில் எல்லாருக்கும் வெளிப்படுத்தப்பட வேண்டியது – எப்போது அந்த இரகசியம் முடிவுபெறும்? ................ 85

## அத்தியாயம் – 6
## நமது கர்த்தரின் இரண்டாம் வருகை – அதின் நோக்கம், இழந்துபோன எல்லாவற்றையும் திரும்பக்கொடுத்தல்

நம் கர்த்தரின் இரண்டாம் வருகையும், ஆயிர வருட யுகத்தின் ஆரம்பமும் – முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் உள்ள சம்பந்தம் – சபையின் தெரிந்துகொள்ளுதலும் உலகின் மனமாற்றமும் – தேர்ந்தெடுத்தலும், இலவசமான கிருபையும் – நம்பிக்கையுடைய சிறைக் கைதிகள் – திரும்பக் கொடுத்தலைக் குறிக்கும் தீர்க்கதரிசன ஆதாரங்கள் – நமது கர்த்தரின் இரண்டாம் வருகையே சபைக்கும் உலகத்துக்குமுரிய நம்பிக்கையின் வெளிப்பாடு ........................................ 101

## அத்தியாயம் – 7
## தீமையின் அனுமதியும் தேவனுடைய திட்டத்தோடு அதற்குள்ள தொடர்பும்

ஏன் தீமை அனுமதிக்கப்பட்டது? சரி மற்றும் தவறு எனும் கொள்கைகள் – பகுத்தறிதல் – தேவன் தீமையை அனுமதித்தாலும் அதைக் கட்டுப்படுத்தி நன்மையை நிலைநாட்டுதலும் – தேவன் பாவத்திற்கு காரணரல்ல – ஆதாமின் சோதனை ஒரு பரிகாச செயல் அல்ல – கடுமையான அவருடைய சோதனை – அவருடைய மனப்பூர்வமான பாவம் – பாவத்திற்கான தண்டனை அநீதியானதும் கடுமையானதும் அல்ல – ஆதாமுக்குள் அனைவரும் குற்றவாளிகளானதால் விளங்கும் தேவனுடைய நீதியும், ஞானமும், அன்பும் – முழு உலகத்திற்குமான தேவப்பிரமாணம் ........................ 139

## அத்தியாயம் – 8
## நியாயத்தீர்ப்பின் நாள்

நியாயத்தீர்ப்பின் நாளைப் பற்றிய பொதுவான கருத்து – இது வேதாகமத்திற்கு இசைவானதா? – நியாயத்தீர்ப்பு, நாள் என்னும் பதங்களின் பொருள் விளக்கம் – அநேக நியாயத்தீர்ப்பின் நாட்கள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது – முதலாவது நியாயத்தீர்ப்பின் நாளும் அதன் முடிவுகளும் – நியாயாதிபதி – இன்னும் ஒரு நியாயத்தீர்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது – வரவிருக்கின்ற நியாயத்தீர்ப்பின் லட்சணங்கள் – முதலாம் நியாயத்தீர்ப்பிற்கும் இரண்டாம் நியாயத்தீர்ப்பிற்கும் இடையேயுள்ள ஒற்றுமையும் வேற்றுமையும் – உலகத்தின் தற்போதைய பொறுப்பு – இந்த இரண்டு நியாயத்தீர்ப்பின் நாட்களுக்கும் நடுவே ஏற்படும் வேறு இரண்டு நியாயத்தீர்ப்புகளும், அவற்றின் நோக்கமும் – வரவிருக்கிற நியாயத்தீர்ப்பைப் பற்றிய வேறுபட்ட மதிப்பீடுகள் – இதை எப்படி தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும் நோக்கினார்கள் ................ 165

## அத்தியாயம் – 9
## மீட்கும்பொருளும் திரும்பக் கொடுத்தலும்

மீட்கும்பொருளால் உறுதியாக்கப்பட்ட திரும்பக்கொடுத்தல் – நித்திய ஜீவனல்ல, ஆனால் அதற்கான பரீட்சையே, மீட்கும்பொருளால் உத்திரவாதமளிக்கப்பட்டது – பரீட்சையின் நிபந்தனைகளும் ஆதாயங்களும் – கிறிஸ்துவின் பலி அவசியமானது – ஒருவரது மரணத்தால் மனுக்குல சந்ததி எவ்வாறு மீட்கப்பட முடிந்தது? விசுவாசமும் கிரியைகளும் இன்னும் அவசியம் – மனப்பூர்வமாக செய்யும் பாவத்திற்கு தண்டனை நிச்சயம் – உயிர்த்தெழும்பப்பட்ட இலட்சக்கணக்கான நபர்களுக்கு இப்பூமியில் இடம் இருக்குமா? – பரிணாமமும் திரும்பக்கொடுத்தலும் ........................................ 191

## அத்தியாயம் – 10
## ஆவிக்குரிய மற்றும் மானிட சுபாவங்கள் வெவ்வேறானதும் வித்தியாசமானதும்

பொதுவான தவறான புரிந்துகொள்ளுதல் – பூமிக்குரிய அல்லது மனித சுபாவமும் பரத்திற்குரிய அல்லது ஆவிக்குரிய சுபாவமும் – பூமிக்குரிய மகிமையும் பரத்திற்குரிய மகிமையும் – ஆவிக்குரிய ஜீவிகளைக்குறித்த வேதாகம சாட்சியம் – அழிவிற்குரியதும் அழியாமைக்குரியதும் – அழிவுக்குரிய ஜீவிகள் நித்திய ஜீவனை சுதந்தரிக்க முடியுமா? தயை காண்பித்தலில் உள்ள நீதி – யுகத்தின் அடிப்படையில் உள்ள கொள்கையை ஆராய்தல் – பரிபூரணத்தில் பல்வேறுவிதம் – தேவனது மேலான்மை மிக்க உரிமைகள் – மனிதனது நிறைவான தேவைகளுக்காக தேவனுடைய ஏற்பாடுகள் – கிறிஸ்துவின் சரீர அங்கங்களை தேர்ந்தெடுத்தல் – அவர்களது சுபாவம் எவ்விதம் மாறுதலடையும்? ........................................ 213

## அத்தியாயம் – 11
## மூன்று வழிகள் – விசாலமான வழி, நெருக்கமான வழி, பெரும்பாதையான வழி

கேட்டுக்குப் போகிற விசாலமான வழி – ஜீவனுக்குப்போகிற நெருக்கமான வழி – ஜீவன் என்றால் என்ன ? – தெய்வீக சுபாவம் – தெய்வீக சுபாவத்திற்கும் மனித சுபாவத்திற்கும் உள்ள சம்பந்தம் – நெருக்கமான வழியின் முடிவில் வைக்கப்பட்டிருக்கும் பரிசு – சுவிசேஷ யுகத்திற்கு மட்டுமே உரிய பரம அழைப்பு – நெருக்கமான வழியின் கடினமும், அபாயங்களும் – பெரும் பாதையாகிய பரிசுத்த வழி .......... 255

## அத்தியாயம் – 12
## யுகங்களின் திட்டத்தைக் காண்பிக்கும் வரைபடத்தின் விளக்கம்

யுகங்கள் – அறுவடைகள் – நீதிமானுக்குரிய உண்மையான நிலைமையும், நீதிமானாகக் கருதப்படும் நிலைமையும் – நம் கர்த்தராகிய இயேசுவின் ஜீவியம் – அவரது பின்னடியார்களின் ஜீவியம் – பெயர் சபைகளின் மூன்று வகுப்பார் – அறுவடையின்போது பிரித்தெடுக்கப்படுதல் – அபிஷேகம் பண்ணப்பட்ட வகுப்பார் மகிமை அடைதல் – மகா உபத்திரக் காலத்து வகுப்பார் – பதர் சுட்டெரிக்கப்படுதல் – உலகம் ஆசீர்வதிக்கப்படுதல் – மகிமையான பலன் .......... 275

## அத்தியாயம் – 13
## இவ்வுலக இராஜ்யங்கள்

முதலாவது ஆளுகை – அதனை இழந்துபோகுதல் – அதன் மீட்பும், திரும்பக்கொடுத்தலும் – நிழலான தேவ இராஜ்யம் – அபகரிப்பவன் – தற்கால ஆளுகையின் இரு நிலைமைகள் – தேவனால் நியமிக்கப்பட்ட அதிகாரங்கள் – அவைகளைப்பற்றிய நேபுகாத்நேச்சாரின் பார்வை – தானியேலின் தரிசனமும் அதன் விளக்கமும் – இவ்வுலக இராஜ்யங்களை வேறு நிலைப்பாட்டிலிருந்து காணுதல் – தற்கால அரசாங்கங்களுக்கும், திருச்சபைக்குமுள்ள முறையான உறவு – இராஜாக்களின் தெய்வீக உரிமையை சுருக்கமாக ஆராய்தல் – போலி கிறிஸ்தவ மண்டலத்தின் தவறான உரிமைக்கோரல் – ஐந்தாம் உலகப்பேரரசின் மேலான நம்பிக்கை .......... 309





## அத்தியாயம் – 14
## தேவனுடைய இராஜ்யம்

இப்பாடத்தின் உன்னத மேன்மை – ராஜ்ஜியத்தின் பண்புகள் – சுவிசேஷ யுகத்தின்போது ராஜ்ஜியத்தின் நிலை – பலமாய் திருத்தப்பட்ட தவறான சிந்தனைகள் – ராஜ்யத்தைக் குறித்த தவறான கருத்துக்களின் விளைவுகள் – தேவ ராஜ்ஜியத்தின் இரு பாகங்கள் – ஆவிக்குரிய பாகமும் அதன் செயல்பாடுகளும் – பூமிக்குரிய பாகமும் அதன் செயல்பாடுகளும் – இவைகளின் இணக்கமான செயல்பாடுகள் – பூமிக்குரிய பாகத்தின் மகிமை – பரலோகத்திற்குரிய பாகத்தின் மகிமை – உடன்படிக்கை என்ற வேரிலிருந்து வளரும் இந்தக் கிளைகள் – பூமிக்குரிய ராஜ்ஜியத்தின் பாகம் இஸ்ரவேலருடையது – இழந்த கோத்திரங்கள் – பரலோக எருசலேம் – நிழலான தூண்களாகிய இஸ்ரவேலர் – இஸ்ரவேலர் இழந்துபோனதும் திரும்பப் பெறுவதும் – தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார்கள் – இராஜ்ஜியத்தின் சுதந்திரர்கள் – இரும்புக்கோல் ஆட்சி – ஆயிரவருட அரசாட்சியின் நோக்கத்தின் உதாரண விளக்கம் – பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ராஜ்ஜியம் – தேவனுடைய பூர்வீகத் திட்டம் – முழுமையாக நிறைவேறித் தீருதல் .......... 345

## அத்தியாயம் – 15
## யேகோவாவின் நாள்

"யேகோவாவின் நாள்" – "பழிவாங்கும் நாள்" – "கோபத்தின் நாள்" – மகா உபத்திரவக்காலம் – அதன் காரணம் – வேதாகமத்தில் அதைக்குறித்த சாட்சியம் – அதன் அக்கினியும் புயலும், அது அசைக்கப்பட்டு உருகுதல், அடையாளங்கள் என்று காண்பித்தல் – தாவீதின் சாட்சி – வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதிய ஆசிரியரின் சாட்சி – தற்கால சூழ்நிலை மற்றும் எதிர்கால தோற்றம் பற்றிய எதிரான வகுப்பாராகிய முதலாளி மற்றும் தொழிலாளியின் பார்வை – தோல்வியில் முடியும் ஒரு தீர்வு – ஏற்றவேளையில் திரை நீக்கப்பட்டு வெளிச்சம் அருளப்பட்டது – இதற்கான ஆதாரங்கள் – ஆபத்துக் காலத்தில் பரிசுத்தவான்களின் நிலைமையும் அது குறித்த அவர்களது சரியான அணுகுமுறையும் .......... 369

## அத்தியாயம் – 16
## முடிவுரை

சத்தியத்தின் பேரில் நமது கடமை – அதன் விலையும், மதிப்பும், பலனும் ...... 437

## அத்தியாயம் – 1

## மகிழ்ச்சியின் அதிகாலையில் முடிவுக்கு வரும் பூமியின் பாவ இராக்காலம்

அழுகையின் இரவும் மகிழ்ச்சியின் காலைப்பொழுதும் – சத்தியத்தைத் தேடுவதற்கான இரு வழிமுறைகள் – இங்கே தெரிந்துகொள்ளப்பட்ட வழி – இவ்வேலையின் நோக்கம் – சத்திய வேதத்தை பயபக்தியோடு படிப்பதற்கும், அதை யூகங்களின் அடிப்படையில் படிக்கும் ஆபத்தான பழக்கத்திற்கும் உள்ள வித்தியாசம் – தீர்க்கதரிசனத்தின் நோக்கம் – தற்கால உலகின் மத ரீதியான நிலைமைகளை நோக்கும் இருவித பார்வை – எகிப்தின் இருள் – வாக்குத்தத்தத்தின் வானவில் – நீதிமான்களின் முன்னேற்றப்பாதை – மாபெரும் விசுவாச துரோகத்திற்கான காரணம் – சீர்திருத்தம் – மீண்டும் அதே காரணத்தினால் தடைபடும் உண்மையான வளர்ச்சி – அறிவின் பரிபூரணம் கடந்த காலத்திற்குரியதல்ல, மாறாக எதிர்காலத்திற்குரியது

“யுகங்களைப்பற்றிய தெய்வீகத் திட்டம்” என்னும் இப்புத்தகத்தின் தலைப்பு தேவனுடைய திட்டங்கள் படிப்படியாய் நிறைவேறி வருகிறதென்பதையும், அவைகள் தேவனுக்கு முன்கூட்டியே வரிசைக்கிரமமாக தெரியுமென்பதையும் சுட்டிக்காட்டுகிறதாயிருக்கிறது. இவ்விதமாய் பார்க்காவிட்டால் தேவனுடைய வெளிப்படுத்துதல்கள் ஒன்றுக்கொன்று இசைவுள்ளதாயும், ஒழுங்குள்ளதாயும் இருப்பதை நாம் புரிந்துகொள்ள முடியாது. இக்காலம், மனுக்குலத்திற்கு பாவம் அனுமதிக்கப்பட்ட இருண்ட காலமும் மறக்கக்கூடாததாயிருக்கிறது. தேவனுடைய ஆதரவும் நீதியுமான மகிமையான நாள், நீதியின் சூரியனான மேசியாவினால் உதயமாகி, முழுமையாக, தெளிவாக எல்லார்மேலும் பிரகாசமாகி, அனைவரையும் குணமாக்கி ஆசீர்வதிப்பதுடன், இவ்வளவு நாட்களாக பிரசவ வேதனைப்படும் மனுக்குலம் அனுபவிக்கும் பயம் நிறைந்த இரவின் அழுகையையும், சஞ்சலத்தையும், வேதனையையும், வியாதியையும், மரணத்தையும் மாற்றி சந்தோஷமும், பாக்கியமும், ஆசீர்வாதமும் நிறைந்த காலங்களாக மாற்றிப்போடும். “சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்தில் களிப்புண்டாகும்.” – சங். 30:5



இவ்வுலகில் தவித்து வேதனைப்படுகிற சிருஷ்டியானது (அனைத்து உயிர்களும்) ஒரு பொற்காலத்துக்காக ஏங்கி, நம்பிக்கையோடு, எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், அவர்கள் யேகோவாவின் கிருபையுள்ள நோக்கங்களைப்பற்றி அறியாதவர்களாக வெறுமனே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த பொற்காலத்தைப்பற்றி அவர்கள் கொண்டிருக்கும் அதிகபட்ச எதிர்பார்ப்புகள், அக்காலத்தில் நிஜமாக நடக்கப்போவதைக் காட்டிலும் மிக மிக அற்பமான எதிர்பார்ப்புகளாகும். மாபெரும் சிருஷ்டிகர் ஏற்படுத்தவிருக்கும் கொழுமையான பதார்த்தங்கள் அல்லது ஆசீர்வாதங்கள் அடங்கிய விருந்தானது, அவர்களை மிகுந்த ஆச்சரியத்துக்கு உட்படுத்துவது மட்டுமல்லாமல், அவர்கள் நியாயமாக எதிர்நோக்குவதையும்விட, மகா மேன்மையானதும், அபரிமிதமானதாகவும் இருக்கும். எல்லா எதிர்பார்ப்புகளுக்கும் மேலான தேவனுடைய அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழம் இவைகளைப் பார்த்து பிரமிக்கும் தம்முடைய சிருஷ்டிகளுக்கு அவர் விளக்கிக்கூறும்போது, “என் நினைவுகள், உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல. . . பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது” (ஏசாயா 55:8,9) என்று விளக்குகிறார்.

கடந்தகால, நிகழ்கால, எதிர்கால தேவத் திட்டங்களை உள்ளடக்கிய இதை பட்சபாதமில்லாமல் வாசிக்கும் எவருக்கும், இதுவரையிலும் தேவன் செய்து வந்தவைகள் இசைவாயும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாயும் இருக்கிறதென்பதை இப்புத்தகத்தின் மூலம் எவரும் காட்டாதவிதமாய் காண்பிப்போமானாலும், இது ஆசிரியரின் திறமையினாலாவது, சக்தியினாலாவது கண்டுபிடிக்கப்பட்டதாக யாரும் நினைக்க வேண்டியதில்லை. ஆயிரவருட அதிகாலையில் உதயமாகிற “நீதியின் சூரியனின்” பிரகாசத்தினால் இத்தற்கால சத்தியம் ஏற்ற வேளையில் வேலைக்காரருக்குக் கொடுக்கப்பட்ட போஜனமாக, இருதயத்தில் சுத்தமுள்ள, கபடமற்ற எல்லோராலும் கண்டு உணரப்பட்டு வருகிறது.

சந்தேகப்படுகிறவர்கள் அதிகமாகிவிட்டதால் உலகம

மார்க்கத்தின் அஸ்திபாரமும் சத்தியத்தின் அஸ்திபாரமும் சந்தேகத்திற்கிடமாகிவிட்டது. அதிகவாசிகட தேவனுடைய வார்த்தையின்மேல் தங்களுடைய விசுவாசத்தை உறுதியோடும், முழு நம்பிக்கையோடும் கட்டும்படி சத்தியத்தின் அஸ்திபாரத்தை முடிந்தளவு பகிரங்கப்படுத்த முயற்சித்திருக்கிறோம். பின்பு, வேத உபதேசங்களில் கட்டளையிடப்பட்டிருக்கும் துல்லியமான நீதி, நியாயங்களின்மேல் அஸ்திபாரம்போடும் பொருட்டு, மனிதனுடைய எந்த வகை நிராகரிப்புகளினாலும் அங்கீகரிக்கப்படும் வண்ணமாக முடிந்தளவு முயற்சித்திருக்கிறோம்.

தேவனுடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற, தேவனுடைய திட்டங்கள் ஒன்றுக்கொன்று இசைவானதும், ஒற்றுமையானதுமாக உள்ளது என அறியப்படும்போது, எந்தவொரு சுத்த மனசாட்சிக்கும், தேவ வசனத்தைப் படிக்கும் ஒவ்வொரு மாணாக்கருக்கும் உதவும் என்ற நம்பிக்கையில் சில விபரங்களை இங்கு கொடுத்திருக்கிறோம். வேதம் தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்தும் வெளிப்பாடு என அறிந்தவர்களைக் குறித்து நாம் சொல்வதென்னவென்றால், முழுமையாக அதின் உபதேசங்களை கற்றுக்கொண்டால் ஒன்றுக்கொன்று இசைவானதும், ஒத்துப்போவதுமான தெய்வீகத் திட்டத்தையும் அது தேவனுடைய குணாதிசயங்களோடு ஒத்துப்போவதையும் கண்டுகொள்வார்கள். சத்திய ஆவி நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும் என்ற வாக்குத்தத்தத்திற்கேற்ப நாம் சத்தியத்தை நேசிக்கிறவர்களாக, வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய தெய்வீகத் திட்டத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்வதே நம்முடைய நோக்கமும் எதிர்பார்ப்புமாய் இருக்கிறது. யோவா. 16:13

அவ்வாறு ஆராய்ச்சி செய்பவர்களாகிய நமக்கு முன்பாக இரண்டு வழிமுறைகள் உண்டு. அதில் ஒன்று, எல்லா கிறிஸ்தவ பிரிவுகளில் சொல்லப்படுவதெல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்து, அவைகளிலுள்ள சத்தியத்தை மட்டும் எடுத்துக்கொள்வது. ஆனால், இது எல்லையில்லாத முயற்சி. இம்முயற்சியில் நாம் சந்திக்கும் பிரச்சனைகள் என்னவெனில், அவ்விதம் முயற்சிக்கும்போது, நாம் எடுக்கும் முடிவு ஒருவேளை மாறிவிட்டால், அல்லது தவறினால் அல்லது நம் தப்பெண்ணம்



எவ்வகையிலும் வளைந்து கொடுத்துவிட்டால் இப்பிரச்சனைகள் நம்மை சரியான தேர்ந்தெடுத்தலை தடுப்பதுடன், சத்தியத்தைத் தள்ளிவிட்டு தவறை சத்தியமென்று எடுத்துக்கொண்டுவிடுவோம். மேலும், இம்முறையைக் கையாளும்போது, மேலும் சில இழப்புகளை நாம் அடைவோம். எவ்வாறெனில், சத்தியத்தைத் தேடி அதின் வெளிச்சத்தில் நடக்க விரும்புவோருக்கு சத்தியத்தின் வெளிச்சமானது தற்காலத்தில் நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசித்து, வெளியாகிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட பல்வேறு கிறிஸ்தவ பிரிவினர்களுடைய உறுதியானதும், நிலையானதுமான போதகங்கள் தற்காலத்திலும் இருப்பதினால் நாம் பெரிய இழப்பை ஏற்க நேரிடும். ஒவ்வொரு பிரிவினரும் சில முக்கியமான விஷயங்களில் மற்றொரு பிரிவினர்களுடைய போதகங்களுக்கு விரோதமாய்ப் பேசுவதால், அவர்கள் எல்லாரிடத்திலும் அதிக அளவில் தவறுகள் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஆகவே, இம்முறையானது நம் மனதிலுள்ள தப்பெண்ணங்களையெல்லாம் உதறிவிட்டு, ஒருவரும் தேவனுடைய வார்த்தைகளில் தனக்கு வெளிப்படுத்தப்பட்டதற்கு அதிகமாக தேவ திட்டங்களை அறிந்துகொள்ள முடியாது என்று நினைவுகூர்ந்து, அவ்வார்த்தையானது தாழ்மையும், இருதயத்தில் எளிமையுள்ளவர்களுக்காக மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், தேவன் நமக்கு அருளியிருக்கிற பல்வேறு தெய்வீக உதவிகளை (ஆதாரங்கள்) உபயோகித்து, அவ்வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு ஆர்வத்தோடும் உண்மையோடும் அதிலுள்ள வழிநடத்துதல்களையும், அறிவுரைகளையும் மாத்திரம் தேடுவதே இம்முறையாகும். (எபேசி. 4:11-16)

இம்முறையை கையாளும் மாணவர்களுக்காகவே இப்புத்தகம் விசேஷமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தீர்க்கதரிசன நிறைவேறுதலைக் காண்பிக்க மட்டுமே உலக சரித்திரங்களை ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதே தவிர மற்ற எல்லா இடங்களிலும் வேத வசனங்களைக் கொண்டே விளக்கப்பட்டிருக்கிறது. தற்கால மத போதகர்களுடைய (Theologians) உபதேசங்களாவது அல்லது திருச்சபையின் தகப்பன்மார்களென்று தவறாக தங்களை

அழைத்துக்கொள்கிறவர்களுடைய போதனைகளாவது இப்புத்தகத்தில் தவிர்க்கப்பட்டிருக்கிறது. வேதபாரகரிலோ திருச்சபை பிதாக்களென்று அழைக்கப்படுகிறவர்களிலோ அநேகர் இங்கு நாம் எடுத்துரைத்திருப்பது போலவே கூறினாலும், மனிதனுடைய போதனைகளின்மேல் நம்பிக்கை வைப்பது இப்போதும் எப்போதும் பொதுவாகவே தோல்வியை ஏற்படுத்துவதால், அவர்களுடைய போதனைகளுக்கு இங்கு முக்கியத்துவம் தராமலும், எடுத்துரையாமலும் இருக்கிறோம். அநேக நல்ல மனிதர்களும் அறியாமையினால் இவர்களுடைய தவறுகளை விசுவாசித்தும் அதை சுத்தமான மனசாட்சியிலும் போதித்து வருவதால், அதுவே தவறுகள் வளர்ந்தோங்கக் காரணமாகிவிடுகிறது. (அப்.26:9) ஆகவே, சத்தியத்தைத் தேடுபவர்கள் சேறுள்ள தண்ணீராகிய மனிதப் பாரம்பரியங்களை விட்டுவிட்டு, சத்திய நீரூற்றாகிய தேவனுடைய வசனத்தை தங்கள் பாத்திரங்களில் (மனதில்) நிரப்ப வேண்டும். இந்த நீரூற்றுக்கு வழிநடத்தாத எந்த மத போதகத்திற்கும் எந்தவித முக்கியத்துவமுமில்லை.

சத்திய வேதத்தையும் அதிலுள்ள போதகங்களையும் மேலோட்டமாகவும், அவசரமாகவும் அறிய விரும்புகிறவர்களின் ஆராய்ச்சியைவிட, இப்புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் முறை மிக எளிமையானது. ஏனெனில், நாம் அவசர உலகத்தில் வாழ்வதால் எந்தளவுக்கு பாடங்களின் முக்கியத்துவத்தை சுருங்கச் சொல்லி புரியவைக்க வேண்டுமோ அந்தளவுக்கு இப்புத்தகத்தில் சுலபமாக காண்பிக்க முயற்சித்திருக்கிறோம்.

ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நாம் தரும் ஆலோசனை என்னவெனில், இதில் தரப்பட்டிருக்கும் தேவ திட்டத்தையும் அதில் அடங்கியுள்ள பலனையும் அடையும்பொருட்டு, தரப்பட்டிருக்கும் வேத ஆதாரங்களை ஆழ்ந்து படித்து, அது எவ்வாறு தேவ திட்டத்துடன் இசைவையுள்ளது எனவும் கண்டறிவது முக்கியம். மாறாக, இப்புத்தகத்தை மேலோட்டமாகப் படித்து முடிப்பதால் எவ்வித பயனும் இல்லை. இப்புத்தகத்தைப் படிக்கும் பலதரப்பட்ட வாசகர்கள், இதில் முழுவதுமாக சொல்லப்பட்டிருக்கும் தெய்வீகத் திட்டங்களடங்கிய சத்தியங்களை



தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் ஏற்ற மொழி நடையிலும், ஏற்ற ஒழுங்கிலும் தர எல்லா முயற்சியும் செய்துள்ளோம். எந்தவொரு ஞானத்தையும் பெற்றுக்கொள்ள முழுமையான மற்றும் முறையான படிப்பு அவசியப்படுவதுபோல், தேவ வெளிப்பாடுகளைத் தெரிந்து கற்றுக்கொள்ள அதைவிட மேலான முறை அவசியமாகிறது. இப்புத்தக விஷயத்தில் அதைப்போல இருமடங்கு அவசியமாகிறது. ஏனெனில், இப்புத்தகம் தெய்வீக சத்தியங்களை வெளிப்படுத்துவதால் மற்ற புத்தகங்கள் எழுதப்பட்டதைவிட வித்தியாசமான விதமாய் எழுதப்பட்டுள்ளது. மற்ற கிறிஸ்தவர்களால் புறக்கணிக்கப்பட்ட கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, பழைய புதிய ஏற்பாடுகளில் தரப்பட்டுள்ள அடையாளங்கள், தீர்க்கதரிசனங்கள் போன்ற அநேக பாடங்களைப் பற்றி இங்கு எடுத்துரைப்பதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமில்லை. சத்திய வேதத்தின் மாபெரும் போதகங்களைக் கண்டுகொள்ளாமல் நீக்கிவிட்டு தரப்படும் எந்தவொரு கடவுள் சம்பந்தமான புத்தகமும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல. இருந்தபோதிலும் நம்முடைய அறிவுக்கு ஏற்புடையதாகும் வகையில் ஏற்றுக்கொள்ளப்படும் எந்த முடிவும், நம்பத்தகுந்த சரித்திர உண்மைகளின் மூலம் ஆர்வமும், தெளிவும், பயபக்தியும் கலந்த தீர்க்கதரிசன மற்றும் வேதப் பகுதிகளின் ஆராய்ச்சிக்கும், வெறும் யூகங்களின் அடிப்படையில் தெய்வீக தீர்க்கதரிசனங்களை விளக்க முற்படும் கவர்ச்சியான போதகங்களுக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இந்த வித்தியாசத்தை உணராமல் அபாயகரமான பழக்கத்தில் விழுந்துவிட்டால் தீர்க்கதரிசனங்களை கற்றுக்கொள்ளும் மாணவர்களாவதற்கு பதிலாக, தங்களையே தீர்க்கதரிசியாக்கிக்கொள்கிறார்கள்.

"தேவதூதரும் உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கிற" (1 பேதுரு 1:12) தெய்வீகத் திட்டங்களை உணர்ந்துகொள்ள பயபக்தியான படிப்பைத் தவிர சிறப்பான, உன்னதமான முறை வேறொன்றுமில்லை. தேவனுடைய பிள்ளைகளில் சிலர் மத்தேயு 5ம் அதிகாரத்தில் உள்ளவற்றை மாத்திரம் படித்தால் ஒருவனுக்கு இரட்சிப்பு கிடைக்கும் என அறியாமையில் கூறுகிறவர்களுக்கு, தேவ ஞானமான அவர்களை சீர்பொருந்துவதற்காக,

எதிர்கால, தற்கால, கடந்த காலங்களை விளக்கும் தீர்க்கதரிசனங்களை யேகோவா தேவன் ஏற்கனவே தம்முடைய வேதத்தில் தந்துள்ளார். மாறாக, எதிர்காலம் சம்பந்தமாக நம்முடைய ஆவலை திருப்திப்படுத்தும் வகையில் தீர்க்கதரிசனங்கள் தரப்பட்டுள்ளது என்று நாம் எண்ணக்கூடாது. மாறாக, தேவனோடு உடன்படிக்கை செய்த ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் பிதாவின் திட்டத்தோடு ஒருங்கிணையவும், அத்திட்டத்தில் தம்முடைய ஆர்வத்தையும் அனுதாபத்தையும் சேர்த்துக்கொள்வதுடன் தேவனுடைய பார்வையில் தற்கால, எதிர்கால விஷயங்களைப் பார்க்கும் நோக்கத்தில் அவைகள் தரப்பட்டுள்ளன. இவ்விதமாக, கர்த்தருடைய வேலையில் ஆர்வமுள்ளவர்கள் வேலைக்காரனைப்போல ஊழியஞ்செய்யாமல், குமாரனைப்போலும் சுதந்தரவாளியைப்போலும் வாஞ்சையோடும் முழு அறிவின்படியும் ஊழியஞ்செய்வார்கள். இவ்விதமாக, கர்த்தருடைய ஊழியம் செய்ய வெளிப்படுத்தப்பட்டிருக்க, தற்கால நடைமுறை எதிர்மாறாக செயல்பட்டுவருகிறது. ஜாக்கிரதையாக தேவனுடைய வார்த்தைகளைப் படித்தல், பலத்தையும் பரிசுத்தமாகுதலையும் தருமே தவிர தீமையை விளைவிக்காது.

பாவத்திலிருந்தும் அதின் விளைவுகளிலிருந்தும் விடுபட தேவன் வைத்திருக்கும் திட்டங்களைப் பற்றிய அறியாமையினாலும், உலகத்தை மேம்படுத்த அல்லது பாவத்திலிருந்து விடுபட தேவன் தற்கால நிலைமையிலுள்ள பெயர்கிறிஸ்தவர்களையோ அல்லது பெயர்சபையையோ தெரிந்துகொண்டார் என்ற தவறான எண்ணம் இருப்பதாலும், 19 நூற்றாண்டுகளாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வந்தும், சிந்திக்கும் அநேகர் மனதில் முக்கியமான சந்தேகங்கள் எழும்போது, அவர்களும் தவறாக பதிலளிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட சந்தேகங்களை நிவர்த்திசெய்ய சத்தியத்துக்கு குறைவான ஏதொன்றினாலும் முடியாது. நிச்சயமாகவே கூர்ந்து சிந்திக்கும் ஒருவருக்கு இந்த இரு காரணங்களில் ஒன்றினாலேயே உலகம் மேன்மையடையவில்லை என எண்ணமுடியும். தற்கால நிலைமையில் இந்த யுகத்திலேயே உலகத்தை முழுவதும் மனந்திரும்பச் செய்ய வேண்டிய வேலை சபையினுடையது என்ற தவறான எண்ணம் அல்லது தேவனுடைய திட்டமானது மோசமான தோல்வியை அடைந்துள்ளது என்பது. இந்த இரண்டில் எதை உண்மை என்று ஏற்றுக்கொள்ளமுடியும்? இரண்டாம் கருத்தையே அநேகர் எவ்வித



சந்தேகமுமின்றி வெளியரங்கமாகவோ அல்லது உள்ளத்திலோ சொல்லி வருகிறார்கள். இவ்வாறு எதார்த்தமாக தவறான முறையில் விழுந்துபோகிறவர்களை திருத்தி உதவிசெய்வதே இப்புத்தகத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

லண்டன் மிஷினரி சங்கத்தாராலும் பின்பு ஐக்கிய அமெரிக்க மாகாணங்களிலுள்ள பிரஸ்பட்டேரியன் மிஷினரி மாதர் கூட்டத்தாராலும் வெளியிடப்பட்ட ஒரு புள்ளி விபரம் அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது. அது "வெளிநாட்டு மிஷினரிகளுக்கான மௌன வேண்டுகோள்" என அழைக்கப்பட்டுள்ளது. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் தரப்பட்ட ஒரே நாமத்தைப் பற்றி அறியாமல் இருளிலும், அறியாமையிலும் இருக்கிறவர்களின் எண்ணிக்கையைப் பற்றிய விபரம் (படம்) கவலையளிக்கிறதாயிருக்கிறது.


சிக்காகோ பட்டணத்தின் ஒய்எம்சிஏ (YMCA) சங்கத்தாரின் "தி வாட்ச்மேன்" (The Watchman) என்ற பத்திரிக்கை மேற்சொன்ன விபரம் பற்றி கீழ்கண்டவாறு தெரிவிக்கிறது.

"உலக ஜனங்களின் ஆவிக்குரிய நிலைமையைப்பற்றி சிலருடைய கருத்துக்கள் தெளிவற்றதும், உறுதியற்றதுமாயிருக்கிறது. புதுப்புது மிஷினரிகளின் பல்வேறு வகையிலான முயற்சிகளின் மூலம் நமது தேசத்திலும் பிற தேசத்திலும் ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளிலும் சிறப்பான ஞான எழுச்சி ஏற்படுவதற்கும் சுவிசேஷம் பரவுவதற்கும், பெரிய அளவில் தொகை செலவிடப்பட்டு வருவதை நாம் கேள்விப்படுகிறோம். உலகிலுள்ள அனைத்து தேசங்களிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட போதுமான அளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற எண்ணம் எங்களிடத்தில் இருக்கிறது. தற்கால உலகின் ஜனத்தொகை 1,42,40,00,000 (142 கோடியே நாற்பது இலட்சம்) என கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், பாதி ஜனங்களுக்கு மேலாக ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கு ஜனங்கள், முழுவதும் விக்கிரக ஆராதனைக்காரராகவே இருக்கிறார்கள் என்பதை இப்படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். மீதியான பேர்களில் பெரும்பான்மையான ஜனங்கள் முகமதிய மார்க்கத்தாரும் அல்லது இருளில் விழுந்த கிறிஸ்தவ

வகுப்பைச் சேர்ந்தவர்களும் ஆவார்கள். இவர்களுடைய கிறிஸ்தவ மார்க்கம் விக்கிரக ஆராதனை மார்க்கமானதால் இவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் இருக்கிறார்கள் என்றோ அல்லது பிரசங்கிக்கிறார்கள் என்றோ கூறமுடியாது. இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும், அமெரிக்கா தேசத்திலுமுள்ள 11 கோடியே 60 இலட்சம் புராட்டஸ்டன்ட் மக்கள் மூட நம்பிக்கையிலும், அறியாமையிலும் மூழ்கிக்கிடக்கிற விக்கிரக ஆராதனைக்காரரைக் காட்டிலும் ஆழமான இருளில் புதைந்து கிடக்கிறார்கள். 80 இலட்சம் யூதர்கள் நசரேயனாகிய இயேசுவை நிராகரிக்கும் வேளையில், 30 கோடிபேர் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களாயிருந்தும், அவருடைய விசுவாசத்தை உடையவர்களாயிருக்கவில்லை. 17 கோடிப்பேர் முகமதியர்களாகவும், மீதமுள்ள ஒட்டுமொத்த பெரும்பான்மையான ஜனங்கள், எல்லோருக்கும் மேலான என்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவரை வணங்காமல், மிருகங்களையும், கல்லையும், முன்தலைமுறையினரையும், மரித்த மகான்களையும், பிசாசுகளையுமே வணங்கி வருகிறார்கள். சிந்திக்கும் கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய இருதயத்தை கவலையடையச் செய்வதற்கு இப்புள்ளி விபரமே போதுமானதாக இருக்காதா?"

உண்மையாகவே இது கவலையளிக்கும் விபரத்தையுடைய படமே. இப்படத்தில் விக்கிரக ஆராதனைக்காரரையும், முகமதியரையும், யூதரையும் பலவகையான கோடுகள் மூலம் வித்தியாசப்படுத்தி இருந்தாலும் இவர்கள் எல்லோரும் கிறிஸ்துவைப்பற்றி முழுமையான அறியாமையில் இருக்கிறார்கள். இருளில் இருக்கும் கிறிஸ்தவர்களின் தொகை ஓரளவாய் குறைத்து காண்பிக்கப்பட்டிருப்பதாக சிலர் எண்ணலாம். ஆனால், அவ்வாறல்ல என்று நாங்கள் நினைக்கிறோம். பெயர் கிறிஸ்தவ மார்க்கத்தை எவ்வளவாக வெளிப்படுத்திப் பேசக்கூடுமோ அந்த அளவுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக, 11 கோடியே 60 இலட்சம் புராட்டஸ்டன்ட் சொல்லப்பட்டது, உண்மையான தொகைக்கு அதிகமானதாகும். 1 கோடியே 60 இலட்சம் பேர் மாத்திரமே பல சபைகளில் அங்கமாயிருக்கிற வாலிபப் பருவத்தையுடையவர்கள். மேலும், "கிறிஸ்துவில் பரிசுத்தமாக்கப்பட்ட," "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற," "சிறுமந்தையை" சார்ந்த கிறிஸ்தவர்கள் 10 இலட்சம் என்று சொல்வதற்குக்கூட நாம் அஞ்சுகிறோம். கிறிஸ்தவ





சபையின் அங்கங்கள் என கணக்கிடப்படுவோருள் மீதியானவர்கள் சிறுவர்கள், குழந்தைகளுமென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஐரோப்பா தேசங்களில் சிறுகுழந்தைகள்கூட சபையின் அங்கங்கள் என கணக்கிடப்பட்டு வருகிறார்கள்.

இப்படத்தில் ஜனங்களின் மேலுள்ள இருளைக் காண்பித்தபோதிலும், இதுவே உச்சகட்ட இருள் என்று கூற முடியாது. இதைக்காட்டிலும் அதிகமான இருள் உண்டு. எவ்வாறெனில், இங்கு காண்பிக்கப்பட்ட படம் தற்கால சந்ததிகளைப்பற்றி மட்டுமே காண்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 6000 வருடங்களில் ஒவ்வொரு நூற்றாண்டுக்குப் பின் நூற்றாண்டுகளாக, ஏறத்தாழ எல்லா மனிதரும் அறியாமையிலும், பாவத்திலும் மூடப்பட்டிருந்ததை கருத்திற்கொள்ளும்போது, எப்படிப்பட்ட இருள் ஆட்கொண்டிருக்கிறது. பொதுவாக நோக்கினால்கூட இது உண்மையாகவே பயங்கரமாயிருக்கிறது.

இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழ் கொடுக்கப்பட்ட ஒரே நாமத்தை அறியாத கோடிக்கணக்கான ஜனங்களும், சில பரிசுத்தவான்கள் தவிர 11 கோடியே 60 இலட்சம் புராட்டஸ்டண்டுகளும் நேராக நித்திய வேதனை ஸ்தலத்துக்குப் போகும் பாதையில் செல்கிறார்கள் என இன்றைய கிறிஸ்தவர்களுடைய பல்வேறு விசுவாச கோட்பாடுகள் போதிக்கிறது. இவ்வாறு விசுவாசிக்கிறவர்கள் இப்பயத்தினாலேயே மிஷனரி ஊழியங்களை அதிகமதிகமாக செய்ய முயற்சி எடுப்பது நமக்கு ஆச்சரியமல்ல. ஆனால், அவ்விஷயத்தில் அவர்களே அதிகமான வைராக்கியமில்லாதவர்களாய் இருப்பதும் ஆச்சரியமாக உள்ளது. இவ்விதமாய் விசுவாசிப்பது மெய்யாகவே மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை இல்லாமல் செய்வதுடன், வாழ்க்கையின் எதிர்கால பிரகாசமான நம்பிக்கையை இருளில் மூழ்கடிக்கச் செய்கிறதாயிருக்கிறது.

இவ்விஷயத்தில் அஞ்ஞானிகளின் முடிவைப்பற்றி நாம் தவறாக சொல்லவில்லையென்று வரைபடத்தின் மூலம் காண்பிக்க, "அந்நிய மிஷனரிகளுக்கான மௌனவேண்டுகோள்" என்னும் பிரதியிலிருந்து எடுத்துரைத்திருக்கின்றோம். "உலகில் நாள் ஒன்றுக்கு 1 இலட்சம் விதம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் மரிக்கிற வேளையில், மற்ற எல்லா



தேசங்களிலும் இருக்கிற மாபெரும் ஜனக்கூட்டமாகிய 100 கோடிபேர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்" என்கிற வரியோடு முடிக்கப்பட்டிருக்கிறது.

மனிதக் கொள்கையின்படி பார்த்தால் இது கவலையளித்தாலும், தேவ வசனமானது இதுகுறித்து ஒரு பிரகாசமான கண்ணோட்டத்தைத் தருகிறதை இப்புத்தகத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். தேவ வார்த்தையின்படி போதிக்கப்படும்போது, தேவனுடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டம் ஒருபோதும் இம்மாதிரியான தோல்வியை அடைந்துவிடும் என்று நாம் நம்ப முடியாது. குழப்பத்திலிருந்து ஒரு தேவனுடைய மனுஷன், தற்கால நிலைமையைப் பற்றியும் அதிலிருந்து விடுதலைப் பற்றியும் ஏசாயா 60:2, 3ல், "இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும். ஆனாலும், கர்த்தர் உன்மேல் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். உன் வெளிச்சத்தினிடத்திற்கு ஜாதிகளும் (அஞ்ஞானிகளும்) உதிக்கிற உன் ஒளியினிடத்திற்கு இராஜாக்களும் நடந்து வருவார்கள்" என வாசிக்கும்போது அவர் தெளிவடைந்து ஆறுதலடையக்கூடும். இத்தீர்க்கதரிசனத்தில் காரிருளுக்கு பதிலாக வாக்குத்தத்த வெளிச்சம் வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, "உன் வெளிச்சத்தினிடத்திற்கு ஜாதிகள் (பூமியின் எல்லா ஜனங்களும்) வருவார்கள்."

இவ்வுலகில் அறியாமை இருள் நீடிப்பதும், சத்தியம் தீவிரமாக பரவாததும் கிறிஸ்தவர்களுக்கும் ரகசியமாயிருந்ததுமல்லாமல் உலகம் அதின் தீமையை உணர்ந்து அநுபவித்து வந்தது. எகிப்தின் மேல் வந்த காரிருளைப்போன்று, இவ்வுலகமும் அதே காரிருளில் மூடியிருப்பது நன்கு உணரமுடிகிறது. இதை நிரூபிக்க பிலதெல்பியா பத்திரிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் வாக்கியங்களை கவனிக்கவும். ஒன்றுக்கொன்று விரோதமான கிறிஸ்தவ கொள்கைகளால் தீவிரப்படுத்தப்பட்ட சந்தேகம் மற்றும் குழப்பம், ஒரு எழுத்தாளரின் மனதைவிட்டு தேவனுடைய வார்த்தையிலிருந்து வரும் தெய்வீக சத்திய கதிர்களால் நீங்காததால் பின்வருமாறு எழுதுகிறார்:

"ஜீவன்! மாபெரும் இரகசியம்! யாரால் விளக்க முடியும்?
அற்பமான இக்களிமண்ணில் தேவன் எதை விரும்புகிறார்?
ஆற்றலும் திறனும் வாய்ந்த தம் கரத்தின் கிரியையால்
உருவாக்கினாரே?
மனம், பொருள், இருதயம், உறுதியான சித்தமுங்கொண்டு
பிறக்கச்செய்தாலும், ஏன் நிச்சயமான மரணத்தை அடைய நேரிடுகிறது?
விரைவாய்ச் சென்ற அந்த உயிர்மூச்சு எங்கே?
எண்ணிலடங்கா மனிதர்களில்,
வாழ்ந்து துன்பப்பட்டு மரித்தவர்களில் – ஒருவராவது
திரும்பிவந்து அந்த மாபெரும் திட்டத்தைச் சொன்னதில்லை,
மரணத்திற்குப் பின்பு உள்ள அந்த நம் எதிர்காலத்தை.
தேவனே! உங்களை வேண்டுகிறோம்,
எங்களை வழிநடத்த சில புதிய ஒளிக்கதிர்களை வீசச்செய்யும் – அது
வெறும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டல்ல, மாறாக தெளிவாய்த்
தெரியும்படியாக
இரவின் இருள் மேகங்களை எங்களைவிட்டு அகற்றும்;
சந்தேகம், திகில், பயத்தின் நடுக்கம் –
எங்கள் ஆசீர்வாதங்களைத் தடுக்கும் இந்த எண்ணத்தையும்
இந்த அமைதியற்ற மனதை அலைக்கழிக்கும்
மோதலும் சச்சரவுண்டாகும் பல்வேறு பிரிவுகளையும், பள்ளிகளையும்
அதன் கொள்கைகளையும் அகற்றும்;
அவர்கள் கொள்கைகளை நியாயப்படுத்தி, விளக்கிடுகிறார்கள்.
ஆனால், நாங்களோ நீர் இருக்கிறவண்ணமாகவே உம்மை அறிய
வாஞ்சிக்கிறோம்;
உம்மோடே தங்கித் தரிக்கவும்,
உம் திட்டத்திலும் முடிவில்லா சிருஷ்டிகரிடத்திலும்,
மனிதரிடத்திலும், எங்கள் பங்கை நிறைவேற்ற ஆசிக்கிறோம்.
எங்கள் கண்களை மறைக்கும் திரையை நீக்கும்;
' வெளிச்சம் உண்டாகக்கடவது' என்று மீண்டும் கட்டளையிடும்;
அறியப்படாதிருப்பதை நாங்கள் இருளில் தேடுகிறோம்;
உமது சிங்காசனத்தின் இரகசியத்தை எங்களுக்கு வெளிப்படுத்தும்."



<u>இதற்கு நாம் தரும் மறுமொழி:</u>

முத்திரையிடப்படாத ஜீவனுக்கான இரகசியம் விரைவில் வெளிப்படும்
தேவன் இந்த அற்ப களிமண்ணிற்குள் என்ன மகிழ்ச்சியை
வைத்திருக்கிறார்.
தம் கைவேலைப்பாட்டின் ஆற்றலால் உருவாக்கி
தம் சிந்தை, சித்தத்தை சாடலாக முத்திரையிட்டாரே,
மரிப்பதற்காக நாம் பிறக்கவில்லை.
பூமியிலிருந்து இதே பூமிக்கு உயிர்தெழும்போது–
சாபத்தை வென்றவர்களாவோம்.
வல்லமையுள்ள சேனையிலிருந்து வந்த ஒருவர்
அதிகமாய்த் துன்பப்பட்டு, ஜீவித்து மரித்தாரே,
உயிர்த்தெழுந்து தேவனது மாபெரும் ஏற்பாட்டை நிரூபித்தாரே.
ஆகவே, அந்த எதிர்காலம் நம்முடையதாகிறது.
அவரது வசனம் இந்தப் புதிய ஒளிக்கதிரை வெளியரங்கமாக்குகிறது,
நம் பாதைக்கு வெளிச்சமாயிருந்து வழிநடத்துகிறது;
தற்போது விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டாலும்
நிச்சயமாய் தரிசித்தே நடக்கிறோம்.
இரவின் இருண்ட மேகங்களை அகற்றி
சந்தேகம், திகில், பயத்தின் அகோரம், நம் ஆசீர்வாதங்களைத் தடுக்கும்
எண்ணங்களையும்,
சச்சரவு உண்டாக்கும் பிரிவுகளையும், பள்ளிகளையும்,
அவர்களது போதகங்களை நியாயப்படுத்தும் கட்டளைகளையும்
அகற்றுகிறீர்.
உம்மை இருக்கிறவண்ணமாகவே தேடவும், கற்றறியவும் செய்கிறீர்;
நாங்கள் உம்மிடமே தங்கியிருக்கவும், உம் அற்புதத் திட்டத்தையும்
நித்திய சிருஷ்டிகராகிய உமக்கும், மனிதருக்கும் எங்களது பங்கை
ஆற்றுவோம்.
பரலோக வெளிச்சத்தில் நடப்பவர்க்கு அனைத்தையும் வெளிப்படுத்தி
மூடியிருக்கும் திரையை நீக்குகிறோம்.
யுகாயுகங்களுக்கும் மறைக்கப்பட்டு, தற்போது வெளியாக்கப்பட்டு வருகிற
அவருடைய சிங்காசனத்தின் மகிமையுள்ள இரகசியம் இதுவே.

தேவனுடைய வார்த்தைகளும் அவருடைய நோக்கங்களும் இப்பொழுது வெளியரங்கமாவதினால், இப்பேர்ப்பட்ட ஆசீர்வாதங்கள் இவ்வுலகத்திற்கு வருவதுடன், இப்புத்தகம் இந்த ஆசீர்வாதங்களை வெளியரங்கமாக்கும் ஒரு பகுதியாக இருக்கிறது என நம்புகிறோம்.

மனிதருடைய வெறும் கற்பனைகளைவிட்டு விலகி, ஏசாயா 1:18–இல் தேவன் நம்மை அழைக்கிறபடி வேத வசனத்தை ஆராய்ச்சி செய்வதற்காக நேரத்தை செலவிட்டு, அறிவை உபயோகிக்கும்போது, தேவன் வைத்திருக்கின்ற மிகப்பெரிய பரலோகத்தின் வாகுத்தத்த ஆசீர்வாத வானவில்லை கண்டுபிடித்துவிடுவர். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படாதவர்களும்கூட தேவனுடைய சத்தியத்தைப் புரிந்துகொள்ளலாம் என சிலர் தவறாக நினைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்காக அது அல்ல. சங். 97:11–ன்படி, "நீதிமானுக்காக வெளிச்சமும் (சத்தியமும்), செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது." தேவனுடைய பிள்ளைகளுக்கே இருளிலிருந்து வெளிச்சத்தில் நடக்க அவருடைய விளக்கு தரப்படுகிறது. சங்.119:105–ன்படி "உமது வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." மேலும், நீதி.4:18ன் படி, "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்." இங்கு சொல்லப்பட்ட நீதிமான்கள் உண்மையாகவே நீதிமான்களில்லை. ஏனெனில், ரோமர் 3:10ன்படி "நீதிமான் ஒருவனும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை." மாறாக, விசுவாசத்தினால் நீதிமான்களானும் வகுப்பாரையே இங்கு குறிக்கிறதாக இருக்கிறது. இவ்வகுப்பாரே அதிகமதிகமாய் பிரகாசிக்கும் வெளிச்சத்தின் பாதையில் நடக்க அதாவது வெளியாக்கப்பட்டிருக்கும் தெய்வீகத் திட்டத்தைப் பார்ப்பதோடு மட்டுமல்ல, வரப்போகிற காரியங்களையும் காணும் ஆசீர்வாதம் பெற்றவர்களாவர். ஒவ்வொரு தனித்தனி நீதிமானுடைய பாதை பிரகாசமாயிருக்கும் வேளையில், குறிப்பாக இது நீதிமான்களாக்கப்பட்ட வகுப்பாருக்கு விசேஷமாக பொருந்தி வருகிறது. முற்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும் கடந்தகால மற்றும் தற்கால பரிசுத்தவான்களும் இந்த அதிகரிக்கிற



வெளிச்சத்தில் நடந்தாலும், இன்னும் வரப்போகிற காலத்தில் இப்பொழுதைவிட அது அதிகமதிகமாய் பிரகாசிக்கும், அதிகரித்து வருகிற மற்றும் தொடர்ச்சியான வெளிச்சமாகிய இப்பாதையானது ஏற்றவேளையில் இன்னும் அதிகமாய்ப் பிரகாசிக்க வேண்டிய தேவனுடைய புத்தகமாகும் (பதிவேடு).

ஆகவே, இவ்வாக்குத்தத்தங்கள் நிறைவேற எதிர்பார்க்கும் எல்லா "நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்." அநேகர் விவாசத்தில் குறைவுள்ளவர்களாகவும், உண்மையில்லாதவர்களாகவும், ஈடுபாடு இல்லாதவர்களாகவும் இருக்கிறபடியினால், அதிகமாய்ப் பிரகாசிக்கிற வெளிச்சத்தைக் காணமுடியாதபடி, அவ்வெளிச்சத்தினால் நடப்பதற்குப் பதிலாக, இருளிலேயே இருக்கும்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சபையை சத்தியத்தில் வழிநடத்த கொடுக்கப்பட்ட தேவனுடைய பரிசுத்த ஆவியானது எழுதப்பட்டிருக்கிற தேவனுடைய வசனங்களிலிருந்து நமக்கு எடுத்துக் காண்பிக்கிறதாயிருக்கிறது. வெளிச்சம் தருவதாயிருக்கிறது. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால், தேவனுடைய பரிசுத்த வேத வாக்கியங்கள் இரட்சிப்புக்கேற்ற ஞானத்தை தருமேயன்றி எழுதப்பட்டிருக்கிறவைகளுக்கு மேலாக நமக்கு ஒன்றும் தேவையில்லை. (2 தீமோ. 3:15)

இப்போது இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடிக்கொண்டிருக்கும் என்பது இன்னும் உண்மையாய் இருந்தபோதிலும், எப்போதும் பூமி இதே நிலைமையிலிருக்காது. ஏசாயா 21:12–ல், "விடியற்காலம் வருகிறது" என்ற உறுதிமொழி நமக்குத் தரப்பட்டிருக்கிறது. தேவன் எவ்வாறு தமது சூரியனை நல்லோர்மேலும் தீயோர்மேலும் உதிக்கச் செய்கிறாரோ, அதேபோல ஆயிரமாண்டு ஆட்சியில், "இருளில் மறைந்திருக்கிறவைகளை வெளியரங்கமாக்கி இருதயங்களின் யோசனைகளை வெளிப்படுத்த" (1 கொரி. 4:5), முழு உலகமும் நன்மையடையும்படிக்கு, தம்முடைய நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுவார். அப்போது அது தீமையின் கொடிய துர்நாற்றத்தை நீக்கி, ஜீவன், உடல்நலம், சமாதானம் மற்றும் மகிழ்ச்சியையும் கொண்டுவரும்.

முற்காலத்தை நாம் நோக்கும்போது இவ்வெளிச்சம் மிகவும் குறைவாகப் பிரகாசித்தது. அது மட்டுமல்ல, முற்காலத்தில் வாக்குத்தத்தங்கள் மிகவும் மங்கலாகவும், மறைவானதாகவுமிருந்து, ஆபிரகாமுக்கும் மற்றவர்களுக்கும் தரப்பட்ட வாக்குத்தத்தங்களும், மாம்சீக இஸ்ரயேலருக்குத் தரப்பட்ட கட்டளைகளும், சடங்குகளும் தேவனுடைய மேன்மையான ஆசீர்வாதங்களைப் பற்றின நிழலை மாத்திரம் இருந்தபடியினால், அவைகள் அப்போது மிகச்சாதாரணமாகத் தெரிந்தது. ஆனால், கிறிஸ்துவின் நாள் வந்தபோது, அவ்வெளிச்சம்பெற்ற யூதர்கள் அதிகமாக எதிர்பார்த்தது என்னவெனில், இஸ்ரயேலை அவர்களுடைய எதிரிகளிடமிருந்து விடுவிக்க தேவன் மேசியாவை அனுப்பி பூமியின் மீதெங்குமுள்ள எல்லா இராஜ்யங்களுக்கும் மேலான இராஜ்யமாக்கி, உலகமனைத்திலுமுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும் தம்முடைய பிரதிநிதிகளாக தங்களை நியமிப்பார் என்பதே. அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தின் உடன் பங்காளிகள் ஆவதற்கு, அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிபந்தனைகளானது, அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக இருந்ததுடன், ஆசீர்வாதங்களை அடைவது அவர்களுக்கு கூடாமற்போனதாலும், அச்செய்தி அவர்களில் அநேகருக்கு இருளாகப்போய்விட்டது. ஏற்றகாலம் வந்தபோது, தேவனுடைய திட்டமானது, இஸ்ரயேல் அல்லாத வானத்தின் கீழெங்குமுள்ள எல்லா மனிதர்களும் விசுவாசத்தின் மூலமாக ஆபிரகாமின் சந்ததியும் வாக்குத்தத்தத்தின்படி சுதந்திரராகும்படி அவர்களுக்கும் இச்செய்தி பரவினபோது, இஸ்ரயேலருடைய குருட்டாட்டமும், பகையும் வெகுவாய் இன்னும் அதிகரித்தது.

ஆனால், உலகத்திற்கு வரப்போகிற ஆசீர்வாதங்கள் உறுதியானதென்றும், அது நிறைவேற இஸ்ரயேலரையும் உள்ளடக்கிய ஒரு ஆவிக்குரிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட, யூதரிலும், புறஜாதியாரிலுமிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு, உன்னதமான ஆவிக்குரிய சுபாவத்திலும் வல்லமையிலும் உயர்த்தப்படும் ஒரு சிறுமந்தை தேர்ந்தெடுக்கப்பட்டபிறகே, அந்த ஆவிக்குரிய ராஜ்யம் வரும் என இயேசு போதித்த சுவிசேஷம் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பே சபையாரால் அறிந்துகொள்ளப்பட்டது. இதையே, 2 தீமோ. 1:10ல்,



“சுவிசேஷத்தினால் இயேசு ஜீவனையும், அழியாமையையும் வெளியரங்கமாக்கினார்” என வாசிக்கிறோம். அது முதற்கொண்டு இன்னும் அதிகமாக இவ்வெளிச்சம் பிரகாசிக்கிறதென்று யோவா.16:12, 13–இல் கர்த்தர் கூறும்போது, “இன்னும் அநேகக் காரியங்களை உங்களுக்கு சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்போது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திலும் உங்களை வழிநடத்துவார். வரப்போகிற காரியங்களையும் உங்களுக்கு அறிவிப்பார் என்றார்.”

இருந்தபோதிலும் அப்போஸ்தலர்கள் மரித்தபின்பு, சபையின் மக்களில் அநேகர் வேத விளக்கைத் தள்ளி, தங்களை வழிநடத்த மனித போதகர்களை தங்களுக்கு நியமித்துக்கொண்டபோது, அந்த போதகர்கள் தங்களை பெருமையினால் உயர்த்தி, தேவனுடைய சபையில் தங்களுக்கு பதவிகளையும் பட்டங்களையும் சூட்டிக்கொண்டதோடுகூட, சபையை ஆளுகை செய்யத் தொடங்கினர். பின்பு இவர்கள் தேவ வார்த்தைக்கு விரோதமாக “குருக்கள்” என்று மற்றவர்களால் தாங்களே மேன்மைபடுத்தியதுடன், இவர்களே தங்களை சரியான விசுவாசத்தில் வழிநடத்துபவர்கள் என்று மிதமிஞ்சி மதிக்கப்பட்டனர். இப்படியாக, தவறே இல்லாத தேவனுடைய பரிசுத்த வார்த்தைகள் நிராகரிக்கப்பட்டு, தவறுகள் நிறைந்த மனித போதனைகளால் மிதமிஞ்சி மதிக்கப்பட்ட போப்பு மார்க்கம் என்னும் ஒரு மாபெரும் அமைப்பு அச்சமயத்தில் உருவெடுத்தது.

இவ்விதமாய் சத்தியம் நிராகரிக்கப்பட்டதின் விளைவாக வெகு மோசமான மற்றும் தீமையான விளைவுகள் ஏற்பட்டது. எல்லோரும் அறிந்தபடி, திருச்சபையையும், நாகரீகம் அடைந்த மக்களையும் இந்த அமைப்பானது அடிமைகளாக்கினதுடன், மனிதப் பாரம்பரியங்களையும், போதனைகளையும் ஏற்றுக்கொள்ள வழிநடத்தினது. இந்த அடிமைத்தனத்திலிருந்து மறைக்கப்பட்டிருந்த வேதாகமும் மற்றும் சுயாதீனமும் சீர்திருத்தம் என்றழைக்கப்பட்ட (Reformation) தைரியமான மற்றும் ஆசீர்வாதமான பலமிக்க அடியின் மூலம் விடுதலை அடையப்பெற்றது. இந்த சீர்திருத்தத்திற்காக தைரியசாலிகளாகிய

லூத்தர், ஸ்விங்லி, மெலங்தோன், விக்லிப், நாக்ஸ் போன்ற அநேகரை தேவன் எழுப்பினார். போப்பு மார்க்கமானது, வேதத்தைத் தள்ளி, சபைக்குத் தரப்பட்டிருந்த கட்டளைகளையும், கொள்கைகளையும் மாற்றியதுடன், இச்சபையின் மனிதக் கட்டளைகளையும், கொள்கைகளையும் உண்மை சபைக்குள் நுழைத்துவிட்டனர் என்ற உண்மையை இவர்கள் சுட்டிக்காட்டினர். மேலும் இவ்வமைப்பானது தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக எதிர்த்து நிற்பதுடன், மனிதப் பாரம்பரியத்தின்மேல் கட்டப்பட்டுள்ளது என நிரூபித்தார்கள். இந்த சீர்திருத்தவாதிகளும், அவர்களைப் பின்பற்றினவர்களும், போப்பு மார்க்கத்தை எதிர்த்ததினால், புராட்டஸ்டன்டுகள் (Protestants) என்று அழைக்கப்பட்டதுடன், இவர்கள் தேவனுடைய வார்த்தை ஒன்றே விசுவாசத்திற்கும், நடக்கைக்கும் ஏற்ற சட்டம் எனக் கூறினர். அநேக உண்மையான ஆத்துமாக்கள் சீர்திருத்தக்கால வெளிச்சம் இருந்தவரை அவ்வெளிச்சத்தில் நடந்தார்கள். ஆனால், ஒரு சிறிய வளர்ச்சிக்குப் பின்பு வெளிச்சத்தில் நடப்பதற்குப் பதிலாக தங்களுக்கு ஏற்ற சில தலைவர்களை ஏற்படுத்திக்கொண்டு அதற்குமேல் தேர்ச்சியடையாமல் போனார்கள். மேலும் சத்தியத்தில் வளர்வதற்கு பதிலாக தங்களுக்கு கிடைக்கப்பெற்ற குறைந்த சத்தியத்தை வைத்து தாய்ச் சபையின் தவறுகளோடு தங்களை இணைத்துக்கொண்டு தங்களுக்குத் தாங்களே வேலியடைத்துக்கொண்டார்கள். சீர்திருத்தவாதிகள் கண்டுபிடித்ததற்கு மேலாக இனி ஒன்றும் கண்டுபிடிக்க முடியாதென பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இந்த மூட நம்பிக்கையில் மூழ்கி, அநேக வருடங்களுக்கு முன்பாக சொல்லப்பட்ட கோட்பாடுகளையே நம்பி வருகின்றனர்.

இது மிகவும் மோசமான தவறாகும். நிச்சயமாகவே சீர்திருத்தக் காலத்தில் ஏற்கனவே இருந்த தவறான போதனைகள் நீக்கப்பட்டு ஒரு சில விசேஷமான சத்தியங்கள் வெளியானபோதிலும், கிறிஸ்தவர்கள் அப்போதனைகளிலேயே தங்களை உட்படுத்தியிருந்தாலும், அதன்பின்பும் தொடர்ச்சியாக வெளிவரவேண்டிய விசேஷமான சத்தியங்களை ஆராயாமல், பழைய பாரம்பரிய வேலிக்குள்ளேயே இருந்துவிட்டனர். உதாரணமாக, ஆதாமும் மற்றவர்களும் முற்றிலும்



அறிந்திராத ஜலப்பிரளயம் வருகிறது என்பதை ஒவ்வொருவரும் விசுவாசிக்க வேண்டும் என்பது நோவா காலத்து சத்தியம். ஆனால் தற்காலத்தில் ஜலப்பிரளயம் வரப்போகிறது என்று போதித்தால் அது சத்தியமல்ல. ஆனால், தொடர்ச்சியான யுகங்களைப்பற்றிய ஏற்றகாலத்தின் மற்ற சத்தியங்கள் வெளிப்பட வேண்டியதாய் இருக்கும்போது, அவ்வெளிச்சத்தில் நடக்காமல், பலவருடங்களுக்கு முன்பு சொல்லப்பட்டு நடந்துமுடிந்த எல்லா சத்திய வெளிச்சத்தை நாம் பெற்றிருந்தாலும், இன்னும் நாம் குறிப்பிடத்தக்க அளவு இருளிலேயே இருக்கிறவர்களாவோம்.

பிரகாசமான பாதையில் நடக்கும் ஒவ்வொரு பசிதாகமுள்ள பக்தர்களுக்கும் தேவனுடைய வார்த்தையானது ஒரு ஞான ஆகாரம் நிறைந்த மாபெரும் களஞ்சியமாகும். அங்கே குழந்தை போன்றவர்களுக்கு பால் ஆகாரமும் (1 பேது. 2:2), நன்கு வளர்ந்து வருபவர்களுக்கு பலமான ஆகாரமும் (எபி. 5:14) இருப்பதுடன், காலங்களுக்கும் சூழ்நிலைகளுக்குமேற்ற உணவும் அங்கே உண்டு. நமது கர்த்தரின் கூற்றுப்படி, "பணிவிடைக்காரருக்கு தகுதியான காலத்திலே படி கொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக்காரன் யாவன் ?" (லூக். 12:42; மத். 13:52) இப்பேர்ப்பட்ட சத்திய உணவு வகைகள் கிறிஸ்தவ மதப் பிரிவுகளாகிய களஞ்சியங்களிலிருந்து கொண்டுவர முடியாது. இவைகளிலிருந்து பழைய, ஆனால் நன்மையான சிலவற்றை கொண்டுவரமுடியுமே தவிர, புதியனவைகளைக் கொண்டுவர முடியாது. பல்வேறு கிறிஸ்தவ பிரிவுகளில் இருக்கிற சத்தியமானது அதினுடைய உண்மையான அழகும், மேன்மையும் புரிந்துகொள்ளப்படாதவண்ணம், அநேக தவறுகளால் கலக்கப்பட்டும் மூடப்பட்டும் உள்ளது. அங்குள்ள அநேகக் கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று விரோதமானதும், ஒத்துப்போகாததாயிருந்தாலும், வேத ஆதாரமுள்ளதாக போதிக்கப்பட்டு வருவதால், தேவனுடைய வசனம் ஒன்றுக்கொன்று இசைவானதும் ஒற்றுமையுள்ள புஸ்தகமல்ல என்ற குழப்பத்திற்குள்ளாக நேரிடுகிறது. "பைபிள் என்னும் வீணையின்மேல் எந்த ராகமும் வாசிக்கலாம்" என்ற பழமொழி இதினாலேயே உருவாகியிருக்கலாம்.

மனிதப் பாரம்பரியங்களானது தற்கால அறிவின் பெருக்கத்தோடு சேர்ந்துகொண்டு தேவனுடைய வார்த்தைகளையும், அதன் தன்மைகளையும் எப்படி தவறாக அறிவிக்கிறது. நாம் வாழ்கிற இந்நாட்களில் இப்படி குருட்டாட்டத்திலும், சக மனிதருடைய மூட நம்பிக்கையான பயபக்திக்கும் இனி எப்போதும் வளைந்து கொடுக்காமல், நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு சரியான காரண காரியங்கள் தேவை என்ற கருத்து எவ்வளவு மேன்மையானது. ஆகையால் உண்மையான வேதமாணவர் தனக்குள் இருக்கும் நம்பிக்கையைப் பற்றி எப்போது வேண்டுமானாலும் விவரிக்கத் தயாராக இருக்க வேண்டும். தேவ வசனம் ஒன்றே ஒருவனை அறிவுள்ளவனாக்க, அவைகள் உபதேசத்திற்கும் போதனைகளுக்காகவும் தரப்பட்டுள்ளது. (1 பேதுரு 3:15; 2 தீமோ. 3:15, 17) இக்களஞ்சியம் ஒன்றே விசுவாச வீட்டாருக்கு பழையதும் புதியதுமான ஏற்றகால ஆகாரத்தை (சத்தியத்தை) குறைவில்லாமல் தந்துகொண்டிருக்க முடியும். நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கும் வெளிச்சமாகிய வேத வசனத்தை நம்பும் யாரும் மாண்டின் லூத்தர் காலத்தில் அந்த நடுப்பகல் வந்தாயிற்று எனக் கூறமுடியாது. அந்த நாள் இன்னும் வராததால் "பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற அவ்விளக்கைப்போன்ற தீர்க்கதரிசன வசனங்களை கவனித்திருப்பது நலமாயிருக்கும்." 2 பேதுரு 1:19

அது மட்டுமல்ல, இப்போது நாம் நடக்கும் வெளிச்சப் பாதையோடு திருப்தியடையாமல், இன்னும் அதிக வெளிச்சத்தில் நடந்து முன்னே செல்ல வேண்டும். இல்லையெனில், அவ்வெளிச்சம் அதோடு நின்றுவிடாமல் நம்மையும் கடந்து, நம்மை இருளில் பின்தங்க விட்டுவிட்டு தொடர்ந்து சென்றுவிடும். மேலும், அவ்வெளிச்சப் பாதையில் தொடர்ந்து நடக்காமல் உட்கார்ந்து விடும் பிரச்சனையும் அநேகரிடத்தில் உள்ளது. வேத அகராதியை எடுத்து, "உட்காரு," "நில்" என்ற வார்த்தைகளை "நட," "ஓடு" என்னும் வார்த்தையின் உள் அர்த்தங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெரிய வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளலாம். ஏசா. 42:7; சங்.1:1; எபி.12:1 – போன்ற வசனங்களில், மனிதர் இருளில் உட்காருகிறார்கள், பரியாசக்காரர்



உட்காரும் இடத்தில் உட்காருகிறார்கள், பாவிகளுடைய வழியில் நிற்கிறார்கள், வெளிச்சத்தில் நடக்கிறார்கள், பரிசைப்பெற ஓடுகிறார்கள் எனப் பார்க்கிறோம். மேற்சொன்ன வார்த்தைகளான, "உட்காரு," "நில்" என்ற வார்த்தைகள், மனிதர் அறியாமை மற்றும் தீமையில் நடப்பதையும், "நட," "ஓடு" என்ற வார்த்தைகள் சத்திய வெளிச்சத்தில் பரிசைப் பெற்றுக்கொள்ள ஓடும் வாழ்க்கை முறையைக் குறிப்பால் உணர்த்தும் அறிவைத் தருகிறது என அறிந்துகொள்கிறோம்.

பூரணமான அறிவைப் பெற்றுக்கொள்வது கடந்த காலத்திற்குரியதாய் இராமல் இன்னும் வெகுசீக்கிரத்தில் எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. நாம் நம்புகிறபடி இந்த உண்மையைப் புரிந்துகொள்ளாத வரைக்கும் பழுப்பது வகைகளில் வெளிப்படுத்தப்பட்டு வருகிற பிதாவினுடைய தெய்வீகத் திட்டங்களை எதிர் பார்க்கவோ போற்றவோ நாம் தயாராக முடியாது. தற்கால மற்றும் வருங்கால சத்தியங்களின் அறிவைப் பெறுவதற்கு அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் எழுதியதற்கு நாம் போக வேண்டியது உண்மைதான். ஆனால், அவர்கள் தேவனுடைய தெய்வீகத் திட்டங்களையும், நோக்கங்களையும் நம்மைவிட அதிகமாகப் புரிந்துகொண்டார்கள் என்பதற்காக அல்ல. கிறிஸ்தவ யுக முழுவதும் உள்ள சபையாகிய நமக்கு தெய்வீகத்திட்டம் சம்பந்தப்பட்ட சத்தியங்களையும், இன்னும் வெளிப்பட வேண்டிய சத்தியங்களையும், தெரிவிக்க அவர்களை உபயோகித்தார் என்பதினாலேயே அவர்கள் எழுதினவற்றிற்குச் செல்கிறோம். இந்த உண்மையையும் அப்போஸ்தலர்களே நன்கு நிரூபித்திருக்கிறார்கள். தேவன் தம்முடைய சித்தத்தையும், நோக்கத்தையும் சபைக்கு வெளிப்படுத்தினதை, அப்பவுல் கூறுகிறபடி, "இக்கிறிஸ்தவ யுகத்தில்" விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமே வடிவமைக்கப்பட்டதான "பரம அழைப்பின்" இரகசியத்தைப் புரிந்துகொள்ளும் வண்ணம் அவர்களுடைய மனக்கண்கள் பிரகாசமாக்கப்பட்டுள்ளது. ஏனெனில், காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படியே பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படுத்தப்பட வேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானித்திருந்த தமது தயவுள்ள சித்தத்தின்

இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:9,10) மேலும், எபேசியர் 3:4–6–ல் "கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம். இந்த இரகசியம் இப்போது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறதுபோல முந்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை" என அப்பவுல் தெளிவுபடுத்துகிறார். இதன் மூலம் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களை தீர்க்கதரிசிகளாவது அல்லது தேவ தூதர்களாவது புரிந்துகொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. அப்.பேதுரு கூறும்போது அவ்விஷயங்களைப் பற்றி தீர்க்கதரிசிகள் ஆவலாக அறியமுற்படும்போது, அது அக்காலத்திற்குரியதாயிராமல் சுவிசேஷ யுகத்தில் வாழும் நமக்காகவே என தேவன் அவர்களுக்குக் கூறியிருந்தார். மேலும், இந்த தேவ திட்டத்தைப்பற்றி அதிக வெளிச்சம் கொடுக்கப்படவேண்டுமென்று தேவனை பிரார்த்திக்கவும் அவர் ஏவியிருக்கிறார். (1 பேதுரு 1:10 – 13)

கர்த்தர் இயேசுவின் வாக்குத்தத்தத்தின்படி சபையானது சகல சத்தியத்திலும் வழிநடத்தப்பட வேண்டும் என்றாலும், அது படிப்படியாய் (gradual) வெளிப்படுத்தப்படும் என்பது வெளியரங்கமாயிருக்கிறது. அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்த சபையானது போப்பு மார்க்கத்தின் தவறான கள்ளபோதனைகளில் கறைபடாதிருந்தாலும், இப்போது தேவ திட்டத்தை நாம் பார்க்கிறபடி மிகவும் ஆழமாகவும், தெளிவாகவும் ஆதி சபை அறிந்திருக்கும் என நாம் அனுமானிக்க முடியாது. தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினாற்போல அதே ஆவியினால் அப்போஸ்தலர்கள் எழுதியிருந்தாலும், அவர்களுள் தேவனுடைய தெய்வீகத் திட்டம் பற்றி அறிந்துகொள்ளும் அளவில் வித்தியாசம் இருந்தது என்பதும் வெளியரங்கமாயிருக்கிறது. சுவிசேஷமானது புறஜாதிகளுக்கு செல்ல ஆரம்பிக்கும்போது பவுலைத் தவிர பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் அதைக் குறித்து கலக்கமுள்ளவர்களாயிருந்ததுடன் அதைப்பற்றிய அறிவில்லாதிருந்ததற்கு இது ஒரு உதாரணம். (அப். 10:28; 11:1–3; கலா. 2:11–14) அப்போஸ்தலர் பவுல் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளையும்,



தேவனுடைய கடந்தகால வழிநடத்துதல்களையும், தனக்கே நேரடியாக வெளிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்களையும் நன்கு அறிந்திருந்ததால் அப்பேதுருவின் நிச்சயமற்ற தன்மையைவிட அப்பவுல் இவ்விஷயத்தில் உறுதியாயிருந்தார்.

மற்றெந்த அப்போஸ்தலர்களையும்விட அப்போஸ்தலர் பவுலுக்கு அபரிதமான தேவனுடைய வெளிப்பாடுகள் இருந்ததென்று வெளியரங்கமாயிருக்கிறது. இந்த வெளிப்பாடுகளை சபைக்கு முழுமையாகவோ அல்லது வெளிப்படையாகவோ மற்ற அப்போஸ்தலருக்கும் (2 கொரி. 12:4; கலா. 2:2) அக்காலத்திலேயே தெரிவிக்கப்படக் கூடாதென்று அவருக்கு தேவ உத்திரவு பிறந்தது என்றாலும், அவர் அடைந்த வெளிப்பாடுகளும் தரிசனங்களும் முழு சபைக்கும் அதிக பிரயோஜனமாயிருந்தது என்பதை அறிந்துகொள்ளலாம். அவருக்கு தெரிவிக்கப்பட்ட "வரப்போகிற யுகங்களைப்பற்றிய தெய்வீக" இரகசியங்கள் எல்லாவற்றையும் தெரிவிக்க அனுமதிக்கப்படாவிட்டாலும், அவர் தெய்வீகத் திட்டங்களை முழுவதும் அறிந்தவரானதால் ஆழ்ந்த கருத்துள்ள வல்லமையுள்ள வார்த்தைகளையும், தீர்க்கதரிசன நிறைவேறுதல்களையும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல்களையும், ஆதிகால சபையைவிட நாம் அதிகமாக அறிந்துகொள்ள முடிகிறது.

மேற்சொன்னவைகளை உறுதிபண்ணும் பொருட்டு, கிபி 96ஆம் வருடத்தில் எழுதப்பட்டதும், வேதத்தின் கடைசிப் புத்தகமுமான வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து நாம் எடுத்துரைக்கிறோம். அதின் துவக்க உரையில் தேவனுடைய திட்டங்கள் குறிந்தபட்சம் அக்காலம் வரையில் முழுவதுமாக வெளிப்படுத்தப்படவில்லையென்பது இதன் மூலம் நிரூபிக்கப்படுகிறதுடன், இன்று வரையிலும் வெளிப்படுத்தப்படாததாலும், அவைகள் இப்புத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதாலும், அதற்கு வெளிப்படுத்தின விசேஷம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஆதிகால சபையைப் பொருத்த வரையில் இப்புத்தகத்தின் எப்பகுதியையாவது யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதிக தரிசனங்களைக் கண்ட அப்போஸ்தலர் யோவானும் கூட அதின் உள்ளான அர்த்தங்களை அறியாதவராகவே இருந்தார். அவர் ஒரு அப்போஸ்தலராகவும், தீர்க்கதரிசியாகவும் இருந்தார். அப்போஸ்தலனாக அவர் அக்காலத்தில்

வெளியாக வேண்டிய சத்தியங்களை அறிந்தும், போதித்தும் தீர்க்கதரிசியாக வருங்கால விசுவாச வீட்டாருக்கான ஏற்றகால ஆவிக்குரிய ஆகாரத்தையும் எழுதி வைத்தார்.

கிறிஸ்தவர் யுகத்தில் பரிசுத்தவான்களில் சிலர் சபையின் எதிர்காலம் பற்றி அறிந்துகொள்வதற்காக இந்த அடையாளப் புத்தகத்தை ஆராய்ந்து பார்த்ததினால் அதிலுள்ள கொஞ்சப்பகுதியை படித்துப் புரியாதவர்கள் கூட அவைகளினால் ஆசீர்வாதமடைந்தனர். (வெளி. 1:3) உதாரணமாக, சீர்திருத்தலின் காலத்தில் மார்டின் லூத்தர் அதை வாசித்தபோது, அவர் உண்மையாய் வழிவிலகு செய்துவந்த ரோம சபை அல்லது போப்பு மார்க்கமே அப்போஸ்தலர் காண்பித்த அந்திக்கிறிஸ்து அமைப்பு என்று கண்டறிந்தார். இப்போது அதைப்பற்றி நாம் விபரமாய் அறிவதுமல்லாமல் அப்புத்தகத்தின் பெரும்பாலான பகுதிகள் போப்பு மார்க்கம் பற்றிய சரித்திரத்தை உடையதென்று காண்கிறோம்.

இவ்விதமாக தேவன் தம்முடைய சத்தியமாகிய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தை படிப்படியாக வெளிப்படுத்தி வருவதுடன் சபையின் முற்காலங்களைவிட இக்காலத்தில் அறியவேண்டிய அதிக வெளிச்சத்தைத் தொடர்ந்து தந்து வருகிறார்.

"இன்னும் அதிகரித்துவரும் வெளிச்சத்தையும் அதன் அழகுகளின் நேர்த்திகளையும் நாம் தொடர்ந்து கண்டு வருகிறோம்."

• • • •

## அத்தியாயம் – 2

## எல்லாவற்றிற்கும் மேலாக சர்வஞானமுள்ள சிருஷ்டிகர் ஒருவர் உண்டென்று நிரூபித்தல்

வேதாகமத்தை சற்று அப்புறப்படுத்தி புத்தியினால் நிரூபித்தல் – ஒரு அடிப்படை ஆதாரமற்ற ஒரு கொள்கை – அறிவுப்பூர்வமான கொள்கை – கடவுளுடைய குணாதிசயங்களை வெளிப்படுத்துதல் – நியாயமான அணுகுமுறைகள் – தேவையில்லாதவைகளை சரியான காரணத்தோடு தள்ளிவிடுதல்.

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களையும், சந்தேகவாதிகளையும் கூட நமக்குத் தெரிந்த காரியங்களை வைத்து தெரியாதவைகளைப்பற்றி அறிவுக்கேற்ற பிரகாரமாகவும் நிதானமாகவும் எடுத்துச் சொல்லும்போது, அவர்கள் அறிவிற்கேற்ப யோசிப்பவர்களாக இருந்தால், அவர்களை சத்தியத்தில் வழிநடத்தலாம் என்றாலும், தேவ திட்டங்களையும், நோக்கங்களையும் நேரடியாக வெளிப்படுத்தினாலொழிய மனிதர் சத்தியத்தைக் குறித்து உறுதியற்ற முடிவுகளையே எடுக்க நேரிடும் என்பதே உண்மையாகும். ஆனாலும், சற்று நேரம் வேதத்தை தள்ளிவைத்து புத்தி அறிவைக்கொண்டு மாத்திரம் கவனிப்போம்.

ஒருவன் தன் கண்களாலோ அல்லது தொலை நோக்கியின் (Telescope) மூலமாகவோ வானத்தை நோக்கினால் அங்கே உள்ள எண்ணற்ற சிருஷ்டிகளையும், அவைகளின் ஒழுங்கையும், அழகையும் ஒற்றுமை வேற்றுமைகளையும் பார்க்கும்போது, அவைகளை ஞானத்திலும் வல்லமையிலும் மிக உயர்ந்த சிருஷ்டிகர் ஒருவரே உருவாக்க முடியும் என்பதை சந்தேகித்து, இவை அனைத்தும் எந்த ஒரு சிருஷ்டிகரின்றி தானாக உருவாகிவிட முடியாது என சிருஷ்டிப்பின் தன்மைகளை நியாயமாக புரிந்துகொள்ளாமல், தள்ளிவிடுகிறவரைக் குறித்து வேதம், “தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான்” எனக் கூறுகிறது. இருந்தபோதிலும்



அறிவுப்பூர்வமாக யோசிக்கும் எந்த ஒரு மனிதனும் வேதம் சொன்ன இவ்வார்த்தையானது உண்மை என்ற முடிவுக்கு வருவான். எந்த ஒரு பொருளும் தகுந்த காரணத்தினாலேயே உண்டாக்கப்படுகிறது என்பது எதார்த்தமான உண்மை. ஒவ்வொரு செடியும் அதன் பூக்களும் கூட கடவுள் ஒருவர் உண்டு என்பதை அநேக புஸ்தகங்களைப்போல் சாட்சி தருகின்றன. அவைகள் அமைப்பில் அற்புதமாயும், தோற்றத்தில் அழகாயும், இணைப்பில் விநோதமாயும், மனித ஞானத்திற்கும், சக்திக்கும் மேலான ஞானத்தையும் சக்தியையும் குறித்து பேசிக்கொண்டே இருக்கிறது. அவ்வாறு இருக்கும்போது, ஒழுங்காகவும், இவ்வளவு நேர்த்தியாகவும், இசைவாகவும் படைக்கப்பட்ட இயற்கையானது, தானாகத் தோன்றினது எனக் கூறும் மனித ஞானத்தையும், அவர்களுடைய நன்றியில்லா நிலைமையையும், கவனிக்கும்போது, எந்தளவுக்கு குறுகிய பார்வையுடையவர்களாக மனிதன் இருக்கிறான் என்று தெரிகிறது. இயற்கையானது இவ்வளவு நேர்த்தியாக அமைக்கப்பட்டு ஒரு கட்டளைக்குள் செயல்படுகிறதை உணர்ந்தும், அவ்வண்ணம் அமைக்கப்பட்ட ஒரு புத்தியுள்ள சட்ட நிபுணர் தேவையில்லை என்று சொல்வது எவ்வளவு தவறான கருத்து.

எல்லாவற்றிற்கும் மேலான ஞானமுள்ள கடவுள் அல்லது சிருஷ்டிகர் இல்லை என மறுதலிப்பவர்கள் இயற்கையே கடவுள் என்றும், இதிலிருந்தே அனைத்து விலங்குகள் மற்றும் தாவரங்கள் பரிணாம (Evolution) வளர்ச்சியடைந்தது என்றும், “தகுதியுள்ளதே ஜீவிக்க முடியும்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில் உள்ளது என்றும் கூறுகின்றனர்.

இக்கோட்பாடு எந்த வகையிலும் நிரூபிக்க முடியாததாகும். நாம் காண்கின்ற எந்த ஒரு சிருஷ்டியும் ஒரு நிரந்தரமான சுபாவமாகவே இருக்கிறதன்றி தன்னைவிட மேலான சிருஷ்டியாக மாறுதலடைவதில்லை. இக்கொள்கையை உடையவர்கள் இரு வேறுவிதமான ஜீவிகளை இணைக்கவாவது அல்லது புதிய ஜீவிகளை பிறப்பிக்கவாவது எவ்வளவோ முயற்சி செய்தும் வெற்றி காணாதவர்களாய் இருக்கிறார்கள்.

ஒருவகை சிருஷ்டி, வேறொருவித சிருஷ்டியாக மாறியதற்கு உதாரணமே இல்லை. *சில மீன்கள் இறக்கை உடையனவாய் தண்ணீருக்கு வெளியே சில மணித்துளிகள் பறந்தாலும், சில தவளைகள் ஓர் விதமாய் பாடக்கூடியவையாயினும், இவைகளில் ஒன்றாவது இதுவரையிலும் பறவைகளாக மாறினதில்லை. சில விஷயங்களில் மனிதனைப்போன்றே சில மிருகங்கள் இருப்பினும், இவைகளில் ஒன்றாவது மனிதனாக மாறினதில்லை. மாறாக, அநேக ஆராய்ச்சிகள் எதை உறுதி செய்கிறதென்றால், ஒரே இனத்திலிருந்து அந்த இனத்தையுடைய வேறு பல்வேறு வகைகள் உருவாக்க முடியுமே தவிர, இருவேறு ஜீவிகளை இணைத்து அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றி உருவாக்குவது அல்லது பரிணாமம் அடையச்செய்வது இயலாததொன்றாகும். உதாரணமாக கழுதையும், குதிரையும் தோற்றத்தில் ஒரே மாதிரியாக இருந்தாலும் இரண்டும் ஒன்று எனக் கூற முடியாததுடன், அவைகள் புணர்ந்து பிறப்பித்த கோவேறு கழுதையானது தன் இனத்தையோ, குதிரையையோ அல்லது கழுதையையோ பிறப்பிக்க சக்தியில்லாத நிலைமையிலுள்ளது என்பது யாவரும் அறிந்த விஷயம்.

உண்மையாகவே பகுத்தறிவு இல்லாத இயற்கை சிருஷ்டிகராானால், ஒரு குறிப்பிட்ட இனங்கள் மட்டுமின்றி வேறு வேறு வகையான புது இனங்களை தொடர்ந்து பிறப்பித்துக்கொண்டே இருக்க வேண்டும். புத்தியறிவு இல்லாமல் எந்த ஒரு சிருஷ்டியோ அல்லது காரியமோ ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இருக்க முடியாது. மேலும், மீன்கள் பறவைகளாகவும், குரங்குகள் மனிதர்களாகவும் மாறுவதை நமது காலத்தில் நாம் காணமுடிந்தால் பரிணாமம் (Evolution) உண்மையானதாகும். இக்கொள்கையின்படி புத்தியறிவுள்ள சிருஷ்டிகர் தங்களைக்காட்டிலும் வல்லமை குறைந்த ஜீவிகளால் சிருஷ்டிக்கப்படக்கூடும் என்பது வேதத்திற்கு மட்டுமல்ல, நமது புத்திக்கும் ஏற்புடையதல்ல.

*கம்பளிப் புழு, வண்ணாத்துப் பூச்சியாய் மாறுவதுங்கூட ஒரே ஜீவியின் இரண்டு நிலைமையேயன்றி ஒரு ஜீவி வேறுவித ஜீவியாய் மாறுவதில்லை. ஏனெனில், வண்ணாத்துப் பூச்சியின் முட்டைகளிலிருந்தே கம்பளிப் புழுக்கள் குஞ்சுகளாக வெளிவருகின்றன. இதை வாசகரின் பயனுக்காக குறிப்பிடுகின்றோம்.



(மனிதனைத் தவிர) சிருஷ்டிப்பு பற்றிய ஒரு பரிணாம வளர்ச்சிக் கொள்கை உள்ளது என்பதற்கு கடுமையான தடை ஏதும் எழவில்லை. இக்கருத்தை விளக்க வேண்டுமானால், ஒவ்வொரு இனமும் தற்காலத்தில் நாம் காண்கிறபடி தன் தன் நிலைமையில், ஜாதத்தில் அல்லது வகையில் உறுதியானதும் மாற்ற முடியாததாகவும் இருந்தாலும், முற்காலத்தில் இவைகளெல்லாம் தனித்தனி இனமாக சிருஷ்டிக்கப்படாமல், பூமியிலிருந்து உற்பத்தியாகி தங்கள் இனம் படிப்படியாக பரிணாம வளர்ச்சியடைந்து, ஒரு பூரணத்தை எட்டியவுடன் அந்த வகைகளோ அல்லது கடாவங்களோ, எக்காலத்திலும் மாறாமல் அதேபோன்று இருக்கும். இக்கொள்கையானது இப்போது ஒரு வரையறைக்குள் இருக்கும் எந்த ஒரு சிருஷ்டியும் இப்போதைய நிலைமையில் சிருஷ்டிக்கப்படாமல் இவைகள் அனைத்தும் பூமியிலிருந்து படிப்படியாக ஒரு இனத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு வளர்ச்சி அடைந்திருக்கலாம். இப்பரிணாம வளர்ச்சியானது தேவன் நியமித்த கட்டளைகளின்படி உணவு மற்றும் சீதோஷண நிலைமைகளின் மாறுதல்களின்படி தங்கள் தங்கள் தற்கால நிலைமையை தேவ நோக்கத்தின்படி எட்டியவுடன், மேலும் அவைகள் வளர்ச்சி அடைவது கூடாமல் போயிருக்கக் கூடும். ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த வெவ்வேறு வகையான தாவரங்களும், மிருகங்களும் தங்கள் தங்கள் இன எல்லைக்குள்ளாக இனவிருத்தி அடையவும் அல்லது தாழ்ச்சியடையவும் கூடியதாக இருந்தாலும் அவைகளில் ஒன்றாகிலும் வேறு இனமாகவோ அல்லது வேறு இனத்திலிருந்தோ மாறுவதாக இருப்பதில்லை. இவ்விதமாக, ஒவ்வொரு இனமும் தன் தன் இனத்திலே பூரணமடைந்த பிறகு அதற்குமேல் மாறுதல் அடையாதபடி தேவன் இவைகளை அமைத்திருக்கிறார்.

மனிதன் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே இப்போதிருக்கும் பல்வேறு வகையான உயிரினங்களின் உற்பத்திக்குக் காரணமாயிருந்த தாவர, விலங்கினங்கள் அழிந்துபோயிருக்கக் கூடும். பூமிக்கு அடியில் மிக ஆழமாக உள்ள அம்மாதிரியான உயிரினங்களின் எலும்புக் கூடுகளும், கல் ரூபமாக மாறின தாவரங்களும் (Fossils) இக்கொள்கையை ஆதரிக்கின்றன. இக்கொள்கையானது, மற்ற உயிரினங்கள் பொதுவாக பரிணாம வளர்ச்சியடைந்ததைப்போல் மனிதன் தோன்றாமல், அவன் வேதத்தின்படி தேவனுடைய நேரடியான, பரிபூரண சிருஷ்டியாகவும்,

சிருஷ்டிகருடைய சாயலின்படி உருவாக்கப்பட்டவன் என்பதை மறுக்கவும், தள்ளிவிடுகிறதுமில்லை. இக்கொள்கையானது, வேதத்தின் கோட்பாடுகளை உறுதிபண்ணுகிறதாயிருக்கிறது. எவ்வாறெனில், இயற்கையும் கூட உருவானதற்கு ஒரு புத்தியுள்ள சிருஷ்டிகர் உண்டு என்பதையே போதிக்கிறது. மனித அறிவின்படி எல்லா விஷயத்திலும் இயற்கையானது ஒரு ஒழுங்கிற்குள் உண்டாவதற்கு சிருஷ்டிகர் காரணமாக இருக்கவேண்டும் என மனித அறிவின்படி யோசிப்பது உண்மையென்றாலும், இந்த மிகவும் நுணுக்கமான இயற்கை அமைப்புக்குப் பின்னால் சர்வ ஞானமும், சர்வ வல்லமையுமுள்ள தேவன் இருக்கிறார்.

நம்மை சுற்றியுள்ளவை மாத்திரமல்ல. நமக்குள்ளேயே உள்ளதான, அதாவது நாமே வியக்கத்தக்கதான, புரிந்துகொள்ளமுடியாத, நம்முடைய உடலிலும் மனதிலும் உள்ளதான சக்தியுமே புத்தியறிவுள்ள சிருஷ்டிகர் ஒருவர் இருக்கிறார் என நிரூபிக்கிறது. நாம் இயற்கையென அழைப்பதையும் இவரே வடிவமைத்து உருவாக்கியுள்ளார். அவரே இயற்கையின் சட்ட திட்டங்களை உருவாக்குவதுடன் அதிலுள்ள அழகையும், ஒற்றுமையையும் பார்த்து நாம் அவரைப் புகழுகிறோம். இவரே நம் புத்திக்கும் அறிவுக்கும் எட்டாத ஞானத்தினால் அண்டசராசரத்தை திட்டமிட்டு தம் வல்லமையினால் அவைகளைத் தாங்கி வழிநடத்தி வருவதால் இவரையே தொழுது வணங்குகிறோம்.

இவ்வளவு வல்லமையுள்ள தேவன் ஒருவர் உண்டென்று உணர்ந்துகொள்கிற யாரும், அதற்கேற்ப அவர் சிநேகமும், அன்புமுள்ளவர் என்பதை உணராவிடில் அவரைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் பயமும் திகிலும் அடைய வேண்டியதாயிருக்கும். தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் வல்லமையும், ஞானமுமுள்ளவர் என்றும் நாம் எதிலிருந்து அறிந்து கொள்கிறோமோ, அதே உண்மையின் மூலம் அவருடைய அன்பையும் அறிந்துகொள்ள முடியும். அவர் நம்மைவிட அளவிட முடியாத வல்லமையும், ஞானமும் உடையவர் என்ற முடிவுக்குத் தள்ளப்படுகிறோமோ, அதைப்போல அவருடைய சிருஷ்டிகளில் மிகவும் உன்னதமான சிருஷ்டியைவிட மேலானவர் என்ற முடிவுக்கும் அறிவுப்பூர்வமாக தள்ளப்படுகிறோம். ஆகவே, மனிதர்கள் மத்தியில் வெளிப்படும் மிகப்பெரிய அளவிலான அன்பும், நீதியும் சிருஷ்டிகளின்



முன்பாக மிகக் குறைவானதாக இருப்பதோடு, மனிதனுடைய ஞானமும் வல்லமையும் மிக மிகக் குறைந்ததே. இப்படியாக மகா சிருஷ்டிகருடைய குணநலன்களை நம்முடைய மனக்கண்ணால் உணரமுடியும். அவர் ஞானமும், நீதியும், அன்பும், வல்லமையுள்ளவராகவும் அவருடைய மிக உன்னதமான எந்த சிருஷ்டியிலும் காணப்படும் இக்குணங்களைவிட அவருடைய குணநலன்கள் அதற்கு மேலாக அளவிட முடியாததாக அவசியம் இருக்க வேண்டும்.

மேலும், மகாமேன்மையான குணநலன்களை உடைய தேவன் ஒருவர் உண்டு என்ற அறிவிற்கு ஏற்புடைய முடிவுக்கு வந்தபின், அவரிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்கலாம்? பதில் என்னவெனில், அப்பேர்பட்ட குணநலன்களை உடையவராயிருக்கும்போது, அவைகளை செயல்படுத்தி உபயோகப்படுத்துவதேயாகும். தேவனுடைய வல்லமையானது அவருடைய சுபாவத்திற்கேற்றாற்போல் ஞானமாக, நீதியாக பலனளிக்கும் வகையில் உபயோகப்படுத்தப்பட வேண்டும். தேவனுடைய வல்லமையானது எவ்வகையில் பயன்படுத்தப்பட்டாலும் அவருடைய சுபாவத்திற்கும் குணநலன்களுக்கும் எப்போதும் ஒத்துப்போவதோடு அவருடைய அளவில்லா ஞானத்திற்கும் ஏற்புடையதாயிருக்கும்.

பூமியிலுள்ள பலவகையான சிருஷ்டிகளையும், உண்டாக்கப்பட்டிருக்கிற எண்ணிலடங்கா உலகங்களையும் நாம் பார்க்கும்போது தேவனுடைய குணலட்சணங்கள் அனைத்தும் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதற்கு வேறொரு சாட்சி இருக்க முடியுமா? அது மாத்திரமல்ல, தேவனுடைய ஞானத்தையும், நீதியையும், வல்லமையையும், அன்பையும் புரிந்து, அவருடைய எல்லா சிருஷ்டிப்பின் வேலைகளையும் போற்றக்கூடிய சக்தியுடையவனாக, புத்தியறிவுள்ளவனாக மனிதனை சிருஷ்டிக்கும்போதும் அவருடைய குணநலன்கள் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதற்குமேல் வேறொரு சாட்சி இருக்க முடியுமா? நமக்குத் தெரிந்த உண்மைகளின்படி மேற்சொன்னவைகளெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

இப்போது நாம் இறுதி முடிவுக்கு வரலாம். எவ்வாறெனில்,

அளவில்லா ஞானமும் நல் ஈவுகளையுமுடைய தேவன், தம்மைப் பற்றியும் தம்முடைய மேலான திட்டத்தையும் போற்றக்கூடிய ஒரு சிருஷ்டியாக மனிதனை உண்டாக்கும்போது, அவனுடைய தேவைகளை அறிந்து பூர்த்தி செய்யும்போது, அவர் அன்பினாலும் நீதியினாலும் ஏவப்பட்டு இருப்பதை அவனுக்கு ஏதோ ஒருவகையில் வெளிப்படுத்தாமல் இருப்பாரா? மேலும், அவனை சிருஷ்டித்ததின் நோக்கத்தையும் அவனுக்காக தம்முடைய எதிர்கால திட்டங்களையும் பற்றிய விபரங்களை அவனுக்குத் தெரிவிக்கச் சித்தமுள்ளவராயிருக்கமாட்டாரா? மாறாக, எதிர்காலத்தை அறிய விரும்பும் நிலையில் எல்லா புத்தியறிவோடு சிருஷ்டித்து அதைப் பற்றி எந்த வெளிப்படுத்துதலும் இல்லையெனில் அது ஏற்புடையதாக இருக்குமோ? இருக்க முடியாது. ஏனெனில், அது அவருடைய மேன்மையான குணநலன்களுக்கு விரோதமானதாய் இருக்கும். அன்பும், நீதியும் பொருந்திய தேவனுக்கு அப்படிச் செய்வது கூடாத காரியமாயிருக்கும்.

தேவ வெளிப்படுத்தலின்றி மனிதனை சிருஷ்டிக்கத் தேவன் சித்தங்கொண்டிருந்தால், வரப்போகிறவற்றை அறிய விரும்பும் சுபாவத்தோடு மனிதனை சிருஷ்டிப்பது நல்லதல்லவென்று தேவ ஞானம் சொல்லியிருக்கும். மேலும், அவன் வீண் சந்தேகங்களினாலும், பயத்தினாலும், அறியாமையினாலும் குழம்பி வருந்தாதபடிக்கு, அவனுக்கு யூகிக்கும் அல்லது யோசிக்கும் சக்தி குறைக்கப்பட வேண்டுமென்று தேவ ஞானமும், நீதியும் வற்புறுத்தியிருக்கும். அதனிமித்தம், தேவ வல்லமையானது அந்த ஒரு வரையறுக்கப்பட்ட நிலையிலேயே மனிதனைப் படைத்திருக்கும். தேவ குணலட்சணங்களுக்கேற்றபடி, உண்மையிலேயே தெய்வீக திட்டங்களின் வெளிப்பாடுகளை போற்றக்கூடிய சக்தியையுடையவனாக மனிதன் இருப்பதால், ஏற்ற சமயங்களில் தேவன் அவனுக்கு தம் ஞானத்துக்கேற்றபடி அதைப்பற்றி முழுமையாக அறிவியாதிருப்பினும், மேற்கண்ட பல்வேறு காரணங்கள் மூலம் அதைப்போன்ற ஒரு தேவ வெளிப்படுத்தல் இருக்கவேண்டுமென்று நினைப்பதற்கு காரணமுண்டு. அதுமட்டுமல்ல, இன்னும் உள்ள பொதுவான சிருஷ்டிகளில் உள்ள ஒழுங்கையும், இசைவையும் நோக்கும்போது, உதாரணமாக வானத்திலுள்ள கோளங்களையும், அமைப்புக்களையும், அவைகள் கடைபிடிக்கும் நேரத்தையும், காலத்தையும், இடத்தையும் நோக்கும்போதும், பூமியதிர்ச்சிகள், புயல், போன்ற சில குறைபாடுகளையும்



காணும்போதும், இவ்வுலகத்தின் விஷயத்தில் பூரணத்தில் குறைவு தற்காலத்தில் இருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். ஆனாலும், பரலோகம்போல் பூமியும் பரிபூரணமும், இசைவானதாகவும் மாறும் என்ற உறுதி நமக்கிருந்தாலும், ஏன் தற்காலத்தில் அப்பரிபூரணம் இல்லை என்ற கேள்விகளும், ஞானமும் அன்பும் வல்லமையுள்ள தேவன் அதற்கு பதில் அளிப்பதும் புத்திக்கு விரோதமானதல்ல. எனவே, தேவனுடைய வெளிப்பாடானது எல்லாம் பரிபூரணப்படும் என்கிற நம்பிக்கையையும், இப்போது இருக்கும் தீமைக்கான காரணத்தையும் வெளிப்படுத்தும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

மனுக்குலம் பற்றிய தேவ சித்தமும் திட்டமும் அடங்கிய வெளிப்பாடு இருப்பது அவசியம் என்பதை நிலைநிறுத்திய பிறகு, வேதமே அவ்வெளிப்பாடு என அடுத்த அதிகாரத்தில் ஆராயலாம். வேதம் காண்பிக்கும் தேவனுடைய குணநலன்கள், நாம் புத்தியறிவைக்கொண்டு ஸ்தாபித்த மேற்கண்ட அநேக காரியங்களோடு பூரணமாக ஒத்துப்போகுமெனில், அதுவே நமக்குத் தேவையான எதிர்பார்க்கிற தேவ வெளிப்படுத்தல் என்ற முடிவுக்கு வருவதோடு, அதிலுள்ள எல்லா சாட்சிகளையும் ஏற்றுக்கொள்ளலாம். அது தேவ வெளிப்படுத்தலானால், அது தேவனுடைய குணநலன்களோடு ஒத்துப்போவதோடு, அதின் போதனைகளை முழுமையாக அறியும்போது, அது தேவனை ஞானத்திலும் நீதியிலும் அன்பிலும் வல்லமையிலும் பூரணமாக காண்பிக்கும்.

"சிருஷ்டிப்பின் மகத்துவங்களைக் கண்டுபிடிக்க
ஆர்வங்கொண்டு, எங்கும் அலைந்து திரிகின்றவர்களே,
உங்கள் தேவனது அடிச்சுவடுகளைக் கண்டு,
அவர் முன்பாக தலைவணங்கி, ஆராதனை செலுத்துங்கள்.
"கர்த்தாவே, வானங்கள் உமது மகிமையை அறிவிக்கிறது;
உமது ஞானம் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் மின்னுகிறது;
உமது வானத்தை எங்களது கண்கள் உற்றுநோக்கும்போது,
உமது நாமத்தை அழகான வரிகளில் வாசிக்கிறோம்."

* * * *

## அத்தியாயம் – 3

## சத்திய வேதம் தெய்வீக வெளிப்பாடு என புத்தியறிவின் வெளிச்சத்தின்படி நிரூபித்தல்

வேதத்தை நம்புவதற்கு வெளியரங்கமான ஆதாரங்கள் – அதின் பழமையும், பாதுகாக்கப்பட்ட விதமும் – நன்னடக்கைக்கு ஏவும் அதின் வல்லமை – அதின் எழுத்தாளர்களின் நோக்கம் – அதிலுள்ள புத்தகங்களின் பொதுவான குணாதிசயங்கள் – மோசேயின் புத்தகங்கள், மோசேயின் பிரமாணங்கள் – மோசேயினால் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க விசேஷங்கள் – அது ஆசாரிய கூறுவ அமைப்பல்ல – மக்களை ஆளுகிறவர்களின் சட்ட திட்டங்கள் – ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் ஒரேவித சட்டம் – ஜனங்களுடைய உரிமைகளைப் பறிக்காதபடிக்கு ஏற்பட்ட பாதுகாப்பு சட்டம் – ஆசாரியர் விசேஷ வகுப்பாரல்ல – அவர்களுடைய வாழ்க்கைக்கான உதவிகள் – அந்நியர், விதவைகள், அநாதைகள், அடிமைகள், வேலையாட்கள் கொடுமையாய் நடத்தப்படாதபடிக்கு ஏற்பட்ட சட்டம் – வேதத்தின் தீர்க்கதரிசிகள் – தீர்க்கதரிசனம் மற்றும் புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களை இணைத்துக் காட்டும் நியாயப்பிரமாணம் – அற்புதங்கள் புத்திக்கெட்டாதவைகளல்ல – ஏற்றுக்கொள்ளக் கூடிய முடிவுரை.

சத்திய வேதம் நாகரீக சமுதாயத்தின் சுதந்திரத்தை வெளிக்கொணரும் சுடரொளியாகும். இவ்வுலகில் வேதத்தை உடையவர்களாயிருந்தாலும், உலகின் பேரறிஞர்கள், வேதமானது சமுதாயத்திற்கு நற்பயனைத் தரும் செல்வாக்குடையது என்று உணர்ந்திருந்தாலும், அதன் பெரும்பாலான பகுதியை அவர்கள் கையில் வைத்திருந்தும், ஒன்றுக்கொன்று விரோதமான, மிகவும் மோசமான மற்றும் தவறான வகையில் பிரசங்கிக்கப்படும் போதனைகளின் மூலமாகவே அவ்வாறு (வேதத்தை) பார்க்கிறார்கள். வேதத்திற்காக தங்களுடைய உயிரையே தர முன்வருபவர்களாகிய அநேகர், முன்னோர்களின் பாரம்பரியங்களின் மூலம் பெற்றுக்கொண்ட தங்களுடைய நீண்டகால தவறான சொந்தக் கருத்துக்களுக்கு ஏற்றாற்போல் புரட்டி, பழமையான அப்புத்தகத்திற்கு தங்கள் அறியாமையினால் பெருத்த நஷ்டத்தை வருவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சற்று விழித்தெழுந்து, தேவ



வார்த்தைகளை நன்கு ஆராய்ந்து அறிந்து போதித்து, அதற்கு விரோதமாக செயல்படும் எதிரிகளின் ஆயுதங்களை நிராயுதபாணிகளாக்குவது எவ்வளவு உன்னதமானது!

இயற்கையைப் பற்றிய அறிவின் வெளிச்சமானது இன்னும் முழுமையாக கடவுளைப் பற்றிய முழு வெளிப்பாட்டை எதிர்பார்க்க அழைத்துச் சென்றாலும், அந்த இயற்கையைவிட அதிகமாய் அவரைப்பற்றி தெரிவிக்கிற தேவ வெளிப்படுத்துதல் ஒன்றிருக்கவேண்டுமென புத்தியறிவுள்ள சிந்திக்கும் மனதுடையோர், அவ்வெளிப்படுத்துதலில் சொல்லியிருக்கக்கூடிய கருத்துக்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளுபவர்களிற்கு எல்லா உண்மையான ஆதாரங்களையும் உடையனவா என ஆராயத் தயாராகிவிடுவர். வேதம் தேவனுடைய வெளிப்பாடு என கூறுவதுடன் அதில் உள்ளவைகள் அனைத்தும் சரியானதாகவும் தகுந்த போதுமான ஆதாரத்துடன் நம்பிடத்தில் வருவதுமல்லாமல் மிகவும் உண்மைப்பாக ஆராயும்போது, நிச்சயமாகவே அது தேவனுடைய வார்த்தை என முழுமையான, முற்போக்கான ஆதாரத்தைத் தருவதுடன் நமக்கு நியாயமான நம்பிக்கையையும் தருகிறது.

சத்திய வேதமே, இருக்கும் எல்லாப் புத்தகங்களிலும் பழமையானதாகும். 30 நூற்றாண்டுகளுக்கு மேலாக எல்லாப் புயல்களையும் மீறி காக்கப்பட்டு வந்திருக்கிறது. அதை பூமியிலிருந்து அழித்துப்போட எல்லா வகையிலும் மனிதர்கள் கடும் முயற்சி மேற்கொண்டனர். அதை மறைத்து வைத்தார்கள். சிலர் சுட்டெரித்தனர். அதை வைத்திருந்தவர்கள்மேல் கடும் குற்றம் சுமத்தி மரண தண்டனைக்கேதுவாக்கினார்கள். அதின்மேல் விசுவாசம் வைத்திருந்தவர்களை மிகவும் கசப்பான முறையில் ஈவு இரக்கமின்றி கொடுமைப்படுத்தினர். என்றாலும், இன்னும் இப்புத்தகம் நீடூழி வாழ்கிறது. அதின் விரோதிகளில் அநேகர் அழிந்துபோய் அதற்கு விரோதமாக அதின் புகழையும், செல்வாக்கையும் குறைக்கும் வகையில் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான புத்தகங்கள் மறக்கப்பட்ட இக்காலத்தில் சத்திய வேதமானது ஒவ்வொரு தேசத்திற்கும் எல்லா ஜாதிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெற்றிநடை போடுவதுடன் 200–க்கும் (தற்போது 1800க்கும்) மேலான மொழிபெயர்ப்புக்களும் செய்யப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தை தடுக்கவும் அழிக்கவும் ஈடு இணையில்லாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும், அநேக நூற்றாண்டுகளாக இப்புத்தகம் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறதென்றால், அதில் அதின் ஆசிரியர் என்று சொல்லப்பட்டிருக்கிற தேவனே அதைப் பாதுகாத்து வந்தாரென்பதே உண்மையாகும்.

நீதி மற்றும் ஒழுக்கரீதியான விஷயங்களிலும் வேதம் சீராக நன்மையுடையதாக இருக்கிறது. அதினுடைய பக்கங்களை கவனத்தோடு படிப்போரின் வாழ்க்கையானது அபரிதமான பரிசுத்த வளர்ச்சியடைகிறது. மற்ற மத புத்தகங்களும் வெவ்வேறு சாஸ்திர சம்பந்தமான புஸ்தகங்களும் மனுக்குலத்திற்கு ஓர் அளவிற்கு அவர்களின் வாழ்க்கையை மேன்மைப்படுத்தி ஆசீர்வாதத்தைத் தந்திருக்கிறது. ஆனால், ஏழைக்கும், பணக்காரருக்கும், படித்தவருக்கும், படிக்காதவருக்கும், சத்திய வேதத்தைப்போல் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் பிரசவ வேதனைப்படுகிற இந்த முழு சிருஷ்டிக்கும் தருவதில் மற்ற ஒட்டுமொத்த புத்தகங்களும் தோல்வியடைந்துவிட்டன. சத்திய வேதம் கருத்தோடும், கவனத்தோடும் படிக்க வேண்டிய புத்தகமே தவிர, வெறுமனே படிக்கப்படும் புத்தகமல்ல. ஏனெனில், தேவனுடைய யோசனைகள் நம்முடைய யோசனைகளைப் பார்க்கிலும், அவருடைய வழிகள் நம்முடைய வழிகளைப் பார்க்கிலும் உயர்ந்ததாயிருக்கிறது. முடிவற்ற தேவனின் திட்டங்களையும், யோசனைகளையும் அறிந்துகொள்ள வேண்டுமெனில், அதிமுக்கியமான அவ்வேலைக்காக நம் முழு சக்தியையும் உபயோகப்படுத்த வேண்டும். விலையேறப்பட்ட பொக்கிஷமாகிய சத்தியம் சாதாரணமாகக் கிடைக்காது.

வேதப் புத்தகம் முழுவதிலும் தொடர்ச்சியாக தேவ குமாரனும், நசரேயனுமாகிய இயேசுவையே குறித்துப் பேசுகிறது. ஆரம்பம் முதல் கடைசி வரை அவருடைய நாமமும், அவரது உத்தியோகமும் வேலையும் விசேஷமாகக் காட்டப்பட்டுள்ளது. நசரேயனாகிய இயேசு என்னும் மனிதர் வாழ்ந்த அக்காலத்தைப் பற்றி வேத எழுத்தாளர்களால் குறிப்பிட்ட விஷயங்கள் வேதமல்லாத உலக சரித்திரத்தோடு முழுமையாக ஒத்துப்போகிறது. இந்த இயேசுவின் நடத்தை யூதருக்கும், யூத மத குருக்களுக்கும் விரோதமானதாக இருந்ததால், அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்ற உண்மையும் புதிய ஏற்பாட்டு ஆசாரியர்கள்



மட்டுமின்றி உலக சரித்திரத்திலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பவுலையும், லூக்காவையும் தவிர மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசுவை நேரடியாக அறிந்தவர்களும், அவருடைய சீஷர்களாயிருந்து அவருடைய போதகங்களை எழுதி வைத்தார்கள்.

எந்த ஒரு புத்தகமும் உண்டாவதற்கு எழுத்தாளர்களிடம் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். ஆகவே, எந்த நோக்கத்திற்காக அவரைப்பற்றி எழுத இந்த எழுத்தாளர்கள் ஏவப்பட்டனர். அவர் தான் மரணத்திற்கேதுவான குற்றவாளியாக தீர்க்கப்பட்டு, யூதர்களால் அக்கிரமக்காரராக எண்ணப்பட்டு, அவர்களுள் இருந்த மதத்தலைவர்களால் அவர் வாழத் தகுதியற்றவராக தீர்ப்பிடப்பட்டு மரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க சிலுவையில் அறையப்பட்டவராயிற்றே. அவ்வாறிருக்க, அவருக்காக அவருடைய உபதேசங்களை உபதேசிக்கவும் இந்த எழுத்தாளர்கள் இகழ்ச்சியையும் இழப்புகளையும் கசப்பான உபத்திரவங்களையும் தங்கள் ஜீவனையும் இழக்கத் தயாராகி, சிலர் இரத்த சாட்சிகளாகக்கூட மரித்தார்களே. இயேசு உயிரோடிருக்கும்போது தன் வாழ்க்கையிலும், உபதேசங்களிலும் தனிச்சிறப்பு பெற்றவராயிருந்தபோதிலும் மகா கேவலமான மரணத்தை அடைந்தபின் அவருக்கு சாதகமாக அவரைப்பற்றி பிரசங்கித்ததின் நோக்கமென்ன? இந்த எழுத்தாளர்கள் தாங்கள் சொந்தமாக அவரைப்பற்றியும், இயேசு என்பவர் அவர்களுடைய கற்பனை நாயகனாக இருந்திருப்பார் எனவும் நாம் யூகித்தால், அவன் தேவனுடைய குமாரனென்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் அவர் உண்டாக்கப்பட்டார் எனவும், அந்த வல்லமையினாலேயே குஷ்டரோகிகளை சுகப்படுத்தியும், பிறவிக் குருடருக்கு பார்வையையும், செவிடருக்கு கேட்கும் திறனையும் கொடுத்து, மரித்த சிலரை எழுப்பினாரென்பதும் கட்டுக்கதை என்றும் வைத்துக்கொண்டால், அவரை மகா பெரிய குற்றவாளியாக அவருடைய எதிரிகள் தீர்க்கும்போதும், அவருடைய துன்ப காலத்தில் இந்த எழுத்தாளர்கள் உட்பட நண்பர்களும் சீஷர்களும் அவரைவிட்டு ஓடிப்போயிருந்தாலும், பின் தைரியமாய் அவரை பிரசங்கித்து அவரை கொலை செய்தவர்களைக் கண்டித்துப் பேசினது எவ்வாறு நகைப்பிற்கிடமாயிருக்கும்?

உலக சரித்திரம் இந்த எழுத்தாளர்கள் சொல்லும் சிலவற்றிற்கு ஒத்துப்போகாதிருந்தாலும் இவர்கள் எழுதினது பொய் என்று சொல்ல முடியாது. இவ்விதமாய் அவர்கள் பொய் சொல்லியிருப்பார்கள் என முடிவெடுப்பவர்கள் இந்த பொய்யை எழுதுவதற்கு அவர்களுடைய நோக்கத்தை நிரூபிக்க வேண்டும். பெயரையாவது, புகழையாவது, வல்லமையையாவது, உலக ஆசீர்வாதங்களையாவது எதிர்பார்த்து அல்லது நம்பி இப்படிச் செய்தார்களா? அவர்களுடைய வறுமையும், யூத மதத் தலைவர்களைவிட அவர்கள் தலைவருடைய புகழற்ற நிலையும் மேற்சொன்ன கருத்துக்களுக்கு விரோதமானதாக இருக்கிறது. மேலும், குற்றவாளியாக மரித்ததுமல்லாமல், சமாதானத்தை கலைக்கிறவராக யூதரால் எண்ணப்பட்டு தம்மைத்தாமே உயர்த்தாமல், தம்முடைய உபதேசங்களை நிலைநிறுத்துபவர்களுக்கு உலகப்பிரகாரமான புகழோ, ஆசீர்வாதமோ கிடைக்கும் என்ற நம்பிக்கையைக்கூட தர முன்வரவில்லை. மாறாக, இயேசுவை பிரசங்கித்தவர்களுடைய நோக்கம் அவ்வாறிருந்தால் அது பிரசங்கிக்கப்படும்போது உபத்திரவத்தையும், சிறைவாசத்தையும், அடிகளையும், மரணத்தையும் கொண்டுவந்தபோது உடனடியாக அவ்வேலையை நிறுத்தியிருக்கமாட்டார்களா? ஆனால், காரணத்தை அறியும்போது அம்மனிதர்கள் இவ்வுலக ஆசீர்வாதங்களுக்காக வாழாமல், தங்களுடைய வீடு, புகழ், மேன்மை, வாழ்க்கை அனைத்தையுமே தியாகம் செய்ததுடன், மற்றவர்களை உயர்த்துவதிலும் ஒழுக்கரீதியாக உன்னத நிலையை அடையச் செய்வதே அவர்களுடைய உன்னத நோக்கமாயிருந்தது. மேலும், கவனிக்கும்போது அவர்களுடைய சாட்சியானது சுத்தமும் உண்மையுமானதும், சாதாரண எழுத்தாளர்களைவிட 10 மடங்கு அதிக நம்பிக்கைக்கு பாத்திரமுமானது. அன்றியும் இவர்கள் மூட நம்பிக்கையுடையவர்களுமல்ல. இவர்கள் புத்தியும், நேர்மையான மனதுள்ளவர்களாக தங்களுடைய விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் தகுந்த காரணத்தை கூறக்கூடியவர்களாயிருந்து, தாங்கள் கொண்டிருந்த எண்ணங்களுக்கு இசைவாக உண்மையுள்ளவர்களாக நடக்க கடும் முயற்சி மேற்கொண்டிருந்தனர்.

மேலும், நாம் குறிப்பிட்டது பழைய ஏற்பாட்டு பல்வேறு எழுத்தாளர்களுக்கும் பொருந்தும். அவர்கள் முக்கியமாக தேவனுக்கு



உண்மையுள்ளவர்களாயிருந்தவர்களில் குறிப்பிடத்தக்க மனிதர்கள். அவர்களைப் பற்றிய சரித்திரத்தில் அவர்களுடைய நன்னடக்கைகளையும், பெலவீனங்களையும், குறைகளையும் கண்டித்து பாரபட்சமில்லாமல் எடுத்துரைக்கிறது. சத்திய வேதம் ஒரு மத ஏற்பாட்டில் உள்ள மக்களின் பயபக்திக்காக உருவாக்கப்பட்ட சரித்திரமென்று நினைப்பவர்களுக்கு அது ஆச்சரியத்தை அளிக்கக்கூடியதாயிருக்கிறது. வேதம் சத்தியம் என்று சொல்லப்படுவதுபோலவே அது எதார்த்தமுள்ளதாகவும் இருக்க வேண்டும். அது வஞ்சகமாக ஏமாற்றுக்காரர் எழுதிய புத்தகமானால் அவர்கள் மனிதரை மேன்மைப்படுத்தி குற்றமில்லாதவர்களாகவும் சிறந்த மனிதர்களாகவும் காண்பித்து, தாங்கள் எழுதியது தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்று சித்தரித்திருப்பார்கள். ஆனால், வேதத்தில் அவ்வகையான காரியங்கள் இல்லாமலும், அதை வாசிப்போரை வஞ்சிக்கவோ ஏமாற்றவோ வேண்டும் என்ற நோக்கமும் இல்லாமலும் அது நியாயமான சாட்சியாக இருக்கிறது.

தேவனுடைய திட்டங்களையும், சித்தத்தையும் பற்றிய வெளிப்பாட்டை எதிர்பார்க்கும்போது, அந்த வெளிப்பாடு தேவனுடைய சத்திய வேதமே எனவும், அது மனிதருடைய நோக்கத்தில் எழுதப்படவில்லை என்றும் கண்டறிந்தபின்பு, அதுதான் உண்மையென ஏற்றுக்கொள்வதற்கு அதிலுள்ள எல்லா உபதேசங்களும் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டதா என்றும், வேதமல்லாமல் இயற்கையிலிருந்து நாம் கண்டறிந்த தேவ குணாம்சங்களை தன்னுள் அடக்கிய உண்மையுள்ள ஆதாரமா என்றும் ஆராய்வோம்.

புதிய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களும், பழைய ஏற்பாட்டின் பல புத்தகங்களும் அதின் ஆசிரியர்கள் அறிந்த விஷயங்களைப் பற்றிய சரித்திரமாயும், அவர்களுடைய குணநலன்களால் அது உண்மையென்றும் உறுதிபண்ணப்பட்டவைகளுமாயும் இருக்கிறது. அவர்கள் நன்கு தெரிந்த தொடர்புள்ள அநேக உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு ஒரு விசேஷமான வெளிப்பாடு அவசியமில்லை என்றாலும், தேவன் மனிதருக்கு ஓர் வெளிப்பாட்டைத் தர விருப்பங்கொண்டதாலும், இப்புத்தகங்களில் சொல்லப்பட்ட சம்பவங்கள் அந்த வெளிப்படுத்துதலோடு சம்பந்தப்பட்டதாலும், அவைகளை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு

தேவையான ஆதாரங்களை உடையதாயிருக்க தேவன் தெரிந்துகொண்ட நேர்மையான எழுத்தாளர்கள் அவசியமான உண்மைகளை மட்டும் குறிப்பிடவும், தேவன் அதை எழுதும்போது மேற்பார்வையிட்டு திட்டம் வகுத்திருப்பார் என்றும் நம்பலாம். வேதத்தில் சொல்லப்பட்டுள்ள சரித்திரப்பகுதிகளை ஏற்றுக்கொள்வதற்கு, அதை எழுதின எழுத்தாளர்களின் குணங்களும், நோக்கங்களுமே அவைகளின் நம்பகத் தன்மையை அளிக்கிறது. நல்ல மனிதர்கள் கண்டிப்பாக பொய்யுரைக்கமாட்டார்கள். தித்திப்பான கிணறு கசப்பான தண்ணீரைக் கொடுக்காது. நன்மை விளையும்பொருட்டு அதின் ஆசிரியர்கள் தீமையை சொல்லியும், செய்தும் இருப்பார்கள் என்ற சந்தேகத்தை நீக்கும் வண்ணமாக, அவர்களால் எழுதப்பட்டது ஒன்றுக்கொன்று இசைவானதாயிருக்கிறது.

நியாயாதிபதிகளின் புத்தகம், இராஜாக்களின் புத்தகம், நாளாகம புத்தகங்கள் முதலானவைகளில் கவனமாக தரப்பட்டுள்ள அக்காலத்தின் முக்கியமான சரித்திர சம்பவங்களும், ஆட்களையும் பற்றிய விஷயங்களின் நிச்சயத்தை எவ்வகையிலும் யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. எபிரேய வேதத்தில் (பழைய ஏற்பாடு) சரித்திரங்கள், பிரமாணங்கள், தீர்க்கதரிசனங்கள், அவைகளைப் பற்றிய சரித்திரங்கள், வம்ச வரலாறுகள், அநேக தெளிவான காரியங்களும் இன்னும் இந்த 20–ம் நூற்றாண்டின் பார்வையில் பார்த்தால் அவசியமற்றதாக தோன்றுகிற அநேக சரித்திரங்களும்கூட வேதத்தில் பதியப்பட்டுள்ளது. ஏனெனில், ஆபிரகாமின் ஒரு குறிப்பிட்ட வம்சத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா வருவார் என்ற எதிர்பார்த்தலின் காரணத்தினாலேயே. உதாரணமாக ஆதியாகமம் 19:36–38ல் மோவாபியர் மற்றும் அம்மோனியர் என்ற ஜாதியாரின் தோற்றத்தையும் ஆபிரகாமோடும், இஸ்ரவேலரோடும் அவர்களுக்கு இருந்த சம்பந்தத்தையும் காண்பித்து அவர்களுடைய முழு சரித்திரத்தைப் பற்றிக் கூறுவது ஒரு சரித்திரக்காரனுடைய மனதிற்கு மிகவும் அவசியமாகக் காணப்படுகிறது. அதைப்போல இயேசுவின் தாயாகிய மரியாளுக்கும் அவளுடைய புருஷன் யோசேப்புக்கும் ராஜாவாகிய தாவீதுக்கும் கோத்திரப் பிதாவாயிருந்த யூதாவின் சந்ததியாரைப் பற்றியும், அச்சந்ததி மறுபடியும் ஆபிரகாமின் சந்ததியாக விவரமாய் காண்பிக்கப்பட்டிருக்கிறது. (லூக்கா 3:23, 31, 33, 34,



மத்.1:2–16) இதனாலேயே சந்தேகத்திற்கு இடமின்றி யூதாவின் வம்ச வரலாறு கொடுக்கப்பட்டதுபோல், அவ்வளவு திட்டமாக மற்ற சந்ததியார் பற்றி ஏன் கொடுக்கப்படவில்லையெனில் இஸ்ரவேலை ஆளப்போகிற ராஜாவும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவும் இச்சந்ததியிலேயே தோன்றுவார் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டதே காரணம். (ஆதியாகமம் 49:10; ஆதியாகமம் 38ம் அதிகாரம்)

வேதாகமத்தில் பதிவாகியுள்ள வரலாற்று உண்மைகளுக்கு வெவ்வேறு காரணங்களோ அல்லது ஒரே மாதிரியான காரணங்களோ இருக்கக்கூடும். இதன் பயன்பாடுகளை சிறிதுசிறிதாக நாம் காணலாம். அவை வரலாறாக இல்லாதிருந்தாலும், அதிலுள்ள எந்த விஷயத்தையும் தவிர்க்காமல், ஏற்றுக்கொள்ளுமளவிற்கு ஒழுக்கத்தைப் போதிப்பதாய் இருக்கும். வேதாகமம் அசுத்தத்திற்கு உடன்படுகிறது என்று எந்த இடத்திலும் ஒருவரும் புத்தியறிவின்படி கூறமுடியாது. அதோடுகூட, ஒரேவித உண்மைகள் கூடுதலாகவோ, குறைவாகவோ, எந்த மொழியிலும் மென்மையாக சொல்லப்பட்டிருப்பதை நினைவில் வைக்கவேண்டும். மேலும், வேதத்தின் மொழிபெயர்ப்பாளர்கள் தற்காலத்தைக்காட்டிலும் விஷயங்களைத் துல்லியமாய் எடுத்துரைக்காத காலத்தில் வாழ்ந்தபோதிலும், வேதத்தின் எந்தப் பகுதியையும் ஒதுக்கிவிடாமல் மிக கவனமாகவும், சரியாகவும், மொழிபெயர்த்துள்ளனர். இவ்விதமாக எடுத்துரைக்கும் பழக்கமானது, வேதாகமம் வெளிப்பட்ட காலம் முதலே இருந்திருக்கிறது என்பதை நாம் அனுமானிக்கலாம். அவ்விதமாக புதிய ஏற்பாட்டில் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் எவ்விஷயத்தையும் திருப்தியடையாதவர்களால்கூட எதிர்ப்பை கண்டுபிடிக்கமுடியாது என்பது நிச்சயமான உண்மை.

## மோசேயின் புத்தகங்களும், அதில் அறிவிக்கப்பட்டிருக்கும் நியாயப்பிரமாணங்களும்

வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களும் மோசே எழுதிய புத்தகங்கள் என அறியப்பட்டிருந்தாலும், மோசே அவைகளின் ஆசிரியர் என எங்கும் தரப்படவில்லை. அவைகள் மோசேயினாலும் அல்லது அவர் மேற்பார்வையிலும் எழுதப்பட்டுள்ளன என்பது நியாயமான

அனுமானமாகும். அவருடைய மரணத்தையும், உடல் அடக்கத்தைப் பற்றியும் கண்டிப்பாக அவருடைய உதவியாளரால் எழுதப்பட்டிருக்க வேண்டும். மோசேயினால் இப்புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளது பற்றின இவ்விபரங்கள் வேதத்தில் தரப்படாவிட்டாலும், அவர் எழுதியதற்கான மாற்றுக்கருத்துக்கு எந்தவித ஆதாரமுமில்லை. இப்புத்தகங்கள் வாசிப்போரை வஞ்சிக்க எழுதப்பட்டதேயானால், அப்படிச் செய்ய எண்ணங்கொண்டவர், மோசேயை மேன்மைப்படுத்தும்பொருட்டு அப்புத்தகங்கள் இஸ்ரயேலில் மகா தலைவராயிருந்த மோசேயினால் எழுதப்பட்டிருக்கிறது என பதிவு செய்திருப்பார். (உபாகமம் 31:9, 27) ஆனால், மோசே எபிரேய சந்ததியை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தார் என்பது நாம் நிச்சயமாக அறிந்த ஒன்று. அப்புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிற நியாயப்பிரமாணத்தின்படி அந்த இஸ்ரயேல் ஜனங்களை ஒரு ஜாதியாக ஒன்று திரட்டினார். அதன்பின் மூன்றாயிரம் வருடங்களுக்கு மேலாக யூதர்கள் இப்புத்தகங்கள் மோசேயினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட மாபெரும் பரிசு என்று எண்ணி, அவைகளில் உள்ள ஒவ்வொரு நியாயப்பிரமாணத்தின் சாரம்சத்தைக்கூட மாற்றாமல், அது தேவனுடைய புனிதமான வார்த்தைகள் என்று நிரூபிக்கும் வகையில் போற்றி பாதுகாத்து வருகிறார்கள்.

மோசே எழுதின இப்புத்தகங்கள் மட்டுமே அது எழுதப்பட்ட அக்காலங்களில் மிகவும் நம்பத்தகுந்த சரித்திரங்களை உடையதாயிருக்கிறது. சீனா தேச சரித்திரம், சிருஷ்டிப்பைக் குறித்துச் சொல்லும்போது, கடவுள் ஒரு படகில் ஏறி ஒரு கைப்பிடி மண்ணைக் கொண்டுபோய் தண்ணீரில் போட்டதாகவும், அம்மண்ணே உலகமாயிற்று என்றும் கூறுகிறது. ஆனால், சிந்திக்கும் ஒரு குழந்தைகூட இப்படிப்பட்ட பேச்சில் வஞ்சிக்கப்படாதபடிக்கு அதை ஒரு கட்டுக்கதை என்று சொல்லமுடியும். அதற்கு மாறாக வேதத்தில், ஆதியாகமத்தில் சிருஷ்டிகரும், நுண்ணறிவுள்ள மூல காரணருமான கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற ஏற்கனவே சொல்லப்பட்ட நியாயமான அனுமானத்துடன் ஆரம்பிக்கிறது. அதில் கடவுளின் ஆரம்பத்தைப் பற்றிப் பேசாமல், அவர் ஆதியிலே வானத்தையும், பூமியையும் மிகவும் கச்சிதமாகவும் ஒரு ஒழுங்கிற்குள்ளும் படைத்த அவருடைய வேலையைப் பற்றி தெரிவிக்கிறது. "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." அதன்பின்



பூமி உண்டாக்கப்பட்ட விதத்தை விபரமாக முழுமையாக விளக்காமல் சிருஷ்டிப்பின் ஆறு நாட்களில் (யுக நாட்கள்) மனிதன் வாழ அவசியமானவைகளை சிருஷ்டித்ததை படிப்படியாக விவரிக்கிறது. இவைகளில் சொல்லப்பட்டவை, கடந்த நான்காயிரம் வருடங்களாக கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான வெளிச்சத்துடன் முரண்பாடில்லாமல் ஒத்துப்போகிறது. ஆகவே, லட்சக்கணக்கான பணம் செலவழித்தும் நவீன கருவிகளைப் பயன்படுத்தியும் கடந்த மூன்றாயிரம் ஆண்டுகளாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் அறிவைத் தொகுத்து அளவிட்டாலும்கூட, மோசே என்ற தனி மனிதனின் அறிவிற்கு ஒப்பாகும் என்று கூறினாலும், மோசே தேவனால் ஏவப்பட்டு எழுதினார் என்று சொல்வதே எல்லாப் புத்திக்கும் மேலாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மோசேயின் புத்தகங்களில் எழுதியிருக்கும் நியாயப்பிரமாணங்களின் முறையை அடுத்ததாகப் பார்ப்போம். அவைகள் பாகுபாடின்றி அக்காலங்களுக்கும் அதின் பிற்காலங்களுக்கும், இருபதாம் நூற்றாண்டுகளுக்குமுரிய அறிவிற்கும் மேற்பட்டது. இந்நூற்றாண்டின் சட்டதிட்டங்கள்கூட, மோசேயின் நியாயப்பிரமாணக் கொள்கையின் அடிப்படையிலேயே நிறுவப்பட்டுள்ளன. எவ்வாறெனில், அவைகளை நிறுவின மனிதர்கள் மோசேயின் பிரமாணத்தை தெய்வீகமானது என்று ஏற்றுக்கொண்டனர்.

பத்துக் கட்டளைகள் என்பது முழு நியாயப்பிரமாணத்தின் தொகுப்பாகும். இந்த பத்துக் கட்டளைகளில் கூறப்பட்டுள்ள ஆராதனை முறைகளும், ஒழுக்கரீதியான அறிவுரைகளும் அதை வாசிக்கும் ஒவ்வொரு மாணவனையும், அவைகள் அற்புதமானவைகள் என்று யோசிக்க வைக்கும். அவைகள் இது வரையிலும் அறியப்படாமலிருந்து, இப்போது கிரேக்க, ரோம அல்லது பாபிலோனிய ராஜ்யங்களின் (நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட அநேக காலங்களுக்கு பிறகு தோன்றி அழிந்த ராஜ்யங்கள்) அழிவுகளிலிருந்து பிரிந்திருக்கும் நினைவுச் சின்னங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்குமேயானால், பத்துக் கட்டளைகளானது, இயற்கைக்கு அப்பாற்பட்டதாக இல்லாவிட்டாலும், அதிசயிக்கத்தக்கவை என போற்றப்பட்டிருக்கும். ஆனால், இந்தக்

கட்டளைகள் அநேகரால் நன்கு அறியப்பட்டதாலும் அதில் குறிப்பிடத்தக்க அளவு கருத்து வேறுபாடுகள் உண்டானாலும் சிலர் தவிர மற்றவர்கள் இவைகளில் உள்ள நிஜமான மேன்மையை கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். நிஜமாகவே பத்து கட்டளைகள் கிறிஸ்துவைப் பற்றி போதிப்பது இல்லை. மேலும், அவைகள் எபிரெயருக்கு தரப்பட்டதேயன்றி கிறிஸ்தவர்களுக்கு அல்ல. ஈடுபலியை விசுவாசிக்க தரப்படாமல், மனிதர் தங்களுடைய பாவநிலையை உணர்ந்து அதிலிருந்து விடுபட மீட்கும்பொருளின் அத்தியாவசியத் தேவையை காண்பிக்கிறதாயிருக்கிறது. இந்த கிறிஸ்தவ மார்க்கத்தை தோற்றுவித்தவராகிய இயேசு, மாற்கு 12:30, 31ல் "உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும், அன்புகூருவாயாக. மேலும், உன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என பத்து கட்டளைகளையும் மிகவும் அருமையாக சுருக்கி தொகுத்துரைக்கிறார்.

மோசேயினால் ஸ்தாபிக்கப்பட்ட அரசாளும் முறையானது, பழங்கால, நவீன முறைகளுக்கு முற்றிலும் வேறுபட்டதாகவும் இருந்தது. அம்முறையானது சிருஷ்டிகருடையதும், அந்த இஸ்ரவேல் ஜனங்கள் அவருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாகவும் இருந்தார்கள். மத ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும், அவர்களுடைய சட்டங்களும், முறைகளும் நாம் பார்க்கிறபடி அது தேவனுடையவைகள் என்றும், தேவனுடைய குணநலன்களுடன் எவ்வாறு ஒத்துப்போகிறது என்றும் போதிக்கிறதாயிருக்கிறது. பாளையத்தின் மத்தியிலே இருந்த ஆசரிப்புக்கூடாரத்தில் ஒரு பாகமாகிய "மகா பரிசுத்த ஸ்தலத்திலே" இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில், யேகோவா தேவனே அவர்களுடைய ராஜாவாகவும், அவரே அவர்களை ஆண்டு வருகிறவரென்றும் அவர்கள் உணரும்பொருட்டு அவருடைய பிரசன்னம் இருந்தது. ஆசரிப்புக்கூடாரத்தின் முழுப்பொறுப்பாக ஆசாரிய முறைமை ஏற்படுத்தப்பட்டதுடன் அவர்கள் மூலமாக மட்டுமே யேகோவா தேவனுடன் தொடர்புகொள்ள அனுமதிக்கப்பட்டது. இது சம்பந்தமாக சிலருடைய முதலாவது கருத்து என்னவாக இருக்கக்கூடும் என்றால், "மற்ற தேசங்களில் உள்ளதுபோலவே, யூதர்கள் மத்தியிலும் ஆசாரியர்கள் தங்கள்



சுயலாபத்திற்கும், நன்மைக்கும் ஜனங்களை ஏமாற்றி பயமுறுத்தி ஆண்டு வருகிறார்கள் என்பதே." ஆனால், நாம் அவசரப்பட்டு எந்த முடிவிற்கும் வரக்கூடாது. ஒரு காரியத்தின் உண்மைகளை நன்கு ஆராய்ந்தபின் ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளபோது, அந்த உண்மைகளை ஆராயாமல் ஒரு முடிவுக்கு வருவது ஏற்புடையதன்று. அப்படி செய்வோமானால் மற்ற விஷயங்களை நாம் கவனித்துப் பார்க்கும்போது நாம் தவறு செய்தோமென அறிய நேரிடும். ஆசாரியர்களுடைய உரிமைகளும், அதிகாரங்களும், இங்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஜனங்கள்மேல் எந்த அதிகாரமும் அவர்களுக்குத் தரப்படவில்லை. அவர்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனங்களுடைய உரிமைகளிலும், மனசாட்சியிலும் தலையிட முடியாது. இம்முறையானது, அதே ஆசாரிய கோத்திரத்தாராகிய மோசேயினால் ஏற்படுத்தப்பட்டது.

இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கும் தேவனுடைய பிரதிநிதியாக இருந்த மோசேயிடம் அவர்கள்மேல் முழு அதிகாரமும் இருந்தபோதிலும், அவருடைய சொந்தகுணம் ஜனங்களின் நன்மைக்கென்று மிதமிஞ்சி அவர்களுக்கு உழைக்கத் தூண்டியது. சில காலத்திற்குப்பின் குடியாட்சிக்கு ஒப்பான அரசாங்கம் அவரால் ஏற்படுத்தப்பட்டது. ஒருவேளை அவிசுவாசிகளும்கூட இஸ்ரவேலின் அரசாட்சி, மக்களாட்சி என்று மதிக்கலாம். ஆனால், அந்த அரசாட்சியுடைய வெளிச்சத்தில் நோக்கும்போது அது ஒரு தெய்வீக அரசாட்சியாகும். ஏனெனில், கட்டளைகள் அனைத்தும் மோசேயின் மூலம் தேவனால் கொடுக்கப்பட்டதே தவிர, மோசே எவ்வித கட்டளைகளையும் ஏற்படுத்த அனுமதிக்கப்படவில்லை. தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சட்டங்களிலிருந்து யாதொன்றையும் நீக்கவோ, சேர்க்கவோ கூடாது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது, இஸ்ரவேலின் அரசாங்கம் மற்ற சமுதாய அரசாங்கங்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாகவும், முன்னெப்போதும் இருந்திராததாயும் இருந்தது. "கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக்கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடேகூட வந்து நிற்கும்படி செய். அப்பொழுது நான் இறங்கிவந்து, அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின்

பாரத்தைச் சுமக்காமல், உன்னோடே கூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேல் வைப்பேன்" (எண்ணாகமம் 11:16, 17 இத்துடன் 24 முதல் 30 வசனங்களில் உண்மையும் சாந்தமும் உள்ள வஞ்சனையில்லாத மோசேயின் குணாதிசயம் முன்மாதிரியாக கொடுக்கப்பட்டுள்ளது). இந்த சம்பவத்தை மோசே வேறு ஒரு பகுதியில் கூறுவதைக் காண்போம்: "நான் ஞானமும் அறிவுமுள்ள மனிதராகிய உங்கள் கோத்திரங்களின் வம்சபதிகளைத் தெரிந்துகொண்டு, அவர்கள் உங்களுக்குத் தலைவராயிருக்கும்படி ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறு பேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பது பேருக்கு அதிபதிகளாகவும், பத்து பேருக்கு அதிபதிகளாகவும் உங்கள் கோத்திரங்களில் அதிகாரிகளாகவும் ஏற்படுத்தி வைத்தேன்." (உபாகமம் 1:15; யாத்திராகமம் 18:13–26)

அரசாங்கத்தின் உயர்ந்த பதவிகளை நிர்வகிக்க, தன் உறவினர்களிலிருந்தோ, ஆசாரிய வகுப்பாரிலிருந்தோ ஆட்களை நியமித்து, தன் சுய பலத்தை அதிகரித்துக்கொள்ளாமல், மத அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஜனங்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பறிக்காமல், எல்லாக் கோத்திரங்களிலுமிருந்து ஆட்களை நியமித்து, அரசாங்கத்தை ஏற்படுத்தியதன் மூலம், ஜனங்களிடத்தில் சுயாதீனத்தை அதிகரிக்கச் செய்த மோசேயின் குணாதிசயம் எவ்வளவு மேன்மையானது என்று விளங்குகிறது. மற்ற தேச சரித்திரம் மற்றும் ஆட்சியாளரிடம் இதற்கொப்பான செய்கையை நாம் காண்கிறதில்லை. அந்த தேசங்களின் ராஜாக்கள் தங்களது புகழையும், வல்லமையையும் அதிகரிப்பதிலேயே கருத்தாய் இருந்தார்கள். இவர்கள் தங்களுடைய வல்லமையை அதிகரிக்கவும், ஜனங்களிடத்தில் தயவு பெறவுமே குடியரசை (republica) ஸ்தாபித்தனர். அனைவருக்கும் சம உரிமையுள்ள சமுதாயத்தை குடியரசாக ஸ்தாபித்தபோதிலும், அதன் மூலமாக ஜனங்களை மகிழ்வித்து, தங்கள் வல்லமையை அதிகரிக்கும் சுயலாபத்துக்காகவே அவ்வாறு செய்தார்கள் என்று அதன்பின் நடைபெற்ற சம்பவங்கள் காண்பிக்கின்றது. மோசேயைப் போலவே வல்லமையையுடைய மேலான ஸ்தானத்தில் பேராசையுள்ள ஒருவர் இருப்பாராகில், ஆசரிப்புக் கூடாரத்தில் தேவ பிரசன்னத்தைக் காரணங்காட்டி, ஏற்கனவே தன்னுடைய கோத்திரம் ஆசாரிய கோத்திரமாயிருந்தபடியால்,



அக்கோத்திரத்திலிருந்தே மற்ற அதிகாரிகளையும் தெரிந்தெடுத்து இப்படியாக அதிகாரத்தையும், வல்லமையையும் தன் குடும்பத்தின் ஆதிக்கத்தின்கீழ் அடக்கி வைத்திருப்பார். இப்படிப்பட்ட சட்டங்களை ஏற்படுத்தவும், இப்படிப்பட்ட ஜனங்களை ஆளவும் திறமையுள்ள மோசே இப்படி சொந்த வல்லமையை அதிகரிப்பதன் மூலம் என்ன நடக்கும் என்பதை அவர் அறியக்கூடும். அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாடும் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட பிறகு, ஜனங்களுக்குள்ளே ஏற்படும் கடினமான பிரச்சனைகளை தம்மிடம் கொண்டுவரச்சொல்லி, மோசே தன் கீழுள்ள ஆளுநர்களிடம் கூறி சாதாரண விஷயங்களை, தீர்ப்புச் செய்யும் அதிகாரத்தை அவர்களிடமே ஒப்படைத்தார். "உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்; நான் அதைக் கேட்பேன்."(உபாகமம் 1:17)

இவ்வாறாக நாம் பார்த்தபடி, இஸ்ரயேல் தேசமானது தேவனது தெய்வீக உத்திரவுக்குக் கீழ்ப்பட்ட குடியரசாக இருந்தது. அந்த அரசாங்கத்தின் அதிகாரிகள் தேவனது ஊழியர்களாக பணியாற்றினர். "மக்களைக்கொண்டே ஆளும் மக்களின்" அரசாங்கத்திற்குப் பதிலாக, ஜனங்களின்மேல் ஆளுகை செய்யும் அடிமைத்தன ராஜ்யத்தை ஏற்படுத்தினதை வேதாகமம் அங்கீகரித்திருக்கிறது என்று அநேகர் அறியாமையினால் வாதாடுகின்றனர். இத்தகைய உரிமைபெற்ற அரசாங்கமே நானூறு வருடங்களாக ஆளுகை செய்து வந்தது என்பதை கவனிக்க வேண்டும். அதன்பிறகு, "இஸ்ரயேலின் மூப்பர்கள்" தங்களுக்கென்று ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பி, கர்த்தரது அங்கீகாரத்தைப் பெறாமல், தங்கள் சுய எண்ணத்தை வலியுறுத்தியதால், கர்த்தர் சாமுவேலை நோக்கி, "ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள், அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் தள்ளினார்கள்" என்று கூறினார். தேவனது கட்டளைப்படி இராஜாவை ஏற்படுத்துவதனால் ஜனங்களுக்கு ஏற்படவிருக்கும் தீமைகளையும், அவர்களது சுதந்திரம் மற்றும் உரிமைகள் அலட்சியப்படுத்தப்படும் என்பதையும், அவர்கள் அடிமைகளாக நேரிடும் என்று எச்சரித்தும், இஸ்ரயேலர் முரட்டாட்டமாய் வற்புறுத்தியதால், தேவன் அவர்களுக்கு ராஜாவைக் கட்டளையிட்டார். (1 சாமுவேல் 8:6–22) ஒரு ராஜா வேண்டும்

என்று இஸ்ரவேலை விரும்பினதை யோசித்துப் பார்க்கும்போது, மோசே தன்னைத்தான் உயர்த்த எண்ணியிருப்பாரேயாகில், எந்தக் கஷ்டமும் இல்லாமல், மாபெரும் ராஜ்யத்தின் அதிபதியாக தன்னை உயர்த்தியிருப்பார் என்று இச்சம்பவம் காண்பிக்கின்றது.

இஸ்ரவேல் முழுவதும் ஒரே தேசமாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அவர்களின் கோத்திரப் பிரிவுகள் யாக்கோபின் மரணத்திற்குப் பிறகு எப்பொழுதும் காக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு கோத்திரமும், குடும்பமும் குறிப்பிட்ட நபர்களை பிரதிநிதிகளாக அல்லது அதிகாரியாக நியமித்து வந்தார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த அநேக வருஷங்களிலும் இவ்வழக்கம் கடைபிடிக்கப்பட்டு வந்தது. இவர்கள் ஜனத்தின் "மூப்பர்" அல்லது பிரதானிகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களையே மோசே கனப்படுத்தி, அரசாங்கத்தின் அதிகாரிகளாக்கினார். மாறாக, அதிகாரம் முழுவதையும் தன்னிடமும், தன் சொந்த குடும்பத்தாரிடமும் வைத்துக்கொள்ள விரும்பியிருந்தால், அவர்களுக்கு இப்பெரிய அந்தஸ்தைக் கொடுத்திருக்க மாட்டார்.

சமுதாயத்தை ஆளும் அதிகாரிகளுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட அறிவுரைகள் எளிமைக்கும், நேர்மைக்கும், பரிசுத்தத்திற்கும் மாதிரியாக அமைந்திருந்தது. மோசே ஜனங்களிடம், இந்த நியாயாதிபதிகளைப் பார்த்து நான் கூறுவதாவது: "...நீங்கள் உங்கள் சகோதரரின் வியாச்சியங்களைக் (காரணங்களைக்) கேட்டு, இரு பட்சத்தாராகிய உங்கள் சகோதரருக்கும், அவர்களிடத்தில் தங்கும் அந்நியனுக்கும், நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்கள். நியாயத்திலே முகதாட்சணியம் பாராமல், பெரியவனுக்கு செவிகொடுப்பதுபோல் சிறியவனுக்கும் செவிகொடுக்கக்கடவீர்கள். மனிதன் முகத்திற்குப் பயப்படீர்களாக; நியாயத்தீர்ப்பு தேவனுடையது; உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்; நான் அதைக் கேட்பேன்" என்றான். (உபாகமம் 1:16,17) மோசேயின் மரணத்திற்குப் பிற்பாடு, கடினமாயிருக்கும் காரியங்கள் கர்த்தரிடத்தில் பிரதான ஆசாரியன் மூலமாக நேரடியாகக் கொண்டுவரப்பட்டது. ஊரீம் மற்றும் தும்மீம் மூலமாக, ஆம் அல்லது இல்லை என்று கர்த்தர் உத்தரவளித்தார்.

இந்த உண்மைகளைப் பார்க்கும்போது, நேர்மையற்ற ஆசாரியர்கள்



தங்கள் சுய லாபத்துக்காகவும், ஜனங்கள்மேல் அதிகாரஞ் செலுத்தவும் இந்தப் புத்தகங்களை எழுதியிருப்பார்கள் என்று சொல்வது நியாயமாகுமா? அவ்வாறு இருந்தால், அம்மனிதர்கள் தங்களுடைய நோக்கங்கள் நிறைவேறும்பொருட்டு மாற்றி எழுதியிருப்பார்களேயன்றி, அவைகளை இப்படி எழுதியிருக்க மாட்டார்கள். அதாவது, வேதத்தில் தீர்மானமாக எழுதியிருக்கிறபடி, இஸ்ரவேலின் பிரதான அதிபதியானவர் தங்களுடைய சொந்த கோத்திரத்திலிருந்து அதிகாரிகளை நியமிக்காமல், தேவனுடைய வழிகாட்டுதலின்படி சமூக அந்த அதிகாரங்களை ஆசாரியத்துவத்திலிருந்து பிரித்து, ஜனங்கள் கையில் ஒப்படைக்க முன்வருவாரா? இவ்வாறிருக்க, ஆசாரியர்கள் தங்கள் சுய லாபத்துக்காக வேதத்தை எழுதியிருப்பார்கள் என்று ஒருவர் நினைத்தால், அது ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானமாக இருக்குமா?

இருபதாம் நூற்றாண்டில் மிகவும் நாகரீகமடைந்த நாடுகளின் சட்டங்களில்கூட, ஐசுவரியவானும் ஏழையும் சமமாக பாவிக்கப்படுவதில்லை. மோசேயின் பிரமாணங்களில் இவ்விரு வகுப்பாருக்கும் நீதி செய்யப்படுகிற காரியத்தில் எந்த ஒரு வித்தியாசமும் காண்பிக்கப்படவில்லை. சிலர் அதிக செல்வந்தர்களாகவும், அதிகாரம் மிக்கவர்களாகவும், வேறுசிலர் மிகவும் ஏழைகளாகவும் ஆகும் அபாயங்களிலிருந்து பாதுகாக்க, மோசேயின் பிரமாணங்களில் குறிப்பிடத்தக்க அம்சங்களிருந்தன. ஆனால், இன்றும் உலகின் எந்த நாட்டிலும் இம்மாதிரி பாதுகாக்கும் சட்டம் நடைமுறையிலில்லை. மோசேயின் பிரமாணத்தின்படி, ஒவ்வொரு ஐம்பது வருடமும் திரும்பக் கொடுக்கும் வேலைக்கான யூபிலி வருடமாயிருந்தது. இந்த யூபிலி வருடத்தில் இழந்துபோன சொத்துக்கள் திரும்பக் கொடுக்கப்பட்டது. இதனால் ஒருசிலரின் கைகளில் ஏராளமான சொத்துக்கள் திரளாகக் குவிவது தடுக்கப்பட்டது. (லேவியராகமம் 25:9, 13–23, 27–30) உண்மையாகவே அவர்கள் ஒருவரையொருவர் சகோதரர்களாக எண்ணி, கைம்மாறு கருதாமல் ஒருவருக்கொருவர் உதவி செய்யும்படியும், வட்டி வாங்காதபடியும் அச்சட்டம் கற்பித்தது. (யாத்திராகமம் 22:25; லேவியராகமம் 25:36, 37; எண்ணாகமம் 26:52–56)

சட்டங்கள் அனைத்தும் ஒளிவுமறைவு இன்றி வெளிப்படையாக

பதிவு செய்யப்பட்டிருந்ததால், அரசாங்க அதிகாரிகளோ, மற்றவர்களோ ஜனங்களின் உரிமைகளை மாற்றக்கூடாதிருந்தது. இச்சட்டங்களை எழுதிக்கொள்ளும்படி வசதி செய்யப்பட்டிருந்த. ஆசாரியர்கள், இஸ்ரவேலரின் பண்டிகை நாட்களில் இவற்றை ஜனங்களுக்கு முன்பாக வாசிக்கவேண்டுமென்று கட்டளை கொடுக்கப்பட்டிருந்ததால், ஏழைகளும் படிப்பறிவில்லாதவர்களும்கூட அதை அறிந்துகொள்ளக்கூடியதாயிருந்தது. (உபாகமம் 31:10–13) இப்படிப்பட்ட சட்டங்களும், ஏற்பாடுகளும் வஞ்சனையுள்ள மனிதர்களால் ஜனங்களுடைய சுயாதீனத்தையும் மகிழ்ச்சியையும் மட்டுப்படுத்த சூழ்ச்சியாக ஏற்படுத்தப்பட்டதென்று எப்படி நிதானிக்க முடியும்? அப்படிப்பட்ட யூகம் ஏற்றுக்கொள்ள முடியாததாய் இருக்கிறது.

எதிரிகள் மற்றும் அயல் நாட்டவர்களுடைய உரிமைகளுக்கும், அவர்களது நலனுக்காகவும் முப்பத்து இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பாக, மோசேயின் பிரமாணத்தில் எழுதியிருப்பதின்படியே அதற்கு இணையான சட்ட திட்டங்கள் நவநாகரீகமான தற்காலத்திலும் அவர்கள் அதேவித பலன்களை அடைய கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

"சுதேசிக்கும் உங்களிடத்தில் தங்கும் பரதேசிக்கும் (அயல்நாட்டவர்) ஒரே பிரமாணம் இருக்கக்கடவது" (யாத்.12:49; லேவி.24:22) என்று வாசிக்கிறோம்.

"யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால் அவனைச் சிறுமைப்படுத்த வேண்டாம். உங்களிடத்தில் வாசம்பண்ணுகிற அந்நியனைச் சுதேசிபோல எண்ணி, நீங்கள் உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருவீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியராய் இருந்தீர்களே." (லேவியராகமம் 19:33, 34)

"உன் சத்துருவின் மாடாவது, அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக் கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருப்பாயா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவி செய்வாயாக" என்று யாத்திராகமம் 23:4, 5ல் வாசிக்கிறோம்.



வாயில்லாப் பிராணிகள்கூட மோசேயின் பிரமாணங்களில் மறக்கப்படவில்லை. அவைகளைக் கொடூரமாய் நடத்துவதும், மனிதனைக் கொடூரமாய் நடத்துவதை தடை செய்ததுபோலவே, தடை செய்யப்பட்டிருந்தது. போரடிக்கிற மாட்டின் வாயைக் கட்டக்கூடாது. ஏனென்றால், வேலைசெய்கிற எந்தப் பிராணியும், மனிதனும் சாப்பிடத் தகுதியானவர்கள் என்கிற நல்ல காரணத்தின் பொருட்டேயாகும். நிலத்தை உழும்போது எருதையும், கழுதையையும் ஒன்றாய்ச் சேர்த்து உழுதல் கூடாது. ஏனெனில், அவை இரண்டும் சமமான பலம், ஆற்றல் உள்ளவைகளல்ல. ஆகவே இது கொடூரமான செயலாகும். மிருகங்களுக்கு ஓய்வு காலம் இருக்க வேண்டுமென்ற சட்டமும் இருந்தது. (உபாகமம் 25:4; 22:10; யாத்திராகமம் 23:12)

ஆசாரியத்துவம் ஒரு சுயநலமுள்ள ஏற்பாடு என்று சிலர் கூறுவதற்குக் காரணம், லேவியர்களுக்கு மற்ற கோத்திரங்களிலுள்ளவர்கள் நிலவிளைச்சலில் பத்தில் ஒரு பாகம் கொடுக்கவேண்டும் என்ற பிரமாணத்தின் நிமித்தமாகவே ஆகும். மோசேயின் பிரமாணங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டதேயொழிய, இந்த ஆசாரியக் கூட்டத்தாரால் ஏற்படுத்தப்படவில்லை என்று நிரூபிக்கிற, தேவனது தெய்வீக திட்டத்தை அறியாது சந்தேகப்படுபவர்கள், ஆசாரியர்கள் சுயநலமும், வஞ்சனையும் உடையவர்கள் என்று ஆராய்ந்து பார்க்காமல் கூறுகிறார்கள். மோசேயின் பிரமாணத்தை முன் உதாரணமாகக்கொண்டு, தற்காலத்தில் அதுபோலவே ஏற்படுத்தி ஆசாரியத்துவத்தைக் கடைபிடித்து வந்தாலும், தற்கால ஆசாரியத்துவம் தவறுதலாக போதிக்கப்படுகிறது. ஆசாரியத்துவம் மோசேயிடம் கொடுக்கப்பட்டபொழுது எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் அது ஏற்படுத்தப்பட்டது அல்லது எம்முறையில் அவர்களுக்கு தசமபாகம் அளிக்கப்பட்டது என்பதை தெரிவிக்காமல் அதற்கு மாறாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இப்பிரமாணம் மகா நீதியும், சமத்துவத்தின் அடிப்படையில் உண்டாயிருக்கிறது. இஸ்ரவேல் கானான் தேசத்தை சுதந்தரித்தபொழுது, மற்ற கோத்திரத்தாரைப்போலவே லேவியரும் நிலத்தில் ஒருபாகத்தை அடைய வேண்டியது நியாயமானது. ஆனாலும், தேவனது கட்டளையின்படி

இவர்கள் மத ரீதியான ஊழியம் செய்யும்பொருட்டு, இவர்களுக்கு தேசத்தின் ஒரு பாகம் பிரித்துக்கொடுக்கப்படாமல், இஸ்ரயேலின் தேச முழுவதிலும் சிதறிக்கிடந்த பல்வேறு கோத்திரங்களின் மத்தியில், சில குறிப்பிட்ட பட்டணங்கள் அல்லது கிராமங்கள் மாத்திரம் குடியிருப்புக்கென்று கொடுக்கப்பட்டது. தேசம் பிரிக்கப்படுவதற்கு முன்பு ஒன்பது முறை இக்கட்டளை கொடுக்கப்பட்டது. நிலத்திற்குப் பதிலாக, அதற்கீடாக அவர்களது ஜீவனத்திற்கென்று ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாதலால், இந்த காரணகாரியத்தோடு கூடிய, நீதியான ஏற்பாடாக தசமபாகம் அளிக்கப்பட்டது. ஆனாலும், தசமபாகம் ஒரு நீதியான கட்டளையாக இருந்தபோதிலும், வரிவசூலிப்பதுபோல் வலுக்கட்டாயப்படுத்தாமல், மனமுவந்து கொடுக்கப்பட்டு வந்தது. தசமபாகம் கொடுக்காதவர்களுக்கு தண்டனை விதிக்கப்படவில்லை. அனைத்தும் அவர்களது மனசாட்சியின் அடிப்படையையே சார்ந்திருந்தது. இதைக்குறித்து ஜனங்களுக்கு புத்திமதிகள் மட்டுமே நினைப்பூட்டப்பட்டன.

"நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் லேவியனைக் கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு." (உபாகமம் 12:19) "லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்திரமும் இல்லாதபடியால் அவனைக் கைவிடாயாக." (உபாகமம் 14:27)

சுயநலமும், பேராசையுமுள்ள ஆசாரியர்களாக இருந்தால், தங்களுக்குத் தாங்களே நஷ்டத்தை வருவித்து, தங்களுடைய சுதந்திர உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டு, இப்படிப்பட்ட சட்டங்களை ஏற்படுத்தி, சதாகாலமும் தங்கள் சகோதரரின் உதவியை எதிர்பார்த்து காத்திருப்பார்களா ?

மேலும், ஆசாரியத்துவத்தை மேன்மைப்படுத்தி எந்த விசேஷித்த சட்டங்கள் ஏற்படுத்தாததும், இச்சட்டங்கள் தேவனாலேதான் கொடுக்கப்பட்டன, ஆசாரியக் கூட்டத்தாரால் ஏற்படுத்தப்படவில்லை என்பதைக் காண்பிக்கிறது. மோசம் செய்யவிரும்புவோர், தங்களுக்கு கனமும் மரியாதையும், ஆதாயமும் கிடைக்கும்படி செய்து, தங்களை மதிக்காதவர்களுக்கு கடுமையான தண்டனை அளிக்கப்படும் விதமாக சட்டங்களை ஏற்படுத்தியிருப்பார்களே. ஆனால், அப்படிப்பட்டது ஒன்றும் இச்சட்டங்களில் நாம் காண்பதில்லை. இவர்களுக்கென்று விசேஷித்த



கனமோ, மகிமையோ கொடுக்கப்படாததுமன்றி மற்றவர்களைப்போல இவர்களும் குற்றம் செய்தால், தண்டனைக்குப் பாத்திரராய் இருந்தனர். எந்த ஒரு தனி நபரையும் உயர்வாக எண்ணாமல் ஜனங்களுக்குள் (ஆசாரியர் – ஜனங்கள்) பிரிவினை ஏற்படுத்தாமல், எல்லாருக்கும் உள்ள பொதுவான சட்டங்களே இவர்களுக்கும் இருந்தது. அந்நியருக்கும், வேலைக்காரருக்கும், வயதானவர்களுக்கும் விசேஷித்த சட்டங்கள் இருந்தபோது இவர்களுக்கு மாத்திரம் அவ்வண்ணம் இராததினால் மோசேயின் பிரமாணங்கள் தேவனால் உண்டானவை என உறுதிபண்ணுகிறதாயிருக்கிறது. உதாரணமாக, "அந்நியரை சிறுமைப்படுத்தாமலும், ஒடுக்காமலும் இருப்பீர்களாக. விதவையையும் திக்கற்ற பிள்ளைகளையும் ஒடுக்காதிருப்பீர்களாக. அவர்களை எவ்வளவாகிலும் ஒடுக்கும்போது அவர்கள் என்னை நோக்கி முறையிட்டால் அவர்கள் முறையிடுதலை நான் நிச்சயமாய் கேட்டு, கோபம் மூண்டவராகி, உங்களை பட்டயத்தினால் கொலை செய்வேன்; உங்கள் மனைவிகள் விதவைகளும், உங்கள் பிள்ளைகள் திக்கற்ற பிள்ளைகளுமாயிருப்பார்கள்." (யாத்.22:21–24; 23:9; லேவி.19:33, 34) "உன் சகோதரரிலும், உன் தேசத்தின் வாசல்களிலுள்ள அந்நியரிலும், ஏழையும் எளிமையுமான கூலிக்காரனை ஒடுக்காயாக. அவன் வேலை செய்த நாளில்தானே பொழுதுபோகும் முன்னே அவன் கூலியை அவனுக்கு கொடுத்துவிட வேண்டும்; அவன் ஏழையும், அதின்மேல் ஆவலுள்ளவனுமாயிருக்கிறான்; அதைக்கொடாவிட்டால் அவன் உன்னைக் குறித்து கர்த்தரை நோக்கி முறையிடுவான்; அது உனக்கு பாவமாயிருக்கும்." (உபா.24:14; லேவி.19:13; யாத்.21:26, 27) "நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக." (லேவி.19:32; லேவியராகமம் 19:14ஐயும் வாசிக்கவும்) இத்தனை சட்டங்கள் இருப்பினும் ஆசாரியர்களுக்கோ லேவியருக்கோ அல்லது அவர்களின் தசமபாகத்தைப் பற்றியோ விசேஷமான சட்டங்கள் ஒன்றும் இருந்ததில்லை.

சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றி பிரமாணங்களும் இப்புத்தகங்களில் சொல்லப்பட்டிருப்பது, தற்கால நவீன மருத்துவ விஞ்ஞான கருத்து முடிவுகளுக்கு ஒத்ததாயிருப்பதுடன், விழுந்துபோன நீண்டகால அடிமைத்தனத்திலுள்ள மக்களுக்கு மிகவும் அவசியமானதாயிருக்கிறது.

எவ்வாறெனில், சுத்தமும் அசுத்தமுமான மிருகங்களிலும், பறவைகளிலும் எவைகளைப் புசிக்கலாம், புசிக்கக்கூடாது என்ற கட்டுப்பாடுகளும், முறைகளும் இக்கால விஞ்ஞானத்திற்கு ஒத்ததாயிருக்கிறது. இவைகளில் ஒவ்வொன்றைப் பற்றியும் சொல்லப்போனால் காலம் போதாது. மோசேயினுடைய ஒவ்வொரு பிரமாணமும் ஒரு விசேஷித்த அடையாளமாகவும், நிழலாகவும் உள்ளது. அவைகளைப் பற்றியும் எதிர்காலத்தில் கருத்திற்கொண்டு ஆராயலாம். ஆனால், நம்முடைய மேலோட்டமான ஆராய்ச்சியின் மூலம் இப்பிரமாணங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதும், வேதத்தில் மற்ற இடங்களில் இதுபற்றி விரிக்கப்பட்டுள்ள முழுமையான மத ரீதியான ஒழுங்குமுறையில் குறிப்பாக இவைகள் எழுதப்பட்ட காலத்தை கருத்தில்கொண்டு பார்த்தால், ஆச்சரியமான தெய்வீக ஞானமும், நீதியும் அடங்கியிருக்கிறது என்ற வெற்றிகரமான ஆதாரத்துடன் கூறலாம்.

அறிவுப்பூர்வமான வெளிச்சத்தில் பார்க்கும்போது, இவைகள் துன்மார்க்க மனிதருடைய ஏற்பாடு அல்லது மனிதருடைய கைவண்ணம் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுடன் இயற்கையிலிருந்து நாம் அறிந்த தேவனுடைய குணலட்சணங்களுக்கேற்றவாறு அமைந்ததாகவும் இருக்கிறதென்பது தெளிவாயிருக்கிறது. இவைகள் தேவனுடைய ஞானத்திற்கும் நீதிக்கும் அன்புக்கும் சாட்சி பகர்கின்றதாயிருக்கிறது. மேலும், பக்தியும் நேர்மையுமுள்ள இச்சட்டங்களைத் தந்த மோசேயும் இச்சட்டங்கள் தன்னுடையதாயிராமல் தேவனுடையதென்று சொல்லியிருக்கிறார். (யாத்.24:12; 26:30; உபா.9:9–11; லேவி.1:1) இவருடைய பொதுவான குணநலன்களைப் பார்க்கும்போது, பொய்சாட்சி சொல்லாமலும், வஞ்சனையும் பொய்யும் தவிர்க்கப்பட வேண்டும் என்று மக்களுக்கு இவர் கட்டளை கொடுத்திருக்க, அவரே பொய்சாட்சி கூறி தன்னுடைய கருத்துக்களை தேவனுடைய சட்டங்களாக்கி விட்டாரென என்னுவதும் எவ்வாறு ஏற்புடையதாயிருக்கும் ? மேலும், தற்காலத்திலுள்ள வேதத்தின் நகல்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, மோசேக்குப் பின் வந்தவர்களில் சிலர் ஜனங்களுடைய நன்மையைத் தேடாமல் தங்களுடைய சுயநலன்களைத் தேடியவராயினும், தேவனுடைய பரிசுத்த வார்த்தைகளை புரட்டிப்போடாததினால், இந்நாள் வரைக்கும் அவைகள்



பரிசுத்தமாயிருக்கிறதென்பதையும் நாம் நினைவுகூர வேண்டும்.

## சத்திய வேத தீர்க்கதரிசிகள்

இப்போது சத்திய வேத தீர்க்கதரிசிகளின் குணநலன்கள் பற்றியும், அவர்களுடைய சாட்சிகளையும் பற்றி சிந்திப்போம். ஆச்சரியமான ஒரு விசேஷம் என்னவெனில், சிலரைத்தவிர பொதுவாக தீர்க்கதரிசிகள் அனைவரும் ஆசாரிய கோத்திரத்தைச் சேர்ந்தவர்களல்ல. அவர்கள் தங்கள் காலத்தில் உரைத்த தீர்க்கதரிசனங்களானது விக்கிரக ஆராதனை செய்துவந்த ஜனங்களை சுட்டிக் காண்பிக்கிறதாயும் காலத்துக்கேற்றவாறு நடந்துவந்த சீர்கேடடைந்த ஆசாரியர்களின் விருப்பத்தகாத செயல்களைக் கண்டிக்கிறதாயும் இருந்ததால் அவர்களுக்கு அவைகள் அருவருப்பாய் இருந்தது. இத்தீர்க்கதரிசிகளைக் கொண்டு தேவன் ஜனங்களுக்கு அளித்த செய்திகளானது அவர்களுடைய பாவங்களை கண்டித்து, அதினால் வரப்போகிற தண்டனைகளை முன்னறிவித்து, அவர்கள் மனந்திரும்பினால் அவர்களுக்கு அளிக்கப்போகிற ஆசீர்வாதங்களையும் அவ்வப்போது அறிவித்து வந்தார். அவர்களுடைய பெரும்பாலான அனுபவங்கள் மிகவும் கசப்பானவைகள். பொதுவாக அவர்கள் தூஷிக்கப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டு, கொடுமையான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். (1 இராஜா.18:4, 10, 17–18, 19:10; எரே.38:6; எபி.11:32–38) இன்னும் சில சந்தர்ப்பங்களில் அவர்களுடைய மரணத்திற்கு வெகுகாலத்திற்குப் பின்பே அவர்கள் உண்மையான தேவனுடைய தீர்க்கதரிசிகளாய் இருந்தார்கள் என்பது ஜனங்களுக்கு வெளியாயிற்று. ஆனால், தீர்க்கதரிசன எழுத்தாளர்கள் எழுதினவைகளெல்லாம் யேகோவா தேவனுடைய வழிநடத்துதலின்படியே எழுதினார்கள் என்பது உண்மையாயிற்று. இது சம்பந்தமாக நாம் புரிந்துகொள்ளவேண்டியது என்னவெனில் நியாயப்பிரமாணமானது மோசேயின் மூலமே ஜனங்களுக்கு தரப்பட்டதே அன்றி, இதில் ஆசாரியர்களுடைய எந்த ஒரு தலையீடும் இருந்ததில்லை. (யாத்.19:17–25; உபா.5:1–5) மேலும், நியாயப்பிரமாணத்தை மீறுகிற பாவியைப் பார்க்கிற எந்த மனிதனும் அவனை கடிந்துகொள்வது அவர்களுடைய கடமையாயிருந்தது. (லேவி.19:17) அந்த வகையில் அனைவருக்கும் உபதேசிக்கிறதற்கும் கடிந்துகொள்வதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும், நம்முடைய நாட்களைப்போலவே அநேகர்

உலகக் கவலையில் இழுக்கப்பட்டு மத சம்பந்தமான விஷயங்களில் விருப்பம் இல்லாதவர்களாயிருந்தார்கள். ஆனால், ஒரு சிலரே பாவங்களைக் கடிந்துகொண்டு ஜனங்களை தேவபக்திக்குள் வழிநடத்தினார்கள். இவர்களே பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தீர்க்கதரிசிகள் என அழைக்கப்பட்டனர். "தீர்க்கதரிசி" என்ற சொல்லானது பொதுவாக "பிரசங்கிப்பவர்" என்று பொருள்படுவதுடன் விக்கிரக ஆராதனை சம்பந்தமாக பிரசங்கிப்பவர்களும்கூட தீர்க்கதரிசிகள் என்றே அழைக்கப்பட்டனர். உதாரணமாக, பாகாலின் தீர்க்கதரிசிகள் முதலானவர்கள். 1 கொரி.14:1–6; 2 பேதுரு 2:1; மத்தேயு 7:15; மத்தேயு 14:5; நெகேமி. 6:7; 1 இராஜா.18:40; தீத்து 1:12

தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பது பிரசங்கித்தல் என்று பொதுவாக சொல்லும்போது பிற்காலங்களில் தீர்க்கதரிசனம் சொல்வதற்கு ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் ஏற்பட்டு, அவர்கள் தேவனுடைய கட்டளைகளை பிரசங்கிப்பதை விட்டுவிட்டு, பழைய பாரம்பரியங்களை பிரசங்கிப்பதால் சத்தியத்திற்கெதிராக கள்ளபோதகர்களாகவும், கள்ளதீர்க்கதரிசிகளாகவும் மாறினார்கள். பரிசேயர் இப்படிப்பட்ட வகுப்பினராக இருந்தார்கள். (மத்.15:2–9)

தீர்க்கதரிசிகளாயிருந்த அநேகரில் சிலரை வெவ்வேறு காலங்களில் யேகோவா தேவன் தெரிந்துகொண்டு, அவர்கள் மூலம் அவர்கள் இருந்த காலத்தைப் பற்றியும், இன்னும் வருங்காலங்களில் சம்பவிக்கப்போகிற காரியங்களைப் பற்றியும் தெரிவித்துவந்தார். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட இவர்களுடைய வார்த்தைகளைப் பற்றிதான் நாம் இப்போது சிந்திக்கப்போகிறோம். மேலும், இவர்கள் நேர்மையும் பண்பும் தவறாது நடந்தனர்.

## தேவனால் நியமிக்கப்பட்ட தீர்க்கதரிசிகள் அல்லது சீர்திருத்தக்காரர்

இந்த தீர்க்கதரிசிகள் சாதாரண பொது ஜனங்களாக இருந்தும், ஆசாரிய வகுப்பார் பெற்று வந்த தசமபாகத்தினால் ஆதரிக்கப்படாதிருந்தும், அவர்கள் அடிக்கடி ராஜாக்கள் மற்றும்



நியாயாதிபதிகளின் தவறான நடத்தைகளை மாத்திரம் கடிந்துகொள்ளாமல், ஆசாரியர்களுடைய நடத்தைகளையும் கடிந்துகொண்டார்கள். (ஆசாரிய முறைமையைக் கடிந்துகொள்ளாமல் அவர்களுடைய தனிப்பட்ட பாவங்களை மாத்திரம் கடிந்துகொண்டார்கள்) இதிலிருந்து பார்க்கும்போது இந்த தீர்க்கதரிசிகள் ஆசாரியர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ, சாதகமாக தேவனுடைய பெயரால் பொய்யைச் சித்தரிக்கிறார்கள் என்ற முடிவுக்கு வரமுடியாது. ஆராய்ந்து பார்த்தால் இப்படிப்பட்ட சந்தேகங்கள் உண்மைக்கு விரோதமானது.

அவ்வாறிருக்க, வேதத்தை எழுதிய பல்வேறு எழுத்தாளர்களுடைய நோக்கத்தை நாம் எக்காரணத்தைக்கொண்டும் குறைத்து மதிப்பிடாமல், அவைகளில் நீதியும் சத்திய ஆவியுமே இருக்கிறதை நாம் காணலாம். அடுத்தாக மோசேயினுடைய ஆகமங்களுக்கும் மற்ற புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளுக்கும் ஒன்றுக்கொன்று தொடர்போ அல்லது ஒற்றுமையோ உள்ளதா என ஆராய்வோம். 15 நூற்றாண்டு காலப் பகுதியில் எழுதப்பட்ட இந்த நியாயப்பிரமாணங்கள், தீர்க்கதரிசனங்கள் மற்றும் புதிய ஏற்பாட்டு வார்த்தைகளில் ஒரேவித நோக்கம் வெளியாகி இருப்பதை நாம் காணும்போதும், அதை அந்த எழுத்தாளர்களுடைய குணநலன்களுக்கு சம்பந்தப்படுத்தும்போது அவர்கள் தேவ ஆவியினாலே ஏவப்பட்டு எழுதினார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்வது நியாயமானது. குறிப்பாக சொல்லப்பட்ட நோக்கமானது இவர்கள் அனைவருக்கும் பொதுவானதாகவும், எதார்த்தமானதாயும், உன்னதமாயும் இருந்து அது தேவ குணலட்சணங்களை வெளிப்படுத்துவதாகவும் உள்ளதால், இவைகளை எழுதினவர்கள் நேர்மையும் நீதியும் உள்ளவர்களாகவும், அவர்கள் எழுதினவைகள் தேவ ஏவுதலினால் எழுதப்பட்டிருக்கிறதென்றும் நாம் எடுத்துக்கொள்ளலாம்.

அந்த வகையில் ஒரே திட்டம், ஒரே ஆவி, ஒரே நோக்கம் வேதம் முழுவதிலும் நிரம்பியிருக்கிறது என்பதைக் காணலாம். மனிதனுடைய சிருஷ்டிப்பும் வீழ்ச்சியும் வேதத்தின் முதற்பாகத்திலும், அவ்வீழ்ச்சியிலிருந்து இரட்சிக்கப்படுவதை கடைசி பாகத்திலும், இந்த இரட்சிப்பை அடையும் படிப்படியான தேவனுடைய திட்டத்தை நடு பாகத்திலும் காண்பிக்கிறது. ஆனாலும், வேதத்திலுள்ள முதல் மூன்று

அதிகாரங்களும் கடைசி மூன்று அதிகாரங்களும் ஒற்றுமையாகத் தோன்றினாலும் அவைகளின் பொருள் வேற்றுமை ஆச்சரியப்படத்தக்கதே. ஒன்று தேவனுடைய ஆதி சிருஷ்டிப்பையும் மற்றொன்று பாவம், சாபம் நீக்கப்பட்ட புதுப்பிக்கப்பட்ட மற்றும் சீர்பொருந்திய மறுசிருஷ்டிப்பையும் விவரிக்கிறது. மேலும், ஒன்று சாத்தானும் தீமையும் இவ்வுலகில் பிரவேசித்து வஞ்சனையையும் அழிவையும் ஏற்படுத்தினதையும், மற்றொன்று தீமையும் சாத்தானும் அழிக்கப்பட்டு, அவனுடைய கிரியைகள் தடுக்கப்பட்டு, அழிந்துகொண்டிருந்த ஜனங்கள் மீண்டும் நிலைநிறுத்தப்படுவதையும், ஒன்று ஆதாமுக்குள் இழந்துபோன ஆளுகையையும் மற்றொன்று கிறிஸ்து மூலம் சதாக்காலமும் அது மீண்டும் திரும்பக் கொடுத்தலையும் காண்பிக்கிறதுடன், பரலோகத்தில் தேவனுடைய சித்தம் செய்யப்படுவதுபோல் பூமியிலும் அவருடைய சித்தம் செய்யப்படப்போவதையும் குறிக்கிறது. ஒன்று பாவத்தினால் ஏற்பட்ட அழிவையும் இகழ்ச்சியையும் மரணத்தையும் காண்பிக்க, மற்றொன்று நீதியினால் ஏற்படும் கனம், மகிமை, ஜீவன் போன்ற ஆசீர்வாதங்களையும் காண்பிக்கிறது.

பல்வேறு காலங்களில், சூழ்நிலைகளில், பல்வேறு மனிதர்களால் எழுதப்பட்டிருப்பினும், வேதமானது வெறுமனே ஒழுக்க ரீதியான வாழ்க்கையைப் பற்றின கருத்துக்களையும், ஞான உபதேசங்களையும் ஆறுதலான வார்த்தைகளை மட்டும் உடைய புத்தகமாயிராமல் அதைவிட மேலான அதாவது தற்கால பொல்லாத உலகத்திற்கான காரணத்தையும் இவையனைத்தும் உருவாக்கப்படாததற்கு முன்னமே தேவ ஞானத்தால் காணப்பட்ட விடுதலையும், இறுதி பலன்களையும் தேவ ஜனங்கள் நடக்க வேண்டிய வழிகள் பற்றியும், அவர்கள் அவ்வழியை உறுதியாக பற்றிக்கொண்டு நடக்கும்பொருட்டு ஏற்றகாலத்தில் உண்மையாகவே அனுபவிக்கக்கூடிய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அடங்கின, ஏற்றுக்கொள்ளக்கூடிய, தத்துவ ரீதியான ஒன்றுக்கொன்று ஒப்புமையான புத்தகமாயிருக்கிறது.

எல்லா மனிதருடைய ஒரே பிரதிநிதியாக பரிபூரண நிலைமையில் ஆதாம் சோதிக்கப்படும்போது, அவன் வீழ்ச்சி அடைந்ததினால் தற்போதைய அழுகை, வியாதி, மரணம் முதலியன பலன்களாயின. ஆயினும், தேவன்



அவரை வெறுத்துவிடாமல், ஸ்திரீயினிடத்தில் பிறந்த ஒரு மீட்பர் மூலம் அவரை குணமாக்கி, எல்லா வகையிலும் அவரை நிலை நிறுத்தி விருத்தியாக்குவார் என ஆதியாகமம் போதிக்கிறது. (ஆதி.3:15) ஆதாமுக்கும், ஏவாளுக்கும் தேவன் தோல் உடைகளை அணிவித்ததும், ஆபேலினுடைய பலிகள் அங்கீகரிக்கப்பட்டதும், ஈசாக்கு பலியிடப்பட்டதும், முற்பிதாக்கள் செலுத்திய பல்வேறு பலிகளும் நியாயப்பிரமாணத்தின் மூலம் துவக்கப்பட்டு யூத யுகம் முழுவதும் செலுத்தப்பட்ட பலிகளும் எதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறதென்றால், தேவனுடைய நீதிக்கு குறைவு ஏற்படாமல் மனிதனை மரணத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் விடுவிக்க ஒரு மீட்பரின் மரணம் பாவத்தைப் போக்கும் பலியாகவும், அவருடைய நீதி பாவத்தை மூடும் வஸ்திரமாகவும் இருந்ததைக் குறிக்கிறது. தீர்க்கதரிசிகள் தாம் எழுதினவற்றை முழுவதும் அறியக்கூடாதவர்களாயினும் (1 பேதுரு 1:12) பாவங்களை சுமக்க வாயில்லா மிருகங்கள் அல்ல, ஒரு மனிதனே தேவை என்றும் தங்களுடைய தீர்க்கதரிசனப் பார்வையில், யார் மீட்பராகவும், இரட்சகராகவும், அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியைப்போல வருவார் எனவும், “நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது” எனவும், “அவருடைய தழும்புகளால் நாம் குணமாக்கப்படுகிறோம்” எனவும் உரைத்தனர். மேலும், அவர் “அசட்டை பண்ணப்பட்டவரும்” “மனிதரால் புறக்கணிக்கப்பட்டவரும்” “துக்கம் நிறைந்தவராயிருப்பார்” எனவும், “நம் எல்லாருடைய அக்கிரமத்தையும் தேவன் அவர்மேல் விழப்பண்ணினார்” எனவும் உரைத்திருந்தார்கள். (ஏசா. 53:3–6) அவர்களது இரட்சகர் எங்கே பிறப்பார் எனவும் (மீகா 5:2), அவர் எப்பொழுது மரிக்க வேண்டும் என்றும் அவர் மரிப்பது “தமக்காக அல்லவென்றும்” (தானியேல் 9:26) தெரிவித்திருந்தனர். அவர்களுடைய பல்வேறு விசேஷமான குணநலன்களை விவரிக்கும்போது, அவர் நீதியாகும் பாவத்திற்கு விலகினவரும் மரணத்திற்கு அபாத்திரராகவும் (ஏசாயா 53:8, 9, 11) இருந்தார் எனவும், முப்பது வெள்ளிக்காசுகளுக்காக அவர் காட்டிக்கொடுக்கப்படுவார் எனவும் (சகரியா 11:12), அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவாரெனவும் (ஏசாயா 53:12), அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவது இல்லையெனவும் (சங்கீதம் 34:20; யோவான் 19:36), அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டாலும் அவருடைய மாம்சம் அழிவைக் காணாது என்றும், பாதாளத்தில் விடப்படமாட்டார்

எனவும் உரைத்திருந்தனர். (சங்கீதம் 16:10, அப்.2:31)

இவ்வுலகில் பாவங்கள் நீக்கப்பட வேண்டுமானால் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளாலும் ஏற்கனவே இப்படி முன்னுரைக்கப்பட்ட அனைத்தும் நசரேயனாகிய இயேசுவில் நிறைவேறியவைகளையும், அவர் அறிவுப்பூர்வமான காரணத்தின்படி மீட்கும்பொருளாக தம்மை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பதையும், புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கண்டிப்பாகவும், தெளிவாகவும் எளிதான முறையில் பதிவு செய்திருக்கிறார்கள். (ஏசாயா 1:18) இது சம்பந்தமான முழு தேவ திட்டத்தை அவர்கள் அறிவுப்பூர்வமாகவும், உறுதியாகவும் கண்டுபிடித்ததுடன், தங்களின் கருத்தைக் கேட்பவர்களுக்கு விருப்பத்திற்கேற்றார்போல் அல்லது, அவர்களுடைய கருத்திற்கு விரோதமாகவோ எழுதாமல் அவர்களுக்கு வெளிச்சமாக்கப்பட்ட முறையிலே சில முக்கியமான காரணகாரியங்களை உறுதியான நம்பிக்கையுடன் எங்கும் எழுதியுள்ளனர். ரோமர் 5:17,19 பகுதிகளைப் படித்தபின்பு 12ம் அதிகாரத்திற்குச் செல்லவும்.

மோசே பிரமாணத்தில் ஒரு பலியை மாத்திரம் குறிப்பிடாமல் இந்த மகா இரட்சகரின் கீழ் ஜனங்களுடைய பாவங்களை நீக்கி அவர்களை ஆசீர்வதிப்பதையும், அவருடைய வல்லமையும் அதிகாரமும் தன்னைப்போலொத்ததாயினும் அதைவிட மேன்மையானது எனவும் குறிப்பிட்டுள்ளார். (உபா.18:15,19) இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மீட்பர் இஸ்ரவேலரை மாத்திரம் ஆசீர்வதிக்காமல் "பூமியிலுள்ள சகல ஜனங்களையும்" அவர்கள் மூலம் ஆசீர்வதிப்பார். (ஆதி.12:3; 18:18; 22:18; 28:14) மேலும், யூதர்களுடைய தவறான எண்ணத்திற்கு மாறாக இதே கருத்தை தீர்க்கதரிசிகளும் தொடர்ந்து கூறும்போது, மேசியா "புறஜாதிகளையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாயிருக்கிறார்" என்றார். (ஏசா.49:6; லூக்கா 2:32) "புறஜாதிகள் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து வந்து அவரிடத்தில் சேருவார்கள்" என்று எரே.16:19லும் அவருடைய "நாமம் புறஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று மல்கியா1:11லும், "கர்த்தருடைய மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதைக் காணும்" எனவும் கூறுகின்றனர். (ஏசா.40:5 மற்றும் ஏசா.42:1–7லும் வாசித்தறியவும்)



கிறிஸ்துவின் பலியைப் பற்றிய தீர்க்கதரிசன நிறைவேறுதலை உணர்ந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தங்களுக்கு மிகவும் அவசியமாயிருந்தது என புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். மற்ற யூதர்கள் தவறாக நினைத்துக் கொண்டிருப்பதைப்போல் தங்களுடைய சொந்த ஜனங்கள் மாத்திரமே ஆசீர்வாதமடைவர் என அவர்களும் எண்ணிக்கொண்டிருந்தாலும் (அப்.11:1–8) அவர்கள் ஆசீர்வதிக்கப்படும் அதே வேளையில், அவர்களோடும் அவர்கள் மூலமாகவும் பூமியின் குடும்பங்கள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும் என்பதை அறியக்கூடியவர்களானார்கள். மேலும், இந்த ஒரு ஆசீர்வாதம் இஸ்ரவேலுக்கோ உலகத்திற்கோ வரும் முன்பாக, யூதரிலிருந்தும் புறஜாதிகளிலிருந்தும் "ஒரு சிறுமந்தையானது" தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் பெரிய மீட்பரான கிறிஸ்துவின் கனம், மகிமைக்கு உடன்பங்காளிகளாவதற்கு எல்லா வகையிலும் சோதிக்கப்பட்டு தகுதியடைந்தபின்பு, கிறிஸ்துவோடுகூட இணைந்து இஸ்ரவேலையும் மற்ற எல்லா தேசங்களையும் ஆசீர்வதிப்பார்கள் என்றும் உணர்ந்திருந்தனர். (ரோமர் 8:17)

இந்த எழுத்தாளர்கள் தாங்கள் எழுதினவை நியாயப்பிரமாணத்திற்கும் தீர்க்கதரிசிகளின் வசனத்திற்கும் ஒத்திருக்கிறதென்றும், அவர்கள் தெரிவித்த இந்த மாபெரும் தெய்வீகத் திட்டத்தின் மேன்மையானது நாம் நினைப்பதற்கு மிக அதிகமாக "எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த நற்செய்தி" என்றும் அவர்கள் காண்பித்தார்கள்.

மேசியா இஸ்ரவேலரை மாத்திரம் ஆளுகிறவராக அல்ல, மோசேயின் புஸ்தகங்களில் எழுதியிருக்கிறபடி, அவர் அகில உலகின் இராஜாவாக இருக்கிறார் என்ற அதே கருத்தே அனைத்து தீர்க்கதரிசிகளுடைய மையக் கருத்தாக உள்ளது. இராஜ்ஜியத்தைப் பற்றிய நோக்கமே அப்போஸ்தலருடைய உபதேசங்களில் முதன்மையான கருத்தாக இருந்தது. இயேசு, "உம்முடைய இராஜ்ஜியம் வருக" என ஜெபிக்கக் கற்றுக் கொடுத்ததுடன், அதில் பங்கடைய விரும்புகிறவர்கள், முதலாவதாக சத்தியத்திற்காக பாடுபடுவதுடன் அவர்கள் அதற்கு தங்களை பாத்திரர் என நிரூபிக்க வேண்டுமென்றும் போதித்தார்.

வரப்போகிற இப்பேர்ப்பட்ட மகிமையான இராஜ்யத்தைப் பற்றிய நம்பிக்கையே, உண்மையுள்ளவர்களை மக்களை அதற்காக எந்தவொரு உபத்திரவத்தையும், நிந்தனைகளையும், நஷ்டத்தையும், கஷ்டத்தையும் மரணபரியந்தம் சகிக்க உற்சாகப்படுத்துகிறது. முற்றிலும் அடையாள, தீர்க்கதரிசன நடையில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகத்தில் கூட, வெளி.5:12ல் "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்," வல்லமையையும், ஐஸ்வரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறார் என்பதுடன், அவராலே அவருடைய இராஜ்ஜியத்தில் இராஜாக்களும் ஆசாரியர்களுமாகப்போகிற, தகுதியுள்ள, "ஜெயங்கொண்டவர்களும்கூட" இராஜ்ஜியத்தில் பங்காளிகளாவதற்கு அவரைப்போலவே சோதனைகளையும் தடைகளையும் மேற்கொள்ள வேண்டியவர்களாயிருப்பதுடன், அவர்களே உண்மையான கனத்தையும், மகிமையையும் பெறுவார்கள் என்றும் கூறுகிறது. மேலும், அந்த ஆயிரவருட அரசாட்சியில், சாத்தான் கட்டப்பட்ட நிலையிலும் ஆதாமின் பாவமும் சாபமும் நீக்கப்பட்ட நிலையில் முழு உலகமும் அவர்களால் ஆசீர்வாதம் அடைவதுடன், பூமியின் எல்லா ஜாதிகளும் புதிய எருசலேமாகிய பரலோக இராஜ்யத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள் என்றும் அடையாள மொழியில் அப்புத்தகத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

எல்லா அஞ்ஞான புற மதங்களின் கொள்கைகளுக்கு எதிரிடையாகவும், வேறு எந்த உபதேசத்திலும் இல்லாத உபதேசமாகிய மரித்தோரின் உயிர்த்தெழுதலின் மூலமாக மறுஜென்ம வாழ்க்கையைப் பற்றி வேதம் மட்டுமே துவக்கம் முதல் கடைசி வரை போதிக்கிறது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட எல்லா எழுத்தாளர்களும் இரட்சகரின் மேல் வைத்திருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியதுடன், அவர்களில் ஒருவர் மரித்தவர்கள் உயிர்த்தெழுதல் பற்றி "அதிகாலையில்" என கூறி, அப்போது பிரேதக் குழிகளிலுள்ள அனைவரையும் தேவன் கூப்பிடும்போது, அவர்கள் எழுந்து வருவார்கள், அப்போது துன்மார்க்கர்கள் பூமியின்மேல் ஒருபோதும் அரசாளுவதில்லை என்கிறார். சங்.49:14ல் "செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டுகொள்வார்கள்" எனக் கூறுகிறார். மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றி தீர்க்கதரிசிகள் போதித்தார்கள். புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் தங்கள் முழு நம்பிக்கையையும், எதிர்கால



வாழ்க்கை மற்றும் அதின் ஆசீர்வாதத்தின் மேல் அஸ்திவாரப்படுத்தியிருந்தார்கள். அப்போஸ்தலர் பவுல் விளக்குகிறதாவது, "மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே; கிறிஸ்து எழுந்திருக்காவிட்டால் எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்து சாட்சி சொன்னதினாலே தேவனுக்காக பொய்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திருக்காவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. . . . கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். . . . ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." 1 கொரிந்தியர் 15:13–22

ஒரு கடிகாரத்திலிருக்கும் அநேக சக்கரங்களில் மெல்ல நகரும் சில, பார்வைக்கு அவசியமில்லாததாகத் தோன்றினாலும், அவைகள் எவ்வாறு இன்றியமையாததாக உள்ளனவோ, அதேபோல வேதமும் அநேக பகுதிகளை உடையதும் அநேக எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருப்பினும் இது முழுமையானதும், ஒன்றுக்கொன்று இசைவானதாகவும் உள்ளதுடன், அனைத்துப்பகுதிகளும் அத்தியாவசியமாய் உள்ளது. இதில் உள்ள ஒரு சிறு பகுதியும்கூட அவசியமில்லாதது எனக் கூறமுடியாது. மேலும், சில பகுதிகள் முக்கியத்துவம் வாய்ந்ததும், அதிக வல்லமையுடையதுமாயிலும் அனைத்தும் உபயோகமானதும், தேவையானதுமாகும். தற்காலத்தில் "வேத சாஸ்திரிகள்" என்றும் "பேர்பெற்ற ஞானிகளென்றும்" அழைக்கப்படுவோர், பழைய ஏற்பாட்டின் அற்புதங்களை மேலோட்டமாகக் காண்பதுடன் அதை ஏற்றுக்கொண்டாலும் அதை புறக்கணித்து, அவைகள் அனைத்தும் "கிழவிகளின் கட்டுக்கதைகள்" என கருதுவது பிரபலமாகி வருகிறது. அவற்றில் யோனாவும் பெரிய மீனும், நோவாவும் பேழையும், ஏவாளும் சர்ப்பமும், யோசுவாவின் கட்டளைப்படி சூரியன் அதே இடத்தில் நின்றதும், பிலேயாமிடம் கழுதை பேசியதும் அடங்கும். ஏனெனில், வேதத்தில் உள்ள எந்த ஒரு பகுதியும் பின்னிப் பிணைந்திருப்பதையும், ஒன்றுக்கொன்று

ஒற்றுமையாய் இருப்பதையும் கவனியாமல் போனதினால், இந்த அற்புதங்களை மட்டும் தனியாக எடுத்து, அதின் மகத்துவங்களை முழுமையாக அறிந்தோ அல்லது குறைத்தோ மதிப்பிடும்படி செய்கிறார்கள். இந்த பதிவுகள் பொய்யானால், அவைகளை எழுதினவர்கள் பொய்யர்களாகவும் இருப்பதுடன், அவர்களுடைய சாட்சி தெய்வீக வெளிப்பாடு என ஏற்றுக்கொள்வது மிகக் கடினமானதாக இருக்கும். மேற்சொன்ன இந்த அதிசயங்களை வேதத்திலிருந்து நீக்கினால் அதை எழுதின முக்கிய எழுத்தாளர்களின் சாட்சிகளை அவமதிப்பதுடன் இயேசுவின் அற்புதங்களைக்கூட அவ்வாறே எண்ணத்தோன்றும். ஆதாமின் வீழ்ச்சியை, அப்பவுல் ரோமர் 5:17லிலும், அதேபோன்று, ஏவாள் சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டதை 2 கொரிந்தியர் 11:3; 1 தீமோத்தேயு 2:14லிலும் உறுதிபண்ணுகிறார். வெளி.12:9 மற்றும் 20:2லும் இதே விஷயத்தை கர்த்தர் குறிப்பிடுகிறார். இயேசுவுக்கு நிழலாயிருந்த யோசுவா எமோரியரைத் தோற்கடிக்கும்படி, சூரியனை நிற்கச் செய்தது, இயேசு தம்முடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும்போது உபயோகிக்கும் தம்முடைய வல்லமையைக் குறித்துக் காண்பிக்கிறதாயிருக்கிறதென்பதற்கு சந்தேகமில்லை. இதைப்பற்றி 3 தீர்க்கதரிசிகள் உறுதிபண்ணுகிறார்கள். (ஏசா. 28:21; ஆபகூக் 2:1–3, 13, 14; 3:2–11; சகரியா 14:1, 6, 7) பிலேயாமிடம் கழுதை பேசியதை யூதா 11லும், 2 பேதுரு 2:16லும் உறுதிபண்ணப்பட்டுள்ளது. மாபெரும் போதகரான இயேசு, மீனின் வயிற்றிலிருந்த யோனாவையும், நோவா காலத்து ஜலப்பிரளயத்தையும் உறுதிபண்ணுகிறார். (மத்.12:40, 24:38, 39; லூக்கா 17:26; 1 பேதுரு 3:20) ஆனாலும், இந்த அற்புதங்கள் இயேசுவும், அவருடைய சீஷர்களும் செய்த அற்புதங்களுக்கு ஈடானதல்ல. தண்ணீரை திராட்சை ரசமாக்கினதும், வியாதியஸ்தரை சொஸ்தமாக்கியது போன்றவை இருந்தாலும் மரித்தோரை எழுப்பினது எல்லாவற்றிற்கும் மேலான மகா அதிசயமான அற்புதம்.

மேற்கூறிய அற்புதங்கள் – நம்முடைய அனுபவங்களுக்கு சாதாரணமானதாக இல்லாவிடினும் அதற்கொப்பான அதிசயங்கள் நாள்தோறும் நம்முன் சாதாரணமாக நடைபெற்று வந்தாலும், அவைகள் குறிப்பாக நம்மால் கண்டுகொள்ளப்படாமல் இருக்கின்றன. மிருகங்களானாலும், தாவரங்களானாலும் உயிருள்ள பொருட்களின் இனவிருத்தித் தன்மையானது, நம்முடைய அறிவுக்கும் வல்லமைக்கும்



அப்பாற்பட்டதாக இருப்பதால், அது ஒரு அற்புதம். உயிர்க் கொள்கையை நாம் பார்த்தாலும் அதைப்பற்றி புரிந்துகொள்ளவும் அல்லது அதை உண்டாக்கவும் நம்மால் முடியாததாகும். இரு வேறு வகையான விதைகளை அருகருகில் விதைக்கிறோம், ஒரே விதமான காற்றும், நிலமும், மண்ணும் இவ்விரு விதைகளைச் சுற்றி இருந்தாலும், அவைகள் முளைத்து வளரும்பொழுது, அது எவ்வாறு முளைத்தெழும்புகிறது என நம்மாலோ அல்லது தேர்ந்த ஞானிகளால்கூட இந்த அற்புதத்தை விளக்க முடிவதில்லை. மேலும், இவ்விதைகளில் ஒன்று படர்கிற கொடியாயும், ஒன்று நிமிர்ந்து நிற்கிற செடியாயும், உருவத்திலும், பூக்களிலும் அவைகளின் நிறங்களிலும் இரு விதைகளுக்கும் ஒரே விதமான சூழ்நிலைகள் இருந்தும் எல்லா வகையிலும் வித்தியாசப்படுகிறதே. இம்மாதிரியான அதிசயங்களை நாம் சிறுபிள்ளைகளாயிருந்தபோது அதிசயமாய் பார்த்திருந்தாலும், காலம் செல்லச் செல்ல அவைகள் நமக்கு சாதாரணமாகிவிடுவதனால் அற்புதமென்று எண்ணாமற்போகிறோம். ஆனாலும், நம்முடைய குறைந்தபட்ச அறிவுக்கு அப்பாற்பட்ட சக்தியானது வெளிப்படுத்திக்கொண்டே இருப்பதுடன், அதில் சில அதிசயங்கள் வேதத்தில் விசேஷமான நோக்கங்களுக்காக பதிவுசெய்யப்பட்டு, குறிப்பாக தேவனுடைய சர்வ வல்லமையை விளக்குவதற்காகவும், எந்தவொரு தடையையும் மீறி தன்னுடைய சித்தத்தை நிறைவேற்றும் வல்லமை மகாபெரிய சிருஷ்டிகருக்கு உண்டு என்பதைக் காட்டவும், இன்னும் அவர் இவ்வுலகிலிருந்து தீமையை முற்றிலும் நீக்கி நித்திய நீதியின் ஆட்சி நடைபெறும்பொருட்டு மரித்த அனைவரையும் உயிர்த்தெழுப்பும் வாக்குத்தத்தத்தையும் நிறைவேற்ற சக்தியுள்ளவர் என்பதை நிரூபிக்கவுமே இம்மாதிரியான அற்புதங்கள் உதாரணமாக சொல்லப்பட்டுள்ளன.

இங்கு நாம் சற்று நிதானிப்போம். ஒவ்வொரு காரியங்களையும் நம்முடைய அறிவுக்கேற்றாற்போல் சோதித்து, அதின் மூலம் உன்னதமான கடவுள் ஒருவர் உண்டென்றும் அவருள் ஞானம், வல்லமை, நீதி, அன்பு போன்ற குணநலன்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று இசைவாய் அமைந்துள்ளது என்றும் கண்டுபிடித்தோம். அவருடைய திட்டங்களை அறிந்துகொள்ள ஆர்வமும் சக்தியும் உள்ள சிருஷ்டிகளுக்கு ஒரு வெளிப்படுத்தல் இருக்கும் என்று எதிர்பார்ப்பதும் அறிவுப்பூர்வமானதே என்றும் பார்த்தோம். அவ்வெளிப்பாடு வேதமே என்றும் கண்டுபிடித்தோம்.

இப்போது பிரகாசிக்கும் வெளிச்சத்தில் இன்னும் தெளிவாக நாம் காணலாம் என்பதற்கு அவைகள் சரியான ஆதாரங்களாக அமையும்.

### அதி உன்னத சத்தியம்

பிரியமாக வாங்கப்பட்ட உன்னத சத்தியம்.
மனிதனால் அன்றாடம் பயன்படுத்தப்பட்டுவரும் பொதுவான சத்தியம்,
எளிய மனித வாழ்க்கைப் பாதையினுள் வரும் சத்தியம்,
அலட்சியக் காற்றால் நம் வழியிலிருந்து அடித்துச்செல்லப்படும் சத்தியம்.

பிரியமாக நம்மை மேற்கொண்ட உன்னத சத்தியம்.
அது அதிர்ஷ்டத்தாலும் அல்ல, பகல் கனவின் சௌகரியமுமல்ல,
அது வலிமிக்க ஆத்மப் போராட்டங்களிடையே உணரப்பட்ட சத்தியம்,
எதிர்காற்றையும் நீரோட்டத்தையும் எதிர்த்து எதிர்நீச்சல் போட்டு பெற்ற சத்தியம்.

முரண்பாடுகள், குழப்பம், பயம், தயக்கம் மத்தியில்,
தேவனது உன்னத கரம் பலமாய் இறங்கும்பொழுது,
அசையாத அடிமண்ணாகிய இருதயம் உழப்பட்டு,
வெளிச்சத்தைக் காணப்பண்ணும் புதையுண்டுள்ள சத்தியம்.

பொது அங்காடியிலோ, கோதுமை அப்பம், திராட்சை ரசத்திலோ அல்ல,
பொன், மாணிக்கம் போன்ற இரத்தினக் கற்களிலும் அல்ல,
உலகப் இன்பங்களை ருசிக்கும் நடுராத்திரி களியாட்டங்களிலும் அல்ல,
ராஜாக்களின் மகுடங்களின் பிரகாசத்திலும் அல்ல அந்த உன்னத சத்தியம்.

மனித போதனைகளின் மோதல்களில் அல்ல,
திருச்சபைக்கும் உலகிற்கும் நடுவில் விற்பனைப் பொருளாகவுமல்ல,
சத்தியத்தின் உண்மையைப் போக்கிடும் கலைகள், பதர்களின் மத்தியிலும் கண்டுபிடிக்கப்படுமா ?
அவருடைய (சத்தியம்) நிஜம் அவர்கள் அறுவடைக்காக எழும்பும் சத்தியம்,

விகாரம் வைராக்கியம் சகிப்புத் தன்மையின் வெகுமதியே சத்தியம்,
இப்படியாக அவனைத் தேடுவோர்க்கு என்றும் விளைச்சலை அளிக்கும் சத்தியம்,
அவனது (சத்தியம்) பொக்கிஷத்தின் ஜொலிப்புகள்,
மங்காது செல்வங்களாக நீடித்து நிலைக்கும்
இவையன்றோ அதி உன்னத சத்தியம்.



அதை எழுதிய எழுத்தாளர்களையும், அவர்களுடைய நோக்கங்களையும் எந்த வெளிச்சத்தில் அவர்கள் போதித்தார்கள் எனவும் ஆராய்ந்து மிகவும் ஆச்சரியப்பட்டோம். மேலும், எந்த ஞானத்தில் எழுதப்பட்டதோ, அதின் பரிசுத்தமான நோக்கமும் அந்த ஞானத்துடனே இணைந்ததாகவும் சுய லாபத்தைத் தேடும் வஞ்சகர்களால் எழுதப்பட்டவைகளல்ல என்றும் நாம் ஆராய்ந்தோம். அதில் சொல்லப்பட்ட நீதியும் பலனளிக்கும் எண்ணங்களும், பிரமாணங்களும் கண்டிப்பாக மனிதருடையதாயிராமல் கடவுளுடையதாகவும், அது ஊனங்களை மோசம்போக்கும் எண்ணமுடைய ஆசாரியக்கூட்டத்தாரால் எழுதப்பட்டதல்ல எனவும் உணர்ந்தோம். மேலும், இயேசுவை அவருடைய ஈடுபலி, அதன் பலனாக வரப்போகிற அவருடைய மகிமையான இராஜ்ஜியத்தின் அனைவருக்குமான ஆசீர்வாதம் மற்றும் உயிர்த்தெழுதல் இவைகளின் இசைவை பார்த்தோம். அதில் சொல்லப்பட்டிருக்கும் திட்டமானது மகா சிறந்ததும், புரிந்துகொள்ளக்கூடியதும், நாம் விரும்பும் தேவ திட்டமாகவும் இருக்கும் எனவும் புரிந்துகொண்டோம். ஆகையால், இது வெறும் மனிதருடைய ஏற்பாடாக இல்லாததுடன் அது வெளிப்படுத்தப்படும்போது அது மனிதனால் நம்பப்படுவதற்கு மேலாக, உள்ளதுமாய் இருக்கும்.

கொலம்பஸ் ஆர்னிக்கோ ஆற்றை கண்டுபிடித்தபோது, ஒருவன் அது ஒரு தீவு என்று கூறினான். அதற்கு கொலம்பஸ், "இவ்வளவு பெரிய நதி ஒரு தீவில் இராது, இவ்வளவு பெரிய நதி ஒரு கண்டத்தில்தான் ஓடும்" என்றார். அதேபோல இவ்வளவு ஆழமும் வல்லமையும், ஞானமும், திட்டங்களையுமுடைய வேதத்தின் சாட்சியானது, அது மனிதனால் அல்ல, சர்வ வல்லமையுள்ள தேவனே அதின் ஆசிரியர் என்றும், அதில் "சொல்லப்பட்ட திட்டங்களும், வெளிப்பாடுகளும் அவருடையதாகவே இருக்க முடியும்" என்றும் கூறலாம். வேதம் தெய்வீக வெளிப்பாடு எனவும், அது நம்முடைய அறிவிற்கு ஏற்புடையதே எனவும் மேலோட்டமான ஆராய்ச்சியிலேயே கண்டுபிடித்தோம். தேவ ஏற்பாட்டின் பல பகுதிகளை விளக்கும் பின்வருகிற அதிகாரங்கள், வேதத்தை உண்மையாக விரும்பும் ஒவ்வொருவருக்கும் அது ஒரு தெய்வீக வெளிப்பாடு எனவும், அதிலுள்ள தேவ திட்டத்தின் நீளம், அகலம், உயரம், ஆழம் ஆகியவற்றின் மூலம் இதுவரை மங்கலாக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய குணநலன்கள் மகிமையாக வெளியாக்கப்படுவதுடன், ஆயிரமாண்டு அதிகாலையாகிய

## அத்தியாயம் – 4

# தேவ திட்டத்தின் வளர்ச்சியை குறிப்பிட்டு விளக்கும் காலப்பகுதிகளும் யுகங்களும்

முறையான தெளிவான தேவ திட்டம் – உலக சரித்திரத்தை விளக்கும் மூன்று பெரிய காலப்பகுதிகள் – அவைகளின் தனிச்சிறப்பு வாய்ந்த அம்சங்கள் – “பூமி என்றென்றைக்கும் நிலைநிற்கும்” – இனிவரும் உலகம், புதிய வானங்களும் புதிய பூமியும் – மூன்று பெரிய காலப்பகுதிகளின் உட்பிரிவுகள் – முக்கிய அம்சங்கள் கொண்ட தேவ திட்டம் அதன் மூலம் வெளியாக்கப்படுதல் – வெளியாக்கப்பட்டு அறியப்படும் தேவ திட்டம் இசைவும் இணக்கமுள்ளது – சத்திய வசனத்தை நிதானமாக பகுத்தறிதல்

ஒரு பெரிய கட்டடக் கலை நிபுணரின் அல்லது, ஒரு வீடு கட்டுபவரின் இன்னும் முழுமையடையாத அவருடைய வேலையை வைத்து, அவருடைய திறமையையும், ஞானத்தையும் சிலர் அறியாமையினால் தவறாக நிதானிப்பது போலவே, இன்றும் அநேகர், இன்னும் முழுமையடையாத தேவனுடைய கிரியைகளை வைத்து அறியாமையினால் அவரை தவறாக நிதானிக்கிறார்கள். ஆனால், மனிதனுடைய படிப்பினைக்கென்று தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளதும், இறுதியில் அவனுக்கு சாதகமாகவே அமையவிருக்கும் கொடிய தீமையானது, படிப்படியாக, ஆனால், முற்றிலும் நீக்கப்படுவதுடன், அதினால் உண்டான எல்லா கேடான விளைவுகளும் ஒழிக்கப்படும்போது, முழுமைபெற்ற தேவனுடைய கிரியைகள், அவருடைய அளவில்லா ஞானத்தையும், வல்லமையையும் முழு உலகத்தாருக்கும் வெளியாக்குவதுடன் அவருடைய திட்டங்களானது அவரது மகிமை பொருந்திய குணநலன்களோடு ஒத்திருக்கிறது எனவும் காண்பிக்கும்.

தேவன் தமக்கென்று ஒரு திட்டமான உறுதியான நோக்கமுடையவரென்றும், அவருடைய எல்லா நோக்கங்களும் கண்டிப்பாக நிறைவேறும் என்றும் நமக்குச் சொல்லியிருக்கும்போது, நாம் அவருடைய பிள்ளைகளாகவும், அவருடைய திட்டங்களோடு ஒத்திருக்கத்தக்கதாக



அவருடைய திட்டங்கள் எவை என ஜாக்கிரதையாக ஆராய கடமைப்பட்டிருக்கிறோம். எவ்வாறு யேகோவா தேவன் தம்முடைய நோக்கத்தில் உறுதியாக இருக்கிறாரென்பதை ஆணித்தரமாக உரைக்கிறார் என்று பின்வரும் வாக்கியங்களில் கண்டுகொள்ளலாம்: “நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும்” என சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார். “சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான் ?” “நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்கு சமானமில்லை. என் ஆலோசனை நிலை நிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன். அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன். அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன்.” (ஏசாயா 14:24–27; 46:9–11) தேவனுடைய நடவடிக்கைகளானது, மனிதருக்கு சாதாரணமாகவோ அல்லது புரியாத புதிராகவோ தோன்றினாலும், மேற்சொல்லப்பட்ட அவருடைய வார்த்தையின் சாட்சியை விசுவாசிக்கிறவர்கள் அவருடைய மாறாத திட்டமானது, ஒரு பூரணமான முடிவை அடைய, ஆதிமுதல் இன்று வரை முறையாக நிறைவேறி வருகிறதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

அறியாமையாகிய இருளில் குடிகொண்டிருக்கும் மனுக்குலத்தின் பெரும்பான்மையானோர், தெய்வீக சிற்பாசாரியாகிய தேவனுடைய மகிமைபொருந்திய குணாதிசயங்களை அறிந்துகொள்ள வேண்டுமெனில், அவருடைய திட்டங்கள் முழுமையான வளர்ச்சியடையுமட்டும் காத்திருக்க வேண்டியது அவசியமானது. ஆனால், தேவனுடைய பிள்ளைகளுக்கு விசுவாசத்தினாலும், தேவனுடைய வெளிச்சமாகிய வசனத்தினாலும் முன்னுரைக்கப்பட்ட எதிர்கால மகிமைகளையும், கடந்தகாலத்திலும், நிகழ்காலத்திலும் தேவனுடைய இரகசியமான நடவடிக்கைகளைப் பார்ப்பது அவர்களுடைய சிலாக்கியமாயிருக்கிறது. ஆகவே, ஆர்வமுடைய தேவனுடைய புத்திரராகவும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சுதந்தரத்திற்கு சுதந்திரவாளியாகவும் இருக்கும்போது, அவருடைய வசனத்தினாலேயே தரப்பட்டிருக்கிற தேவ திட்டங்களின் நோக்கத்தையும், சிறப்பம்சங்களையும் புரிந்துகொள்வதற்கு பிதாவினுடைய வார்த்தைகளையே நாம் ஆதாரமாக எடுத்துக்கொள்கிறோம். மனிதருக்கான தேவனுடைய திட்டங்களை நாம் அவ்விதமாக கற்றுக்கொள்ளும்போது, மனிதருடைய சிருஷ்டிப்பு தொடங்கி

முடிவில்லா எதிர்கால யுகங்கள் வரும்வரை மனித வரலாற்றை மூன்று பெரிய காலப்பிரிவுகளாக தரப்பட்டுள்ளதை அறியலாம். அப்போஸ்தலனாகிய பேதுருவும், அப்பவுலும் இக்காலப்பகுதிகளை "மூன்று உலகங்கள்" என அழைக்கிறார்கள். இதைக் கீழ்க்காணும் வரைபடத்தில் அறியலாம்.

"உலகங்கள்" என அழைக்கப்படும் நீண்ட காலப்பகுதிகள்




இந்த மூன்று பெரிய காலப்பகுதிகளும் தெய்வீக செயல்பாடுகளை விவரிக்கும் மூன்று வெவ்வேறான வெளிப்படுத்துதல்களாகும். முதலாவதாக மனித சிருஷ்டிப்பு முதல் ஜலப்பிரளயம் வரை உள்ள காலப்பகுதி அல்லது முதல் உலகம். அதாவது அப்போஸ்தலனால் "அப்போதிருந்த உலகம்" என்று அழைக்கப்பட்ட அந்த உலகம் (2 பேதுரு 3:6) தூதர்களின் ஆளுகைக்கு உட்பட்டதாயிருந்தது.

இரண்டாம் பெரிய காலப்பகுதியானது, ஜலப்பிரளயம் முதல் தேவ ராஜ்ஜியம் ஸ்தாபனமாகும் வரை இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய சாத்தானுடைய மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டதாயும், "இப்போதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம்" எனவும் அழைக்கப்படுகிறது. (கலா.1:4; 2 பேதுரு 3:7)

மூன்றாம் உலகமானது, "என்றென்றைக்குமுள்ள உலகம்" (ஏசா.45:17) என்றும் தெய்வீக ஆளுகைக்கு உட்பட்ட தேவனுடைய ராஜ்ஜியமாகவும், "நீதிவாசம் செய்யும் இனிவரும் உலகம்" என்றும் அழைக்கப்படுகிறது. (எபி.2:5; 2 பேதுரு 3:13)

இந்த மூன்று காலப்பகுதிகளில் அல்லது உலகங்களில் தேவ



தூதர்களின் ஆளுகைக்கு உட்பட்ட முதல் உலகமானது விழுந்துபோனது. இரண்டாம் உலகமானது ஆளுகையை தன்வசப்படுத்திய சாத்தானுடைய அதிகாரத்தில் நிச்சயமாகவே "பொல்லாத உலகமாக" இருக்கிறது. ஆனால், மூன்றாம் உலகமோ நீதியை உடையதும், பூமியிலுள்ள முழு குடும்பத்தாருக்கும் ஆசீர்வாதத்தைத் தருகிறதுமாயிருக்கிறது.

இந்த மூன்று "உலகங்களில்" கடைசியான இரண்டு உலகங்கள் பற்றி வேதத்தில் குறிப்பாக சொல்லப்பட்டிருப்பதுடன், அவைகளைப் பற்றிய வசனங்கள் நேர் எதிரிடையானதாக இருக்கின்றன. தற்கால அல்லது இரண்டாம் உலகமானது "இப்போது இருக்கிற பொல்லாத உலகம்" என்று ஏன் அழைக்கப்படுகின்றது என்றால், இதில் முற்றிலும் நன்மையானது ஒன்றுமில்லை என்பதினாலல்ல, மாறாக, இதில் தீமைசெழித்தோங்க அனுமதிக்கப்பட்டிருப்பதாலேயே அப்படி அழைக்கப்படுகிறது. "இப்போதும் அகங்காரிகளை பாக்கியவான்கள் என்கிறோம். தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள். தேவனை பரீட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்கள்." (மல்கியா 3:15) மூன்றாம் உலகம் அல்லது காலப்பகுதியானது "நீதி வாசமாயிருக்கும் வரப்போகிற உலகம்" என ஏன் அழைக்கப்படுகிறதென்றால், அதில் தீமை முற்றிலும் இருக்காது என்பதினால் அல்ல, மாறாக தீமை அங்கு செழித்தோங்காது என்பதினாலேயே அவ்விதம் அழைக்கப்படுகிறது. தீமையை முற்றிலும் அழிப்பது என்பது படிப்படியாய் நடக்கும் வேலை. அதற்கு முதலில் ஆயிர வருடம் தேவைப்படுகிறது. அதன்பின்பு தீமை ஆட்சி செய்யாது, வாழ்வடையாது. துன்மார்க்கர் அப்போது செழிக்கமாட்டார்கள். ஆனால், "நீதிமான் செழிப்பான்."(சங்.72:7) "கீழ்ப்படிதலுள்ளவர்கள் தேசத்தின் நன்மையைப் புசிப்பார்கள்."(ஏசா.1:19) "பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்."(சங்.37:9)

அடுத்த யுகத்திற்கும், தற்போதைய யுகத்திற்கும் ஏறக்குறைய எல்லா விஷயத்திலும் நேர் எதிரான வித்தியாசமுள்ளதைக் காண்கிறோம். தற்கால யுகத்திற்கும், வரப்போகிற யுகத்திற்கும் வித்தியாசம் உண்டு என நம் கர்த்தருடைய வார்த்தைகள் நமக்குக் காட்டுகின்றன. ஏனென்றால் இனிவரும் உலகத்தின் அதிபதியாய் அவர் இருக்கப்போவதால், அதில் நீதியும், சத்தியமும் செழித்தோங்கும். இப்போதிருக்கிற பொல்லாத

உலகத்திற்கு சாத்தான் அதிபதியாயிருப்பதினாலேயே தீமை செழித்தோங்குகிறது. துன்மார்க்கர் திடப்படுகிறார்கள். ஏனெனில், இயேசு "இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனிடத்தில் எனக்கு ஒன்றுமில்லை" (யோவான் 14:30) எனக் கூறினதுபோல, இயேசுவைப் பின்பற்றுகிறவர்களை எதிர்ப்பதும், சோதிக்கிறதும், பயமுறுத்துகிறதுமான காரியங்களில் மாத்திரம் சாத்தான் பிரியப்படுகிறானேயல்லாமல் வேறொன்றிலும் அவர்களிடம் அவனுக்கு விருப்பமானது ஒன்றுமில்லை. (2கொரிந்தியர் 12:7) இதினாலேயே இப்போதிருக்கிற பொல்லாத உலகத்தில், "தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (2 தீமோத்தேயு 3:12) ஆனால், "துன்மார்க்கரோ பச்சையான மரத்தைப்போல் தழைத்தவர்களாயிருக்கிறார்கள்." (சங்.37:35)

"என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என இயேசு சொன்னதினால் இனிவரும் உலகம் அல்லது யுகம் வரும் வரை கிறிஸ்துவின் இராஜ்யம் இப்பூமியின்மேல் ஆளுகை செலுத்தாது. இதன் காரணமாகவே "உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக" என்று நாம் நம்பிக்கையோடு ஜெபிக்க போதிக்கப்படுகிறோம். சாத்தான் இவ்வுலக இருளின் அதிபதியாக இருப்பதினால், "இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் மூடிக்கொண்டிருக்கிறது." அவன் இப்போது கீழ்ப்படியாமையின் பிள்ளைகளுடைய இருதயங்களில் ஆளுகை செய்து, கிரியை செய்து வருகிறான். (எபேசியர் 2:2; 6:12)

மனிதருடைய இரட்சிப்புக்கடுத்த மாபெரும் சிற்பாசாரியான தேவனுடைய திட்டத்தில் ஏதோ ஒரு மிகவும் முக்கிய பாகம் இன்னும் முழுவதும் நிறைவேறாமல் இருந்துகொண்டிருக்க வேண்டும். அப்படியில்லையெனில், புதிய பிரபுவும் (இயேசு) புதிய யுகமும் வெகுகாலத்திற்கு முன்பே ஆரம்பித்திருக்க வேண்டும். ஏன் அந்த புதிய யுகம் இன்னும் குறித்த காலத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறதென்பதும், சாத்தானுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கும் தற்கால தீமையின் ஆட்சியானது பின் கிறிஸ்துவின் கீழ் நீதியின் அரசாட்சியாக மாறும் விதம் எவ்வாறென்பதும், இதன் பின்பு முழுவதுமாக எடுத்துரைக்கப்படும் ஆர்வத்தைத் தூண்டும் முக்கியமான கருத்துக்களாகும். ஆனால்,



இப்போது சாத்தானின் கீழ் உள்ள இவ்வுலக இராஜ்யங்களானது ஏற்ற சமயத்தில் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்யங்களாக மாறும் என்பதை மட்டும் இந்த இடத்தில் சொல்வது போதுமானது. (வெளி.11:15) இந்த மாறுதல் மகா உபத்திரவக் காலத்தில் நடக்கும் என இவ்வசனப்பகுதியின் தொடர் வாக்கியங்கள் காண்பிக்கின்றன. இது குறித்து இயேசு சொல்லும்போது, "பலவானை முந்திக்கட்டினாலொழிய ஒருவனும் பலவானுடைய வீட்டிற்குள் புகுந்து அவன் உடைமைகளை கொள்ளையிடக்கூடாது. கட்டினானேயாகில் அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்" என்றார். (மாற்கு 3:22–27) இவ்விதமாக கிறிஸ்துவின் நீதியும் சமாதானமும் நிறைந்த இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக சாத்தான் முதலில் கட்டப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு, கிரியை செய்யாதபடிக்கு தடுக்கப்பட வேண்டுமென்று நாம் போதிக்கப்படுகிறோம். சாத்தான் கட்டப்படுதலே புதிய யுகத்தின் முதல் வேலையாக காண்பிக்கப்படுகிறது. (வெளி.20:2)

இந்த எல்லா உலகங்களும் யுகங்களும் இப்பூமிக்கே அடுத்தது என்பதையும் யுகங்களும் காலப்பகுதிகளும் மாறி மாறி கடந்தபோதிலும் "பூமியோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறது" (பிரசங்கி 1:4) என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தைக் கருத்திற்கொண்டு அப்பேதுரு இக்காலப்பகுதிகளை தனித்தனியான வானங்களும் பூமியும் என்று அழைக்கிறார். இங்கு வானங்கள் (Heaven) என்ற வார்த்தையானது மேலான அல்லது ஆவிக்குரிய ஆட்சி அதிகாரங்களையும், "பூமி" என்ற வார்த்தையானது மனிதனுடைய அரசாட்சி மற்றும் சமூக அமைப்புகளையும் அடையாளப்படுத்துகிறது. அவ்வகையில் அப்போதிருந்த முதல் வானங்களும் பூமியும் அல்லது அப்போதிருந்த ஒழுங்கு முறைகளும், அமைப்புகளும் தங்கள் நோக்கம் நிறைவேறினவுடன் ஜலப்பிரளயத்தில் முடிவடைந்தன. ஆனால், இயற்கையான வானங்களும் பூமியும் ஒழிந்து போகாமல் அப்படியே நிலைத்திருக்கின்றன. அதேபோல இப்போதிருக்கிற வானங்களும், பூமியும், "அக்கினி" "உருகுதல்" என்ற அடையாளங்களால் குறிப்பிடப்பட்ட குழப்பம், உபத்திரவம், நாசம் முதலிய பேரிரைச்சலோடு அகன்றுபோகும். பலவானாகிய சாத்தான் கட்டப்படும்போது தன்னுடைய வல்லமையை நிலைநிறுத்தப் போராடுவான். இப்போதிருக்கிற அரசாங்க,


சமுதாய, ஒழுங்கு முறைகளும் அமைப்புகளும் இயற்கையான வானங்களும் பூமியும் அல்ல) ஒழிந்துபோகும். தற்போதைய வானங்களானது (ஆவிக்குரிய அரசாட்சிமுறை) புதிய வானங்களுக்கு அதாவது, கிறிஸ்துவின் ஆவிக்குரிய அதிகாரத்திற்கு வழிகொடுக்க வேண்டும். தற்போதைய பூமி (சாத்தானுடைய அதிகாரத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட மனித அமைப்புகள்) கர்த்தருடைய நாளின் ஆரம்பத்தில் "சூளையைப்போல எரிகிற அக்கினியில்" உருகி கரைந்துபோக வேண்டும். (மல்கியா 4:1) அதைத் தொடர்ந்து இப்பூமியின் புதிய அதிபதியாகிய கிறிஸ்துவுக்கு ஏற்றாற்போல் ஒழுங்குபடுத்தப்பட்ட சமூக அமைப்புகள் (புதிய பூமி) உண்டாகும். தற்போதைய அமைப்புகள் புதிய மற்றும் சிறந்த ராஜ்யத்திற்கு வழிகொடுக்கும்போது, நீதியும் சமாதானமும், அன்பும் மனுஷருக்குள்ளே ஆளுகை செய்யும். அந்த ராஜ்யத்தின் அஸ்திவாரம் கண்டிப்பான நீதி நியாயத்தின்மேல் இருக்கும்.

"இனிவரும் உலகம்" என்று பவுல் அப்போஸ்தலன் அழைத்த அந்த யுகத்தைப் பற்றிய தரிசனம் அவருக்குக் காண்பிக்கப்பட்டது. அதுபற்றி அவர் கூறும்போது, "மூன்றாம் வானம்" வரைக்கும் அதாவது தற்கால ஆவிக்குரிய அரசாட்சி ஒழிந்து, பின்னர், முற்றிலும் புதிய நிலைமைகள் உள்ள "புதிய வானங்கள்" வரைக்கும் எடுக்கப்பட்டார். மேலும், அங்கு அவர் நேரிடையாகவோ அல்லது மன ரீதியாகவோ அல்லது இருவகையிலோ தான் எவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்டார் என அவராலேயே விவரிக்க முடியாத அளவுக்கு அந்த தரிசனம் நிஜம்போல இருந்தது. கிறிஸ்துவின் ஆவிக்குரிய அரசாட்சியின் கீழ் உள்ள எல்லாக் காரியங்களையும் அவர் கண்டார். ஆனால், அவைகளை அவர் மற்றவர்களுக்கு வெளிப்படுத்த இடம் தரப்படவில்லை. (2 கொரிந்தியர் 12:2-4) இவர் பார்த்த இந்த தரிசனத்தின் காரியங்களையே பின்பு அப்போஸ்தலன் பார்த்து அவைகளை சபை ஏற்ற சமயத்தில் புரிந்துகொள்ளும்படிக்கு அடையாளங்கள் மூலம் (Symbols) வெளிப்படுத்த அவர் அனுமதிக்கப்பட்டார். பத்மு தீவில் நமது கர்த்தரால் யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட தரிசனத்தில், இக்கிறிஸ்தவ யுகம் முடிவும், சாத்தான் கட்டப்படும் தீர்க்கதரிசனங்களும், கிறிஸ்துவின் ஆளுகையும், பின்பு புதிய வானங்களும், புதிய பூமியும் ஸ்தாபிக்கப்பட்டு முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்துபோகும் தரிசனங்களும் அவருக்குக் காண்பிக்கப்பட்டன.



(வெளி.21:1)

இப்போது நாம் இந்த பெரிய காலப் பகுதிகளின் உட்பிரிவுகளை, கீழ்க்காணும் வரைபடத்தின் மூலம் கவனிக்கலாம்.




இந்த பெரிய காலப்பிரிவுகளில் (உலகங்களில்) முதல் உலகமானது உட்பிரிவுகளாக பிரிக்கப்படவில்லை. ஆதாமின் வீழ்ச்சி முதல் ஜலப்பிரளயம் வரை மனிதருடன் தேவனுடைய தொடர்பானது அக்கால முழுவதிலும் மாறாததாயிருந்தது. தேவன் தம்முடைய பிரமாணத்தை மனிதருடைய சுபாவத்திலேயே (உள்ளத்திலேயே) எழுதியிருந்தார். ஆனால், மனிதன் பாவம் செய்தபின்பு அதாவது கீழான தீமை வழியில் தொடர்ந்து நடந்து, அதன் மூலம் அவன் தன்னுடைய பெலவீனத்தை உணர்ந்து தேவனுடைய ஞானத்தினால் கட்டளையிடப்பட்ட பூரணமான கீழ்ப்படிதலை வெளிப்படுத்தும்பொருட்டு, அவனுடைய வழியிலேயே குறிப்பிடத்தக்க அளவு நடக்க அனுமதிக்கப்பட்டான். அந்த யுகமானது நீதிமானாயிருந்த நோவா மற்றும் அவருடைய குடும்பம் தவிர மற்ற அனைவரும் ஜலப்பிரளயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதோடு முடிவடைந்தது. அவ்வாறாக இந்த முதல் யுகமானது பாவத்தின் நாசகரமான விளைவுகளை வெளிப்படுத்தினது மட்டுமல்லாது, பாவ வழியானது ஒரு பெரிய அழிவிற்கும் துன்பத்திற்கும் ஆன கீழான நிலைமைக்கு அழைத்துச் செல்லும் போக்கையும் காண்பித்ததுடன், மனிதன் இழந்துபோன தம்முடைய ஆதி நிலைமையை மீண்டும் அடைவதற்கு யேகோவா தேவனின் தலையீடு அவசியம் என்பதையும் நிரூபித்தது.

இரண்டாம் காலப்பகுதி அல்லது "இப்போதிருக்கிற உலகமானது" மூன்று காலப்பகுதிகளை உள்ளடக்கியதுடன் ஒவ்வொன்றும் தீமையை தகர்த்தெறியும் தேவனுடைய திட்டத்தின் படிகளாக இருக்கிறது. ஒவ்வொரு படியும் தன்னுடைய முந்தைய படிகளைவிட மேன்மையானதும் தேவ

திட்டத்தை முன்னேறச் செய்து அதை முழுமையை நோக்கிக்கொண்டு செல்கிறதாயிருக்கிறது.

மூன்றாம் பெரிய காலப்பகுதி அல்லது "இனி வரும் உலகமானது" கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தொடங்கி ஆயிர வருட யுகம் அல்லது திரும்பக்கொடுத்தலின் காலங்களை உள்ளடக்கியதாகவும் இருப்பதுடன், மேலும் அதைத் தொடர்ந்து முழுவதும் விவரிக்கப்படாத "முடிவில்லா யுகங்களையும்" உள்ளடக்கியதாயிருக்கிறது. தற்கால வெளிப்பாடுகள் பாவத்திலிருந்து மனிதனுடைய விடுதலையைப் பற்றியதே தவிர, இனி வரும் நித்திய மகிமையைப் பற்றியவைகள் அல்ல.

இப்போதிருக்கிற உலகத்தின் (இரண்டாம் உலகம்) முதல் பிரிவு அல்லது யுகத்தை நாம் முற்பிதாக்கள் யுகம் என்று அழைக்கிறோம். ஏனெனில், தேவனுடைய தொடர்பும் ஆதரவும் ஒரு சில தனி மனிதர்களிடம் மாத்திரமே இருந்ததுடன் மற்ற முழு மனுக்குலமும் தள்ளப்பட்ட நிலையில் இருந்தது. அவ்விதமான தேவனுடைய ஆதரவு பெற்றவர்களில் நோவா, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு போன்றவர்கள் ஆவர். இவர்களில் ஒவ்வொருவரும் தேவனுடைய தயை பெற்றவர்களாயிருந்தார்கள். யாக்கோபுடைய மரணத்தோடு அந்த யுகம் அல்லது அந்த யுகத்தின் தேவனுடைய தொடர்பு முறையானது முடிவடைந்தது. யாக்கோபு மரித்தவுடன் அவருடைய சந்ததியார், "இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரத்தார்" என அழைக்கப்பட்டதுடன் தேவனுடைய "விசேஷித்த ஜனம்" என்றும் அவரால் அங்கீகரிக்கப்பட்டார்கள். ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக அவர்கள் உலகின் மற்ற ஜனங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு சில அடையாளமான பலிகளினாலே அவர்கள் முன்னடையாளமான "பரிசுத்த ஜாதியாயிருந்ததினால்," சில விசேஷித்த ஆசீர்வாதங்களை அனுபவிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். தெய்வீகத் திட்டத்தில் யாக்கோபின் மரணத்திலிருந்து துவங்கி, கிறிஸ்துவின் மரணத்தோடு முடியும் இந்தப் பகுதியை, யூத யுகம் அல்லது நியாயப்பிரமாண யுகம் என்று கூறுகிறோம். இந்தக் காலத்தின்போது, தேவன் அந்த தேசத்தை விசேஷ ஆசீர்வாதங்களால் ஆசீர்வதித்தார். தம்முடைய பிரமாணங்களை அவர்களுக்குத் தந்து, அவர்களோடு விசேஷ உடன்படிக்கை



செய்துகொண்டார். இஸ்ரயேலருக்கு ராஜனாகவும், தலைவராகவும் விளங்கின யேகோவா தேவனின் பிரசன்னம், ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்து ஷெக்கினா ஒளியின் மகிமையில் வெளிப்பட்டு, அவர்களோடு வாசம் பண்ணியது. அவர் தீர்க்கதரிசிகளையும் கடைசியாக தம் குமாரனையும் அவர்களிடத்தில் அனுப்பினார். இயேசு அவர்கள் மத்தியில் அற்புதங்களைச் செய்து, உபதேசமும் பண்ணினார். இஸ்ரயேலைச் சுற்றிலுமுள்ள தேசங்களுக்கு தாமும் செல்லவில்லை, தம் சீஷர்களையும் அனுப்பவில்லை. சீஷர்களை அவர் அனுப்பும்போது, "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" என்றார். (மத்.10:5,6) மீண்டும் அவர் கூறுகிறார்: "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள் என்றார் (மத்.10:5, 6) மீண்டும் அவர் கூறுகிறார்: "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றபடியல்ல." (மத்.15:24) இந்த தேசத்துக்கான தயவு, அவர்கள் இயேசுவை மறுதலித்து, சிலுவையில் அறைந்தவுடன் முடிவுபெற்றது என்பது இயேசு கூறிய வார்த்தைகளால் நிரூபிக்கப்படுகிறது. அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன், "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்" என்றார். (மத்.23:38)

இயேசுவின் மரணத்திலிருந்து ஒரு புது யுகம் ஆரம்பமாகிறது. அதை கிறிஸ்தவ யுகம் அல்லது சுவிசேஷ யுகம் என்று அழைக்கிறோம். அதிலிருந்து துவங்கி, நீதிமானாகுதலுக்குரிய நற்செய்தி, யூதர்களுக்கு மட்டுமல்ல, மற்ற அனைத்து தேசங்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். ஏனெனில் இயேசு கிறிஸ்து, தேவ கிருபையினால் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். சுவிசேஷ யுகத்தின்போதும் ஒரு வகுப்பார் விசேஷ தயவினைப்பெற அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு விசேஷமான வாக்குத்தத்தங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் இயேசு கிறிஸ்துவை மீட்பராகவும், கர்த்தராகவும் விசுவாசத்தினாலே ஏற்றுக்கொண்டு, அவரது அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து வரும்படிக்கு நடக்கிறவர்கள். ஏறத்தாழ ஆயிரத்து தொள்ளாயிரம் வருடங்களாக இந்த சுவிசேஷம் உலகிலுள்ள ஒவ்வொரு ஜாதிகளிடத்திற்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. அறிவிக்கப்பட்ட இந்த

சுவிசேஷத்தினால் தேசங்கள் மனமாற்றமடையவில்லை. இந்த சுவிசேஷ யுகத்தில் அவ்வாறு மனமாற்றமடையும்படி தேவ திட்டம் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், இயேசு முன்னறிவித்திருக்கிறபடி அங்கொன்றும், இங்கொன்றுமாக ஒரு சிலர் மட்டுமே “சிறு மந்தை” மந்தையாராக தெரிவு செய்யப்படுகிறார்கள். (லூக்கா 12:32) இந்த யுகத்தைத் தொடர்ந்து வரவிருக்கின்ற தேவ ராஜ்யத்தில் பரலோகத் தந்தை இந்த சிறு மந்தைக்கு தம் ராஜ்யத்தைக் கொடுக்க பிரியமாயிருக்கிறார்.

இந்த யுகத்தோடு, “தற்கால தீமை நிறைந்த உலகம்” முடிவடைகிறது. தேவன் இவ்வாறாக தீமை வளர்ந்து, பெருகி, ஆட்சி செய்யும்படி அனுமதித்திருக்கிறார் என்பதை நாம் நினைவில் நிறுத்த வேண்டும். இந்தக் காலத்தில் தேவன் நிர்ணயித்தபடியே காரியங்கள் நடைபெறுவதாகத் தோன்றினாலும், அவரது நிச்சயிக்கப்பட்ட திட்டத்தின்படியே, அவரது ஆழமான ஒழுங்குகளும், ஏற்பாடுகளும் ஸ்திரமாக முன்னேறி வருகிறது என்பதையும், அவர் ஏற்படுத்தினபடியே ஏற்ற காலங்களில் அல்லது யுகங்களில் நிறைவேறி வருவதையும் நாம் அறிகிறோம். இந்த யுக முடிவின்போது, அடுத்த யுகமாகிய ஆயிரமாண்டு ஆட்சி உதயமாகும் வேளையில், சாத்தானின் அதிகாரம், வல்லமை பிடுங்கப்பட்டு கட்டப்படுவான். அவ்வேளையில் இனி வரவிருக்கின்ற “நீதி வாசமாயிருக்கும் புதிய உலகம்” ஆரம்பமாகி, கிறிஸ்துவின் இராஜ்யம் ஆரம்பமாவதற்கான ஆயத்த வேலைகள் துவங்கும்.

ஆயிர வருடம் (Millenium) என்றழைக்கப்படும் கிறிஸ்துவின் ஆயிரமாண்டுக் கால ஆட்சி, வெளிப்படுத்தின விசேஷம் 20:4ல் கூறப்பட்டுள்ளது. இனி வரவிருக்கின்ற உலகத்தில் (மூன்றாம் உலகம்) முதல் யுகமாக இது இருக்கின்றது. இந்த ஆயிரமாண்டு அரசாட்சியின்போது, ஆதாமுக்குள் இழந்துபோன அனைத்தையும் மீண்டும் திரும்பக் கொடுக்கும் பணி நடைபெறும். (அப்போஸ்தலர் 3:19-21) இந்த ஆயிரமாண்டு முடிவடைவதற்கு முன்பாக, அனைவருடைய கண்ணீர்களும் துடைக்கப்பட்டிருக்கும். ஆயிரமாண்டு ஆட்சி முடிவடைந்த பின்னர், வரவிருக்கின்ற யுகங்களில் ஆசீர்வாதம் பூரணமாய் நிறைந்திருக்கும். “இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின.” (வெளி.21:4)



இதற்குப் பிற்பாடு நடைபெறும் சம்பவங்களைக் குறித்து தேவனுடைய வெளிப்படுத்துதல்கள் வேதாகமத்தில் குறிப்பிட்டுக் காண்பிக்கும்படி இல்லாததால், இத்துடன் நாம் நிறுத்திக்கொள்கிறோம்.

யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டத்தின் வெளித்தோற்றத்தை மட்டுமே நாம் இங்கு பார்த்திருக்கிறோம். நாம் எவ்வளவு ஆழமாக ஆராய்ந்து பார்க்கிறோமோ, அவ்வளவாக அதின் பரிபூரணமான இசைவையும், அழகையும், ஒழுங்கையும் காண முடியும். தேவனுடைய தெய்வீகத் திட்டம், பூரணமாக முழுமையடைவதற்கு ஒவ்வொரு யுகத்திற்குமென்று நியமிக்கப்பட்ட நோக்கங்கள், “தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற”(எபேசியர் 1:12) தெய்வீக சிற்பாசாரியரால் மேன்மையாக நிறைவேறும் பொருட்டு, ஒரு யுகத்திற்கு யுகம் படிப்படியாக விரிந்து வளர்ச்சி பெறுகிறது. இப்பெரிய யுகங்களில், அதனதன் காலத்தில் நடைபெறவேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பதற்கு, ஒரு மணிநேரம் கூடாமலும், குறையாமலும், தேவன் ஆதியில் தீர்மானித்திருந்த கால அளவின்படி நடைபெற்று வருகிறது. சிறு சிறு தடைகள்கூட ஏற்படா வண்ணம் நேர்த்தியாக அவரது வல்லமையும், ஞானமும் செயல்படுத்தும் தேவனுடைய வளம் வற்றாத ஊற்றாக இருந்தாலும், தம்முடைய நோக்கங்களின்படி காலத்தையும், அதன் காரியங்களையும் ஞானமாய் செய்பவர், தீங்கிழைக்கும் எந்த வல்லமையும் தேவனுடைய தீர்மானத்திற்கு விரோதமாக செயல்படவோ, அது நிறைவேறுவதற்கு ஊறுதாமதம் செய்யவோ முடியாது. அனைத்துக் காரியங்களும் – அது நன்மையானாலும், தீமையானாலும், தெய்வீக பராமரிப்பிலும், அவரது அனுமதியின் பேரிலுமே, அவருடைய சித்தம் நிறைவேறுவதற்கு ஏதுவாக நடந்து வருகிறது.

இயந்திரத்தின் மிக நுட்பமான அமைப்பையோ, அதன் உபயோகத்தையோ ஒரு சிறு குழந்தை புரிந்துகொள்ளாது. அது போலவே தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின் சிறப்புத் தன்மைகளும், அதன் நோக்கங்களும் போதிக்கப்பட்டபோதிலும், சீர்திருந்தாத மனதிற்கு ஒழுங்கற்றதாயும், குழப்பமானதாயும், தோல்வியை சந்திக்கும் நடவடிக்கைபோலும் தோன்றுகிறது. கற்பிக்கப்படாத, மனப்பக்குவம் அடையாத மனதிற்கு, இயந்திரத்தின் சக்கரங்களும், அதன் சுழற்சியும்,

புரிந்துகொள்ளமுடியாத புதிராக, குழப்பமாக தோன்றும். ஆனால், அனைத்தையும் சோதித்துப் பார்க்கும் முதிர்ச்சியடைந்த மனதிற்கு குழப்பமாய் தோற்றமளித்தவைகள், இசைவாயும், அழகாயும் நன்மையையே தரக்கூடியதாயும் தோன்றுகிறது. குழந்தை இயந்திரத்தின் இயக்கத்தினைப் புரிந்துகொள்வதற்கு முன்பும், அதற்குப் பிறகும், அதன் கிரியைகள் உண்மையாகவே பயனளிப்பதாக இருந்தது. அவ்வாறே தேவனுடைய திட்டமும், பல யுகங்களாக ஆதிகாலம்தொட்டு இன்றைய நாள் வரை, தொடர்ந்து வெற்றிகரமாக இயங்கிக்கொண்டே வருகையில், மனிதனும் ஒழுக்கங்களை அடைந்து வருகிறான். இது தேவனுடைய கருகலான செயல்களைப் புரிந்துகொள்ளவும், அதன் ஆசீர்வாதமான பயன்களை அனுபவிக்கவும் உதவுகிறது.

தெய்வீகத் திட்டத்தினை நாம் படிக்க படிக்க இந்த யுகங்களையும், ஒவ்வொரு யுகத்தின் நோக்கத்தினையும், சிறப்பியல்புகளையும் நாம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஏனென்றால், அவைகளில் ஒரு யுகத்தில் மட்டும் தேவ திட்டத்தினை முழுமையாக கண்டறிய முடியாது. மாறாக, அனைத்து யுகங்களிலும் உள்ள காரியங்களை அநேக வளையங்கள் இணைந்து சங்கிலி ஆகிறதுபோல மொத்தமாய் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தேவ திட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நடைபெறும் வித்தியாசமான சம்பவங்களை கவனிப்பதினால், முழு ஏற்பாட்டின் சரியான கோட்பாடுகளை அறிந்து, இவ்விதமாய் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்தறியும் ஆற்றல் பெற்றவர்களாகிறோம்.

ஒரு யுகத்திற்குச் சம்பந்தப்பட்ட தேவ வசனத்தை வேறொரு யுகத்திற்கு பொருத்திப் பார்த்தல் கூடாது. ஏனெனில், ஒரு யுகத்திற்கென்று சொல்லப்பட்ட விஷயங்கள், எப்பொழுதும் மற்றொரு யுகத்திற்குப் பொருந்தாது. உதாரணமாக, தற்காலம் "பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கிறதென்றும்..." அல்லது "ஒருவன் தன் அயலானை நோக்கி, கர்த்தரை அறிந்துகொள் என்று போதிக்க வேண்டியதில்லை" (ஏசாயா 11:9; எரேமியா 31:34) என்றும், கூறுவது தவறாகும். நம் கர்த்தர் தம் இரண்டாம் வருகையில் மீண்டும் வந்து, தம் இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வரைக்கும் மேற்கண்ட வசனங்களில் கூறப்பட்டவைகள் நிறைவேறாது. ஏனெனில், இந்த யுகம் முழுவதும்,



வஞ்சிக்கின்ற தீமையான காரியங்கள் ஏராளமாய் இருந்து வந்திருக்கின்றன. இந்த யுக முடிவிலும் அப்படிப்பட்டவைகள் இருக்கும் என்று நாம் கற்பிக்கப்பட்டிருக்கிறோம். "கடைசி நாட்களில்... பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களுமாயிருந்து, மென்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்." (2 தீமோத்தேயு 3:1, 13) ஆயிர வருட அரசாட்சியில் மேசியாவின் ஆட்சி நடைபெறுவதன் பயனாக, ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல், அறிவும் நீதியும் பூமியை நிறைத்திருக்கும்.

தேவ இராஜ்ஜியம் தற்போது ஸ்தாபிக்கப்பட்டு, பூமியின்மேல் அரசாட்சி செய்கிறதென்றும், தேசங்களுக்குள்ளே அவரது சித்தம் செய்யப்படுகிறது என்றும் அநேகர் கற்பனை செய்வது, சாதாரணமாக எண்ணப்பட்டாலும், அது தவறாகும். இது சத்தியத்திற்கு விரோதமானது என்பது வெளியரங்கமாக விளங்குகிறது. ஜனங்களது அறிவு பெருகுவதற்கு எவ்வளவு தூரம் அனுமதிக்கப்படுகிறதோ, அவ்வளவாக இவ்வுலக இராஜ்ஜியங்கள் அநீதியினாலும், வஞ்சகத்தினாலும் அடக்கு முறைகளினாலும் வளர்ந்தோங்க ஆதரவு அளிக்கப்படுகிறது. இப்பொழுது இருக்கிற "இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தான்" நீக்கப்பட்டு, அவனது அதிகாரத்திலிருக்கிற இந்த இராஜ்ஜியங்கள் நமது கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்கும் உரியதாக மாற வேண்டும். அப்பொழுது அவர் தமது மாபெரும் வல்லமையைக் கொண்டு ஆளுகை செய்வார்.

இவ்வாறு தேவனால் அருளப்பட்ட வெளிச்சத்தைக் கொண்டு, தற்போது விசுவாச வீட்டாருக்கு தெரியப்பண்ணும்பொருட்டு, ஆதிகாலமுதற்கொண்டு தற்காலத்திலும், இனி வருங்காலத்திலும் நடைபெறவிருக்கின்ற தேவனுடைய மகத்தான கிரியைகளை குறிப்பாய் காண்பிக்கிற அவரது திட்டங்களையும், விதிகளையும் நாம் அறிந்துகொள்கிறோம்.

**அவர் தமது தெய்வீகத் திட்டத்தை எளிமையாக விளக்கி [illegible]**

"தேவன் தமது அதிசயிக்கத்தக்க திட்டத்தினை,
நிறைவேற்ற மறைவான வழியில் செயலாற்றுகிறார்.

அவர் தம் காலடிகளை சமுத்திரத்தில் பதித்து,
புயலின்மேல் அமர்ந்து பயணிக்கிறார்.

"ஆழமான சுரங்கங்களுக்குள் அறியக்கூடாத வழியில்
எப்பொழுதும் தோல்வியைக் காணாத நுட்பத்துடன்,
தம் பிரகாசமுள்ள திட்டங்களை பொக்கிஷமாக்கி
தன்னிகரற்ற ராஜவாக தம் சித்தத்தை நடப்பிக்கிறார்.

"பயபக்தியுள்ள பரிசுத்தவான்களே புத்துணர்ச்சி அடையுங்கள்,
பேரச்சத்தை விளைவிக்கும் மேகங்கள்
மாபெரும் இரக்கத்தினால் விலக்கப்படும்,
உங்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகும்.

"கர்த்தரை உங்கள் அற்ப நிதானிப்புகளால் நிதானிக்காமல்,
அவரது கிருபையின்மேல் நம்பிக்கை வையுங்கள்.
அவரது கடினமான வழிநடத்துதலின் பின்னணியில்
அவர்தம் புன்சிரிப்பை மறைத்திருக்கிறார்.

"அவரது தீர்மானங்கள் மறைக்கப்படாதிருந்து,
விரைவில் கனிகொடுக்கும்.
தளிர்க்கத் தொடங்கும்போது கசப்பாயிருந்தாலும்,
பூ பூக்கும்போது நறுமணம் வீசும்.

"குருட்டு அவிசுவாசம் நிச்சயம் தவறும் பிறப்பிக்கும்,
அவனது கிரியைகளை ஆராய்வது வீண்.
தேவனை தன் சொந்த ஆலோசனைக்காரராக்கினவனுக்கு
அனைத்தையும் அவர் எளிமையாக விளங்கப்பண்ணுவார்."

* * * *

"எனக்கு முன்பாக இருக்கின்ற வழிகளை என்னால் அறிய முடியவில்லை,
மகிழ்ச்சியையோ அல்லது துக்கங்களையோ அது கொண்டுவரக்கூடும்;
வரும்காலத்தில் எத்தனைய மேகங்கள் இடைமறிக்குமோ
வழி ஓரத்தில் எந்த மலர்கள் துள்ளி மலருமோ.
ஆனாலும், என் அருகில் பயணிக்கிற ஒருவர் இருக்கிறார்
செழுமையோ, துயரமோ எது அசைத்தாலும்
'நான் செல்லும் வழியை அவர் அறிவார்'
இதுவே என் ஆறுதலும் ஊக்கமுமாம்."

♦ ♦ ♦ ♦

## அத்தியாயம் – 5

**“யுகங்களுக்கும் தலைமுறைதலைமுறைக்கும் மறைக்கப்பட்டு இப்போது பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம்” – கொலோ.1:25**

முதலாம் வாக்குத்தத்தத்தின் மங்கலான வெளிச்சம் – ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் – நிறைவேறாத நம்பிக்கை – பெந்தெகொஸ்தே நாளில் வெளிப்படத் தொடங்கிய இரகசியம் – அந்த இரகசியம் என்ன? – ஏன் அதிக வருடம் இரகசியமாயிருந்தது? – உலகத்திற்கு இன்னும் அது இரகசியமாகவே உள்ளது – ஏற்றகாலத்தில் எல்லாருக்கும் வெளிப்படுத்தப்பட வேண்டியது – எப்போது அந்த இரகசியம் முடிவுபெறும்?

மனுக்குலமானது தீமையின் கீழ் இருந்து அதன் பலனை அறியாமலிருக்கும் வேளையில், தேவன் வரப்போகிற மீட்பர் மூலம் அவர்களை விடுவித்து ஆசீர்வதிக்கப்போகும் தம்முடைய திட்டத்தைத் தொடர்ந்து தெரிவித்து வந்தார். ஆனால், யார் அந்த இரட்சகர் என்பது நான்காயிரம் வருடங்களாக இரகசியமானதாக இருந்து, கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அதாவது கிறிஸ்தவ அல்லது சுவிசேஷ யுகத்தின் ஆரம்பத்தில் தான் அது தெளிவாக வெளியாக்கப்பட ஆரம்பித்தது.

நமது ஆதிப்பெற்றோர் ஜீவனையும் ஏதேனின் மகிழ்ச்சியையும் இழந்து, பாவத்தின் நீதியான தீர்ப்பை அடைந்து சஞ்சலத்தால் நிறைந்து, எந்தவித நம்பிக்கையுமின்றி இருந்த காலத்தை நோக்கிப் பார்க்கும்போது, ஸ்திரீயின் வித்தானது சர்ப்பத்தின் தலையை நசுக்குமென்ற தெளிவற்ற வார்த்தையைவிட வேறெந்த நம்பிக்கையும் அவர்களுக்கு இல்லை. அடுத்தடுத்த வளர்ச்சியின் வெளிச்சத்தில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாக நமக்கு இருந்தாலும், அவர்களுக்கு அது தெளிவற்ற மங்கலான வெளிச்சமாயிருந்தது. இரண்டாயிரம் வருடங்கள் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கான எந்தவித ஆதாரமுமில்லாமல்



உருண்டோடியது.

இரண்டாயிரம் வருடங்களுக்கு பின்பு தேவன் ஆபிரகாமை அழைத்து, அவருடைய வித்து அல்லது சந்ததி மூலம் உலகத்தின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். இதன் மூலம் தேவன் தாம் முன் தீர்மானித்தபடி, ஆதிப்பெற்றோருக்குக் கொடுத்த வாக்குத்தத்தை நிறைவேற்றுவதுபோல் தோன்றியது. ஆனால், அநேக வருடங்கள் கடந்து சென்றன. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானை அவர் சுதந்தரியாமலும் அவர்களுக்கு ஒரு குழந்தையும்கூட இல்லாத நிலையில், ஆபிரகாமும் சாராளும் வயது முதிர்ந்தவர்களாய் போனார்கள். இப்போது ஆபிரகாம் தான் தேவனுக்கு அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற உதவி செய்ய வேண்டுமென்று நினைத்து, ஆகாரைப் பெண்ணாகிய ஆகார் மூலம் இஸ்மவேலைப் பெற்றார். ஆனால், தேவனுக்கு இந்த உதவி தேவைப்படாமல், ஏற்ற காலத்தில் வாக்குத்தத்தத்தின் பிள்ளையாகிய ஈசாக்கு பிறந்தார். அப்போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜாவும், சகல ஜனங்களையும் ஆசீர்வதிப்பவருமானவர் வந்துவிட்டது போல் தோன்றிற்று. ஆனால், அவ்வாறில்லாமல் வருடங்கள் மீண்டும் உருண்டோடி தேவ வாக்குத்தத்தம் நிறைவேறாததுபோல் தோன்றியது. ஏனெனில், ஈசாக்கும் அவருடைய சந்ததியாகிய யாக்கோபும்கூட மரித்துவிட்டனர். ஆனால், சிலர் அப்போதும் இந்த வாக்குத்தத்தத்தின்மேல் உறுதியாக விசுவாசம் வைத்திருந்தனர். எவ்வாறெனில் தேவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை ஈசாக்குக்கும் அவருக்குப் பிறகு யாக்கோபுக்கும் உறுதிப்படுத்தி, இஸ்ரயேலருக்கு அதை நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்தி இவர்கள் விசுவாசத்தை தேவன் நிலைத்திருக்கச் செய்தார். (1 நாளாகமம் 16:16, 17)

யாக்கோபின் மரணத்தின்போது அவருடைய வம்சமானது முதலாவதாக இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் என அழைக்கப்பட்டதுடன், தேவனால் “தெரிந்துகொள்ளப்பட்ட ஜாதியாகவும்” அங்கீகரிக்கப்பட்டனர். (ஆதி.49:28; உபா.26:5) மேலும், எகிப்தில் இவர்கள் இருந்தபோது பார்வோனிடத்தில் தயவு பெற்றவர்களாயிருந்ததால் அவர்கள் பலமுள்ள ஜாதியாக மாறி, இவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் வித்தாக கானானை சுதந்தரித்து, உலகமனைத்தையும் ஆளுகை செய்து ஆசீர்வதிக்கப்போகும் சந்ததியென

எதிர்பார்க்க இடமிருந்தது. ஆனால், பிறகு எகிப்தியருடைய அவர்கள் நீண்டகாலம் அடிமைகளாக எகிப்தியருடைய அதிகாரத்தின் கீழ் வந்தபோது அந்த நம்பிக்கையானது முற்றிலும் சுக்குநூறாகச் சிதறியதுடன் வாக்குத்தத்தமும் மறக்கப்பட்டுபோனது.

மெய்யாகவே, தேவனுடைய வாக்குத்தத்தங்களானது இரகசியங்களாக மறைக்கப்பட்டு, அவருடைய வழிகள் மனிதன் கண்டுபிடிப்பதற்குக் கூடாததாயிருந்தது. இருந்தபோதிலும் ஏற்றகாலத்திலே தேவன் மாபெரும் இரட்சகராக மோசேயை எழுப்பி, அவருடைய கையினால் வல்லமையுள்ள அற்புதங்களை எகிப்திலே நடப்பித்து அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கினார். ஆனால், இஸ்ரயேலர் கானான் தேசத்தை அடையுமுன் மோசே மரித்துப்போனார். ஆனால், தேவனுடைய வார்த்தையாக அவர் மரிப்பதற்குமுன் அவர், “என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து தேவன் எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக” என்று அறிவித்தார். (உபா.18:15; அப்.3:22) அவர் அனுப்பப்போகும் அந்த இரட்சகர் மூலம் முழுவதுமாக அவர்கள் ஒரு தேசமாக, எதிர்காலத்தில் இவ்வுலகை ஆளுகை செய்து ஆசீர்வதிப்பது மாத்திரமல்ல, அவர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் அவர், வெற்றிவீரராக அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்ற தேவ திட்டத்தைப் பற்றிய இன்னும் அதிகமான பார்வையை அவர்களுக்கு அளித்தது. பின்பு இரட்சகர் அல்லது மீட்பர் என அர்த்தங்கொள்ளும் யோசுவா இஸ்ரயேலருடைய தலைவராகி, அவர் தலைமையில் அவர்கள் மாபெரும் வெற்றிகளை அடைந்து, அதன் பின்பே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அவர்கள் அடைந்தார்கள். அப்போதும் உண்மையான தலைவர், அல்லது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் வந்து, அந்த வாக்குத்தத்தம் முழுமையாக நிறைவேற போவதுபோலத் தோன்றியது.

ஆனால், யோசுவாவும் மரித்தார். அதன்பின்பு தாவீது மற்றும் சாலொமோன் அவர்களுக்கு இராஜாக்களாக தரப்படும் வரையிலும் அவர்கள் ஒரு ஜாதியாராக முன்னேற்றமடைந்தில்லை. அவர்கள் காலத்தில் இஸ்ரயேலர் மேன்மையின் உச்சத்தை அடைந்தபோதிலும்,



நிறைவேற்றப்படவிருக்கும் வாக்குத்தத்தத்தைக் காணமுடியாதவர்களாக, அவர்களுடைய மகிமையிலிருந்து வெகுசீக்கிரத்தில் தள்ளப்பட்டதுடன், மற்ற தேசங்களுக்கு கப்பம் கட்டுபவர்களாக மாறினர். சிலர் இன்னும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மேல் நம்பிக்கையுடையவர்களாய் இன்னும் அந்த மாபெரும் இரட்சகரை எதிர்பார்த்தவர்களாய் மோசே, யோசுவா, தாவீது, சாலொமோன் போன்றவர்கள் அவருக்கு நிழலாய் மாத்திரம் இருந்தார்கள் என நம்பினர்.

இயேசு பிறந்த சமயம், எல்லாரும் மேசியாவுக்காகவும் வரப்போகிற அந்த இஸ்ரயேலின் இராஜாவுக்காகவும், எதிர்பார்த்து அவர் இஸ்ரயேலின் மூலம் முழு உலகத்தையும் ஆளுவார் என்ற எதிர்பார்ப்பில் அவர்கள் இருந்தார்கள். இஸ்ரயேலர் தங்களுக்கு அளிக்கப்பட்ட நிழல்கள் மூலமும், தீர்க்கதரிசனங்கள் மூலமும் வரப்போகிற மேசியாவாகிய இராஜாவின் மகிமையையும் வல்லமையையும் மாத்திரம் அதிகமாய் கவனித்து, அதன்மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தார்களே தவிர, அவர் இந்த உலகத்தில் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருமுன், பாவிகளுக்கான மீட்கும்பொருளாக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து, பாடுகளையும் மரணத்தையும் அடைய வேண்டும் என்பதைக் குறிக்கும் மற்ற நிழல்களையும், தீர்க்கதரிசனங்களையும் கவனிக்கத் தவறிவிட்டனர். எகிப்திலிருந்து இஸ்ரயேலர் விடுவிக்கப்படுமுன் ஏற்படுத்தப்பட்ட பஸ்கா பலிகளும், நியாயப்பிரமாண உடன்படிக்கையில் தரப்பட்ட மிருகங்களின் பலிகளும், வருடா வருடம் ஆசாரியர்களால் செலுத்தப்பட்ட பாவ நிவாரண பலிகளும் இதற்கு முன்னடையாளமாயிருந்தன. (எபி.9:11–20; 10:8–18) “கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்த” (1 பேதுரு 1:11) தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களைக்கூட அவர்கள் கவனியாமற் போனார்கள். ஆகவேதான், இயேசு ஒரு பலியாக வந்தபோது அவரை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் தங்களை சந்திக்கும் காலத்தை அறியாமற்போனார்கள். (லூக்கா 19:43) இயேசு மரித்தபோது அவரைப் பின்பற்றினவர்களும் (சீஷர்கள்) கூட குழப்பத்திற்குள்ளாகி, “அவரே இஸ்ரயேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்” (லூக்கா 24:21) என்று வருத்தத்துடன் கூறினர். அவர்மேல் அவர்கள் வைத்த நம்பிக்கை தவறானது என தெளிவாக அவர்களுக்குத் தோன்றியது. அவர்களுடைய தலைவரின் மரணமானது

வரப்போகும் ஆசீர்வாதங்களைத் தரும் புதிய உடன்படிக்கையின் உறுதியும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையின் நிறைவேறுதலின் ஒரு பாகம் என்பதையும் கவனிக்கத் தவறினர் என்றாலும், இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டாரென்று அவர்கள் அறிந்ததும் உதிர்ந்துபோன அவர்களுடைய நம்பிக்கையானது மீண்டும் உயிரடைய ஆரம்பித்தது. (1 பேதுரு 1:3) மேலும் அவர், அவர்களை விட்டுப் பரலோகத்திற்குச் செல்லும் தருணத்தில், அவர்களுடைய நீண்ட காலமாக காத்துவந்த, அடிக்கடித் தாமதப்படுத்தப்பட்டு வந்த நம்பிக்கையினால், "ஆண்டவரே, இக்காலத்திலா இஸ்ரயேலருக்கு இராஜ்யத்தை திரும்பக் கொடுப்பீர்?" எனக் கேட்டனர். "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" என இயேசு கூறிய பதிலில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை நிறைவேறும் காலத்தை அறிவது அவர்களுக்கு அவசியமாயிருந்ததில்லை என்றும் விளங்குகிறது. (அப் 1:6, 7)

இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்ற பிறகு தேவத் திட்டத்தின் எந்த அம்சம் தற்போது நிறைவேறியுள்ளது? என அவர்கள் சிந்தித்திருக்க வேண்டும். ஆனால், இராஜ்யம் சம்பந்தமான நமது கர்த்தரின் உபதேசங்கள் பிரதானமாக உவமைகளாகவும், மறைபொருளாகவும் இருந்தன என்பதை நாம் கண்டிப்பாக நினைவுகூற வேண்டும். பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் வருமுன், இவைகளை அவர்கள் அறிந்துகொள்ள முடியாதிருந்தது. இயேசு அவர்களிடம், "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 16:12, 13; 14:26) என்று கூறினார். ஆகையால் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்கு முன் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பரிசுத்த ஆவியை அடைந்த பின்பும் நடந்தேறிவரும் வேலையைப் பற்றியும், ஆதி உடன்படிக்கைக்கும் அதற்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றியும் இயேசுவின் சீஷர் உடனடியாக தெளிவாகவும் முழுமையாகவும் அறியக்



கூடாதவர்களாயிருந்தனர். (அப் 11:9; கலா 2:2,12,14) இருந்தபோதிலும் அவர்கள் அதைப்பற்றி முழுமையாகவும், தெளிவாகவும் புரிந்துகொள்ளும் முன்பாகவே அவர்கள் தேவனுடைய வார்த்தைகளைப் பேச பயன்படுத்தப்பட்டதுடன் அவர்கள் ஏவப்பட்டுப்பேசின வார்த்தைகள் முழுவதும் தெளிவான மற்றும் ஆழமான சத்தியங்களாய் இருந்தாலும், அவர்களே புரிந்துகொள்ளமுடியாதவண்ணம் இருந்தன. உதாரணமாக, அப் 15:14–16ல், யாக்கோபினுடைய வார்த்தைகளைப் படித்தோமானால், அவர் பேசும்போது, "தேவன் புறஜாதிகளிலிருந்து தமது நாமத்திற்காக (மணவாட்டியாகிய) ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல் முதல் அவர்களுக்கு கடாட்சித்தருளின விதத்தை சிமியோன் விவரித்துச் சொன்னாரே, அதற்கு தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. எப்படியெனில், மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப் பின்பு (அதாவது புறஜாதிகளிலிருந்து ஒரு ஜனம் கூட்டிச் சேர்க்கப்பட்ட பிறகு) திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை (அதாவது பூமிக்குரிய இராஜ்யத்தை) மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்படுத்தி அதை செவ்வையாய் நிறுத்துவேன்" என்று அறிவிக்கிறார்.

சுவிசேஷமானது முதலாவது புறஜாதி கிறிஸ்தவராகிய கொர்நேலியுவிடம் பேதுரு அனுப்பப்படுதலையும், பொதுவாக எல்லா புறஜாதி மக்களுக்காக அப்பவுல் அனுப்பப்படுதலையும், இந்த யுகத்தில் விசுவாசிக்கிற யூதரும், புறஜாதியாரும் ஒரே விதமான தயவைப் பெற வேண்டியதைப் பற்றியும், அப்யாக்கோபு தேவனுடைய திட்டத்தைப் படிக்கத் தொடங்கினார். பின்பு தீர்க்கதரிசனங்களிலும் அவ்வாறே இருப்பதையும் அறிந்துகொண்டார். மேலும், சுவிசேஷ யுகத்தில் நடந்தேற வேண்டிய வேலை முடிந்த பிறகுதான் மாம்சீக இஸ்ரயேலருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்பதையும் உணர்ந்துகொண்டார். வெகுகாலமாய் மறைந்திருந்த இந்த மாபெரும் இரகசியம் தேவனுடைய விசேஷித்த சிநேகிதரான பரிசுத்தவான்களாகிய சிலரால் மாத்திரம் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்துகொள்ளப்பட ஆரம்பித்தது.

கொலோசெயர் 1:27ல் பவுல் கூறும்போது "கிறிஸ்துவானவர்

மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே" ஆதிகாலங்களுக்கும் தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து இப்போது பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட இரகசியமென்று கூறுகிறார்.

## "மகிமையின் நம்பிக்கையாக கிறிஸ்து உங்களுள் இருக்கிறார்"

பரிசுத்தவான்கள் அல்லது உடன்படிக்கை செய்த விசுவாசிகளாகிய இந்த விசேஷித்த வகுப்பாரைத் தவிர முந்காலங்கள் முதல் இன்று வரை மற்ற எல்லாருக்கும் மறைக்கப்பட்டிருந்த தேவனுடைய மாபெரும் இரகசியம் இதுவே ஆகும். ஆனால், "கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார்" என்பதன் அர்த்தமென்ன? இயேசு பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். (அப்.10:38) அதினாலேயே அவர் கிறிஸ்து என்று நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஏனெனில், கிறிஸ்து என்பதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பது பொருளாகும். மேலும், அப்போஸ்தலன் (1 யோவான் 2:27) கூறும்போது, நாம் பெற்ற அபிஷேகம் நம்மில் நிலைத்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். ஆகவே, சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்கள் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருக்கும்படி அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். (2 கொரி. 1:21; 1 பேதுரு 2:9) ஆண்டவரும் தலைவருமாயிருக்கிற கிறிஸ்துவோடு இவர்கள் இணைந்து யேகோவா தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட முழுமையான கிறிஸ்துவாகிறார்கள்.

நாமும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்ற அப்போஸ்தலனுடைய இந்த போதகத்திற்கு இசைவாக அப்பவுல் இதை, கடந்த யுகங்களில் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இவ்விஷயம், இப்போது பரிசுத்தவான்களுக்கு, கிறிஸ்து (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) தனிப்பட்டவராக அல்ல மாறாக, அநேகர் உள்ளடக்கியவர் என்று உறுதிப்படுத்துகிறார். எவ்வாறு மனித சரீரத்தில் அநேக அவயவங்கள் இருந்தும் அது ஒரே சரீரமாயிருக்கிறதோ, அவ்வாறே கிறிஸ்துவும் இருக்கிறார். (1 கொரி.12:12-28) இயேசு சபையாகிய தம்முடைய சரீரத்திற்கு (அல்லது மணவாட்டி - இன்னொரு வகையில் உருவகப்படுத்தப்பட்டதுபோல எபே.5:25-30) தலையாக அல்லது ஆண்டவராக அபிஷேகம் பண்ணப்பட்டு இவர்கள் ஒன்றாக இணைந்து - மாபெரும் இரட்சகராக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தாக




அழைக்கிறார்கள். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்திரராயுமிருக்கிறீர்கள்." (கலா.3:29)

அப்பவுல், எல்லாவற்றிலும் இயேசு முதல்வராயிருக்கும்படி, "தேவன் எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (கொலோ.1:18; எபே.1:23) என இயேசுவைக் குறித்து சொல்லப்பட்ட இந்த வசனத்திற்கு விரோதமாக எவ்வித அனுமானங்களிலிருந்தும் சபையைக் காக்கிறார். இருந்தாலும், மனித சரீரத்தின் உதாரணத்தைக்கொண்டு, மிகவும் அழகாகவும் உறுதியாகவும் இயேசுவுக்குடனான நமது நெருங்கிய உறவை உருவகப்படுத்துகிறார். இதே ஒருமைப்பாட்டை இயேசு கூறும்போது, "நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள்" என்கிறார். (யோவா.15:5)

அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் அங்கங்களாக, கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்முடைய ஒருமைப்பாட்டை கூர்நுனிக்கோபுர (பிரமிடு) உருவத்தினால் நன்கு விளக்குகிறது.

அதின் தலைக்கல் அல்லது உச்சிக்கல் தன்னில்தானே ஒரு பரிபூரணமான கூர்நுனிக் கோபுரமாயிருக்கிறது. அதின் மற்ற கற்கள் தலைக்கல்லின் குணாம்சத்திற்கிசைவாக அதற்குக் கீழாக கட்டப்பட்டால் முழு கட்டடமும் ஒரு பரிபூரணமான பிரமிடாக இருக்கும். "கிறிஸ்துவின்"--"சந்ததியின்" ஒரு அங்கமாக நம்மை இது எவ்வளவு அழகாக சித்தரித்து காண்பிக்கிறது. கிறிஸ்துவின் அங்கத்தினர்களாக நம்முடைய தலையாகிய அவரோடு ஜீவ கற்களாக இசைவாக இணைக்கப்பட்டிருக்கும்போது நாம் பூரணராயிருக்கலாம். அவரிடமிருந்து பிரிக்கப்பட்டால் நாம் ஒன்றுமில்லை.

பரிபூரணராகிய இயேசு மிகவும் உன்னத நிலைமைக்கு உயர்த்தப்பட்டிருக்க, இப்போது அவருடைய மாதிரியின்படியே வடிவமைக்கப்பட்டு தேவனுடைய கட்டடமாக கட்டப்படுவதற்கு நம்மை நாமே அவருக்கு ஒப்புக்கொடுக்கிறோம். ஒரு சாதாரண கட்டடத்தில்



மூலைக்குத் தலைக்கல் இருக்காது. ஆனால், மேற்காட்டிய நம்முடைய கட்டடத்தில் மூலைக்குத் தலைக்கல் அல்லது உச்சிக்கல் இருக்கிறது. எழுதியிருக்கிறபடி: "இதோ தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்... அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும் ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்கு பிரியமான பலிகளை செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்."(1 பேதுரு 2:4–6) வெகு சீக்கிரத்தில் "தலையாகிய" இயேசுவும் "அவருடைய சரீரமாகிய திருச்சபையும்" இணைந்து முழுமையடையும் என்று நாம் நம்புகிறோம்.

மேலும், பிரியமானவர்களே, நாம் அதிகமதிகமாக மறுரூபமடைந்து அவருடைய மாதிரியின்படியே நடக்க, மாபெரும் சிற்பாசாரியாகிய அவருடைய வழிகாட்டுதலின்படி அநேக சிட்சைகளையும் நெருக்கட்டுதலையும் நாம் சகிக்க வேண்டும். அவருடைய திறமையும் உண்மையும் நம்மில் வெளிப்படும்படிக்கு, அவருடைய சித்தம் நம்மில் நிறைவேறும்படிக்கு அவருடைய கிரியைக்கு விரோதமாக நம்முடைய சுய சித்தத்தை நிறைவேற்றக் கூடாது. நாம் சிறுபிள்ளைகளைப்போல "தாழ்மையை அணிந்துகொள்ள வேண்டும்." ஏனெனில், "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." ஆகவே, நம் தலைவரும்,



நமக்கு முன்னோடியுமாக ஓடி முடித்தவருமாயிருக்கிறவரை உயர்த்தியதுபோல், நாமும் ஏற்ற காலத்தில் தேவனால் உயர்த்தப்படும்படிக்கு நம்மைத் தாழ்த்தி, அவரது பலத்த கரங்களுக்குள் அடங்கியிருப்போம். (1 பேதுரு 5:5–6; பிலிப்பியர் 2:8, 9)

உண்மையிலேயே இது ஒரு அற்புதமான செய்தியாயிருக்கிறது. இந்த மேலான பரம அழைப்பைப் பற்றி தேவ வசனத்தில் ஆராயும்போது நமக்கு உண்டான கிருபையைக் (ஆசீர்வாதத்தைக்) குறித்து தீர்க்கதரிசிகள் வியக்கத்தக்க விதமாக கருத்தாய் பேசியிருக்கிறார்கள். (1 பேதுரு 1:10) அன்றியும் நிழல்களும், உவமைகளும் இதுவரை கருகலாயிருந்த வார்த்தைகளும் இப்போது வெளிச்சம் பெற்று, கிறிஸ்துவுக்குள் அபிஷேகம் பண்ணப்பட்ட வகுப்பார், இப்போது வெளியாக்கப்பட்ட பந்தயப்பொருளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் இடுக்கமான வழியில் தன் வெளிச்சத்தை அவர்களுக்கு தருகின்றது. தேவன் ஒரு தனிப்பட்ட இரட்சகரை மாத்திரம் எழுப்பப்பண்ண சித்தமுடையவராயிராமல், அந்த இரட்சகர் அநேகரை உள்ளடக்கினவராக இருக்கிறார் என்ற இந்த இரகசியம் முன் ஒருபோதும் அறியக்கூடாத இரகசியமாயிருந்தது. தங்களைத் தாங்களே கர்த்தருக்கென்று தத்தம் செய்த சுவிசேஷ யுக விசுவாசிகள் இந்த பரம அழைப்பைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளனர். இயேசு இவ்விஷயத்தை தம்முடைய சீஷர்கள் ஜென்ம சுபாவமானவர்களாக இருக்கும்போது வெளிப்படுத்த முயற்சி செய்யாமல், அவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் புதிய சிருஷ்டிகளாக பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்படும் வரை காத்திருந்தார். "புதிய சிருஷ்டிகள்" தவிர வேறு யாரும் இந்த மேலான அழைப்பைப் பற்றி இப்போது புரிந்து உணர்ந்துகொள்ள முடியாது என பவுல் அப்போஸ்தலன் விவரிக்கிறார். அவர் கூறும்போது, "உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை... எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை, நமக்கோ தேவன் அவைகளை தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" (1கொரிந்தியர் 2:6–14) எனக்

கூறுகிறார்.

கலாத்திய சபைக்கு அப்போஸ்தலர் பவுல் எழுதியபோது, இந்த முழு இரகசியத்தையும் வெளிப்படுத்தி, ஆபிரகாமின் உடன்படிக்கை எவ்வாறு நிறைவேறும் என காண்பித்திருக்கிறார். இஸ்ரயேலருக்குத் தரப்பட்ட நியாயப்பிரமாணம் இந்த பூர்வ உடன்படிக்கையை எவ்வாவேனும் தள்ளிப்போடாதென்றும், சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் ஆபிரகாமின் சந்ததி கிறிஸ்துவே எனவும் காண்பித்திருக்கிறார். (கலா.3:15–18) பின்பு ஏற்கனவே மறைமுகமாக இருந்த விஷயமாகிய பரிசுத்த ஆவிக்குள்ளாக அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் அனைவரும் சேர்ந்ததே கிறிஸ்து என்பதைக் குறித்து கலா.3:27–29ல் "ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக்கொண்டீர்களே... நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்" என்று சொல்லியிருக்கிறார். அன்றியும் கலாத்தியர் 4ம் அதிகாரத்தில் இதே விஷயத்தைக் காண்பிக்கும்பொருட்டு, ஆபிரகாம் யேகோவா தேவனுக்கும், சாராள் வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கைக்கும் ஈசாக்கு கிறிஸ்துவுக்கும் (தலையும், சரீரமும்) முன்னடையாளமாகக் காண்பித்தபுடன் வசனம் 28ல் " சகோதரரே நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம்" என்றும் விவரிக்கிறார். ஆகவே சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் (திருச்சபையாகிய கிறிஸ்தும்) வளர்ச்சி ஆரம்பிக்கும் வரை தேவனுடைய திட்டங்கள் நிழலான காரியங்களில் மறைக்கப்பட்டிருந்தது.

இந்த இரகசியத்தை மறைத்து வைப்பதற்கு அவசியமில்லாதிருந்தால், அவ்வண்ணமாக மறைத்து வைக்கப்பட்டிருக்க மாட்டாது. இத்தேவ திட்டங்கள் மனுக்குலம் முழுவதற்கும் வெளிப்படுத்தப்பட்டிருந்தால் அது தோல்விக்கு ஏதுவாயிருக்கும். எவ்வாறெனில், மனிதர் அறிந்திருந்தார்களானால், மகிமையின் கர்த்தரையாவது அல்லது அவருடைய சரீரமான சபையையாவது சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள். (1 கொரிந்தியர் 2:8) தேவத் திட்டமானது உலகத்திற்கு இரகசியமாயிருந்திராவிட்டால் மனிதருடைய



மீட்புக்கான விலைக்கிரயமாக, இயேசுவின் மரணமோ அல்லது கிறிஸ்துவின் பாடுகளுக்கு உடன்பங்காளிகளாக, சபையினுடைய விசுவாச சோதனையோ கூடாத காரியமாய் இருந்திருக்கும். ஏனென்றால், "உலகம் அவரை அறியாதபடியினால் நம்மையும் (உடன் சுதந்திரர்) அறியவில்லை." (1 யோவான் 3:1)

தேவனுடைய தெய்வீகத் திட்டமும், அத்தெய்வீகத் திட்டத்தின் மையமாகிய கர்த்தராகிய கிறிஸ்து மாத்திரம் இவ்வுலகத்திற்கு இரகசியமானதாயிராமல், சிறுமந்தை அல்லது விசேஷித்த ஒரு ஜனமாக அழைக்கப்பட்டவர்கள், தற்போது நடந்துகொண்டிருக்கும் அவர்களுடைய விசேஷமான அல்லது வித்தியாசமான வாழ்க்கையும் இரகசியமாகவே இருக்கிறது. இயேசு எவ்வளவோ திறமை வாய்ந்தவராக இருந்து தம்முடைய கவனத்தையும், காலத்தையும், திறமையையும் – அரசியலிலாவது, சட்ட விஷயங்களிலாவது, வியாபாரத்திலாவது அல்லது அக்கால பிரசித்திபெற்ற மதங்களிலாவது செலுத்தியிருப்பாரானால் அனைவராலும் போற்றக்கூடிய பெரிய மனிதராயிருக்கலாம். அவ்வாறு அவர் செய்யாமல் இருந்ததும் இவ்வுலகிற்கு இரகசியமானதாயிருக்கிறது. இவ்வுலகின் பார்வையில் அவர் ஒரு முட்டாளாகவும், வாழ்க்கையை வீணடிக்கிறவராகவும் தென்பட்டதுடன், அவரை "பிசாசு பிடித்தவரென்றும், பைத்தியக்காரர் என்றும்" கூறினர். அவருடைய வாழ்க்கையும், உபதேசங்களும், அவர்களுக்குப் புரிந்துகொள்ள முடியாத புதிராக இருந்தன. அவரை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதே விதமாகவே அவருடைய அப்போஸ்தலரும், அவருடைய சீஷர்களும் இவ்வுலக பிழைப்பின் வேலையையும் லாபத்தையும் விட்டு, புறக்கணிக்கப்பட்டு அவமான சிலுவை மரணமடைந்த இயேசுவின் மரணத்தின் மூலம் பாவ மன்னிப்பு உண்டென்று பிரசங்கித்துக் கொண்டிருந்ததால் அவர்களும் இவ்வுலகிற்குப் புரியாத புதிராகவே இருந்தனர். பவுல் அப்போஸ்தலனும் தனக்கிருந்த மேன்மையான அந்தஸ்தையும், சமூக செல்வாக்கையும் விட்டு தன் சொந்தக் கைகளால் வேலை செய்து, கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிற விசுவாசிகள் அனைவரும் பெறப்போகிற ஜீவகிரீடம் பற்றி பிரசங்கிக்கும்போதும், அது சிலருக்கு இரகசியமாக இருந்து, "பவுலே,

நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது" (அப்.26:24) எனக் கூறினர். மேலும், அப்போஸ்தலர் பவுலைப்போல கிறிஸ்துவினுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பவர்களும், கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் முட்டாள்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஆனால், தேவனுடைய திட்டங்களெல்லாம் எக்காலத்திற்கும் புரிந்துகொள்ளவே முடியாத அல்லது மறைக்கப்பட்ட இரகசியமாகவே இருக்காது. ஆயிர வருட அதிகாலையின் ஆரம்பம் தேவனைப் பற்றிய முழு வெளிச்சத்தை மனிதருக்குக் கொண்டு வந்து, "முழு உலகமும் தேவனை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." அப்போது, நீதியின் சூரியன் தன் ஆரோக்கியமான செட்டைகளோடு எழும்போது அறியாமை என்னும் இருள் நீங்கும். அதாவது நீதியின் சூரியனாகிய கிறிஸ்து எழும்போது தலையாகிய அவர் மட்டுமல்ல, அவருடைய சரீரமான சபையின் அங்கங்களும் சேர்ந்து, அந்த நீதியின் சூரியனாக இருப்பார்கள். எழுதியிருக்கிறபடி, அவரோடுகூடப் பாடுபட்டால் அவரோடுகூட மகிமையும் அடைவோம். (ரோமர் 8:17; 2 தீமோத்தேயு 2:11, 12) "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடுகூட மகிமையில் வெளிப்படுவோம்." (கொலோ.3:4) "அப்போது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராஜ்யத்தில் சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள்." (மத்தேயு 13:43)

"கிறிஸ்துவின் சிந்தையைப்" பெற்று புதிதாய் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் தவிர, மற்றெல்லாருக்கும் நாம் விசுவாசிக்கிற வாக்குத்தத்தங்களும், நம்மை வளர்க்கிற நம்பிக்கைகளும் அங்கீகரிக்கப்படவும், ஏற்றுக்கொள்ளப்படவும் கூடாததும், சந்தேகத்திற்கிடமானதுமான பொய்த் தோற்றமுடையதாகவும் காணப்படுகிறது. இப்போது தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை தம்முடைய "ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும்" ஊற்றுவதுபோல, இனிவரும் யுகத்தில் "மாம்சமான யாவர் மேலும்" தம்முடைய ஆவியை ஊற்றும்போது, இப்போது "சிறுமந்தையால்" உணர்ந்துகொள்ளப்பட்ட அதே வாக்குத்தத்தங்களை நிச்சயமாகவே அனைவரும் புரிந்து உணர்ந்துகொள்வார்கள். அப்போது அவர்கள் திருச்சபையின் கீழ்ப்படிதலையும், அதன்பின் சபை உயர்த்தப்பட்டதையும் குறித்து சந்தோஷப்பட்டு, "நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்கு



துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்" (வெளி.19:7) என்று சொல்வார்கள். திருச்சபை மகிமையடைவதில் அவர்கள் சந்தோஷப்படுவார்கள். சபை மூலமாகவே அவர்களுக்கு ஆசீர்வாதங்கள் பொழியப்படும். அபிஷேகம் பண்ணப்பட்டவர்களால் (தலையும் சரீரமும்) சுதந்தரித்துக்கொள்ளப்பட்ட "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்" தங்களுடையதல்லவென்றும் அவர்கள் காணும்போது, திருச்சபையில் விளக்கப்பட்ட பாடத்தினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அப்போது தங்களுக்கு அளிக்கப்படும் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு ஓடும்போது, திருச்சபையின் முன்மாதிரியைப் பின்பற்றி அவர்கள் நிமித்தம் தேவனை மகிமைப்படுத்துவார்கள். ஆனால், இந்த அறிவு பொல்லாத இச்சைகளைக் கொண்டுவராது. ஏனெனில், புதிய ஆட்சிமுறை அல்லது ஒழுங்கு முறைகளின்கீழ் அவர்களின் பரிபூரண மாம்சீக அழைப்பு அவர்களுக்கு பரிபூரண திருப்தியைத் தருவதோடு சுபாவ மாறுதலைவிட விரும்பத்தக்கதாகக் காணப்படும்.

அப்போது "இரகசியம்" முடிவுபெறும். ஏனெனில், தேவனுடைய ஆவி கிறிஸ்துவில் இருந்ததென்றும், கிறிஸ்துவினுடைய ஆவி நம்மிலிருந்ததையும் தாங்கள் இதுவரை அறியாமற்போனதை உலகத்தார் கண்டுகொள்வார்கள். மேலும், நாம் மூடராக அல்லது பைத்தியக்காரராக இருந்ததில்லை என்பதையும் அறிவார்கள். மேலும், சபையானது, உலகத்தாரால் உணர்ந்துகொள்ள முடியாததும், நித்தியமானதுமான மகிமையையும், கனத்தையும், கிரீடத்தையும், ஆஸ்தியையும் அடையும்படி ஓடினபோது, தங்களிலும் மேலான பங்கை முன்பே தெரிந்துகொண்டோமென்று அவர்களுக்கு அப்போது வெளியரங்கமாயிருக்கும்.

ஏழாம் தூதனின் எக்காளம் தொனிக்கும் நாட்களிலே தேவ இரகசியம் நிறைவேறும் என காலத்தை குறிப்பிட்டு வெளி.10:7ல் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு இரகசியம் என்பது அது பயன்படுத்தப்பட்டுள்ள இரு அர்த்தத்திற்கும் பொருந்துகிறது. தேவ திட்டங்களின் இரகசியமான காரியங்கள் வெளியாக்கப்பட்டு தெளிவாக காணப்படும். தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின் முக்கிய அம்சமான

திருச்சபையாகிய "தேவ இரகசியமும்" தெளிவாக அறியப்படும். இவ்விரு இரகசியங்களும் அப்போது முடிவுபெறும். தேவ திட்டத்தில் இரகசியமாக உள்ள கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் அல்லது கிறிஸ்துவின் சரீரம் அப்போது முடிவடையும். அதன்பின்பு தேவ திட்டமானது இரகசியமாக வைக்கப்படுவதில் எவ்வித நோக்கமும் இல்லாத காரணத்தினால், அதுவரை இரகசியமான தேவ திட்டம் முற்றுப் பெற்றுவிடும். இவ்வளவு காலமாக வாக்குத்தத்தங்களிலும், முன்னடையாளங்களிலும் உவமைகளிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்ததும், இந்த இரகசியத்தில் பங்குபெற அழைக்கப்பட்டவர்களுக்கு (எபே.3:9), அளிக்கப்பட்ட ஆச்சரியமான தேவ கிருபையையும், 6000 வருடங்களுக்குப் பிறகு அந்த தேவ இரகசியம் முடிவடையும் சமயத்தில் சம்பவிக்கும் வேலை, மகா பெரியதும் மேன்மையானதும் இவ்வளவு ஆயத்தங்களுக்குப் பாத்திரமானதுமாய் இருக்கவேண்டுமென்று காண்பிக்கிறது. இரகசியத்தின் திரை நீக்கப்பட்டு ஆசீர்வாதம் பொழியப்படும்போது, உலகத்திற்கு வரக்கூடாத ஆசீர்வாதங்கள் ஏதேனும் இருக்க முடியுமா! இது வரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து பிரசவ வேதனைப்பட்டு காத்திருந்தது, இந்த இரகசியம் நிறைவடைவதற்காகத்தான். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "சந்ததி"யாகிய தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதே அந்த இரகசியம். இவர்களுக்குள்ளாகத்தான் (தேவனுடைய புத்திரர்) அவர்கள் அனைவரும் (சர்வ சிருஷ்டியும்) ஆசீர்வதிக்கப்படுவார்கள். (ரோமர் 8:19, 21, 22)

### கர்த்தரின் ஊழியக் காணிக்கை

"என்னை உமக்கு காணிக்கையாக்குகிறேன்;
ஒவ்வொரு இருதயத் துடிப்பும் உம்முடையது;
ஒவ்வொரு எனது பாவிட்டமும்;
ஒவ்வொரு எனது மனம் அல்லது இருதயத்தின் செயலும் —
ஸ்தோத்தரிக்கப்பட்ட என் தேவனே!

ஒவ்வொரு நம்பிக்கையும் ஒவ்வொரு பயமும்;
ஒவ்வொரு புன்னகையும் ஒவ்வொரு கண்ணீரும்;
ஒவ்வொரு கீதமும் ஒவ்வொரு கீர்த்தனையும்,



உம்மை மகிமைப் படுத்துகிறோம்.

அலைபெல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளும்,
உம் இரகசிய கயிற்றால் கட்டிக்கொள்ளும்,
என்னில் நீர் மகிமைப்படுவீராக,
ஆராதனைக்குரியவரே!

அலைகளை நிறுத்திப்பண்ணும் உமது வசனத்தினால்;
பலப்படுத்தும், ஆசீர்வதியும் உயர்த்தும் என் கர்த்தரே
பூரண அன்புடையவரே!
ஆதியும் அந்தமும் ஆனவரே!"

* * * *

## அத்தியாயம் – 6

# நமது கர்த்தரின் இரண்டாம் வருகை – அதின் நோக்கம், இழந்துபோன எல்லாவற்றையும் திரும்பக்கொடுத்தல்

நம் கர்த்தரின் இரண்டாம் வருகையும், ஆயிர வருட யுகத்தின் ஆரம்பமும் – முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் உள்ள சம்பந்தம் – சபையின் தெரிந்துகொள்ளுதலும் உலகின் மனமாற்றமும் – தேர்ந்தெடுத்தலும், இலவசமான கிருபையும் – நம்பிக்கையுடைய சிறைக் கைதிகள் – திரும்பக் கொடுத்தலைக் குறிக்கும் தீர்க்கதரிசன ஆதாரங்கள் – நமது கர்த்தரின் இரண்டாம் வருகையே சபைக்கும் உலகத்துக்குமுரிய நம்பிக்கையின் வெளிப்பாடு.

"முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்புவார். உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் திரும்புகாலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்." (அப்போஸ்தலர் 3:19, 21)

ஒரு சில நோக்கத்திற்காக, குறிப்பிட்ட விதத்தில், குறிப்பிட்ட நேரத்தில் தாம் திரும்பவும் வருவதை சீஷர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என கர்த்தர் விரும்பினார் என்பதை வேத வசனத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிற எல்லாரும் அறிந்திருப்பார்கள் என்று நாம் நம்புவோம். "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்." (மத்.28:20) ஆம், தம்முடைய ஆவியினாலும் தம்முடைய வசனத்தினாலும் அவருடைய பரிசுத்தவான்களை அவர்களுக்கு நேரிடும் எல்லாவித இக்கட்டுகளிலும் தொடர்ந்து சந்தோஷிப்பித்து, ஆறுதல்படுத்தி, பராமரித்து, தாங்கி வழிநடத்திக் கொண்டுவருவதன் மூலம் அவர் எப்போதும் சபையோடு இருந்து வருகிறார். ஆனாலும், சபையின் எல்லா வழிகளையும் கர்த்தர் அறிகிறார் என்பதையும், அதின்மேல் அவருக்கு இடைவிடாத கவலையும் அன்பும் உண்டென்பதையும் சபையானது அறிந்திருந்தபோதிலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவருடைய தனிப்பட்ட வருகைக்காக அது ஏங்கிக்கொண்டிருக்கிறது. "நான் போவேன்" என்றும் "மறுபடியும் வருவேன்" என்றும் அவர் சொன்னபோது (யோவான் 14:3) தம்முடைய தனிப்பட்ட இரண்டாம் வருகையைக் குறித்தே குறிப்பாக சொல்லியிருக்கிறார்.

சிலர் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி இறங்கினதையும், வேறு சிலர் எருசலேமின் அழிவையும் குறித்தே அவர் பேசினார் எனவும் நினைக்கின்றனர். ஆனால், பெந்தெகொஸ்தே நாளிலிருந்து 60 வருடங்கள் கழித்தும் எருசலேமின் அழிவுக்கு 26 வருடங்களுக்குப் பின்பும் எழுதப்பட்ட வேதாகமத்தின் கடைசிப் புத்தகமான வெளிப்படுத்தின விசேஷத்தில் நமது இரண்டாம் வருகையைப் பற்றி, அது இன்னும் எதிர்காலத்தில் நடக்கப்போகிற நிகழ்ச்சியாக இயேசு பேசுகிறதை கவனிக்கத் தவறியிருக்கிறார்கள். "இதோ சீக்கிரமாய் வருகிறேன். நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்றும், தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதின யோவான், "கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று பதிலுரைத்திருக்கிறார். (வெளி. 22:12, 20)

பாவிகள் மனந்திரும்புதல், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் ஒரு பாகமென்றும், அதைத் தொடர்ந்து முழு உலகமும் மனந்திரும்பும் வரை அவர் வந்துகொண்டே இருப்பாரென்றும், எல்லாரும் மனந்திரும்பின பின்பு அவர் முழுவதுமாய் வந்திருப்பாரென்றும் அநேகர் எண்ணுகின்றனர்.

அவர்களுடைய எதிர்பார்ப்பிற்கு நேர்மாறாக வேத வசனங்கள் சாட்சி பகர்கின்றதை அவர்கள் கவனிக்கத் தவறியுள்ளதை கண்கூடாகக் காணமுடிகிறது. எவ்வாறெனில், கர்த்தருடைய இரண்டாம் வருகையின் காலத்தில் உலகம் முழுவதும் தேவனிடத்திற்கு மனந்திரும்புவதற்கு பதிலாக அவரைவிட்டு விலகியே இருக்கும் என்றே 2 தீமோத்தேயு 3:1–4ல், "கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. ஏனெனில், மனுஷர் தேவப் பிரியராயிராமல் சுகபோகப் பிரியராக இருப்பார்கள்" என்றும் வசனம் 13–இல், "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும் மோசம்

போகிறவர்களுமாயிருந்து மென்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" என சாட்சி பகர்கின்றது. மேலும், தமது சிறுமந்தைக்கு கர்த்தர் கொடுத்த ஒரு விசேஷித்த எச்சரிப்பையும் அவர்கள் மறந்திருக்கிறார்கள். "நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற (எச்சரிக்கையாயிராத) அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும்." (லூக்கா 21:34, 35) மேலும், மேகங்களுடனே அவர் வருகிறதைக் கண்டு (அறிந்து) "பூமியின் கோத்திரத்தாரெல்லாம் அவரைப் பார்த்து புலம்புவார்கள்" என்று வெளி.1:7–இல் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி, அக்காலத்தில் பாவிகள் மனந்திரும்பியிருப்பார்கள் என்பதற்கு எந்த ஒரு ஆதாரமும் சொல்லப்படவில்லை. பாவிகள் எல்லாரும் மனந்திரும்பியிருந்தால் எல்லா மனுஷரும் புலம்புவார்களா ? மாறாக, பெரும்பான்மையானோர் ஒப்புக்கொள்கிறபடி இந்த பகுதி கிறிஸ்து இப்பூமியில் பிரசன்னமாவதைக் குறிப்பிடுமானால், எல்லாரும் அவருடைய பிரசன்னமாகுதலை விரும்பமாட்டார்களென்று அவ்வசனம் போதிக்கிறது. எல்லா மனுஷரும் மனந்திரும்பியிருப்பார்களேயானால் அவர் பிரசன்னமாகுதலை எல்லாரும் நிச்சயமாய் விரும்பியிருப்பார்கள்.

சிலர் கர்த்தரின் இரண்டாம் வருகையும் அவருடைய பிரசன்னமும் நிச்சயமாய் சம்பவிக்குமென்று எதிர்பார்த்தாலும், அதற்கு வெகுகாலம் செல்லும் என நினைத்திருக்கிறார்கள். ஏனெனில், சபையினுடைய தற்கால காரியங்கள் மூலமாக உலகமானது மனந்திரும்பி குணப்பட்டு, ஆயிர வருஷ யுகம் ஆரம்பமாகி சாத்தான் கட்டப்படுகிறதோடுகூட, பூமி முழுவதும் கர்த்தரை அறிகிற அறிவினால் நிரப்பப்படுமென்றும், தேசத்திற்கு விரோதமாய் தேசம் யுத்தஞ் செய்ய கற்றுக்கொள்ளாமலிருக்கும்போது, தற்கால சூழ்நிலையில் சபையினுடைய பெரிதும் கடினமான வேலை முடிவடையுமென்றும், அப்போது கர்த்தர் வந்து இவ்வுலகக் காரியங்களை தன் வசப்படுத்தி, விசுவாசிகளுக்கு ஆசீர்வாதத்தையும் பாவிகளுக்கு ஆக்கினையும் தர வருவாரென்றும் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

சில வசனங்கள் கோர்வையாக எடுத்துக்கொள்ளப்படாதபோது, மேற்கூறிய காரியங்களையே சொல்கிறதுபோல் தோன்றும். ஆனால், தேவனுடைய வார்த்தைகளையும், அவருடைய திட்டங்களையும்



முழுவதுமாக நிதானித்தோமானால், மேற்கூறிய கருத்துக்கள் வேத உபதேசத்திற்கு நேர் விரோதமானது என உணர்ந்துகொள்வோம். உலகம் மனந்திரும்புவதற்கு முன் கிறிஸ்து வந்து அதை சீர்படுத்தும் நோக்கத்துடன் அரசாளுவாரென்றும், திருச்சபையானது தற்போது சோதிக்கப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்டு வருகிறது என்றும், ஜெயங்கொண்டவர்கள் மகிமையடைந்தபின் கர்த்தராகிய இயேசுவோடு கூட இவ்வுலக ஆளுகையில் பங்கேற்பார்கள் என்றும், அந்த அரசாட்சியின் மூலமாக உலகம் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் பின் சர்வ சிருஷ்டியும் தேவனை அறிகிற அறிவில் வளரச் செய்வதற்கும் தேவன் ஏற்படுத்தியிருக்கிற வழி இதுவே என்றும் வேதம் உரைக்கிறது. அதுவே கர்த்தருடைய விசேஷமான வாக்குத்தத்தங்கள் என வெளி. 3:21–ல், "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னோடே கூட சிங்காசனத்தில் உட்காரும்படி நான் அருள்செய்வேன்" என்றும் வெளி. 20:4–ல் "அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட 1000 வருடம் அரசாளுவார்கள்" என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆயிரவருட அரசாட்சி முடியும்வரை இயேசு வரமாட்டாரென்று நம்புகிறவர்கள் எடுத்துக்காட்டும் இரு வசனங்களில் ஒன்று, மத். 24:14–ல் "இராஜ்யத்தின் இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும் அப்போது முடிவு வரும்." இவ்வசனத்தை ஆதாரமாகக்கொண்டு சுவிசேஷ யுக முடிவுக்கு முன்பாக உலகத்தின் மனந்திரும்புதல் நடைபெற்றுவிடும் என நினைக்கிறார்கள். ஆனால், உலகத்திற்கு சாட்சியாக பிரசங்கிக்கப்படும் என்கிற வார்த்தையானது முழு உலகத்தின் மனந்திரும்புதலைக் குறிக்காது என்பதை உணர வேண்டும். ஆனால், இவ்வசனமானது எவ்வாறு சத்தியத்தின் சாட்சி உலக முழுவதும் சென்றடையும் என்பது குறித்து எதுவும் சொல்வதில்லை. இந்த ஒரு சாட்சியானது ஏற்கனவே கொடுத்தாகிவிட்டது. எவ்வாறெனில், பூலோகத்தில் இருக்கிற அனைத்து ஜனங்களும் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளாவிட்டாலும், கி.பி.1861–இல் ஏறத்தாழ எல்லா மொழிகளிலும் சுவிசேஷமானது வெளியிடப்பட்டுள்ளது என வேதாகமச் சங்கங்களின் அறிக்கைகள் நமக்குக் காண்பிக்கின்றன. பூமியில் உயிரோடிருக்கிற 160 கோடி ஜனங்களில் பாதிப்பேராகிலும் இயேசுவின் நாமத்தைக் கேட்டிருக்கமாட்டார்கள். என்றாலும்,

இவ்வசனத்தின் கருப்பொருள் நிறைவேறியிருக்கிறது. சுவிசேஷமானது உலகமனைத்திலும் அதாவது ஒவ்வொரு தேசத்திலும் சாட்சியாக பிரசங்கிக்கப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலர் 15:14 சொல்லுகிறபடி, தற்கால சுவிசேஷ யுகத்தின் முக்கிய நோக்கமே கிறிஸ்துவின் நாமத்திற்காக ஒரு குறிப்பிட்ட ஜனத்தை தெரிந்துகொள்ளுதலேயாகும். இந்த ஜெயங்கொண்ட சபை, கர்த்தருடைய இரண்டாம் வருகையில் அவரோடுகூட இணைந்து அவருடைய நாமத்தைப் பெற்றுக்கொள்ளும். மேலும், இதே யுகத்தில் சுவிசேஷம் சாட்சியாக பிரசங்கிக்கப்பட வேண்டியது இரண்டாவது நோக்கமாகும்.

அவர்கள் ஆதாரமாகக்கொள்ளும் இரண்டாவது வசனமாவது (சங். 110:1) "நான் உமது சத்துருக்களை உமது பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் எனது வலது பாரிசத்தில் உட்காரும்." சபையின் மூலமாய் கிறிஸ்துவுக்கு எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தும் வேலை முடியுமட்டும் பரலோகத்தில் ஓரிடத்தில் உலோகத்தினால் செய்யப்பட்ட ஒரு சிங்காசனத்தின்மேல் அவர் வீற்றிருக்கிறாரென்பதும், அதன்பின்பே அவர் அரசாள வருவாரென்பதும், இவ்வசனத்தைக் குறித்த அவர்களது தவறான புரிந்துகொள்ளுதலாகும். இவ்வசனத்தில் வரும் தேவனுடைய சிங்காசனம் என்பது நேரடி அர்த்தம் கொண்டதல்ல. மாறாக, அது அவருடைய உன்னதமான அதிகாரத்தையும் ஆளுகையையும் குறிப்பதுடன், அந்த ஆளுகையின் ஒரு பங்குக்கு அவர் உயர்த்தப்பட்டிருக்கிறார் என்பதையும் குறிக்கிறது. அப்பவும் (பிலி. 2:9–11) கூறுகிறதாவது: "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." பிதாவாகிய தேவனுக்கு அடுத்தபடியாக, ஆளாம் மற்றெல்லாருக்கும் மேலாக அவருக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. கிறிஸ்து சொல்லர்த்தமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தாரானால், சத்துருக்களை அவரது பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், உண்மையிலேயே அவரால் வரமுடியாது. ஆனால், இவ்வசனத்தில் "வலது பாரிசம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ஒரு இடத்தையாவது அல்லது ஒரு நாற்காலியையாவது குறிப்பிடாமல் ஒரு அதிகாரத்தையோ, ஆளுகையையோ குறிக்கும் என சொல்லலாம். இவ்வாறு இவ்வசனத்தை நிதானிக்கும்போது, மற்ற வசனங்களோடு



இக்கருத்து எவ்வித முரண்பாடாயுமிராது என நாம் அறிகிறோம். பிலிப்பியர் 3:21–ல், "எல்லாவற்றையும் தம்முடைய பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும்" என வாசிக்கிறோம். உதாரணமாக, வில்லியம் சக்கரவர்த்தி ஜெர்மனியின் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறாரென்று சொன்னால் அவருடைய இராஜரீகமான ஆசனத்தை மட்டும் குறிப்பதில்லை. அவர் வெறுமனே அந்த ஆசனத்திலேயே எப்போதும் அமர்ந்திருப்பதில்லை. சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார் என்று சொல்லும்போது, அவர் ஜெர்மனியை அரசாளுகிறாரென்று பொருள். வலதுகரம் என்ற வார்த்தையானது பிரதான இடத்தில், மேன்மையும் மகிமையும் ஆன உன்னத நிலை மற்றும் முதன்மை ஆட்சியாளர் அடுத்தபடியாக என பொருள்படும். இதேபோல, பிஸ்மார்க் பிரபு, ஜெர்மன் சக்கரவர்த்தியால் வல்லமையின் வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டார் மற்றும் எகிப்து தேசத்தின் யோசேப்பு பார்வோனுடைய வலது பாரிசத்தில் இருந்தார் என்று கூறும்போது, நேரடி அர்த்தமுள்ளதாயிராமல் ஒரு உவமை பாணியாகவே உள்ளது. காய்பாவுக்கு இயேசு சொன்ன வார்த்தைகள் இக்கருத்துக்கு இசைவாயிருக்கின்றன. "மனுஷ குமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் காண்பீர்கள்." (மத். 26:64) இப்படியாக இவ்வகையில் அவர் வரும்போது வலது பாரிசத்தில் இருப்பதுடன், ஆயிர வருட யுகத்திலும் பின்பு என்றென்றைக்கும் அவர் வலது பாரிசத்தில் நிலைத்திருப்பார்.

தேவனால் வெளிப்படுத்தப்பட்ட திட்டங்களை இன்னும் அதிகமாகப் பரிசோதித்துப் பார்க்கும்போது, கிறிஸ்துவின் முதலாம் மற்றும் இரண்டாம் வருகையின் நோக்கங்களை விரிவாக தருகிறது. அவை ஒரே திட்டத்தின் பாகங்களாய் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவைகளாயிருப்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். முதல் வருகையின் விசேஷித்த நோக்கம் மனிதரை மீட்குதல். இரண்டாம் வருகையின் நோக்கமோ மீட்கப்பட்டவர்களை விடுதலையாக்குதலும், ஆசீர்வதித்தலும், இழந்துபோன எல்லாவற்றையும் அவர்களுக்கு திரும்பக் கொடுத்தலுமே ஆகும். எல்லாரையும் மீட்கும்பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுத்த நமது இரட்சகர், அப்பலியை பிதாவிடம் ஒப்புவிக்க பரமேறினார். இவ்விதமாக மனுஷனுடைய அக்கிரமங்களுக்காக தம்மை மீட்கும்பொருளாக ஒப்புக்கொடுத்து தேவனுக்கும் மனிதனுக்கும்

ஒப்புரவாகுதலை உண்டு பண்ணினார். "ஆட்டுக் குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியின்" தெரிந்துகொள்ளுதல் முடியும் வரை, அதாவது அவர்கள் தற்கால பொல்லாத உலகத்தின் எல்லா தீமைகளையும் ஜெயங்கொண்டு, அப்பேர்ப்பட்ட காலத்துக்கு தகுதியாகும் வரை, "இந்த உலகத்தின் அதிபதியானவன்" தனது தீமையின் ஆளுகையைத் தொடர தேவன் அனுமதித்து தாமதிக்கிறார். அதன்பின்பு அவருடைய பலியின் மூலம் மனுக்குலம் முழுவதும் பெற்றுக்கொள்ள வேண்டிய மாபெரும் ஆசீர்வாதங்களை உலகத்திற்குக் கொடுக்க ஆரம்பித்து, பூமியிலுள்ள சகல குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வருவார்.

நிச்சயமாகவே மீட்பரால் மீட்கும்பொருள் செலுத்தப்பட்டவுடனே திரும்பக்கொடுத்தலும், ஆசீர்வாதமும் தொடங்கியிருக்கக் கூடும். அவருடைய வருகையும், ஆளுகையும், ஆசீர்வாதமும் அப்போதே தொடங்கி எல்லாம் ஒரே நிகழ்வாக இருக்கும் என அப்போஸ்தலர் முதலில் எதிர்பார்த்தனர். ஆனால், தேவன் "நமக்கு (கிறிஸ்தவ சபைக்கு) விசேஷித்த நன்மையானதொன்றை முன்னதாகவே நியமித்திருந்தார்." (எபி. 11:40) நமது நிமித்தமாகவே கிறிஸ்துவின் பாடுகள் நிறைவேறி 19 நூற்றாண்டுகளாகியும் கிறிஸ்துவின் ஆளுகை இன்னும் நிறைவேறவில்லை.

முதலாம் வருகைக்கும், இரண்டாம் வருகைக்கும் அதாவது எல்லாருக்கும் மீட்கும்பொருளை கொடுப்பதற்கும், எல்லாரையும் ஆசீர்வதிக்குதலுக்கும் இடைப்பட்ட இந்தக்காலம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பரீட்சிக்கப்பட்டு தெரிந்துகொள்ளப்படுவதற்கேயாகும். இவ்வாறு இல்லையென்றால் ஒரே ஒரு வருகைதான் இருந்திருக்கும். மேலும், தமது இரண்டாம் வருகையின் ஆயிரமாண்டு ஆட்சியில் அவர் செய்யவேண்டிய வேலையானது இயேசுவின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்தே ஆரம்பித்திருக்கும். அல்லது இரண்டாம் வருகையின்போது செய்யப்படவேண்டிய காரியங்கள் முதலாம் வருகையைத் தொடர்ந்து உடனடியாக இருந்திருக்கும் என்று சொல்வதற்கு பதிலாக யேகோவா தேவன் கிறிஸ்துவின் சரீரமான சபை அல்லது சிறுமந்தையை தெரிந்துகொள்ளும் நோக்கத்தைப் பற்றி அவர் நிர்ணயம் பண்ணவில்லை என நாம் சொல்லுகிறதாயிருந்தால், முதலாம் வருகையானது



கடந்தகாலத்தில் நடந்தேறாமல் இரண்டாம் வருகையின் காலத்தில் நடந்தேறியிருக்கும். இவ்வகையிலும் ஒரே வருகைதான் இருந்திருக்கும். ஏனெனில், 6000 வருஷங்கள் தீமையின் அனுமதிக்காகவும், ஏழாவது ஆயிர வருடத்தில் சுத்திகரித்தலும், இழந்துபோனதை மீண்டும் திரும்பக்கொடுத்தலும் நடைபெறவும் தேவன் திட்டமாய் வடிவமைத்திருக்கிறார்.

பாவிகளுக்காக மீட்கும்பொருளாகவும் பலியாகவும் இயேசு வந்த காலமானது ஆசீர்வதிக்கவும், திரும்பக்கொடுத்தலின் காலத்திற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே வரவேண்டிய சரியான தகுந்த காலமாயிருந்தது. ஏனெனில், "உடன்சுதந்திரராகிய" அவருடைய "சிறுமந்தையின்" தேர்ந்தெடுத்தல் அக்காலங்களுக்கு முன்பாக நடைபெற ஏதுவாக இருந்தது. கிறிஸ்துவின் சபை தெரிந்தெடுக்கப்படும் பொருட்டு மீட்கும்பொருளில் நியமிக்கப்பட்டதும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதுமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கும் விஷயத்தில் தேவன் தாமதிப்பதுபோல் சிலருக்குத் தென்படுகிறது. மனிதர் எதிர்பார்க்கக்கூடிய காலத்திற்கு நெடுநாள் முன்பே விலைக்கிரயம் செலுத்தப்பட்டதன் நோக்கம், திருச்சபையை சேர்க்குதலாகிய மகிமை பொருந்திய வேலை நடந்தேறுவதற்காகத் தான். இவ்வேலை முடிந்த பின்பே, முன் தீர்மானத்தின்படி ஏற்ற சமயத்தில் ஆசீர்வாதங்கள் பொழியப்படும்.

பேதுரு அப்போஸ்தலன் நமக்கு அறிவிக்கிறபடி இயேசுவானவர் பூலோகத்திலிருந்து பரலோகத்திற்கு ஏறினது முதல், ஆயிரவருட யுகம் அல்லது திரும்பக்கொடுத்தலின் காலங்கள் வருமட்டும் உள்ள இடைப்பட்ட காலங்களில் அவர் பூமியிலிராமல் பரலோகத்திலிருக்கிறார் என அறிவிக்கிறார். "தீர்க்கதரிசிகள் மூலமாக தேவன் உரைத்தவைகள் எல்லாம் திரும்பக் கொடுத்தலின் காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்." (அப்.3:21) இவ்விதமாக நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகையின் நோக்கமானது, இழந்துபோன எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கிறதற்கென்றும் அவர் வெளிப்படும் காலத்தில் எல்லா ஜனங்களும் மனந்திரும்பியிருப்பார்கள் என்பதற்கு நேர் விரோதமாக எல்லாரும் கோபமாயிருப்பார்கள் (வெளி.11:18) என வேத வசனங்கள் போதிக்கிறது. இதன் காரணமாக சபையானது தன்

ஊழியத்தை நிறைவேற்ற முடியாமல் தோல்வியைச் சந்திக்கும் எனவும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. இல்லாவிட்டால் நாம் சொல்லுகிறபடியும் ஏற்கனவே காட்டியிருக்கிற பிரகாரமும் தற்காலத்தில் உலகத்தை மனந்திரும்பச் செய்வது சபையின் ஊழியத்தின் எதிர்பார்ப்பாக இல்லாமல், மாறாக சபையானது சுவிசேஷத்தை இவ்வுலகம் முழுவதற்கும் சாட்சியாக பிரசங்கிப்பதும், தெய்வீக வழிநடத்துதலின்படி அதனுடைய எதிர்கால மாபெரும் வேலைக்காகத் தன்னை ஆயத்தம் பண்ணிக்கொள்ளுவதுமே எனவும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. தேவன் இன்னும் எந்த வகையிலும் உலகத்தின் மனந்திரும்புதலுக்காகத் தம்முடைய வல்லமையை பிரயோகிக்கவுமில்லை, அதற்காக அவர் முயற்சியும் எடுக்கவில்லை.

இது சிலருக்கு விசித்திரமாகத் தோன்றும். ஆனால், ஒருவேளை உலகத்தை தேவன் மனந்திரும்பச் செய்யும் வேலையைச் செய்ய முயற்சி செய்திருப்பாரானால் அவ்வேலையை தற்காலத்தில் செய்து முடிக்க முடியாமல் போனாரென்று அவர்கள் சிந்திக்க வேண்டும். ஏனெனில், நாம் ஏற்கனவே பார்க்கிறபடி பூமியின் கோடிக்கணக்கான ஜனங்களில் கொஞ்சம்பேர் மாத்திரம், இரட்சிக்கப்படும்படியாக கட்டளையிடப்பட்ட ஒரே நாமத்தைக் குறித்து சரியானவிதமாய் கேள்விப்பட்டிருக்கிறார்கள். பாப்டிஸ்டுகள், பிரஸ்பிட்டேரியன் முதலிய முக்கிய வகுப்பார் சிலருடைய கண்ணோட்டங்களையும் உபதேசங்களையும் நாம் வற்புறுத்தி கூறியிருக்கிறோம். அதன்படி தேவன் இந்த உலகத்திலிருந்து ஒரு சிறுமந்தையாகிய சபையை தெரிந்துகொள்ளுதலைத் தவிர இவ்வுலகத்திற்கு வேறொரு காரியமும் செய்வதில்லை என அவர்கள் நம்பியிருக்கும்போது, தேவனுடைய திட்டத்தில், சபை மகிமையடைந்த பின்பு அந்த சபையின் மூலம் உலகத்திற்கு திரும்பக்கொடுத்தல் என்ற ஆசீர்வாதமான காலங்கள் தேவ திட்டத்தில் உண்டென்றும் மேலும் ஒரு படியை வேதவாக்கியங்கள் மூலம் நாம் அறிகிறோம். இந்த சுவிசேஷ யுகத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட வெற்றி வீரர்களாகிய "சிறுமந்தையே" பூமியில் உள்ள சகல குடும்பங்களையும் ஆசீர்வதிக்கப்போகும் சந்ததி அல்லது சரீரமாகிய "வித்தாக" இருக்கிறது. (கலாத்.3:29)

உலகத்தை மனந்திருத்த யேகோவா தேவன் கடந்த 6000



வருடங்களாக முயற்சி செய்தும், எக்காலத்திலும் அதை நிறைவேற்றமுடியாதபடி தோல்வியடைந்து வருகிறார் என நினைக்கிறவர்கள், தேவனுடைய வசனங்களின் உறுதியின்படி தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறி வருகிறதென்றும், அவருடைய வார்த்தைகள் வெறுமையாய்த் திரும்பாமல் அது அவர் விரும்புகிறதைச் செய்து, தான் அதை அனுப்பின காரியத்தை செய்து முடிக்கும் என்ற கருத்தினை கண்டுபிடிப்பது அவர்களுக்கு கடினமானதாகிறது. (ஏசா 55:11) உண்மை என்னவெனில் இவ்வுலகம் இன்னும் மனந்திரும்பாமலும் கர்த்தரை அறிகிற அறிவினால் நிறையாமலும் இருப்பதே தேவனுடைய வசனமானது அந்த வேலையை இப்போதே செய்யும் நோக்கமாக அனுப்பப்படவில்லை என்பதற்கு ஆதாரமாகிறது.

மேற்சொன்ன இவ்விஷயமானது அநேக நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவர்களை இருவித கருத்துள்ளவர்களாக பிரிக்கிறது. அவை தேர்ந்தெடுத்தல் (Election), மற்றும் இலவசமான கிருபை (Free Grace), இவ்விருவிதமான கருத்துக்களும் வெளிப்படையாக ஒன்றுக்கொன்று நேர்விரோதமாய் இருந்தபோதிலும் வேதவாக்கியங்கள் அவை இரண்டிற்கும் சாதகமாகப் பேசுகின்றன என்பதை எந்த ஒரு வேதமாணவரும் மறுக்க முடியாது. ஆகவே, ஏதாவது ஒரு வகையில் இந்த இருவித கருத்துக்களும் உண்மையாயிருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள இந்த உண்மையானது இடங்கொடுக்கிறது. அதாவது "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து" அறிவதினாலும், தேவனுடைய பிரமாணத்தையும் ஒழுங்கையும் கவனிக்கிறதினாலும் தவிர, வேறெந்த வகையிலும் இவ்விஷயத்தைப் பற்றி சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. தேவனுடைய தெய்வீக திட்டத்தில் இதை கவனிக்கும்போது தேர்ந்தெடுத்தல் என்பது தற்காலத்திலும் இதற்கு முந்தைய காலத்திலும் வளர்ந்து வருகிறதென்பதையும், இலவசமான கிருபை எந்த வகையில் வித்தியாசப்படுகிறதென்றால், ஆயிரவருட அரசாட்சியில் முழு உலகத்தின் ஜனங்களுக்கும் பொதுவாக தேவனால் ஏற்படுத்தப்பட்ட கிருபையான ஒரு ஏற்பாடாகும். காலங்களையும் யுகங்களில் நடந்தேறும் வித்தியாசமான சம்பவங்களையும் பற்றி முன் அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளதை நாம் ஞாபகத்தில் கொண்டுவந்து, அது "தேர்ந்தெடுத்தல்" மற்றும் "இலவசமான கிருபை" என்ற இரு உபதேசங்களுக்கு சம்பந்தமான எல்லா வேத

வாக்கியங்களையும் ஆராய்ச்சி செய்து படிப்போமானால், தேர்ந்தெடுத்தல் (Election) பற்றிய வசனங்களெல்லாம் தற்கால மற்றும் முற்காலத்திற்குரியதென்றும், இலவசமான கிருபை சம்பந்தப்பட்ட வசனங்களெல்லாம் முழுமையாக அடுத்த யுகத்திற்குரியதென்றும் நாம் கண்டுகொள்ளலாம்.

இருந்தபோதிலும் "தேர்ந்தெடுத்தல்" என்பது அநேகர் நம்பி போதித்து வருவதுபோல, அது பலவந்தமானது அல்லது அவரவர் விதிப்பயன் என்று வேதம் போதிக்காமல் தெரிந்துகொள்ளுதல் (Selection) என்பது, தேவசித்தத்துக்கு ஏற்றவாறு அதற்காக குறிக்கப்பட்ட காலத்தில் அந்த சித்தம் நிறைவேறும் வகையில் தகுதியடைந்து அந்த சித்தத்தோடு இணைவதாகும்.

இலவசமான கிருபையின் உபதேசமானது அதை ஆதரிக்கிற ஆர்மீனியர்கள் கொள்கையை உடையவர்களால் போதிக்கப்படுவதற்கு மேல், தேவனுடைய திரளான தயவை விசேஷித்து காண்பிக்கிறது. தேவனுடைய கிருபை அல்லது கிறிஸ்துவின் தயவு எப்போதும் இலவசமானது. ஆனால், மனிதன் பாவத்தில் விழுந்தது முதல், தற்காலம் வரைக்கும் தேவனுடைய தயவானது விசேஷமான சில மனுஷருக்கும் ஜாதிகளுக்கும், வகுப்பாருக்கும் மாத்திரம் செல்லத்தக்கதாக கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதே வேளையில் அடுத்த யுகத்தில் அருளப்படும் தயவுகளில் உலகமுழுவதும் பங்கடைய அழைக்கப்படும். மேலும், யாரெல்லாம் விருப்பமுள்ளவர்களாக ஜீவத்தண்ணீரை இலவசமாய் பெற்றுக்கொள்ள வருகிறார்களோ அவர்களுக்கு அது கிடைக்கும். (வெளி. 22:17)

முற்கால சம்பவங்களை நாம் கவனிப்போமாகில் பூமியிலுள்ள சகல ஜனங்களையும் ஆசீர்வதிக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியை பிறப்பிக்க ஆபிரகாமையும், அவருடைய சந்ததியில் சிலரையும் தேவன் தேர்ந்தெடுத்தார் என்பதையும் நாம் காண்கிறோம். (கலா.3:29) மேலும், தேவன் உலகத்திற்காக செய்து முடிக்கப்போகும் மாபெரும் வேலையை நிழலாகக் காண்பிக்கும் பொருட்டு, பூமியின் சகல ஜனங்களிலும் இஸ்ரயேல் ஜனங்களை மாத்திரம் தெரிந்துகொண்டார் என்றும்



பார்க்கிறோம். எவ்வாறெனில் எகிப்திலிருந்து அவர்களுடைய விடுதலை, அவர்களின் கானான் தேசம் அவர்களுடைய உடன்படிக்கைகள், பிரமாணங்கள், பாவநிவர்த்திக்காக அவர்கள் செலுத்தின பலிகள், அவர்களுடைய பாவம் நீக்கப்படுவதற்காக தெளிக்கப்பட்ட இரத்தம், இவை எல்லாவற்றையும் நிறைவேற்ற ஆசாரியத்துவம் ஆகியவைகள், உண்மையான ஆசாரிய முறைமைக்கும் உலகத்தை சுத்திகரிக்க செலுத்தப்படும் உண்மையான பலிகளுக்கும் நிழலாகவும், சித்திரமாகவும் காண்பிக்கிறது. "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் நான் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்" (ஆமோஸ் 3:2) என்று தேவன் இஸ்ரயேல் ஜனங்களிடம் கூறினார். கிறிஸ்து வரும்வரை இந்த ஜனங்கள் மாத்திரமே தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மக்களாயிருந்தார்கள். ஆம், அதன்பிறகு அவருடைய ஊழியம் அவர்களுக்குள்ளேயே நடந்தேறினது மட்டுமின்றி, தம்முடைய சீஷர்கள் இவர்களைத் தவிர மற்றவர்களிடத்தில் செல்ல அவர் அனுமதிக்கவில்லை. அவர் அவர்களை அனுப்புகையில் "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும் சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு போங்கள்" என்றார். ஏன் ஆண்டவரே என்று அவர்கள் கேட்கும்போது, "காணாமற்போன இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றபடியல்ல வென்றார்." (மத் 10:5, 6; 15:24) அவருடைய மரணம் வரை தம்முடைய முழுநேரத்தையும் அவர்களுக்காகவே செலவிட்டதுடன் உலகத்திற்காக தம்முடைய இலவசமான எல்லா கிருபைகளையும் ஏற்றகாலத்தில் தந்து அவர்களை ஆசீர்வதிக்கும் வேலையின் முதல் பகுதியையும் அவர்களிடமே ஆரம்பித்தார்.

தேவனுடைய, இந்த மகா மேன்மையான ஈவு ஒரு குறிப்பிட்ட ஜனங்களுக்கு அல்லது வகுப்பாருக்கு மட்டுமல்ல, அது இஸ்ரயேல் ஜனங்களுக்கு மாத்திரமல்ல. மாறாக முழு உலகத்திற்குமானது. ஏனெனில் தேவனுடைய கிருபையினால் இயேசு கிறிஸ்து ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். (எபி.2:9)

மேலும், இப்பொழுதுங்கூட இந்த சுவிசேஷ யுகத்தில் ஒருவகையான தெரிந்தெடுத்தல் உள்ளடங்கியுள்ளது. உலகத்தின் ஒரு சில பகுதிகள்

மற்றவைகளைக் காட்டிலும் சுவிசேஷத்தினால் (கேட்கிற மனதுள்ளவர்களுக்கு இலவசம்) ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. உலகத்தின் வரைபடத்தை கவனிப்போமானால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் மிகக் குறைந்த சொற்ப ஜனங்களே பிரகாசிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லது ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள் என அறியலாம். நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அறிவையும், எழுதுகைகளையும் வைத்து நிதானிப்போமானால், இலட்சக்கணக்கான புறஜாதி ஜனங்கள் இன்று ஒருபோதும் அந்த அழைப்பை கேட்டிராதவர்களாயும், அதைத் தொடர்ந்து அழைக்கப்படாதவர்களாயும் காரிருளில் இருக்கிறார்கள் என்பதையும் அறியலாம். ஆனால், அவ்வாறு அழைக்கப்பட்ட கூட்டத்தாரின் (தேவனுடைய புத்திரராக, தேவனுடைய சுதந்திரவாளியாக, தங்களுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரராக அழைக்கப்பட்டவர்களின்) தொகை நிறைவடைந்த பிறகே உலகத்தின் எல்லா ஜனங்களுக்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டமானது ஆரம்பிக்கும்.

இந்த வகுப்பார் தெரிந்துகொள்ளப்பட்டு வளர்ச்சியடைந்து அதிகாரத்திற்கு உயர்த்தப்படும் வரைக்கும் "வித்து" சர்ப்பத்தின் தலையை நசுக்காது. "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்." (ரோமர் 16:20; ஆதி. 3:15) சுவிசேஷ யுகமானது வரும் மணவாளனுக்காக கற்புள்ள கன்னிகையாகிய உண்மையுள்ள சபையை ஆயத்தப்படுத்துகிறது. இந்த யுகத்தின் முடிவில், அவள் "ஆயத்தம்பண்ணப்பட்டபோது" (வெளி.19:7) மணவாளன் வந்து திருமணத்துக்கு அவரோடுகூடப் போக ஆயத்தமாய் இருப்பவர்களோடு இணைந்த பின்பு, அதாவது இரண்டாம் ஆதாமும், இரண்டாம் ஏவாளும் ஒன்றிணைந்த பின்பே, திரும்பக் கொடுத்தலின் மகிமையான வேலை ஆரம்பமாகும். அடுத்த யுகத்திலே அதாவது புதிய வானத்திலும், புதிய பூமியிலும் சபையானது நிச்சயிக்கப்பட்ட கன்னிகையாயிராமல் மணவாட்டியாயிருக்கும். அப்போது "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளி. 22:17) என்ற வார்த்தைகள் நிறைவேறும்.



இந்த சுவிசேஷ யுகத்தில் சபையினுடைய தெரிந்தெடுத்தலின் பணி முடிவடைந்தாலும் அது எதிர்காலத்தில் நடைபெறப்போகும் மாபெரும் வேலைக்கு அவசியமான ஆயத்தப்பணியாக மட்டுமே இருக்கிறது. வரப்போகிற இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்திற்காக தேவ புத்திரர் வெளிப்பட சர்வசிருஷ்டியும் இது வரைக்கும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது என வாசிக்கிறோம். (ரோமர் 8:22, 19) மேலும், இந்த இலவசமான கிருபையானது முழுமையான ஆசீர்வாதமாக பிதாவாகிய தேவனுடைய திட்டத்தில், வரப்போகிற யுகத்தில் உயிரோடிருக்கிறவர்களுக்கு மாத்திரமல்லாது மரித்தவர்களுக்குமான ஒரு ஆசீர்வாதமான வாய்ப்பாக அமையும்.

கர்த்தருடைய மரணத்தின் மூலம் வாங்கப்பட்ட மாபெரும் ஆசீர்வாதங்கள் அவருடைய இரண்டாம் வருகையில் தான் அளிக்கப்படும் என்று குறிப்பிடத்தக்க அளவு சிலர் அறிந்திருந்தாலும், உயிரோடிருக்கிறவர்களைப்போல, பிரேதக்குழிகளிலுள்ளவர்களும் விழுந்துபோன மரண நிலைமையிலிருந்து மேசியாவின் மகிமைபொருந்திய ஆளுகையில் ஆசீர்வாதமடையப் போகிறார்களென்பதைக் கவனிக்கத் தவறியிருக்கிறார்கள். ஆனால், இயேசு எல்லாருக்காகவும் மரித்திருப்பது எவ்வளவு நிச்சயமானதாயிருக்கிறதோ, அவ்வளவாய் அவருடைய விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட ஆசீர்வாதங்களையும் வாய்ப்புகளையும் அனைவரும் அதே நிச்சயத்தோடு பெற்றுக்கொள்வார்கள். ஆகவே, ஆயிரவருட யுகத்தின் ஆசீர்வாதங்கள் பிரேதக் குழிகளில் உள்ளவர்கள் மேல் மட்டுமல்லாது, மரண நிலைமையில் உயிரோடிருக்கும் எல்லா மனுஷர்மேலும் வரும் என்பதை நாம் கண்டிப்பாக எதிர்பார்க்க வேண்டும். இவ்விஷயம் சம்பந்தமாக நாம் தேவனுடைய வசனங்களில் இன்னும் ஆழமாக ஆராய்ச்சி செய்வோமானால் இதற்கு ஆதாரமாக ஏராளமான வசனங்களுள்ளதைக் காணலாம். ஏனெனில், தேவனுடைய திட்டத்தில் கல்லறைகளில் உள்ளவர்களின் விடுதலை கூறப்பட்டிருப்பதால் அவர்கள் "நம்பிக்கையுடைய சிறைக் கைதிகள்" என அழைக்கப்படுகிறார்கள்.

ஆதாமின் சிருஷ்டிப்பு முதல் 6000 வருடங்களாக ஏறத்தாழ 14300 கோடி மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என மதிப்பிடப்படுகிறது. இந்த

எண்ணிக்கையில் நியாயமாய் செய்யக்கூடிய விரிவான மதிப்பின்படி, 100 கோடிப் பேருக்கு குறைவாகவே தேவனுடைய பரிசுத்தவான்கள் இருப்பதாக நாம் நிதானிக்கலாம். இந்த விரிவான கணக்கின்படி, வானத்தின் கீழெங்கும் மனுஷருக்குள்ளே அவர்கள் இரட்சிக்கப்படும்படியாக கட்டளையிடப்பட்ட ஒரே நாமத்தில் விசுவாசமும் நம்பிக்கையுமில்லாமல் மரணத்திற்குள் பிரவேசித்த ஒரு மாபெரும் தொகையாக 14200 கோடி (142,000000000) மக்கள் இருக்கிறார்கள் என்று அறிகிறோம். இவர்களில் பெரும்பான்மையானோர் இயேசுவை ஒருக்காலும் அறிந்தவர்களுமல்ல, கேள்விபட்டவர்களுமல்ல. ஆகவே, அவர்கள் கேள்விப்படாததினால் அவரை விசுவாசிக்க முடியாமல் போய்விட்டது.

இந்த ஏராளமான ஜனங்களுக்கு என்ன நடக்கும் என நாம் கேட்கலாம்? அவர்களுடைய தற்கால மற்றும் எதிர்கால நிலைமை என்ன? அவர்களுடைய நிலைமைகளையும், சூழ்நிலைகளையும் முன்னதாகவே அறியக்கூடியவரான சர்வ வல்லமையுள்ள தேவன் அவர்களுக்காக ஏதேனும் ஏற்பாடுகளை செய்யவில்லையா? அல்லது அநேகர் நினைக்கிறபடி எந்தவித நம்பிக்கையுமின்றி நித்திய வேதனையுள்ளதும், இரக்கமற்றதும், கொடூரமான காரியங்களை மாத்திரமே உலகத்தோற்ற முதல் அவர்களுக்கு நியமித்து உள்ளாரா? அல்லது அவர்களனைவரும் இயேசு என்கிற ஒரே நாமத்தின் அறிவுக்கு வரவும், அப்போது உள்ள நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவதன் மூலம், நித்திய ஜீவனை அனுபவிக்கும் பொருட்டு, நீள, அகல மற்றும் ஆழமான தெய்வீகத் திட்டத்தில் அவர்களுக்காக ஒரு வாய்ப்பை வைத்திருக்கிறாரா?

இப்படிப்பட்ட கேள்விகளை தனக்குள்ளாகவே கேட்டுக்கொள்ளும் ஒவ்வொரு சிந்திக்கும் கிறிஸ்தவனும், அவைகளுக்கான உண்மையான பதில்களை தேவனுடைய குணநலன்களுக்கு இசைவாகத் தெரிந்துகொள்ள பேராவல்கொள்ளும்போது, பலதரப்பட்ட மக்களின் பதில்கள் ஏற்கனவே உள்ளன:

நாத்திகர்கள் (தேவன் இல்லை என்பவர்கள்) சொல்லும்போது, "மனிதர்களனைவரும் நித்தியமாய் மரித்துப்போகிறார்கள். மரணத்திற்குப்



பின்பு ஒன்றுமில்லை. அவர்கள் இனி ஒருபோதும் மரணத்திலிருந்து எழுந்து மீண்டும் உயிரடைந்து வாழமாட்டார்கள்" என்கின்றனர்.

மேலும், கல்வினியக் கூட்டத்தார் (Calvinism) சொல்லும்போது, "இரட்சிக்கப்படும்படியாக அவர்கள் தெரிந்துகொள்ளப்படவே இல்லை." அவர்கள் நரகத்திற்குப் போகும்படியாகவே தேவன் அவர்களை முன்குறித்திருக்கிறார். இப்போதே அவர்கள் அங்கே கொடிய வேதனையை அனுபவித்து கொண்டிருக்கிறார்கள் அதிலிருந்து விடுதலையடைய யாதொரு நம்பிக்கையுமில்லாமல் சதாகாலமும் அங்கேயே இருப்பார்கள் என சொல்லுகிறார்கள்.

ஆர்மீனியர்கள் "அவர்களில் அநேகர் அறியாமையில் இருப்பதினால் தேவன் அவர்களை மன்னிப்பார் என விசுவாசிக்கிறோம். இயேசுவைப்பற்றி ஒருக்காலும் கேள்விபடாதவர்களாயிருந்த போதிலும் அவர்கள் 'முதற்பேறான சபையின்' ஒரு பாகமாயிருப்பார்கள்" என போதிக்கின்றனர்.

இந்தக் கடைசி கருத்தையே எல்லா கிறிஸ்தவ பிரிவுகளின் கிறிஸ்தவர்களும் ஏற்றுக்கொள்வதுடன் (அவர்களுடைய கொள்கைக்கு விரோதமாக இக்கருத்து இருந்தபோதிலும்) வேறெந்த கருத்தும் தேவன் நீதியுள்ளவரென்பதை நிரூபிக்க முடியாமற்போகுமென்று உணருகிறார்கள். ஆனால், இக்கடைசிக் கருத்திற்கு வேத வசனங்கள் ஒத்துப்போகிறதா? அறியாமை இரட்சிப்புக்கு ஆதாரமென்று அவைகள் போதிக்கிறதா? இல்லை. கிறிஸ்துவே நமது மீட்பரும் ஆண்டவரும் என்ற விசுவாசமே இரட்சிப்பின் ஒரே ஆதாரமென்று வேதவசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்." (எபே.2:8) விசுவாசத்தினாலாகும் நீதியே முழு கிறிஸ்தவத்திற்கும் ஆன அடிப்படைக் கொள்கையாகும். "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்டதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி என அப்போஸ்தலர்கள் பதிலளித்தனர். "நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை." (அப்.4:12) "கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்." (ரோமர் 10:13)

ஆனால், ஒரு மனுஷன் விசுவாசிக்க வேண்டுமெனில் சுவிசேஷத்தை முன்னதாக கேட்கவேண்டும் என அப்பவும் பகுத்தறிவைத் தூண்டுகிறார்: "அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்வார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" (ரோமர் 10:14)

அறியாமை மனிதனை இரட்சிக்கும் என அப்பவும் போதிக்கிறாரென சிலர் சொல்கிறார்கள். ரோமர் 2:14 இல் அவர், "நியாயப்பிரமாணமில்லாத புறஜாதியார் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள்." என்று கூறுகிறார். மனசாட்சிப் பிரமாணமே அவர்களை நீதிமான்களாக்கப் போதுமானது என இந்த வசனத்திலிருந்து அநேகர் பேசுகிறார்கள். அவ்விதமாய்ப் பேசுகிறவர்கள், அப்பவுடைய வார்த்தைகளைத் தவறாய்ப் புரிந்துகொண்டார்கள். அவருடைய வாதம் என்னவெனில் முழு உலகமே தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளவர்களாய் இருக்கிறார்களென்பதே. (ரோமர் 3:19) நியாயப்பிரமாணத்தைப் பெறாத புறஜாதிகள் மனசாட்சி பிரமாணத்தின்படி நீதிமான்களாக்கப்படாமல், அதினாலே அவர்கள் குற்றவாளிகளானாலும் அல்லது மன்னிப்படைந்தாலும் அவர்கள் அபூரணர்களும், ஜீவனுக்குத் தகுதியில்லாதவர்களென்றே தீர்க்கிறது. எவ்வாறெனில், நியாயப்பிரமாணத்தை பெற்றிருந்த யூதர்களும்கூட அந்த பிரமாணத்தினாலேயே குற்றவாளிகளென்று தீர்க்கப்பட்டனர். "ஏனெனில் பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது." (ரோமர் 3:20) யூதருக்குத் தரப்பட்ட நியாயப்பிரமாணமானது அவர்களுடைய பெலவீனத்தை வெளிப்படுத்தினதுடன், தேவனுக்கு முன்பாக தன்னை நீதிமானாக்க முடியாதென்பதை காண்பிப்பதற்காகவே தரப்பட்டுள்ளது. "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே ஒரு மனுஷனும் தேவனிடத்திலே நீதிமானாக்கப்படுவதில்லை." நியாயப்பிரமாணமானது யூதனைக் குற்றமுள்ளவனென்று தீர்க்கிறதுபோல, புறஜாதிகள் தாங்கள் குற்றமுள்ளவர்களென புரிந்துகொள்ளும் அளவிற்கு மனசாட்சிப் பிரமாணத்தின் வெளிச்சத்தைப் பெற்றிருக்கிறார்கள். இக்காரணத்தினால் முழு உலகமும் தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளவர்களாக இருப்பதுடன் ஒவ்வொருவரும் ஜீவனுக்குரிய உரிமையைக் கோரமுடியாமல் போய்விட்டது.



யாக்கோபு அப்போஸ்தலனுடைய வார்த்தையை (யாக். 2:10) நாம் நினைவுகூரும்போது, ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருந்து, நியாயப்பிரமாண உடன்படிக்கையில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தையாகிலும் அடைய முடியாதென்பதையும், "அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10) எனவும் அறிகிறோம். இவ்விதமாக தீர்ப்புக்குட்பட்ட ஒருவனாகிலும் தங்களுடைய புண்ணிய கிரியைகளினாலே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாதோ அதே போல அறியாமையும் இரட்சிப்பின் ஆதாரமாக சொல்ல முடியாததும், உபயோகமற்றதுமாகும். அவ்விதமான இரட்சிப்பின் கதவுகளை வேதவாக்கியங்கள் அடைத்துள்ளது. மேலும், விசுவாசத்தினாலும் கீழ்படிதலினாலும் கிடைக்கக்கூடிய வெகுமதிகளை அறியாமையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது.

அறியாமையிலுள்ள கோடிக்கணக்கான குழந்தைகளும், புறஜாதி சமயத்தினர் ஆகிய இருவரும் நித்தியமாகக் கெட்டுப்போவார்கள் (சதாகாலமும் நித்திய வேதனை ஸ்தலத்திற்கு அனுப்பப்படுதலே நித்தியமாக கெட்டுப்போதல் என அநேகர் போதிக்கப்பட்டிருக்கிறார்கள்) என்பதை நம்பவிரும்பாத அநேக கிறிஸ்தவர்கள், இந்த வேதவாக்கியங்களுக்கு மாறாக, பேதைகளையும் அறியாமையுள்ளவர்களையும் தேவன் குற்றமுள்ளவர்களாக தீர்க்கமாட்டாரென்று வலியுறுத்துகின்றனர். அவர்களுடைய தாராளமான மனதையும், தேவனுடைய நற்குணத்தையும் மதிக்கிற அவர்களுடைய அறிவையும் குறித்தும் புகழ்ந்தாலும், வேதவாக்கியங்களை ஏற்றுக்கொள்ளாமல் தீவிரமாக அவைகளைப் புறக்கணிக்கும் செயலை நாம் கண்டிருக்கிறோம். அறியாமையினால் கிடைக்கும் ஆசீர்வாதங்களைவிட மேலான வழியை தேவன் வைத்திருக்கிறார்.

ஆனால், அவர்கள் கூறுகின்ற நம்பிக்கையின்படி நடக்கிறார்களா? இல்லை. அறியாமையிலுள்ள ஜனங்கள் அதினாலேயே இரட்சிக்கப்படுவார்கள் என நம்பும்போது, விலைமதிக்க முடியாத ஆயிரக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்து, லட்சக்கணக்கான பணத்தையும் செலவு செய்து தொடர்ந்து புறஜாதியாருக்கு ஊழியக்காரரை

(மிஷினரிகளை) அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். மற்ற ஜனங்களெல்லாரும் அல்லது அவர்களில் பாதிபேராகிலும் அறியாமையின் மூலம் இரட்சிக்கப்படுவார்களானால், கிறிஸ்துவைப் பற்றி போதிப்பதற்கு மிஷினரிகளை அனுப்புவது அவர்களுக்கு கண்டிப்பாக ஒரு காயத்தை ஏற்படுத்தும். ஏனெனில், மிஷினரிகள் அவர்களிடத்தில் செல்லும்போது ஆயிரத்தில் ஒருவன் நம்புவது கடினமானதாயிருக்கிறது. இந்த எண்ணம் சரியானதாயிருக்குமானால், அவர்களையே அப்படியே அறியாமையிலிருக்க விட்டுவிடுவதே உத்தமமாயிருக்கும். அப்போது மிகவும் ஏராளமானபேர் இரட்சிக்கப்படுவார்களே. இவ்விதமாக நாம் பேசுவோமாகில், தேவன் எல்லா மனுஷரையும் அறியாமையிலேயே வைத்திருப்பாரானால், எல்லாருமே இரட்சிக்கப்படுவார்களே என்று நாம் நியாயப்படுத்தலாமே. அப்படியானால், இயேசுவின் வருகையும், அவருடைய மரணமும் உபயோகமற்றதாயும், அப்போஸ்தலரும் பரிசுத்தவான்களுடைய உபதேசங்களும் பாடுகளும் வீணாய் போவதுடன் சுவிசேஷமானது நற்செய்தியாயிருப்பதற்குப் பதிலாக துர்ச்செய்தியாயிருக்கும். ஒரு மனுஷன் தோன்றுவதற்கு முன்பே மாறாத வண்ணமாய் திட்டம் பண்ணப்பட்டிருக்கிறான் என்ற பயங்கரமான கொள்கையையுடைய கல்வினியர்கள் அல்லது விதியை நம்புபவர்கள், மற்ற ஜனங்களுக்கு மிஷினரிகளை அனுப்புவது நியாயமற்றதும் அபத்தமானதுமானதும்.

ஆனால், மிஷினரி ஆவி முழுமையாக நிரம்பிய வேதம் விசுவாசத்தின் மூலமாக ஒருவித இரட்சிப்பும், கிரியைகளின் மூலமாக ஒருவித இரட்சிப்பும், அறியாமையின் மூலமாக வேறுவித இரட்சிப்புமாக பலவகையான இரட்சிப்பு பற்றி போதிப்பதில்லை. மாத்திரமல்ல, தேவனை அவமதிக்கும், ஊழ்வினை கொள்கையையும் போதிக்கிறதில்லை. மனுக்குலத்தின் மற்ற எல்லா நம்பிக்கையின் வாசல்களை அது அடைத்து, ஒரே ஒரு வாசலை மட்டும் விரிவாய்த் திறந்து, யார் வேண்டுமானாலும் அவ்வாசல் மூலம் ஜீவனுக்குள் பிரவேசிக்கலாம் என்று அறிவிக்கிறது. மேலும், தற்காலத்தில் அந்த ஆசீர்வாதமான வாய்ப்பைப் பெறாதவர்களும் அல்லது தெரிந்துகொள்ளாதவர்களும், ஏற்றகாலத்தில் அவ்வாசலைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வார்கள் எனவும் போதிக்கிறது. சாபத்தண்டனைக்குட்பட்ட முழு மனுக்குலமும் தேவனிடத்தில் வர, அவர்களுடைய புண்ணியக் காரியங்களினாலுமல்ல,



அறியாமையினாலுமல்ல. மாறாக, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற கிறிஸ்துவின் விலைபெறப்பட்ட இரத்தத்தின்மேல் வைக்கும் விசுவாசமே அந்த ஒரே வழியாகும். (1 பேதுரு 1:19; யோவான் 1:29) "எல்லா ஜனத்துக்கும்" மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி இதுவேயாகும்.

தேவன் நமக்கு இக்காரியங்களை சொல்லுகிற பிரகாரமாய் இப்போது அவைகளை கவனித்து அவருடைய குணாதிசயங்களை விளக்கிக்காட்ட அவரிடமே விட்டுவிடுவோம். 14200 கோடிபேருக்கும் என்னவாகும் என நாம் பரிசோதனை செய்வோமாக.

அவர்களனைவருக்கும் என்ன நேரிட்டிருந்தாலும் அவர்கள் வேதனை அடைகிற நிலையில் இப்போதில்லை என உறுதியாக சொல்லலாம். ஏனெனில் கிறிஸ்து வரும்வரை சபைக்கு பூரணமும் முழுமையுமான பலன் தரப்படுவதில்லை எனவும், அவர் வரும்போது அவனவன் கிரியைக்குத் தக்க பலனை அளிக்கும்போது (மத்.16:27) அநீதியுள்ளவர்களும் தங்களுக்குரிய தண்டனையையும் பெறவேண்டும் எனவும் வேதம் கூறுகிறது. அவர்களது தற்கால நிலைமை எப்படி இருந்தாலும் இது அவர்களுடைய பூரணமான பலனல்ல. ஏனெனில், "அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று வைக்கவும் கர்த்தர் அறிந்திருக்கிறார்" என்று பேதுரு கூறுகிறார். (2பேதுரு 2:9) தேவனும் அப்படியே செய்வார்.

மனுஷரில் அநேகர் இரட்சிப்பை அடைவதற்கு அவசியமான அறிவைப் பெறாமற்போனதினால் அவர்கள் எப்போதாவது அதை இழந்து போவார்களானால் அது அன்பும் இரக்கமுமுள்ள அனைவருக்கும் நிச்சயமாகவே கவலையளிக்கிற விஷயமாயிருக்கிறது. அது மாத்திரமல்ல இம்மாதிரியான கருத்துக்களை ஆதரிக்காத அநேக வசனங்கள் உள்ளதை நாம் கவனிப்போமாக. வரப்போகிற யுகமாகிய திரும்பக்கொடுத்தலின் காலங்களில் உள்ள எல்லா நம்பிக்கையையும் ஒதுக்கிவிட்டு, முற்காலமும் தற்காலமுமே இரட்சிப்படைய ஏற்றகாலங்கள் என்று கூறினால் "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவான் 4:8), "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல்

நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16) என்ற வசனங்களின் கருத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது? இவ்வளவாய் தேவன் இவ்வுலகில் அன்பு கூர்ந்தாரானால், விசுவாசிகள் இரட்சிக்கப்படுகிறதற்கு மட்டுமல்ல, எல்லா மனுஷரும் சத்தியத்தைக் கேட்டு விசுவாசிக்கத்தக்கதாக ஒரு ஏற்பாட்டை அவர் செய்திருக்கமாட்டாரா என தோன்றவில்லையா?

மேலும், நாம் யோவான் 1:9–இல் "உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" என வாசித்தாலும், எல்லா மனுஷரும் பிரகாசிப்பிக்கப்படவில்லை என்பதை நாம் கவனிக்கிறோம். உலகத்தில் கோடிக்கணக்கான ஜனங்களில் வெகுசிலரைத் தவிர எல்லாரையும் நம் கர்த்தர் வெளிச்சத்திற்குள்ளாக்கினார் என்பதை நாம் கவனிக்க முடிவதில்லை. சத்திய வெளிச்சம் இருக்கிற தற்காலத்தில், கோடிக்கணக்கான புறஜாதி ஜனங்கள் அவ்வாறு பிரகாசிக்கப்பட்டிருப்பதாக எந்த ஒரு சாட்சியும் தருவதில்லை அல்லது சோதோமியராவது, வேறெந்த முற்கால ஜனக்கூட்டங்களாவது அப்படி பிரகாசிப்பிக்கப்பட்டிருக்கிறதற்கான சாட்சியுமில்லை.

தேவனுடைய கிருபையினால் "ஒவ்வொருவருக்காகவும்" இயேசு கிறிஸ்து மரணத்தை ருசிபார்த்தார் என எபிரெயர் 2:9 –இல் வாசிக்கிறோம். 14300 கோடி ஜனங்களுக்காக அவர் மரணத்தை ருசிபார்த்திருக்கும்போது, ஏதாவது ஒரு காரணத்திற்காகவாவது அந்த பலியானது 100 கோடிபேருக்கு மாத்திரமே பலனளிக்கிறதானால், அந்த மீட்பின் வேலையானது ஏறத்தாழ தோல்வியானதாயிருக்குமல்லவா? அப்படியிருந்ததானால் அப்போஸ்தலனின் கூற்று மிகவும் பரந்து இருக்கவில்லையா? மேலும், நாம் வாசிக்கும்போது லூக்கா 2:10–இல் "இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்குகிற நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று வாசிக்கிறோம். நம்மைக்குறித்து பார்க்கும்போது அந்த நற்செய்தியானது எல்லா மனுஷருக்கும் அல்ல, சிறுமந்தையாகிய ஒரு சிலருக்கு மாத்திரமாயிருந்தால் தூதர்கள் அன்று மேசியாவைப் பற்றி தாங்கள்



அறிவித்த செய்தியானது மிதமிஞ்சினதாகவும், அந்த நற்செய்தியின் ஆழத்தையும் அகலத்தையும் குறித்து அளவுக்கு அதிகமாக பேசினதாயிருக்கும் என்றும் நாம் ஆச்சரியப்பட கட்டாயப்படுத்தப்படுகிறோம்.

மேலும், "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே." (1 தீமோத்தேயு 2:5, 6) உலகின் எல்லாரையும் மீட்கும்பொருளா? அப்படியானால் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் ஏன் அனைவரும் ஒரு சில நன்மைகளையாவது பெறவில்லை? அவர்கள் அனைவரும் விசுவாசிக்கத்தக்கதாக சத்தியத்தின் அறிவுக்குள்ளாக ஏன் வரவில்லை?

சரியான திறவுகோல் இல்லாமல், மேற்கூறிய வசனங்கள் எப்படி புரிந்துகொள்ள முடியாததும், ஒன்றுக்கொன்று இசைவில்லாததாகவும் தோன்றுகிறது. ஆனால், தேவனுடைய திட்டத்தின் திறவுகோலை நாம் கண்டுபிடிக்கும்போது இவ்வசனங்களனைத்தும் "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று ஒரே விதமாக அறிவிக்கின்றன. இத்திறவுகோலானது இவ்வசனத்தின் கடைசிப்பகுதியில் காணப்படுகிறது. "எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே. இதற்குரிய சாட்சி ஏற்றகாலங்களில் விளங்கிவருகிறது." தேவன் ஒவ்வொன்றிற்கும் ஏற்ற காலத்தை வைத்திருக்கிறார். கடந்தகால வாழ்க்கையில் தேவன் எல்லாருக்கும் அதின் சாட்சியத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும். ஆனால், அவர் அப்படி செய்யாததினால் அவர்களுடைய ஏற்றகாலம் என்பது எதிர்காலத்திற்குரியதாயிருக்க வேண்டுமென்று அது நிரூபிக்கிறது. கிறிஸ்துவின் மணவாட்டியும் ராஜ்யத்தின் மகிமையில் பங்குபெறப்போகிறவர்களுமாகிய, சபை வகுப்பாருக்கு தற்காலமே அவர்கள் கேட்பதற்கான "ஏற்ற காலமாயிருக்கிறது." மேலும், தற்காலத்தில் கேட்பதற்கு காதுள்ளவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் கேட்டு அதன்படி நடப்பார்களாக. அதற்கேற்றாற்போல் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். நமது மீட்கும் பொருளை இயேசுவானவர் நாம் பிறப்பதற்கு முன்னமே அவர் செலுத்தியிருந்தாலும், நாம் அதை பற்றி கேள்விப்படுவதற்கு அக்காலம்

ஏற்றக்காலமாயில்லை. அநேக வருஷங்களுக்குப்பின், அதைப் பற்றி கேள்விப்பட்ட பின்னரே அதைக் குறித்தான பொறுப்பு நம்மீது வருகிறது. இக்கருத்து எல்லாருக்கும் பொருந்துகிறது. தேவனுடைய ஏற்றகாலத்தில் இதற்குரிய சாட்சி விளங்கி வருவதுடன், அதன் பின்பே எல்லாரும் விசுவாசிக்கத்தக்கதாக வாய்ப்பைப் பெற்று அதன் மூலம் ஆசீர்வதிக்கப்படுவர்.

மரணமே எல்லா பரிசோதனைகளுக்கும் முடிவானது என்பது நிலவிவரும் கருத்தாகும். ஆனால், வேதத்தில் எந்தவொரு வசனமும் அவ்வாறு போதிப்பதில்லை. மரணமே உலகின் அறியாமையில் இருக்கும் கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையின் முற்றுப்புள்ளி என்பது, மற்ற அநேக வசனங்களை அர்த்தமற்றதாக்குவதுடன் மோசமாக்குவதாகவும் உள்ளது. இக்கருத்தை நிரூபிக்கும் வகையில் உபயோகப்படுத்தப்படும் ஒரு வசனம் பிரசங்கி 11:3–ல் "மரமானது தெற்கே விழுந்தாலும் வடக்கே விழுந்தாலும், விழுந்த இடத்திலேயே மரம் கிடக்கும்." இது மனிதனுடைய எதிர்காலத்திற்கு சம்பந்தப்பட்டதாக இருப்பின், ஒருவன் எந்த நிலையில் மரித்து கல்லறைக்கு செல்கின்றானோ அவன் மறுபடியும் கல்லறையிலிருந்து எழுந்து வரும்வரை அவனிடத்தில் எந்த மாறுதலும் இருக்காது என்பதே அந்த வசனம் வெளிப்படுத்தும் கருத்தாகும். இந்த உபதேசமே வேதாகமத்தின் ஒரே சீரான உபதேசமாகும். பின்வரும் அத்தியாயங்களில் இது காண்பிக்கப்படுகிறது. தேவன் மனிதரை அவர்களுடைய அறியாமையினால் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற நோக்குமுடையவராயிராமல், "எல்லா மனிதரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவேண்டும்" (1 தீமோத்தேயு 2:4) என்ற நோக்கத்தையே உடையவராயிருக்கிறார். மேலும், உலகின் மனுக்குலம் அறியாமையில் மரித்திருக்கிறதினாலும், "பாதாளத்தில் செய்கையும் அறிவும் வித்தையும் ஞானமும் இல்லையே" என பிரசங்கி 9:10–ல் கூறப்பட்டுள்ளபடியினாலும், தேவன் மனுஷர் அறிவையும் விசுவாசத்தையும் இரட்சிப்பையும் அடையும்படி மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலை அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். ஆகவே, அவருடைய திட்டமானது, "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள், ஆனால், அவனவன் தன்தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவான்." முதலாவது மணவாட்டியாகிய கிறிஸ்துவின் சரீரம்,



அதாவது சுவிசேஷ யுக சபை; அதன் பின்பு ஆயிர வருட அரசாட்சியில், அவருடைய பிரசன்னத்தின் நாட்களில் அவருடையவர்கள் ஆகிற சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் அவரை அறிந்துகொள்ளும் ஏற்ற காலமாயிருக்கும். 1 கொரிந்தியர் 15:22

முதலாம் ஆதாமினால் மரணம் வந்ததுபோல, இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவினால் ஜீவன் வருகிறது. முதலாம் ஆதாமினால் மனுக்குலமானது இழந்துபோன அனைத்தும் இரண்டாம் ஆதாமை விசுவாசிக்கிறவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. மனுக்குலம் முழுவதும் எழுப்பப்படும்போது, ஆதாம் பெற்றிராத தீமையின் அனுபவத்தின் பலனாக, தேவனுடைய ஈவாகிய மீட்பை நன்றியுடன் ஏற்றுக்கொள்பவர்கள், ஆதி நிபந்தனையாகிய கீழ்ப்படிதலின் மூலம் நித்திய ஜீவனைப் பெற்று சதாக்காலங்களும் வாழலாம். அதற்கு பரிபூரணக் கீழ்ப்படிதல் அவசியம். அந்த பரிபூரண கீழ்ப்படிதலுக்கு வேண்டிய சக்தி, சமாதானப் பிரபுவின் நீதியின் ஆட்சியில் தரப்படும். இதுவே உலகத்திற்கு அருளப்படும் இரட்சிப்பு.

மக்கள் அனைவரும் முடிவில் மீட்கப்படுவார்கள் என்ற கொள்கையுடையோர் (Universalists), தவிர மற்றெல்லாராலும் ஒதுக்கப்படுகிற மற்றொரு வசனத்தை ஆராய்வோம். நாம் அவ்விதமான கொள்கையுடையவர்களல்ல என்றாலும், வேதவசனம் ஒவ்வொன்றும் சாட்சியிடுகிறதை பயன்படுத்தி விசுவாசித்து, அதில் சந்தோஷமடைய, நமக்கு தகுதியுண்டென்று சொல்லுகிறோம். அந்த வசனமானது 1 தீமோ.4:10–ல் "எல்லா மனுஷருக்கும் விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்" என்று கூறுகிறது. தேவன் எல்லா மனுஷரையும் இரட்சிப்பார். ஆனால், கிறிஸ்துவைப் பின்பற்றுவதன் மூலமாய் அவரிடத்தில் வருகிறவர்களை மற்றவர்களைக் காட்டிலும் உன்னதமாக இரட்சிப்பார். எல்லா மனுஷருக்கும் தேவன் தரும் இரட்சிப்பானது, அவர்களுடைய சுதந்திரமான விருப்பத்திற்கோ, ஜீவனையாகிலும், மரணத்தையாகிலும் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு இருக்கும் உரிமைக்கோ விரோதமாக அது (இரட்சிப்பு) இருக்காது. "ஜீவனையும் மரணத்தையும் நான் இன்று உங்களுக்கு முன்பாக வைக்கிறேன். நீங்கள் பிழைக்கத்தக்கதாக ஜீவனைத்

தெரிந்துகொள்ளுங்கள்."

சிமியோன் இருவித இரட்சிப்பை வித்தியாசப்படுத்திப் பேசும்போது, "உம்முடைய ஜனமாகிய (உத்தம) இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் ஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகவும் இருக்கிற உம்முடைய இரட்சிப்பை என் கண்கள் கண்டது" (லூக்கா 2:30, 31) என்று கூறுகிறார். மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்து எல்லாரையும் மீட்கும்பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த விஷயமானது, ஏற்றகாலத்தில் எல்லாருக்கும் சாட்சியாக விளக்கப்பட வேண்டியதென்ற அப்போஸ்தலருடைய வார்த்தையோடு மேற்சொன்ன வாக்கியம் ஒத்துப்போகிறது. இதுவே எல்லா மனுஷருக்கும் கிடைக்கிறதாயிருக்கிறது. இதற்கு அவர்களுடைய விசுவாசமோ அல்லது சித்தமோ வேண்டுவதில்லை. எல்லா ஜனத்திற்கும் ஒரு இரட்சகர் இருக்கிறார் என்ற நற்செய்தி இருந்தாலும் (லூக்கா 2:10,11) பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுதலையாக்குகிற ஒரு விசேஷமான இரட்சிப்பு, அவரை விசுவாசிக்கிறவர்களாகிய அவருடைய ஜனத்திற்கு மட்டும் வரும். (மத்.1:21) ஏனெனில், குமாரனை விசுவாசியாத அவிசுவாசியின்மேல் தேவ கோபம் நிலைநிற்குமென்று நாம் வாசிக்கிறோம். (யோவான் 3:36)

அதன்பின் ஒவ்வொருவருக்கும் வரும் பொதுவான இரட்சிப்பானது, மெய்யான ஒளியிலிருந்து வரும் பிரகாசத்தையும் ஜீவனைத் தேர்ந்தெடுக்கும் ஒரு வாய்ப்பையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது எனப் பார்க்கிறோம். மேலும், மனுக்குலத்தில் பெரும்பாலானவர்கள் கல்லறையில் இருப்பதால், இரட்சகரைப்பற்றிய நற்செய்தியானது அவர்களுக்கும் சாட்சியாக சொல்லப்பட வேண்டுமாதலால், கல்லறையிலிருந்து அவர்களையும் கொண்டுவர வேண்டுமென்பது அவசியமாகிறது. மேலும், இப்போது விசுவாசிகள் நம்பிக்கையோடு அனுபவிக்கும் பெரிதான இரட்சிப்பானது (ரோமர் 8:24) ஆயிரவருட அரசாட்சியில் நிஜமாகிறதுபோல, அந்த 1000 வருடத்தில் விசுவாசிக்கிறவர்களுக்கு, அதேபோல மெய்யாய் வெளிப்படுத்தப்பட்டு, பாவத்தின் முழு அடிமைத்தனத்தினின்றும், மரணத்தின் அழிவினின்றும் முழுவிடுதலை கொடுத்து, தேவனுடைய பிள்ளைகளாகும் மகிமையான சுயாதீனத்தையும் அந்த பொதுவான இரட்சிப்பானது அடையச் செய்கிறது. ஆனால், இந்த ஆசீர்வாதங்கள்



கிறிஸ்துவின் இராஜ்யத்தின் கட்டளைகளுக்கு மனப்பூர்வமாய் தங்களை ஒப்புக்கொடுப்பதன் மூலமே பெறமுடியும். அதென்னவெனில், இராஜாவின் மேலும் (கிறிஸ்து), அவரது அன்பின் பிரமாணத்தின் மேலும் வைக்கும் பற்றுதலின் அளவுக்குத் தக்கதாய், பூரண நிலைமையை சீக்கிரத்தில் அடையக்கூடும். யாரேனும் சத்திய ஒளியினால் பிரகாசிக்கப்பட்டு, தேவ அன்பின் அறிவை அடைந்து, பரிபூரண மனிதத்துவத்தை (உண்மையாகவோ அல்லது அவ்வாறு கருதப்பட்டபின்போ) அடைந்த பின்போ பயந்து பின்வாங்குகிறவர்களானால் (எபி.10:38,39) அவர்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள். (அப்.3:23) இதுவே இரண்டாம் மரணமாகும்.

"ஏற்ற காலத்தில் சாட்சியாக விளங்கும்" என்ற வாக்கியத்தின் மூலம் இதற்கு முன் கடினமாக தோன்றின வாக்கியங்களெல்லாம் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. உலகத்திற்கு வரும் ஒவ்வொரு மனுஷனையும் ஏற்ற காலங்களில் அந்த மெய்யான ஒளி பிரகாசிக்கும். ஏற்ற காலங்களில் அது "எல்லா மனுஷருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாகும் நற்செய்தியாயிருக்கும்." இந்தப் பிரகாரமாய் இவ்வசனத்தை அர்த்தப்படுத்தாமல் வேறுவகையாக சொல்வது இவ்வசனத்தைப் புரட்டுவது போலாகும். இதே விதமான நியமத்தை அப்பவுல் ரோமர் 5:18, 19ல் மேலும் உறுதியாக்குகிறார். ஆதாமினுடைய மீறுதலினாலே எல்லா மனுஷரும் மரணத்திற்குள்ளாக தீர்க்கப்பட்டதுபோல, கிறிஸ்துவின் நீதியினாலும் அவருடைய மரணபரியந்த கீழ்ப்படிதலினாலும், நீதிமானாக்கப்படுதலுக்கு ஆதாரமுண்டாக்கி இருக்கிறது. மேலும் முதல் ஆதாமிற்குள் எல்லாரும் ஜீவனை இழந்ததுபோல, ஒவ்வொருவருடைய தனிப்பட்ட தவறுகளுக்கு அப்பாற்பட்டு, இரண்டாம் ஆதாமை ஏற்றுக்கொள்வதன் மூலம், ஜீவனை பெற்றுக்கொள்ளலாம் என நியாயப்படுத்துகிறார்.

அப். பேதுருவும் இழந்துபோன எல்லாவற்றையும் திரும்பக்கொடுத்தலைப் பற்றி (Restitution) எல்லா பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாயினாலும் உரைக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார். (அப் 3:19–21) அவர்கள் எல்லோரும் அதை போதிக்கிறார்கள். உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கைக் குறித்து, "இந்த எலும்புகள் அனைவரும்

இஸ்ரவேல் வம்சத்தாரே" என எசேக்கியேல் தீர்க்கதரிசி கூறுகிறார். இஸ்ரவேலை நோக்கி தேவன், "இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும் பண்ணுவேன் என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்; நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்; இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்." (எசேக். 37:11–14)

இதற்கு அப்பரின் வார்த்தைகள் ஒத்திருக்கின்றன. ரோமர் 11:25, 26இல் "புறஜாதியாருடைய நிறைவு (தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், கிறிஸ்துவின் மணவாட்டி) உண்டாகும் வரைக்கும், இஸ்ரவேலில் ஒரு பங்குக்கு கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப் பிரகாரம் இஸ்ரவேலர் எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள்" அல்லது தள்ளப்பட்டுப் போன நிலைமையிலிருந்து திரும்பக் கொண்டுவரப்படுவார்கள். ஏனெனில், "தேவன் தாம் முன்னறிந்துகொண்ட ஜனங்களைத் தள்ளிவிடவில்லை." (ரோமர் 11:2) கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பார் தேர்ந்தெடுக்கப்படுங்காலத்தில் இஸ்ரவேலர் தேவனுடைய கிருபையிலிருந்து விலக்கப்பட்டிருந்தார்கள். ஆனால், அந்த வேலை நிறைவடையும்போது அவர்கள் மீண்டும் தேவ கிருபைக்குட்படுத்தப்படுவார்கள். (ரோமர் 11:28–33) தேவன் அவர்களை எப்படி மீண்டும் இஸ்ரவேல் தேசத்தில் நிலைநிறுத்துவார் என்றும், இனி அவர்கள் ஒருபோதும் அங்கிருந்து பிடுங்கப்படமாட்டார்கள் எனவும் தீர்க்கதரிசன புத்தகங்களில் தெளிவாக உரைக்கப்பட்டிருக்கிறது. "அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்திற்கு திரும்பிவரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களை பிடுங்கமாட்டேன். நான் கர்த்தரென்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்கு திரும்புவார்களென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." (எரே.24:5–7; 31:28; 32:40–42; 33:6–16) இவ்வாக்கியங்கள், அவர்கள் பாபிலோன் சீரியா போன்ற முந்தின



சிறையிருப்பிலிருந்து விடுதலையானதைக் குறிக்கிறதில்லை. ஏனெனில், மறுபடியும் இஸ்ரவேலர் தங்கள் தேசத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டார்களே.

மேலும், கர்த்தர் கூறும்போது, "பிதாக்கள் திராட்சக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தின் நிமித்தமே சாவான்." (எரே.31:29,30) இது இப்போது நடைபெறுகிற விஷயமே இல்லை. இப்போது ஒவ்வொருவனும் தன்தன் பாவத்தினிமித்தம் சாகாமல் ஆதாமின் பாவத்தினிமித்தமே சாகிறான். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறார்கள்." அவன் பாவமாகிய திராட்சக்காய்களைத் தின்றான். நமது பிதாக்களும் அக்காய்களையே தொடர்ந்து தின்றார்கள். அதையும் தொடர்ந்து அவர்களுடைய பிள்ளைகளின்மேல் வியாதிகளையும் துன்பங்களையும் கொண்டுவந்ததுடன், இவ்விதமாய் மரணமாகிய தண்டனை வெகுசீக்கிரமாய் மனுஷர்மேல் வந்துவிட்டது. ஆனால், "ஒவ்வொரு மனுஷனும் தன்தன் பாவத்திற்காக மரிக்கும்" நாள் ஆயிரவருட அல்லது திரும்பக்கொடுத்தலின் நாளேயாகும்.

எதிர்காலத்தைக் குறித்ததான அநேக தீர்க்கதரிசனங்களும் வாக்குத்தத்தங்களும், இஸ்ரவேல் சம்பந்தப்பட்டதாகத் தோன்றினாலும் அவர்கள் (இஸ்ரவேலர்) உலக ஜனங்கள் அனைவரையும் குறிக்கிற முன்னடையாளமான ஜனங்களாக இருப்பதால் வாக்குத்தத்தங்கள் அவர்களோடு செய்யப்பட்டதுடன், அவைகள் சில சமயங்களில் அவர்களுக்கே விசேஷமாய்ப் பொருந்தினாலும், பொதுவாக மற்றும் பெரிய அளவில் அவைகள் (வாக்குத்தத்தங்களும், தீர்க்கதரிசனங்களும்) முழு உலகத்தின் ஜனங்களுக்கே பொருந்தும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இஸ்ரவேலர் ஒரு தேசமாக முழு உலகத்தையும் குறிக்கும் முன்னடையாளமாக இருப்பதோடு, அவர்களுடைய ஆசாரிய முறைமைகள் தெரிந்துகொள்ளப்பட்ட சிறுமந்தையாகிய இராஜரீக ஆசாரியக் கூட்டமாகிய தலையும் சரீரமுமான சபைக்கும், அவர்களுக்காக செய்யப்பட்ட பலிகளும் சுத்திகரிப்பின் முறைகளும், பாவநிவாரணமும், சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்திசெய்யும் "மேன்மையான பலிகளுக்கும்," சுத்திகரிப்புகளுக்கும் மெய்யான பாவநிவாரணத்திற்கும் முன் அடையாளமாயிருந்தன.

அது மாத்திரமல்ல, மற்ற ஜாதிகளையும் பெயர்சொல்லி அழைத்து அவர்களுடைய திரும்பக் கொடுத்தலைப் பற்றியும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். சோதோமைப் பற்றிய உதாரணத்தை நாம் குறிப்பிடலாம். தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிற சோதோமின் திரும்பக்கொடுத்தலை நாம் கண்டுபிடித்தோமானால் பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாயினாலும் முன்னுரைக்கப்பட்ட மகிமையான உபதேசமாகிய திரும்பக்கொடுத்தலானது, எல்லா மனுஷஜாதிக்குமுரியது என்ற இந்த சத்தியத்தினால் நாம் திருப்தியடையலாம். பரிபூரணத்தையும், நித்திய ஜீவனையும் அடைய சோதோமியரும், இஸ்ரவேலர் மற்றும் நம்மைப்போல் ஏன் ஒரு வாய்ப்பைப் பெறக்கூடாது? சோதோமியர் நீதிமான்கள் அல்ல என்பது உண்மையே. இஸ்ரவேலர்களும், இப்போது சுவிசேஷத்தைக் கேட்கிற நாமும் கூட நீதிமான்கள் அல்ல. எல்லாருக்காகவும் மரித்த கிறிஸ்துவின் நீதியின் மூலம் நீதிமான்களாக்கப்படுதலையன்றி "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." நம்முடைய கர்த்தருடைய சொந்த வார்த்தைகளின்படி சோதோமியருடைய அக்கிரமங்களினிமித்தம் தேவன் வானத்திலிருந்து அக்கினியை வருப்பண்ணி அவர்களை அழித்தாலும், தேவனுடைய பார்வையில் சோதோமியர் அதிக அறிவடைந்த யூதர்களைவிட, பெரிய பாவிகளாயிருக்கவில்லை என்று நமக்கு தெரிவிக்கிறது. (ஆதி.19:24; லூக்கா 17:29) கப்பர்நகூமைப்பற்றி யூதர்களிடம் கர்த்தர் கூறும்போது, "உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால் அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்" என்கிறாரே. (மத்.11:23)

இவ்விதமாக சோதோமியர் ஒரு முழுமையான வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை என்றும், அப்படியான வாய்ப்பானது உறுதிபண்ணப்பட்டிருக்கிறது என்றும் கர்த்தர் கூறும்போது, மத்.11:24-ல் "நியாயத்தீர்ப்பு நாளில் உனக்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறுகிறார். நியாயத்தீர்ப்பு நாளைப்பற்றியும் அந்நாளில் நடைபெறப்போகும் வேலைகளைப்பற்றியும் பின்வரும் பக்கங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு உண்மை நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. அதாவது, அந்நாள்



கப்பர்நகூமிற்கு ஒரு இலகுவான காலமாயிருக்கும். ஆனால், சோதோமிற்கு அதைவிட இலகுவான நாளாயிருக்கும். ஏனெனில், இரு பட்டணங்களும் முழு அறிவையும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தின் மூலம் வடிவமைக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களையும் பெற்றிராவிட்டாலும், கப்பர்நகூம் சோதோமைவிட அறிவை அடைந்து அதிக வெளிச்சத்திற்கு விரோதமாக பாவம் செய்தது.

இயேசுவின் இரத்தத்தினால் முத்திரிக்கப்பட்ட புது உடன்படிக்கையின் மூலம் கப்பர்நகூம் மற்றும் எல்லா இஸ்ரவேலரும் நினைவுகூரப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவார்களானால், "பூமியின் எல்லா வம்சங்களோடு"கூட சோதோமும் ஏன் ஆசீர்வாதமடையக்கூடாது? நிச்சயமாகவே அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இயேசுவினுடைய நாளுக்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பாக தேவன் அவர்களை வானத்திலிருந்து அக்கினியை வருப்பண்ணி அவர்கள் எல்லாரையும் அழித்திருக்கும்போதே, அவர்களுடைய திரும்பக்கொடுத்தலைப்பற்றி பேசியிருப்பது, அவர்கள் கல்லறையிலிருந்து எழுந்து வருகிறதைக் குறிக்குமென்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

எசேக்கியேல் 16:48-63இல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை ஆராய்வோம். இப்பகுதியை கவனமாக வாசித்தறியவும். தேவன் இங்கே இஸ்ரவேலை அவர்களுடைய அண்டை நாடுகளான சமாரியாவோடும் சோதோமியரோடும் ஒப்புமைப்படுத்திப் பேசுகிறார். அதில் "நான் நல்லது என்று கண்டபடியினால் அவர்களை ஒழித்துவிட்டேன்" என்று கூறுகிறார். (வசனம் 50) சோதோமை அழித்து சோதோமைவிட அதிக குற்றம்செய்தவர்களை தண்டியாமல் விட்டுவிடுவதினால் பாரபட்சம்போல் தோன்றுகின்ற தேவனுடைய வழிகளைப்பற்றி இயேசுவாவது அல்லது தீர்க்கதரிசியாவது எந்த விளக்கங்களையும் தரவில்லை. அவருடைய மாபெரும் உன்னதமான சித்தம் ஏற்ற காலத்தில் வெளியரங்கமாகிறபோது அவைகளெல்லாம் தெளிவாகும். அப்படி செய்வது தேவன் "நல்லது என்று கண்டார்" என்று மாத்திரம் தீர்க்கதரிசி சொல்கிறார். அதிக பாவம் செய்த மற்றவர்களுக்கு நேரிடுவதைவிட நியாயத்தீர்ப்பு நாளிலே சோதோமியருக்கு நேரிடுவது இலகுவாயிருக்குமென்று இயேசு சொல்கிறார். ஆனால், மரணமே எல்லா பரீட்சைகளையும் முடிவுக்கு

கொண்டுவந்து, அதற்குப் பிறகு சத்தியத்தை அறிகிற அறிவைப்பெறுவதற்கும் கீழ்ப்படிகிறதற்கும் ஒருவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை என்ற எண்ணம் இருக்கும்போது இந்த ஜனங்களுக்கு அந்த ஒரே நாமத்தை அறியும் அறிவின் மூலம் இரட்சிப்படையத்தக்க ஒரு வாய்ப்பைத் தராமல் அவர்களை அழித்துப்போடுவதை நல்லது என்று ஏன் தேவன் கண்டார் என தாராளமாய்க் கேட்கலாம். ஆனால், அவர்களுக்கு ஏற்ற காலமாயிருக்கவில்லை என்பதே அக்கேள்விக்கான பதிலாகும். ஏற்ற காலத்திலே அவர்கள் அனைவரும் மரணத்திலிருந்து விழித்தெழுந்து சத்தியத்தை அறியும் அறிவுக்குள்ளாகி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தின் மூலம் பூமியின் சகல ஜனங்களோடுகூட ஆசீர்வதிக்கப்படுவார்கள். அதன்பின்பு அவர்கள் நித்திய ஜீவனுக்காக பரீட்சிக்கப்படுவார்கள்.

அன்பான தேவன் அமலேக்கியரோடும் மற்ற ஜனங்களோடும் கொண்டிருந்த நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, இஸ்ரவேலருக்கு அந்த ஜாதிகளை அழிக்க அனுமதி மாத்திரம் தராமல், அப்படி செய்வதற்கு கட்டளையே தந்தார். தேவன், "இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன் மேல் இரக்கம் வைக்காமல் புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும், கொன்றுபோடக்கடவாய்" என்று கட்டளையிட்டார். (1 சாமுவேல் 15:3) கவலையற்ற விதமாய் ஜீவனை இவ்வாறு அழிக்கும் செயலானது, தேவனுடைய சுபாவமாகிய அன்புக்கும், இயேசுவின் உபதேசத்தில், "உங்கள் சத்துருக்களையும் சிநேகியுங்கள் " என்பதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லாததாய்த் தோன்றுகிறது. எதுவரைக்கும் அவ்வாறு தோன்றுமெனில், தேவனுடைய தெய்வீகத் திட்டமானது நேர்த்தியானதென்றும், அதிலுள்ள ஒவ்வொரு அம்சமும் ஏற்ற காலத்தில் நிறைவேறும் என்றும், அத்திட்டத்தினுள் மனுக்குலத்தின் ஒவ்வொரு மனுஷருக்கும் அதில் பிரயோஜனமாக இடம் இருக்கிறதென்றும் அறிகிறவரை அவ்வாறு தோன்றும்.

தேவனுடைய நீதியான கோபத்திற்கும் மனந்திரும்பாத



பொல்லாதவர்களை கடைசியாக நிரந்தரமாகவும், முழுமையாகவும் அழிப்பதற்கு அவர் கொண்டிருக்கும் ஆலோசனைக்கும் சோதோமியரும் அமலேக்கியரும் மற்றவர்களும் உதாரணங்களாக நியமிக்கப்பட்டிருந்தார்களென்பதை இப்போது நாம் உணர்ந்து கொள்ளலாம். அவர்களை முன்மாதிரியாக வைத்த செயலானது நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சையின் நாளில், மற்றவர்களுக்கு உபயோகமாயிருப்பது மட்டுமல்லாமல், அது அவர்களுக்கே உபயோகமாயிருக்கும். அமலேக்கியரும், சோதோமியரும், வியாதியினாலும், கொள்ளைநோயினாலும் மரித்ததுபோலவே மரிக்கக்கூடும். அவர்களுக்கு இந்த இரண்டுவிதமான மரணமும் ஒன்றுதான். தீமையின் கேட்டை அறிந்துகொள்வதே அவர்கள் படிக்கவேண்டிய பாடமாயிருந்தது. சோதனைகாலத்தில் அவர்கள் இருக்கும்போது ஏற்ற காலத்தில் அவர்கள் நீதியைக் கற்றுக்கொண்டு நன்மைக்கும், தீமைக்குமுள்ள வித்தியாசத்தை உணர்ந்து ஜீவனை அடையும்படியாக நன்மையைத் தெரிந்துகொள்ளக்கூடும்.

ஆனால், மேலே சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை நாம் இன்னும் சற்று ஆராய்வோம். இஸ்ரவேலரை சோதோமியரோடும், சமாரியாவோடும் ஒப்பிட்டு இஸ்ரவேலரை அதிக பாவம் உள்ளவர்களென்று தீர்த்தப்பிறகு எசே. 16:48–54இல் தேவன் கூறுவதைப் பார்க்கலாம். "நான் சோதோமும் அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற அவர்களுடைய சிறையிருப்பையும், சமாரியாவும் அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற சிறையிருப்பையும் திருப்பும்போது அவர்கள் நடுவிலே நீ சிறையிருக்கிற உன்னுடைய சிறையிருப்பையும் திருப்புவேன்." இங்கு கூறப்பட்ட "சிறையிருப்பு" என்பது மரணமாகிய சிறையிருப்பைக் குறிக்கிறதே தவிர, வேறல்ல. ஏனெனில், வசனத்தில் கூறப்பட்டுள்ளவர்கள் அப்போது மரித்துவிட்டிருந்தார்கள். மரணத்திற்குள்ளாக அனைவரும் சிறைக்கைதிகளே. கல்லறைகளைத் திறந்து அதிலுள்ள சிறைக்கைதிகளை விடுதலையாக்க கிறிஸ்து வருகிறார். (ஏசா.61:1; சக. 9:11; எசே. 16:55)இல் "முந்தின சீருக்குத் திரும்புதல்" என்று இது அழைக்கப்படுகிறது. இது தான் திரும்பக் கொடுத்தல் எனப்படும்.

உன்னதமான வெளிச்சத்தின் கீழும் அறிவின்கீழும் கிறிஸ்துவின்

மூலமாக தேவனுடைய கிருபையினால், தங்களுடைய சொந்த பாவங்களும், பலவீனங்களும் மன்னிக்கப்படுகிறது என்று ஏற்றுக்கொள்ளுகிற சிலர், புது உடன்படிக்கையின் மூலம் அதே கிருபையானது மற்றவர்களுக்கும் பொருந்தும் என்பதை அறிந்து உணராதவர்களாயிருக்கிறார்கள். என்றாலும் தேவனுடைய கிருபையினால், ஒவ்வொருவருக்காகவும் இயேசுகிறிஸ்து மரணத்தை ருசிபார்த்தார் என்கிற அப்போஸ்தலருடைய வார்த்தையை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றும் தோன்றுகிறது. யூதர்களைப் போலவே சோதோமியரையும் அவர்களுடைய முந்தின சீருக்குக் கொண்டு வருவேனென்று தேவன் தீர்க்கதரிசனத்தில் ( எசே. 16:48–63 ) யூதர்களிடம் வஞ்சப் புகழ்ச்சியாக பேசியிருக்க வேண்டும் என்றும், அவர்களை முந்தின சீருக்கு கொண்டுவரும் எண்ணமோ நோக்கமோ அவருக்கு இல்லை என்றும் சிலர் கருதுகின்றனர். ஆனால், இக்கருத்துக்கு பின்வரும் வசனங்கள் ஒத்துவருகின்றதா என பார்ப்போம். (எசே. 16:60–63) "ஆகிலும் உன் இளவயதில் உன்னோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் நினைத்து, நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன். அப்போது உன் தமக்கைகளையும் உன் தங்கைகளையும் சேர்த்துக்கொள்ளுகையில் உன் வழிகளை நினைத்து நாணுவாய் . . . உன்னோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். அப்போது நான் கர்த்தர் என்று அறிவாய். நீ செய்த எல்லாவற்றையும் நான் மன்னித்தருளும்போது, நீ நினைத்து வெட்கி, உன் நாணத்தினால் உன் வாயை இனி திறக்கமாட்டாதிருப்பாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்." சர்வ வல்லமையுள்ள தேவனாகிய யெகோவாவினால் ஒரு வாக்குத்தத்தமானது கொடுக்கப்பட்டிருக்கும்போது தேவன் உண்மையுள்ளவரென்று நம்புகிறவர்கள் அனைவரும் அவ்வாக்குத்தத்தத்தின் நிச்சயத்தை உறுதியான விசுவாசத்தோடு ஏற்று மகிழலாம். குறிப்பாக புது உடன்படிக்கைக்குரிய இந்த ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவுக்குள் தேவனால் உறுதிபண்ணப்பட்டிருக்கிறதென்று அறிந்தவர்கள் இவ்விதமான சந்தோஷமடைவர். இந்த உடன்படிக்கையானது, கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தினால் கத்திகரிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்க்கதரிசனத்தோடு பவுல் அப்போஸ்தலன் தனது



சாட்சியத்தை சேர்க்கிறார். "இந்த பிரகாரம் இஸ்ரவேலர் எல்லாரும் (உயிரோடிருப்பவர்களும் மரித்தவர்களும்) இரட்சிக்கப்படுவார்கள் (அறியாமையிலிருந்து சீர்படுத்தப்படுவார்கள்). மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும் நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது . . . அவர்கள் முற்பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். தேவனுடைய கிருபை வரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே." (ரோமர் 11:26, 29)

தேவன் தம்முடைய கிருபையின் ஐசுவரியங்களை "ஏற்ற காலத்தில்" காண்பிக்கும்போது யூதரும், சோதோமியரும், சமாரியரும், மற்ற முழுமனுக்குலமும் வெட்கி, நாணமடைந்து, திகைத்துப் போவார்கள் என்பதைக் குறித்து நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. இன்னும், இப்போது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும் அநேகர் தேவன் எவ்வளவாய் இவ்வுலகத்தில் அன்புகூருகிறார் என்பதையும், தங்களுடைய எண்ணங்களையும், யோசனைகளையும்விட தேவனுடையவைகள் எவ்வளவு பெரிதானவைகளாயிருக்கின்றது என்பதைக் காணும்போது இவர்களும்கூட ஆச்சரியப்படுவார்கள்.

தேவனுடைய ஆசீர்வாதங்களானது தெரிந்தெடுக்கப்பட்ட சபைக்கு மாத்திரமே என கிறிஸ்தவ ஜனங்கள் பொதுவாக நம்புகிறார்கள். ஆனால் நாம் நினைத்திருந்ததைவிட தேவனுடைய திட்டமானது விஸ்தாரமானது என நாம் காண்பதுடன் "மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை" தேவன் சபைக்கு அருளியிருந்தபோதிலும், அவர் மீட்டுக்கொள்ள அன்புகூர்ந்த உலகத்திற்கும் அபரிமிதமான ஒதுக்கீடுகளை செய்கிறாரென்றும் இப்போது அறிகிறோம். அதுபோலவேதான் யூதர்களும், தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களும் தங்களுக்கு மாத்திரம் உரியவைகளே என எண்ணம் கொண்டு இதேபோல தவறு செய்தார்கள். ஆனால், ஏற்ற காலம் வந்தபோது புறஜாதியாரும் கிருபை பெற்று (சபை வாய்ப்பு) தேவனுடைய இந்தப் பெரிதான கிருபையினால் மகிழ்ந்து களிகூறும் பெரிய மனதுள்ள இஸ்ரவேலில் மீதியானவர்களுடன் அதிகரிக்கப்பட்ட அந்த சிலாக்கியத்தில்

பங்கடைந்தார்கள். ஆனால், மற்றவர்களோ தவறான எண்ணத்தினாலும் மனுஷ பாரம்பரியங்களாலும் குருடாக்கப்பட்டு போனார்கள். ஆயிர வருஷ யுகத்தின் விடியற்கால வெளிச்சத்தையும் உலக முழுவதுக்குமான அதினுடைய கிருபை பொருந்திய நன்மைகளையும் இப்போது உணர்ந்து அறிகிற சபையானது அதிகதிகமாய் பிரகாசிக்கிற வெளிச்சத்திற்கு விரோதமான கிரியை நடப்பிக்காதபடிக்கும் அதினுடைய மகிமையையும் ஆசீர்வாதங்களையும் நன்கு மதியாமல், மனக்கடினமடைந்து போகாதபடிக்கும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பிற்காலத்திலே அநேக ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படுவதற்காக இப்போது வெகுசிலரை மாத்திரம் தெரிந்துகொள்ளும் தேவனுடைய மகிமையான திட்டமானது, கால்வினிசம் (Calvinism) ஆர்மீனியனிசம் (Arminianism) போன்ற சத்தியத்திற்கு எதிரான இரண்டு கோட்பாடுகளினால் காட்டப்படுகிற புரட்டுக்களிலிருந்து எவ்வளவு வித்தியாசமாயிருக்கிறது! கால்வினிசமானது வேத உபதேசங்களாகிய இலவசமான கிருபையை மறுப்பதுடன் மகிமை பொருந்திய உபதேசமாகிய தெரிந்தெடுத்தலை (Election) மிகவும் மோசமாகப் புரட்டுகிறது. ஆர்மீனியனிசக் கொள்கையானது, தெரிந்தெடுத்தல் உபதேசத்தை மறுப்பதுடன் தேவனுடைய இலவசமான கிருபையின் முழு ஆசீர்வாதத்தையும் புரிந்துகொள்ளத் தவறிவிடுகிறது.

கல்வீனியரின் கொள்கை: "தேவன் சர்வ ஞானமுள்ளவர், ஆதிமுதல் முடிவுவரை அவர் சகலத்தையும் அறிந்திருக்கிறார். அவருடைய நோக்கங்களெல்லாம் முற்றிலும் நிறைவேறித் தீருமானதால் சபையாகிய (The Church) சிலரைத்தவிர வேறு யாரையும் இரட்சிக்க வேண்டுமென்று அவர் ஒருக்காலும் கருதவில்லை. நித்திய காலமாய் இரட்சிக்கப்படும்படி இவர்களை (சபையை) மாத்திரம் தேவன் முன்குறித்து தெரிந்துகொண்டார். மற்ற அனைவரும் நித்தியக் காலமாய் வாதிக்கப்பட வேண்டுமென்று முன்குறித்து தெரிந்திருக்கிறார். ஏனெனில், "உலகதோற்றமுதல் தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் அறிந்திருக்கிறார்."

இக்கொள்கையில் நல்ல அம்சங்களிருக்கிறது. அது தேவனுடைய சர்வ ஞானத்தை அறிந்துகொண்டிருக்கிறது. ஆனால், தேவனுடைய மகா



மேன்மையான குணாதிசயங்களாகிய அன்பு மற்றும் நீதி போன்றவைகளைக் குறைத்துக் காண்பித்திருக்காவிட்டால், அது மகா தேவனைப் பற்றிய நமது எண்ணம்போலவே இருக்கும். அதுமட்டுமல்ல 142 பில்லியன் ஜனங்கள், அவர்கள் பிறப்பதற்கு முன்னமே நித்திய வேதனைக்காக முன்குறிக்கப்பட்டிருக்கிறார்கள் எனும்போது இதிலும் தேவனுடைய அன்பானது கேலிக்குரியதாக்கப்பட்டிருக்கிறது. தேவன் அன்பாகவே இருப்பதினாலும், நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரமாயிருப்பதாலும், மேற்சொன்ன கொள்கையின்படி அவருடைய குணங்கள் இருக்காது.

ஆர்மீனியரின் கொள்கை: தேவன் அன்பு நிறைந்தவர், தேவன் மனுக்குலத்தை துன்புறுத்த இவ்வுலகத்திற்குக் கொண்டுவராமல், நன்மையடைய நினைத்தே கொண்டு வந்திருக்கிறார். ஆனால் சாத்தான் ஆதிப்பெற்றோரை வஞ்சித்து ஜெயங்கொண்டதினால் பாவம் இவ்வுலகில் பிரவேசித்து, அப்பாவத்தினால் மரணம் உண்டாயிற்று. அதுமுதல் தேவன் தம்மால் இயன்றளவு மனிதனை அவனுடைய சத்துருவினிடமிருந்து விடுதலையாக்க முயன்றதுடன், அதற்காக தம்முடைய குமாரனையுங்கூட தந்திருக்கிறார். மேலும், இப்போது 6000 வருடங்களுக்கு பின்பு மனுக்குலத்தின் மிகக்குறைந்த எண்ணிக்கையுள்ளவர்களுக்கே சுவிசேஷம் எட்டியிருந்தபோதிலும் இன்னும் அதே 6000 வருடங்களுக்குள்ளாக, சபை தனது முயற்சியினாலும் ஈகையினாலும், அதற்குப்பின்பு உயிரோடிருக்கிறவர்களெல்லாரும் குறைந்தபட்சம் அவருடைய அன்பை அறிந்துகொள்ளவும், அவரை விசுவாசித்து இரட்சிக்கப்பட ஒரு வாய்ப்பை அடையவும், சாத்தானால் நுழைக்கப்பட்ட தீமையினின்று விடுதலைபெறவும் வேண்டி, இதுவரை முயன்றிருக்கிறது என்பதே இவர்களது கொள்கையாகும்.

தேவன் தம்முடைய சிருஷ்டிகளின்மேல் முழுமையான அன்பும் கிருபையுமுள்ள நோக்கங்களையும் வைத்திருக்கிறார் என இக்கொள்கை விவரித்தாலும், தம்முடைய கிருபையுள்ள நோக்கங்களை நிறைவேற்ற போதிய சக்தியும், முன் அறிவும் இல்லாதவரென்று கூறுகிறது. அதாவது அவர் ஞானத்திலும் வல்லமையிலும் குறைந்தவர் என்று விவரிக்கிறது. இதன்படி பார்த்தால், தேவன் தாம் புதிதாக உருவாக்கிய சிருஷ்டிகளுக்கு,

தம்முடைய நன்மையானவைகளை திட்டம் செய்து ஏற்பாடு செய்துகொண்டிருக்கும் வேளையில் சாத்தான் ஒரு பெரிய அடியால் தேவனுடைய திட்டங்களைப் கவிழ்த்துப்போட்டான். தேவன் தம்முடைய நீதியை நிலைநாட்ட 12,000 வருடங்கள் செலவழிக்குமளவுக்கு தேவனுடைய வல்லமையை குறைத்துவிட்டானென்றும், அக்காலம்வரை உயிரோடிருக்கும் ஜனங்கள் நன்மை அல்லது தீமையை தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பைப் பெறுவார்கள் எனவும் இக்கொள்கை காண்பிக்கிறது. ஆனால், கடந்த 6000 வருடங்களிலிருந்த 142 பில்லியன் மக்களும், அதற்கடுத்த 6000 வருடங்களில் வரப்போகும் அநேக ஜனங்களும் இக்கொள்கையின்படி பார்த்தால், தேவனுடைய அன்பு இருந்தபோதிலும் சாத்தான் அவருடைய திட்டங்களில் குறுக்கிடு செய்வதினாலும், அத்தனைப்பேரும் நித்தியமாய்க் கெட்டுப்போவார்கள். இவ்விதமாக தேவன் ஒரு மனிதனை மகிமையில் இரட்சிப்பாரானால், சாத்தான் ஆயிரக்கணக்கான பேரை நித்திய வேதனையடைய தயார் செய்திருப்பான்.

இக்கொள்கையில் மனிதனுடைய ஞானத்தையும் சாத்தானுடைய வல்லமையையும் உயர்த்தி, தேவனுடைய குணநலன்களை குறைத்தும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு மாறாக சங்கீதக்காரன் தேவனைப்பற்றிக் கூறும்போது, "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" என்று கூறுகிறார். தேவன் எதிராளியாகிய சாத்தானால் ஆச்சரியப்படவுமில்லை, அவனால் மேற்கொள்ளப்படவுமில்லை. மேலும், தேவனுடைய திட்டங்களை சிறிதளவேனும் சாத்தான் குலைத்துப்போடவுமில்லை. தேவனே எப்பொழுதும் எந்த சூழ்நிலைக்கும் பூரண தலைவராகவும் சகலத்திலும் சகலமுமாயிருப்பதுடன் சகலமும் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றவே நடந்தேறி வருகிறது எனவும் முடிவில் தெரியும்.

கால்வினியராலும், ஆர்மீனியராலும் போதிக்கப்படுகிறபடி தேர்ந்தெடுத்தல் மற்றும் இலவசமான கிருபை என்கிற இரு உபதேசங்களும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகவும் இல்லை, நியாயத்திற்கும் தேவனுடைய வசனத்திற்கும் ஏற்புடையதாகவும் இல்லை எனினும் இந்த இரு மகிமையான வேத உபதேசங்களானது தேவனுடைய யுகங்களைப்பற்றிய திட்டங்களின்படி பார்த்தால் அவைகள்



ஒன்றுக்கொன்று பூரணமாக ஒத்துப்போவதுடன் மிகவும் அருமையானதுமாய் இருக்கிறது.

பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மனிதனை இரட்சிக்க தேவன் கொண்டிருக்கும் மாபெரும் மகிமையான திட்டங்களானது எதிர்காலத்திற்குரியது என்றும், வெகுகாலத்திற்கு முன்பே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதும், எதிர்பார்க்கப்பட்டதுமான ஆசீர்வாதங்களின் நிறைவேறுதலுக்கு நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே அவற்றின் முதற்படியாக வடிவமைக்கப்பட்டது என்றும் பார்க்கும்போது, அவருடைய முதலாம் வருகையை எதிர்பார்த்திருந்த யூதரைவிட நாம் அதிக வாஞ்சையோடு அவருடைய இரண்டாம் வருகையின் காலத்தை எதிர்பார்க்க வேண்டாமா? தீமை, அநீதி, மரணம் ஆகியவைகளின் காலங்கள் கிறிஸ்து நடப்பிக்கப் போகும் ஆட்சி அதிகாரத்தினால் முடிவுக்கு கொண்டுவரப்படுமென்றும், நீதியும் சத்தியமும், சமாதானமும் உலகமுழுவதும் இருக்குமென்றும் அறிந்து, அவருடைய அந்த நாளைக் காண யார் தான் மகிழ்ச்சியடையாமலிருப்பார்கள்? மேலும், "அவரோடுகூட பாடுகளை சகித்தோமானால் அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்" என்கிற மேன்மையான வாக்குத்தத்தினால் ஏவப்பட்டு, இப்போது கிறிஸ்துவோடுகூட பாடனுபவிக்கிற எவரும் அவருடைய இரண்டாம் வருகையில் தங்களுடைய மீட்பும், அவரோடுகூட மகிமையடைதலும் சமீபமென்று அறிந்து எஜமானுடைய வருகைக்குரிய ஒவ்வொரு அடையாளங்களினால் தங்கள் தலைகளை உயர்த்தி மகிழாமலிருப்பார்களா? நிச்சயமாகவே அவருடைய ஆசீர்வாதமான வருகை மற்றும் அவரது அன்பின் ஆவிக்காகவும் காத்திருப்பவர்கள் அனைவரும், அவருடைய வருகையின் ஒவ்வொரு அடையாளங்களையும் காணும்போது, "எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை" உண்டாக்கும் நாளை வரவேற்பார்கள்.

• • • •

## அத்தியாயம் – 7

## தீமையின் அனுமதியும் தேவனுடைய திட்டத்தோடு அதற்குள்ள தொடர்பும்

ஏன் தீமை அனுமதிக்கப்பட்டது? சரி மற்றும் தவறு எனும் கொள்கைகள் – பகுத்தறிதல் – தேவன் தீமையை அனுமதித்தாலும் அதைக் கட்டுப்படுத்தி நன்மையை நிலைநாட்டுதலும் – தேவன் பாவத்திற்கு காரணரல்ல – ஆதாமின் சோதனை ஒரு பரிகாச செயல் அல்ல – கடுமையான அவருடைய சோதனை – அவருடைய மனப்பூர்வமான பாவம் – பாவத்திற்கான தண்டனை அநீதியானதும் கடுமையானதும் அல்ல – ஆதாமுக்குள் அனைவரும் குற்றவாளிகளானதால் விளங்கும் தேவனுடைய நீதியும், ஞானமும், அன்பும் – முழு உலகத்திற்குமான தேவப்பிரமாணம்.

மகிழ்ச்சியின்மையை உண்டாக்குவதே தீமையாகும். நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ துன்பத்தை உண்டாக்கும் எதுவானாலும் அதுவே தீமையாகும் (வெப்ஸ்டர் அகராதி). இப்பாடமானது மனிதனுடைய வியாதிகள், கவலைகள், வேதனைகள், பெலவீனங்கள், மற்றும் மரணத்தை மாத்திரம் விளக்குவதாயிராமல், இவையெல்லாவற்றின் மூலகாரணமாகிய பாவத்தையும் அதிலிருந்து விடுதலையையும் பற்றினதாயிருக்கிறது. பாவமே தீமையின் காரணமாக இருப்பதால், தீமையை நீக்கவேண்டுமானால் பாவத்தை நிரந்தரமாக தொலைப்பது ஒன்றே சரியான முறையாகும்.

ஏன் தேவன் நாம் இப்போது காண்கிறபடி தீமையை அனுமதிக்க வேண்டும்? ஏன் அவர் நம் ஆதிப்பெற்றோரை பரிபூரணமாக சிருஷ்டித்து, பின் சாத்தான் அவர்களை மோசம் போக்க அனுமதிக்க வேண்டும்? ஏன் விலக்கப்பட்ட மரத்தை ஜீவ விருட்சங்களின் நடுவில் நாட்ட வேண்டும் என்கிற கேள்விகளைப்போல கடினமான கேள்விகள் வேறொன்றும் நமது மனதுக்கு கிட்டுகிறதில்லை. இதை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு நமது மனதை விட்டு தள்ளினாலும், அவ்வளவுக்கதிகமாய் தேவன் மனிதனுடைய வீழ்ச்சியை தடுத்திருக்க முடியாதா? என்ற கேள்வி முன்வந்து நிற்கிறது.



தேவனுடைய திட்டங்களை சரியாக அறிந்துகொள்ள முடியாததே இக்கேள்விக்கு பதில் சொல்ல முடியாததன் காரணம். தேவன் பாவத்தை இவ்வுலகில் நுழையவிடாமல் தடுத்திருக்கமுடியும். ஆனால், தற்கால தீமையின் அனுமதியானது பிற்காலங்களில் மகாபெரிய நன்மையை விளைவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது என ஏற்றுக்கொள்ள நியாயம் உண்டு. தேவனுடைய திட்டங்கள் அனைத்தையும் முழுமையாக நோக்கும்போது மட்டுமே தீமையின் அனுமதிக்கான ஞானத்தைப் புரிந்துகொள்ளமுடியும். சாத்தானுடைய திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்படும் முன்பாக, சரியான காலத்தில் அளவற்ற வல்லமையுடைய தேவன் அதை தடுத்திருக்க முடியாதா? என சிலர் கேட்கிறார்கள். அவரால் கூடும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால் அவ்வாறு செய்தால் தேவனுடைய நோக்கங்களே நிறைவேறாமல் போய்விடும். அவருடைய நோக்கம் என்னவெனில், அவருடைய பிரமாணத்தின் பரிபூரணத்தையும் மகத்துவத்தையும், நீதியான அதிகாரத்தையும் வெளிப்படுத்துவதும், அவருடைய இந்த பிரமாணங்களை மீறி நடக்கும்போது தீமையான விளைவுகள் உண்டாகும் என மனிதருக்கும் தேவதூதருக்கும் உறுதி செய்வதுமே அவருடைய நோக்கமாகும். அதுமட்டுமல்லாமல், வேதம் சொல்கிறபடி சில காரியங்கள் தேவனுடைய சுபாவப்படி செய்யக்கூடாததாயிருக்கிறது. "தேவனால் பொய்யுரைக்க முடியாது." (எபி. 6:18) "தேவன் தம்மை தாமே மறுதலிக்கமாட்டார்." (2 தீமோத்தேயு 2:13) அவரால் தவறு செய்ய முடியாது. மறைக்கப்பட்டுள்ள தேவனுடைய அளவில்லா ஞானத்தை சொற்பகாலத்தில் நாம் புரிந்துகொள்ள முடியாதவகையில் அவர் செய்து வந்தாலும், அவையெல்லாம் தம்முடைய சிருஷ்டிப்புகளின் நன்மைக்கென்றும், ஜீவனுக்கென்றும், உருவாக்கப்பட்ட ஞானமும் மிகவும் அருமையுமான திட்டமாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"எல்லாம் தேவனுடைய சந்தோஷத்திற்கென்றே உருவாக்கப்பட்டுள்ளது" என தேவனுடைய வார்த்தைகள் அறிவிக்கின்றன. (வெளி.4:11) அவருடைய ஆசீர்வாதங்களை பகிர்ந்தளிப்பதும், தம்முடைய மகிமையான குணநலன்களை நிலைநாட்டுவதுமே அவருக்கு மாபெரும் மகிழ்ச்சி. மேலும், தம்முடைய நன்மையான திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு, தீமையையும், தீமைசெய்பவர்களையும், கொஞ்சகாலம்

உக்கிரகமாக செயல்பட அனுமதித்திருந்தாலும், அவைகள் தீமையின் நோக்கத்திற்காகவோ அல்லது பாவத்தோடு தேவன் தொடர்பு உடையவராகவோ இருப்பதினாலோ அல்ல. ஏனெனில், தேவன் கூறுகிறபடி "அவர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகின்றவரல்ல." (சங்.5:4) தீமையை எல்லா வகையிலும் தேவன் எதிர்ப்பவராயிருந்தாலும், அவருடைய ஞானத்திற்கேற்றபடி தம்முடைய சிருஷ்டிகள் நிலையானதும், உபயோகமான பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியும் அத்தீமையை அனுமதிப்பது (அதாவது தடுக்காமலிருப்பது) அவருக்கு ஏற்றதாயிருந்தது.

நன்மையான எந்த ஒரு கொள்கைக்கும், அதற்கேற்றாற்போல எதிரான, தீமையான கொள்கையும் உண்டு என்பது எதார்த்தமான உண்மையாகும். உதாரணமாக, சத்தியத்திற்கு எதிராக தவறுகள், அன்புக்கு எதிராக வெறுப்பு, நீதிக்கு எதிராக அநீதி போன்றவை. மேலும், இவ்விதமாக ஒன்றுக்கொன்று எதிரான நன்மை மற்றும் தீமையான கொள்கைகளை நம்முடைய அனுபவத்திற்கு கொண்டுவந்து அவற்றின் விளைவுகளின் மூலம் நன்மை எது, தீமை எது என்று அறிந்துகொள்ளலாம். இக்கொள்கையின் மூலம், எந்த ஒரு செயலின் விளைவானது உபயோகமானதும், மகிழ்ச்சியும் ஒருமைப்பாடுள்ளதாகவும் இருக்கும்போது, அதை நாம் நன்மையான கொள்கை எனவும், அதற்குமாறாக நற்பலன்களைத் தராமல் கவலையையும் அழிவையும் கொண்டுவருமேயானால், அது தீமையான கொள்கை எனவும் அழைக்கிறோம். ஒரு புத்தியறிவுள்ள சிருஷ்டி, நன்மையான கொள்கையையும் தீமையான கொள்கையையும் உணரும் சக்தியுடையவனாயிருந்து, இரண்டில் ஏதாவது ஒன்றினால் ஆளப்படும்போது அவனை நீதிமானென்றும் அல்லது பாவி என்றும் அழைக்கிறோம்.

இவ்வாறு நன்மைக்கும் தீமைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளும் சக்தியே மனசாட்சி அல்லது பகுத்தறிவு என அழைக்கப்படுகிறது. மனிதனுக்கு தேவன் தந்த இந்த பகுத்தறியும் தன்மையின் மூலமே நாம் தேவனையும், அவர் நல்லவர் என்பதையும் அறிந்து கொள்ளலாம். இவ்விதமான சக்தியை உடையவர்களிடத்தில் மாத்திரமே, தேவன் தம்முடைய நீதியையும் நியாயத்தையும் உறுதி



செய்கிறார். இந்த பகுத்தறிவின் மூலமே, ஆதாம், பாவத்தின் விளைவுகளை அறிவதற்கு முன்பே பாவம் அல்லது அநீதியே தீமையானது என அறியும் நிலையில் இருந்தார். இந்த விதமான பகுத்தறியும் தன்மை மனிதனுக்கு கீழான நிலைமையில் இருக்கும் தேவனுடைய சிருஷ்டிகளுக்கு தரப்படவில்லை. உதாரணமாக, ஒரு நாய் ஓரளவு அறிவைப் பெற்றிருக்கிறது, எவ்வாறெனில், தன்னுடைய செயல்களில் எவைபெவை தன்னுடைய எஜமானுக்கு பிடிக்கும் எனவும், எவைபெவை பிடிக்காதென்றும் அறிந்திருக்கக்கூடும். ஆனால், அந்த அறிவு அல்லது சக்தி, மனிதனுக்கு இருக்கும் அளவிற்கு இல்லை. அது திருடும்போதோ அல்லது யாரையாவது கடித்து மரிக்கச்செய்யும்போதோ, அது பாவி என்றோ அல்லது எந்த ஒரு சொத்தையோ பொருளையோ அல்லது ஜீவனையோ காக்கும்போது நீதிமான் என்றோ அழைக்கப்படுவதில்லை. ஏனெனில், தான் செய்யும் கிரியைகளிலுள்ள நன்மை, தீமையை அது பகுத்தறியக்கூடிய நிலைமையில் இல்லை.

தேவன் மனிதனை இந்த நன்மை தீமை பற்றி அறிந்து உணர்ந்துகொள்ளும் சக்தி இல்லாமலோ அல்லது நன்மையை மாத்திரம் உணர்ந்துகொள்ளும் சக்தியுடையவனாகவோ உருவாக்கியிருக்கக் கூடும். ஆனால், அவ்வாறு படைத்திருந்தாரானால் அவன் ஒரு உயிருள்ள இயந்திரமாய் இருந்திருப்பானேயல்லாமல், சிருஷ்டிகருடைய குணநலன்களுக்கேற்ற சாயலாக இருந்திருக்க முடியாது. அல்லது சுயாதீனமுள்ள பரிபூரண மனிதனாக அவர் சிருஷ்டித்ததுபோல, சாத்தானுடைய சோதனையிலிருந்தும் பாதுகாத்திருக்க முடியும். அப்படியிருந்ததானால் மனிதனுடைய அனுபவமானது நன்மை செய்கிறவனாகவே அளவிடப்பட்டு, மனிதனுக்கு தீமையினால் வரும் பாவவிளைவுகளின் அனுபவம் ஏற்படாததால், புறம்பே இருந்து வரும் துர்ஆலோசனைகளுக்கும் தனக்குள்ளாகவே தோன்றும் ஆசை இச்சைகளுக்கும் அடிமையாகி தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு, நித்திய எதிர்கால வாழ்வே சந்தேகத்திற்கு இடமாகிவிடுவதுடன் கீழ்ப்படியாமையும், ஒழுங்கின்மையுமே எப்போதும் சாத்தியமானதாகிவிடும். அன்றியும், நன்மையின் ஆசீர்வாதங்களை தீமையின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் முன்பு உணர்ந்து போற்ற முடியாது.

தேவன் முதலில் மனிதனை நன்மையை மட்டும்

அனுபவிக்கச்செய்து, நன்மை சூழ அவனை ஏதேனில் வைத்தார். பின்னர் கீழ்ப்படியாமல்போன அவர்களுக்கு தண்டனையளித்து, தீமையை கடுமையாக ருசிபார்க்கும்படி அனுமதி கொடுத்தார். ஏதேனிலிருந்து வெளியேற்றப்பட்டபோது தேவனோடு தனக்கிருந்த ஐக்கியத்தை இழந்து, நோய், வேதனை, மரணம் ஆகியவற்றை அனுபவிக்கும்படிக்கும், தீமையின் கொடூரத்தையும், பாவத்தின் பெருக்கத்தையும் அனுபவிக்கும்படிக்கும் தேவன் விட்டுவிட்டார்.

நன்மையும் தீமையும் பெருகியதால் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பிடவும், பாராட்டவும் கற்றுக்கொண்டான். "பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மைதீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்." (ஆதி. 3:22) தீமையை ருசிபார்ப்பதில் ஆதாமின் பின் சந்ததியாரும் அவனோடு சேர்ந்து பங்கு பெற்று வருகிறார்கள். இவர்கள் தற்போது நன்மையை முழுமையாக உணர்ந்துகொள்ள முடியவில்லை. உலகின் இராஜாவும் நியாயாதிபதியுமாகப்போகிற கிறிஸ்துவின் ஈட்டுக்கிரயத்தின் பலனாக, ஏற்படவிருக்கும் ஆயிரவருட அரசாட்சியின் காலத்தில், அவர்கள் நன்மையின் அறிவை அனுபவப் பூர்வமாக அடைவார்கள்.

நன்மை தீமையை பகுத்தறியத்தக்கதாக உத்தம நிதானிப்பும், அதை உபயோகிக்கக்கூடிய சுயாதீனமுமே ஆதாமை தேவசாயலுக்கு ஒப்பான முக்கிய குணநலன்கள் உடையவனாக்கியது. நியாயம் அநியாயம் ஆகியவற்றைப்பற்றிய சட்டமானது அவனது இருதயத்தில் சுபாவமாக பதிக்கப்பட்டிருந்தது. அச்சட்டம் எவ்வாறு தெய்வீக சுபாவத்தின் ஒரு பகுதியாக இருக்கிறதோ, அவ்வாறே மனிதனிடத்திலும் அது இயற்கையாய் அமைந்திருந்தது. ஆனால், ஆதாம் பாவத்தில் விழுந்ததற்குப்பிறகு, இந்த தேவசாயலானது மங்கி, தேவனது பிரமாணங்கள் பாவத்தின் ஆதிக்கத்தினால் மனிதனுக்குத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியாமற்போனது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே, ஆதி மனிதனாகிய ஆதாமினிடத்தில் காணப்பட்ட சாயல், தற்போது இல்லை. அன்பு செய்யக்கூடிய ஆற்றலுள்ளவர்கள் பகைக்கவும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். அன்பு கூறுகிற தன்மை இருக்கும்பட்சத்தில் வெறுக்கும் தன்மையும் இருக்கும். அதனாலேயே, நீதி மற்றும் அன்பு



செய்கிற வல்லமையுடனும் அதே சமயம், அதற்கு நிகராக தீமை மற்றும் வெறுப்பதற்கான வல்லமையாகிய தம்முடைய சாயலில் சிருஷ்டிகர் மனிதனை உருவாக்கவில்லை என்று நாம் பகுத்தறிகிறோம். சுயமாக சிந்தித்து, நன்மை தீமையை தெரிந்தெடுக்கும் சுதந்திரம், தேவனிடத்தில் இலவசமாப் பெற்ற சக்தியாகும். இத்துடன் அவனது சிந்தை மற்றும் ஒழுக்கரீதியான குணாதிசயங்கள் ஒன்றுசேர்ந்து, தன்னை சிருஷ்டித்தவரின் சாயலை உண்டாக்கியிருக்கிறது. இன்றைக்கு, ஏறக்குறைய ஆறாயிரம் வருடங்களின் வீழ்ச்சிக்குப் பிற்பாடு பாவத்தினால் தேவசாயலாகிய ஆதி நிலைமை அழிக்கப்பட்டுவிட்டது. பாவத்திற்கும் அதன் கறைகளுக்கும் ஆட்பட்டதால் நீதியைக்காட்டிலும் பாவத்தோடு இசைந்திருத்தல் எளிதாகிறது.

தேவன் ஆதாமுக்கு பாவத்தின் அநேக தீமைகளையும், அது சாபத்தை வருவித்துவிடும் என்பதையும், முன்கூட்டியே தெளிவாக எச்சரித்திருப்பார் என்றபோதிலும், தீமையின் உண்மையான அனுபவங்களை அடைவதினால், நித்திய காலத்திற்கும் அது அவனுக்கு பிரயோஜனமளிப்பது நிச்சயம் என்று அவர் முன்னறிந்திருந்தார் என்று நாம் நம்புகிறோம். இதன் காரணமாகவே, தேவன் மனிதனைத் தடுக்காமல், அவனாக தன் சுய விருப்பத்தின்படி செயல்பட அனுமதித்து, அதனால் வரும் பின்விளைவுகளை அறிந்துகொள்ளும்படி விட்டுவிட்டார். பாவம் செய்வதற்கான வாய்ப்பை அனுமதிக்காமல் இருந்திருப்பாரானால், மனிதன் பாவத்தை சந்திக்க நேரிடும்போது அதை எதிர்க்க முடியாமற் போயிருக்கும். அதன் விளைவாக அவன் நற்காரியங்களையே செய்யும்போதும், அதில் அவனுக்கு எந்த ஒரு மேன்மையும் ஒழுக்கமும் இருந்திருக்காது. தேவன் தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். அறியாமையிலும், இயந்திரத்தனமாகவும் தொழுதுகொள்ளுவதை அவர் விரும்பாமல், அறிவுக்கூர்மையோடும் கீழ்ப்படிதலோடும் தொழுதுகொள்வதே அவருக்குப் பிரியம். அவர் தம் சித்தத்தினை நிறைவேற்றுவதற்கு மனிதனை சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே உயிரற்ற அநேக சத்துவங்களை தேவன் ஏற்படுத்திருந்தார். ஆனாலும், தம் சாயலுக்கடுத்த அறிவுக்கூர்மையான சிருஷ்டியை உருவாக்கி, அவனை இப்பூமியை ஆளுகிறவனாகவும், அவனுடைய உண்மையும் நீதியும் எது சரி, எது தவறு,

எது நன்மை எது தீமை என்று நன்கு பகுத்தறியும் தன்மையும் இருக்க வேண்டும் என்பதே அவரது திட்டமாயிருந்தது.

சரி மற்றும் தவறு ஆகிய கொள்கைகள் எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது. எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும். சரியான கொள்கை மட்டுமே எப்பொழுதும் நிலைத்திருக்கும் என்றபோதிலும் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்ட, அறிவுக்கூர்மையான சிருஷ்டிகள் அனைத்தும் இந்த இரண்டு நியமங்களில் ஒன்றை தெரிந்தெடுக்க வேண்டிய சுயாதீனத்தைப் பெற்றிருக்க வேண்டும். தேவனுடைய நோக்கம் நிறைவேறும்பொருட்டு தீமை நீண்ட காலம் அனுமதிக்கப்பட்டபோதிலும், அவை என்றைக்கும் தொடராதபடி முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் இத்தீமையின் கட்டுப்பாட்டிற்குள் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் நித்திய அழிவுக்குள்ளாவார்கள் என்றும், சத்தியவேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. (1 கொரி. 15:25, 26; எபி. 2:14) நியாயம் செய்வதும் மற்றும் நியாயம் செய்வோருமே நித்தியத்துக்கும் தொடர்ந்து நிலைப்பார்கள்.

ஆனால், அனுபவ வாயிலாக தீமையைப்பற்றி தெரிந்துகொள்வதைவிட, வேறுவிதத்தில் அதன் அனுபவங்களை அடைய முடியாதா என்று கேள்வி எழலாம். காரியங்களை அறிந்துகொள்வதற்கு நான்கு வழிமுறைகள் உண்டு. அவை: 1) இயல்பான உள்ளுணர்வின் மூலம் தன்னில்தானே அறிதல், 2) கவனித்து கற்பதன் வாயிலாக, 3) அனுபவங்களின் மூலமாக, 4) உண்மை என்று நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளத் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் செய்திகள் மூலமாக. முதலாவதாக தன்னில்தானே அறிவது என்பது, இயல்பான அறிவின் மூலமாக காரணகாரியத்தை ஆராயாமல், அல்லது எந்த ஒரு ஆதாரமும் தேவையில்லாமல், நேரடியாக அறிந்து உணரக்கூடிய நிலைமையாகும். இப்படிப்பட்ட அறிவு எல்லா ஞானத்திற்கும், சத்தியத்திற்கும் நித்திய ஊற்றாயிருக்கிற யேகோவா தேவனுக்கு மட்டுமே உண்டு. இவரே தம் சிருஷ்டிப்புகள் அனைத்துக்கும் உன்னதமான நிலைமையில் இருக்கிறார். ஆகவே, நன்மை தீமையை அறியத்தக்க அறிவானது இயல்பான உள்ளுணர்வினால் அல்ல, கூர்ந்து கவனித்துப்பார்த்து அறிதலின் மூலம் ஒருவேளை மனிதன் அறிவு பெறலாம். ஆனால், அவ்வாறு அறிவதற்கு தீமையையும் அதனுடைய



பலன்களையும் மனிதன் கூர்ந்து கவனிக்கும்படி, தீமை அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். வேறு ஏதோ ஒரு இடத்தில் வேறு ஜீவிகளிடத்தில் அனுமதிப்பது அவசியமானால், ஏன் அதை மனிதரிடத்திலேயே இப்பூமியிலேயே அனுமதிக்கக்கூடாது?

நேரடி அனுபவத்தின்மூலம் அறிவைப்பெறுவதில், ஏன் மனிதன் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடாது? ஆம், மனிதன் தான் தீமையின் அனுபவங்களை அடைவதோடுகூட, மற்றவர்களுக்கும் முன் உதாரணத்தை கொடுப்பவனாக இருக்கிறான். மேலும், "தூதருக்கும் வேடிக்கையானோம்" என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

ஆதாம் தீமையைப் பற்றிய அறிவை, அறிவுரையின் மூலம் (லெ ஜேசேஷ அவவணடி?) அறிந்திருந்தான். ஆனால், இந்த அறிவு விலக்கப்பட்ட கனியைப் புசிப்பதிலிருந்து அவனைத்தடுக்கப் போதுமானதாக இருக்கவில்லை. தேவன் தங்களது சிருஷ்டிகர் என்பதை ஆதாமும் ஏவாளும் நன்கு அறிந்திருந்தனர். ஆகவே, இவர்களை வழிநடத்தவும், கட்டுப்படுத்தவும் அவருக்கு அதிகாரம் உண்டு. மேலும், "விலக்கப்பட்ட மரத்தின் கனியை புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கட்டளையிட்டிருந்தார். ஆகவே, தீமையைக்குறித்தும், அதன் விளைவுகளை குறித்தும் இதுவரை ஒருபோதும் கூர்ந்து கவனிக்காததாலும் அல்லது அனுபவிக்காததாலும், தீமையைக் குறித்த செய்தியின் மூலம் பெற்ற அறிவானது பயனற்றதாகிப்போனது. இதன் காரணமாக, சிருஷ்டிகரின் அன்பின் அதிகாரத்தைப் புரிந்துகொள்ளவோ, அல்லது நன்மையான பிரமாணங்களை ஏற்றுக்கொள்ளவோ, பிரமாணங்களால் வரும் அபாயங்களிலிருந்து அவர்களை பாதுகாக்கும் வழிமுறைகளை உணர்ந்துகொள்ளவோ கூடாமல் போயிற்று. தேவன் ஞானமாய் அனுமதித்த பரீட்சைகளை அவர்கள் தெரிந்துகொண்ட வழிகளிலேயே அவர் விட்டுவிட்டதால், அவர்கள் சோதனைக்கு உட்பட்டு பாவத்தில் விழுந்தார்கள்.

நம் ஆதிப்பெற்றோராகிய ஆதாம், ஏவாள் விழுந்து போவதற்குக் காரணமாக இருந்த சோதனையின் தீவிரத்தையும், செய்த குற்றம் சிறியதே ஆயினும், இதற்காக விதிக்கப்பட்ட தண்டனை கடுமையாக இருப்பதன் தேவ நீதியை சிலரே உணர்ந்திருக்கின்றனர். ஆனால், அறிவின் சிறு

வெளிச்சம் நமக்குக் கிடைக்குமேயானால் எல்லாவற்றையும் தெளிவாக்கும். பலவீன மனுஷியாக இருந்த ஸ்திரீ எப்படி வஞ்சிக்கப்பட்டு குற்றவாளியானாள் என்று, நிகழ்வை சத்திய வேதம் நமக்குக் கூறுகிறது. அவள் ஆதாமைப்போல் இல்லாமல், தேவனிடத்தில் குறைவான அறிமுகமும் அனுபவமும் உள்ளவளாக இருந்தாள். ஏனெனில், ஆதாம் முதலாவதாக சிருஷ்டிக்கப்பட்டதாலும், அவனோடு தேவன் நேரடியாகத் தொடர்புகொண்டு, அவள் உண்டாக்கப்படுவதற்கு முன்பே பாவத்தின் தண்டனையைக் குறித்து எச்சரித்திருந்தார். ஏவாளோ ஆதாமின் மூலமாக ஒருவேளை இந்த அறிவைப் பெற்றிருக்கக்கூடும். விலக்கப்பட்ட கனியைப் புசித்தவுடன் மீறுதலின் அளவைப் பற்றி உணராதவளாய் இருந்ததோடு, சாத்தானின் வஞ்சக செயலின்மேல் நம்பிக்கை கொண்டிருந்தாள். ஆனால், ஏமாற்றப்பட்டபோதிலும், அவள் மீறுதலுக்குட்பட்டாள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியிருக்கிறார். ஆனாலும், அதிக வெளிச்சத்திற்கு எதிராக குற்றம் செய்ததாகக் கருதப்படவில்லை.

ஆதாமோ ஏவாளைப்போல் வஞ்சிக்கப்படவில்லை (1 தீமோ. 2:14) என்று நமக்கு கூறப்பட்டுள்ளது. ஆதலால், பாவத்தின் விளைவு இன்னதென்றும், அதற்கான தண்டனை என்னவென்றும் முழுமையாக அறிந்தும், அதனால் தான் மரிப்பது நிச்சயம் என்று மனதார அறிந்திருந்தும், ஆதாம் மீறுதலுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். முன்னரே பாவத்திற்கான தண்டனை உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் அதனைச் செய்யத் துணிந்ததற்கான காரணம் என்னவென்று நம்மால் காணமுடியும். அவர்கள் இருவரும் மனதாலும் ஒழுக்கத்தாலும் அவர்களைப் படைத்தவரின் சாயலுக்கொத்த பரிபூரணமான மனிதர்கள். பரிபூரண மனிதனாகிய ஆதாம், தன் துணைவியும், பரிபூரண மனுஷியுமாகிய ஏவாளை அதிகமதிகமாக நேசித்திருக்க வேண்டும். இப்படியாக தேவசாயலுக்கு அடையாளமாகிய அன்பு அவர்களிடத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்ததை, நாம் சிந்தையில் நிறுத்த வேண்டும். ஏவாளின் பாவத்தையும் மரணத்தையும் நினைத்து பயந்தும், இந்த பாவத்திலிருந்து விடுபடும் நம்பிக்கையின்றி, அம்மாதிரியான நம்பிக்கை தரப்படாததாலும்) ஆதாம் விரக்தியடைந்து, அவளில்லாமல் தான் வாழ வேண்டாம் என்று பொறுப்பில்லாமல் முடிவெடுத்தார். அவருடைய சொந்த வாழ்க்கை, துணைவியின்றி சந்தோஷமற்று பிரயோஜனம் இல்லாமல் போய்விடும் என்று எண்ணி,



அவளது கீழ்ப்படியாமையில் தானும் பங்குபெற்றதன் மூலம், அவள்மேல் மட்டுமே வரவேண்டிய மரணதண்டனையில் இவரும் தன்னை இணைத்துக்கொண்டார். அப்போஸ்தலர் காண்பிக்கும் வண்ணமாக, இருவருமே "மீறுதலுக்கு உட்பட்டார்கள்." (ரோமர் 5:14; 1தீமோத்தேயு 2:14) ஆனால், அவ்வேளையில் ஆதாமும் ஏவாளும் இருவராயிராமல் ஒருவராகவே இருந்தனர்; ஆதலால், ஏவாள் தனது நடக்கையினால் ஆதாமின்மேல் வரவழைத்த தண்டனைத் தீர்ப்பில் தானும் பங்கு பெற்றாள். (ரோமர் 5:12, 17, 19)

தேவன் மனிதனுக்கு முடிவெடுக்கும் சுயாதீனத்தைக் கொடுக்க முன்னறிந்ததோடு, பாவத்தின் விளைவை அவன் முழுவதும் அறியக்கூடாததால், தீமையை அவன் தெரிந்தெடுப்பான் என்றும், அவ்வாறு தெரிந்தெடுத்து அதன் பலாபலன்களை அனுபவித்தும், விழுந்துபோன நிலைமையில் பாவமானது, நன்மையைக்காட்டிலும் அவனுக்கு அதிகமாய் விரும்பத்தக்கதாக இருக்கும் என்றும் ஆதலால், அதில் இன்னும் அதிகமாக ஈடுபட்டு விடுபட மனமின்றிக் கிடப்பான் என்றும் தேவன் முன்னறிந்திருந்தார். தேவன் தொடர்ந்து தீமையை அனுமதிக்க சித்தமாயிருந்தார். ஏனெனில், தீமையிலிருந்து மனிதருடைய விடுதலைக்காக ஏற்பாடு செய்திருக்கிறபடியால், தீமையை சிறிதுகாலம் அனுமதிப்பதினால், அதன் விளைவாக பெருகிவருகிற பாவத்தின் அனுபவங்களைக் கற்றுக்கொள்ள வழிநடத்தும் என்றும் இதனால், நன்மைக்கு மாற்றும் காரணருமாயிருக்கிற சிருஷ்டிகரை மேன்மைபடுத்தவும், நேசிக்கவும் படிப்பிக்கப்பட்டு, தீமைக்கும் நன்மைக்கும் இடையே உள்ள பெரும் வித்தியாசத்தைக் கண்டு தீமையை அவன் தானாக விலக்கவுமே அவ்வாறு செய்தார். ஆகவே, பாவத்தையும் அதனால் பெருகின தீமைகளையும் தேவன் அனுமதித்ததற்குக் காரணம், மனிதன் அதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளவும், அதன் தொடர்ச்சியாக நித்திய நீதியை ஸ்திரமாக நிலைநாட்டவும், தேவ சித்தத்திற்கு எதிரான அனைத்தையும் வெறுத்து ஒதுக்கவும் ஏதுவாகிறது. ஆனாலும், தேவன் பாவத்தை அனுமதித்தார் என்ற விவாதத்திற்கிடமில்லாத உண்மைக்கும், தேவனே பாவத்திற்கு காரணரும், தூண்டுகோலுமாக இருக்கிறார் என்று சிலர் தவறாக உரைப்பதற்கும் பெரும் வித்தியாசம் உண்டு என்பதை நாம் கவனிக்க வேண்டும். தேவனே பாவம் பெருகினதற்குக் காரணர் என்று

என்றுவது வேதாகமம் போதிக்கிற உண்மைகளுக்கு முரணானதும் தேவதூஷணமுமாகும். இப்படிப்பட்ட தப்பறையில் விழுபவர்கள், தேவன் கிறிஸ்துவின் ஈடுபலியின் மூலம் ஏற்பாடு செய்திருக்கிற உண்மையான இரட்சிப்பின் திட்டத்திலிருந்து விலகி, வேறொரு இரட்சிப்பின் திட்டத்தை தங்களுக்கென ஏற்படுத்திக்கொள்கிறார்கள். தேவனே அனைத்துப் பாவங்களுக்கும், குற்றங்களுக்கும், *தீமைகளுக்கும் காரணர் என்றும், மனிதன் அவரது கரங்களுக்குள் ஒன்றுமறியா ஒரு கருவியாய் இருந்து, பாவத்திற்குள் விழும்படி தள்ளப்படுகிறான் என்றும், தாங்களும் நம்பி மற்றவர்களையும் நம்பச் செய்வார்களேயானால், கிறிஸ்துவின் பலி வீணானதாயும், தேவகிருபை உபயோகமற்றதாயுமாகி, நீதியை செய்வது

---

*இந்த கொள்கையை ஆதரிக்க, இரண்டு வேத வாக்கியங்கள் (ஏசா.45:7 மற்றும் ஆமோஸ்3:6) பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இரண்டு வசனங்களிலும் தீங்கு என்ற வார்த்தை தவறாக குறிப்பிடப்படுகிறது. பாவம் என்பது எப்பொழுதுமே ஒரு தீங்காக இருக்கிறது. ஆனால் ஒரு தீங்கு என்பது எல்லா சமயத்திலும் ஒரு பாவமாக இராது. ஒரு பூமியதிர்ச்சி, ஒரு காட்டுத்தீ, வெள்ளம், கொள்ளை நோய் போன்றவை தீங்காகும். ஆனால் இவைகளில் எதுவும் பாவமல்ல. இந்த வசனங்களில் தீங்கு என்ற வார்த்தை பேரழிவைக் குறிக்கிறது. இதே எபிரெய வார்த்தை சங்.34:19; 107:39; எரே.48:16; சக.1:15 போன்ற வசனங்களில் துன்பத்தைக் குறிக்கிறது. சங்.27:5; 41:1; 88:3; 107:26; எரே.51:2; புல.1:21 போன்ற வசனங்களில் உபத்திரவம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அது 1சாமு.10:19; சங்.10:6; 94:13; 141:5; பிர. 7:14; நெகே.2:17 ஆகிய வசனங்களில் பேரழிவு, ஆபத்து மற்றும் கஷ்டம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதே வார்த்தை இன்னும் அநேக இடங்களில் துன்பம், புண், துக்கம், துயரம் போன்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது.

ஏசா.45:7 மற்றும் ஆமோஸ்3:6 வசனங்களில் இஸ்ரவேலரிடம் ஒரு ஜாதியாக அவர்களிடம் தாம் செய்த உடன்படிக்கையை ஞாபகப்படுத்தினார். மேலும், அவர்கள் தமது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தால், உலகத்திற்கு வரக்கூடிய பொதுவான பேரழிவிலிருந்து அவர்களை பாதுகாத்து ஆசீர்வதிப்பேன் என்றும், ஆனால், அவர்கள் அவரை கைவிட்டால் பேரழிவை (தீங்கை) தண்டனையாக அவர்கள்மேல் கொண்டுவருவார் என்றும் கூறினார். உபா.28:1–14, 15–32; லேவி.26:14–16; யோசு.23:6–16.

பேரழிவு அவர்கள்மீது வரும்பொழுது அதை அவர்கள் ஒரு தண்டனையாகக் கருதாமல் ஒரு நிகழ்வாக கருதுவார்கள். தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாக அவர்களது உடன்படிக்கையை நினைப்பூட்டி, இந்த துன்பங்களெல்லாம் அவர்களை திருத்துவதற்காக அவர் அனுமதித்த தண்டனைகள் என்று செய்தி அனுப்புவார். ஆகையால் தேவன் பாவத்திற்கு காரணர் என்று நிரூபிக்க இந்த வசனங்களை பயன்படுத்துவது மிகவும் அபத்தமானது ஆகும். ஏனெனில் அவைகள் ஒருபோதும் பாவத்தைக் குறிக்காது.



மட்டுமே இரட்சிப்பின் ஒரே வழியாய் இருக்கும். இப்படியாக, அவர்களது கொள்கை ஸ்தாபிக்கப்படும்போது, இன்னும் ஒரு தவறான கொள்கைக்கும் வித்திடுகிறது. எவ்வாறெனில், எல்லாருடைய பாவத்திற்கும் தீமைகளுக்கும் தேவனே காரணரானபடியினால், முழு மனுக்குலத்தாரையும் பாவம் மற்றும் மரணத்திலிருந்து மீட்டு, இரட்சிப்பை அருளுவதும் அவருடைய கடமையாயிருக்கிறது என்பதே அவர்களது தீர்மானம். மேலும், தேவன் எவ்வாறு பாவத்தையும் தீமையையும் உண்டுபண்ண சித்தம்கொண்டு அதை ஏற்படுத்தினபோது யாரும் அவரை எதிர்க்க முடியவில்லை. அவ்வாறே தீமையை அழித்து, அனைவருக்கும் இரட்சிப்பை அருளவும் தேவன் சித்தம்கொள்ளும் பொழுது, அவரைத் தடுக்க ஒருவருக்கும் பெலன் இல்லை என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட காரண காரியங்களிலெல்லாம், சிருஷ்டிகராகிய தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதனின் முக்கிய குணமாகிய சுதந்திரம், அல்லது சுயாதீனம் முழுமையாக விலக்கப்படுகிறது. இக்கொள்கையானது, மனிதனை ஒரு இயந்திரமாகக் கருதி, தாழ்ந்தவனாக்கி, அவன் செய்வதெல்லாம் தன் சுய விருப்பப்படி அல்லாமல், கட்டாயத்தினாலேயே என்று சாதிக்கிறது. இது உண்மையாய் இருக்குமேயானால், மனிதன் இப்பூமியில் ஆளுகை செய்பவனாக இருப்பதற்கு பதிலாக, ஒரு சிறு பூச்சி இனத்தைவிட கீழானவனாகிறான். ஏனெனில், அவைகளுக்கும் தீர்மானிக்கும் சுதந்திரம் உள்ளது. மனிதன் தன் அதிகப்படியான வல்லமையினால் சிறு எறும்பின் சித்தத்தை இடையூறு செய்து அழிக்க முடியாதபடி தேவன் சுயசித்தத்தை அருளியிருக்கிறார்.

ஆம், மெய்யாகவே, தேவன் ஒரு மனிதனை பாவத்திற்கு உட்படுத்தவும் அல்லது நீதிக்கு உட்படுத்தவும் கூடிய வல்லமையை பெற்றிருக்கிறார். ஆனால், அவருக்கு அப்படிப்பட்ட நோக்கம் இருப்பதாக அவருடைய வார்த்தைகள் சொல்வதில்லை. "தம்மைத்தாமே மறுதலிக்கமுடியாத தேவன்" மனிதனை பாவத்திற்கு உட்பட நிர்ப்பந்திப்பது ஒவ்வாததாய் இருக்கிறது. மேலும், அவ்வாறு அவர் செய்வது, அவருடைய நீதியுள்ள குணநலன்களுக்கு ஏற்புடையதல்லாததாகையால் இது சாத்தியமற்றது. அவரை ஆவியிலும் உண்மையிலும் தொழுதுகொள்ளவும், நேசிக்கவுமே அவர் விரும்புகிறார். அதனால் தான் மனிதனுக்கு தம்முடைய சாயலைக்கொடுத்து, அதன்படி தனக்குப் பிரியமானதை

தெரிந்துகொள்ளும்படி சுயாதீனத்திற்குவிட்டு, அவன் நீதியை விரும்பித் தெரிந்துகொள்ளும்படி ஆவலாயிருக்கிறார். அவ்வாறு மனிதன் தனக்குப் பிரியமானதை தெரிந்துகொள்ளும்படி அனுமதிக்கப்பட்டதால், மனிதன் தெய்வீக ஐக்கியத்தையும், தயவையும் ஆசீர்வாதங்களையும் இழக்கவும், மரணத்துக்கும் வழிநடத்தியது. பாவத்தையும் அதன் விளைவுகளையும் அநுபவிக்கும் முன்பாக, தேவன் மனிதனிடம் கொள்கை ரீதியாக அவற்றைப்பற்றி அறிவுறுத்தியதை அப்போது அறிந்துகொள்ளாமல், பாவத்தையும் மரணத்தையும் நடைமுறையில் அநுபவித்த பின்பே தேவன் போதிக்க முன்வந்ததைக் கற்றுக்கொண்டான். மனிதன் செய்யப்போவதைப் பற்றிய தேவனது முன்னறிவை அவனுக்கு எதிராக பயன்படுத்தப்படாமல் அவனை சுயாதீனமற்ற ஒரு இயந்திரமாக உண்டாக்கி, தரம் தாழ்ந்தவனாக்காதபடிக்கு, அவனுக்கு மன்னிப்பு அளித்து, அவனுக்கு தயவை அளிக்கும்படி ஏற்பாடு செய்தார். தேவனுடைய முன்னறிவு மனிதன் பாவத்தையும் அதன் கசப்பான விளைவுகளையும் அநுபவிப்பதைத் தடுக்காமல், அவன் விரும்பினதைச் செய்ய விட்டுவிட்டது. ஆனாலும், முதலாவது பிறுதலினின்று அவனை மீட்பதற்காக, ஒரு மாபெரும் இரட்சகராகிய ஒரு மீட்பரை ஏற்பாடு செய்வதில், அவரது முன்னறிவு செயல்பட்டது. அந்த மீட்பரோ தம் மூலமாக தேவனிடத்தில் திரும்ப விரும்புகிறவர்களுக்கு இரட்சிப்பை அருள வல்லவராயிருக்கிறார். மனிதன் சுதந்திரமான சித்தம் உடையவனாயிருந்து, கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்படியாமல், சுயாதீனத்தை தவறாக உபயோகித்ததால், ஏற்பட்ட தனது முதல் விழுகையிலிருந்து இரட்சிக்க தேவன் எல்லாருக்கும் ஈடுபலி கொடுக்க ஏற்பாடு செய்ததோடு, தம்மோடு ஒப்புரவாகுவதற்கு தேவையான சத்திய அறிவை அடையும் வாய்ப்பையும் ஏற்பாடு செய்திருக்கிறார். இதற்குரிய சாட்சியை ஏற்ற காலங்களில் விளங்கப்பண்ணுவார். (1 தீமோ. 2:3–6)

தண்டனையின் கடுமையானது தேவனுடைய வெறுப்போ அல்லது கோபத்தின் வெளிப்பாடாகவோ இல்லாமல், அவசியமானதும், தவிர்க்கக்கூடாததுமாக இருந்தது. மனிதன் கண்டு உணர்ந்துகொள்ளும் தீமையின் உச்சகட்ட பலனாக தேவன் அதை அனுமதித்தார். தீமை மற்றும் அதன் அழிக்கும் சக்திக்கும் எதிராக தேவன் தன் வல்லமையைப் பிரயோகித்து ஜீவனைக் காப்பாற்ற முடியும். ஆனால், தேவன்



பொய்யுரையாதவராக இருக்கிறபடியால், பாவதண்டனைபெற்ற ஒருவனுக்கு அவர் அவனுடைய ஜீவனை நித்தியத்திற்கும் பாதுகாப்பது கூடாத காரியம். அவ்வாறு செய்வது அவருடைய நீதிக்கும் ஒழுக்கத்திற்கும் எதிரானது. அப்படிப்பட்ட ஜீவியமானது அந்த மனிதனுக்கும் பிறருக்கும் சந்தோஷமற்றதாயும், அதிகதிகமான வேதனையை வருவிக்கிறதாயும் இருக்கும். ஆகவே, தனக்கும் பிறருக்கும் உபயோகமற்றதும் கெடுதலுமான ஜீவனை தேவன் நிலைநிறுத்தி பாதுகாக்க இணங்கமாட்டார். தேவன் ஜீவனுக்கேதுவான தம் வல்லமையை நீக்கும்போது, பாவத்தின் முடிவாகிய அழிவு சம்பவிக்கிறது. ஜீவன் ஒரு தயவு, தேவனுடைய அன்பளிப்பு. கீழ்படிபவர்களிடத்தில் இது நித்தியத்திற்கும் தொடர்கின்ற ஒரு சிலாக்கியம்.

ஆதாமின் பின்சந்ததியார் அனைவருக்கும் தனித்தனியே பரீட்சையின் காலம் தந்தருளாதது அநியாயமான விஷயமல்ல. தேவன் நம்மை ஜீவிகளாக சிருஷ்டிப்பதற்கு எவ்விதத்திலும் யாதொரு நிபந்தனைக்கும் கட்டுப்பட்டவரல்லர். நம்மை ஜீவனுள்ளவர்களாக்கின பிறகு, நித்தியத்திற்கும் ஜீவிக்கச் செய்யவோ அல்லது கீழ்படிந்திருந்தால் நித்திய ஜீவனுக்குமான பரீட்சை வைத்து ஜீவனை அருள வாக்குத்தத்தம் செய்வதற்கோ அவரை எந்த நீதியும் பிரமாணமும் கட்டுப்படுத்தாது என்பதை நினைவில் வைக்க வேண்டும். தற்கால வாழ்க்கையில் தொட்டில் முதல் கல்லறை வரை செத்துக்கொண்டே சாகிற நிலைமை படிப்படியாக அதிகரித்துக்கொண்டே போகிறது. தற்கால வாழ்க்கையின் ஏமாற்றங்கள், தீமைகள் அனைத்தும் நேரிட்டபோதிலும் ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கும்போது, மறுவாழ்வு இல்லாதிருந்தாலுங்கூட, தற்கால ஜீவனை தேவன் நமக்கு அருளினது மாபெரும் கொடையே என்பதை உணர வேண்டும். இக்கூற்றை பெரும்பாலான ஜனங்கள் உயர்வாக மதிக்கிறார்கள். வெகு சிலரே (தற்கொலை செய்வோர்) இதை ஏற்றுக்கொள்வதில்லை. ஏற்றுக்கொள்ளாத அவர்களை மன நடுநிலையை இழந்தவர்கள் என்று பலமுறை தீர்ப்பளித்திருக்கிறார்கள். அப்படியில்லாதிருந்தால் அவர்கள் தற்கால ஆசீர்வாதங்களை இழந்துபோக முடிவு செய்திருக்க மாட்டார்கள். பரிபூரண மனிதனாயிருந்த ஆதாமின் நடக்கை, அவனுடைய பிள்ளைகள் அதே நிலைமையில் இருக்கும்போது எப்படி நடந்துகொள்வார்கள் என்று நமக்குக் காண்பிக்கிறது.

தேவன் நம் சந்ததியாரை ஜீவனுக்கான பரீட்சைக்கு மாற்று ஏற்பாடாக நித்திய வாதனையை வைத்திருக்கிறார் என்று அநேகர் தவறாக எண்ணுகின்றனர். ஆனால், ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையில் இதைப்பற்றிய சிறு குறிப்புக்கூட காணப்படவில்லை. நோய், வலி, வியாதி, மரணம், அழிவின் எந்த ஒரு அம்சமும் இல்லாத நித்திய ஜீவனே தமக்கு கீழ்ப்படிகிற பிள்ளைகளுக்கு தேவன் அளிக்க சித்தமாயிருக்கிற ஆசீர்வாதமாகும். ஆதாமுக்கு இந்த ஆசீர்வாதம் பூரணமாக கொடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும், "நன்மைத் தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்றும், அதை அவன் புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்றும், இவ்வார்த்தைக்குக் கீழ்ப்படியாது போனால், அவன் பெற்ற அருட்கொடையினின்று விழுந்துபோக நேரிடும் என்றும் எச்சரிக்கப்பட்டிருந்தான். ஆனால், பாவத்தின் தண்டனையாக நரகத்தில் வேதனை அடைவது பற்றி அவன் அறிந்திருக்கவில்லை. கீழ்ப்படிபவர்களுக்கு மட்டுமே, நித்திய ஜீவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தது. மற்ற எவருக்கும் அல்ல. ஜீவன் தேவனது அருட்கொடை. ஆனால், ஜீவனுக்கு எதிரான மரணமோ அவர் வைத்திருக்கும் தண்டனையாகும்.

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் நித்திய நரக போதனை, எவ்விடத்திலும் உரைக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டிலும் ஓரிரு இடங்களில் கூறப்பட்ட வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு தவறாக அநேகர் போதிக்கின்றனர். இப்படிப்பட்ட வாக்கியங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் அடையாளங்களாகவும், உவமைகளாகவும், உபமானங்களாகவும் நம் கர்த்தரால் உரைக்கப்பட்டது. இவற்றை கேட்ட ஜனங்களால் இதன் அர்த்தம் புரிந்துகொள்ளக்கூடாததாயிருந்தது. (லூக்கா 8:10) ஆனால், இவற்றை தற்காலத்தில் வசிக்கும் நாமோ ஓரளவு புரிந்துகொள்கிறோம். "பாவத்தின் சம்பளம் மரணம்." (ரோமர் 6:23) "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்." (எசேக்கியேல் 18:4)

ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட மரண தண்டனையில், அவனது பின் சந்ததியார் ஒவ்வொருவரும் பங்குபெறுவது அநியாயம் என்று அநேகர் எண்ணுகின்றனர். இதற்கு மாறாக, ஆதாமுக்கு தேவன் பரீட்சை வைத்ததுபோல, ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனுக்காக தனித்தனியே



பரீட்சையின் காலத்தைக் கொடுத்திக்க வேண்டும் என்று இவர்கள் சிந்திக்கின்றனர். ஆனால், ஆதாமைக் காட்டிலும் ஜீவன் பெற அதிக தயவுள்ள பரீட்சிக்கப்படும் காலம் இனி வரவிருப்பதை அறிந்தால் அவர்கள் என்ன சொல்வார்கள்? தேவன் தம் திட்டத்தின்படி ஆதாமின் சந்ததியாருக்கும், வம்சாவளி முறையில் தண்டனையை வைத்தது பின்வரவிருக்கும் ஆசீர்வாதத்தை அடைவதற்காகவே ஆகும். அப்படிப்பட்ட ஒரு காலம் குறிக்கப்பட்டிருப்பதை நாம் நம்புகிறோம்; அதைக் குறித்து தெளிவாய் எடுத்துரைப்போம்.

ஆதாமுக்குள்ளாக அனைவரும் மரணத்தீர்ப்பைப் பெற்றதுபோல, மனுக்குல சந்ததியார் அனைவரும் ஜீவன் பெற, புதிதான ஒரு தலைவரை, ஜீவன் அளிப்பவராக, தகப்பனாக, தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். ஆதாமுக்குள் அனைவரும் மரண சாபத்தைப் பெற்றதுபோல, கிறிஸ்துவுக்குள்ளாக, விசுவாசத்தினாலும், கீழ்ப்படிதலினாலும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள். இதற்கு திருச்சபை மட்டுமே விதிவிலக்கு. (ரோமர் 5:12,18,19) இவ்வாறு நாம் பார்க்கும்போது, பாவமில்லாதவரும், குற்றமற்றவருமாகிய கிறிஸ்துவின் மரணம், ஆதாமின் பாவத்திற்குப் பரிகாரமாக, முழுமையாக சரிகட்டப்பட்டது என்பதை அறிகிறோம். ஒரு மனிதன் பாவம் செய்ததால், அவனுக்குள் அனைவரும் சாபமாகிய தண்டனையை பகிர்ந்துகொண்டனர். அவ்வாறே, ஒரு மனிதனாகிய கிறிஸ்து ஆதாமின் குற்றத்திற்காக தம்மையே ஈடுபலி செலுத்தி ஆதாமை மட்டுமல்லாமல், அவனது பின் சந்ததியார் அனைவரையும் விலைக்கு வாங்கினார். ஏனெனில், அனைவரும் ஆதாமின் பலவீனங்கள் பாவங்களுக்குரிய தண்டனையாகிய மரணத்தை வம்சாவளியாக பகிர்ந்துகொண்டனர். நமது கர்த்தரும் "மனிதனுமாகிய இயேசு கிறிஸ்து" கறைதிரையற்றவரும், குற்றமற்றவருமாக இருந்து, பரிபூரணமான சந்ததியைப் பிறப்பிக்கக்கூடிய நிலைமையில் ஆதாமுக்காகவும், அவன் தீர்ப்பளிக்கப்பட்டபோது அவனுக்குள் குடிகொண்டிருந்த அவனது சந்ததிக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பலியாக தம் முழு மனித ஜீவியத்தையும் உரிமையையும் ஈடுபலியாக செலுத்தினார்.

ஆதாம் மற்றும் அவனது சந்ததியாரின் ஜீவன்களை முழுமையாக

விலைக்கு வாங்கினபிறகு, கிறிஸ்து முழு மனுக்குலத்தை, தமது வித்தாக தத்துப்பிள்ளைகளாக தெரிந்தெடுக்கும் அழைப்பைத் தருகிறார். அவரது இந்த புதிய உடன்படிக்கையின் நிபந்தனைக்குட்பட்டு, ஆதாமின் பிள்ளைகள் அனைவரும் விசுவாசத்தினாலும், கீழ்ப்படிதலினாலும் தேவ குடும்பத்தின் அங்கங்களாகி, நித்திய ஜீவனைப் பெறமுடியும். இவ்விதமாக மீட்பர், "தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாளாய் இருப்பார்." (ஏசா. 53:10) அதாவது ஆதாமின் வித்தாகிய மனிதர்களில் எத்தனைப்பேர் கிறிஸ்துவுக்கு தத்துப் பிள்ளைகளாகிறார்களோ அத்தனைப்பேரும் தங்களின் கீழ்ப்படிதலினால், உயிர்த்தெழுதலில் பரலோகத் தந்தையினால் மனித நிலைமைக்கும் மேலான நிலைக்கு பரலோக மேன்மையைப் பெற்றுக்கொள்ளும்படி உயர்த்தப்படுவார்கள். கிறிஸ்து தம் ஜீவியத்தையும், தம் ஜீவனையும் தம் பின்சந்ததிக்காக பலியிட்டபடியால். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1 கொரி 15:22)

ஆதாமின் வீழ்ச்சியின் மூலமாக, நாம் அடைந்த இழப்புகளுக்கு (அநீதியான துன்பப்படுதலுக்காக அல்ல) மாறாக, தேவ தயவினால் கிறிஸ்துவுக்குள் பூரண ஆசீர்வாதத்தைப் பெற்று (தேவனது ஏற்ற வேளையில்) விரைவிலோ அல்லது பிற்காலத்திலோ, ஆதாம் பாவஞ்செய்யும் முன்பு இருந்த பூரண நிலைமைக்கு சீர்பொருந்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். தற்காலத்தில் தேவ தயவைப் பெறாத, பெரும்பாலான புறஜாதியாரும் குழந்தைகளும், விசுவாசத்தின் பூரண அறிவை அடையாததால், அடுத்த யுகத்தில் அதாவது இனி "வரவிருக்கின்ற உலகில்" இந்த ஆசீர்வாதங்களைபெறும் நிச்சயத்தைப் பெற்றிருக்கிறார்கள். இதற்காகவே "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் . . . புறப்படுவார்கள் இந்த யுகத்திலோ அல்லது இனி வரும் யுகத்திலோ நம் கர்த்தராகிய கிறிஸ்துவின் ஈடுபலியைப் பற்றியும், அதனால் வரும் நன்மைகளையும், ஆசீர்வாதங்களைப் பற்றியும் யார் அறிகிறார்களோ, அவர்கள் அனைவரும் ஆதாமைப்போல் பரீட்சிக்கப்பட்டவர்களாக எண்ணப்பட்டு, கீழ்ப்படிந்தவர்கள் ஜீவனுக்கும், கீழ்ப்படியாதவர்கள் "இரண்டாம் மரணத்திற்கும்" செல்வார்கள். பரிபூரணமான கீழ்ப்படிதலை செலுத்த முழு ஆற்றல் இல்லாததால் யாரிடமும் அக்கீழ்ப்படிதல் இருக்கத் தேவையில்லை. சுவிசேஷ யுகத்தின்போது, திருச்சபையின் அங்கங்கள்



கிருபையின் உடன்படிக்கைக்கு உட்பட்டிருக்கிறபடியால், கிறிஸ்துவின் நீதி விசுவாசத்தின் மூலமாக அளிக்கப்படுகிறது. இதனால் அவர்களது மாம்சத்தின் தவிர்க்க முடியாத பெலவீனங்கள் சரிகட்டப்படுகிறது. ஆயிர வருட அரசாட்சியின்போது, தெய்வீகக் கிருபையை யார் யார் மனதார விரும்புகிறார்களோ, அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஆயிரவருட முடிவிற்கு முன்பாகவே அனைவருக்கும் பூரண சரீர சக்தி அளிக்கப்பட்டிருக்கும். சரீர பரிபூரணத்தை அடையுமுன்பாக, (ஆயிர வருடத்தின் முடிவிற்கு முன்பாக, எல்லாராலும் பெறப்படும் உரிமை) முழுமையான அறிவின் பரிபூரணத்தை தெய்வீகக் கிருபையின் மூலம் எதிர்பார்க்கலாம். இந்த புதிதான பரீட்சையானது, ஈடுபலி மற்றும் புதிய உடன்படிக்கையின் விளைவாக ஏற்பட்டது. இது ஏதேன் தோட்டத்தில் நடைபெற்ற பரீட்சையிலிருந்து வேறுபட்டது. இதில் ஒவ்வொருவருடைய நடக்கையும் தனித்தனியே பரீட்சிக்கப்பட்டு, வருங்கால ஜீவியத்திற்கு தகுதியுள்ளவர்களா என்று தீர்மானிக்கப்படும்.

ஆனால், இவ்வாறு தீர்மானிக்கும்போது நித்திய ஜீவனை அடைய மனுக்குல சந்ததியாரில் சிலருக்கு இரண்டாம் முறை வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று கருத இடமாகிறதல்லவா? என்று சிலர் கேட்கலாம். அதற்கு நமது பதில், நித்திய ஜீவன் அடைவதற்கான முதலாவது பரீட்சையில் ஆதாம் மட்டுமே சோதிக்கப்பட்டு, அதில் கீழ்ப்படிய தவறினதால், அவனும் "அவனது அரையிலிருந்த" அவனது சந்ததியார் அனைவரும் நித்திய ஜீவனை இழந்துபோயினர். அந்த ஆதிப் பரீட்சையின் தண்டனையானது "எல்லா மனுஷருக்கும் வந்தது." மேலும், தேவனுடைய திட்டத்தின்படி ஆதாமுக்காக செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் மீட்கும் பலியின் மூலமாக, ஆதாமும் அவனது தவறுதலினால் தங்களது ஜீவனை இழந்துபோனவர்கள் அனைவரும் பாவத்தின் பின்விளைவுகளை ஏராளமாக ருசிபார்த்து, பாவத்தின் தண்டனையை சீர்தூக்கிப் பார்த்து, மீட்பர் மீதுகொண்ட விசுவாசத்தின் மூலமாக, தேவனிடத்தில் திரும்புவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருப்பதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதை "இரண்டாவது வாய்ப்பு" என்று யாராவது அழைப்பாரேயானால், அவர்கள் அப்படியே அழைக்கலாம். உண்மையாகவே, நிச்சயமாகவே இது ஆதாமிற்கு இரண்டாவது வாய்ப்புத்தான். மேலும், மீட்கப்பட்ட மனிதர் அனைவரும் ஆதாமுடன்

சேர்த்து எண்ணப்படுகிறார்கள். ஆனாலும், ஆதாமின் பின்சந்ததியாருக்கு இது தனித்தனியே பரிட்சிக்கப்படும் முதலாவது வாய்ப்பேயாகும். இவர்கள் பிறக்கும்பொழுதே ஏற்கனவே பெற்ற மரணத் தீர்ப்பின் கீழ் பிறக்கிறார்கள். இது முதலாவது வாய்ப்பேயாகும். நாம் நமது விருப்பத்தின்படி எப்படி அழைத்துக்கொண்டாலும் உண்மைகள் ஒன்றே. அது என்னவெனில், ஆதாமின் கீழ்ப்படியாமையினால் அனைவரும் மரணசாபத்திற்கு தீர்ப்பளிக்கப்பட்டனர். ஆயிரவருட அரசாட்சியில் நித்திய ஜீவன் பெறுவதற்கு புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி எல்லாருக்கும் முழு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதனையே தேவ தூதர்கள் "எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி" என்று அறிவித்தனர். தேவனின் இந்த மேலான கிருபையைப் பற்றி அப்போஸ்தலர் எடுத்துரைக்கும்போது, நமது கர்த்தராகிய இயேசு "எல்லாரையும் மீட்கும்பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்தார்" என்றும், அதற்குரிய சாட்சி "ஏற்ற காலங்களில்" விளங்க வேண்டும். (ரோமர் 5:17–19; 1 தீமோத்தேயு 2:4–6) என்றும் கூறுகிறார். சுவிசேஷ யுகத்தில் ஜீவன் பெறும் வாய்ப்பை மட்டுப்படுத்தியது தேவனல்ல, மாறாக மனிதனே. தேவனோ இதற்கு மாறாக, சுவிசேஷ யுகத்தில் திருச்சபையார் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு வருவதாக நமக்குக் கூறுகிறார். இந்த ராஜரீக ஆசாரியக் கூட்டத்தார் மூலமாகவே வரவிருக்கின்ற யுகத்தில் மனுக்குலத்தார் அனைவரும் சத்தியத்தை அறிகிற துல்லியமான அறிவிற்கு கொண்டுவரப்பட்டு, புதிய உடன்படிக்கையின்கீழ் நித்திய ஜீவனை அடையக்கூடிய பூரணமான வாய்ப்பு அருளப்படுகிறது.

ஆனால், இந்த ஏற்பாட்டினால், கிடைக்கக்கூடிய மேலான நன்மைகள் என்ன? ஏன் தற்காலத்திலேயே எல்லா மனிதருக்கும் நித்திய ஜீவனை அடைய தனித்தனியே பரிட்சை வைக்கப்படக்கூடாது? ஆதாமை பரிட்சித்துப்பார்த்து, சாபத்திற்குள்ளாக்கப்பட்டு, அவனது சாபத்தில் மனுக்குலம் மூழ்கின பிற்பாடு, கிறிஸ்துவின் ஈடுபலியினால் அனைவரும் மீட்படைவதும், பிறகு புதிய உடன்படிக்கையின் நிபந்தனையின் கீழ் அனைவருக்கும் நித்திய ஜீவன் பெறுவதற்கான வாய்ப்பை அளிப்பதினாலும் வரும் பிரயோஜனம் என்ன? ஏன் இத்தனை காரியங்கள் நடைபெற வேண்டும்? மனிதனுக்கு நன்மை தீமையை அறிந்து நடக்கக் கூடிய சுயாதீனம் கொடுக்கப்பட்டதினால் தீமை அனுமதிக்கப்பட்டது



என்றால், ஏன் அத்தீமையை அகற்றி ஒழிப்பதற்கு மிகப்பெரிய சுற்று வழியை ஏற்பாடு செய்ய வேண்டும்? இறுதி வரைக்கும் கீழ்ப்படிந்து தேவபிள்ளைகளாகி, பரிசாக நித்திய ஜீவனை அடையப்போகிறவர்களுக்கு ஏன் பல்வேறு துன்ப துயரங்கள், சோதனைகள் அனுமதிக்கப்படுகிறது?

ஆம், இந்தப் பாடத்தின் மையமாக கவனிக்க வேண்டிய விஷயம் இதுவே. தேவன் மனிதர்களை பாவத்தில் விழவிடாமல் இருந்து மனிதர் அனைவரும் ஆதிப் பெற்றோரின் பாவங்களாகிய மன, ஒழுக்க, உடல் ரீதியான பலவீனங்களை அடையாமல், அனைவரும் ஏதேன் தோட்டத்து அனுகூலமான நிலைமையில் இருந்து, தேவன் அவர்களை பரிட்சிக்கும்போது மீறுதலுக்குள்ளானவர்கள் மட்டுமே குற்றவாளிகளென தீர்க்கப்பட்டு, அறுப்புண்டு போவார்கள். இம்மாதிரி தயையுள்ள நிலைமையில் எத்தனைபேர் ஜீவன்பெறத் தகுதியுடையோராகவும், எத்தனைபேர் தகுதியற்றவராகவும் காணப்படுவர்?

எல்லாவிதத்திலும் பரிபூரண மனித நிலையில் இருந்த ஆதாமின் நிலைப்பாட்டை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்பொழுது, தேவன் மேற்கூறியவாறு செய்திருப்பாரேயானால், தேவனுடனான அனுபவமும் அவரைப்பற்றிய தெளிவான அறிவும் இல்லாமலும் அவரது சட்டங்களின்மேல் முழு நம்பிக்கை வைப்பதன் முக்கியத்துவம் தெரியாததாலும், அவரவர் சொந்த எண்ணங்களின்படி நடந்து, ஜீவனை பெற பூரண கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும் பாத்திரராகவும் யாரும் இருந்திருக்க மாட்டோம். தேவனைக் குறித்து கிறிஸ்து கொண்டிருந்த அறிவே அவரைக் கீழ்ப்படியவும், நம்பிக்கை வைக்கவும் செய்தது என்று வேதத்தில் வாசிக்கின்றோம். (ஏசாயா 53:11) ஒருவேளை நான்கில் ஒருபகுதி ஜனங்கள் ஜீவனைப் பெற்றுக்கொள்வார்களென்று வைத்துக்கொள்வோம். அல்லது இன்னும் அதிகமாக, பாதிப்பேர் ஜீவனைப் பாதுகாத்துக்கொள்வார்களென்றும் பாதிப்பேர் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை அனுபவிப்பார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். ஜீவனையடைய தகுதியுள்ளவர்களாக எண்ணப்பட்ட அந்த பாதிப்பேரும், தேவ கட்டளையின்மீத்துமும், தேவ தண்டனையின்மீத்துமுமே பயந்து தீமையை விலக்குவார்களாதலால், தேவன் தம் சிருஷ்டிகளை எப்படி தம் சட்டங்களைக்கொண்டு நன்மைக்கு நடத்துகிறார் என்றறியவோ,

பாவத்தின் விளைவுகளுக்கு சாட்சிகளாகவோ, அதன் அனுபவங்களையோ அடைய முடியாது. இதனால் விலக்கப்பட்ட காரியங்களையும், தீமையையும் குறித்த விழிப்புணர்வும் இவர்களுக்கு இருந்து அதைப்பற்றி அறிய ஆவலாய் இருப்பார்கள். நன்மை தீமையைப்பற்றி அறிவு இராததால், தேவனுக்கு மனப்பூர்வமாக இவர்களால் ஊழியம் செய்ய முடியாது. ஆகவே, சிருஷ்டிகள் தமக்காகவும் தம் சிருஷ்டிகளுக்காகவும் ஏற்படுத்தின தெய்வீகத் திட்டத்தின் சட்டங்களை அறிந்து, அதன் மேன்மையை அவர்களால் வியந்து பாராட்ட இயலாது.

பிறகு தங்களது மனப்பூர்வமான பாவத்துக்காக மரணத்திற்குள்ளாகும் பாதிப்பேரைப் பற்றியும் நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் ஜீவன் பெறாமல், நித்தியத்திற்கும் அறுப்புண்டு போவார்களாதலால், தேவன் அவர்கள்மேல் அன்புகூர்ந்து வேறு வழியை ஏற்படுத்தி, இன்னும் ஒரு பரீட்சை வைத்தாலொழிய வேறு நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. ஆனால், தேவன் ஏன் அப்படி செய்ய வேண்டும்? அவர்கள் மீண்டும் எழுப்பப்பட்டு பரீட்சிக்கப்படுவார்களேயானால், அவர்களில் சிலர், அவர்களது நீண்ட அனுபவத்தினால் ஜீவனை அடையக்கூடும் என்ற நம்பிக்கையே, அவ்வாறு தேவன் செய்வதற்கான காரணமாயிருக்கும்.

ஆனால், இப்படிப்பட்ட திட்டத்தை தேவன் செய்வாரேயானால் அது நன்மையைத் தரும் என்றாலும் அதன் முடிவோ பல்வேறு கடும் ஆட்சேபனை ஏற்படுத்தும்.

தேவனுடைய திட்டத்தின்படி, பாவத்தை ஒரு குறிப்பிட்ட எல்லை வரைக்கும் கட்டுப்படுத்துவது தேவ ஞானத்தின் ஒரு அம்சமாக இருக்கிறது. குறைவுள்ள நமது சிந்தனையின் மூலமாக மனப்பூர்வமாக செய்யும் பாவத்திற்கு சம்பளம் மரணம் – அழிவு – ஜீவனிலிருந்து அறுப்புண்டு போகுதல் என்ற பாரபட்சமற்ற பரிபூரண சட்டம் இருப்பது அவசியம் என்று உணரமுடிகிறது. கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியை ஸ்தாபித்து, அதில் சத்தியத்தை அறிகிற முழு அறிவையும் பூரணமான சுயாதீனத்தின்படியான கீழ்ப்படிதலையும் அடிப்படையாகக்கொண்டு, மனப்பூர்வமாக தீமை செய்பவர்களை முற்றிலுமாக அழிக்கவும், நீதியை நித்தியத்துக்குமாக நிலைநிறுத்தவும் ஏற்பாடு செய்திருக்கிறார்.



மேற்சொன்ன ஒவ்வொருவரையும் ஆரம்பத்திலேயே தனித்தனியாய் பரீட்சிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்குமேயானால், ஏற்படுத்தப்பட்ட திட்டத்தில் இருவேறு ஆட்சேபனைகள் எழும். தேவன் தெரிவுசெய்த ஏற்பாட்டின்படி, ஒரே மனிதன் பாவம் செய்து தண்டனைக்கு உள்ளானதால் (மற்றவர்கள் அவனது தண்டனையில் பங்குபெற்றனர்), ஒரே மீட்பர் போதுமானதாயிருக்கிறது. மாறாக, முதலாவது பரீட்சை ஒவ்வொருக்குமான தனித்தனியான பரீட்சையாக இருந்திருக்குமேயானால், மனுக்குலத்தில் பாதிப்பேர் பாவம் செய்திருந்து குற்றவாளிகள் என்று தனித்தனியே தண்டனை பெற்றிருப்பார்களேயானால், குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு மீட்பர் பலிசெலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். இறந்துபோன ஒரு ஜீவனுக்கு ஈடாக மற்றொரு ஜீவன் கொடுக்கப்படுவது அவசியமானதால், ஒரே பரிபூரண "மனிதனாகிய இயேசு கிறிஸ்து" ஆதாமுக்குள்ளாக (அவர் மூலமான நம்முடைய இழப்புகள்) விழுந்துபோன "எல்லாரையும் மீட்கும்பொருளாக" இருக்க முடியாது. அதனால், வேறு எந்த திட்டத்தின்படியும் இயேசுவின் ஈடுபலி அல்லது மரணம் எல்லாருக்குமான விலைக்கிரயமாக இருந்திருக்காது.

ஆதாமின் பிறப்பு முதல், உலகத்தின் மொத்த ஜனத்தொகை 100 பில்லியனாக இருக்குமேயானால், இதில் பாதியாகிய 50 பில்லியன் நபர்கள் பாவிகளாயிருந்தால் 50 பில்லியன் நபர்களை இரட்சிக்க, பாவமே செய்யாத மற்ற 50 பில்லியன் நபர்களும் சேர்ந்து அவர்களுக்கான மீட்கும் பொருளாக (சரிநிகர் சமான விலையாக) மரிக்க வேண்டியதாயிருக்கும். இந்த திட்டத்தின்படியும் மரணம் அனைவர் மேலும் வரவேண்டியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட திட்டத்தால், தற்காலத்தில் அனுபவிக்கப்பட்டுவரும் துன்பங்கள் குறையாது.

இப்படிப்பட்ட திட்டத்திற்கான மற்றொரு ஆட்சேபனை என்னவெனில், தலையாகிய இயேசுவின் சரீரமும், "சிறுமந்தை" வகுப்பாருமாகிய தெய்வீக சுபாவத்திற்கு தெரிந்துகொள்ளப்பட்டு, உயர்த்தப்படும் வகுப்பாருக்கும் தெய்வீகத் திட்டத்தில் கடும் இடையூறு ஏற்படும். கீழ்ப்படிந்த பாதிப்பேராகிய 50 பில்லியன் நபர்களின் உரிமை, சலுகைகள் மற்றும் ஜீவனை ஈடுபலியாக பாதிப்பேராகிய பாவிகளுக்கென ஒப்புக்கொடுப்பது தேவ நீதியாயிராமல் அநீதியாயிருக்கும். ஏனெனில்,

கீழ்ப்படிந்தவர்கள் நித்திய ஜீவன் பெறும் உரிமையை தேவ நீதியின்படி வென்றிருக்கிறார்கள். ஆகையால், பரிபூரண மனிதர்கள், விழுந்துபோனவர்களுக்காக ஈடுபலி செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பார்களேயானால், அது தேவ திட்டமாக இருக்குமேயானால், நமது கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாக ஒரு விசேஷவெகுமதி முன்வைக்கப்பட்டிருந்ததுபோல் அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற சந்தோஷத்தின் பொருட்டு, தங்கள் சகோதரர்களுக்காக தண்டனையை சகித்து, அந்த வெகுமதியைச் சுதந்தரிப்பர். மேலும், நம் கர்த்தராகிய இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட அதே தெய்வீக சுபாவமாகிய வெகுமதி புதிய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக தூதர்கள், துரைத்தனங்கள், அதிகாரங்களுக்கு மேலாகவும், எல்லா நாமங்களுக்கும் மேலாகவும் உயர்த்தப்பட்டிருந்தால், அதாவது யேகோவா தேவனுக்கு அடுத்தபடியாகயிருந்தால், தெய்வீக நிலைமையில் எண்ணிலடங்கா ஜனங்கள் இருப்பர். இதை தேவ ஞானம் ஒருபோதும் சந்தேகத்திற்கிடமின்றி அங்கீகரிக்காது. (எபே. 1:20, 21) இதற்கும் மேலாக இந்த 5000 கோடி நபர்களும், ஒரே சமமாக அந்தஸ்தில் இருப்பார்களேயானால், இவர்களுக்குள் யார் பிரதானமானவர்? யார் தலைமையாய் இருப்பார்? ஆகவே, தேவ திட்டப்படி ஒரே மீட்பர் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர் ஒருவரே தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டு, அவர் பிற்பாடு "சிறுமந்தை"யாக சிலரை மீட்டு, அவரது அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து வரும்படி பணித்து, அப்பாதையில் நடக்கும்போது வரும் துன்பங்களாலும், உலகத்தை வெறுத்ததாலும், அவரது நாமத்தில் பங்கு பெற்று, அவரது கனம், மகிமை மற்றும் அவருடைய சுபாவம் போன்றவற்றை எவ்வாறு ஒரு கணவனுடைய எல்லாவற்றிலும் மனைவி பங்குபெறுவதுபோல, பங்கடைவார்கள்.

ஒரே பிரதிநிதியின் மூலமாக சாபத்துக்குள்ளான அனைவரையும் ஒரே பிரதிநிதியின் மூலம் அனைவரையும் மீட்டு இரட்சித்து, எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கும் தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின் இந்த ஒரு அம்சத்தைப் போற்றுபவர்கள், இந்த திட்டத்தின் மூலம் அநேக குழப்பங்கள், சங்கடங்களுக்கு விடை கிடைப்பதைக் கண்டுகொள்வர். எல்லாரும் ஒரே மனிதனாகிய ஆதாமுக்குள் ஆக்கினைத் தீர்ப்பை அடைந்தது சாபத்தை ஏற்படுத்துவதற்காக அல்ல



என்று அவர்கள் கண்டுகொள்வர். தேவ திட்டத்தின்படி நோக்கும்பொழுது, வேறொருவரைக்கொண்டு அவரது பலியின் மூலமாக எல்லாரையும் நீதிமான்களாக்குவது மாபெரும் தேவ தயவாகும். தீமையை அனுமதித்ததன் தேவ நோக்கம் நிறைவேறின பின்பு, ஈடுபலியினால் கிடைத்த பலன்கள் ஆதாமின் தண்டனையை முழுவதும் தவிர்த்த பின்பு, தீமை ஒருபோதும் இராதபடிக்கு முழுமையாக ஒழிக்கப்பட்டு விடும். பாவத்தின் பயங்கரக் கேட்டையும், அதன் தண்டனையாகிய மரணத்தையும், மற்றும் நமது கர்த்தராகிய இயேசு கொடுத்த ஈடுபலியின் முக்கியத்துவத்தையும், தனி மனிதன் ஒவ்வொருவரையும் சீர்பொருத்தச் செய்து, தேவ தயவைப் பெற்ற நிலைமைக்குத் திரும்புவதையும் அவன் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு நித்திய ஜீவன் பெறவோ அல்லது மரிக்கவோ நியாயந்தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் நன்கு அறிந்துணராவிட்டால், தேவனுடைய தெய்வீக திட்டத்தின் அம்சத்தை சரியான வகையில் போற்றுவது மிகக் கடினமே.

கிறிஸ்துவின் மூலமாக ஏற்பட்டிருக்கும் மீட்பின் மாபெரும் திட்டத்தையும், அதன் விளைவாக வரும், "அனைத்தையும் திரும்பக்கொடுத்தலையும்" பற்றிய அறிவை நாம் அடையும்பொழுது மட்டுமே, தேவன் தீமையை அனுமதித்ததன் முடிவாக ஏற்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களை முழுமையாக கண்டுணரமுடியுமே தவிர, வேறெந்த வகையிலும் உணர முடியாது.

நித்திய காலத்திற்கும் படிப்பினையையும், அனுபவங்களைத் தரும் தீமையைப் பற்றிய கேட்டை மனிதன் கற்றுக்கொள்வதோடு, தேவ தூதர்களும் மனிதரது அனுபவங்களைக் கண்டு நன்மையடைவர். அதோடுகூட தேவ திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனது குணாதிசயங்களையும், நன்கு அறிந்து தேர்ச்சி பெற்றிருப்பர். அவரது திட்டம் முழுமையாக நிறைவேறித் தீரும்போது, அவரது ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகியவற்றை நன்கு கற்கும் ஆற்றல் பெற்றிருப்பர். மனப்பூர்வமாக தம்மையே மரணத் தீர்ப்பு அடைய ஒப்புக்கொடுக்கும் ஒரு இரட்சகரையன்றி, விழுந்துபோன மனிதனை இரட்சிப்பது, தேவநீதிக்கு களங்கமேற்படுத்தும் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வர். இந்த உன்னதமான பலியை ஒப்புக்கொடுக்க அவரது அன்பே ஏவினது என்பதையும், அதன் காரணமாகவே தேவன் அவரை உன்னதங்களுக்கு

உயர்த்தி, தம் வல்லமையின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கச்செய்தார் என்றும், அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக விலைக்கு வாங்கப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனுக்கு உயர்த்தும் அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்திருக்கிறார் என்றும் கண்டுகொள்வர். தம்முடைய சிருஷ்டிகளுக்கு ஒரு மகிமையான எதிர்காலத்தை தேவ வல்லமையினாலும், ஞானத்தினாலும் தரமுடியும் என்பதையும், மேலும் தடையாக எதிர்த்து நிற்கும் ஒவ்வொரு ஆதிக்கத்தையும் கட்டுப்படுத்தி, அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தம்முடைய அருமையாக வடிவமைக்கப்பட்ட தெய்வீகத் திட்டங்களை முழுமையாக முன்னேறச் செய்து நிறைவேறும்படி அதற்கென அவர்களை கருவிகளாக பயன்படுத்துகிறார். தீமை அனுமதிக்கப்படாதிருந்தாலும், அது தெய்வீக வழிநடத்துதலால் கட்டுப்படுத்தப்படாமல் இருந்திருந்தாலும், அதன் மூலமான விளைவுகளாகிய இந்த பலன்கள் எவ்வாறு பெறப்படுகிறது என்பதையும் அறிந்துகொள்ள முடியாது. தீமை சில காலத்திற்கு மனிதர் மத்தியில் அனுமதிக்கப்பட்டது, தொலைதூரப் பார்வையுடைய அவருடைய ஞானத்தை வெளிப்படுத்துவதுடன், அந்த ஞானமானது தீமையின் தொடர்புடைய எல்லா சூழ்நிலைகளையும் முன்னறிந்து, அவருடைய வல்லமையின் மூலமும் கிருபையின் மூலமும் இறுதி விளைவாகிய விமோசனத்தையும் திட்டமிட்டது.

சுவிசேஷ யுகத்தின் காலத்தில் பாவமும், அதனால் வரும் தீமைகளும், திருச்சபையை ஒழுக்கத்தில் நடத்தவும், ஆயத்தம் பண்ணவும் உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. பாவம் உலகில் அனுமதிக்கப்படாவிட்டால், நமது கர்த்தராகிய இயேசுவின் ஈடுபலியும், அவரது திருச்சபையின் ஜீவபலியும் அவசியமற்றதாயும், அவர்கள் தெய்வீக சுபாவமாகிய வெகுமதியை அடைந்திருக்கக்கூடாததாயும் இருந்திருக்கும்.

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும், உன் முழு சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோல, பிறனிடத்திலும் அன்புகூருவாயாக."(லூக்கா 10:27) மேற்கண்ட வசனத்தில் அடங்கியிருக்கிற அன்பின் பிரமாணமே தம்முடைய அறிவுக்கூர்மையுள்ள சிருஷ்டிகளிடத்தில் ஆளுகை செய்ய வேண்டும் என்றும், இதற்கு கீழ்ப்படிபவர்கள் ஜீவனையும் தகுதியை பெறுகிறார்கள் என்றும், கீழ்ப்படியாதவர்கள் மரண தண்டனையை அடைவார்கள் என்றும், இதுவே



தேவன் இறுதியாக தம் சிருஷ்டிகளிடத்தில் தேடப்போகிற "அன்பு" என்கிற ஒரே வார்த்தையாகிய சட்டம் என்றும் காண்கிறோம். எல்லாவற்றிற்கும் முடிவாக, தேவ நோக்கம் நிறைவேறித் தீரும் வேளையில் தெய்வீக குணநலன்களின் மகிமையானது, எல்லா அறிவுள்ள சிருஷ்டிகளிடத்திலும் வெளியரங்கமாகும். அப்பொழுது அனுமதிக்கப்படும் தற்காலிகமான தீமையின் அனுமதியையும் அனைவரும் கண்டு, இதனால் வந்த நன்மையையும், தெய்வீக கொள்கையின்படியான ஞானத்தின் அம்சங்களையும் புரிந்துகொள்வார்கள். ஆனால், தற்காலத்திலோ இக்காரியங்கள் விசுவாசக்கண்கொண்டு பார்ப்பவர்களால் மட்டுமே அறியப்படும். அவர்கள் திரும்பக்கொடுத்தலின் காலங்களைப் பற்றி உலகத் தோற்றமுதல் எல்லா தீர்க்கதரிசிகளின் வாயினாலும் முன் உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளை விசுவாசக் கண்களினால் மாத்திரமே தற்போது உற்றுநோக்கி வருகிறார்கள்.

## அந்த விடியல் உன் அருகில்

"புனித யாத்திரையில் சோர்வுறும் எளியவனே, உன் வழியைப் பற்றிக்கொண்டிரு
– விடியல் உன் அருகில்!
உண்மையாகவே களைத்துப்போயிருக்கிறாய் நீ தற்போது, ஆனால் வெகுத் தெளிவாய் உள்ளது அந்த ஒளிமிக்க கதிர்.

சிறிது நேரம் உறுதியோடு தாங்கு; ஓய்வுக்காக காத்திரு;
கடின உழைப்பு உன்னை ஒடுக்கினாலும், கண நேரங்கூட அசதியாயிராதே.

"இரவு நீண்டதும் பெரும் கவலை அளிக்கிறது, ஆனாலும் முன்னே நோக்கிப்பார் –
விடியல் உன் அருகில்!
பூமியின் நிழல்போன்ற காட்சிகளும், கோணங்களும் விரைவில் மறைந்துவிடும்;
பயத்தில் அகப்படாதே!

உன் முன்னே உயரமான மலையின் சிகரம், ஆதாயப்படுத்து,
மகிழ்ச்சியும் சமாதானமும் கொண்ட பிரகாசமான உலகை நீ எட்டுவாய்.

"'நம்பிக்கையினால் வரும் மகிழ்ச்சியே' உன் குறிக்கோளாக இருக்கட்டும் எப்போதும் – விடியல் உன் அருகில்!
எப்படிப்பட்ட மகிமையை வெளிப்படுத்தும் உனக்கு அந்த விடியல்! உற்சாகமாய் இரு!

உன் அரையைக் கட்டிக்கொண்டு; வாள்கொண்ட காவலாளியை வரிந்துகட்டி முன்னேறு;
வழியோ நீண்ட இருளானது; முடிவோ இனிமையானது."

• • • •

## அத்தியாயம் – 8

# நியாயத்தீர்ப்பின் நாள்

நியாயத்தீர்ப்பின் நாளைப் பற்றிய பொதுவான கருத்து – இது வேதாகமத்திற்கு இசைவானதா? – நியாயத்தீர்ப்பு மற்றும் நாள் என்னும் பதங்களின் பொருள் விளக்கம் – அநேக நியாயத்தீர்ப்பின் நாட்கள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது – முதலாவது நியாயத்தீர்ப்பின் நாளும் அதன் முடிவுகளும் – நியாயாதிபதி – இன்னும் ஒரு நியாயத்தீர்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது – வரவிருக்கின்ற நியாயத்தீர்ப்பின் இலட்சணங்கள் – முதலாம் நியாயத்தீர்ப்பிற்கும் இரண்டாம் நியாயத்தீர்ப்பிற்கும் இடையேயுள்ள ஒற்றுமையும் வேற்றுமையும் – உலகத்தின் தற்போதைய பொறுப்பு – இந்த இரண்டு நியாயத்தீர்ப்பின் நாட்களுக்கும் நடுவே ஏற்படும் வேறு இரண்டு நியாயத்தீர்ப்புகளும், அவற்றின் நோக்கமும் – வரவிருக்கிற நியாயத்தீர்ப்பைப் பற்றிய வேறுபட்ட மதிப்பீடுகள் – இதை எப்படி தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும் நோக்கினார்கள்.

"ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு (நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து – 1 யோவான் 2:1) பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்."(அப்.17:31) "பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமல், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்." (யோவான் 5:22)

நியாயத்தீர்ப்பின் நாளைக்குறித்து நிச்சயமற்றதும், வீணானதுமான சிந்தனையை அநேகர் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்து பூமிக்கு வருவார் என்றும், மாபெரும் வெள்ளை சிங்காசனத்தில் வீற்றிருப்பார் என்றும், பூமி அதிர்ந்தும் கற்பாறைகள் உருகியும், மலைகள் புரண்டு விழுந்தும், இவ்வாறு உக்கிரமாக அசைக்கப்படும் வேளையில், கல்லறைகள் திறக்கும் என்றும், கர்த்தருக்கு முன்பாக புத்தகம் திறக்கப்பட்டிருக்கும், அதில் பரிசுத்தவான்களும், பாவிகளும் அழைக்கப்படுவார்கள் என்றும் அவர்களது நியாயத்தீர்ப்பும் வெகுமதியும் இடம்பெற்றிருக்கும் என்றும் எண்ணுகின்றனர். அப்பொழுது பாவிகள் நித்திய சாபத்திலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு, அவர்களது அக்கிரமங்கள் எல்லாம் எடுத்துரைக்கக்



கேட்பார்கள் என்றும், அதன்பிறகு மீண்டும், இரக்கமற்ற நித்திய ஆக்கினைக்குத் திரும்புவார்கள் என்றும், பரிசுத்தவான்கள் பரலோகத்திலிருந்து திரும்பவும் கொண்டுவரப்பட்டு, பொல்லாதவர்கள் அடையும் ஆக்கினையைக் கண்டு, சாட்சி பகர்வார்கள் என்றும், தங்களுக்குரிய தீர்ப்பை மீண்டும் சொல்லக்கேட்டு, மீண்டும் பரலோகத்தையே அடைவார்கள் என்றும் அநேகர் நினைக்கின்றனர். தற்போது நிலவும் கோட்பாடுகளின்படி அனைவரும் அவரவர் நியாயத்தீர்ப்பையும், வெகுமதியையும் மரணத்தில் அடைகிறார்கள் என்பதால், இந்த நியாயத்தீர்ப்பை வேறுபடுத்திக் காண்பிக்க, அதைப் பொதுவான நியாயத்தீர்ப்பு என்று கூறுகிறார்கள். ஆனால், பொதுவான நியாயத்தீர்ப்பு என்று அவர்கள் கூறுவது உண்மையாகவே முதலாம் நியாயத்தீர்ப்பையே இரண்டாந்தரம் கூறுவதாக உள்ளதால், எவ்வித நோக்கமில்லாததுடன், மரணத்தருவாயில் பெறும் அத்தீர்ப்பே இறுதியானதும் மாற்ற முடியாததுமாயிருக்கிறது எனக் கூறுகிறார்கள்.

கோடிக்கணக்கான மனிதர்களை நியாயந்தீர்க்க கொடுக்கப்பட்ட காலம் 24 மணி நேரம் கொண்ட ஒரு நாள் என்று அவர்கள் நினைக்கின்றனர். அமெரிக்காவிலுள்ள புருக்ளின் சபையில் இதன் பொதுவான கருத்தைக் குறித்து ஒரு பிரசங்கம் தரப்பட்டது. அதில் நியாயத்தீர்ப்பு நாளில் செய்யப்படும் வேலையைக் குறித்து, விரிவான விளக்கம் தரப்பட்டது. என்னவெனில், அந்த நாளானது, நேரடி அர்த்தங்கொண்ட ஒரே நாளுக்குள் முடிவடைந்துவிடும் என்று கூறப்பட்டது.

இது பகுத்தறிவிற்கு ஏற்ற சிந்தனையாயிராமலும், வேதாகமத்தின் போதனைக்கு முழுவதும் எதிராயும் உள்ளது. நமது கர்த்தர் பேசின வெள்ளாடு – செம்மறியாடு உவமையை நேரடியான அர்த்தங்கொள்வதினால் இந்த எண்ணம் ஏற்படுகிறது. (மத்.25:31–46) உருவகமாக உரைக்கப்பட்டவைகளுக்கு நேரடி அர்த்தமெடுப்பது பெரும் ஆபத்தை வருவிக்கும் என்று இது அறிவுறுத்துகிறது. ஒரு உவமை என்பது ஒருபோதும் நேரடியான அல்லது நிஜமான செய்தியாயிராமல், அநேக வகைகளில் அதற்கொத்த சத்தியத்தை விளக்க வெறுமனே பயன்படுத்தப்படும் எடுத்துக்காட்டு ஆகும். இந்த உவமையில்

கூறப்பட்டுள்ள முறையின்படியே நியாயத்தீர்ப்பு நடைபெறுமானால், அதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் அனைத்தும் மனுக்குலத்தைக் குறிக்காமல், அதில் உள்ளபடியே செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையுமே குறிக்கும். ஆகவே, தேவன் முன்குறித்திருக்கும் மாபெரும் நியாயத்தீர்ப்பு நாளின் வேலைகளையும் அதின் பலன்களையும் வேத வசனங்களின் மூலமாகவும் புத்தியறிவின் மூலமாகவும் நோக்கும்போது, எல்லா உவமைகளும், உருவகங்களும் ஒன்றுக்கொன்று கண்டிப்பாக ஒத்துப்போவதை திர்மானமாக அறியலாம்.

"நியாயத்தீர்ப்பு" என்னும் சொல்லானது, தீர்ப்பளித்தல் என்ற பொருளைக் காட்டிலும் கூடுதலான பொருளைத் தருகிறது. ஒரு பரீட்சையை இது உள்ளடக்கியதாக இருப்பதோடு, அந்த பரீட்சையின் அடிப்படையில் இறுதியில் ஒரு முடிவு எடுக்கப்படுவதையும் உணர்த்துகிறது. நியாயத்தீர்ப்பு என்பதற்கான ஆங்கிலச் சொல்லின் (Judgement) பொருளைப் போலவே, கிரேக்கச் சொல்லுக்கும் ஒரே பொருளே விளங்குகின்றது. அதன்படி, தீர்ப்பிடுதல் என்ற பொருளை மட்டும் தராமல், "பரிசோதித்துத் தீர்ப்பு செய்தல்" என்று பொருள்படும்.

"நாள்" என்ற சொல் வேதாகமத்தின்படியும், பொதுவான நடைமுறையின்படியும் 12 அல்லது 24 மணி நேரங்களைக் கொண்டது என்று குறிப்பிட்டாலும், உண்மையாகவே அது ஒரு குறிப்பிட்ட அல்லது விசேஷித்த காலப்பகுதியை அடையாளப்படுத்துகிறது. உதாரணமாக நாம், நோவாவின் நாள், லூத்தரின் நாள், வாஷிங்டனின் நாள் என்று பேசுகிறோமே. இவை 24 மணி நேரம் கொண்ட ஒரு நாள் அல்ல என்பதை அறிவோம். அவ்வாறே வேதாகமம் சிருஷ்டிப்பின் முழு காலப்பகுதியை ஒரு நாள் என்று அழைக்கிறது.

உதாரணமாக, "தேவனாகிய கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின நாளிலே" (ஆதி.2:4) – இது ஒரு நீண்ட நிச்சயமான காலப்பகுதியாகும். மேலும், வனாந்தரப் பயணத்தின் சோதனை நாள் 40 வருடங்கள் ஆகும். (எபிரெயர் 3:8,9) மேலும், "இரட்சிப்பின் நாள்" என்று வாசிக்கிறோம். (2 கொரி. 6:2) "பழிவாங்குதலின் நாள்" என்றும், "கோபத்தின் நாள்" என்றும் "உபத்திரவத்தின் நாள்" என்றும், கூறப்பட்டிருப்பது யூத



யுகத்தின் முடிவு காலமாகிய 40 வருடங்களைக் குறிக்கும். இதே போல சுவிசேஷ யுகத்தின் முடிவில் வருகிற உபத்திரவ காலத்தையும் குறிக்கும். அவ்வாறே "கிறிஸ்துவின் நாள்," "நியாயத்தீர்ப்பின் நாள்," "அவருடைய நாள்" என்று நாம் வாசிப்பவைகள், ஆயிர வருட அரசாட்சியைக் குறித்துக் காண்பிக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் மேசியா ஆட்சிசெய்து, இவ்வுலகத்தை நீதியாய் நியாயந்தீர்த்து, ஒவ்வொரு மனிதனையும் பரிசோதித்து, அதன் முடிவில் தீர்ப்பிடுவார். அந்த காலப்பகுதியைக் குறித்தே இவ்வாறாக எழுதப்பட்டிருக்கிறது: "அவர் பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அவருடைய அந்த நாளின்போது, யார் அந்த ஆசீர்வதிக்கப்பட்டவரும், ஒருவராய் சர்வ வல்லமை உடையவரும், இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தா என்பதை காண்பிப்பார். (அப்போஸ்தலர் 17:31; 1தீமோத். 6:15) "நாள்" என்ற சொல்லுக்கு விசாலமான பொருள் இருக்கும்போது, அது 12 அல்லது 24 மணி நேரங்களைக் குறிக்குமென்று நியாயத்தீர்ப்பின் நாளைக் குறித்து பலர் எண்ணுவதற்குக் காரணம், எவ்வித சாட்சியங்களும், ஆராய்ச்சிகளுமின்றி, யூகங்களின் அடிப்படையிலான பாரம்பரியமான சிந்தையே ஆகும்.

வேதாகம அகராதி மற்றும் ஒத்துவாக்கிய நூலில் நியாயத்தீர்ப்பின் நாள் பற்றிய குறிப்புகளை மிகவும் கவனமாக ஆராய்ந்து பார்த்து, அந்த காலப் பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய எவ்வளவு என்றும் அவை எத்தன்மையானது என்றும் கவனித்தால், நியாயத்தீர்ப்பின் நாளைப் பற்றிய பொதுவான எண்ணம் தவறானது என்றும், நாள் என்னும் பதத்திற்கு விசாலமான அர்த்தம் கொடுப்பது அவசியம் என்பதும் காணப்படும்.

ஒரு பெரிய நியாயத்தீர்ப்பு அல்லது சோதனை நாள் வரும் என்றும், அந்த நாளில் மனுக்குலம் முழுவதும் அவர்களது முழுமையான சோதனை மற்றும் கடைசியான நியாயத்தீர்ப்பை பெறுவார்கள் என்றும் வேத வசனம் கூறும்போது, வேறு நியாயத்தீர்ப்பின் நாட்களில் குறிப்பிட்ட தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாருக்கு சோதனை இருக்கும் என்பதையும் வேத வசனங்கள் போதிக்கின்றன.

முதலாவது மாபெரும் நியாயத்தீர்ப்பு (சோதனையும் தீர்ப்பும்) ஆரம்பத்தில் ஏதேனில் நடந்தது. இது முழு மனுக்குலத்திற்கும் பிரதிநிதியாக இருந்த ஆதாம் தேவனுக்கு முன்பாக நின்றபொழுது

நடந்தது. இந்த சோதனையின் முடிவாக ஆதாம் குற்றவாளியென்றும், கீழ்படியாதவனென்றும், ஜீவனோடிக்க தகுதியற்றவனென்றும் தீர்ப்புபெற்று, சாகவே சாவாய் (ஆதியாகமம் 2:17 – இன் சரியான மொழிபெயர்ப்பு) என்னும் தண்டனையையும் அடைந்தான். ஆகவே, ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கின்றனர்." ஏதேனில் நடந்த இந்த சோதனைக்காலமே உலகத்திற்கு முதலாம் நியாயத்தீர்ப்பின் நாள் (சோதனையும் தீர்ப்பும்). அன்றைக்கு நியாயாதிபதியாக நின்று யேகோவா தேவன் அளித்த தீர்ப்பு இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகிறது.

"எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்திற்கும் விரோதமாய் தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது." ஒவ்வொரு இறுதி ஊர்வலத்திலும் இது காணப்படுகிறது. ஒவ்வொரு கல்லறையுமே இதற்கு சாட்சியாய் இருக்கிறது. நாம் அனுபவிக்கிற ஒவ்வொரு துன்பத்திலும் வலியிலும் அது உணரப்படுகிறது. இவையெல்லாம் தேவ சாயலின்படி ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களையும் ஜீவனையும் பெற நாம் தகுதியற்றவர்கள் என்கிற நீதியான தேவனுடைய தீர்ப்பினால் உண்டானது. ஆனால், நமது மகா மீட்பர் எல்லாருக்காகவும் கொடுக்கிற ஒரே பலியினால் மனுக்குலம் முழுவதும் முதல் சோதனையின் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். தற்காலிகமான மரண நித்திரையிலிருந்து பிரேதக் குழியிலுள்ள அனைவரும் மீட்கப்பட்டு, மரணமாகிய அழிவிலிருந்து விடுதலையடைவார்கள். ஆயிர வருட அரசாட்சியின் துவக்கமாகிய காலை வேளையில் அனைவரையும் மீட்டுக்கொண்ட கர்த்தர், ஜீவன் அளிப்பவராக இருந்து, அனைவரையும் மீட்பார் என்றபோதிலும், விசுவாசிக்கிற திருச்சபை அங்கத்தினர்கள் இவ்வேளையில் ஆதி மரண சாபத்திலிருந்தும், தண்டனையிலிருந்தும் முழுவதும் விடுவிக்கப்பட்டதாக கருதப்படுகிறார்கள். அவர்கள் தப்பியிருப்பது உண்மையானதாக இல்லாவிட்டாலும், விசுவாசத்தினாலே அவ்வாறு கருதப்படுகிறார்கள். "நாம் நம்பிக்கையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்." ஆதாமின் பாவத்தினிமித்தம் கொடுக்கப்பட்டதும், நம் கர்த்தரால் விடுவிக்கப்பட்டதுமாகிய இந்த மரண தண்டனையிலிருந்து உயிர்த்தெழுதலின் காலை வேளை வரைக்கும், உண்மையான விடுதலையைப் பெறமுடியாது. அவ்வேளையில் நம் மீட்பரின் சாயலில்



விழித்தெழுந்திருக்கும்போது திருப்தியாவோம். ஆனால், தேவனது கிருபை நிறைந்த தெய்வீகத் திட்டத்தை கிறிஸ்துவுக்குள்ளாக இருந்து அறிகிற அறிவிற்கு வந்திருக்கிற நாம் "உலகத்திலுண்டான கேட்டுக்கு தப்பியிருக்கிறோம்." நாம் இவ்வாறு இத்தீர்ப்பினின்று விடுவிக்கப்பட்டது, நம்மையல்லாத மற்றவர்கள் விடுக்கப்படமாட்டார்கள் என்று காண்பிக்காமல், நாம் தேவனுடைய சிருஷ்டிப்புகளில் முதற்பலன்கள் (யாக். 1:18) என்று முன்னுரைத்திருப்பதால் அதற்கு பின்னர் அவர்களுக்கும் பலன்கள் உண்டு என்பதை நிரூபிக்கிறது. நாம் ஆதாமுக்குள் மரித்து கிறிஸ்துவுக்குள் ஜீவித்திருக்கிற இந்த இரட்சிப்பானது, பின்னர் இரட்சிக்கப்பட இருக்கும் அனைவருக்கும் முன்னடையாளமாக ருசிபார்க்கப்பட்டதாக மட்டுமே உள்ளது. இவர்கள் ஜீவனுக்கான சுயாதீனத்தை அடைந்தபின்பு, தம் புத்திரர்களாக தேவன் ஏற்றுக்கொள்கிறார். அனைவரும் மரணத்திலிருந்து ஜீவனுக்கு மீட்கப்படலாம். ஆனாலும், ஒரு சில குமாரர்களை மேலான தெய்வீக சுபாவத்திலும் , சிலரை வேறுவிதமான ஜீவன் நிலைமையிலும் வைக்க தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். தெய்வீக சுபாவத்திற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு ஜீவனா அல்லது மரணமா என்பதை தீர்மானிக்க நடக்கும் பரீட்சையின் நாளே சுவிசேஷயுகம் ஆகும்.

ஆனால், தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். இது எவ்வாறு நடைபெறும்? தேவன் தமது தீர்மானத்தை மாற்றிவிட்டாரா? முதலாம் மனிதனாகிய ஆதாமுக்கு வைத்த பரீட்சையும், அதன் நிமித்தம் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்ட தண்டனையும் அநீதியானது, கடினமானது என்று எண்ணி, உலகத்திலுள்ளவர்களை தனித்தனி நபர்களாக நியாயந்தீர்க்க தேவன் தீர்மானித்துவிட்டாரா? இல்லை. அவ்வாறு இருக்குமானால் கடந்த காலத்தைக் காட்டிலும் எதிர்காலத்தில் நடைபெறவிருக்கிற சோதனையில் நிதானமான நியாயத்தீர்ப்பு நடைபெறும் என்பதற்கான நிச்சயத்தை நாம் அடையவில்லை. தேவன் தாம் அளித்த முதலாவது நியாயத்தீர்ப்பு அநீதியானது என்று எண்ணினதேயில்லை. மாறாக, முதலாம் நியாயத்தீர்ப்பின் தண்டனையினால் மனிதன் பாவத்தின் அனுபவங்களையும் அதன் முடிவையும் ருசிபார்த்த பிறகு மீட்பினை ஏற்பாடு செய்து, அதினிமித்தம் இன்னுமொரு நியாயத்தீர்ப்பை அதிக தயை

நிறைந்த சூழ்நிலையில் முழு மனுக்குலத்திற்கும் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார். தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்பே உருவாக்கின ஏற்பாட்டிலிருந்தும் தீர்மானங்களிலிருந்தும் ஒரு சிறு புள்ளியை கூட மாற்றவே இல்லை. அவர் மாறாதவர் என்றும், குற்றவாளியின் குற்றத்தை அகற்றாமல், தாம் நியாயமாய் கொடுத்திருக்கும் சட்டத்தின்படி முழு தண்டனையையும் நிறைவேற்றுபவர் என்றும் தம்மை குறித்து கூறியிருக்கிறார். ஆதலால் தேவன் இயேசுகிறிஸ்துவை மீட்பராக அல்லது பதிலீடாகத் தந்தார். இயேசுவும் தேவகிருபையால் (தயவு) ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். ஆதாமின் சந்ததிக்காக நம் கர்த்தர் தன் சொந்த ஜீவனை மீட்கும் பொருளாக அளித்து, அனைவருக்கும் ஜீவனுக்கான ஒரு புதிய சலுகையை நீதியாய்க் கொடுத்தார். இந்த சலுகையானது திருச்சபையாருக்கு பலியின் உடன்படிக்கையின் கீழாகவும் (சங். 50:5; ரோமர் 12:1) உலகத்திற்கு புதிய உடன்படிக்கைக்கு கீழாகவும் கொடுக்கப்படுகிறது. (ரோமர் 14:9; எபி.10:16; எரே.31:31)

மேலும், தேவன் உலகத்திற்கு இந்த தனித்தனியான சோதனைகளைக் கொடுக்கும்போது கிறிஸ்துவே நியாயாதிபதியாக வீற்றிருப்பார். அவர் நமது மீட்புக்காக மரணபரியந்தம் கீழ்படிந்ததால், அவரை யெகோவா தேவன் இவ்வாறு கனப்படுத்துவார். இயேசுவே அதிபதியாகவும் இரட்சகராகவும் இருக்கும்படியாகவும் (அப்.5:31) தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் விலைக்கிரயமாக வாங்கப்பட்ட அனைவருக்கும் மரணத்திலிருந்தும் மன நியாயத்தீர்ப்பிலிருந்தும் விடுதலையளிக்கும்படியாகவும் தேவன் அவரை உன்னதத்திற்கு உயர்த்தி தெய்வீக சுபாவத்தை அளித்திருக்கிறார். தேவன் தம் குமாரனுக்கு நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரத்தையும், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களையும் கொடுத்திருக்கிறார். (யோவா.5:22)

உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டு, மகிமை அடைந்தவராகிய கிறிஸ்து, இவ்வுலகை அவ்வளவாக அன்புகூர்ந்ததின் நிமித்தமாக, ஈடுபலியாக தனது ஜீவனையே கொடுத்தார். அவரே வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற வருங்கால பரீட்சைக்கு உலகத்தின் நியாயாதிபதியாக இருப்பார். யெகோவா தேவனே இயேசுகிறிஸ்துவை இந்த நோக்கத்திற்காக இந்தப்



பதவியில் நியமித்திருக்கிறார். வேதாகமம் இதைக்குறித்து தெளிவாக உரைத்திருக்கிறபடியால் இதைக்குறித்து பயப்பட அவசியமில்லை. மாறாக, அந்த மகிழ்ச்சிக்குரிய நியாயத்தீர்ப்பின் நாளுக்காக அனைவரும் காத்திருக்க வேண்டும். நியாயாதிபதியின் குணநலன்களின் நிச்சயத்தன்மையால் நியாயத்தீர்ப்பு நீதியாகவும் இரக்கமிகுந்தும் இருக்கும் என்று நம்பலாம். விருப்பமும் கீழ்ப்படிதலுமுள்ளவர்கள் ஏதேனில் இருந்த ஆதி பூரண நிலைமைக்கு வரும் வரை அனைவரது பூரணத்தன்மை கருத்தில் கொள்ளப்படும்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஒரு நியாயாதிபதியின் பணியானது, ஒடுக்கப்பட்டவர்களை நீதியோடு விசாரித்து, விடுதலை செய்ய வேண்டியதாகும். உதாரணமாக, தேவனுக்கு விரோதமாக மீறுதல் செய்தபோது, அவர்களது எதிரிகள் அவர்களை மேற்கொண்டு ஒடுக்கினார்கள் என்றும் பின்பு சமயம் வந்தபோது, மீண்டும் அவர்கள் நியாயாதிபதிகளால் மீட்கப்பட்டு விடுவிக்கப்பட்டு ஆசீர்வாதம் அடைந்தனர் என்றும் நாம் அறிவோம். "இஸ்ரயேல் புத்திரர் கர்த்தரை நோக்கி கூப்பிட்டபோது, கர்த்தர் இஸ்ரயேல் புத்திரரை இரட்சிக்கும்படி . . . ஒத்னியேல் என்னும் ஒரு இரட்சகனை எழும்பப்பண்ணினார். அவன்மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால் அவன் இஸ்ரயேலை நியாயம் விசாரித்து யுத்தம் பண்ண புறப்பட்டான். . . தேசம் நாற்பது வருஷம் அமைதலாய் இருந்தது" என்று வாசிக்கிறோம். (நியாயாதிபதி 3:9–11) அவ்வாறே இவ்வுலகமானது எதிராளியாகிய சாத்தானின் வல்லமையின்கீழ் அநேக நூற்றாண்டுகள் ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறது. எனினும் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் அனைவரின் பாவங்களுக்காகவும் கிரயம் செலுத்தினார். தமது வல்லமையையும் ஆளுகையையும் எடுத்துக்கொள்வார். இரட்சிக்கும்படி தாம் அன்பு செலுத்தினவர்களை மீட்டு நியாயந்தீர்ப்பார். இந்த முடிவுக்கு எல்லா தீர்க்கதரிசன வசனங்களும் இசைவாய் உள்ளது. "அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்" என்று வாசிக்கிறோம். (சங்.98:9)

வரவிருக்கிற நியாயத்தீர்ப்பானது, முதலாம் நியாயத்தீர்ப்பின் கொள்கைக்கு நிகராகவே இருக்கும். அதே கீழ்ப்படிதலின் சட்டமும், அதே

வெகுமதியாகிய ஜீவனும் அல்லது அதே மரண தண்டனையும் இருக்கும். முதலாம் சோதனைக்கு எப்படி ஒரு துவக்கம், வளர்ச்சி, பின்னர் நியாயத்தீர்ப்பாகிய உச்சக்கட்டத்தை அடைந்ததோ, அவ்வாறே, இரண்டாம் நியாயத்தீர்ப்பிலும் இருக்கும். நீதிமான்களுக்கு ஜீவனும், அநீதிமான்களுக்கு மரணமும் நியாயத்தீர்ப்பாக அமையும். இரண்டாவது சோதனையானது, முதலாம் சோதனையைக் காட்டிலும் அதிக தயையுள்ளதாக காணப்படும். ஏனெனில், முதலாவது சோதனையின் விளைவாக கற்றுக்கொண்ட அனுபவங்களால் அவ்வாறு இருக்கும். முதலாம் பரீட்சையில் ஆதாம் எல்லாருக்கும் பிரதிநிதியாக நின்று தீர்ப்பைப் பெற்றிருக்க, இரண்டாம் பரீட்சையில் பிறருக்காக இல்லாமல், தங்களுக்கென்று ஒவ்வொருவரும் தனித்தனியே பரீட்சிக்கப்பட்டு, தீர்ப்பை அடைவார்கள். அப்பொழுது, ஒருவரும் ஆதாமின் பாவத்தினாலோ அல்லது சுதந்தரித்துக்கொண்ட அபூரணத்தின் நிமித்தமாகவோ மரிக்கமாட்டார்கள். "பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள்." "எந்த மனுஷன் திராட்சக் காய்களைத் தின்பானோ, அவனுடைய பற்களே கூசிப்போகும்." "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்." (எரே. 31:29,30; எசே. 18:4) தற்போது திருச்சபையாரைப் போலவே, உலகமும் அக்காலத்தில் அதாவது, ஒரு மனிதனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே நியாயந்தீர்க்கப்படுவான் (2கொரி.8:12) என்பது உண்மையாயிருக்கும். கிறிஸ்துவின் ஆட்சியின்கீழ் மனுக்குலம் பரிபூரணம் அடையும்வரைக்கும் படிப்படியாக போதிக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு, சிட்சிக்கப்படுவார்கள். அவர்கள் பரிபூரண நிலைமையை அடைந்தபிறகு தேவனிடத்தில் பூரணமாக இசைந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த பரிபூரணமான கீழ்ப்படிதலை அடையத் தவறுபவர்கள் ஜீவன் பெறத் தகுதியற்றவர்களாக நியாயந்தீர்க்கப்பட்டு, அறுப்புண்டு போவார்கள். ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நுழைந்த பாவம் மனுக்குலம் முழுவதற்கும் மரணத்தை வருவித்தது. இந்த செயல்பாட்டின் மூலமாக தனது பரிபூரணத்திலிருந்து வீழ்ந்தான். அவன் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டதால், அவனிடமிருந்து பரிபூரணமான கீழ்ப்படிதலை நிபந்தனையாக முன்வைக்கும் அதிகாரம் தேவனுக்கு உண்டு. அவ்வாறே, முழு மனுக்குலத்தையும் மறுசீரமைக்கும் மாபெரும் பணி முடிவடையும்போது, இதே நிபந்தனையை முன்வைப்பார். பரிபூரணத்தை



அடைவதில் சிறிதேனும் குறைவு ஏற்பட்டாலும் நித்திய ஜீவன்பெற யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. பரிபூரணத்தில் குறைவுபடுதல் முழு வெளிச்சத்திற்கும் பரிபூரண ஆற்றலுக்கும் எதிரான மனப்பூர்வமான பாவமாக இருக்கும்.

ஒருவர் தான் அடைந்திருக்கும் முழு வெளிச்சத்திற்கும், முழு ஆற்றலுக்கும் விரோதமாக, மனப்பூர்வமாக பாவம் செய்வாரேயானால் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார். பரீட்சிக்கப்படும் காலத்தின்போது, கொடுக்கப்படும் முழு வெளிச்சமாகிய தேவகிருபையை வெறுத்து ஒதுக்கி, 100 வருடங்களுக்குள் பரிபூரணமடைவதில் முன்னேற்றமடையாமல் போனால், அவன் ஜீவன் பெறத் தகுதியற்றவனாகக் கருதப்பட்டு, அறுப்புண்டு போவான். அவன் மரிக்கும் போது 100 வயதுள்ளவனாகவே இருந்தாலும் வாலிபனாகவே இருப்பான். அந்த நாளைக்குறித்து இப்படியாக எழுதப்பட்டிருக்கிறது: "நூறு வயது சென்று மரிக்கிறவனும் வாலிபன் என்று எண்ணப்படுவான். நூறு வயதுள்ள பாவியோ சபிக்கப்படுவான்." (ஏசா. 65:20) இப்படியாக, அனைவரும் 100 வருட பரீட்சையின் காலத்தைப் பெற்றிருக்க வேண்டும். தேர்ச்சியடைய பிடிவாதமாக மறுப்பவர்களின் பரீட்சை, கிறிஸ்துவின் 1000 ஆண்டு ஆட்சி முடியும்வரை தொடர்ந்து நீடித்து, அதன் முடிவின்போது தன் உச்சகட்டத்தை அடையும்.

உலகத்திற்கான வரவிருக்கின்ற நியாயத்தீர்ப்பின் முடிவு வெள்ளாடு மற்றும் செம்மறியாடு உவமையில் தெளிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது (மத். 25:31–46; வெளி. 20:15; 21:8; 1 கொரி. 15:25). மேற்குறிப்பிட்ட வசனங்களும், இன்னும் மற்ற வசனங்களும் காண்பிக்கிறதாவது: இரண்டு வகுப்பார் நியாயத்தீர்ப்பின் முடிவில் கீழ்ப்படிபவர்கள், கீழ்ப்படியாதவர்கள் என்று தனித்தனியே பிரிக்கப்படுவார்கள்; இவர்களில் கீழ்ப்படியும் வகுப்பார் தேவனது சட்டங்களுக்கு ஆவியின்படியும் எழுத்தின்படியும் இசைந்திருப்பார்கள். கீழ்ப்படியாத வகுப்பாரோ, அதற்கு இசைவில்லாதவர்களாக இருப்பர். கீழ்ப்படிகிற அவர்கள் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பர். மற்ற வகுப்பார் முழு மரணத்திற்கு (இரண்டாம் மரணம்) நியமிக்கப்படுவார்கள். இது முதலாம் தீர்ப்பைப் போன்று அதே தண்டனையாகும். ஆனால், கிறிஸ்து தமது மரணத்தின் மூலம்

அவர்களுக்கு மீட்கும் பொருளைக் கொடுத்து அவர்களை விடுவிக்கும் உரிமையைப் பெற்று அவர்களை விடுவித்திருந்தார். இது அவர்களது இரண்டாம் மரணமாக இருக்கும். ஆனால், இரண்டாம் நியாயத்தீர்ப்பிலிருந்து விடுவிக்க, மீட்கும்பொருள் கொடுக்கப்படாததால் அவர்களை விடுதலை செய்யவோ, உயிர்த்தெழுப்பவோ முடியாது. அவர்களது பாவம் மனப்பூர்வமானது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கொடுக்கப்பட்ட மிகவும் தயை நிறைந்த பரீட்சையில், முழுமையான வெளிச்சத்திற்கும் வாய்ப்பிற்கும் எதிராக தனிப்பட்ட பாவத்தை செய்ததால் இவர்கள் என்றென்றைக்கும் ஜீவனோடு இராதபடிக்கு அழிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு மனிதனும் இயற்கை மற்றும் வேதாகமத்திலிருந்தும் அடைந்திருக்கிற வெளிச்சத்தில், சிறிதளவோ அல்லது அதிகப்படியாகவோ தான் அனுபவித்திருப்பதால், அதற்குரிய பொறுப்புணர்வு தற்காலத்தில் இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு என்பதை நாம் மறுப்பதாக யாரும் தவறாக புரிந்துகொள்ள வேண்டாம். "கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலிருந்தும் நல்லோரையும், தீயோரையும் நோக்கி பார்க்கிறது." "ஒவ்வொரு கிரியையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும் நியாயத்திலே கொண்டு வருவார்." (நீதி.15:3; பிர.12:4) தற்காலத்தில் செய்யப்படும் நன்மை அல்லது தீய செயல்களுக்கு நீதியான பலனாக, தற்காலத்திலோ, அல்லது பிறகோ அதற்குரிய வெகுமதி அல்லது தண்டனையை அடைவார்கள். "சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும். சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும்." (1தீமோ.5:24) கர்த்தரது தயவுபெற்ற சிறுமந்தைக் கூட்டத்தார் தவிர்த்து மற்றவர்கள் போதிய வெளிச்சம் பெறாதவர்களாதலால், கடைசி தண்டனையாகிய இரண்டாம் மரணத்திற்கு பாத்திரராக முடியாது. உலகத்திற்கு தற்காலத்தில் ஓரளவு தயை உண்டு என்ற பாடத்தை இங்கு நாம் துவக்கி வைத்திருக்கிறோம். இதைக்குறித்த மற்ற விபரங்களை பின்னர் காணலாம்.

உலகத்திற்கான முதலாவது நியாயத்தீர்ப்பின் நாளுக்கும், இரண்டாம் நியாயத்தீர்ப்பின் காலத்திற்குமிடையே 6000 வருட காலப்பகுதி அடங்கியுள்ளது. இந்த மிக நீண்ட காலப்பகுதியில் தேவன் இரண்டு



விசேஷ வகுப்பாரை மனிதரிலிருந்து தெரிவுசெய்து வருகிறார். உலகத்தை நியாயந்தீர்க்கும் காலத்தில் இவர்கள் தேவனது கனம் பொருந்திய கருவிகளாக இருக்கும்படியாக சோதிக்கப்பட்டு, ஒழுக்கத்திலும், குணாதிசயத்திலும் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த இரண்டு வகுப்பாரைக் குறித்து எபி.3:5,6–இல் பவுல் அப்போஸ்தலன் பேசியிருக்கிறார். முதலாம் வகுப்பார் கிறிஸ்தவ யுகமாகிய சுவிசேஷ யுகத்தில் பரீட்சிக்கப்பட்டு, உண்மையுள்ளவர்களென்று தேவனால் அங்கீகாரம் பெற்ற தேவ வீட்டின் புத்திரர்கள். இரண்டாவது வகுப்பாரோ, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் விசுவாச வீரர்களாக வெற்றிகொண்ட தேவ வீட்டின் ஊழியக்காரர்கள். சுவிசேஷ யுகத்தைத் தொடர்ந்து வரவிருக்கின்ற உறுதிபண்ணப்பட்ட உலகத்தாரின் நியாயத்தீர்ப்பை இந்த இரண்டு விசேஷ தெரிந்துகொள்ளுதல் எவ்விதத்திலும் தலையிடு செய்யாது. இந்த இரண்டு விசேஷ வகுப்பாரும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பரீட்சையில் வெற்றிபெற்றதால், உலகத்து ஜனங்களுக்கு நடைபெறவிருக்கும் நியாயத்தீர்ப்பிற்கு வரமாட்டார்கள். மாறாக உலகத்தார் நியாயந்தீர்க்கப்படும் வேளையில் இவர்கள் விசுவாசத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதால், வெகுமதியைப் பெற்று அதன் பலனை அடைவார்கள். உலகத்தை ஆசீர்வதிக்க தேவனது பிரதிநிதிகளாக இவர்கள் இருந்து, மனிதருக்கு தேவையான அறிவுரைகளையும், தேவைப்பட்ட பயிற்சிகளையும் கொடுத்து அவர்களை இறுதிப் பரீட்சையாகிய நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம் செய்வார்கள். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?" (1கொரி.6:2)

விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்ட இந்த இரு வகுப்பாரும் மற்ற மனுக்குலத்தாரைப் போலவே, முன்பு ஆதாமின் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளானவர்களே. ஆயினும், கிறிஸ்துவின் மரணத்தினால் பெற்ற பலன்களை விசுவாசித்ததினால் கிறிஸ்துவோடு சுதந்தரர்களாயினர். தேவனது வாக்குத்தத்தங்களின் பேரில் இவர்கள் வைத்திருந்த விசுவாசத்தினால், நீதிமான்களாக்கப்பட்டு. அதன்பிறகு, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அந்தந்த அழைப்பின்படி நிபந்தனைகளை நிறைவேற்றி, கனம், அதிகாரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு தகுதியானவர்கள் என்று

அங்கீகாரம் பெறுவார்கள்.

வரவிருக்கும் நியாயத்தீர்ப்பின் நாளில் உலக ஜனங்களுக்கு தரப்படும் பரீட்சையைக் காட்டிலும், மிகக் கடினமான பரீட்சை இந்த இரண்டு வகுப்பாருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், இவர்கள் இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தானின் எல்லா கண்ணிகளுக்கும் தந்திரங்களுக்கும் தங்களை விலக்கி காத்துக்கொள்வதும், எதிர்த்து நிற்பதும் அவசியமாயிருந்தது. ஆனால், உலகத்து ஜனங்கள் நியாயந்தீர்க்கப்படும் வேளையில், கிறிஸ்து ராஜாவாக ஆட்சி புரிவார். சாத்தான் தேசங்களை வஞ்சிக்காதபடி கட்டப்பட்டிருப்பான். (வெளி. 20:3) இவர்கள் நீதிநிமித்தம் துன்பப்பட்டிருப்பதால், மனிதர் நியாயத்தீர்ப்பு நாளில் நீதியின்நிமித்தம் வெகுமதியைப் பெறும் வேளையில், அநீதிக்காக மட்டுமே தண்டிக்கப்படுவார்கள். இந்த இரண்டு வகுப்பாருக்கும் அவர்களது காலத்தில் தடைகளும், கண்ணிகளும் மிகவும் அதிகமாக இருந்தன. ஆனால், உலகத்து ஜனங்கள் பரீட்சிக்கப்படும் வேளையில் இத்தடைகள் நீக்கப்பட்டிருக்கும். இந்த இரு வகுப்பாருக்கும் சோதனை உலகத்தாரைக்காட்டிலும் எவ்வளவு கடினமாக இருந்ததோ அதற்கேற்ப இவர்களுடைய வெகுமதியும் அவர்களைக் காட்டிலும் உயர்ந்ததாயிருக்கும்.

ஏமாற்றுபவனாகிய சாத்தானின் மாபெரும் வஞ்சகத்தினால் உலக ஜனங்களும் பெயர் கிறிஸ்தவ சபைகளும், வரவிருக்கிற நீதியுள்ள நியாயத்தீர்ப்பின் நாளைக் குறித்தும் அதன் ஆசீர்வாதமான நிலைமையைக் குறித்தும், அறியக்கூடாத நிலைமையில் இருக்கிறார்கள். வரப்போகிற நியாயத்தீர்ப்பின் நாளைக்குறித்து, வேதாகமம் கூறுவதை அவர்கள் அறிந்திருந்தபோதிலும், அந்த நாளை அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் எதிர்பார்க்கிறார்கள். இந்த பயத்தினால், அந்த நாள் அவர்களுக்கு சந்தோஷத்தை அளிப்பதில்லை. நியாயத்தீர்ப்பின் நாள் சமீபமாயிருக்கிறது என்ற செய்தியைக் காட்டிலும் பெரிதான துர்ச்செய்தி அவர்களுக்கு கிடையாது. அவர்கள் அதை மிகவும் தூரமாக வைத்திருக்கிறார்கள். சொல்லப்பட்டிருப்பதை கேட்கக்கூட விரும்புவதில்லை. உலகத்தாருக்காக தேவன் வைத்திருக்கும் மகிமையான நியாயத்தீர்ப்பின் ஆசீர்வாதங்களையும், அதை நீதியாய் நியாயந்தீர்க்க தேவன்



ஏற்படுத்தியிருக்கிற நியாயாதிபதியின் மகிமையான ஆளுகையையும் பற்றி, அறியாதிருக்கிறார்கள். பல்வேறு கிறிஸ்தவ பிரிவுகளின் மதக் கோட்பாட்டுப் புத்தகங்களிலும், விசுவாசப் பிரமாணங்களிலும், ஞானப்பாடல்களிலும் நியாயத்தீர்ப்பின் நாளைக் குறித்த சத்தியத்தை அறியக்கூடாமல் மறைத்து, சாத்தான் மனிதரது மனதைக் குருடாக்கியிருக்கிறான். பெரும்பாலானோர், இந்தத் தவறுகளை தேவ வசனத்தைக் காட்டிலும் அதிகமாக மதித்து ஏமாந்துபோகிறார்கள்.

தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அந்த நியாயத்தீர்ப்பின் நாளைக்குறித்து எவ்வளவு வித்தியாசமான எண்ணங்கொண்டிருந்தார்கள். இதைக்குறித்து தாவீது தீர்க்கதரிசனமாக கூறியுள்ளார். (1நாளா.16:31–34) அவர் கூறியுள்ளதாவது:

"வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பதாக;
கர்த்தர் இராஜரிகம் பண்ணுகிறார் என்று ஜாதிகளுக்குள்ளே
சொல்லப்படுவதாக
சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்கி,
நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக
அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக காட்டு விருட்சங்களும் கெம்பீரிக்கும்;
அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்.
கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது."

பவுல் அப்போஸ்தலனும் அதே நாளைப் பற்றிக் கூறும்போது, அந்த நாள் மகிமை நிறைந்ததும், விரும்பத்தக்கதுமான நாளாயிருக்குமென்றும், மாபெரும் மீட்பரும் நியாயாதிபதியுமானவர் வந்து உலகை மீட்டு அதை ஆசீர்வதிக்கும் அந்த நாளுக்காக சர்வ சிருஷ்டியும் எதிர்பார்த்து தவித்துக்கொண்டிருக்கிறது என்றும், அந்த நாளில் திருச்சபையாரும் உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டு, மகிமைப்படுத்தப்படுவார்களென்றும் கூறுகிறார்.(ரோமர் 8:21, 22)

யோவான் 5:28, 29 வசனங்களில், உலகத்திற்கு ஒரு விலையேறப்பெற்ற வாக்குத்தத்தம் நித்திய ஜீவனுக்காக, "சோதித்து

நியாயத்தீர்ப்பு செய்தல்" வரவிருக்கிறது என்பதற்கு பதிலாக, "ஆக்கினைத் தீர்ப்பு" என்று பயமிகுந்த நாளாக தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிரேக்க மொழி வழக்கத்தின்படி இவ்வாக்கியம், தீமை செய்தவர்கள் தெய்வீக அங்கீகாரம் பெறத்தவறியதால், நியாயத்தீர்ப்பின் மூலம் பல அடிகள் வாங்கி, ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்வதற்காக, உயிர்த்தெழுதலில் (பரிபூரணம் அடைவதற்கான) எழுந்து வருவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. திருத்திய மொழிபெயர்ப்பை பார்க்கவும்.

## அதன் பிறகு சமாதானம்

"தேவ வழிகள் சமத்துவமானவைகள்: புயலோ, அமைதியோ,
அபாயமான வாளோ இளைப்பாறுதலின் வாளோ,
குணப்படுத்தும் தைலமோ, உருக்குலைக்கும் ஏவுகணையோ,
இவை அனைத்தும் நன்மைக்கென்றே பகுத்து பரிமாறப்படுகின்றது.
நியாயத்தீர்ப்புகள் அடிக்கடி தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது
மறைக்கப்பட்டதும் விளங்காததுமான வழிகளில்
தீமையிலிருந்து அவர் நித்திய நன்மையைக் கொணர்கிறார்,
இறுதி மகிழ்ச்சியை நிச்சயமாக உருவாக்குகிறார்.
பலத்தோடு கூடிய நீதி தம் வழிகளில் முன்னேறுகிறது,
அன்பு நம் விசுவாசமும் நம்பிக்கையும் அதிகரிக்க முயல்கிறது.
உலகை குறிப்பிட்ட காலம் சிட்சிக்கிறார்,
அதன்பிறகு சமாதானம்.

"திகில் நிறைந்த தடுமாற்றமான புயலை வரப்பண்ணுகிறார்,
வேதனை தரும் பாடுகளாகிய புயலுக்கு எதிராக
மனித ஆற்றல் நிற்க முடியாது.
இருள் நிறைந்த தடுமாற்றமான வழியினூடே,
அன்புள்ள இதயங்கள் அவரில் தொடர்ந்து நம்பிக்கை வைக்கட்டும்;
இரவிலிருந்து மகிழ்ச்சியான நாளை நோக்கி நடத்திச் செல்லும்,
ஆசீர்வாதமான அவரது விருப்பங்களை
யாரால் தோற்கடிக்க முடியும் ?
அவரது பலமான பராமரிப்பின் கீழ் நிலைத்திரு;
உன் மனக் கொந்தளிப்பை அவர் ஓயப்பண்ணுவார்
மன வேதனையிலிருந்து விடுவிப்பார்,
அதன் பிறகு சமாதானம்.



"பூமியை கண்ணோக்கிப்பார்; எந்தப் புயலும் நிலை நிற்காது
தேவன் நிர்ணயித்த எல்லையைத் தாண்டி.
முன்குறிக்கப்பட்ட வேலை முடிவடையும்போது,
மகிழ்ச்சியால் உன் ஆழ்ந்த துயரத்தை மறப்பாய்.
துன்பமாகிய கலப்பையால் துப்புரவானபின்,
ஜீவியத்தின் அற்புத மலர்கள் துள்ளி எழுந்து மலரும்,
தேவன் உனக்குப் புதிதான ஜீவியத்தை அருளினதால்.
உன்னிடம் இருந்த வீணான அனைத்தும் புன்னகை கீதம் பாடும்
உனக்காக அவரது திட்டத்தில் நம்பிக்கை கொண்டிரு;
வெற்றியும் விடுதலையுமே முடிவு.
பயப்படாதே, நிச்சயமாய் காண்பாய் நீ
அதன் பிறகு அவருடைய சமாதானம்."

* * * *

## அத்தியாயம் – 9

### மீட்கும்பொருளும் திரும்பக் கொடுத்தலும்

மீட்கும்பொருளால் உறுதியாக்கப்பட்ட திரும்பக்கொடுத்தல் – நித்திய ஜீவனல்ல, ஆனால் அதற்கான பரீட்சையே, மீட்கும் பொருளால் உத்திரவாதமளிக்கப்பட்டது – பரீட்சையின் நிபந்தனைகளும் ஆதாயங்களும் – கிறிஸ்துவின் பலி அவசியமானது – ஒருவரது மரணத்தால் மனுக்குல சந்ததி எவ்வாறு மீட்கப்பட முடிந்தது? விசுவாசமும் கிரியைகளும் இன்னும் அவசியம் – மனப்பூர்வமாக செய்யும் பாவத்திற்கு தண்டனை நிச்சயம் – உயிர்த்தெழுப்பப்பட்ட இலட்சக்கணக்கான நபர்களுக்கு இப்பூமியில் இடம் இருக்குமா? – பரிணாமமும் திரும்பக்கொடுத்தலும்.

நாம் இதுவரை பார்த்த தேவனால் வெளிப்படுத்தப்பட்ட திட்டத்தின் குறிப்புகளிலிருந்து, மனுக்குலம் ஏதேனில் இழந்துபோன மகிமையையும் பரிபூரணத்தையும் திரும்பக்கொடுத்தல் அல்லது முந்தினசீரை அடையச் செய்வதே அவரது திட்டமாக வடிவமைக்கப்பட்டிருப்பது வெளிப்படையாக தெரிகிறது. மீட்கும் பொருளின் தன்மையையும் அதன் பரந்துவிரிந்த நோக்கத்தையும், நாம் வியந்து பாராட்டும்பொழுது திரும்பக்கொடுத்தல் நடைபெறும் என்பது உறுதியானதும், தீர்மானமுமான சாட்சியமாக தெளிவாகத் தெரிகிறது. அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் முன்னறிவித்த திரும்பக்கொடுத்தலானது நீதி, நியாயத்தின்படியும், புத்தியறிவின்படியும் மீட்கும்பொருளைத் தொடர்ந்து நடைபெற வேண்டும். மீட்கும்பொருளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிற தேவனது திட்டமானது, மாபெரும் மீட்பரின் இரட்சிப்பின் சக்திக்கும், அதிகாரத்திற்கும் மனப்பூர்வமாக எதிர்த்து நிற்காத மனுக்குலத்தார் ஆதி தண்டனையாகிய – அழிவிற்குரிய அடிமைத்தனம் அல்லது மரணத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் மீட்கும் பொருளானது மனிதர் அனைவருக்கும் பயன்படாது.

பவுல் அப்போஸ்தலனின் நிதானிப்பு இவ்விஷயத்தில் மிகத் தெளிவாகவும், தீர்மானமாகவும் இருக்கிறது. "கிறிஸ்துவும் மரித்தோர்மேலும், ஜீவனுள்ளோர்மேலும், ஆண்டவராயிருக்கும்பொருட்டு,



மரித்தும், எழுந்தும், பிழைத்தும் இருக்கிறார்" என்று அவர் கூறுகிறார். (ரோமர் 14:9) அதாவது, நமது கர்த்தரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் நோக்கம் என்னவெனில், மனுக்குலத்திற்கு வெறுமனே ஜீவனை தந்து அவர்கள்மேல் ஆளுகை செய்து திரும்பக் கொடுத்தல் மட்டுமல்ல, மீட்கும்பொருளின் பலன்களை இறந்தவர்கள் மேலும், உயிரோடிருப்பவர்கள் மேலும் காப்பீடு செய்து அவர்கள்மேல் முழு அதிகாரம் கொடுக்கவும் ஆகும்.* அனைவரையும் ஆசீர்வதிக்கவும், ஒவ்வொரு மனிதனும், ஜீவன் பெற தனித்தனியாக பரிசோதிக்கவுமே, "எல்லாரையும் மீட்கும்பொருளாக" தம்மை ஒப்புக்கொடுத்தார். இவ்வாறு எல்லாரையும் மீட்கும்பொருளாக (சரிநிகர்சமான விலையாக) தம்மை ஒப்புக்கொடுத்தார் என கூறும்போது, ஒரு சிலரே மீட்கப்பட்டு அதன் பலன்களை அடைவார்கள் என்பது அபத்தமாக இருக்கிறது. ஏனென்றால், மேற்கண்ட கருத்து உண்மையாய் இருக்குமேயானால், தேவன் மீட்கும்பொருளை ஏற்றுக்கொண்ட பிறகு மீட்கப்பட்டவர்களை விடுவிக்க அநீதியாக மறுத்து விட்டார் என்றோ, அல்லது கர்த்தர் எல்லாரையும் மீட்ட பிறகு, தேவன் தாம் ஆதியில் கொண்டிருந்த பலனளிக்கும் திட்டத்தை நிறைவேற்றக் கூடாதவராக இருக்கிறார் என்றோ அல்லது விருப்பமில்லாதிருக்கிறார் என்றோ பொருள்படும். தெய்வீகத் திட்டங்களின் மாறாத தன்மையும் பரிபூரணமான தெய்வீக நீதியும், அன்பும் இந்த முரண்பாடுகளை எதிர்ப்பதோடு, "மீட்கும்பொருள் அனைவருக்குமானதே" என்ற தேவனது கருணை மிகுந்த திட்டத்தின் அடிப்படையின் நிச்சயத்தை நமக்குக் கொடுக்கிறது. இத்திட்டமானது தேவன் முன் குறித்திருக்கிற ஏற்ற வேளையில் முழுவதுமாக நிறைவேற்றப்படும் என்ற நிச்சயத்தையும் நமக்குத் தருகிறது. அதோடுகூட உண்மையுள்ள விசுவாசிகள் ஆதாமின் சாபத்திலிருந்து விடுதலையாகி, பாவம் மற்றும் சாபமும் மனுக்குலத்தில் நுழைவதற்கு முன்

---

* முழு மனுக்குலமும் மரித்தோரின் பட்டியலுக்குள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற அப்போஸ்தலர் கூறின வார்த்தையின் விரிவான மற்றும் ஆழமான அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய நிலைப்பாட்டின்படி, முழு மனுக்குலமும் மரணத் தீர்ப்பிற்குட்பட்டிருக்கிற நிலைமையானது, ஏற்கனவே மரித்ததாகப் பாவிக்கப்படுகிறது (மத். 8:22). ஆதலால், ஜீவனுள்ளோர் என்பதன் பொருளானது, மனுக்குலக் குடும்பத்திற்கு வெளியே உள்ள, தேவ தூதர்களுக்கு பொருந்துகிறது. இவர்களது ஜீவன் பறிக்கப்படவில்லை.

தேவ புத்திரர்கள் அனுபவித்த மகிழ்ச்சியையும் உரிமையையும் திரும்பப்பெறும் வாய்ப்பையும் கொண்டுவரும்.

மீட்கும்பொருளின் உண்மையான பலன்களும், நன்மைகளும் தெளிவாகப் பார்க்கப்பட்டு, அதை இப்பிரபஞ்சம் முழுவதற்கும் பிரயோகிப்பதற்குமுள்ள எல்லா மறுப்புகளும் மறைய வேண்டும். “மனிதனாகிய கிறிஸ்து இயேசு”வினால் கொடுக்கப்பட்ட “எல்லாரையும் மீட்கும்பொருளானது” எந்த மனிதனுக்கும் நித்திய ஜீவனையோ அல்லது ஆசீர்வாதத்தையோ கொடுக்கவோ அல்லது உத்திரவாதம் அளிக்கவோ இல்லை. மாறாக, நித்திய ஜீவன் பெறுவதற்கான இன்னும் ஒரு வாய்ப்பு அல்லது பரீட்சையை ஒவ்வொரு மனிதனுக்கும் அளிக்கப்போவதையே உத்திரவாதம் செய்கிறது. மனிதனுக்கு வைக்கப்பட்ட முதலாவது பரீட்சையில் அவன் தோல்வி அடைந்து ஆசீர்வாதத்தை இழந்தான். ஆனால், தேவன் ஏற்பாடு செய்திருந்த மீட்கும்பொருளின் பலனாக, உத்தம இருதயம் உடையவர்களுக்கு ஆசீர்வாதம் அருளும் அனுபவமாக அத்தோல்வி மாற்றப்படுகிறது. ஆனால், மனிதன் மீட்கும்பொருளினால் முதலாவது தண்டனையிலிருந்து மீட்கப்படுவான் என்பது உண்மையாக இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் தங்களது நித்திய ஜீவனுக்கான பரீட்சையை எதிர்கொள்ளும்போது, முற்றிலும் கீழ்ப்படிந்துவிடுவான் என்று உறுதியளிப்பதில்லை. மேலும், இந்தக் கீழ்ப்படிதலைக் காண்பிக்காத எவரும் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவதில்லை. மனிதன் தற்காலத்தில் பாவத்தினாலும், அதன் கசப்பான தண்டனையினாலும் அடைந்த அனுபவங்களால் முழுமையாக முன் எச்சரிக்கப்படுவான். ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கும், நாம் அனைவரும் தேவனிடத்திற்கு மனந்திரும்பி பிழைத்திருக்கும்படிக்கும் விரும்புகின்ற கிறிஸ்து, தம்முடைய மீட்கும்பொருளின் பலனாக அவனுக்கு (மனிதனுக்கு), வேறொரு மற்றும் தனிப்பட்ட பரீட்சையை அருளுகிறார். ஆனால், அப்பரீட்சையிலும் மனப்பூர்வமாக கீழ்ப்படியாதவர்கள் இந்த இரண்டாம் சோதனையின் தண்டனையை அடைவார்கள் என்று நாம் நிச்சயிக்கலாம். இரண்டாம் மரணமே அதின் தண்டனையாகும். அந்த தண்டனையிலிருந்து மீட்போ, விடுதலையோ கிடையாது. ஏனெனில், இன்னுமொரு மீட்கும்பொருளோ அல்லது இன்னுமொரு பரீட்சையோ கொடுக்கும் நோக்கமில்லை.



அனைவரும் நன்மையையும் தீமையையும் முழுமையாக கண்டு, ருசிபார்த்தவர்களாக, இருப்பார்கள். அனைவரும் தேவ அன்பையும், நன்மையையும் அனுபவித்து, அதற்கு சாட்சி பகர்வார்கள். மிகவும் தயை நிறைந்த சூழ்நிலையின் கீழ் ஒவ்வொருவரும் ஜீவனுக்கான ஒரு முழுமையான நியாயமான தனிப்பட்ட பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். இதைக்காட்டிலும் கூடுதலாக கேட்க முடியாது, அளிக்கவும்மாட்டாது. இந்த பரீட்சையின் கீழ் நடத்தப்படும் ஆயிரக்கணக்கான சோதனைகளின் மூலம் யார் நீதிமானும், பரிசுத்தனுமாய் இருப்பான் என்று நித்தியத்திற்கும் அச்சோதனையே தீர்மானிக்கும். அதே சோதனைகளே யார் அநீதி உள்ளவர்களும், பரிசுத்தமில்லாதவர்களும், அசுத்தமானவர்களுமாக இன்னும் இருப்பார்களென்றும் தீர்மானிக்கும்.

சரியாக அதே சூழ்நிலையில் ஜீவனுக்கான மற்றுமொரு பரீட்சை வைப்பது பயனற்றதாக இருக்கும். இச்சோதனைக்கும், ஆதாமின் சோதனைக்கும், சூழ்நிலையில் வித்தியாசம் இருந்தபோதிலும், பிந்தைய சோதனை அதிக தயவுள்ளதாக இருந்தாலும், ஒவ்வொருவரும் ஜீவனுக்காக தனித்தனியே பரீட்சிக்கப்படுவதின் நிபந்தனைகள் ஆதாமின் சோதனையிலிருந்தது போலவே இருக்கும். தேவனுடைய பிரமாணம் ஒருபோதும் மாறாத ஒன்றே. “பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்” என்று அது அந்த வேளையிலும் கூறும். அக்காலத்தில் மனிதனைச் சுற்றி நிலவும் சூழ்நிலைகளைப் பொறுத்தவரை, ஏதேன் தோட்டத்திலிருந்த நிலைமையைக் காட்டிலும் அதிக சாதகமாயிராது. ஆனால், அதிகரித்திருக்கும் அறிவில்தான் பெரிய வித்தியாசம் இருக்கும். முதலாவது, பரீட்சையின் விளைவாக ஏற்பட்ட தீமையின் அனுபவங்களுக்கும், வரவிருக்கிற யுகத்தில் இயல்பாக அதிகரிக்கின்ற நன்மை, தீமை ஆகியவற்றினூடே இரண்டாவது பரீட்சையின் விளைவாக ஏற்படவிருக்கிற நன்மையின் அனுபவங்களுக்குமிடையே உள்ள வித்தியாசங்களை பகுத்தறிவதினால், இரண்டாம் பரீட்சையானது முந்தைய ஆதாமின் பரீட்சையைக் காட்டிலும் மனிதருக்கு அதிக சாதகமாயிருக்கும். இதற்கு உறுதுணையாகவே தெய்வீக ஞானமும், அன்பும் அனைவருக்காகவும் மீட்கும்பொருளை ஏற்படுத்தி ஒரு புதிய பரீட்சையின் ஆசீர்வாதத்தை உறுதிப்படுத்தியிருக்கிறது. இதைக்காட்டிலும் சாதகமாக உள்ள பரீட்சையோ, சாதகமான பிரமாணமோ, சாதகமான சூழ்நிலைகளோ

அல்லது நிபந்தனைகளோ ஆயிரவருட அரசாட்சிக்குப் பிறகு மற்றுமொரு மீட்கும்பொருளோ, அல்லது மற்றுமொரு பரீட்சையோ ஏற்படுமென்று சிந்திக்கக்கூடாது.

கொடுக்கப்பட்ட மீட்கும்பொருளானது பாவத்தை எந்த வகையிலும் மன்னிக்காது. அது பாவிகளை பரிசுத்தவான்கள் என்று கருதாது, இப்படியாக அவர்களை நித்திய சந்தோஷத்தில் பிரவேசிக்கச் செய்யப்போவதாக அறிவிக்காது. மாறாக, ஏற்றுக்கொள்ளும் பாவியை ஆதாமின் தீர்ப்பிலிருந்தும், அதன் நேரடியான அல்லது மறைமுகமான விளைவுகளிலிருந்தும் விடுதலை மாத்திரம் செய்து, ஜீவனுக்கான பரீட்சையில் மீண்டும் அவனை நிலைநிறுத்துகிறது. அந்த பரீட்சையில் அவன் மனப்பூர்வமாக கீழ்ப்படிகிறானோ அல்லது மனப்பூர்வமாக மறுதலிக்கிறானோ இவையே அவன் நித்திய ஜீவன் அடைய தகுதியுள்ளவனா? அல்லது தகுதியற்றவனா? என்று தீர்மானிக்கும்.

நாகரீகமாக ஜீவிப்பவர்களில் சிலர் வேதாகமத்தை பார்ப்பதினாலோ அல்லது வைத்திருப்பதினாலோ, அவர்கள் ஜீவனுக்கான பரீட்சையோ அல்லது வாய்ப்பையோ அடைந்திருக்கிறார்கள் என்று அநேகர் தவறுதலாக எண்ணுகின்றனர். ஆதாமின் விழுகையானது அவனது பிள்ளைகள் அனைவரையும் ஒரே மாதிரியாக காயப்படுத்தவில்லை என்பதை நாம் நினைவுகூர வேண்டும். எவ்வாறெனில், சிலர் இவ்வுலகத்திற்கு வரும்போதே பலவீனராகவும், சீர்கெட்ட நிலைமையிலும் இருந்து, இவ்வுலகத்தின் தேவனால் எளிதில் குருடாக்கப்பட்டு, சுற்றிலும் நெருங்கி நிற்கிற பாவத்தினால் சிறைபட்டுப் போகிறார்கள். அவர்கள் அனைவருமே ஏறக்குறைய இந்த ஆதிக்கத்திற்கு உட்பட்டிருப்பதால், நன்மையைச் செய்ய வேண்டுமென்கிற விருப்பம் இருந்தபோதிலும், தீமையே வாசமாயிருந்து, அது அவர்களைச் சுற்றி அதிக வலிமைமிக்கதாயிருக்கின்றது. எனவே, அவர்கள் செய்ய விரும்பும் நன்மையை செய்யக்கூடாதவர்களாக, அவர்கள் வெறுக்கிற தீமையே தவிர்க்கமுடியாததாகிறது.

தற்காலத்தில் கிறிஸ்துவினால் அடைகின்ற சுயாதீனத்தைக் குறித்தும், அது தரும் விடுதலையைக் குறித்தும் உண்மையாகவும், அனுபவப்பூர்வமாகவும் அறிந்து, அவரது மீட்கும்பொருளை ஏற்று, அவரால் நடத்தப்படும்படிக்கு தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுப்பவர்கள் மிகக்



குறைவாகவே இருக்கிறார்கள். இந்த குறைவாக இருக்கின்ற ஒரு சிலரே திருச்சபையாராக அழைக்கப்பட்டு, பரீசிக்கப்பட்டு, இக்காலத்தில் சாட்சிகளாயிருந்து, வரப்போகிற யுகத்தில் உலகத்தை பரீட்சைபார்த்து ஆசீர்வதிக்கும் வேலையில் தேவனோடு உடன் ஊழியராக தெரிந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களே மீட்கும்பொருளின் பலன்களை அனுபவித்து, ஜீவனுக்கான பரீட்சையில் தற்காலத்தில் நிற்கிறார்கள். இந்த சிலர் மட்டுமே வரப்போகிற யுகத்தில் உலகத்தார் அடையவிருக்கிற திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை இப்பொழுதே தங்களது விசுவாசத்தினால் பெற்றுக்கொள்வதாக எண்ணப்படுகிறார்கள். இவர்கள் பூரணமற்றவர்களாக இருந்தபோதிலும், ஆதாமின் பரிபூரண நிலைக்கு உண்மையாகவே கொண்டுவரப்படாத போதிலும், அவர்கள் நடத்தப்படுகிற விதத்தினால் இந்த வித்தியாசமானது சரிகட்டப்படுகிறது. கிறிஸ்துவின்மேல் வைத்த விசுவாசத்தின் மூலமாக அவர்கள் பரிபூரணர்களாகக் கருதப்பட்டு, பாவிகளல்லாதவர்கள்போல் தெய்வீக தயைக்கும் பரிபூரணத்திற்கும் கொண்டுவரப்படுகிறார்கள். அவர்களுடைய அபூரணங்களும், தவிர்க்க முடியாத பலவீனங்களும், அவர்கள்மேல் சுமத்தப்படாமல், மீட்கும்பொருளினால் சரிகட்டப்பட்டு, மீட்பருடைய பரிபூரணத்தினால் மூடப்படுகிறது. அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களாக கருதப்படுவதால், சபையினுடைய பரீட்சையானது உலகத்திற்கு வரக்கூடிய பரீட்சையைப் போலவே இவர்களுக்கும் சாதகமாகவே இருக்கும். உலகமனைத்தும் சத்தியத்தை அறிகிற முழுமையான அறிவுக்குள் கொண்டுவரப்படும்பொழுது, ஒவ்வொருவரும் அதன் சட்ட திட்டங்களை ஏற்றுக்கொண்டு நடக்கும்பொழுது, யாரும் ஒரு பாவியாகக் கருதப்படாமல், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை அடையவிருக்கும் ஒரு புத்திரனாகவே நடத்தப்படுவார்.

பரீட்சிக்கப்படுகின்ற உலகத்தாரின் அனுபவங்களுக்கும், தற்போது பரீட்சையிலிருக்கும் திருச்சபையின் அனுபவங்களுக்குமிடையே ஒரு வித்தியாசம் உண்டு. மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் உள்ள உலகத்தாரின் பலவீனங்கள் படிப்படியாக நீக்கப்படுவதால், கீழ்ப்படிகிற உலக ஜனங்கள் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை உடனே பெற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். ஆனால், சுவிசேஷ யுகத் திருச்சபையாரோ, ஞானஸ்நானத்தில் கர்த்தரின் ஊழியத்திற்காக

மரணபரியந்தம் தத்தம் செய்து, மரணத்திற்குள் பிரவேசித்து, முதலாம் உயிர்த்தெழுதலில் அவர்களுடைய பரிபூரணத்தை இமைப்பொழுதில் சுதந்தரித்துக்கொள்வார்கள். இவ்விரண்டு பரீட்சைகளுக்குமுரிய மற்றொரு வித்தியாசம் என்னவெனில், தற்காலத்தில் இல்லாத அதிக சாதகமான சூழ்நிலைகள், உலகத்தார் பரீட்சிக்கப்படும் அடுத்த யுகத்தில் உண்டாயிருக்கும். அக்காலத்தில் சமுதாயத்திலுள்ள ஜனங்களும், அரசாங்கமும் நீதிக்கு சாதகமாய் இருந்து, விசுவாசத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் வெகுமதி அளித்து, பாவத்திற்கு தண்டனை கொடுக்கும். ஆனால், தற்காலத்திலோ இவ்வுலகத்தின் அதிபதியின் கீழ், சபைக்கான பரீட்சையானது, நீதிக்கும் விசுவாசத்திற்கும் சாதகமாயிராத சூழ்நிலையில் நடைபெற்று வருகிறது. ஆனால், இது நாம் முன்னரே பார்த்திருப்பதுபோல, இக்காரணத்தினால் திருச்சபைக்கு தெய்வீக சுபாவமாகிய மகிமையும், கனமும் நிறைந்த பரிசு, நித்திய ஜீவன் என்கிற பரிசோடுகூட சேர்ந்து வழங்கப்பட்டு ஈடுகட்டப்படுகிறது.

ஆதாம் 930 வருடங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மரித்து வந்தபோதிலும், அவனுடைய மரணம் நிச்சயமானதாக இருந்தது. அவன் மரித்துக்கொண்டே இருந்ததின் காரணமாக, அவனுடைய பிள்ளைகளும் ஜீவனோடிருக்கத் தகுதியற்றவர்களாக, அதே மரிக்கும் நிலைமையிலேயே பிறந்தனர். தங்கள் பெற்றோரைப் போலவே நீண்ட அல்லது குறுகிய கால இழுபறியான வாழ்க்கைக்குப் பிறகு அனைவரும் மரித்துப்போகின்றனர் என்றபோதிலும், மரணமடையும்போது அனுபவிக்கும் வேதனை, துன்பத்தைப் பற்றியோ குறிப்பிடவில்லை. செத்துக்கொண்டே சாகிற தன்மையின் முடிவாகிய மரணத்தையே பாவத்தின் தண்டனை என்று கூறுவதை நினைவில்கொள்ள வேண்டும். உபத்திரவமானது பாவத்தைச் சார்ந்து இருக்கிற ஒரு பகுதி மட்டுமே. அநேகர் இந்த உபத்திரவம் சிறிதேனும் இல்லாமல் பாவத்தின் தண்டனையாகிய மரணத்தை அடைகிறார்கள். ஆதாம் தன் ஜீவனை இழந்தபோது அவன் அதை நித்தியத்துக்கும் இழந்தான் என்றும், அவனது பின்சந்ததியில் ஒருவனும் அவனது தவறுக்குப் பரிகாரம் செய்யவோ, இழந்துபோன சுதந்திரத்தை திரும்பப்பெறவோ கூடாதிருந்தது என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஆதாமின் சந்ததியார் அனைவரும் மரித்துவிட்டனர் அல்லது மரித்துக்கொண்டிருக்கின்றனர். மரிப்பதற்கு முன்பதாக தங்களது



தவறுகளுக்கு ஈடுசெய்யாவிடில், மரித்த பிற்பாடு அதாவது ஜீவன் இல்லாதபோது அதை நிச்சயமாக செய்ய முடியாது. பாவத்தின் தண்டனையானது இழந்த ஜீவனுக்கு மீண்டும் திரும்பும் சுதந்திரத்தோடு மரிப்பதல்ல. பாவத்திற்கெதிராக கொடுக்கப்பட்ட தண்டனையில், விடுதலையைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. (ஆதி. 2:17) திரும்பக்கொடுத்தலில் தேவனுடைய பங்கு என்னவெனில், இது முற்றிலும் தேவனுடைய இலவசமான கிருபை அல்லது தயவாகும். தண்டனைக்கு உள்ளான உடனேயே, மனிதனுக்கு தண்டனை அறிவிக்கப்பட்டபோதே இலவசமாக தேவனுடைய தயவும் தெரிவிக்கப்பட்டது. அந்த தயையானது மனிதரால் உணரப்படும்பொழுது மாத்திரமே அவருடைய அன்பு பூரணமாக தெரியவரும்.

ஸ்திரீயின் வித்து, சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட வார்த்தை, மங்கின வெளிச்சத்தையாவது கொடுக்காதிருந்தால், மனுக்குலமானது முழுமையாகக் கைவிடப்பட்ட நிலைமையை அடைந்திருக்கும். ஆனால், தேவன் அவர்களுடைய நன்மைக்காக ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை அது காண்பித்தது. தேவன் ஆபிரகாமிடத்தில் அவரது வித்தின் மூலமாக பூமியிலுள்ள குடும்பங்கள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும் என்று உறுதியளித்ததின்படி, அனைவருக்கும் உயிர்த்தெழுதல் அல்லது திரும்பக்கொடுத்தல் நிச்சயம் உண்டு என்பதைக் குறித்தது. ஏனெனில், ஆசீர்வதிக்கப்படாமலேயே அநேகர் முன்பு இறந்துபோனார்கள். அக்காலம் துவங்கி இன்று வரை மரித்தும் வருகிறார்கள் என்ற போதிலும், வாக்குத்தத்தம் இன்னும் நிச்சயமாயிருக்கிறது. திரும்பக்கொடுத்தல் அல்லது இளைப்பாறுதலின் காலங்களின்போது அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். (அப். 3:19) தேவ தயவு நீக்கப்பட்டு, பாவத்தின் பொருட்டு அவரது சாபம் வந்தாலும், வருங்கால ஆசீர்வாதத்திற்குரிய இந்த வாக்குத்தத்தமானது, சாபத்தை நீக்கி, தேவ தயவிற்கு மீண்டும் உலகம் திரும்புவதை குறிப்பாய் எடுத்துரைக்கிறது. தேவன் மனமிரங்கி, அவரது தீர்ப்பை மாற்றி, குற்றமுள்ள மனுக்குலத்தின் கறை திரையை நீக்கி சுத்தம் செய்வார் என்றோ, அல்லது மனிதருடைய தண்டனையை வேறு ஒருவருக்குக் கொடுத்து மனுக்குலத்தை மீட்பதற்கான ஒரு வழியை வைத்திருந்தார் என்றோ அது காட்டியது.

தேவன் தம் திட்டத்தைப் பற்றி ஆபிரகாம் சந்தேகப்படும்படியாக விட்டுவிடவில்லை. மாறாக, தம்மை நெருங்கிச் சேர விருப்பமாயுள்ளோர் கொண்டுவரவேண்டிய பல்வேறு நிழலான பலிகளின் மூலம், பாவத்திற்காக அவர் மனமிரங்கமாட்டார், மனமிரங்குவது அவருக்குக் கூடாது என்றும், பாவத்தை மன்னிக்கமாட்டார் என்றும் காண்பித்ததோடு, பாவத்தையும் அதன் தண்டனையையும் அகற்ற வேண்டுமெனில், சரிநிகர் சமானமான பலி ஒன்றினால் மட்டுமே அதை ஒழிக்க முடியும் என்றும் காண்பித்தார். இது ஒரு விசேஷமான முன்னடையாளமாக ஆபிரகாமுக்குக் காண்பிக்கப்பட்டது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தின் மையமாக விளங்கும் ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்கு ஆசீர்வதிக்கப்படும் முன்பாக, தன்னையே பலி செலுத்த வேண்டியதாயிருந்தது. மரித்தோரிலிருந்து அவனை பாவனையாக திரும்பவும் ஆபிரகாம் பெற்றுக்கொண்டார். (எபி. 11:19) இந்த உருவத்தில் ஈசாக்கு உண்மையான வித்தாகிய கிறிஸ்து இயேசுவுக்கு நிழலாக இருக்கிறார். இயேசு மனிதரை மீட்பதற்காகவும், மீட்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை சுதந்தரிப்பதற்காகவும் மரித்தார். தேவன் குற்றவாளிகளை மன்னித்து, அவர்களது மீறுதல்களை மன்னிக்கிறார் என்று ஆபிரகாம் எண்ணியிருந்தாரானால் தேவன் மாறக்கூடியவர் என்றும், ஆகவே அவரோடு செய்த உடன்படிக்கையில் முழு நம்பிக்கை வைத்திருக்க முடியாது என்றும் சிந்தித்திருப்பார். தேவன் ஒருமுறை தம் சிந்தையை மாற்றுவாரென்றால், ஏன் மீண்டும் அதை மாற்றக்கூடாது? என்று அவர் புத்திக்கேற்ப யோசித்திருக்க வேண்டும். மரண சாபத்தைக் குறித்து அவர் மனமிரங்குவாராகில், வாக்குத்தத்தம் செய்த தயவையும், ஆசீர்வாதத்தையும் குறித்து மீண்டும் ஏன் மனமாறக் கூடாது? ஆனால், தேவன் நம்மை இவ்விதமான நிச்சயமற்ற நிலையில் விட்டுவிடவில்லை. அவருடைய நீதியைக் குறித்தும், அவரது மாறாத தன்மையைக் குறித்தும், நமக்குப் போதுமான நிச்சயத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் "தம்முடைய குமாரன் என்றும் பாராமல், நம் அனைவருக்காகவும் அவரை (மரணத்திற்கு) ஒப்புக்கொடுத்து" இவ்வளவாக அவர்களிடத்தில் அன்புகூர்ந்தபோதிலும், அவர்களது குற்றங்களை துடைத்தெறியமாட்டார்.

ஆதாமுக்கு தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டபோது, முழு மனுக்குல சந்ததியும் அவனுக்குள் இருந்தபடியால், அவன் மூலமாக ஜீவனை



இழந்ததுபோலவே, இயேசு தம் மரணத்தின் மூலமாக "எல்லாரையும் மீட்கும்பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்தபடியால்" அவன் அரையிலிருந்த இன்னும் பிறவாத மனுக்குலத்திற்கும், அந்த ஈடுபலி சாத்தியமாகிறது. எல்லா மனிதருக்காகவும் ஈட்டுக்கிரயம் முழுநிறைவாகச் செலுத்தப்பட்டு, அனைவரும் நீதியின் முன்பாக "ஏற்றவேளையில்" ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். இவ்வாறு அனைவரையும் விலைக்கு வாங்கினபடியால், தம் மூலமாக தேவனிடம் சேர விரும்புபவர்களை சீர்பொருந்தச் செய்யும் முழு அதிகாரத்தையும் அவர் பெற்றிருக்கிறார்.

ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்." (ரோமர் 5:18,19) இந்தக் கொள்கையானது மிகவும் தெளிவாய் இருக்கிறது. ஆதாமின் பாவத்தின் நிமித்தமாக எத்தனைப்பேர் மரணத்தில் பங்கடைந்தார்களோ, அவர்களனைவரும் நம் கர்த்தராகிய இயேசுவால் அருளப்படும் ஜீவிக்கும் உரிமைகளைப் பெற்றுக்கொள்வார்கள். ஏனெனில், ஆதாமுக்கு பதிலாக மீறப்பட்ட பிரமாணத்துக்கு முன்பாக தம்மையே பலியாக்கி அவர்களனைவருக்காகவும் மரித்து, இவ்வாறாக, "எல்லாரையும் மீட்கும்பொருளாக தம்மையே ஒப்புக்கொடுத்தார்." நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் "அவர் மரித்தார். (1 பேதுரு 3:18) நமது மனுக்குல சந்ததியாருக்காக தேவன் ஏற்பாடு செய்துள்ள அரிதான அனைத்து தெய்வீக தயவுகளைப்பெற மனிதனின் சுயவிருப்பமே காரணமாய் உள்ளது என்பதை ஒருபோதும் அலட்சியப்படுத்தக் கூடாது. நாம் முன்னர் பார்த்த ரோமர் 5:18,19 வசனங்களை ஆராயும்போது, அநேகர் இந்த விஷயத்தை கவனியாது இருப்பது தெரியவருகிறது. அப்போஸ்தலரின் கூற்றுப்படி, ஆதாமின் சந்ததியாகிய அனைவருக்குமே தண்டனைத்தீர்ப்பு பரவியதுபோல, பிதாவின் திட்டத்திற்கு உட்பட்டு நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கீழ்ப்படிந்து, நமது நிமித்தமாக தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்ததின் மூலமாக பாவமன்னிப்பின் பரிசு இலவசக் கிருபையாக அனைவருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. அதை ஏற்றுக்கொள்பவர்கள் நீதிமான்களாக,

நித்திய ஜீவன் பெறக்கூடிய அடிப்படைத் தகுதியைப்பெறுகிறார்கள். "ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்," நீதிமான்களாக்கப்பட்டார்கள் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. மீட்கும்பொருளை நாம் ஏற்றுக்கொள்ளாதிருக்கும்போதே அது நம்மை நீதிமான்களாக்கினால், ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்கள் ஆக்கப்பட்டார்கள் என்று எழுதப்பட்டிருக்கும்.

ஆனால் சுவிசேஷ யுகத்தின்போது மீட்பர் கொடுத்த மீட்கும் பொருளின் விலைக்கிரயமானது, ஒருசிலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டு, "அவரது இரத்தத்தின்மேல் வைத்த விசுவாசத்தால்" அவர்களை நீதிமான்களாக்கியது. ஆனால், கிறிஸ்து முழு உலகத்தின் பாவங்களுக்கான "நிவர்த்தியாக" இருக்கிறபடியால், எல்லா மனிதரும் இக்காரணத்தினால் புதிய உடன்படிக்கையின்கீழ் ஆதாமினுடைய பாவத்தின் தண்டனையிலிருந்து மன்னிக்கப்பட்டு விடுதலையாக்கப்படலாம்.

தேவனிடத்தில் அநீதியில்லை. ஆகவே, "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் அவைகளை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1யோவா.1:9) கொடுக்கப்பட்ட தண்டனைக்கு பரிகாரம் நிறைவு செய்யப்படுவதற்கு முன்பாக, நம்மை அதிலிருந்து தப்பித்துக்கொள்ள தேவன் விடுவாரானால், அவர் அநீதியுள்ளவராகிறார். அவ்வாறே அவரது சொந்த ஏற்பாட்டின்படி, நமக்காக தண்டனைக்கான பரிகாரம் செலுத்தப்பட்ட பிறகு, இழந்துபோனதை திரும்பக்கொடுக்க மறுப்பாரானால் அதுவும் அநீதியாயிருக்கும். ஆதியில் மனிதனுக்கு மரணத்தீர்ப்புக் கொடுத்த அதே மாறாத தேவநீதியானது, தற்போது தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு கிறிஸ்துவின் மூலமாக ஜீவன்பெற விண்ணப்பம் செய்கிற அனைவருக்கும் வாக்களித்தபடி விடுதலை செய்ய தற்போது தயாராய் நிற்கிறது. "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றம் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." (ரோமர் 8:33, 34)



கொடுக்கப்படபோகிற நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிபவர்கள், முழு மனுக்குலத்துக்குமாகிய திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதற்கு, மீட்கும்பொருளின் பரிபூரணமே மிக உறுதியான கருத்தாக இருக்கிறது. (வெளி. 22:17) நீதியும் கனமும்பொருந்திய தேவனின் குணாதிசயமே இதற்கு வாக்குறுதியளிப்பதாக உள்ளது. அவர் உண்டுபண்ணின ஒவ்வொரு வாக்குத்தத்தமும் அதைக் காண்பிக்கிறது. மேலும், அடையாளமான ஒவ்வொரு பலியும் பெரிதும் நிறைவானதுமான பலியாகிய "உலகத்தின் பாவத்தை சுமந்துதீர்க்கிற தேவாட்டுக்குட்டியும்," "நம்முடைய பாவங்களை நிவர்த்திசெய்கிற கிருபாதார பலியும், நம்முடைய (சபை) பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்திசெய்கிற பலி" யுமாகிய கிறிஸ்துவைக் குறிப்பிட்டது. (யோவான் 1:29; 1 யோவான் 2:2) பாவத்தின் சம்பளம் அல்லது தண்டனை மரணமாக இருக்கிறபடியால், பாவம் நீக்கப்படும்பொழுது, அதன் சம்பளமாகிய தண்டனையும் ஏற்றவேளையில் ஒழிக்கப்பட வேண்டும். இதைத் தவிர வேறு எந்தக் கருத்தும் ஏற்றுக்கொள்ள முடியாததும், அநீதியாக இருக்கும். கிறிஸ்து மரித்து இரண்டாயிரம் வருடங்கள் ஆகியும், ஆதாமின் இழப்பிலிருந்து மனுக்குலம் இன்னும் விடுதலை பெறவில்லை என்ற விவாதம், திரும்பக்கொடுத்தலுக்கு எதிரானதும் அல்ல; கிறிஸ்துவின் மரணத்திற்கு முன் கடந்துபோன நான்காயிரம் வருடங்களும், தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்பே மீட்பை திட்டம் பண்ணவில்லை என்பதற்கும் எதிரான சாட்சியும் அல்ல. கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்னால் இருந்த நான்காயிரம் வருடங்களும், கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்னால் இருந்த இரண்டாயிரம் வருடங்களும், "அனைத்தையும் திரும்பக்கொடுத்தலின் காலங்களுக்கு" முன்பாக செய்ய வேண்டிய ஆயத்த வேலைகளுக்கு குறிக்கப்பட்ட காலங்களாகும்.

வேதாகமம் போதிக்கிற, தேவனிடத்தில் வைக்கும் விசுவாசம், பாவத்திற்காக மனம் வருந்துதல், குணநலன்களை சீர்படுத்துதல்

போன்றவைகள் இரட்சிக்கப்படுவதற்கு இன்றியமையாதவைகளாய் இருக்கின்றன. திரும்பக்கொடுத்தலின் விஷயம் முரண்பாடாக இருக்கிறதென்று யாரும் அவசரப்பட்டு நிதானிக்க வேண்டாம். இவ்விஷயத்தைக் குறித்து, இனி விளக்கமாகப் பார்க்க இருக்கிறோம். ஆனால், இப்பொழுது முழுமையான விசுவாசத்தையும், மனந்திரும்புதலையும், குணங்களை சீர்படுத்துதலையும் உண்டாக்கத் தேவையான அளவு வெளிச்சத்தை ஒரு சிலர் மட்டுமே பெற்றிருக்கிறார்கள் என்று நாம் கூறுகிறோம். இப்பிரபஞ்சத்தின் தேவனால் சிலர் முழுமையாகவும், சிலர் ஓரளவும் குருடாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இக்குருட்டாட்டத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலையான பிறகு ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மூலமோ அல்லது கிறிஸ்துவானவரின் மூலமோ தனித்தனியாக தங்களுக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்தி, நித்தியஜீவன் பெற தகுதியுள்ளவர்களா? தகுதியற்றவர்களா? என்பதை நிரூபிக்க முழு சந்தர்ப்பம் பெறுவார்கள். ஜீவன் பெற தகுதியற்றவர்கள் என்று தங்களையே நிரூபித்தவர்கள், மீண்டும் மரணத்திற்கு (2–ம் மரணம்) செல்வார்கள். இதிலிருந்து அவர்களுக்கு மீட்போ அல்லது அதைத் தொடர்ந்து உயிர்த்தெழுதலோ கிடையாது. ஆதாமின் பாவத்தின் நிமித்தமாகவும், அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட பலவீனங்களாலும் மரணம் சம்பவித்தது. இவையனைத்தும் கிறிஸ்துவின் மீட்பினால், அகற்றப்படும். ஆனால், மனதாரப் பாவம் செய்து எதிர்த்து நிற்பவர்களுக்கு மரணமே நிரந்தரமான முடிவாகிறது. அந்தப் பாவம் ஒருபோதும் மன்னிக்கப்படுவதில்லை, அதன் தண்டனை இரண்டாம் மரணம் ஆகும். அதாவது நித்திய மரணமே தவிர, நித்திய நித்தியத்திற்கும் மரித்துக்கொண்டே இருப்பதல்ல. இது உயிர்த்தெழுதலினால் நீக்கப்படாத மரணம் ஆகும்.

மீட்பின் திட்டத்தை பற்றிய தத்துவக் கோட்பாட்டின் விளக்கத்தை இனி வரவிருக்கும் தொகுதிகளில் பார்ப்போம். இங்கே நாம் காண்பிக்கிற உண்மை என்னவென்றால், ஆதாமின் பாவத்தினால் உண்டான அழிவும் நாசமும் எவ்வளவு கொடுமையான விளைவுகளை ஏற்படுத்தியதோ, அவ்வளவாக கிறிஸ்து இயேசுவினால் உண்டான மீட்பின் ஆசீர்வாத பலன்களும் சலுகைகளும் இருக்கும். ஏனென்றால், ஒருவனால் தண்டனைத் தீர்ப்படைந்து துன்பப்படுகிற அனைவரும் "ஏற்ற காலத்தில்"



நிச்சயமாகவே மற்றவரால் அந்த அனைத்து தீமைகளிலிருந்தும் விடுவிக்கப்படுவார்கள். ஆனாலும், வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள "பாவத்தின் சம்பளம் மரணம்" அதாவது ஜீவன் அணைந்துபோவது என்னும் சத்திய போதனையை ஏற்றுக்கொள்ளாதவர்கள், இந்த அல்லது வேறு எந்த வேத போதனையையும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மரணம் என்பது உயிரோடு வாதிக்கப்படுதல் என்று எண்ணுபவர்கள், மரணம் மற்றும் ஜீவன் என்ற வார்த்தைகளின் நேர் எதிரான அர்த்தங்களை அலட்சியப்படுத்துவதோடு, இரண்டு அபத்தங்களில் தங்களை உட்படுத்திக்கொள்கிறார்கள். ஆதாம் செய்த எந்த வகையான பாவமாயிருந்தாலும் குறிப்பாக விலக்கப்பட்ட கனியைப் புசித்த குற்றத்திற்காக, தேவன் ஆதாமை சதாக்காலமும் உயிரோடு வேதனையில் வாதிப்பார் என்று நிதானிப்பது அபத்தமாக இருக்கிறது. நம் கர்த்தராகிய இயேசு நமது நிமித்தமாக மீட்கும் பொருளாகி, மனுக்குலத்தை மீட்டாரானால், நாம் மரணத்திலிருந்து விதலையாக்கப்படும்படி மரணத்திற்குள் சென்றாரானால், அநீதியான்களுக்காக அவர் துன்பப்பட்டு மரித்தது, முழு மனுக்குலமும் சாபத்தீர்ப்புக்கு உட்பட்டிருக்கிற அதே தீர்ப்புக்கு இயேசுவும் உட்பட்டிருந்தார் என்பதற்கு இது சாட்சியமாய் இருக்கிறதில்லையா? அப்படியானால், நமது பாவங்களுக்காக அவர் சதாகாலத்திற்கும் வாதிக்கப்படுகிறாரா? அவ்வாறு இல்லையெனில், நமது பாவங்களுக்காக அவர் மரித்தது எவ்வளவு நிச்சயமானதோ, அப்படியே நமது பாவங்களுக்கான தண்டனையும் மரணமே என்பதும் நிச்சயமாகிறது. ஆகவே, பாவங்களுக்கான தண்டனையாகிய மரணமானது எவ்வகையிலும் அல்லது எந்நிலையிலும் உயிரோடிருப்பதைக் குறிக்காது.

ஆனால், நித்திய வாதைக் கொள்கையானது, "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" என்றும் கிறிஸ்து "நமது பாவங்களுக்காக மரித்தார்" என்றும் கூறும் கருத்துக்களோடு ஒத்திராததால், இரண்டு கருத்துக்களில் ஏதாவதொன்றை, பொருந்தாது என்று விட்டுவிட வேண்டும். ஆனால், சிலர் நித்திய வாதைக் கொள்கையில் உறுதியாயிருந்து, அதை அறுசுவை உணவாக விரும்பி, வேதம் கூறும் கொள்கையைத் தள்ளிவிட்டு, இயேசு உலகத்தாருக்காக மீட்கும்பொருளை செலுத்தினார் என்கிற சத்திய வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கமும் போதிக்கிற இந்த சத்தியத்தை

பகிரங்கமாக மறுதலித்து, வேதத்தை பொருட்படுத்தாதிருக்கின்றனர்.

### திரும்பக்கொடுத்தல் நடைமுறையில் சாத்தியமானதா ?

இறந்துபோன கோடிக்கணக்கான மனிதர்கள் மீண்டும் உயிர்த்தெழுப்பப்படுவார்களேயானால், அவர்களுக்கு இப்பூமியில் போதுமான அளவு இடம் கிடையாது என்றும், அவ்வாறு அவர்களுக்கு இடம் இருந்தாலும், அப்படிப்பட்ட மாபெரும் ஜனத்தொகையைத் தாங்கும் சக்தி இப்பூமிக்கு இல்லை என்றும் சிலர் எண்ணுகின்றனர். வேறுசிலரோ, இப்பூமியை பரந்த ஒரு கல்லறைத் தோட்டத்திற்கு ஒப்பிட்டு, மரித்த அனைவரும் விழித்தெழுந்து வருவார்களேயானால், தங்களுக்குரிய இடத்திற்காக, ஒருவரையொருவர் நெருக்கி, மிதிக்கவேண்டியிருக்கும் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.

இது ஒரு மிக முக்கியமான கருத்து. வேதாகமம் ஒரு உயிர்த்தெழுதலை அறிவிக்கும்போது உண்மையான கணக்கின்படி, இப்பூமியில் அவர்கள் அனைவரும் கால் ஊன்ற இடமில்லை என்று நாம் காணும்போது, அது எவ்வளவு விநோதமாயிருக்கும்! நாம் பூமியின் மொத்தப் பரப்பளவைக் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது இது ஆதாரமற்ற வீண் பயம் என்று அறியலாம். "தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லோருடைய வாக்கினாலும் உரைத்தபடி" "எல்லாவற்றையும் திரும்பக்கொடுத்தலை" அடைபவர்களுக்கு அபரிதமான இடம் இருப்பதை நாம் காண்போம்.

மனிதனை சிருஷ்டித்து 6000 ஆண்டுகள் முடிவடைந்திருக்கிறது என்றும், தற்பொழுது 140 கோடி ஜனங்கள் பூமியில் ஜீவித்து வருகிறார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். நமது மனித சந்ததி ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்து துவங்கியது. ஆனால், ஒரு தாராளமான மதிப்பீட்டின்படி பார்க்கும்பொழுது, தற்காலத்தில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ, அத்தனைபேர் துவக்கத்தில் இருந்தார்கள் என்றே வைத்துக்கொள்வோம். மேலும், ஜலப்பிரளயம் மூலம் உலக ஜனத்தொகை எட்டு பேராக குறைந்தபோதிலும் இந்த எண்ணிக்கையைக் காட்டிலும் குறைவாக எப்போதும் இருந்ததில்லை. மீண்டுமாக, நாம் தாராளமான மதிப்பீடு செய்யும்போது, ஆதியாகமம் 5–ம் அதிகாரத்தின்படி ஆதாமிலிருந்து



ஜலப்பிரளயம் வரைக்குமுள்ள ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஆறு வருடங்களில் பதினொரு தலைமுறைகள் மட்டும் இருந்தன. அதாவது, ஒவ்வொரு தலைமுறைக்கும் ஏறக்குறைய நூற்று ஐம்பது வருடங்கள் ஆகியிருந்தது என்றாலும், நாம் ஒரு நூற்றாண்டிற்கு மூன்று தலைமுறைகள் அதாவது ஒரு சந்ததிக்கு முப்பத்து மூன்று வருடங்கள் என்று கணக்கிடுவோம். இதன்படி அறுபது நூற்றாண்டிற்கு மூன்று தலைமுறைகளாக, ஆதாமிலிருந்து நூற்று எண்பது தலைமுறைகளைக்கொண்டிருக்கிறது. ஒரு தலைமுறைக்கு நூற்று நாற்பது கோடி நபர்கள் என்றால் சிருஷ்டிப்பிலிருந்து இந்நாள் வரைக்கும் அதிகபட்சமாக இருபத்து ஐந்தாயிரத்து இருநூறு கோடி (252,000,000,000) ஜனங்கள் இருப்பார்கள். இந்த மதிப்பீடு உண்மையான தொகையைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும்.

இந்த மாபெரும் ஜனக்கூட்டத்திற்கு போதுமான இடத்தை நாம் எங்கு கண்டுபிடிக்கலாம்? நிலத்தை நாம் அளந்து பார்க்கலாம். அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் உள்ள டெக்சாஸ் மாநிலத்தின் பரப்பளவு 2,37,000 சதுர மைல்களாகும். ஒரு சதுர மைலுக்கு 2,78,78,400 சதுர அடியாக 6,607,180,800,000 சதுர அடி டெக்சாஸ் மாநிலத்தில் உள்ளது. மரித்த ஒவ்வொரு உடலுக்கும் 10 சதுர அடி என்று வைத்துக்கொள்வோமேயானால் டெக்சாஸ் என்ற மாநிலம் ஒரு கல்லறையாக, இந்த விகித அளவின்படி 660,718,080,000 சரீரங்களை அல்லது, நாம் தற்போது பார்த்த பூமியில் ஜீவித்த ஒட்டுமொத்த ஜனங்களின் மிகைப்படுத்திக் காண்பிக்கப்பட்ட மதிப்பீட்டினைக்காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக இடங்கொள்ளும்.

நின்றுகொண்டிருக்கும் ஒரு மனிதனுக்கு ஏறக்குறைய ஒன்று மற்றும் மூன்றில் இரண்டு பங்கு சதுர அடி இடம் (1 2/3 Sq.ft) தேவைப்படுகிறது. இந்தக் கணக்கீட்டின்படி தற்கால உலகின் மொத்த ஜனத்தொகை நூற்று நாற்பது கோடி பேர் 88 சதுரமைல் கொண்ட பரப்பளவில், அதாவது லண்டன் மாநகரம் அல்லது பிலதெல்பியா நகரத்தின் பரப்பளவைக் காட்டிலும், குறைவான பரப்பளவிலேயே நிற்கமுடியும். அயர்லாந்து தீவில் (பரப்பளவு 32 ஆயிரம் சதுரமைல்கள்) இப்பூமியில் வசித்த மொத்த மக்கள் தொகையைப்போல் இரண்டு மடங்குக்கு அதிகமான நபர்கள் நிற்குமளவு இடமிருக்கும் (மிகைப்படுத்தின மதிப்பீட்டின்படி).

ஆகவே, இந்தக் கருத்தை மறுப்பவர்களுக்கு பதிலளிப்பதற்கு மேற்கண்ட புள்ளிவிபரங்களே போதுமானது. ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை நாம் நினைவுபடுத்திப் பார்க்கும்பொழுது, "வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து புஷ்பத்தைப்போல செழிக்கும். வனாந்திரத்தில் தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்" (ஏசா.35:1–6) என்னும் வசனமானது, தேவன் தம் திட்டத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் முன்னறிந்திருக்கிறார் என்றும், அவருடைய சிருஷ்டிகளுக்கு அத்தியாவசியமானவைகளை இயல்பான வழிகளில் சேகரித்துக்கொடுப்பார் என்றும் நாம் காண்கிறோம்.

## திரும்பக்கொடுத்தலும், பரிணாமக் கொள்கையும்

மனிதனை முந்தின நிலைக்கு சீர்பொருந்தச் செய்வதுபற்றி வேதாகமம் கூறும் சாட்சியமானது, விஞ்ஞானத்திற்கும், தத்துவக் கோட்பாடுகளுக்கும் இசைந்திருக்கவில்லை என்று கூறி சிலர் மறுக்கலாம். மேலே கூறின கொள்கையானது, மேலெழுந்தவாரியான பகுத்தறிவின்படி, இருபதாம் நூற்றாண்டிலிருக்கும் தற்கால மேன்மையான அறிவைச் சுட்டிக்காட்டி, ஒப்பிடும்போது ஆதி மனிதன் அறிவில் மிகக் குறைந்தவனாக இருந்திருப்பான் என்றும், தற்போதைய அறிவோ அபிவிருத்தியின் பலனால் வந்தது என்றும் தீர்மானமாகச் சொல்லுகிறார்கள். இந்த நிலைப்பாட்டின்படி பார்த்தால் முந்தின சீருக்குக் கொண்டுவருதல் விரும்பத்தகாததும், ஆசீர்வாதத்திற்கு நேர் எதிரானதுமாயிருக்கும்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது மேற்கண்ட கொள்கையானது புத்திக்கு ஏற்றதாகத் தோன்றலாம். புருக்களின் நகரத்திலுள்ள ஒரு பிரபலமான மதபோதகர் கூறுகிறபடி, பரிணாமக் கொள்கையின்படி, ஆதாமின் வீழ்கையானது படிப்படியாக வளர்ச்சிப் பாதையில் அல்லது முன்னேற்றப் பாதையிலிருந்திருந்தால், நாமும் அவரது ஆதி நிலைமையிலிருந்து எவ்வளவு சீக்கிரம் விழுகிறோமோ அத்தனையிற்கு நமக்கு நன்மை பயக்கும் என்று கூறுவதை அநேகர் தீர்க்கமாக ஆராயாமல், இக்கொள்கையை சத்தியமாக ஏற்றுக்கொள்ள விருப்பமாயிருக்கிறார்கள்.



இப்படிப்பட்ட தத்துவ ஞானமானது, பிரசங்க மேடையில் தேவ வசனத்தை மதிப்பிழக்கச்செய்வதோடு மட்டுமல்லாமல், முதல் மனிதனின் கீழ்ப்படியாமையால் மரணமும் துன்பங்கள் அனைத்தும் வந்தன என்றும், இவைகள் மீட்கும்பொருளினால் மட்டுமே நீக்கப்பட்டு, தெய்வீக தயவுக்கும் ஜீவனுக்கும் மனிதர்கள் திரும்பக்கொண்டு வரப்படுவார்கள் என்றும் கூறின அப்போஸ்தலர்கள் அறிவீனமானவர்கள் என்றும் நம்மை யோசிக்கச் செய்யும். (ரோமர் 5:10, 12, 17–21; 8:19–22; அப்.3:19–21; வெளி.21:3–5) இந்த தவறான தத்துவக்கொள்கையை முறியடிக்கமுடியாது என்று உடனடியாக தீர்மானிக்கக்கூடாது. ஏனெனில், பாவம் மற்றும் மரணம் ஆரம்பமான விதத்தையும், முந்தைய பரிபூரண நிலைக்கு திரும்பவும் உயர்த்தப்பட இருப்பதையும் குறித்த அப்போஸ்தலர்களின் ஒவ்வொரு போதனையையும், சாட்சியங்களையும் முற்றிலும் புறம்பே தள்ளிவிட நேரிடுமாயின், அவர்கள் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எழுதவில்லை என்றும், ஆகவே தேவ அங்கீகாரம் பெறாத இவற்றை தள்ளிவிடுவதே நலம் என்றும் கருதி விட்டுவிட கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, பிரபலமாகிவரும் இந்தக் கொள்கையை சில உண்மைகளின்படி ஆராய்ந்து பார்க்கும்போது, அதன் தத்துவம் எவ்வளவு ஆதாரமானதென்று அறியலாம்.

இந்தக் கொள்கையின் பிரதிநிதியாகிய ஒருவர் கூறுவதாவது: "ஆதி மனிதனது ஜீவியத்தில் மிருக சுபாவமே ஆதிக்கம் செலுத்தி வந்தது. பெரும்பாலும் மாம்ச சிந்தையே அவனை ஆண்டு வந்தது. பிறகு அவன் படிப்படியாக ஒரு நிலைமையிலிருந்து மற்றொரு நிலைமைக்கு வளர்ந்து, தற்காலத்திலுள்ள ஒரு சாதாரண மனிதன் மூளையின் செயல்பாட்டிற்கு கீழான ஒரு நிலைமையை அடைந்திருக்கிறான். ஆதலால், இந்த யுகம் மூளையின் யுகம் (Brain age - அறிவின் யுகம்) என்று கருதப்பட்டு, பெயரிடப்படலாம். தற்காலத்தில் பெரும் நிறுவன வேலைகளை துணிவோடு செய்ய மூளை உந்துகிறது. மூளையானது அரசாங்கங்களை ஆளுகை செய்கிறது. மூளையினால் மனிதன் இப்பூமியின் ஒவ்வொரு கனிமம் மற்றும் காற்று, நீர் போன்ற அனைத்துப் பொருட்களின் மேலும் ஆளுகை பெற்று, அதை தனக்குக் கீழ்ப்படுத்துகிறான். பௌதிக ஆற்றல்கள்மேல் (Physical forces) மனிதன் தன் கரத்தினை வைக்கிறான். படிப்படியாக இந்த வல்லமைகளை அடைந்து இயற்கையை ஆண்டுகொள்ளுவான் என்பதை அலெக்சாண்டர் செல்கிர்க் தனது மொழிநடையில் 'நான் ஆராய்ந்து

அனைத்திற்கும் நானே மன்னன்" என்று கூறுகிறார்."

நாம் ஒரு கொள்கையை கவனிக்கும்பொழுது அதைப் பார்த்த உடனேயே அறிவுப்பூர்வமானதென்று அதை உடனடியாக ஏற்றுக்கொள்ளவும், அத்துடன் இசைந்து வரும்படி வேதாகமத்தை திருப்ப முயலக்கூடாது. சத்திய வேதாகமத்தை நாம் ஆராய்ந்துபார்த்து, ஆயிரக்கணக்கான வழிகளில் வேதாகமத்தின் சாட்சியங்கள் உண்மையானவை என்று நிரூபிக்கப்பட்டிருப்பதையும், மனித ஞானத்திற்கு அப்பாற்பட்ட மேலான ஞானத்தினாலேயே இப்புத்தகம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், இது குறைபாடற்றது என்பதையும் பரிசோதித்துப் பார்த்து அறிந்திருக்கிறோம். விஞ்ஞான ஆராய்ச்சிகள் புகழப்படத்தக்கதாக இருந்தபோதிலும், அது பரிந்துரைக்கும் கொள்கைகள் கவனத்தில் கொள்ளவேண்டியவைகளாக இருந்தபோதிலும், அதன் முடிவான கருத்துக்கள் "தவறில்லாதது" என்று நாம் தீர்மானித்துவிடக்கூடாது. ஒரு உண்மையான விஞ்ஞானி தன் முயற்சிகளை பரிசோதித்துப் பார்க்கின்ற மாணவன் என்றும், தயையற்ற சூழ்நிலைகளிலும், கணக்கிட முடியாத கடினமான துன்பங்களிலும் போராட்டங்களிலுமிருந்து, மனிதனுடைய ஆதிகால இருப்பிடத்தையும் அவன் அடையப்போகும் பின் நிலைமையையும், மாபெரும் புத்தகமாகிய இயற்கையிலிருந்து கற்கும் மாணவன் என்றும் நாம் நினைவுகூற வேண்டும். ஆகவே, முன்னர் விஞ்ஞானக் கொள்கைகளாக தீர்மானித்திருந்த ஆயிரக்கணக்கான கொள்கைகள் பிந்தைய காலங்களில் தவறு என்று அதே விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்டிருப்பது ஆச்சரியமான காரியமல்ல.

ஆகவே, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையோ, ஆராய்ச்சிகளையோ எதிர்ப்பது நமது நோக்கமல்ல. இயற்கையாகிய புத்தகத்தை வாசிக்கின்ற மாணவர்கள் கூறும் ஆலோசனைகளைக் கேட்கும்போது, அநேக முறைகளில் ஒரு பகுதியோ அல்லது முழுமையாகவோ தவறு என்று நிரூபிக்கப்பட்ட கொள்கைகளை வேதாகமம் கூறும் கொள்கைகளோடு ஒப்பிட்டுப்பார்த்து, விஞ்ஞானிகளின் போதனைகள் சரியா அல்லது தவறா என்று நிரூபிக்க வேண்டும். "வேதாகமத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்க வேண்டும். இந்த வார்த்தைகளின்படி சொல்லாவிட்டால்



அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை."(ஏசா.8:20) இயற்கை மற்றும் வேதாகமம் ஆகிய இரண்டு புத்தகங்களைப் பற்றிய அறிவானது, இரண்டும் இசைவானவைகள் என்று நிரூபிக்கும். ஆனால், அப்படிப்பட்ட அறிவை அடையும் வரை தேவனுடைய பிள்ளைகளிடத்தில் தேவனது வெளிப்பாடே தொடர்ந்து ஸ்திரமாகவும் முதன்மையாகவும் இருந்து, தவறு செய்யக்கூடிய சக மனிதரின் யூகங்களின் அடிப்படையிலான கண்டுபிடிப்புகளை தீர்மானிக்கட்டும்.

ஆனால், இக்கொள்கையைப் பற்றிக்கொண்டவர்களாய், ஆதியில் மிகவும் தாழ்ந்த ஜீவன் நிலையிலிருந்த மனிதன், படிப்படியாக வளர்ந்து தற்போதைய "அறிவின் யுகம்" என்ற மேலான நிலையை அடைந்தான் என்னும் பரிணாமவாதக் கொள்கையைவிட, தற்போது மனிதனது அறிவுப்பெருக்கத்திற்கும் திறன் மற்றும் அவனது வல்லமைக்கும் வேறு ஏதாவது ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மை இருக்கிறதா என்று காண்போம். வசதி வாய்ப்புகளும் நவீன கண்டுபிடிப்புகளும் பொதுவான கல்வி அறிவும் எங்கும் பரவியிருக்கிற அறிவுப்பெருக்கமுமே மூளையின் திறனை அதிகரிக்கச்செய்யும் காரணமாக இராமல், மூளையை உபயோகிக்கக்கூடிய மிகவும் தயை நிறைந்த சூழ்நிலை உண்டானதே காரணம் என்று நாம் காணப்போகிறோம். மூளைத் திறனானது கடந்த காலங்களைவிட தற்போது அதிகரித்திருக்கிறது என்ற கூற்றை மறுக்கிறோம். ஆனால், சாதகமான சூழ்நிலைகளின் காரணமாக முந்தைய காலங்களைக்காட்டிலும், தற்காலத்தில் மனித மூளைத் திறனை பயன்படுத்துவது அதிகரித்திருப்பதினால், மூளைத்திறன் அதிகரித்திருப்பதுபோன்று காணப்படுகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஓவியக்கலையிலும், சிற்பக்கலையிலும், பயிற்சிபெறும் தற்கால "அறிவின் யுகத்தின்" மாணவர்கள், கடந்த காலங்களில் அத்துறையில் வல்லுநர்களாக விளங்கினவர்களைப் பின்பற்றுவது இல்லையா? அவ்வாறு செய்வதினால் அவர்களது மூளையின் வல்லமை மற்றும் வடிவமைத்தலில் தனித்திறமை, மற்றும் விவேகமாய் செய்யும் வேலைத் திறன் ஆகியவைகள் மேன்மையானவைகள் என்று ஒப்புக்கொள்கிறார்கள் அல்லவா? முற்காலத்து கட்டிட வடிவமைப்புகளை தற்கால அறிவின் யுகமானது தன்னுடைய சிற்ப வேலைக்காக பெரும்பாலும் பயன்படுத்துவதில்லையா? இந்த "அறிவின் யுகத்தின்" சொற்பொழிவாளர்களும்,

பகுத்தறிவாளர்களும் கடந்த காலத்திலிருந்த ப்ளாட்டோ, அரிஸ்டாட்டில், டெமாஸ்தனிஸ் போன்றவர்களின் நடைமுறைகளைக் கற்று அவர்களது நியாயக் கோட்பாடுகளை பின்பற்றுவதில்லையா? தற்காலத்து மேடைப் பேச்சாளர்கள் டெமாஸ்தனிஸ், அப்பொல்லோ போன்றவர்களின் நாவைப் பெறவேண்டும் என்றும் அப்போஸ்தலர் பவுலின் தெளிவான தர்க்கிக்கிற வல்லமையை பெற வேண்டும் என்றும் ஆசைப்படுவதில்லையா?

இன்னும் முந்தைய காலத்தை நோக்கிப் பார்க்கும்போது, தீர்க்கதரிசிகளில் அநேகர் சொல் நயமாகப் பேசும் வல்லமையையும், சங்கீதங்களில் கவிதை பாணியில் எழுதும் ஆற்றலும் பெற்றிருந்ததை அறிகிறோம். தற்கால "மூளை யுகத்தின்" தத்துவ ஞானிகளுக்கு யோபுவின் ஞானத்தையும், அவனுக்கு ஆறுதல் கூற வந்தவர்களுடைய ஞானத்தையும் ஒழுக்க ரீதியான உணர்வுகளையும் எடுத்துக்காண்பிக்கிறோம். "எகிப்தியரின் சகலவிதமான ஞானத்தையும் கற்றறிந்த மோசேயைப்" பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? அவர் மூலமாகக் கொடுக்கப்பட்ட சட்டங்கள், நாகரீகமடைந்த இன்றைய அனைத்து நாடுகளுக்கும் உள்ள சட்டங்களுக்கு அஸ்திவாரமாய் விளங்குவதோடு, அதிசயமான ஞானத்தின் ஒட்டுமொத்த உருவமாக இன்னும் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

பழங்காலத்தில் புதையுண்டுபோன நகரங்களைத் தோண்டி எடுக்கும்பொழுது, கடந்தகாலங்களில், கலை மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றைக்குறித்த அவர்களது அறிவு தற்கால "அறிவு யுகத்தின்" தத்துவ ஞானிகளை ஆச்சரியப்படவைக்கிறது. இறந்த சரீரங்களுக்கு நறுமணப்பொருட்களை இடும் பழங்கால முறைகளும், செம்புக்கம்பியை அனல் சிகிச்சை செய்யும் முறையும், தமாஸ்குவின் எஃகுவையும், கருங்கிலிரியம் கண்ணாடியை உருவாக்குவதும், கடந்த காலங்களில், செய்த அரிதான செயல்களாய் இருக்கின்றன. இவைகளை தற்காலத்தின் மூளைத்திறனையும், கண்டுபிடிப்புச் சாதனங்களையும் கையாண்டு புரிந்துகொள்ளவோ அதேவிதமாக செய்யவோ முடியாதிருக்கிறது.

ஆபிரகாம் வாழ்ந்த நான்காயிரம் வருடத்திற்கு முந்தைய காலத்திற்குப் போவோமானால், எகிப்தின் மகா பிரமிடைக் காணலாம். இது இன்றைய நாளில் அதிகம் கற்றறிந்த விஞ்ஞானிகளுக்கும்கூட



ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இதன் கட்டுமானப்பணியானது, தற்கால "அறிவு யுகத்தின்" வானவியல் மற்றும் கணித விஞ்ஞானங்களுக்கு இசைவாகக் கட்டப்பட்டுள்ளது. நவீன கருவிகளைக்கொண்டு கண்டுபிடிக்கக்கூடிய உண்மைகளை பிரமிடு நமக்குப் போதிக்கிறது. உலகப் புகழ்பெற்ற வானவியல் வல்லுநர்களில் சிலர்: தேவனே இதற்கு காரண கர்த்தாவாய் இருந்திருக்க வேண்டுமென்று தயக்கமின்றி பகிரங்கமாக அறிவிக்கும்படியாக அதன் போதனைகள் தெளிவாகவும் ஆச்சரியமாகவும் இருக்கின்றன. தற்போதைய "அறிவு யுகத்தின்" பரிணாமவாதிகள், அது தெய்வீக ஏற்பாட்டின்படி நடந்தேறியது என்றும், அது மனித ஞானத்திற்கும் அப்பாற்பட்ட மேலான வேலை என்றும் ஒப்புக்கொண்டபோதிலும், அதைக் கட்டினவர்கள் மனிதர்களே என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அன்றைய நாளில், தெய்வீக ஏற்பாட்டின்படி, மனிதர் கூட்டமாய்ச் சேர்ந்து தங்கள் சிந்திக்கும் திறனால் செய்துமுடித்த வேலையை, இன்றைய நாளில் அனைத்து நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி, ஒரு சில மனிதர்கள் தங்களுக்கு முன்பாக அவைகளை ஒரு மாதிரியாக வைத்துக்கொண்டு செய்யும் திறனையே பெற்றிருக்கின்றனர். இதிலிருந்து அறியவருவது என்னவெனில், நமது "அறிவு யுகமானது" உண்மையான அத்தாட்சி மற்றும் சூழ்நிலைகளைக் காட்டிலும், ஆணவம் மற்றும் போலி தற்பெருமையால் வளர்ந்திருப்பதை நிரூபிக்கிறது.

இவ்வாறாக தற்காலத்து மனித அறிவுத்திறன், கடந்த காலங்களைக் காட்டிலும் அதிகரிக்கவில்லை என்று நிரூபிப்பதோடு, தற்கால அறிவுத்திறன் குறைவாகவே இருக்கிறது என்பதையும், தற்காலத்தில் பொதுவாக அதிகரித்திருக்கிற அறிவுப்பெருக்கத்திற்கும் நவீன கண்டுபிடிப்புகளுக்கும் என்ன காரணம் என்றும் காணவேண்டும். இதனை சத்திய வேதத்திற்கு இசைவாகவும், புத்திக்கேற்றபடியும் நம்மால் கண்டறியமுடியும் என்று நம்புகிறோம். தற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டும், புதிதாக உண்டாக்கப்பட்டும் இருக்கிறவைகள் மதிப்புமிக்கவையாக காணப்படுவதால், இது "அறிவு யுகம்" என்பதற்கு ஆதாரமாகக் கருதப்படுகிறது. இவையனைத்தும் கடந்த நூற்றாண்டிற்குள்தான் வந்திருக்கிறது. உதாரணமாக, நீராவி என்ஜின், மின்சாரம், தந்தி, ரயில்வே-ரோடுகள், நீராவிப்படகு மற்றும் பல்வேறு தொழில்துறை இயந்திரங்கள்

ஆகியவற்றை உபயோகிப்பது அறுபது வருடங்களாகத்தான் இருந்து வருகிறது. இவைகள் மூளைத்திறன் அதிகரித்திருப்பதற்கு சான்றுகளாக இருக்குமேயானால், "அறிவு யுகமானது" தற்பொழுதுதான் துவங்கி இருக்க வேண்டும். தர்க்க ரீதியாகப் பார்க்கும்பொழுது, இன்னுமொரு நூற்றாண்டில் எல்லா விதமான அற்புதங்களும் அன்றாட நிகழ்வுகளாக இருக்கும். இதே விகிதப்படி அதிகரித்துக்கொண்டே போகுமானால் இது எதில் போய் முடியும் ?

மீண்டுமாக நாம் ஒரு காரியத்தை சிந்திப்போம். மனிதர் அனைவருமே புதிதானவற்றைக் கண்டுபிடிக்கிறவர்களா? கண்டுபிடிக்கப்பட்டவைகளை நடைமுறையில் உபயோகித்துப்பார்த்து, பயனுள்ளதா என்று கண்டுபிடிப்பவர்களின் எண்ணிக்கையைவிட, அந்தக் கண்டுபிடிப்பை உபயோகப்படுத்தி, நல்லது என்று பாராட்டுபவரின் எண்ணிக்கை மிகக்குறைவே. மிகவும் பயனுள்ளதும், உயர்வாக மதிக்கப்படும் பொதுநல ஊழியம் செய்து வருபவர்களில், சிலர் மட்டுமே மிகுந்த "மூளைத்திறன்" உள்ளவர்கள். இவ்வாறு நாம் கூறுவது அந்த ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் மற்றவர்களை களங்கப்படுத்த அல்ல. உலகில் உள்ள மிகச் சிறந்த அறிவாளிகள், ஆழ்ந்த பகுத்தறிவு வல்லுநர்கள், நவீன இயந்திரங்களை கண்டுபிடித்தவர்கள் அல்ல. கண்டுபிடித்தவர்களில் சிலர், மந்தமான புத்தி உள்ளவர்களாய் இருந்தார்கள் என்பதை அறிந்தவர்கள், "இவர்கள் அவற்றை எப்படி கண்டுபிடித்தார்கள்" என்று ஆச்சரியப்படுகின்றனர். மின்சாரம் மற்றும் நீராவித்திறன் போன்ற மாபெரும் கோட்பாடுகளை அநேக ஞானிகள் கூட்டாகச் சேர்ந்து பல வருடங்களாக மீண்டும் மீண்டும் ஆராய்ச்சி செய்து கண்டறிந்தவைகளை சோதனைக்குட்படுத்தி, பின்பு மேம்படுத்திவரும் இக்காலங்களுக்கு மாறாக, அவைகளை கண்டுபிடித்தவர்கள், தங்களுடைய மூளைத்திறனை உபயோகிக்காமல் எதிர்பாராத வண்ணம் தற்செயலாய் கண்டுபிடித்தார்கள்.

மனித நிலைப்பாட்டிலிருந்து தற்கால நவீன கண்டுபிடிப்புகளுக்கு பின்வருமாறு காரணம் கூறலாம்: கி.பி 1440–இல் கண்டுபிடிக்கப்பட்ட அச்சு இயந்திரம் (Printing Machine) அந்நவீன கண்டுபிடிப்புகளுக்கு ஆரம்பமாக இருந்தது. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படாதிருந்தால் அறிவாளிகளின்



கண்டுபிடிப்புகளும், சிந்திக்கும் திறன்படைத்தோரின் சிந்தனைகளும், குறிப்புகளும் பதிவுசெய்யப்பட்டு, புத்தகங்களாக வெளிவந்திருக்காது. பின்வரும் சந்ததியாருக்கும் அறியப்படாதிருந்திருக்கும். புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டதால், பொதுக்கல்வி முறை அறிமுகமாகி, பரவலாகி, இறுதியில் பள்ளிக்கூடங்கள், சர்வசாதாரணமாகின, பள்ளிகளும், கல்லூரிகளும் மனித அறிவுத்திறனை அதிகரிக்கவில்லை. மாறாக, சிந்திக்கும் ஆற்றலை நெறிப்படுத்தவும், பொதுப்படையாக்கவும் உதவியது. இதன் காரணமாக ஏற்கனவே அடைந்திருக்கும் திறனை மேம்படுத்த உதவுகிறது. புத்தகங்கள் எந்தளவு சாதாரணமாகிறதோ அந்தளவு அறிவும் பொதுவாக எல்லாரிடத்திலும் பரவுகிறது. இவைகளை அடைகின்ற சந்ததிகள் கடந்தகால சந்ததிகளைக் காட்டிலும், மேலான நிலைமையை அடைகிறார்கள். தன்னுடைய ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் கூறி, மற்றவர்களை ஊக்கப்படுத்தி, பெருகூட்டுவதற்கு முன்னர் ஒரேயொரு மேதை இருந்தான். ஆனால், தற்போதோ ஆயிரக்கணக்கான சிந்தனையாளர்கள் இருக்கிறார்கள். அதோடுகூட இன்றைய ஒவ்வொரு தலைமுறையினரும், முன் சந்ததிகள் அனைவருடைய ஒட்டுமொத்த வாழ்க்கை அனுபவங்களையும் புத்தகங்களின் வழியாக அறிகின்றனர். கல்வியும் அனைவராலும் புகழத்தக்க குறிக்கோளாக சேர்ந்து, இடர் நிறைந்த பணியை, துணிவோடு மேற்கொள்ளவும், மேலான அந்தஸ்தையும், தகுதியையும் அடையவேண்டுமென்ற விருப்பமும், அன்றாட பத்திரிக்கைகளில் வரும் புதிதுபுதிதான காரியங்களின் விளக்கங்களாலும், கருத்துக்களினாலும் மனிதனுடைய புரிந்துகொள்ளும் வல்லமை அதிகரித்து, ஊக்கப்படுத்துவதன் காரணமாக, சமுதாயத்தின் நன்மைக்காக கூடுமானால் ஏதாவது ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் அல்லது புதிதாக உண்டாக்க வேண்டும் என்ற உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, நவீன கண்டுபிடிப்புகளானது அதிகரித்திருக்கும் மனித மூளைத்திறனால் அல்ல என்றும், இயற்கையாக ஏற்பட்டிருக்கும் காரணங்களினால் அறிவுக்கூர்மை, புரிந்துகொள்ளும் திறன் அதிகரித்திருக்கிறது என்றும் நாம் தீர்மானிக்கிறோம்.

இனி இப்பாடத்தைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதைப் பார்ப்போம். புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவைகள் மற்றும்

அறிவுப்பெருக்கம் ஆகியவை இயற்கையான காரணங்களின் நிமித்தமாக, மனிதருக்கு ஏற்பட்டது என்பதை தற்போதைக்கு நாம் நம்பும் அதே வேளையில், இந்த இயற்கையான காரணங்கள் யெகோவா தேவனால் பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பாகவே திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு, "தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே . . ." (எபே.1:12) ஏற்றவேளையில் அவரது பராமரிப்பின்படி அவை நடப்பிக்கப்பட்டு வருகிறது. அவரது வசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட திட்டத்தின்படி, ஆறாயிரம் வருடங்களாக தேவன் பாவத்தையும் துயரத்தையும் அனுமதித்து, இவ்வுலகில் அநீதியின் ஆட்சியால் நசுக்கப்படும்படியாக விட்டு, பின்பு ஏழாவது ஆயிரமாண்டு ஆட்சியில் அனைத்தையும் தாம் நியமித்த இயேசு கிறிஸ்துவினால் திரும்பக்கொடுக்கவும், அதற்கு முன்பாக தீமையை முற்றிலுமாக வேரறுக்கவும் தேவன் சித்தம் கொண்டார். ஆகவே, தீமையின் ஆறாயிரவருட ஆட்சி முடிவடையும் வேளையில் ஏற்படுத்தப்பட இருக்கிற ஆயிர வருட யுகத்தில் தேவன் பல்வேறு நவீன கண்டுபிடிப்புகளை வெளிக்கொணரத் தேவையான தயவையும், சூழ்நிலைகளையும் அனுமதித்தார். அவரது புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷத்தையும் இயற்கையாகிய புத்தகத்தினையும் கற்பதற்கும், அதோடுகூட வரவிருக்கிற ஆயிரவருட அரசாட்சியில் மனுக்குலத்தை ஆசீர்வதித்து, உயர்த்துவதற்கு ஆயத்தமாக இயந்திரவியல், மற்றும் இரசாயன தத்துவத்தை பயன்படுத்தும் கருவிகளையும் தற்போது கண்டுபிடித்து அறிமுகப்படுத்தும்படியாக தேவன் தயவு காண்பித்தார். இவையனைத்தும் பயன்படுத்தும் நிலையில் தயாராய் உள்ளது. தேவதிட்டம் இதுவே என்பதை தீர்க்கதரிசன வாக்கியம் தெளிவாக எடுத்துரைக்கின்றது. "தானியேலே, முடிவுகாலம் மட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புத்தகத்தை முத்திரைபோடு. அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவும் (மூளைத்திறன் அல்ல) பெருகிப்போம்." "துன்மார்க்கரில் ஒருவனும் (தேவதிட்டத்தையும், வழியையும்) உணரான். ஞானவான்களோ உணர்ந்துகொள்வார்கள்." "யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்." (தானி. 12:1, 4, 10)

தற்காலத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவைகளும்



வெளிப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களும் இதற்குமுன்பே மனிதனுக்கு வந்து, சாபத்தின் வேதனையை எளிதாக்கும்படி தேவன் ஏற்பாடு செய்யாதது சிலருக்கு விநோதமாக தோன்றலாம். முதலில் சாபத்தின் முழு விளைவுகளையும் மனுக்குலம் உணரவேண்டுமென்பது தேவ திட்டமாயிருக்கிறது என்பதையும் அதன்பின்பு, ஆசீர்வாதங்கள் முழு மனுக்குலத்தின்மீதும் பொழியப்படும்போது, பிரயோஜனமில்லா பாவத்தைக்குறித்து அம்மனுக்குலமானது என்றென்றும் தீர்மானமான முடிவெடுக்கும் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். இதற்கும் மேலாக உலகம் இன்னும் அறிந்துணராத விஷயத்தை தேவன் முன்னறிந்தும் முன்னுரைத்தும் இருக்கிறார். அது என்னவென்றால், முழு உலகத்தின் நீதியுள்ள சட்டங்களுக்கு இசைவாக, நடக்க மனதில்லாதவர்களின்மேல் அவருடைய விசேஷமான ஆசீர்வாதங்களைப் பொழிவாரேயாகில் அதிகதிகமான தீமைகளுக்குள்ளேயே அது அவர்களை வழிநடத்திச்செல்லும் என்பதேயாகும். தேவன் தற்காலத்தில் அளித்திருக்கும் அதிகதிகமான ஆசீர்வாதங்கள், அளிக்கப்படும் விதம், இவ்விஷயத்திற்கு ஒரு அனுபவப் பாடமாக இருக்கிறது. அதோடு, மீட்கப்பட்ட மனிதருக்கும், தேவ தூதர்களுக்கும் நித்திய நித்தியத்திற்கும் இந்தக்கொள்கை உதாரணமாக இருக்கலாம் என்று முடிவில் விளங்கும். எப்படி இது சாத்தியம் என்பதை இங்கு குறிப்பாக மட்டும் காண்பிக்கிறோம்.

முதலாவது: கடுமையான சட்டங்களும் தண்டனைகளும் அதனை நிறைவேற்ற வலிமையான அரசாங்கமும் இல்லாவிடில், தற்காலத்து விழுந்துபோன அல்லது இழிவான நிலைமையில் மனுக்குலம் இருக்குமட்டும், சுயநலம் ஏறக்குறைய அனைவரையும் ஆட்சிசெய்யும். மனிதனது திறன் சமமாக இராமல் ஒவ்வொருவரிடமும் வித்தியாசப்படுவதால், தொழிலாளிகளைக் குறைக்கும் இயந்திரங்கள் புதிதாக தயாரிக்கப்பட்டு, அதன் விளைவாக தயாரிப்பவர் அதிக உற்பத்தியைத் துவங்கினவுடன், அதன் விளைவாக ஐசுவரியவான் இன்னும் ஐசுவரியவானாகவும், ஏழை இன்னும் அதிக ஏழையாக ஆவதுமே நடைபெறும். மனிதரின் மனப்போக்கு, சுயமேன்மை, ஏகபோகம் இவற்றையே சார்ந்திருப்பதால், ஏற்கனவே இயற்கையான அனுகூலமும் திறனும் உடையவர்களுக்கு இன்னும் இது நேரடியான சாதகத்தை

ஏற்படுத்துகிறது.

இரண்டாவதாக மனிதன் பரிபூரணமற்றவனாக இருப்பதாலும், மனிதனது விஷயங்களை முறைப்படுத்த ஒரு தெய்வீக அரசாங்கம் இல்லாதிருப்பதாலும், தற்காலத்து வளங்களும் ஐஸ்வரியங்களும் சீராக நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டேயிருப்பதால், எல்லாருக்கும் சமமாகப் பங்கிடுவது கூடாத காரியம். அவ்வாறு பங்கிடுவது சாத்தியமாக இருந்தாலும், அதனால் வரும் பயன்கள் தற்போதிருப்பதைவிட இன்னும் அதிக தீமையை விளைவிக்கும். தொழிலாளிகளைக் குறைக்கும் இயந்திரங்களும், அனைத்து நவீன கருவிகளும், அனைவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுமானால், அதன் விளைவாக உழைக்கும் நேரம் குறைந்து, ஓய்வுநேரம் அதிகரிக்கும். விழுந்துபோன ஜீவிகளுக்கு சோம்பேறித்தனம் அதிக தீமைகளை வருவிக்கக்கூடியது. உழைக்கும் நிர்ப்பந்தமும், முகத்தில் வியர்வையும் இல்லாதிருக்குமானால், நமது சந்ததி தற்போதைய நிலைமையைக் காட்டிலும் இன்னும் துரிதமாக அழிவுக்குள்ளாகியிருக்கும். சோம்பேறித்தனமே எல்லாத் துர்குணத்திற்கும் தாய். இதனால் உடல், ஒழுக்கம் மற்றும் மனரீதியாகவும் கேடுகள் பின்தொடர்ந்து வரும். ஆதலால், தேவனுடைய ஞானத்தின்படியும், நற்குணத்தின்படியும், இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் ஆயிரவருட அரசாட்சியின் ஆயத்தப்படுத்தும் ஆசீர்வாதங்களாக அறிமுகப்படுத்தப்படும்வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மேலான நிலைமையில் உள்ள தேவராஜ்ஜியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் எல்லா ஆசீர்வாதங்களும் மனிதருக்கு சமமாக பிரித்துக் கொடுக்கப்படுவதோடுகூட, ஓய்வுநேரங்கள், அதே உன்னத அரசாங்கத்தால் முறைப்படுத்தப்பட்டு, இயக்கப்படுவதால், மன, ஒழுக்க, உடல் ரீதியான நற்பண்புகள் பரிபூரணத்தை நோக்கி வளரும். தற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நவீன கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவு பெருக்கத்தின் ஆசீர்வாதங்கள், இந்த "ஆயத்தம் பண்ணும் நாளில்" எதார்த்தமாகவே மனிதனுக்கு வந்தடையும்படி அனுமதிக்கப்பட்டிருப்பதால், இது "அறிவின் யுகம்" என்று மனிதர் கூறிக்கொள்ளுமளவிற்கு உள்ளது. ஆனால், இந்த தத்துவ ஞானிகள் ஏமாற்றம் அடையத்தக்கதாக, இந்த நவீன கண்டுபிடிப்புகளை அதிகரிக்கும்படி தேவனால் அனுமதிக்கப்படும். இந்த ஆசீர்வாதங்கள் அதிகரிப்பதினால் யாதொரு ஜாதியாரும் இதுவரை



தோன்றினதுமுதல் உண்டாயிராத உபத்திரவத்தின் காலத்திற்குள் உலகம் ஏற்கனவே பிரவேசித்திருக்கிறது.

தீர்க்கதரிசியாகிய தானியேல் அறிவு பெருக்கத்தையும், உபத்திரவ காலத்தையும் இணைத்து, மேலே நாம் கண்ட வசனங்களில் உரைத்திருக்கிறார். மனுக்குலம் சீர்கேடு அடைந்திருப்பதன் காரணமாக அறிவு உபத்திரவத்திற்கு வழிவகுக்கிறது. அறிவு பெருக்கத்தின் காரணமாக உலகத்திற்கு தொழிலாளிகளை மிச்சப்படுத்தும் இயந்திரங்களும் வசதிகளும் ஏற்பட்டிருக்கிறது. அதோடுகூட, மருத்துவ அறிவின் ஆற்றல் அதிகரித்ததினால் ஆயிரக்கணக்கான உயிர்கள் அதிக காலம் ஜீவிக்கும்படி ஜீவியக்காலத்தை நீட்டிக்கச் செய்கிறார்கள். மனுக்குலத்திற்கு அறிவுக்கண்கள் பிரகாசிக்கப்பட்டுள்ளதால், மனிதக் கொலைகள், போர்கள் விரும்பத்தகாததாகி விட்டது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான மனிதர்கள் எண்ணிக்கை (ஜனத்தொகை) அதிகரித்து, இந்த எண்ணிக்கை வரலாறு காணாதவாறு இன்றைக்கு நாளுக்குநாள் துரிதமாக அதிகரித்து வருகிறது. இவ்வாறாக மனிதரது எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் செய்யும் வேலையின் அவசியமானது குறைந்துகொண்டே வருகிறது. இவ்வாறு அதிகரித்துக்கொண்டே செல்லும் மனுக்குலத்தின் தொழிலானது இயந்திரங்களினால் பறிக்கப்பட்டபோதிலும், அவர்களுடைய தேவைகளும் குறைபாடுகளும் எல்லை காணாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது. இந்த வகுப்பாருக்கு வேலைவாய்ப்பும், வாழ்வாதாரமும் கொடுக்கும் "அறிவு யுகத்தின் "தத்துவ அறிஞர்களின் முயற்சி கடினமான ஒன்றாக உள்ளது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு தங்களுடைய மூளையின் அறிவுத்திறனால் காணமுடியாது என்பதை முடிவில் இந்த தத்துவ அறிஞர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கும்.

வல்லமையையும், அதிகாரத்தையும் தங்கள் பிடியில் வைத்துள்ள ஐஸ்வரியவான்களை சமுதாயமானது தொடர்ந்து ஆட்சி செய்வதினால் நீதியும், மனிதனுக்கு இருக்கவேண்டிய அடிப்படை அறிவும் குருடாக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறிருக்க, தங்களுடைய உரிமைகளைப்பற்றி அதிகரித்துவரும் அறிவினாலும், இதேவிதமான சமுதாயமானது தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் உணர்வோடு

இணைந்துள்ளதாலும், ஏழை வகுப்பாரின் மத்தியில் கோபக்கனல் உருவாகி, இம்மாதிரியான ஆசீர்வாதங்களின் விளைவாக கொஞ்சகாலம் ஒரு பயங்கரமான, இதுவரை சம்பவித்திராததும், யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத மகா உபத்திரவக் காலமாக அது உருவாகும். ஏனெனில், இவ்வகை ஆசீர்வாதங்களை, வழிகாட்டுதலின்றி, கட்டுப்பாடற்ற, விழுந்துபோன நிலைமையிலிருக்கும் மனிதனால் முறையாக பயன்படுத்த முடியாது. ஆயிரவருட அரசாட்சியின் போது, மீட்கப்பட்ட மனிதனது இருதயத்தில், தேவனது பிரமாணங்கள் மீண்டும் எழுதப்படும்வரை, தன் முழு சுதந்தரத்தையும் எவ்வித அபாயமும் தீங்கும் இன்றி உபயோகிக்க மனிதரால் கூடாது.

கலிலேயாக் கடலின் கொந்தளிப்பை அதட்டினவர், அதே அதிகாரத்தோடு, "இரையாதே! அமைதலாயிரு!" என்று மனுக்குலத்தின் மனவேதனையாகிய கொந்தளிக்கும் கடலுக்கு கட்டளையிடும்போது, உபத்திரவகாலம் ஏற்ற வேளையில் முடிவடையும். "சமாதானப்பிரபு" அதிகாரத்தோடு "எழும்பும்போது" மாபெரும் அமைதியே அதன் பலன். அப்பொழுது, கொந்தளித்து, மோதிக்கொள்ளும் இவ்வுலக அமைப்புகள் "யேகோவா அபிஷேகம் பண்ணினவரின்" அதிகாரத்தை அறிந்துகொள்ளும். "கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும்; மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்." இவ்வாறு கிறிஸ்துவின் ஆட்சி ஆரம்பிக்கும்போது "பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்."

அதன்பின்பே தற்கால அறிவின் யுகத்தில் மனிதர்கள் கொண்டுள்ள, பரிணாம அல்லது இயற்கையான வளர்ச்சிக்கு பதிலாக, முழுமனுக்குலத்தின் ஆசீர்வாதத்திற்கான "அவருடைய ஆயத்தநாளில் யேகோவாவின் மின்னல்களின் பிரகாசத்தைக் (சத்திய வெளிச்சம்) கண்டு உணர்வர்." (சங்.77:18) ஆனால், தற்போதோ பரிசுத்தவான்கள் மட்டுமே இச்சத்தியத்தைப் பார்க்க முடியும். பரலோக ஞானத்தைப் பெற்றிருப்பவர்கள் மட்டுமே புரிந்துகொள்ளமுடியும். ஏனெனில், "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்." (சங்.25:14) பொது அறிவு பெருகியிருக்கின்ற வேளையில், தேவனுடைய பிள்ளைகள் கர்த்தரை அறிகிற அறிவிலும், அவரது திட்டத்தை அறிந்து போற்றுவதிலும்,



களியற்றவர்களாக இருக்கக்கூடாது என்று எண்ணி, தேவன் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறபடியால், தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. இவ்வாறு அவருடைய வார்த்தைகளையும், திட்டங்களையும் அறிந்து மதிப்பதினால், தேவ வசனங்களுக்கு விரோதமாக எழும்பும் வீணான தத்துவக் கொள்கைகளுக்கும் அறிவீனமான பாரம்பரியங்களுக்கும் எதிர்த்து நிற்கவும் நாம் தகுதியடைகிறோம்.

மனிதனது சிருஷ்டிப்பைக் குறித்து வேதாகமம் கூறுவதைக் கவனிப்போம். தேவன் மனிதனை பரிபூரணனாகவும் நீதிமானாகவும், அவரது பூமிக்குரிய சாயலாகவும் சிருஷ்டித்தார் என்றும், மனிதன் அநேக உபாயத் தந்திரங்களை உண்டுபண்ணிக்கொண்டதால் தன்னையே கறைபடுத்திக்கொண்டான் என்றும், (ஆதி.1:27; ரோமர் 5:12; பிரசங்கி 7:29), எல்லாரும் பாவிகளானதினால் மனுக்குல சந்ததியாரில் எவரும் எவருக்கும் உதவிசெய்யக்கூடாதுபோயிற்று என்பதையும் ஒருவனாவது "எவ்விதத்தினாலாவது தன் சகோதரனை மீட்டுக்கொள்ளவும் அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்கு கொடுக்கவுங்கூடாதென்றும்" (சங்.49:7,8,15) தேவன் தம் மனதுருக்கத்தினாலும், அன்பினாலும் இதற்கு ஏற்பாடு செய்தார் என்றும், இதன் பொருட்டு தேவகுமாரன் மனிதனாகி மனிதருக்கு மீட்கும்பொருளைக் கொடுத்தாரென்றும், இவ்வாறு தியாக பலி செலுத்தியதற்கு வெகுமதியாகவும், மனிதனை தேவனோடு ஒப்புரவாக்கும் மாபெரும் பணியை நிறைவேற்றி முடிப்பதற்காகவும், அவர் தெய்வீக சுபாவத்துக்கு, உன்னதங்களுக்கு உயர்த்தப்பட்டாரென்றும் அறிகிறோம். ஏற்றவேளையில் மனுக்குலத்தை இயேசு ஆதி பூரண நிலைமைக்கும் அப்பொழுது மனிதன் பெற்றிருந்த அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் திரும்பக் கொண்டுவருவார் என்றும் வேதாகமம் காண்பிக்கிறது. இந்தக் காரியங்கள் அனைத்தும் வேதாகமத்தில் துவக்கமுதல் இறுதிவரைத் தெளிவாகப் போதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேதாகம போதனையானது பரிணாமக்கொள்கைக்கு நேரெதிராக இருக்கிறது. அல்லது வேறுவிதமாக சொல்வோமேயானால், "ஞானமென்று பொய்யாக பேர்பெற்றிருக்கிற கொள்கைகள்," தேவனுடைய வார்த்தைக்கு எதிரானதும், இசைவில்லாததும், முரணானதுமாக இருக்கிறது.

* * *

"கோபத்தின் மேகங்கள் வானிலிருந்து பூமியின்மேல் இன்னும் கட்டப்படுகிறது,
அவள்மேல் (பூமி) தேவ கோபம் பலமாய் நிற்கிறது;
தேவன் அவளை ஆதியில் சிட்சித்தாலும்;
இவள் எழும்போது மகிமையிலும் அழகிலும் சூழ்குவாள்.

"ஆம், பூமியே நீ நிச்சயம் எழுவாய்;
உன்னை அடித்த பிதாவின் கரங்களே உன் காயத்தை ஆற்றி தேற்றும்;
உன்னை அடக்கி ஆண்ட இரக்கமற்ற எதிராளியை அவர் நீதியாய் நியாயந்தீர்த்து;
அவனது கட்டுகளைத் தகர்த்து, அவனது கயிறுகளை தூர எறிகிறார்.

"அதன் பிறகு உனது மண் என்றென்றும் மாறாத செழுமையான காலத்தை அருளும்;
மலைகளும் பள்ளத்தாக்குகளும் கெம்பீரித்துப்பாடும்;
இனி உனது வறண்ட கன்மலைகள் அனைத்தும் புத்துயிர்பெறும்!
இனி அடிமைகளின் நகைப்போ, புறஜாதியாரின் இகழ்ச்சியோ இல்லை.

"வெப்பமான பாலைவனத்தை மணல்கள் – இனி பத்துமடங்கு பலனைத் தரும்
முள்ளும் குறுக்கும் விளைவித்து வந்த நீ புதிய ஏதேனை சூடிக்கொள்வாய்,
வல்லமையுள்ள தூதன் பொற்செங்கோலை உயர்த்தி
ஆர்ப்பரித்து இறங்குவதை இப்பொழுதே நோக்கிப்பார்.

"நீதி விசாரணைக்காக இறங்கிவரும் வல்லமையின் பிரகாசம், – உன்
எட்டுத் திசையையும் எட்டும், ஒவ்வொரு தேசத்தையும் தராசில் வைக்கும்;
யூதா கோத்திரத்து சிங்கத்தின் ஸ்திரமான ஆளுகை
மெத்தனமாய் இருக்கிற உடைபடாத முத்திரைகளை உடைக்கும்."

—ஹேபர் (Haber)

• • • •

## அத்தியாயம் – 10

## ஆவிக்குரிய மற்றும் மானிட சுபாவங்கள் வெவ்வேறானதும் வித்தியாசமானதும்

பொதுவான தவறான புரிந்துகொள்ளுதல் – பூமிக்குரிய அல்லது மனித சுபாவமும் பரத்திற்குரிய அல்லது ஆவிக்குரிய சுபாவமும் – பூமிக்குரிய மகிமையும் பரத்திற்குரிய மகிமையும் – ஆவிக்குரிய ஜீவிகளைக்குறித்த வேதாகம சாட்சியம் – அழிவிற்குரியதும் அழியாமைக்குரியதும் – ஆவிக்குரிய ஜீவிகள் நித்திய ஜீவனை சுதந்தரிக்க முடியுமா? தயை காண்பித்தலில் உள்ள நீதி – யூகத்தின் அடிப்படையில் உள்ள கொள்கையை ஆராய்தல் – பரிபூரணத்தில் பல்வேறுவிதம் – தேவனது மேலான்மை மிக்க உரிமைகள் – மனிதனது நிறைவான தேவைகளுக்காக தேவனுடைய ஏற்பாடுகள்– கிறிஸ்துவின் சரீர அங்கங்களை தேர்ந்தெடுத்தல் – அவர்களது சுபாவம் எவ்விதம் மாறுதலடையும்?

மனிதர்கள் அனைவரும் ஏதேனில் ஆதாம் இழந்துபோன மனித பரிபூரணமாகிய முந்தின சீரை திரும்பக்கொடுத்தலின்மூலம் மீண்டும் அடைவார்கள் என்றும், கிறிஸ்துவின் சபையானது இந்த பொதுவான திட்டத்திற்கு விதிவிலக்காயிருந்து, மனித சாயலிலிருந்து ஆவிக்குரிய சாயலுக்கு மறுரூபம் அடைகிறார்கள் என்ற மனுக்குலத்திற்கான பொதுவான தேவதிட்டத்தை அநேக கிறிஸ்தவர்கள் காணத்தவறுகின்றனர். பொதுவாக கிறிஸ்தவ ஜனங்களே, "ஆவிக்குரிய சுபாவத்தை அடைகிறவர்களேயன்றி வேறொருவரும் இரட்சிக்கப்படுவதில்லை" என்று எண்ணுகிறார்கள். ஆனால், பூமியின் குடும்பங்கள் அனைத்தையும் திரும்பக்கொடுத்தலுக்குட்படுத்தி ஜீவனையும் ஆசீர்வாதங்களையும் வழங்குவதாக சத்தியவேதம் வாக்குறுதி அளிக்கிறது. அதோடு சுவிசேஷ யுகத்தில் தெரிந்துகொள்ளப்படும் திருச்சபையார் மாத்திரமே ஆவிக்குரிய சுபாவத்திற்கு மறுரூபம் அடைவார்கள் என்றும் வாக்களிக்கிறது. மேலும், மற்ற எவருக்கும் இந்நம்பிக்கை உண்டாயிருப்பதற்கு ஆதாரமாக ஒரு வேதவசனமாவது இல்லை.

பெருந்திரளான மனுக்குலம் பாவத்தினால் உண்டான அனைத்து



சீரழிவு பலவீனங்கள், வலி, துன்பம் மற்றும் மரணம், இவைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்கள் வீழ்ச்சிக்கு முன்பிருந்த முழுமையான மனித பரிபூரணத்தை மீண்டும் அடைந்து அனுபவிப்பார்களானால், ஆதாமின் பாவத்திலிருந்து முழுவதும் இரட்சிப்படையும் விஷயத்தில், சுவிசேஷ யுகத்தில் "பரம அழைப்பிற்கென்று," அழைக்கப்பட்டு "தெய்வீக சாயலுக்கு பங்குபெறும்" கிறிஸ்துவின் சபையைப்போலவே அவர்களும், முழு விடுதலை அடைவார்கள்.

ஒரு பரிபூரண மனிதன் எவ்வாறு உண்டாக்கப்படுகிறான் என்பதை முறையாகப் புரிந்துகொள்ளத் தவறுவதும், அழிவிற்குரிய அல்லது அழியாமைக்குரிய நிபந்தனைகள் என்ன என்பதைத் தவறாகப் புரிந்துகொள்ளுதலும், நீதியைப் பற்றிய தவறான கருத்துக்களும் ஒன்றுசேர்ந்து, மேற்கூறிய தவறுகள் ஏற்படக் காரணமாகின்றன. அதுமட்டுமின்றி எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய அநேக வசனங்களின் பொருள் மறைக்கப்பட்டு, திகைப்படைய வழிவகுக்கிறது. ஒரு பரிபூரண மனிதன் ஒருபோதும் பூமியில் இருந்ததில்லை என்பதும், பூமியில் காணப்படுகின்ற மனிதர்கள் ஒரு பகுதி வளர்ச்சியடைந்தவர்களே என்பதும், ஆகவே பரிபூரணத்தை அடைய வேண்டுமானால் அவன் ஆவிக்குரியவனாக மாறவேண்டும் என்பதும், எந்த ஒரு வேத வசனத்தின் ஆதாரமில்லாத, பெரும்பாலானவர்களின் பொதுவான கண்ணோட்டமாய் இருக்கிறது. இந்தப்பார்வையில் "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து" ஆராயும்போது வேதாகமக் கருத்துக்கள் இசைவாகவும் அழகாகவும் தோன்றாமல் குழப்பத்தை உண்டுபண்ணுகிறது.

ஆதாம், இயேசு என்ற இரண்டு பரிபூரண மனிதர்கள் மட்டுமே இப்பூமியில் இருந்ததாக வேதாகமம் நமக்கு தெளிவாய்ப் போதிக்கிறது. ஆதாம் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டான். அதாவது மன வல்லமையாகிய, பகுத்தறிதல், ஞாபக சக்தி, தீர்மானித்தல், மற்றும் சித்தம் இன்னும் ஒழுக்க இயல்புகளில் நீதி, பிரதிபலன் எதிர்பாராது நன்மை செய்தல், அன்பு போன்ற அனைத்திலும் தேவ சாயலிலேயே சிருஷ்டிக்கப்பட்டான். பூமியிலிருந்து உண்டானவன் பூமிக்குரியவனாயிருந்து, ஆவிக்குரிய ஜீவியின் பூமிக்குரிய சாயலாயிருக்கிறான். ஆவிக்குரிய ஜீவியின் குணங்களைப் பெற்றிருந்து,

அளவிலும் தரத்திலும் நிர்ணய எல்லையிலும் வித்தியாசப்பட்டிருந்தான். விழுந்துபோன மனிதனிடத்தில் "வாருங்கள் வழக்காடுவோம்" என்று தேவன் கூறுமளவிற்கு மனிதன் தேவ சாயலில் இருக்கிறான்.

அனைத்தையும் ஆண்டு நடத்தும் யேகோவா தேவன், மனிதன் பூமிக்குரியவற்றை ஆளும்படிக்கு அதிகாரம் அளித்தார். "அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்." (ஆதி 1:26) மோசே கூறும்போது, தேவன் தாம் உண்டுபண்ணின சிருஷ்டியை வெறுமனே சிருஷ்டியாமல் முழுமையானவனாக, அதாவது தம்முடைய சிருஷ்டியை "நல்லது" என்று கண்டார் என்று கூறுமளவிற்கு அவனை பரிபூரணமாக சிருஷ்டித்தார் என்பதை தேவன் உணர்ந்திருந்தார் என்று கூறுகிறார். (ஆதி.1:31) தேவனுடைய பார்வையில் அறிவுள்ள தம்முடைய சிருஷ்டிகளில், பரிபூரணத்திற்குக் குறைவானது எதையும், "அது நல்லது" என்று கூறுவதில்லை.

சிருஷ்டிக்கப்பட்ட பரிபூரண மனிதனைக் குறித்து சங்.8:5–8ல் "நீர் அவனை தேவ தூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உமது கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும், ஆகாயத்து பறவைகளையும் சமுத்திரத்து மச்சங்களையும் கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்." சிலர் வேதமையமானது பரிணாமக் கொள்கையை உறுதிபடுத்துகிறது என்று சொல்கிறார்கள். "தேவ தூதரிலும் சற்று சிறியவன்" என எபிரெயர் 2:7ல் கூறப்பட்டுள்ளதை, சற்று சிறியவன் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, தூதர்களைக்காட்டிலும் அவனுடைய தரத்தில் சிறிதேனும் குறைந்தவனல்ல என்று அவர்கள் புரிந்துகொண்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட விளக்கம், அறிவிற்கேற்றதும், அதிகாரப்பூர்வமானதும் அல்ல. இது சங்கீதம் 8:5லிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள் ஆகும். எபிரெய மற்றும் கிரேக்கச் சொற்களை ஆராய்ந்ததில் எவ்வித மாற்றுக் கருத்திற்கும் இடம் இல்லாது போயிற்று. ஆகவே, தூதர்களைவிட அளவிலும் மேன்மையிலும் சற்று



தாழ்ந்த நிலையில் (in degree) சிருஷ்டிக்கப்பட்டான் என்ற கருத்து தெளிவாக உரைக்கப்பட்டுள்ளது.

மனிதன் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்ட ஆதி நிலையை தாவீது தன் சங்கீதத்தில் எழுதியிருக்கிறார். மனிதனை தமது சொந்த சாயலாகவும், இப்பூமிக்கு இராஜாவாகவும் முன்பு உருவாக்கின திட்டத்தை தேவன் ஒருபோதும் கைவிட்டுவிடவில்லை. அவனை நினைவுகூர்ந்து மீட்டு முன்பு இருந்த நிலைமைக்கே சீர்பொருந்தச் செய்வதை தாவீது தீர்க்கதரிசனமாக உரைத்திருக்கிறார். இதே உண்மையை, பவுல் அப்போஸ்தலன் எபிரெயர் 2:7–ல், தேவன் தம் நோக்கத்தை கைவிடவில்லை என்றும், மனிதன் பரிபூரணனாக, மேன்மையானவனாக, பூமியின் இராஜாவாக மீண்டும் நினைக்கப்பட்டு முந்தினசீருக்குக் கொண்டுவரப்படுதலை நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறார். மேலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட திரும்பக்கொடுத்தலை இன்னும் நாம் காணமுடியாவிட்டாலும், அது முழுமையடையும்படி தேவன் அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையை எடுக்கிறதைக் காண்கிறோம் என்றுரைக்கிறார். இயேசு பரிபூரண மனிதன் என்ற இம்மகிமையையும், கனத்தையும், கிரீடமாக அணிந்ததாக நாம் காண்கிறோம். இவர் சரிநிகரான மீட்கும்பொருளாக அல்லது பதிலீடாக தேவ கிருபையினால் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்து, இவ்வாறு இழந்துபோன அனைத்தையும் திரும்பக்கொடுப்பதற்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறார். உயர்ந்த மொழிபெயர்ப்பாகிய ரோதர்காமின் பகுதியை கீழேக் கொடுத்துள்ளோம்.

"மனிதனை நீர் நினைவுகூர அவன் எம்மாத்திரம்;
அல்லது மனித குமாரனை நீர் சந்திக்க அவன் எம்மாத்திரம் ?
நீர் அவனை தூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவனாக்கினீர்;
மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டினீர்,
அவனை உமது கரத்தின் கிரியைகளுக்கு மேலாக நியமித்தீர்."

தூதரிலும் சற்று சிறியவன் என்றால் பூரணத்துவத்தில் குறைவுள்ளவன் என்று பொருளல்ல. படைக்கப்பட்ட சிருஷ்டி பூரணமாய் இருந்தபோதிலும் மற்றொரு சிருஷ்டியைக் காட்டிலும் தாழ்ந்த ஸ்தானத்தில் இருக்கலாம். உதாரணமாக, பூரணமான ஒரு குதிரை பூரணமான ஒரு மனிதனைக் காட்டிலும் தாழ்வானது. உயிருள்ளதும், உயிரற்றதுமான

பல்வேறு சிருஷ்டி வகைகள் அதன் நிலையின்படி பிரிக்கப்படும். இதனை விளக்கிக் காண்பிக்க கீழ்க்கண்ட விபரத்தை அளிக்கிறோம்:

| பரத்திற்குரிய ஆவிக்குரிய ஜீவிகள் | பூமிக்குரிய மாம்ச ஜீவிகள் | தாவர வர்க்கங்கள் | கனிம வர்க்கங்கள் |
|---|---|---|---|
| தெய்வீக சுபாவம் | மனித சுபாவம் | மரங்கள் | பொன் அல்லது தங்கம் |
| | மிருக இனம் | செடிகள் | வெள்ளி |
| | பறவை இன வகைகள் | புல், பூண்டு வகைகள் | வெண்கலம் |
| தேவ தூதரின் சுபாவம் | மீன் | பாசி வகைகள் | இரும்பு |

மேற்கூறிய கனிம வர்க்கங்கள் அனைத்தும் தூய்மையாக இருந்தபோதிலும் தங்கம் (பொன்) மட்டுமே எல்லாவற்றிலும் முதல் தரம் வாய்ந்தது. செடி வகை ஒவ்வொன்றும் பரிபூரண நிலையில் இருந்தபோதிலும் அவைகள் சுபாவத்திலும் தரத்திலும் வேறுபடும். அவ்வாறே மிருகங்களிலும் அவைகள் பூரண நிலைக்கு கொண்டுவரப்பட்டபோதிலும், ஒவ்வொன்றிற்கும் இடையே வித்தியாசங்கள் தன்மையிலும் குணத்திலும் உண்டு. ஏனென்றால், ஒரு ஜீவியை பூரணப்படுத்துவதன் மூலம் அதின் அடிப்படை சுபாவம் மாறுவதில்லை. *ஆவிக்குரிய ஜீவிகளிலும் அவர்கள் பரிபூரணர்களாய் இருந்தபோதிலும், ஒவ்வொரு ஜீவிக்கும் இடையே ஒற்றுமையான அம்சங்கள் இருந்தபோதிலும், உயர்ந்த தாழ்ந்த சுபாவங்கள் உண்டு. தெய்வீக சுபாவமே ஆவிக்குரிய சுபாவங்களிலேயே எல்லாவற்றிற்கும் மேலானதுமாய் மகா உன்னதமாயுமிருக்கிறது. கிறிஸ்து தம் உயிர்த்தெழுதலில் பரிபூரண தூதர் நிலைமை மற்றும் தூதர் சுபாவத்திற்கும் மேலான உன்னதமான தெய்வீக

*சுபாவம் (Nature) என்ற சொல்லானது சில சுபாவங்களின் ஒற்றுமை வேற்றுமைகளை உள்ளடக்கிய சொல்லாகும். இதற்கு உதாரணமாக, ஒரு நாய் சிறந்தகொண்ட சுபாவமுடையது என்றோ, குதிரை சாந்த சுபாவமுடையது அல்லது தீய சுபாவமுடையது என்றோ சொல்லப்படுவதாகும். ஆனால், இவ்வாறு வார்த்தையை உபயோகிக்கும்போது, அதன் இயற்கைப் பண்புகளை மற்றவைகளோடு ஒப்பிட்டு விளக்குகிறதேயன்றி, தனிப்பட்ட சுபாவத்தை அல்லது பண்புகளை மாத்திரம் குறிக்கவில்லை.



சுபாவத்தைப் பெற்றுக்கொண்டார். (எபி.1:3-5)

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்ததும், ஒன்றும் மற்றொன்றைவிட வேறுபட்டதாயும் இருக்கிறதை கருத்தாய்க் கவனித்து அவைகளை பின்வருமாறு ஒப்பிட்டுப் பார்க்கலாம். உலோக வகைகளில் முதல் தரமான தங்கம் (பொன்) தாவர வகையின் கடைசி தரத்தைக் காட்டிலும் சற்று தாழ்ந்தது. ஏனென்றால், தாவர வகைகளுக்கு ஜீவன் உண்டு. அவ்வாறே தாவர வகைகளில் முதன்மையானது மாம்ச ஜீவிகளில் கீழானதைக் காட்டிலும் சற்று கீழ்ப்பட்டது. ஏனென்றால், மாம்ச ஜீவிகள் அனைத்திற்குமே தாம் ஜீவித்திருப்பதைப் பற்றிய உணர்வு உண்டு. அவ்விதமே மனிதனும் பூமிக்குரிய ஜீவிகளிலேயே முதன்மையானவனாய் இருந்தாலும், "தேவ தூதர்களைக்காட்டிலும் சற்று கீழானவன்." ஏனெனில், தேவதூதர்கள் ஆவிக்குரிய அல்லது பரத்திற்குரிய ஜீவிகளாவர்.

தேவன் தமது சாயலாக சிருஷ்டித்த பரிபூரணமான மனிதனுக்கும், தற்போது நாம் காண்கின்ற பாவத்தினால் இழிவாகி பலவீனமாகிப்போன மனிதனுக்கும் இடையே உள்ள வித்தியாசம் அதிசயமானது. பாவம் அவனது பண்புகளையும், குணநலன்களையும் படிப்படியாக அரித்து உருமாற்றிவிட்டது. ஆதாமிற்கு பின்வந்த அநேக சந்ததியார்கள் அறியாமையினாலும் வேசித்தனம், துன்மார்க்கம் ஆகியவைகளினால் கறைப்படிந்து அழிவிற்குள்ளாயினர். இதனால், மனுக்குலத்தின் பெரும்பாலானோர்க்கு தேவசாயல் முற்றிலும் அற்றுப்போன நிலையாயிற்று. ஒழுக்க மற்றும் அறிவு ரீதியான தன்மைகள் குறைந்து, மிருக சுபாவம் தலையெடுத்து, வளர்ச்சியுற்றது. இது மேன்மையான குணங்களைக்கொண்டு சமச்சீராக்கக்கூடாமற்போயிற்று. ஆதாம் மரணதண்டனைத் தீர்ப்பிற்குட்பட்டபின் சுமார் 930 வருடங்கள் ஜீவித்தான். இதே தண்டனையின்கீழ் அவன் சந்ததியாராகிய தற்கால மனிதர்களோ சகலவித மருத்துவ விஞ்ஞான முறைகளின் உதவியுடன், சராசரி 30 வருடங்களே ஜீவிக்கின்றனர். சரீர பலம் எவ்வளவு தூரம் தேய்மானம் அடைந்திருக்கிறது பாருங்கள். பாவத்தினாலும், அதனால் உண்டான தண்டனையினாலும் கறைப்படிந்து தேய்மானம் அடைந்து, அதன் பலனாகிய மரணம் அவனுக்குள் ஆண்டுகொண்டிருந்தபோதிலும்,

கிறிஸ்துவின் 1000 ஆண்டு அரசாட்சியின்போது மனிதன் தன் முந்தைய பரிபூரண சிந்தை, பரிபூரண சரீரம், மகிமை, கனம், ஆளுகை ஆகியவைகளைப் பெற்று மறுசீர் அடைவான். ஆதாமின் மீறுதலினால் இழந்துபோன அனைத்தும் கிறிஸ்துவின் மூலமாக திரும்பக் கொடுக்கப்படும். (ரோமர் 5:18, 19) மனிதன் பூமிக்குரிய பாதீசை இழந்தானே தவிர, பரத்திற்குரியதை அல்ல. மரண தண்டனை அளிக்கப்பட்டதன் நிமித்தமாக அவன் மாம்ச ஜீவனையே இழந்தான், ஆவிக்குரியதை அல்ல. இழந்துபோன அனைத்தையும் அவரது மீட்பர் விலைக்கிரயம் கொடுத்து மீட்டிருக்கிறார். இதைக்குறித்து அவர் கூறுகையில், "மனுஷகுமாரன் இழந்துபோனதைத் தேடவும் மீட்கவுமே வந்தார்" என்று அறிவித்தார். (லூக்கா 19:10)

மேற்கண்ட ஆதாரங்களோடே கூட பரிபூரண மனிதன் ஆவிக்குரிய ஜீவியல்ல என்பதற்கு இன்னும் ஆதாரம் உண்டு. நமது கர்த்தர் தம் ஆவிக்குரிய மகிமையைவிட்டு மனிதனாக வருவதற்கு முன்பாக, "தேவனுடைய ரூபமாய்," ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார் என்று நாம் வாசிக்கிறோம். ஆனால், மனுக்குலத்திற்கென்று மீட்கும்பொருளாக ஆக வேண்டுமானால் மனித சாயலை எடுக்க வேண்டும். ஏனெனில், விழுந்துபோன பாவ மனிதனது சாயலை மரணத்தில் தரிக்க வேண்டியது அவசியமாயிற்று. ஆதலால், ஆவிக்குரிய ஜீவியின் சுபாவம் மாற்றப்பட வேண்டியதாயிற்று. அவரது ஆவிக்குரிய சாயலுக்கு அடுத்தபடியாக கீழ்மட்டத்திலுள்ள தேவ தூதரது சாயலை இவர் எடுக்காமல், இரண்டு படிநிலைகள் கீழாக உள்ள மனித சாயலைத் தரித்துக்கொண்டார் என்று பவுல் கூறுகிறார். அவர் மனிதனானார்; "அவர் மாம்சமானார்." (எபி.2:16; பிலி.2:7, 8; யோவா.1:14)

தேவதூதரின் சாயல் ஒன்று மட்டுமே ஆவிக்குரிய ஜீவியின் சாயலாக இங்கு போதிக்காததை கவனிக்கவும். அதோடுகூட, நமது கர்த்தர் மாம்ச சாயல் எடுக்கும் முன்பாக இருந்த ஆவிக்குரிய நிலையைப் பார்க்கிலும் தூதரின் நிலை கீழானது என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு மகிமையில் வீற்றிருக்கும் இப்போதைய ஸ்தானம், அவர் மனிதனாவதற்கு முன் இருந்ததைக் காட்டிலும் மேலானது. ஏனெனில், மனிதனுக்கு ஈடுபலி செலுத்துவதற்காக மனப்பூர்வமாகக்



கீழ்ப்படிந்ததால், "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்." (பிலி.2:8,9) தற்போது ஆவிக்குரிய ஜீவிகளிலேயே மிக உயர்ந்த ஸ்தானத்தில் பிதாவாகிய தேவன் இருக்கக்கூடிய தெய்வீக சுபாவத்திலே இருக்கிறார்.

தெய்வீக சுபாவம், தேவதூதரின் சுபாவம், மனித சுபாவம் ஆகிய இவைகள் வெவ்வேறு வித்தியாசமான சுபாவங்களையும் தன்மைகளையும் கொண்டவை என்பதற்கு ஆதாரங்களை நாம் கண்டறிவதோடு மட்டுமல்லாமல், ஒரு பரிபூரண மனித நிலையானது ஒரு தேவதூதன் நிலைக்கு சமமானது அல்ல என்றும் அறிகிறோம். பூரண தேவதூதனுக்கு மேலான நிலையை உடையவர்கள் யேகோவா தேவனின் சுபாவமாகிய தெய்வீக சுபாவத்திலிருக்கிறார்கள். இயேசுவோ, தேவதூதனுடைய சுபாவத்தை எடுக்காமல் பரிபூரண மனித சுபாவத்தையே எடுத்தார். நாம் தற்போது பெற்றிருக்கிற அபூரண மனித சுபாவத்தையுடையவராக அல்ல, பரிபூரண மனித சுபாவத்தில் வந்தார். விழுந்துபோன நிலைமையிலோ அல்லது சற்று குறைய மரித்த நிலைமையில் உள்ள தற்போதைய மனித நிலைமையில் அவர் வராமல் பரிபூரணத்துவத்தின் முழு வீரியம் பொருந்தின மனிதனாக வந்தார்.

மேலும், இயேசு பரிபூரண மனிதனாக இருந்திருக்காவிடில், நியாயப்பிரமாண விதிகளை முழுமையாக கடைப்பிடிக்க முடியாமற்போயிருக்கும். பரிபூரண மனிதனின் ஆற்றலினாலேயே நியாயப்பிரமாணத்தின் முழு அளவையும் நிறைவேற்ற முடியும். அவர் பரிபூரண மனிதனாக இருந்திருக்கவேண்டும். இல்லாவிடில் பூரண மனிதனாகிய ஆதாம் இழந்த ஜீவனுக்கு அவரால் மீட்கும்பொருளை (சரிநிகரான விலையை) கொடுத்திருக்கமுடியாது. (1 தீமோ.2:6) "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." (1 கொரி.15:21) அவர் பரிபூரணத்திற்கு மிகக் குறைந்த அளவேனும் குறைவுபட்டிருந்தாலும் மரணதண்டனைக்கு உட்பட்டவராயிருப்பார். ஆதலால், அவரால் தேவனால் அங்கீகரிக்கத்தக்க பலியை செலுத்தக்கூடாமல் போயிருக்கும். மேலும், தேவனது பிரமாணங்களை பூரணமாக நிறைவேற்றக்கூடாமல் போயிருக்கும். ஒரு பரிபூரண மனிதனாகிய ஆதாம் சோதனைக்குட்படுத்தப்பட்டு, அதில் தவறி,

மரணதண்டனை பெற்றான். ஆதலால், வேறொரு பூரண மனிதனால் மட்டுமே மீட்பராக, சரிநிகர் சமான விலையை கொடுக்க முடியும்.

வேதாகமம் கூறுகிறபடி மாம்சத்தில் வந்த இயேசு ஒரு பரிபூரண மனிதனாக இருந்தாரெனில், அந்த பரிபூரண மனிதன் தேவதூதனாயிராமல் மனிதப்பிறவியாக, மாம்சத்திற்குரியவராக, தேவதூதர்களுக்கு சற்று கீழான நிலைமையைப் பெற்றிருந்தார் என்று நிரூபிக்கிறதா என்ற கேள்வி நமக்கு வருகிறது. ஆம், இது அறிவுப்பூர்வமான, தவறில்லாத தீர்மானமேயாகும். அதோடுகூட தேவ ஆவியினாலே ஏவப்பட்டு எழுதப்பட்ட சங்கீதக்காரன் கூற்றையே (சங்கீதம் 8:5–8) பவுல் எபிரெயர் 2:7–9ல் குறிப்பிடுகிறார்.

இயேசு மாம்ச ஜீவியும் ஆவிக்குரிய ஜீவியுமாகிய இரு சுபாவங்கள் கலந்து உண்டானவரல்ல. அவ்வாறு இரு சுபாவங்களும் கலந்து உண்டாயிருப்பாரெனில், இரண்டும் ஒன்றாகிலும் பூரணத்தன்மை உடையதாயிராமல் கலப்பு இனமாக தெய்வீகத் திட்டங்களுக்கு அருவருப்பானதாக இருந்திருக்கும். இயேசு மாம்சத்தில் இருந்தபோது ஒரு பரிபூரண மனித ஜீவியாகவே இருந்தார். மாம்சத்தில் வருவதற்கு முன்பாக அவர் பூரண ஆவிக்குரிய ஜீவியாயிருந்தார். உயிர்த்தெழுந்தபின்பு ஆவிக்குரிய உயர்நிலை ஜீவியாக அல்லது தெய்வீக சுபாவத்தில் இருக்கிறார். அவர் தமது 30ம் வயதில் மரண பரியந்தம் தம்மைத் தாமே ஒப்புக்கொடுக்கும் அடையாளமாகிய ஞானஸ்நானம் எடுக்கும் வரை அவர் (ஞானஸ்நானம் பெறுவதற்கு தகுதியான வயதாக நியாயப்பிரமாணம் வரையறுக்கிறது), அச்சாரமாக தெய்வீக சாயலை சுதந்தரித்துக்கொள்ளவில்லை. (மத்.3:16, 17) தெய்வீக சுபாவத்தை பெறுவதற்கான வாக்குறுதியையாவது பெறுவதற்கு முன்பாக, மனித சுபாவத்தை மரணத்திற்குள்ளாக ஒப்புக்கொடுக்கவேண்டும். அவர் தமது அர்ப்பணத்தை உண்மையாக நிறைவேற்றும் வரை, தமது மானிட சுபாவத்தை மரணபரியந்தம் பலியிடும் வரை, கர்த்தராகிய இயேசு தெய்வீக சுபாவத்தின் முழு பங்குதாரராக ஆகவில்லை. மனிதனான பிறகு மரணபரியந்தம் கீழ்ப்படிதலுள்ளவரானார். ஆதலால், தேவன் அவரை தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தினார். (பிலி.2:8, 9) இந்த வசனம் உண்மையாய் இருக்குமானால் அவர் தமது மனித சுபாவத்தை மரணத்தில்



பலியாக்கும் வரையில் தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்படவில்லை.

இவ்வாறாக நாம் பார்த்தவைகளிலிருந்து இயேசுவுக்குள், கலப்பு சுபாவங்கள் இருக்கவில்லை என்று அறிகிறோம். ஆனால், இரண்டுமுறை சுபாவ மாறுதலை அனுபவித்தார். முதலாவது ஆவிக்குரிய சுபாவத்திலிருந்து மனித சுபாவத்தை அடைந்தது. அடுத்து உயிர்த்தெழுந்த நிலையில் மனித சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டது ஆகியவைகளாகும். இந்த இரண்டு கட்டங்களிலும் மற்ற சுபாவத்தைப் பெறும்பொருட்டு முந்தைய சுபாவத்தை விட்டுவிட்டார்.

பரிபூரண மனிதத் தன்மைக்கு மாபெரும் எடுத்துக்காட்டாக இருந்த இயேசு, உலகின் மீட்புக்காக தம்மையே பலி கொடுக்கும்வரை குறைநிறைவற்றவராக பரிபூரண நிலையில் காணப்பட்டார். பூரண மனித நிலையிலிருந்து விழுந்துபோன ஆதாம் அதே பரிபூரண நிலைக்கு மீட்கப்பட வேண்டும். மனிதனை மீட்கும் பொருளாகும்படி நமது கர்த்தர் மனிதன் இழந்துபோனதற்கு ஈடாக சரிநிகரான விலையை அளித்தார். ஆதலால், முழுமனுக்குலமும் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமும், அவரது நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவதன் மூலமாகவும், ஆவிக்குரிய சுபாவத்தையல்ல, இழந்துபோன மகிமை நிறைந்த பரிபூரண மனித சுபாவத்தையே திரும்பப் பெற்றுக்கொள்வர்.

அந்த பரிபூரண மனிதனின் பூரண வல்லமையும் மனத்திறனும் பல புதிய விஷயங்களில், வகைவகையான நோக்கங்களுக்காக எல்லையற்ற காலங்களுக்கு பிரயோகிக்கப்படுவதுடன், அறிவும் ஆற்றலும் பரந்து விரிந்து பெருகும். இவ்வாறு அறிவும் வல்லமையும் பெருகினாலும், அவனது இயல்பான மனித சுபாவம் மாறுவதில்லை. அவனது பரிபூரணத்தை அதிகரிக்கவும் முடியாது. பரிபூரண மனிதனது வல்லமையும் திறனும் முழுமையாக பயன்படுத்தப்படுவதே இதற்கு காரணம். அறிவும் ஆற்றலும் அதிகரிப்பது மனிதனுக்கு நித்தியத்திற்கும் சிறப்பான ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். மனிதன் ஏற்கனவே பெற்றிருந்த மனித சுபாவத்தின் முழு ஆற்றலையும் பிரயோகிப்பதினால் வேறு புதிதான ஜீவியாகுவதில்லை, மாறாக மனிதனாகவே இருக்கிறான். மனித சுபாவத்திற்கென்று நியமிக்கப்பட்ட ஒரு பரந்த எல்லையைத்தாண்டி அவனால் செல்லமுடியாது. அவ்வாறு செல்வதற்கு விரும்பவும் மாட்டான். ஏனெனில், அவனது

விருப்பங்கள் அவன் பெற்றிருந்த ஆற்றலுக்கு உட்பட்டதாகவே இருக்கும்.

இயேசு இப்பூமியில் மனிதனாக இருந்தபோது பரிபூரண மனித சுபாவத்திற்கு உதாரணமாக இருந்தார். இப்பரிபூரண சுபாவத்தையே மனுக்குலத்தார் மீண்டும் அடையப்போகின்றனர். அவ்வாறே அவர் உயிர்த்தெழுதலிலிருந்து மகிமையின் தெய்வீக சுபாவத்திற்கு உதாரணமாக இருப்பதினால், ஜெயங்கொள்ளுகிற திருச்சபை உயிர்த்தெழுதலில் பங்குபெறுகிற தெய்வீக சுபாவத்திற்கு உதாரணமாயிருக்கிறார்.

தற்கால சுவிசேஷயுகம், திருச்சபை வகுப்பார் மனித சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு மாறுவதற்கென்று முக்கியமாக முன்குறிக்கப்பட்டிருப்பதாலும், "இச்சிறுமந்தைக்கு" அறிவுரைகளாகவே அப்போஸ்தலர்களின் நிருபங்கள் எழுதப்பட்டிருக்கின்றபடியினாலும், தேவ திட்டங்கள் இந்த தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரோடு முடிவுபெறும் என்று நாம் கருதிவிடக்கூடாது. மற்றொரு வகையில் சிந்தித்துப்பார்க்கும்போது, ஆவிக்குரிய சரீரம், தெய்வீக சுபாவம் போன்ற விசேஷமான வாக்குத்தத்தங்கள் மனுக்குலம் முழுமைக்கும் தேவன் வடிவமைத்திருக்கிறார் என்று தீர்மானிப்பதும் தவறு. மனுக்குலத்திற்கு தேவன் ஏற்பாடு செய்திருக்கின்ற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களைக் காட்டிலும், திருச்சபையாருக்கு மட்டுமே "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்" அளிக்கப்பட்டுள்ளன. சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து ஆராயும்பொழுது "சிறுமந்தை" வகுப்பாருக்கு பரிபூரண தெய்வீக சுபாவமும், மீட்படைந்த உலக ஜனங்களுக்கு பரிபூரண மனித சுபாவமும் ஆகிய இரண்டு வெவ்வேறான காரியங்களைப்பற்றி வேதாகமம் தெளிவாகக் கூறுகிறதைப் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆவிக்குரிய ஜீவிகள் என்றால் என்ன? அவர்களுடைய வல்லமை என்ன? அவர்கள் எந்த சட்டங்களின்படி ஆளப்பட்டு வருகிறார்கள்? என்ற காரியங்களை நாம் இப்பொழுது விரிவாக ஆராய்வோம். அநேகர் ஆவிக்குரிய ஜீவிகளின் சுபாவத்தை அறியாதபடியினால், அவைகள் கட்டுக்கதை என்றும் அவைகளைப்பற்றிய அறிவு மூட நம்பிக்கையே என்றும் எண்ணுகின்றனர். இந்த காரியத்தைக் குறித்து அநேக மூட



நம்பிக்கைகள் நிலவுகிறது. ஆனால், பவுல் அப்போஸ்தலனோ இப்படிப்பட்ட எண்ணம் உடையவரல்ல. மேன்மையான ஆவிக்குரிய சுபாவத்தினைக் குறித்து மனிதன் புரிந்துகொள்வது தன் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட காரியம் என்று பவுல் கூறினாலும் (1 கொரி.2:14), மூடநம்பிக்கைகள் அல்லது கட்டுக்கதைகளை களைந்துபோட எண்ணினவராய், ஜென்ம சரீரமுண்டு, ஆவிக்குரிய சரீரமுண்டு என்றும், பூமிக்குரிய மேனியுமுண்டு வானத்திற்குரிய மேனியுமுண்டு என்றும், வானத்திற்குரிய மேனிகளின் மகிமை வேறு, பூமிக்குரிய மேனிகளின் மகிமை வேறு என்றும் தெளிவாய்ச் சொல்கிறார். நாம் ஏற்கனவே பார்த்தபடி ஆதாம், தான் செய்த முதலாவது பாவத்தினால் இழந்துபோன பூமிக்குரிய மகிமையை ஆயிரவருட அரசாட்சியின்போது கர்த்தராகிய இயேசு தம் மணவாட்டியோடு (தலையும் சரீரமுமாகிய மகிமையடைந்த கிறிஸ்து) சேர்ந்து, உலக ஜனங்களுக்கு திரும்பக்கொடுப்பார். வானத்திற்குரிய மேனியின் மகிமை பரிசுத்த ஆவியினால் வேத வசனத்தின் மூலம் விசுவாசக் கண்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறதே அல்லாமல், வெளியரங்கமாய் அனைவரும் காணமுடியாது. இந்த மகிமைகள் வெவ்வேறானதும் வித்தியாசமுமானவைகளுமாம். (1 கொரி.15:38–49) பூமிக்குரிய ஜென்ம சரீரத்தின் பரிபூரண மகிமை என்னவென்று முழுமையாக உணரமுடியாவிட்டாலும், நாம் அதே சரீரத்தைப் பெற்றிருப்பதினால் சிறிதளவு அறிந்திருக்கிறோம். அது மாம்சம், இரத்தம் மற்றும் எலும்புகளால் ஆனது. ஏனெனில் "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்." ஆகவே, இரண்டு வேறுபட்ட சரீர வகைகள் உள்ளது தெளிவாகிறது. ஆவிக்குரிய சரீரம், மாம்ச சரீரத்திற்கு வேறுபட்டதாகையால் அச்சரீரம் இரத்தம், எலும்புகள் மற்றும் மாம்சத்தால் ஆனதல்ல. "ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்." அந்த வானத்திற்குரிய அல்லது ஆவிக்குரிய சரீரம் எதனால் ஆனது என்று நாம் அறியோம். ஏனெனில், "இனி எவ்விதமாய் இருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவருக்கு (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கு) ஒப்பாயிருப்போம்." (யோவான் 3:6; 1 யோவான் 3:2)

தேவகுமாரனைத் தவிர வேறொருவரும், அது ஆவிக்குரிய சுபாவமாயிருந்தாலும் பூமிக்குரிய சுபாவமாயிருந்தாலும் ஒரு சுபாவத்திலிருந்து மற்றொரு சுபாவத்திற்கு மாறினதாக நிரூபணம் ஏதும்

இல்லை. தேவன் ஒரு விசேஷமான நோக்கத்தோடே தேவதூதர்களுக்கு இந்த அசாதாரணமான கடமைகளைத் தந்தார். தேவன் தேவதூதர்களைச் சிருஷ்டித்தபோது அவர்கள் என்றென்றைக்கும் தேவதூதர்களாகவே இருக்கவேண்டும் என்றும் தீர்மானித்திருந்தார். அவ்வாறே மனிதனும் பரிபூரண மனிதனாகவே என்றென்றைக்கும் ஜீவிக்க வேண்டும் என்பதே தேவசித்தமாயிருக்கிறது. இதற்கு மாறாக, தேவசித்தம் இருந்ததாக சத்திய வேதாகமத்தில் குறிப்புகள் எங்கும் இல்லை. உயிரற்ற சிருஷ்டி மனதிற்கு ரம்மியமாயும் எண்ணமுடியாததாயும் அமைக்கப்பட்டிருப்பதைப்போல், உயிருள்ள சிந்திக்கும் பரிபூரண சிருஷ்டிகளிலும் பல்வேறு விதமான வகைகள் உள்ளன. ஒவ்வொரு சிருஷ்டிப்பும் அதன் பரிபூரணத்தில் மகிமையுள்ளவைகளே. ஆனால், பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்: "வானத்திற்குரிய ஜீவிகளின் மகிமை வேறு, பூமிக்குரிய ஜீவிகளின் மகிமை வேறு."

கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்த பிறகு உள்ள சம்பவங்களையும், ஆவிக்குரிய ஜீவிகளாகிய தேவதூதர்களைக் குறித்தும், வேதத்தில் எழுதப்பட்டிருக்கிற சத்தியங்களைப் பகுத்தாராய்ந்து, "இவ்வாறு ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திப் பார்த்தால்" (1கொரி.2:13) ஆவிக்குரிய ஜீவிகளைப் பற்றிய சில பொதுவான தகவல்களை அறிந்துகொள்ளலாம். முதலாவதாக தேவதூதர்கள், கண்களால் பார்க்கமுடியாதவர்களாயினும், அநேகமுறை பிரசன்னமாக முடியும். "கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்."(சங்.34:7) "இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களின் நிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாய் இருக்கிறார்களல்லவா?"(எபி.1:14) அவர்கள் பணிவிடை செய்தது கண்ணால் காணும்படியாகவா அல்லது காணமுடியாதபடியா? நிச்சயமாக காணமுடியாதபடி. எலிசாவை அசீரியர்கள் சூழ்ந்துகொண்ட நேரத்தில், எலிசாவின் ஊழியக்காரன் பயந்து நடுங்கினான். எலிசா கர்த்தரிடத்தில் ஜெபித்தபொழுது ஊழியக்காரனின் கண்கள் திறக்கப்பட்டன. அப்பொழுது மலைகளின்மேல் அக்கினிமயமான இரதங்களும் குதிரை வீரர்களும் நிறைந்திருக்கக்கண்டார். பிலேயாமுக்கு கண் திறக்கப்படாத நிலையில் தேவதூதனைக் காணமுடியவில்லை என்றாலும், கழுதையின் கண்கள்



திறக்கப்பட்டதினால் தூதனைக் கண்டுகொண்டது.

இரண்டாவதாக, தேவதூதர்கள் மனித சரீரத்தை எடுத்துக்கொண்டு மனிதர்களைப்போல தோன்றலாம். ஆபிரகாமுக்கு கர்த்தரும், அவரது இரண்டு தூதர்களும் அவ்வாறே தரிசனமாக, அவர் ஏற்பாடு செய்திருந்த போஜனத்தை சாப்பிட்டனர். துவக்கத்தில் அவர்கள் மூவரும் மனிதர்கள் என்று நினைத்த ஆபிரகாம், அவர்கள் புறப்படும் வேளையில்தான், அவர்களில் ஒருவர் கர்த்தர் என்பதையும், மற்ற இரண்டுபேரும் தூதர்கள் என்றும் கண்டுகொண்டான். அந்த இரண்டு தூதர்களும், பின்னர் சோதோமுக்குப் புறப்பட்டுப்போய் லோத்தை மீட்டனர். (ஆதியாகமம் 18:1,2) கிதியோனிடத்தில் ஒரு தேவதூதன் மனித உருவில் தோன்றி பின்பு தன்னை யார் என்று தெரியப்படுத்தினார். சிம்சோனின் பெற்றோரிடத்திலும், தரிசனமான தூதனை பலிபீடத்திலிருந்து அக்கினி ஜுவாலையில் வானத்திற்கு ஏறிப்போகும் வரையிலும் அவர்கள் அவரை மனிதன் என்றே நினைத்தனர். (நியாயாதிபதிகள் 6:11–22; 13:20)

மூன்றாவதாக ஆவிக்குரிய ஜீவிகள் இயல்பாகவே மகிமை நிறைந்தவர்கள். அவர்கள் மகிமையும், பிரகாசமுமானவர்கள் என்று வேதாகமத்தில் அநேக இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. இயேசு உயிர்தெழுந்த சமயம் கல்லறையின் வாயிலிருந்து கல்லை புரட்டித்தள்ளிய தேவதூதனின் முகம் "மின்னலைப்போல" இருந்தது. தானியேல் ஆவிக்குரிய சரீரத்தைக்கண்ட ஒரு இமைப்பொழுதைக் குறித்து விவரிக்கிறார். அவருடைய கண்கள் அக்கினி தீபங்களைப்போலவும், அவருடைய முகம் மின்னலைப்போலவும், அவருடைய கரங்களும் பாதங்களும் பளபளப்பாக்கப்பட்ட வெண்கலம் போலவும், அவரிடத்திலிருந்து வந்த வார்த்தை திரளான ஜனங்கள் சத்தமிடுவதுபோலவும் இருந்தன. அவருக்கு முன்பாக தானியேல் செத்தவனைப்போல விழுந்தார். (தானியேல் 10:6, 10, 15, 17) இவ்வாறே தர்சு பட்டணத்தைச் சேர்ந்த சவுலும் மதியான வேளையின் சூரிய வெளிச்சத்தைப் பார்க்கிலும் அதிகமதிகமாய் பிரகாசித்த கிறிஸ்துவின் மகிமைபொருந்திய சரீரத்தைப் பார்த்தார். பார்த்தவுடன் பார்வையை இழந்தவனாக தரையிலே விழுந்தார்.

ஆவிக்குரிய ஜீவிகள் உண்மையாகவே மகிமை நிறைந்தவர்கள்

என்பதை இதுவரையில் கண்டோம். ஆனால், அவர்களைக் காணும்படி மனிதரின் கண்கள் திறக்கப்பட்டால்தான் அல்லது அவர்கள் மனிதரைப்போல் மாம்சத்தில் வெளிப்பட்டால்தான் அந்த ஜீவிகளை மனிதரால் காண முடியும். அவர்கள் மனிதக் கண்களுக்கு காணப்படமாட்டார்கள். மேற்கண்ட உதாரணங்களை கவனமாக ஆராயும்போது இக்கருத்துக்கள் இன்னும் அதிகமாக உறுதிப்படும். சவுலால் மட்டுமே கர்த்தரின் தரிசனத்தைக் காண முடிந்தது. சவுலோடு பிரயாணம் செய்தவர்கள் ஒரு சத்தம் உண்டாவதைக் கேட்டனர் என்றாலும் ஒருவரையும் காணவில்லை. (அப்போஸ்தலர் 9:7) தானியேல் வர்ணித்த தூதனின் மகிமையை அவரோடு இருந்தவர்கள் காணவில்லை. அவர்களை பயம் ஆட்கொண்டதினால் பயந்து ஓடி ஒளிந்துகொண்டனர். மீண்டும் இந்த மகிமையின் ஜீவி (தூதன்) அறிவித்ததாவது: "பெர்சிய இராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான்." (தானி.10:13) கர்த்தரால் பெரிதும் நேசிக்கப்பட்ட மனிதனாகிய தானியேல், தூதன் முன் செத்தவனைப்போல விழ, பெர்சிய அதிபதி தூதனை இருபத்தியொரு நாட்கள் எதிர்த்து நின்றான். எப்படி இவ்வாறு நடந்தது? தூதன் உண்மையாகவே தன் மகிமையில் அதிபதிக்கு வெளிப்படவில்லை என்று கூறலாம். அதாவது கண்ணுக்கு காணப்படாமல் தோன்றியிருப்பார் அல்லது ஒரு மனிதனாக வெளிப்பட்டிருக்க வேண்டும்.

நமது கர்த்தர் உயிர்த்தெழுந்தது முதற்கொண்டு ஆவிக்குரிய சரீரத்தில் இருக்கிறார். நாம் ஆராய்ந்த ஆவிக்குரிய ஜீவிகள் பெற்றிருந்த வல்லமைகள், இவரிடத்திலும் இருந்திருக்க வேண்டும். இந்தக் காரியம் உண்மையானதா என்று அடுத்த அத்தியாயத்தில் அதிகமதிகமாக ஆராய்வோம்.

இவ்வாறு ஆவிக்குரிய சுபாவமும் மனித சுபாவமும் வேறுவேறானவை மற்றும் வித்தியாசமானவை என்றும், ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டாயிற்று என்றோ வளர்ச்சிபெற்றது என்றோ சொல்வதற்கு ஆதாரமில்லை என்றும், இயேசுவைப்போல ஒரு சிலர் மட்டுமே மனித சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு மாற்றப்படுவார்கள் என்றும் வேதத்தில் பார்த்தோம். அப்படி மாறுதல் அடைபவர்களுக்கு, முன்னரே மகிமையடைந்த இயேசு



தலையாயிருக்கிறார். மனுக்குலம் இழந்துபோன அனைத்தையும் திரும்பக்கொடுக்கும் மாபெரும் உன்னதமான பணியைச் செய்வதற்கு தேவப் பிரதிநிதிகளாக இவர்களை நியமிக்கவே தெய்வீக சுபாவத்தை தேவன் தந்தருளுகிறார்.

அதன் நிபந்தனைகளை இனி நாம் காண்போம்.

## அழிவுக்குரியதும் அழியாமைக்குரியதும்

மனித மற்றும் ஆவிக்குரிய ஜீவிகளைப்பற்றியும், பூமிக்குரிய மற்றும் பரத்திற்குரிய வாக்குத்தத்தங்களைப் பற்றியும் வேதாகமக் கூற்றுகளின்படி நாம் கற்றுக்கொண்டதிலிருந்து அழிவுக்குரியதும் மற்றும் அழியாமைக்குரியதுமானவைகளின் சரியான இசைவின் உண்மையான முக்கியத்துவத்தைக் காண்போம். இந்த வார்த்தைகள் நிச்சயமற்ற அர்த்தங்களையே கொடுப்பதுடன், அவைகள் சம்பந்தப்பட்ட பொதுவான மற்றும் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அநேக பாடங்கள் தவறான கருத்துக்களை உருவாக்குகின்றன.

அழிவுக்குரியது (Mortality) என்னும் வார்த்தையானது, மரிக்கக்கூடிய நிலை (Liablity to death) என்று பொருள்படும். அதாவது, மரித்தே ஆக வேண்டும் என்ற நிபந்தனையில்லாமல், மாறாக மரிக்கும் வாய்ப்புள்ள நிலைமையாகும்.

அழியாமை என்பது மரிக்கக்கூடாத நிலைமை என்று பொருள்படும். அதாவது, வெறுமனே மரணத்திலிருந்து விடுதலை என்னும் நிலை எனக் குறிக்காமல், மரிக்க முடியாத நிலைமையைக் குறிக்கும்.

அழிவுக்குரியது என்ற வார்த்தையின் பொதுவான மற்றும் தவறான கருத்து என்னவெனில், இதில் சாவு என்பது தவிர்க்க முடியாத நிலை என்று கூறப்படுகிறது. அழியாமை பற்றிய பொதுவாக நிலவிவரும் கருத்தானது ஏறத்தாழ சரியான கருத்தாக இருக்கிறது.

அழியாமை என்ற வார்த்தை அழிவுக்குரியது அல்ல என்பதைக் குறிக்கிறது. எனவே இந்த வார்த்தையின் அமைப்பு சரியான அர்த்தத்தைக்

குறிப்பிடுகிறது. அழிவுக்குரியது என்ற வார்த்தைக்கு தவறான கருத்து நிலவுவதினால் ஆதாம் மீறுதலுக்கு உட்படுமுன் அழிவுக்குரிய நிலைமையில் இருந்தாரா, அல்லது அழியாமை நிலைமையில் இருந்தாரா? என்று தீர்மானிப்பதில் அநேகருக்கு ஐயம் உண்டாகிறது. ஆதாம் அழியாமை நிலைமையில் இருந்திருப்பாரேயாகில், தேவன், "இதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கூறியிருக்கமாட்டார். ஏனெனில், அழியாமை நிலைமையில் உள்ள ஒருவர் மரிப்பது கூடாத காரியம். இது அறிவுப்பூர்வமான முடிவாகும். அவர் அழிவுக்குட்பட்டவரானால் (பொதுவாக நிலவிவரும் தவறான கருத்துக்களின்படி) மரணத்தை எவ்வகையிலாவது தவிர்க்க முடியுமா? மேலும், தவறான கருத்தின்படியாக, அவர் அழிவுக்குரியவரானால் "நீ சாகவே சாவாய்" என்ற அச்சம் தரும் தண்டனையானது சொல்லப்பட நேரிடுமா?

அழிவுக்குரியது (Mortality) என்ற சொல்லுக்குத் தவறான பொருள் கொடுப்பதன்மூலம் மேற்கூறின குழப்பம் ஏற்படுகிறது என்று அறிகிறோம். சரியான பொருள் பொருத்திப்பார்க்குபோது எல்லாம் தெளிவாகும். ஆதாம் அழிவுக்குரிய தன்மையுடையவன். அதாவது மரிக்கும் வாய்ப்புள்ள நிலைமையில் இருந்தான். அவன் முழுமையான, பரிபூரணமான ஜீவனைப் பெற்றிருந்தான். ஆனாலும், இயற்கையாகவே ஜீவனுடையவனாக இருக்கவில்லை. ஏதேன் தோட்டத்திலுள்ள விலக்கப்பட்ட மரத்தைத் தவிர மற்ற "சகல விருட்சத்தின் கனிகளையும்" புசித்தே ஜீவிக்க வேண்டியதாயிருந்தது. அவன் தன்னை சிருஷ்டித்தவர் கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து இசைவாக நடக்கும்வரை அவனது ஜீவன் பாதுகாப்பான நிலைமையிலிருந்தது. தொடர்ந்து உயிர் வாழத்தேவையான அனைத்து ஆதாரங்களும் அவனுக்கு மறுக்கப்படவில்லை. இப்படியாகப் பார்க்கும்போது ஆதாமினிடத்தில் ஜீவன் இருந்தது மற்றும் மரணம் முழுமையாக தவிர்க்கப்பட்டிருந்த நிலையில் இருந்தபோதிலும், மரணம் நேரிடலாம் என்ற நிலைமையில் இருந்தான்—அவன் சாகக்கூடியவனாக இருந்தான்.

இங்கு ஒரு கேள்வி எழுகிறது. அழிவுக்குரிய தன்மையை உடையவனாக இருந்த ஆதாம் சோதிக்கப்பட்டது, மரணமில்லா நிலைமையை அதாவது சாகாமை அடைவதற்குத் தகுதியுள்ளவனா என்று



பரீட்சிக்கப்படுவதற்காகவா? ஆம் என்றே பொதுவாக அனைவரும் பதிலளிப்பார். ஆனால், நாமோ இல்லை என்கிறோம். ஆதியில் அவன் பெற்றிருந்த ஜீவனையும் ஆசீர்வாதங்களையும் தொடர்ந்து அனுபவிக்கத் தகுதியுடையவனா தகுதியற்றவனா என்று சோதிப்பதற்காக, தேவன் அவனை பரீட்சித்தார். அவன் கீழ்ப்படிந்து நடந்திருப்பானாகில் சாகாமையை (மரணமில்லா நிலை) தருவேன் என்று எங்கும் வாக்குத்தத்தம் அளிக்கப்படவில்லை. ஆகையால், அத்தகைய யூகங்களை எல்லாம் விட்டுவிட வேண்டும். அவன் கீழ்ப்படிந்திருக்கும்வரை ஆதியில் கொடுத்திருந்த ஆசீர்வாதங்களையெல்லாம் தொடர்ந்து அனுபவித்து வரலாம் என்கிற வாக்குத்தத்தத்தையும், கீழ்ப்படியாமற்போனால் மேற்சொன்ன ஆசீர்வாதங்கள் அனைத்தையும் இழந்து மரணத்தை சந்திக்க நேரிடும் என்ற எச்சரிப்பையும் பெற்றான். அழிவுக்குரியது என்ற சொல்லைத் தவறாய் பொருள்கொள்வதினால்தான், மரிக்காத அனைவரும் சாகாமையுடையவர்கள் என்று அநேகர் பொதுவாக எண்ணுகிறார்கள். அவர்கள் இந்த வகுப்பில் நமது பரலோகப் பிதா, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தூதர்கள் மற்றும் அனைத்து மனுக்குலத்தையும் சேர்க்கின்றனர். எனினும் இது தவறு. வீழ்கையிலிருந்து இரட்சிக்கப்பட்ட மனுக்குலத்தின் திரளானவர்களும், அதேபோல பரலோக தூதர்களும் எப்பொழுதும் அழிவுக்குரிய தன்மை உடையவர்களே; பரிபூரண மற்றும் ஆசீர்வாத நிலைமையை பெற்றிருந்தாலும், அழிவுக்குரிய தன்மை உடையவர்களே. இவர்களும் பாவம் செய்வார்களேயானால், பாவத்தின் சம்பளம் மரணமே. இவர்களது ஜீவனும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதே. இவர்களுடைய ஜீவனின் பாதுகாப்பானது ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட நிபந்தனையைப்போலவே இருக்கிறது. எவ்வாறெனில், சர்வ ஞானம் பொருந்திய தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய நீதி, அன்பு, ஞானம் மற்றும் வல்லமை அனைத்தும் அவரில் அன்புகூர்ந்து ஊழியம் செய்கிற யாவருக்கும், சகலத்தையும் நன்மைக்கேதுவாகவே நடத்துகிறது என்பது தேவன் தற்காலத்தில் பாவத்தோடு அவர் கொண்டுள்ள தொடர்புகள் மூலம் முற்றிலும் விளங்கப்பண்ணப்படும்.

தூதர்கள் சாகாமை உடையவர்கள் என்பதாகவோ, அல்லது மீட்கப்பட்ட மனுக்குலம் சாகாமை நிலைமையில் இருப்பார்கள் என்பதாகவோ வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. இதற்கு

மாறாக, தெய்வீக சுபாவத்தைப் பெற்றிருப்பவர்களுக்கு மட்டுமே சாகாமை இருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. இத்தன்மை ஆதியில் யேகோவா தேவனுக்கு மட்டுமே இருந்தது என்றும், பின்பு கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்தபின் தற்போது இந்த உன்னத நிலைமைக்கு உயர்த்தப்பட்டு, சாகாமை கொடுக்கப்பட்டது என்றும், இறுதியாக கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகப்போகிற திருச்சபையாருக்கும் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி கிறிஸ்துவோடுகூட மகிமையடையும்போது, சாகாமையைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. (1 தீமோ.6:16; யோவா.5:26; 2 பேது.1:4; 1 கொரி.15:53, 54)

தெய்வீக சுபாவத்தை உடையவர்களுக்கு மட்டுமே சாகாமை உரியது என்பதற்கு நம்மிடம் சாட்சியமுள்ளது. தூதர்களுக்கு முன்னாள் தலைவனாக இருந்த சாத்தான் அழிக்கப்படுவான் என்று கூறப்பட்டிருப்பதினால் தூதர்கள் அழிவுக்குரிய தன்மையை உடையவர்கள் என்பதற்கு நமக்கு ருசுவாரம் இருக்கிறது. (எபி.2:14) சாத்தான் அழிக்கப்படுவான் என்று கூறப்பட்டிருக்கின்ற சத்தியமானது, தூதர்கள் அனைவரும் அழிவுக்குரிய தன்மையைப் பெற்றவர்களே என்றும் நிரூபிக்கிறது.

இவ்வாறு நாம் ஆராய்ந்தபடி, திருத்தமுடியாத பாவிகள் அறவே அழிக்கப்பட்டபிறகு, சாகாமை உள்ளவர்களும், மரிக்கும் தன்மையை உடையவர்களும் என்றென்றைக்கும் சந்தோஷத்துடனும், மகிழ்ச்சியுடனும் அன்புடனும் ஜீவித்திருப்பார்கள். சாகாமையை அடையப்போகிற முதல் வகுப்பார் மரிக்க முடியாத சுபாவத்தில், அதாவது தன்னில்தானே ஜீவனை உடையவர்களாக நிலைத்திருப்பார்கள்; (யோவா.5:26) இரண்டாவது வகுப்பாரோ, மரிக்கும் தன்மையைப் பெற்றிருந்தபோதிலும், தீமையையும் பாவத்தினால் வரும் சாபக்கேடுகளையும் அறிந்திருப்பதினாலும் பரிபூரண சரீரத்தைப் பெற்றிருப்பதினாலும், மரணமடைவதற்கான எந்தக் காரணமும் இருக்காது. அவர்கள் தேவனது பிரமாணத்தின் அங்கீகாரம் பெற்றிருப்பதாலும், அவர்கள் பரிபூரண நிலையில் ஜீவிக்கத் தேவையான சகல ஆதாரங்களும் நித்தியத்திற்கும் அளிக்கப்படுவதாலும் மரணத்திற்குட்படமாட்டார்கள்.

அழிவுக்குரிய மற்றும் அழியாமைக்குரிய தன்மை ஆகிய இரண்டு வார்த்தைகளுக்குமான சரியான பொருளையும், அவ்வார்த்தைகள்



வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதத்தையும் சரியாக கவனித்து உணரும்போது, நித்திய வேதனை என்கிற உபதேசத்தின் அடிப்படை அஸ்திபாரத்தையே அழித்துவிடும். இந்த நரக போதனையானது, தேவன் மனிதனை சாகாமை வாய்ந்தவனாக சிருஷ்டித்தபடியால், அவன் மரித்தாலும், ஜீவனுள்ளவனாகவே இருக்கிறான் மற்றும் தேவனால் அவனை அழிக்கவும் முடியாது என்ற வேதாகம ஆதாரமற்ற கோட்பாட்டின் அடிப்படையிலானது. ஆதலால் திருத்த முடியாத பாவிகள், எங்காவது ஒரு இடத்தில், எப்படியேனும் ஜீவித்தாகவேண்டிய நிர்ப்பந்தமுண்டாகி இருக்கிறது என்று நரக போதனையை நம்புவோர் விவாதிக்கின்றனர். இவர்கள் தேவனோடு இசைவாய் இராமல் விலகி ஜீவிப்பதால், நித்தியத்துவம் என்ற விஷயம் இவர்களுக்கு ஒரு புரியாத புதிராக இருக்கின்றது. பாவமும், பாவிகளும் நித்தியத்திற்கும் நிலைத்திராதபடி தேவன் ஏற்பாடு செய்திருப்பதாக வேத வசனம் உறுதியளிக்கிறது. அழிந்துபோகக்கூடிய மனிதன், பரிபூரணமான வெளிச்சம், பரிபூரண அறிவிற்கு எதிராக மனப்பூர்வமாய் பாவம் செய்யும்போழுது, அவன் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவான். மாறாக நித்திய எரி நரகத்தில் அல்ல. "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்."

## "தேவனோடு எதிர்த்து தர்க்கிக்கிற நீ யார்?" – ரோமர் 9:20

தேவன் தம் சிருஷ்டிகளிடத்தில் தயை அளிப்பதில் எந்த ஒரு வித்தியாசமும் காண்பிக்கக்கூடாது என்பதே நீதி என்று சிலர் தவறான கருத்து கொண்டிருக்கின்றனர். அவர் ஒருவனை உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்தினால், நீதியின்படி அனைவருக்கும் அதே ஸ்தானத்தை அளிப்பதே சரியானது. சிலர் தாங்கள் பெற்ற உரிமைகளை செய்த தவறுகளினால் இழந்தார்களென்று நிரூபணமானால் அப்படிப்பட்டவர்களுக்கு மட்டும் சற்று தாழ்ந்த நிலைமையை தேவன் கொடுக்கலாம் என்று அவர்கள் தவறுதலாக எண்ணுகிறார்கள்.

இவர்களது கொள்கை சரியாக இருக்குமேயானால், தூதர்களைக் காட்டிலும் இயேசுவை மேலான நிலைமையில் சிருஷ்டிக்கவும், அவரை தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தவும், தேவனுக்கு உரிமை இல்லை என்றாகிறது. எல்லா தூதர்களுக்கும், அனைத்து மனிதர்களுக்கும் இயேசுவிற்கு செய்ததுபோன்றே செய்திருந்தால் நீதியாயிருந்திருக்கும்

என்பது இவர்களது வாதம். இக்கொள்கையை இன்னும் விரிவாகப் பார்க்கும்பொழுது, சிலர் உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டு, தெய்வீக சுபாவத்திற்குப் பங்குபெறுவார்களேயானால், அதே நிலைக்கு மனிதர் அனைவரும் உயர்த்தப்படவேண்டும் என்றாகிறது. இதே கொள்கையை ஏன் மிருகங்களுக்கும் சிறு பூச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடாது? அவைகளும் தேவனுடைய சிருஷ்டிகளாக இருப்பதால், உன்னத ஸ்தானமாகிய தெய்வீக சுபாவத்தை ஏன் அவைகள் அடையக் கூடாது? என்றும் கேள்வி எழலாம். இது முரண்பாடான சிந்தனையையே வெளிப்படுத்துகிறது. இது மேற்சொன்ன கொள்கையிலிருந்து வெளியான கற்பனையேயன்றி வேறு அல்ல.

மேலே குறிப்பிட்ட தவறான கற்பனைக் கொள்கையை தொடர்ந்து வலியுறுத்த இதுவரை ஒருவரும் விரும்பவில்லை. ஒருவேளை நீதியின்படி அக்கொள்கை ஏற்படுத்தப்பட்டிருந்தால், அதற்கு தடை செய்வது நீதிக்கு எதிராயிருக்குமே? மேலும், இப்படிப்பட்ட கொள்கை தேவனுடைய திட்டமாக இருக்குமேயானால், அவருடைய கிரியைகளிலேயே பிரியப்படுத்துகின்ற இனம் எங்கேயிருந்து வரும்? ஆனால், தேவனுடைய குணம் இதுவல்ல. உயிருள்ள மற்றும் உயிரற்ற எல்லாவித சிருஷ்டிகளும், தெய்வீக ஞானம் மற்றும் வல்லமையின் பல்வேறு வெளிப்பாடுகளையும் அவரது மகிமையையும் காண்பிக்கின்றன. "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றது. ஆகாய விரிவு அவருடைய கரத்தின் கிரியையை அறிவிக்கிறது." பலதரப்பட்ட இயற்கை அழகுகளும், தன்மைகளும் தேவனது உன்னத மகிமையையும் வல்லமையையும் எடுத்துரைப்பதைப் பார்க்கிலும், அவரது பகுத்தறிவுள்ள சிருஷ்டிகள் பலமடங்கு அதிகமாக சான்று பகர்வார்கள். இவற்றை தேவ வசனத்தின் போதனைகளின் மூலமாகவும், பகுத்தறிவைக்கொண்டு இயற்கையின் ஒப்புமைகளைக் கொண்டும் தீர்மானமாகக் கூறுகிறோம்.

நீதி நியாயங்களைக் குறித்து நாம் சரியான தீர்மானங்களைக் கொண்டிருத்தல் மிக முக்கியமானது. தேவன் நமக்குக் காட்டும் தயவை நமக்கு நியாயமாக வரவேண்டிய பலனாக ஒருபோதும் எண்ணக்கூடாது. நீதியினால் ஏவப்பட்டு, செய்த செயலுக்கு விசேஷித்த விதமான நன்றியை செலுத்தவேண்டிய அவசியமில்லை. அவ்வாறு செய்வது அன்பைக்



காட்டுவதற்கான அடையாளமாகிவிடாது. தேவன் தம் மாபெரும் அன்பை எந்த நிர்ப்பந்தமுமின்றி தம் சிருஷ்டிகளிடத்தில் தொடர்ந்து எல்லையில்லாமல் காண்பித்து தயை பொழிகிறார். ஆகவே, சிருஷ்டிகள் இதற்குக் கைம்மாறாக தேவனிடத்தில் அன்பையும் நன்றியையும் செலுத்தி துதிக்க வேண்டும்.

நாம் பாவமே செய்யாதிருந்தாலும் சில குறிப்பிட்ட காலப்பகுதிகள் மட்டுமே இவ்வுலகில் ஜீவித்திருக்கும் சிருஷ்டிகளாகப் படைக்கும் உரிமை தேவனுக்கு உண்டு. தாழ்ந்த நிலையில் உள்ள அவரது சிருஷ்டிகளை தேவன் இவ்வாறே உண்டாக்கினார். சிறிதுகாலம் மட்டுமே தமது ஆசீர்வாதங்களை அனுபவிக்க அனுமதித்து, பிறகு அநீதியாக இல்லாமல் நம்மை முற்றிலும் அழித்திருக்க அவரால் கூடும். உண்மையாகவே அந்தக் குறுகிய கால ஜீவியமும் நமக்கு தேவ தயவே ஆகும். அவரது தயவு இருந்தால் மட்டுமே நம்மால் ஜீவிக்க முடியும். அவ்வாறு இருக்க பாவத்தினால் இறந்த ஜீவனை மீட்டு மீண்டும் ஜீவிக்கச் செய்வது எவ்வளவு பெரிய தயை! மேலும், தேவ தயவினால்தான் நாம் மிருகங்களாயிராமல் மனிதராய் இருக்கிறோம். மனிதரைவிட சற்று மேலான நிலையில் தேவதூதர்கள் உண்டாயிருப்பதும் தேவதயவே. அவ்வாறே கர்த்தராகிய இயேசுவும் அவருடைய மணவாட்டியும் தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்கள் ஆவதும் தேவதயவே. புத்திக்கூர்மையுள்ள எந்த சிருஷ்டியும் தேவன் எந்த நிலையை அருளுகிறாரோ அதை நன்றி உணர்வோடு பெற்றுக்கொள்வதே அவர்களுடைய கடமையாகிறது. இதற்கு எதிரான ஆவியுடையவர்களாயிருந்து தங்கள் தீயவழிகளில் ஈடுபடுவார்களேயானால் தேவ தயவை இழந்து, அறுப்புண்டுபோவார்கள். தூதனின் நிலையை அடைய மனிதன் முயற்சித்தால், அது தகுதியற்ற செயல். அந்த நிலைமைக்கு அவன் ஒருபோதும் அழைக்கப்படவில்லை. தூதனும் தெய்வீக சுபாவத்தை அடைய எண்ணுவதும் தகுதியல்ல. ஒருபோதும் தூதனும் அந்த நிலைக்கு அழைக்கப்படவில்லை.

சாத்தான் தன் மனமேட்டிமையால் மேலான ஸ்தானத்தை அடைய விரும்பினதால் தாழத்தள்ளப்பட்டு முடிவில் அழிவை சந்திக்கப் போகிறான். (ஏசா.14:14) "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவனெவனும் உயர்த்தப்படுவான்." (லூக்கா

14:11) "உயர்த்தப்படுவான்" என்று கூறப்பட்டிருப்பது, எல்லாவற்றிற்கும் மேலான உன்னத நிலைக்கு உயர்த்தப்படுவான் என்று பொருள்கொள்ளக்கூடாது.

நீதியைப் பற்றிய தவறான சிந்தனைகளும், வேறுசில காரணங்களும் தேர்ந்தெடுக்கப்படுதல் (Election) பற்றி வேதாகமம் போதிக்கும் போதனையை தவறாகப் புரிந்துகொள்ளவும் வாக்குவாதங்களுக்கும் வழிவகுக்கின்றன. தேர்ந்தெடுக்கப்படுதலைக் குறித்து வேத வசனங்கள் போதிப்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனால், எந்தக் கொள்கையின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தல் அல்லது தெரிந்துகொள்ளுதல் நடைபெறுகிறது என்பது பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. தேவன் தம் சித்தத்தின்படி எவ்வித நிபந்தனையுமின்றி தெரிவுசெய்கிறார் என்று சிலரும், சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே தெரிவுசெய்கிறார் என்று சிலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். மேற்கண்ட இரண்டு கருத்துக்களிலும் சிறிதளவு உண்மை அடங்கியுள்ளதை நாம் நம்புகிறோம். தேவன் தம் நோக்கம் நிறைவேறும்பொருட்டு, தம் பணியைச் செய்வதற்காக அதற்கேற்ற சிலரை தெரிவுசெய்கிறார். தேவன் தம் சிருஷ்டிகளில் சிலரை தூதர்களாகவும், சிலரை மனிதர்களாகவும், சிலவற்றை மிருகங்களாகவும், பறவைகளாகவும், பூச்சி இனங்களாகவும், மேலும் சிலரை தம்முடைய சொந்த தெய்வீக சுபாவத்திலும் இருக்கும்படியாக தேர்ந்தெடுத்தோ அல்லது தெரிந்துகொண்டோ இருக்கிறார். தேவன் சில முக்கிய நிபந்தனைகளின் அடிப்படையில் தெய்வீக சுபாவத்திற்கு தெரிவுசெய்தபோதிலும், தெரிந்தெடுக்கப்பட்ட இவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் தகுதியுடையவர்கள் என்று கூறமுடியாது. ஏனெனில், எந்த சிருஷ்டியும் எந்த சுபாவத்திலும் ஜீவிப்பது முற்றிலும் தேவ தயவினால் மட்டுமே.

"ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்." (ரோமர்9:16) தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு தெய்வீக சுபாவத்திற்குரிய அழைப்பை தேவன் கொடுத்தது, மற்றவர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள் என்பதால் அல்ல. பாவம் செய்யாத தேவ தூதர்களை அல்ல, இரட்சிக்கப்பட்ட பாவிகளை அழைத்து, தெய்வீக மகிமைகளைத் தேவன் தருகிறார்.



தம்முடையவர்களைத் தம் விருப்பப்படி செய்ய தேவனுக்கு உரிமையுண்டு. இவ்வுரிமையைப் பயன்படுத்தி தம் திட்டத்தை நிறைவேற்றுகிறார். தெய்வீக தயவினாலேயே நமக்குண்டானவைகளை அடைந்தோம். "மனுஷனே தேவனோடு எதிர்த்து தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி, ஏன் இப்படி உண்டாக்கினாய் என்று சொல்லலாமா? பிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்திற்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்திற்கும் பண்ணுவதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ?" (ரோமர் 9:20, 21) தெய்வீக வல்லமையினாலேயே அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டன. ஆனாலும், சிலர் உயர்ந்த சுபாவத்திற்கும், மாபெரும் மேன்மைக்கும் மற்ற சிலரோ தாழ்ந்த சுபாவத்திற்கும், குறைந்த மேன்மைக்கும் சிருஷ்டிக்கப்பட்டனர்.

"இஸ்ரவேலின் பரிசுத்தரும், அவனை உருவாக்கியவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள். என் பிள்ளைகளைக் குறித்தும் என் கரங்களின் கிரியையைக் குறித்தும் எனக்குக் கட்டளையிடுங்கள். நான் பூமியை உண்டுபண்ணி, நானே அதின்மேல் இருக்கிற மனுஷனை சிருஷ்டித்தேன். என் கரங்கள் வானங்களை விரித்தன; அவைகளின் சர்வ சேனையையும் நான் கட்டளையிட்டேன்." "வானங்களைச் சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்க சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காக செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை." (ஏசாயா 45:11, 12, 18) தேவனிடத்தில் அதிகாரம் செலுத்தும் உரிமை எவருக்கும் இல்லை. அவர் பூமியை உருவாக்கி, அதை வெறுமையாக இருக்க வடிவமைக்காமல், சீர்பொருந்தின பரிபூரண மனிதனை குடியமர்த்துவதே அவரது சித்தம். நாம் தேவனிடம் வாக்குவாதம் செய்து, அவர்களது சுபாவத்தை மாற்றி தேவதூதர்களைப் போல ஆவிக்குரிய நிலைமையையோ அல்லது தமது தெய்வீக சுபாவத்தையோ, அனைவருக்கும் அளிப்பது அநீதியானது என்று முறையிடுவதற்கு நாம் யார்? நம்முடைய ஆலோசனைகளை தேவனிடத்தில் கூறி அதை நிறைவேற்ற வேண்டுமென்று கட்டளையிடாமல், தேவ வசனத்திற்கு மனத்தாழ்மையுடன் செவிகொடுத்து, இனி நிகழப்போகிற காரியங்களைக் குறித்து

தேவனிடத்தில் கேட்பதே தகுதியானது. கர்த்தாவே, துணிகரமான பாவங்களுக்கு உமது அடியார்களை விலக்கிக் காரும். அவைகள் எங்களை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும். தேவனுடைய பிள்ளைகளில் ஒருவரும் கர்த்தருக்குக் கட்டளையிடத் துணியமாட்டார்கள் என்று நாம் நம்புகிறோம். ஆனால், எவ்வளவு எளிதாகவும், சுய உணர்வின்றியும் இந்த தவறுக்குள் அநேகர் விழுகின்றனர்.

தேவனுடைய படைப்பில் மனுக்குல சந்ததியார் அனைவரும் அவரது பிள்ளைகளே. அவரது கரத்தின் கிரியைகளே. அவர்களைக் குறித்த தேவனது திட்டம் அவரது வசனத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மனிதன் பூரணப்படுத்தப்பட்டபின், எந்த நிலையில் இருப்பானோ அதே தன்மையில், அதே நிலையில் முதல் மனிதன் இருந்ததாகவும், பூமிக்குரிய மன்னனாய் அவன் இருந்ததாகவும் பவுல் கூறுகிறார். சுவிசேஷ யுகத் திருச்சபையினரைத் தவிர மற்ற அவனது சந்ததியார் அனைவரும் மன்னரான, பூமிக்குரிய மனிதர்களாகவே உயிர்த்தெழுந்து வருவர். (1 கொரி.15:38–44) தேவன் மனிதனை தேவதூதர்களுக்கு சற்று சிறியவனாக சிருஷ்டித்து, அவனை மகிமையினாலும், கனத்தினாலும், ஆளுகையினாலும் முடிசூட்டினார் என்று தாவீது வெளிப்படுத்துகிறார். (சங்.8:4–8) பேதுருவும், நமது கர்த்தரும் மற்றும் உலகமுண்டானது முதற்கொண்டு வந்த அனைத்து தீர்க்கதரிசிகளும் கூறுகிறபடி, பூமிக்கு பிரதிநிதியாக இருந்த ஆதாம் பெற்றிருந்த மகிமை நிறைந்த பரிபூரணத்திற்கும் பூமியின் ஆளுகைக்கும் மனுக்குலம் மீண்டும் திரும்பும் என்கின்றனர். (அப்.3:19–21)

இந்த உன்னத பங்கையே தேவன் தெரிந்தெடுத்து, மனுக்குலத்திற்குத் தர சித்தமானார். அது எவ்வளவு மகிமையான பங்கு! அதே சமயத்தில் பாவத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கிற துக்கம், துயரம், வீழ்ச்சி, துன்பம் நிறைந்த மனிதர்களை கண்களைமூடி மனதில் நிறுத்திப் பாருங்கள். இன்னொரு புறம் பரிபூரணமாக்கப்பட்ட பூமியின் மகிமையை கற்பனை செய்துபாருங்கள். பரிபூரணமாக்கப்பட்ட சமுதாயத்தின் சமாதானத்தையும் ஒருங்கிணைப்பையும் கெடுப்பதற்கு எந்த ஒரு பாவத்தின் கறையும் அங்கு இருக்காது. கசப்பான எண்ணங்களோ இரக்கமற்ற பார்வையோ, வார்த்தையோ அங்கு இராது.



ஒவ்வொருவருடைய இருதயத்திலிருந்து அன்பு ஊற்றாக, மற்றவர்களது இருதயங்களிலுள்ள அன்பை சந்திக்கும். பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்ற ஏவுதலினால் கிரியை பிறக்கும். அங்கு நோய் இனி எப்பொழுதும் இராது. உடல்வலி, வேதனை, தேய்மானத்தின் அறிகுறி இருப்பதில்லை. இவ்விஷயங்களைக் குறித்த பயம் சிறிதளவும்கூட இராது. நாம் முன் எப்போதும் கண்டிராத பூரண மனிதனின் அழகு, ஆரோக்கியத்தை எண்ணும்போது அது அதிசயமாகவும், அற்புதமாயும் இருக்கும். நாம் இதுவரை பார்த்திருக்கிற மனித சாயலுக்கும் பண்புகளுக்கும், ஒப்பான அழகும், ஆரோக்கியமும் உள்ள எல்லா உருவங்களைக் காட்டிலும் பூரண மனிதத்துவமானது, அற்புதமும் அதிசயமும் ஆனந்தமாயும் இருக்கும். உன்னதமான பரிசுத்தமும், பூரண சிந்தையும், பூரண ஒழுக்க சுபாவமும், ஒவ்வொரு மனித முகத்திலும் பிரகாசமாயிருக்கும். உலக சமுதாயத்தின் ஒட்டுமொத்த நிலைமையும் இவ்வாறே இருக்கும். தாங்கள் நேசித்தவர்கள் இறந்துபோனதால் ஏற்பட்ட துக்கத்தில் வாடியிருப்போரது கண்ணீர் துடைக்கப்படுவதால், உயிர்த்தெழுதலின் பணி நிறைவடைந்துவிட்டது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். (வெளி. 21:4)

இப்படிப்பட்ட மாறுதல்கள் மனித சமுதாயத்தில் மட்டுமே நடைபெறும். பரிபூரண மனிதர்கள் ஜீவிக்கும்படி உண்டாக்கப்பட்ட இப்பூமி, முதல் மனிதனாகிய ஆதாம் இருந்த ஏதேன் தோட்டத்தைப்போல இன்பமான நந்தவனமாக பூரண மனிதனுக்கு தகுந்தவாறு மாற்றப்பட்டு பரதீசு, மீண்டுமாக கொண்டுவரப்படும். இனி பூமி ஒருபோதும் முள்ளையும் குருக்கையும் முளைப்பிக்காது. மனிதன் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி தன் அப்பத்திற்காக உழைக்கவேண்டியிராது. ஏனெனில், "பூமி தன் பலனைத் தரும் இலகுவாகவும், எளிதாகவும்." "வனாந்தரம் புஷ்பத்தைப்போல் செழிக்கும்." (சங்.67:6; ஏசா.35:1) தாழ்ந்த நிலையிலுள்ள விலங்குகள், பூரணமாக்கப்பட்டு, மனிதனுக்கு கீழ்படிதலுள்ள வேலைக்காரர்களாக மனதார ஊழியம் புரியும். பூமியில் பரந்திருக்கும் இயற்கை காட்சிகள் எங்கு நோக்கினாலும் அழகும், ரம்மியமாயும் காணப்படுவதால், மனிதன் தேவனுடைய மகிமை, வல்லமை, அன்பைத் தேடி உணரும் பொருட்டாக, எல்லாவிதத்திலும் தூண்டப்படுவார்கள். அவனது சிந்தையும், இருதயமும் தேவனுக்குள் மகிழ்ச்சியாயிருக்கும்.

நவீனமானதையே தேடும் திருப்தியற்றவர்களது தற்போதைய குணம் இயல்பானதல்ல. அது இன்றைய காலத்தில் அதிருப்தியை ஏற்படுத்தும் சூழ்நிலைகளாலும், நமது அபூர்ணத் தன்மையாலும் ஏற்பட்ட அசாதாரணமான நிலைமையாகும். புதிதானவற்றையே ஓயாமல் தேடி அலைவது தெய்வீக குணமல்ல. தேவனுக்கு பெரும்பாலான காரியங்கள் பழமையானவையே. பழையதும், பரிபூரணமுமான விஷயங்களிலேயே தேவன் அதிகதிகமாய் சந்தோஷப்படுகிறார். அப்படியே, தேவ சாயலுக்கு மீட்கப்பட்ட, முந்தின சீரடைந்த மனிதனிடத்திலும் இருக்கும். பரிபூரண மனிதன் ஆவிக்குரிய ஜீவியத்தின் மகிமையை அறியாததால் அதை பெற்றுக்கொள்ளும் ஆவலின்றியும் இருப்பான். அவர்களைக் கண்டு இவன் வியப்படைவதில்லை. இதே காரணங்களுக்காக மீன்களும் பறவைகளும் தங்கள் சொந்த சுபாவத்தையும் தனித்தன்மையையும் நேசித்து, அதில் சந்தோஷப்படுகின்றன. மனிதன் தான் பெற்றிருக்கிற பரிபூரண மகிமையில் பெரிதும் சந்தோஷப்பட்டு ஐக்கியமாகிவிடுவதால், மற்றவர்கள் பெற்றிருக்கிற சாயலை தேடவோ, விரும்பவோ மாட்டான். தற்காலத்தில் ஜீவித்து வருகிற திருச்சபையாரின் அனுபவங்களை கவனித்தால் இது எளிதில் விளங்கும். இவ்வுலகப் பொருட்களில் ஐஸ்வரியவான்களாய் இருப்பவர்கள் தேவ ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பது "எவ்வளவு அரிதாக" உள்ளது. தீமையும் மரணமும் ஆட்சிசெய்து வருகின்ற தற்கால உலகில் சில நன்மையான பொருட்கள் மனித சுபாவத்தை வசீகரிக்கும்போது, ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களின்மேல் நம்முடைய கண்களையும், நோக்கங்களையும் நிலைநிறுத்தவேண்டுமானால் தேவனுடைய விசேஷமான உதவி நமக்குத் தேவைப்படுகிறது.

கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையானது, மனுக்குலத்திற்கான தேவனது பொதுவான திட்டத்திற்கு உட்பட்டதல்ல என்பது, திருச்சபையார் தெரிந்துகொள்ளப்படுதல் உலகத் தோற்றத்திற்கு முன்பே தெய்வீகத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்ற கூற்றின் மூலம் தெளிவாகிறது. (எபே.1:4–6) மனுக்குலம் பாவத்தில் விழும் சமயத்தை தேவன் முன்னறிந்தது மட்டுமின்றி, திருச்சபை வகுப்பார் நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தப்படுத்தப்பட்டு, மகிமைப்படுவதையும் முன்தீர்மானித்தார். சுவிசேஷ யுகத்தில் தம் ஒரே பேறான குமாரனின் சாயலுக்கு ஒப்பாகும்பொருட்டும், தெய்வீக சுபாவத்தில் பங்குபெறும்பொருட்டும், ஆயிரவருட அரசாட்சியில்



கிறிஸ்து இயேசுவுக்கு உடன் சுதந்திரராகவும் இருந்து முழு உலகத்தையும் நீதியிலும் சமாதானத்திலும் நடத்தவும், தேவன் இவர்களை உலகத்தில் இருந்து பிரித்தெடுப்பதையும் முன் தீர்மானித்திருந்தார். (ரோ. 8:28–31)

திருச்சபை வகுப்பார் தெரிந்தெடுக்கப்படுதல் தேவனால் முன்னரே தீர்மானிக்கப்பட்டது என்பதை இதனால் தெரிந்துகொள்கிறோம். ஆனாலும், திருச்சபையின் ஒவ்வொரு அங்கமும், நிபந்தனையின்றி தெரிந்தெடுக்கப்படுவதில்லை என்பதை கவனிக்கவும். இப்படிப்பட்ட வகுப்பார் சுவிசேஷ யுகமாகிய ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு விசேஷ நோக்கத்திற்காக தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்று தேவன் முன்னறிந்திருந்தார். அதோடுகூட, யார் யார் தகுதியுடையோராகி, "சிறுமந்தை" வகுப்பின் அங்கத்தினர்கள் ஆவார்கள் என்பதையும் தேவன் முன்னறிந்திருப்பார் என்பதை நாம் சந்தேகிக்க முடியாது என்றபோதிலும் தேவனுடைய வசனம், தெரிந்தெடுத்தலுக்குரிய போதனையை இவ்வழிமுறையில் போதிப்பதில்லை. மேன்மையான நிலைமைக்கென மனிதரை தெரிவுசெய்ய வேண்டுமென்று தேவன் தம் நோக்கத்திற்காக "ஒரு வகுப்பாரை" முன் குறித்திருக்கிறார் என்றே வசனம் போதிக்கிறது. இப்போதனையை அப்போஸ்தலர்களும் தனித்தனி நபர்களாக ஒவ்வொருவரையும் தேவன் முன்குறித்தார் என்று போதிக்க முயற்சிக்கவில்லை. ஆனால், தேவனுடைய திட்டத்தில் இருந்த களத்துக்குரிய இடத்தை நிரப்புவதற்காக ஒரு வகுப்பார் முன் குறிக்கப்பட்டனர் என்று போதித்தனர். இவ்வகுப்பில் சேரப்போகிறவர்களது விசுவாசமும் கீழ்ப்படிதலும் கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் பரீட்சிக்கப்பட்டு, பூமிக்குரிய உரிமைகளை மரணபரியந்தம் தியாகம் செய்தாகவேண்டும் என்றும் அப்போஸ்தலர்கள் போதித்தனர். இவ்வாறாக தனிப்பட்ட "உபத்திரவங்களினாலும்", "தனித்தனியே ஜெயங்கொள்ளுதலினாலும்" ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியும் முன்தீர்மானிக்கப்பட்ட வகுப்பாராக தெரிந்துகொள்ளப்பட்டு, தேவன் இந்த வகுப்பாருக்கென்று முன்குறித்திருந்த அனைத்து ஆசீர்வாதங்கள் மற்றும் ஈவுகளுக்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

ரோமர் 8:30ல் – "மகிமைப்படுத்தப்பட்டவர்கள்" என்று கூறப்பட்ட வார்த்தையின் கிரேக்கச்சொல் டாக்ஸாஸோ (Doxazo). இதற்கு

கனப்படுத்தப்பட்டவர்கள் என்று பொருளாகும். திருச்சபையானது மகாமேன்மையான கனத்தை பெறும்படி தேவனால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட மேலான கனத்தை அடைய எந்த மனிதனாலும் நினைக்கவும் முடியாது. நம் கர்த்தராகிய இயேசுவும், தேவனிடமிருந்து அழைப்பைப் பெற்ற பிறகே அதை ஆர்வமாய் விரும்பினார். இதைக் குறித்து வேதாகமத்தில் வாசிக்கிறோம். "அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்கு தம்மைத் தாமே உயர்த்தவில்லை. 'நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன்' என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்" (டாக்ஸாஜோ — கனப்படுத்துதல்). பரலோகத் தந்தை இப்படியாக நம் கர்த்தராகிய இயேசுவை கனப்படுத்தினார். அவ்வாறே யேகோவா தேவனின் தயவினாலே கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகும்படியும் அவரோடு உடன்சுதந்திரராகும்படியும் தெரிந்துகொள்ளப்பட்டு அதேபோலவே கனப்படுத்தப்படுவார்கள். திருச்சபை தனது தலையைப்போலவே, தேவனால் ஆவிக்குரிய சுபாவத்தினை அடைய சத்திய வசனத்தின் மூலம் ஜெனிப்பிக்கப்பட்ட பிறகு "கனத்தை" ருசிபார்க்கும் அனுபவங்களைப் பெறத்தொடங்கியது (யாக்.1:18) ஆவிக்குரிய ஜீவிகளாக ஆவியில் பிறக்கும்போது மகிமையடைந்த தலையின் சாயலுக்கு ஒத்த பூரணமான கனத்தை அடையும். தேவனால் கனப்படுத்தப்படப் போகிறவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாயும், பூரணராயும் இருக்கவேண்டியது அவசியம். சுபாவத்திலேயே பாவிகளாயிருக்கிற நம்மை கனத்திற்கு அழைத்ததோடு மட்டுமல்லாமல், தமது குமாரனின் மரணத்தினால் பாவத்திலிருந்து நம்மை நீதிமான்களாக்கி, நம்மை அழைத்த அழைப்பின்படியே கனத்தைப் பெற்றுக்கொள்ளும் தகுதியையும் அடையச் செய்கிறார்.

சிறுமந்தையைத் தெரிந்தெடுக்கும்போது தேவன் பொதுவான ஒரு அழைப்பையே கொடுத்தார். "அழைக்கப்பட்டவர்கள் அநேகர்" என்றாலும், எல்லோரும் அழைக்கப்படவில்லை. இந்த அழைப்பு நமது கர்த்தரின் முதல் வருகையின் ஊழியக்காலத்தில், முதலாவதாக மாம்சீக இஸ்ரவேலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. ஆனால், தற்காலத்திலோ, தேவனுடைய ஊழியக்காரர்கள் தாங்கள் சந்திக்கும் எல்லோரையும் (லூக்கா 14:23) தேவ தயவு பெற்ற இந்த விசேஷமான பந்திக்கு வருவதற்கு தூண்டவும்



வலியுறுத்தவும் வேண்டும் (கட்டாயப்படுத்தக்கூடாது). ஆனால், சத்தத்தைக் கேட்டு வந்தாலும், அனைவருமே தகுதியடையமாட்டார்கள். கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரமாகிய திருமண உடைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலர் இவற்றை அணியாததினால், அவர்கள் நிராகரிக்கப்படுவார்கள். சிலர் நீதியின் ஆடைகளை அணிந்திருந்து புதிய சுபாவத்தினால் ஜெனிப்பிக்கப்பட்டு, கனம் அடைவதற்கான தகுதியைப் பெற்றிருந்தபோதிலும், உடன்படிக்கையை உண்மையாக நிறைவேற்றாததால், தங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கத் தவறுகின்றனர். மகிமையடைந்திருக்கிற ஆட்டுக்குட்டியானவரிடத்தில் சென்று சேரும் தகுதியைப் பெற்றவர்களைக் குறித்து, "அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள்" என்று (வெளி.14:1; 17:14) அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அழைத்த அழைப்பு உண்மையே. திருச்சபையைத் தெரிந்தெடுத்து உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்தும் தேவனுடைய தீர்மானமும் மாற்றமுடியாதது. ஆனாலும், யார் இந்த தெரிந்தெடுக்கப்பட்ட கூட்டத்தில் இருப்பார்கள் என்பது நிபந்தனைக்குட்பட்டது. முன்குறிக்கப்பட்ட கனத்தில் பங்குபெற விரும்புகிற அனைவரும் தங்கள் அழைப்பின் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். "ஆனபடியினாலே அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்." (எபி.4:1) இந்த பெரிதான தயவைப் பெறவேண்டுமென்று விரும்புகிறவன் அதைப் பெறமுடியாது. அதற்காக ஓடுகிறவனும் பெறமுடியாது. ஆயினும், அதற்காக அழைக்கப்பட்ட பின்பு விரும்புகிறவனுக்கும் ஓடுகிறவனுக்கும் மட்டுமே கிடைக்கும்.

எனவே, தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு தமது சித்தம் போல் செய்யும் முழு அதிகாரம் உண்டு என்று நாம் நம்புகிறோம். இவ்வாறு தேவ தயவு அளிக்கப்படுவது அனைவருக்கும் பொதுவான நன்மையை அளிப்பதற்காகவே என்ற தேவனுடைய தீர்மானங்களை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

மனித சுபாவமும், ஆவிக்குரிய சுபாவங்களும் வெவ்வேறானதும் வித்தியாசமானவைகளும் என்பது உறுதிப்படுத்தப்பட்ட உண்மை என்று நாம் வேதத்தின் மூலமாக அறிகிறோம். ஆகவே, இந்த இரு வெவ்வேறு சுபாவங்களை கலப்பது தேவனால் வடிவமைக்கப்பட்டதல்ல என்றும், இது அழுரணத்தையே பிறப்பிக்கும் என்றும், ஒரு சுபாவத்திலிருந்து வேறொரு சுபாவத்திற்கு மாறுதல் தேவ கட்டளை அல்ல என்றும், கிறிஸ்துவுக்கு மட்டுமே இப்படிப்பட்ட கட்டளைக்கு விலக்கு அளிக்கப்பட்டது என்றும், சத்திய வசனத்திலிருந்து அறிகிறோம். எப்படி இந்த மாறுதல் நிறைவேற்றப்பட்டது? எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இதனை அடையலாம்? எந்த வழிமுறையின்கீழ் அம்மாறுதல் நிறைவேற்றப்படும்? என்கிற காரியங்களை அறிவது மிகுந்த ஆர்வத்தைப் பிறப்பிக்கும்.

தெய்வீக சுபாவத்திற்கு கர்த்தரோடு திருச்சபை உயர்த்தப்படப்போவதற்கான நிபந்தனைகள் இயேசு கிறிஸ்து எந்த நிபந்தனையின்கீழ் அதை அடைந்தாரோ அதே நிபந்தனைகளேயன்றி வேறல்ல. அதாவது, அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி (1 பேது.2:21), அவரைப்போல் ஜீவபலியாக தன்னையே கொடுத்து, மரணபரியந்தம் ஞானஸ்நான உடன்படிக்கையை உண்மையாக நிறைவேற்றுவதே அந்நிபந்தனை. இந்த சுவிசேஷ யுகத்தில் நம் கர்த்தர் செய்ததுபோலவே மனித சுபாவத்தையும் அதன் விருப்பங்கள், நோக்கங்கள், நம்பிக்கைகள், வருங்காலத்திற்குரிய எதிர்பார்ப்புகள் ஆகிய அனைத்தையும் மரணபரியந்தம் பலி செலுத்துபவர்களுக்கு மனித சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு மாறும் மாபெரும் வெகுமதி அளிக்கப்படுகிறது. இந்த நிலைமையை அடைந்தவர்கள், உயிர்த்தெழுதலின்போது மனுக்குலத்தார் அடையும் மனித பூரணத்தையும் அதின் ஆசீர்வாதங்களையும் பெறாமல், தங்கள் கர்த்தரது மகிமை, சாயல், மகிழ்ச்சி இவைகளையும் அவரோடுகூட தெய்வீக சாயலையும் பெற்றுக்கொள்வார்கள். (ரோமர் 8:17; 2 தீமோ.2:12)

மனித ஜீவியம் எப்படி ஆரம்பித்து வளர்ச்சி அடைகிறதோ, அவ்வாறே புதிய சுபாவமும் ஜெனிப்பிக்கப்பட்டு வளர்ச்சியடைய வேண்டும். மனிதசுபாவத்தில் ஜெனிப்பிக்கப்படுவதும் பிறத்தலும் இருப்பது போலவே, புதிய சுபாவத்திலும் உள்ளது. சத்திய வசனத்தினாலே பரிசுத்தவான்கள்



தேவனால் ஜெனிப்பிக்கப்படுகிறார்கள். (1 பேதுரு 1:3; 1 யோவான் 5:18; யாக்கோபு 1:18) அதாவது தெய்வீக ஜீவ ஊற்றின் துவக்கத்தை தேவனிடத்திலிருந்து அவரது வசனத்தின் மூலம் அடைகிறார்கள். இயேசுவின் மீட்கும்பொருளின்மேல் வைத்த விசுவாசத்தினால் இலவசமாக நீதிமான்கள் ஆக்கப்படும்பொழுது அழைப்பின் சத்தத்தைக் கேட்கிறார்கள். "அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் (மீட்கும்பொருள் கொடுக்கப்பட்டு நீதிமான்கள் ஆனபடியால்) தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (ரோமர் 12:1)

இந்த அழைப்புக்கு செவிமடுத்து கீழ்ப்படியும்போது, தங்களது நீதிமான்களாக்கப்பட்ட மனிதத்துவத்தை தேவனிடம் ஞானஸ்நானத்தில் முழுமையாக ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறார்கள். இயேசுவோடு இணைந்திருக்கும் இந்த ஜீவபலி தேவனால் ஏற்கப்படுகிறது. அவ்வாறு தேவன் அங்கீகரித்தவுடன் ஆவிக்குரிய ஜீவியம் துவங்குகிறது. அப்படிப்பட்டவர்கள் தங்களது மாம்சீக நம்பிக்கைகள், நோக்கங்கள் மற்றும் விருப்பங்களை சிலுவையில் அறைந்து, சிந்தையிலும், செயல்பாட்டிலும், புதிய சுபாவத்திற்கு இசைவாக நடக்கத் துவங்குகிறார்கள். ஞானஸ்நானத்தின் மூலம் தங்களை ஒப்புக்கொடுத்த இவர்கள் அத்தருணத்திலிருந்து "புதிய சிருஷ்டிகளாக" தேவனால் கருதப்படுகிறார்கள்.

இப்படியாக கரு நிலையிலுள்ள (ஆரம்ப) புதிய சிருஷ்டிகளுக்கு பழையவைகள் (மாம்சீக ஆசைகள், நம்பிக்கைகள், திட்டங்கள் முதலியன) ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. கரு நிலையிலுள்ள புதிய சிருஷ்டிகள் தொடர்ந்து வளர்ந்து முன்னேறிக்கொண்டே வருவதால், பழைய சுபாவம் அதின் நம்பிக்கைகள், ஆசைகள், நோக்கங்கள் முதலானவைகள் சிலுவையில் அறையப்படுகின்றன. ஞானஸ்நானம்பெற்ற காலந்துவங்கி மனித சரீரம் மரித்து, ஆவிக்குரிய பிறப்பெய்தும்வரை இந்த இரண்டு செயல்பாடுகளும் ஒரே சமயத்தில் வளர்கின்றன. தம் வசனத்தின் வழியாக தேவ ஆவி தொடர்ந்து அவரது திட்டங்களை வெளிப்படுத்திவரும்போது, சாவுக்கேதுவான இந்த சரீரத்தை உயிர்ப்பித்து (ரோமர் 8:11), அவருக்கேற்ற ஊழியம்செய்ய பலம் அளிக்கிறார். ஆனால், குறித்த காலத்தில் நாம்

பரத்திற்குரிய ஆவிக்குரிய எல்லா வகையிலும், புதிய சரீரங்களை தெய்வீக சிந்தையை பெற்றுக்கொள்வோம்.

"புதிய சிருஷ்டியின்" பிறப்பு, உயிர்த்தெழுதலில் நிகழ்கின்றது. (கொலோ.1:18) இவ்வகுப்பாரின் உயிர்த்தெழுதல், முதலாம் உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகிறது. (வெளி.20:6) புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றதினிருந்து ஆவிக்குரிய ஜீவிகளாகக் கருதப்பட்டாலும், உயிர்த்தெழும் வரைக்கும் நாம் நிஜமான ஆவிக்குரிய ஜீவிகள் அல்ல என்பதை நினைவில் நிறுத்தவேண்டும். (ரோமர் 8:23, 25; எபேசி.1:13, 14; ரோமர் 6:10, 11) நாம் ஆவியில் பிறந்து ஆவிக்குரிய ஜீவிகளாகும்போது, மாம்ச ஜீவிகளாக ஒருபோதும் இருக்க மாட்டோம். ஏனெனில், "ஆவியினால் பிறப்பது ஆவியாய் இருக்கும்."

மாம்சத்தில் பிறப்பதற்குமுன் மாம்சத்தில் கருவாக வேண்டியது அவசியம். அவ்வாறே ஆவிக்குரிய சாயலில் உயிர்த்தெழுதலில் பிறப்பதற்கும் முன்னர், ஞானஸ்நானத்தில் ஆவியில் ஜெனிப்பிக்கப்படுதல் நிகழ வேண்டும். பூமிக்குரியவனான ஆதாமின் சாயலில் பிறக்கின்ற அனைவரும் மாம்சத்தில், முதலில் ஜெனிப்பிக்கப்பட்டனர். இவர்களில் சிலர் தேவ ஆவியினால் சத்திய வசனத்தின்மூலம் மீண்டும் ஜெனிப்பிக்கப்பட்டு, ஏற்றவேளையில் பரத்திற்குரிய சாயலில் முதலாம் உயிர்த்தெழுதலில் ஆவியில் பிறப்படைவார்கள். "மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருப்பதுபோல, வானவருடைய சாயலையும் நாம் (திருச்சபை) அணிந்துகொள்வோம், (1 கொரி.15:49; எபி. 6:6) மறுதலிக்காமல் இருந்தால் பெற்றுக்கொள்வோம்.

பரத்திற்குரிய அழைப்பைப் ஏற்றுக்கொள்வதும் அதற்கான தேர்ப்படிதலின் ஞானஸ்நானத்தைப் பெறுவதும், ஒரு நொடிப்பொழுதில் தீர்மானிக்கப்படக்கூடிய காரியமானாலும், ஒவ்வொரு எண்ணத்தையும் தேவ சிந்தைக்கு இசைவாக்குவது படிப்படியாக, நடைபெறக்கூடிய காரியம். மாம்ச சுபாவத்தின்படி பூமிக்குரியவைதயே நாடும் மனதை படிப்படியாக பரத்திற்குரியவைகளை நாடும்படி வளைப்பதே ஒரு படிப்படியான செயல்முறையாகும். இந்த செயல்முறைக்கு மறுரூபமாகுதல் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். "நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான



சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே (பரத்திற்குரிய சாயலுக்கு) மறுரூபமாகுங்கள்." (ரோமர் 12:2)

பவுல் அப்போஸ்தலனின் இந்த வார்த்தைகள் அவிசுவாச உலகிற்காக எழுதப்படவில்லை. மாறாக, அவன் யாரை சகோதரர்கள் என்று அங்கீகரித்தாரோ அவர்களுக்காகவே எழுதப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். முந்தின வசனத்தில் இது காண்பிக்கப்பட்டுள்ளது. "அப்படியிருக்க சகோதரரே, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்... உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்."

ஒரு மனிதன் பாவத்திலிருந்து நீதிக்கு மனந்திரும்புதலையும், அவிசுவாசத்திலிருந்தும் தேவனுக்கு விரோதமாயும் நம்பிக்கையற்றதுமான நிலைமையிலிருந்தும் தேவன்மேல் நம்பிக்கை வைக்கும் நிலைமைக்குத் திரும்புவதைத்தான் மறுரூபமாகுதல் என பவுல் குறிப்பிடுகிறார் என்று பொதுவாக நம்பப்படுகிறது. உண்மையாகவே இது ஒரு மாபெரும் மாற்றம் – மறுரூபம் அடைதலும் ஆகும். ஆயினும் பவுல் குறிப்பிடுகின்ற மறுரூபம் இதுவல்ல. குணநலன்களில் மாற்றம் அடைவதே இங்கு கூறப்பட்டுள்ளது. ஆனால், பவுல் சுவிசேஷ யுகத்தில் சில குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ள சுபாவ மாறுதலையே குறிப்பிட்டு, அந்த நிபந்தனைகளை நிறைவேற்றும்படி "விசுவாசிகளை" வலியுறுத்துகிறார். அவர்களது குணாதிசயங்கள் முன்கூட்டியே மாறாதிருந்தால் அவர்களை சகோதரரே என்று அழைத்திருக்கவோ, பரிசுத்தரும் தேவனுக்கு பிரியமான ஜீவபலி செலுத்துபவர்கள் என்றும் எழுதியிருக்கவோ மாட்டார். ஏனெனில், கிறிஸ்துவின் மீட்கும்பொருளின்மேல் விசுவாசம் வைத்து நீதிமான்களாக்கப்பட்டவர்கள் மட்டுமே, தேவனுக்கு பரிசுத்தரும் பிரியமுள்ளவர்களுமாகக் கருதப்படுகிறார்கள். தற்கால மாம்சீக சந்தோஷங்களையும் உரிமைகளையும் சலுகைகளையும், புறக்கணித்து, எல்லா உரிமைகளையும் மற்றும் எதிர்கால மானிட ஜீவியத்தையும் ஒப்புக்கொடுத்து, தமது பூரண மனிதத்துவத்தை ஒரு பலியாக இயேசு ஒப்புக்கொடுத்ததுபோல, சுவிசேஷ யுகத்தில் தங்களது

நீதிமான்களாக்கப்பட்ட மனிதத்துவத்தை ஒரு ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தவர்களுக்கு சுபாவ மறுரூபமடைதல் பலனாக கிடைக்கிறது. முதலாவது பலி செலுத்தப்பட வேண்டியது மனித சித்தத்தையே. அதன்பிறகு நாம் நம் சுய சித்தத்தாலோ அல்லது பிற மனித சித்தத்தாலோ நடத்தப்படாமல், தெய்வீக சித்தத்தால் நடத்தப்பட வேண்டும். தெய்வீக சித்தமே நமது சித்தம் ஆகிறது. இனி மனித சித்தம் நம்முடையது அல்ல. அது வேறொருவரின் சித்தம்போல் எண்ணி வெறுத்துத் தள்ளப்பட்டு, பலியிடப்பட வேண்டும். தெய்வீக சித்தமே நமது சித்தமாக ஆனதால், தெய்வீக நிலைப்பாட்டிலிருந்து சிந்திக்கவும் காரணகாரியத்தைப் பகுத்தறியவும், தீர்மானம் பண்ணவும் வேண்டும். தேவனுடைய திட்டம் நம்முடைய திட்டமாக ஆகிறது. தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் ஆகின்றன. இந்த மறுரூபமாகுதலை உண்மையும் உத்தமுமான விசுவாசிகளாக தங்களை ஒப்புக்கொடுத்து, இந்த மாறுதலை அனுபவித்தவர்கள் தவிர வேறு எவராலும் புரிந்துகொள்ள முடியாது. இந்த சுபாவ மாறுதலுக்கு உட்படும் முன்பாக, பாவமில்லாத எவற்றையும், நாம் சந்தோஷமாக அனுபவித்திருக்கலாம். ஏனெனில், உலகமும், அதில் உள்ள நன்மைகள் அனைத்தும் மனிதனுடைய மகிழ்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டவைகளே. ஆனாலும், பாவமுள்ள இயற்கை குணத்தை முற்றிலும் கீழ்ப்படுத்துவது நமக்குக் கடினமான ஒன்றாகும். ஆனால், தேவனோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்து, மறுரூபம் ஆக்கப்பட்டு வருபவருக்கோ, பாவத்தைக் கீழ்ப்படுத்த எடுக்கும் முயற்சியோடுகூட, தற்காலத்திலுள்ள நன்மையானவைகளை பலி கொடுத்து, நமது முழு ஆற்றலையும் தேவ ஊழியத்திற்கென்று அர்ப்பணிக்க வேண்டும். ஊழியத்திலும், பலி செலுத்துவதிலும் உண்மையாக இருப்பவர்கள் இந்த உலகத்தில் தங்களுக்கு இளைப்பாற இடமில்லை என்றும், நிரந்தரமாக தங்குவதற்கு இங்கு நிலையான பட்டணம் இல்லை என்றும், அனுதினமும் உணர்வார்கள். "தேவனுடைய பிள்ளைகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் இளைப்பாறுதலையே" அவர்களது இருதயமும், நம்பிக்கையும் நோக்கும். அந்த ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையே அவர்களை உயிர்ப்பித்து, தொடர்ந்து பலி செலுத்தி வளர்ச்சியடைய தேவையான உற்சாகத்தைத் தருகிறது.

இவ்வாறாக, ஞானஸ்நானத்தின் மூலமாக, சிந்தை புதிதாக்கப்பட்டு,



மறுரூபமடைந்து, விருப்பங்களும், நம்பிக்கைகளும், குறிக்கோள்களும் ஆவிக்குரியவைகளையும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மனிதக் கண்களால் காணக்கூடாத காரியங்களையும் நோக்கி மேலே செல்லவும் மாம்ச எண்ணங்கள், நம்பிக்கை முதலியவைகள் படிப்படியாக மரித்துப்போகவும் ஆரம்பிக்கிறது. இவ்வாறாக மறுரூபம் அடைந்தவர்களும், மறுரூபமாகி வருபவர்களும் "புதிய சிருஷ்டிகளாக," தேவனால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாக, தெய்வீக சுபாவத்தில் பங்கடையப் போகிறவர்களாக கருதப்படுகிறார்கள். "புதிய சிருஷ்டிகளுக்கும்," "நீதிமான்களாக மட்டும் ஆக்கப்பட்ட விசுவாசிகள் மற்றும் சகோதரர்களுக்கும்" இடையே உள்ள வித்தியாசத்தை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். நீதிமானாக மட்டும் ஆன விசுவாச வகுப்பார், மண்ணானவர்கள் பூமிக்குரியவர்களாகவே ஜீவிக்கிறார்கள். மேலும், பாவ நம்பிக்கை, விருப்பங்கள், நோக்கங்கள், குறிக்கோள்களிலிருந்து மீண்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட எல்லாவற்றையும் திரும்பக்கொடுத்தலின் காலங்களில் பெற்று முழு மன நிறைவடைவார்கள். ஆனால், புதுசிருஷ்டி வகுப்பாரோ கிறிஸ்துவைப்போல இவ்வுலகத்திற்குரியவர்கள் அல்ல. இவர்களது நம்பிக்கைகள் காணப்படாதவைகளை மையமாகக் கொண்டு கிறிஸ்து வீற்றிருக்கும் தேவனது வலதுபாரிசத்தில் இவர்களது நம்பிக்கை நிலைத்திருக்கிறது. பரலோகத்திற்குரிய நம்பிக்கையினால் ஜெனிப்பிக்கப்பட்டு, பரலோகத்திற்குரிய வாக்குத்தத்தங்களின் மகிமைகளைக் கண்டு, தெய்வீகத் திட்டத்தில் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்கை அறிந்தவர்கள், மாம்சீக மனிதனை திருப்திப்படுத்துகிற உலக மகிமையின் நம்பிக்கையால் திருப்தியடையமாட்டார்கள். பூரணதெய்வீக சுபாவத்தை (அதாவது தெய்வீக சிந்தை, சரீரம்) சுதந்தரித்துக்கொள்வதற்கு, தற்போது பெற்றிக்கிற புதிய தெய்வீக சிந்தையே அச்சாரமாய் இருக்கிறது. தெய்வீக சரீரமென்றுக் கூறப்படுவதைக் குறித்து சிலர் கொஞ்சம் திடுக்கிடுகிறார்கள். இயேசுகிறிஸ்து தற்போது பிதாவின் சொரூபமாயிருக்கிறார் என்றும், ஜெயங்கொள்ளுகிறவர்கள் அவரது சாயலை அடைந்து, "அவர் இருந்த வண்ணமாகவே அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்பார்கள்" (1 யோவான் 3:2) என்றும் வேதாகமம் கூறுகிறது. "ஜென்ம சரீரமுமுண்டு (மனித சரீரம்) ஆவிக்குரிய சரீரமுமுண்டு." (1 கொரி.15:44) நம் தெய்வீகத் தகப்பனையோ அல்லது நம் கர்த்தராகிய இயேசுவையோ சரீரமற்ற

மாபெரும் சிந்தையை மாத்திரம் உடையவர்களாக கற்பனை செய்யமுடியாது. அவர்கள் மகிமை நிறைந்த ஆவிக்குரிய சரீரங்களை உடையவர்கள். ஆகிலும், அந்த மகிமை எவ்வளவு உள்ளதும் மேன்மையுமானது என்று இன்னும் வெளிப்படவில்லை. நாம் தெய்வீக சுபாவத்தில் அவரோடு பங்கடையும்வரை வெளிப்படுத்தப்படாது.

மனித சிந்தையிலிருந்து ஆவிக்குரிய சிந்தைக்கு மறுரூபமடைவது படிப்படியாக நடைபெறும் ஒரு செயல்முறை என்றாலும், மனித சரீரத்திலிருந்து ஆவிக்குரிய சரீரத்திற்கு மாறுவது படிப்படியாக நடைபெறாமல் ஒரு நொடிப்பொழுதில் உண்டாகும். (1 கொரி.15:52) பூமிக்குரிய மண்பாண்டமாகிய சரீரத்தில் இந்த தெய்வீக சிந்தை என்கிற பொக்கிஷத்தை நாம் தற்போது பெற்றிருக்கிறோம் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். ஆனால், ஏற்றகாலத்தில் இந்த பொக்கிஷம் அதற்குரிய மகிமை நிறைந்த ஆவிக்குரிய சரீரத்தில் இருக்கும்.

ஆவிக்குரிய சுபாவத்தின் சாயலைப்போலவே மாம்ச சுபாவமும் இருக்கிறது என்பதை நாம் முன்பே கண்டோம். (ஆதி.5:1) உதாரணமாக, தேவனுக்கென்று ஒரு சித்தம் இருப்பதுபோலவே, மனிதனுக்கும் தேவதூதர்களுக்கும் உண்டு. தேவனுக்கு புத்திகூர்மையும், நினைவாற்றலும் இருப்பதுபோலவே அவருடைய அறிவுள்ள சிருஷ்டிகளாகிய தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் உண்டு. சிந்தையின் செயல்பாடுகள் இம்மூவருக்கும் ஒன்றே. ஒரே விதமான சூழ்நிலையில், ஒரே புள்ளி விபரங்களை பகுத்தறியும் இம்மூவரும் வெவ்வேறு சுபாவங்களை உடையவர்களாக இருந்தாலும், ஒருமைப்பட்ட தீர்மானத்திற்கு வரமுடியும். தெய்வீக சுபாவம், தூதர்கள் மற்றும் மனித சுபாவங்களில் ஒரே விதமான மனத்திறன் இருந்தபோதிலும், ஆவிக்குரிய சுபாவங்களை உடைய அவ்விரு சுபாவங்களும், மனித சுபாவத்திற்கு அப்பாற்பட்டதும் மேலான வல்லமை உடையதுமாயிருக்கிறது. அதாவது, நாம் நினைக்கிறபடி அந்த வல்லமைகளானது, யோசிக்கும் திறன் தவிர எல்லாத் திறன்களுக்கும் இது பொருந்தாது. மாறாக பரந்து விரிந்த சக்தியாயும், வேறுபட்ட சூழ்நிலைகளில் செயல்படக்கூடியதாயும் இருக்கிறது. பூமிக்குரிய பரிபூரண மனித சுபாவமே ஆவிக்குரிய சுபாவத்தின் சாயலாக இது பரத்திற்குரிய அதே மனத்திறனை உடையதாயிருந்தாலும் பூமிக்குரிய



எல்லைக்குட்பட்டது. ஆகவே, இந்த எல்லைக்கு மேற்பட்ட காரியங்களில் தேவன் எவற்றை மனித நன்மைக்கும் மகிழ்ச்சிக்கும் உகந்தது என்று கருதி வெளிப்படுத்துகிறாரோ, அதைத்தவிர வேறொன்றையும் அவனால் அறிந்துணர முடியாது.

ஆவிக்குரிய சுபாவத்தில் தெய்வீக சுபாவமே உன்னதமானது. தேவனுக்கும் அவரது சிருஷ்டிகளுக்கும் இடையே உள்ள தூரம் எப்படி அளவிட முடியாததாக இருக்கின்றது! அவரது வல்லமை வாய்ந்த கிரியைகளில் சிலவற்றின் அகன்று விரிந்த காட்சிகளை நம் கண்களுக்குமுன் ஒரு கணநேரம் கடந்துபோக அவர் அனுமதிக்கும்போது, அவரது தெய்வீக ஞானம், வல்லமை, நன்மை, இவற்றின் மகிமையை ஓரளவு மட்டுமே நம்மால் காணும்படி பண்ணுகிறார். ஆனால், பரிபூரண மாசிட மகிமையை நம்மால் கணித்து அறிந்து உணரமுடியும்.

இந்த சிந்தனைகளை தெளிவாக மனதில் நிறுத்திக்கொள்ளும்போது, ஒரே மனவல்லமையைக்கொண்டு, மேலான நிலைமைக்கு செல்வதற்கு அதாவது மனித சுபாவத்திலிருந்து ஆவிக்குரிய சுபாவத்திற்கு மாறுதலடைதல் எப்படி நிகழ்கின்றது என்று அறிந்துணரமுடிகிறது. பரலோகத்திற்குரிய சரீரத்தை அணிந்துகொள்ளும்போது, அந்த மகிமை நிறைந்த சரீரத்திற்குரிய பரலோக வல்லமையையும், மேலான சிந்தனா சக்தியையும், வல்லமையின் விசாலத்தையும் பெற்றுக்கொள்வோம்.

ஞானஸ்நானத்தில் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள், பூமிக்குரியவற்றிலிருந்து பரத்திற்குரியவற்றிற்கு மனதில் மாறுதல் அல்லது மனம் மறுரூபமாகுதலுக்கு இப்பூமியிலேயே பெறுகிற அனுபவமே, சுபாவமாறுதலின் ஆரம்பமாக உள்ளது. இது மூளையில் உண்டாகும் மாற்றமோ அல்லது அற்புதமோ அல்ல. மாறாக, நமது சிந்தையின் நோக்கமும் நமது சித்தமும்தான் மாறுதலடைகின்றன. நம்முடைய தனித்தன்மை என்பது, நம் சித்தம் மற்றும் உணர்வுகளை அடிப்படையாகக்கொண்டது. ஆகவே, நமது சித்தமும் உணர்வுகளும் மாறும்பொழுது நாம் மறுரூபம் அடைந்து பரலோக சுபாவத்திற்குரியவர்களாக கருதப்படுகிறோம். மெய்யாகவே, இது ஒரு

மிகச் சிறிய ஆரம்பமாக இருக்கிறது. ஆவியில் ஜெனிப்பிக்கப்படுதல் இவ்வாறே ஆரம்பிக்கிறது. ஆயினும் ஆவியில் பூரணமாகப் பிறப்பதற்கு இதுவே அச்சாரமாகிறது (எபே.1:13, 14)

நாம் மாறுதலடைந்ததை நாமே எப்படி அறியமுடியும்? என்று சிலர் கேட்கலாம். இந்த மகிமையில் பங்குபெறுகிறதற்காக துன்பப்பட்டு பணி செலுத்திய அதே ஜீவிகள் தான் நாம் என்பதை, அப்போது எப்படி நாம் அறிந்துகொள்ள முடியும்? அதேபோல மாறுதலடைந்தபின்பு நாம் அதே உணர்வுள்ள ஜீவிகளாய் இருப்போமா? ஆம், நிச்சயமாகவே. கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால் அவருடனேகூடப் பிழைத்துமிருப்போம். (ரோமர் 6:8) மனித சரீரத்தில் நாம் அனுதினமும் அடையும் மாறுதல்களினால் கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களையோ, நாம் யார் என்பதையோ மறப்பதில்லை.*

பூமிக்குரிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, மாம்சீக சுபாவத்தில் தேவகுமாரனாகிய இயேசு மனிதனாக, ஆவிக்குரிய நிலையிலிருந்து, மனித நிலைமைக்கு மாறினபோது அடைந்த அனுபவங்களை நாம் புரிந்துகொள்ள மேற்கூறப்பட்ட சத்தியங்கள் உதவுகின்றன. அந்த இரண்டு நிலைமைகளிலும் அவர் ஒரே ஜீவியாக இருந்தபோதிலும், முதலாவது நிலைமையில் அவர் ஆவிக்குரியவராகவும், இரண்டாவது நிலைமையில் மனித நிலையிலும் இருந்ததைக் கவனிக்க வேண்டும். ஒரு சுபாவம்

---

*நமது மனித சரீரம் தொடர்ச்சியான மாறுதலை அடைகிறது. ஒவ்வொரு 7 வருடங்களுக்கு ஒருமுறை நம் உடலிலுள்ள அணுக்கள் அனைத்தும் முழுமையாக மாற்றமடைகின்றன என்று விஞ்ஞான ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது. ஆகவே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடி, மனித சரீரத்திலிருந்து ஆவிக்குரிய சரீரத்திற்கு மாறும்போது, நினைவாற்றலோ அல்லது அடையாளங்களோ அழிக்கப்படுவதில்லை. மாறாக அதன் வல்லமையும் திறனும் அதிகரிக்கும். தற்போது நாம் பெற்றுள்ள அதே தெய்வீகசிந்தை, அதே பகுத்தறியும் வல்லமை ஆகியவை, புதிய ஆவிக்குரிய சரீரத்திற்கு இசைவாக அளவிடமுடியாத ஆழம் உயரம் அளவிற்கு விரிவடையும். நினைவாற்றலானது நம் குழந்தைப்பருவம் முதல் நம் வாழ்க்கை முழுவதும் நடந்தவற்றை நினைவுபடுத்துவதோடு, நமது பலியின் ஜீவியத்தின் மகிமை நிறைந்த வெகுமதியை முழுமையாகப் புரிந்துகொள்ளும்படி செய்யும். ஆனால், மனிதனாகவும் ஆவிக்குரிய சுபாவத்தின் ஒரு சாயலாக இல்லாவிடில் இவையனைத்தும் சாத்தியமல்ல.



மற்றொரு சுபாவத்திற்கு ஒப்பாக இருந்தபோதிலும், இரண்டு சுபாவங்களும் வெவ்வேறானதும், வித்தியாசமானதாயும் உள்ளன. ஆகவே, இந்த இரண்டுக்கும் ஒரே நினைவாற்றல் (Memory) உள்ளது. இயேசு தாம் பூரண மனிதனாகும்முன், தாம் பெற்றிருந்த மகிமையை உணர்ந்திருந்தார். ஆனால், மனிதனான பின்போ அம்மகிமையை மாத்திரம் (நினைவுகளை அல்ல) இழந்தார். அவரது வார்த்தைகள் நிரூபிப்பதாவது: "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்." (யோவான் 17:5) இது ஆவிக்குரிய சாயலின் மகிமையாகும். இயேசுவின் இந்த ஜெபத்திற்கு பதிலளிக்கும் விதமாக, அவர் பெற்றிருந்த ஆவிக்குரிய சுபாவத்தைக் காட்டிலும் மகா உன்னத சுபாவமாகிய தெய்வீக சுபாவத்திற்கு கிறிஸ்துவை உயர்த்தி, தேவன் அவரைக் கனப்படுத்தினார்.

அப்பவுலின் வார்த்தைகளை மறுபடியும் குறிப்பிடும்போது அவர், உலகத்தோடு ஒத்துப்போகாமல், தெய்வீக சாயலுக்கு உங்களை மறுரூபப்படுத்துங்கள் என்று கூறாதிருப்பதை நாம் கவனிக்கவேண்டும். மாறாக, "உலகத்திற்கு ஒத்தவர்களாயிராமல்... மறுரூபமாகுங்கள்" என்றே குறிப்பிடுகின்றார். இவ்வாறு இது நன்கு விளக்கப்பட்டுள்ளது. ஆனால், நாம் நம்மைச் சுற்றிலும் உள்ள இவ்வுலக ஆதிக்கங்களுக்கும், உலகத்தின் ஆவிக்கும் இணங்கி உலகத்தோடு நாம் இசைவாகும்படி இடமளிக்கிறோம். அல்லது தேவசித்தத்திற்கு – பரிசுத்த ஆவியின் சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, தேவ வசனத்தின் மூலமாக, பரலோக ஆதிக்கங்களின் மூலம் மறுரூபம் அடைகிறோம். நீங்கள் தேவனுக்கென்று நல்மனசாட்சியின் உடன்படிக்கையின் மூலம் பிரதிஷ்டை செய்திருந்தால் எந்த ஆதிக்கங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறீர்கள்? தேவ சித்தத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு மறுரூபம் ஆகும்பொழுது, தற்காலத்தில் பல பாடுகளையும், தியாகங்களையும் அடைந்தபோதிலும், இதன் முடிவோ மகிமையானதாக இருக்கும். நீங்கள் இந்த மறுரூபமாகும் ஆதிக்கங்களுக்கு உட்பட்டு வளரும்போது, எது நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான தேவ சித்தம் என்று உணர்ந்து, அனுதினமும் அதை

நிறைவேற்றுவீர்கள்.

தேவனுடைய வசனத்தில் பூமிக்குரிய வாக்குத்தத்தங்களும், பரத்திற்குரிய வாக்குத்தத்தங்களும் அடங்கியிருந்தபோதிலும், பரத்திற்குரிய வாக்குத்தத்தங்களே நம்முடையது என, தங்களுடைய அனைத்தையும் பலிபீடத்தின்மேல் தத்தம் செய்தவர்கள் நினைவில் நிறுத்தவேண்டும். நமது பொக்கிஷம் பரலோகத்தில் இருக்கிறபடியால், நமது இதயமும் தொடர்ந்து அங்கேயே இருக்கவேண்டியது அவசியம். நமது அழைப்பு ஆவிக்குரிய சுபாவத்தினைப் பெறும்படிக்கு மட்டுமல்ல, அதன் மேலான நிலையாகிய தெய்வீக சுபாவத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். (2 பேதுரு 1:4; எபிரேயர் 1:4) இந்த பரம அழைப்பு சுவிசேஷ யுகத்தில் மட்டுமே அளிக்கப்படுகிறது. அதற்கு முன்பு ஒருபோதும் இருந்ததுமில்லை. அதற்குப்பின் இருக்கப்போவதுமில்லை. சுவிசேஷயுகம் துவங்குவதற்கு முன் பூமிக்குரிய அழைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனாலும், அது சரிவர திறனிக்கப்படாமலும், உணர்ந்துகொள்ளப்படாமலும் இருந்தபோதிலும், இந்த அழைப்பு சுவிசேஷ யுகத்திற்குப் பிறகு மீண்டும் தொடரும். பரிபூரண மனித சுபாவத்திற்கு சீர் பொருந்துபவர்களுக்கு ஜீவனும், கிறிஸ்துவின் சரீரமாகும் பந்தயப் பரிசைப் பெறும்படி ஓடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு அழியாமையும் இந்த யுகத்திலேயே வெளியாக்கப்பட்டிருக்கின்றன. (2 தீமோ.1:10) மனித சுபாவமும் ஆவிக்குரிய சுபாவங்களும், பரிபூரண நிலையை அடையும்போது மகிமை பொருந்தியிருக்கும். ஆனாலும், இவை இரண்டும் வெவ்வேறானதும் வித்தியாசமானதுமாகும். தேவனுடைய கிரியை பூர்த்தியாகும்போது, உயிருள்ளதும் உயிரற்றதுமான அனைத்தும் பலவகைகளில் தங்கள் அழகை வெளிப்படுத்தி, ஒன்றுக்கொன்று இசைவாக இருந்து, தேவனோடும் இசைந்து அவரை மகிமைப்படுத்தும்.

### தேவனது திருச்சபை

"சீயோனே எழும்பு! நித்திய மகிழ்ச்சியின் சங்கீதங்களால் உன்னை வெளியரங்கமாக்கு,
உன் விரோதியை அழித்த தேவனுக்கே, நித்திய துதியை உரித்தாக்கு.
உன்னதங்களில் இருந்து உயிர்ப்படும் ஒளிக்கதிர்களைப் பெற
தேவனது திருச்சபையே விழித்திரு! எழுந்திரு!



பூமியிலும் அதன் ஜாதியினாலும் கறைபடிந்த உன் வஸ்திரம் தூய்மைபெற
உன் மகிமை நெருங்கி வருகிறது.

"உன்னை பூமிக்கு மேலாக உயர்த்தி நிறுத்துவதற்கு,
தேவனது வல்லமை செயலாக்கம்பெறும்,
உன் புலம்பலை துதியின் நடனமாக மாற்றுவார்,
உன் துக்கம் சந்தோஷமாய் மாறும்.
பரிசுத்த வஸ்திரங்களை அணிந்து,
பாவமாக்கும் நீதியின் ஆடையால் உன்னை அலங்கரித்துக்கொள்;
பரிசுத்தமும் பாதுகாப்பும் நிலையானதுமான வழியில்
உன் ராஜா உன்னை நடத்துவார்."

* * * *

# அத்தியாயம் – 11

## மூன்று வழிகள் – விசாலமான வழி, நெருக்கமான வழி, பெரும்பாதையான வழி

கேட்டுக்குப் போகிற விசாலமான வழி – ஜீவனுக்குப் போகிற நெருக்கமான வழி – ஜீவன் என்றால் என்ன? – தெய்வீக சுபாவம் – தெய்வீக சுபாவத்திற்கும் மனித சுபாவத்திற்கும் உள்ள சம்பந்தம் – நெருக்கமான வழியின் முடிவில் வைக்கப்பட்டிருக்கும் பரிசு – சுவிசேஷ யுகத்திற்கு மட்டுமே உரிய பரம அழைப்பு – நெருக்கமான வழியின் கஷ்டமும், அபாயங்களும் – பெரும்பாதையாகிய பரிசுத்த வழி.

"கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமாகவும் இருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப்போகிற வாசல் எத்தனை நெருக்கமானது, அவ்வழி எத்தனை இடுக்கமானது. அவ்வழியைக் கண்டுபிடிப்பவர்கள் சிலர்." (மத். 7:13, 14) (Diaglott)

"அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப்போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை; அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்." (ஏசா. 35:8–9)

"விசாலமான வழி," "நெருக்கமான வழி" மற்றும் "பெரும்பாதையான வழி" என்ற மூன்று வழிகளும் நம் கவனத்தை வேதாகமத்தின் பக்கமாக ஈர்க்கின்றன.

### கேட்டுக்குச் செல்லும் விசாலமான வழி

விழுந்துபோன மனுக்குலத்தார் நடப்பதற்கு சுலபமாக இருப்பதனாலேயே இவ்வழிக்கு இந்தப் பெயரிடப்பட்டது. ஆறாயிரம்



வருடங்களுக்கு முன்பதாக, ஆதாம் (முழு மனுக்குலமும் அவருக்குள்ளானதாக) பிறுதலுக்குட்பட்டு ஒரு பாவியானபோது, அழிவுக்குரிய தண்டனையைப் பெற்று, இந்த வழியில் முதலாவது பிரவேசித்து, தொளாயிரத்து முப்பது வருடங்களாக அதில் நடந்து, அதன் முடிவாகிய அழிவை அடைந்தார். மனுக்குலத்திற்கு ஆதாம் பிரதிநிதியாக இருந்தபடியால், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கீழ்நோக்கிச் செல்லும் பாதை அதிகமதிகமாகத் தேய்ந்துபோனதால், மனிதர்கள் அதிவிரைவாக அழிவுக்குச் செல்கின்றனர். ஏனெனில், இவ்வழியானது பாவத்தினால் வழுக்கும் தன்மையையும், சேற்றையும், பனிக்கட்டிபோல வழுவழுப்பும் உள்ளதுமானபடியால் அழிவு சீக்கிரம் நேரிடுகிறது. அவ்வழி வழுக்கும் தன்மையை உடையதாய் இருப்பதோடு மட்டுமல்லாமல், மனுக்குலம் இந்த அழிவை எதிர்த்துப்போராடும் சக்தியை நாளுக்குநாள் இழந்துவருவதால், தற்போதைய மனிதனின் சராசரி ஆயுள்காலம் 35 வருடங்கள் மட்டுமே. (இந்த புத்தகம் 1886ல் எழுதப்பட்டது) தற்போது ஜீவிக்கும் மனிதன், முதல் மனிதனாகிய ஆதாமைப் பார்க்கிலும் 900 வருடங்கள் முன்பாகவே இந்த வழியில்சென்று, அதன் முடிவாகிய அழிவை அடைகிறான்.

இந்த விசாலமான கீழ்நோக்கிச் செல்லும் வழியை ஆதாமின் சந்ததியார் 6000 வருடங்களாக நிலையாகப் பற்றிக்கொண்டனர். ஒருசிலர் மட்டும் தங்களுடைய வழியை மாற்ற முயன்று, மேல்நோக்கிய வழியில் நடக்க பிரயாசப்பட்டனர். மேல்நோக்கிய வழியைக் கண்டுபிடித்து முந்தைய பரிபூரண நிலையை அடைவது இயலாத காரியம் என்றாலும், அதற்காக முயற்சி செய்த சிலரின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியவை. அம்முயற்சிகளால் சிறுசிறு பலன்களும் இல்லாமல் இல்லை. 6000 வருடங்களாக மனுக்குலத்தை பாவமும், மரணமும் ஈவு இரக்கமில்லாமல் ஆட்சிசெய்து, விசாலமான பாதையில் அவர்களை அழிவுக்குள் நடத்திச் சென்றிருக்கிறது. இவ்வழியில் இருந்து தப்பித்து வெளிச்சத்திற்கு செல்லும் மார்க்கம் சுவிசேஷ யுகத்திற்கு முன்பு வரை ஏற்படுத்தப்படவில்லை. சுவிசேஷ யுகத்திற்கு முந்தைய யுகங்களின் சம்பவங்கள், பிற்கால சம்பவங்களுக்கு நிழலாகவும், அடையாளங்களாகவும், அவைகளின் மூலம் நம்பிக்கையின் வெளிச்சம் சிறிதளவு வெளிப்பட்டது. இதனை சிலர் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு அதன்படி செய்துவந்தனர். ஆயினும், நம் கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்து பிரசன்னமாகும் வரையிலும்,

மீட்பும் பாவமன்னிப்புமாகிய நற்செய்திகளும் இதன் பயனாக உண்டாகும் அழிவிலிருந்து உயிர்த்தெழுதலும், அப்போஸ்தர்களால் அறிவிக்கப்படும்வரையிலும் ஜீவனும் அழியாமையும் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படவில்லை. (2 தீமோ. 1:10) இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் போதித்த போதனைகள் ஜீவனை வெளியரங்கமாக்கின. மீட்பரின் பலி மற்றும் புண்ணியத்தின் அடிப்படையில் அனைத்து மனுக்குலமும் ஜீவனுக்கு திரும்ப கொண்டுவரப்படுதலையும் வெளியரங்கமாக்கின. இவ்வாறு ஜீவனைத் திரும்பக்கொடுத்தல் பழைய ஏற்பாட்டில் அநேக நிழல்களாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. இயேசுவும் அப்போஸ்தலர்களும் சுவிசேஷ யுகத் திருச்சபையாருக்கு வைக்கப்பட்டிருக்கிற பரம அழைப்பின் பந்தயப் பொருளாகிய அழியாமையையும் வெளியரங்கமாக்கியிருக்கிறார்கள்.

அழிவுக்குப்போகிற விசாலமான வழியிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு வழி ஏற்படுத்தப்பட்டிருப்பதை சுவிசேஷத்தின் மூலம் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தாலும், மனுக்குலம் பாவத்தினால் விழுந்து போனதினாலும், விரோதியாகிய சாத்தானால் குருடாக்கப்பட்டிருப்பதாலும், திரளான ஜனங்கள் இந்நற்செய்திக்கு செவி சாய்ப்பதில்லை. கிறிஸ்துவின் மூலமாக மனித ஜீவன் திரும்பக் கொடுக்கப்படும் என்ற ஜீவனுக்குரிய வாக்குத்தத்தத்தை நன்றியுணர்வோடு தற்போது ஏற்றுக்கொள்பவர்களுக்கு ஒரு புதிய மார்க்கம் திறக்கப்பட்டிருப்பதை கவனித்திருக்கிறார்கள். இதில் நுழைகின்ற உடன்படிக்கை செய்துகொண்ட விசுவாசிகள், மனித சுபாவத்திற்கு மேலான, மகா உன்னதமான சுபாவமாகிய ஆவிக்குரிய சுபாவத்திற்கு மாற்றப்படுவார்கள். இந்தப் புதிய மார்க்கமானது இராஜரீக ஆசாரியக் கூட்டத்தாராகிய நமக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நம் கர்த்தர் கூறியிருக்கிறார். (எபி. 10:20)

## ஜீவனுக்குப் போகிற நெருக்கமான வழி

இந்த வழி நெருக்கமானதாக இருக்கிறபடியால், அநேகர் அழிவுக்குச் செல்கிற விசாலமான வழியையே தெரிந்தெடுக்கின்றனர். "ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும் (கடினம்), வழி



நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்."

இந்த நெருக்கமான (இடுக்கமான) வழியைப்பற்றியும் அதன் அபாயங்களையும், கஷ்டங்களைப் பற்றியும், சிந்திப்பதற்கு முன்பாக, அவ்வழியின் முடிவாகிய ஜீவனைப்பற்றி கவனிப்போம். நாம் ஏற்கெனவே பார்த்தபடி மனித ஜீவனுக்கு மேலானதும், கீழானதுமான பல்வேறு ஜீவன் நிலைமைகள் இருக்கலாம். ஜீவன் என்ற சொல் பரந்துவிரிந்த, பலவகைப்பட்ட ஜீவன்களைக் குறிக்கின்ற பொதுவான சொல்லாகும். ஆனால் இங்கு கர்த்தர், ஜீவன்களிலேயே உயர்ந்த ஸ்தானமாகிய தெய்வீக சுபாவத்தை அதாவது அழியாமையை தம்மால் அழைக்கப்பட்டு அதற்காக ஓடுபவர்களுக்கு பந்தயப் பரிசாக அளிப்பதையே குறிப்பிடுகிறார். ஜீவன் என்றால் என்ன? நம்மில் இருக்கிற ஜீவனை நாம் உணர்வதோடு நில்லாமல், மிருக ஜீவன்களுக்குள்ளும், மரம் செடிகளிலும் இயங்குகின்ற ஜீவனைக் காண்கிறோம். உயர்ந்த சுபாவங்களையுடைய தேவ தூதர்கள் மற்றும் தெய்வீக சுபாவங்களிலும் இதே ஜீவன் இயங்குவதாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு விசாலமான கருத்தடங்கிய ஒரு சொல்லுக்கு பொருளை எப்படி நாம் விவரிப்போம்?

எல்லா ஜீவன்களிலும் இருக்கின்ற ஜீவ ஊற்றின் இரகசியங்களை நம்மால் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், தெய்வீக ஜீவியாகிய யேகோவா தேவனே ஜீவன்களுக்கெல்லாம் ஊற்று என்றும், இந்த ஜீவனிலிருந்தே மற்ற அனைத்து சிறு ஊற்றுக்களும் புறப்படுகின்றன என்றும் அறிகிறோம். உயிருள்ள அனைத்தும் ஜீவனுக்காக அவரையே சார்ந்திருக்கின்றன. அவராலேயே உண்டாக்கப்படுகின்றன. தேவனிடத்திலிருக்கின்ற ஜீவனும், அவரது சிருஷ்டிகளிடத்தில் இருக்கின்ற ஜீவனும் ஒன்றே. இது சக்தியின் ஊற்றே தவிர, இது ஒரு பொருளல்ல. இந்த பெலனானது, தேவனுக்குள் சுபாவத்திலேயே உள்ளது. ஆனால், அவரது சிருஷ்டிகளிடத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட சில நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கிறபடியால் தேவனே அதற்குக் காரணரும் ஊற்றும் கர்த்தாவுமாயிருக்கிறார். சிலர் எண்ணுகிறபடி, சிருஷ்டியானது சிருஷ்டித்தவரின் சுபாவமாகவோ அவரது சந்ததியாகவோ, எவ்விதத்திலும் இராமல், ஜீவனானது வழங்கப்பட்ட தேவனுடைய கைவேலைப்பாடாய் இருக்கின்றது.

தெய்வீக சுபாவத்தில் மட்டுமே ஜீவனானது சுயாதீனமாயும், எல்லையில்லாததாயும், வற்றாததாயும், எப்போதும் தொடர்ந்து இருக்கிறதாயும், மற்ற எந்த சூழ்நிலைகளாலும் பிறப்பிக்கக் கூடாததாயும், கட்டுப்படுத்தக்கூடாததாயும் இருக்கிறது என்ற உண்மையை உணர்ந்திருத்தல் வேண்டும். யேகோவா தேவன் தம் சிருஷ்டிகள் ஜீவித்திருப்பதற்காக, தாம் நியமித்ததும், பராமரித்து வருவதுமான இயற்பியல் (physics) கோட்பாடுகளுக்கெல்லாம் அதிகாரியாய் இருக்கிறார் என்று நாம் அறிகிறோம். தெய்வீக சுபாவத்திற்கு மட்டுமே உரிய இந்தக் குணமே அழியாமை என்று அழைக்கப்படுகிறது. நாம் முந்தின அதிகாரத்தில் பார்த்ததுபோல, அழியாமை என்பது மரிக்கக்கூடாத நிலைமை என்பதோடு, நோயற்றதும், வலியற்றதுமான நிலைமையாகும். மெய்யாகவே அழியாமை என்பதும் தெய்வீகத்துவம் என்பதும் ஒரே பொருளையுடைய இணையான இரு வார்த்தைகளே. சூரியனிலிருந்து பூமிக்கு ஒளியும் சக்தியும் கிடைப்பதுபோலவே, எல்லா உயிர்களும், ஆசீர்வாதங்களும், நன்மையுமான எந்த ஈவும் பரிபூரணமான எந்த வரமும், தெய்வீகத் தன்மையுடைய அழியாத ஊற்றிலிருந்து வருகிறது.

சூரியன் பூமிக்கு ஒரு பெரிய ஒளியின் ஊற்றாக இருந்து, அனைத்துப் பொருட்களுக்கும் தன் ஒளியைக் கொடுத்து, பொருளின் தன்மைக்குத் தகுந்தவாறு வெவ்வேறு நிறங்களையும் பலதரப்பட்ட வெளிச்சங்களையும் உண்டாக்குகிறது. சூரிய வெளிச்சம் ஒன்றாயினும், அது வைரத்தின்மேல் படும்போதும், செங்கல் மற்றும் பல்வேறு கண்ணாடிகளின்மேல் படும்போதும், பொருட்களின் தன்மைக்கேற்ற பற்பல நிறங்களை அளிப்பதோடு, குறிப்பிடும்படியாக பல விளைவுகளையும் உண்டாக்குகிறது. வெளிச்சம் ஒன்றுதான், ஆனாலும் பல்வேறு பொருட்களின் மீது ஒளிரும்போது, அந்தந்தப் பொருட்களின் கிரகிக்கும் சக்தியிலும், பிரதிபலிக்கும் தன்மையிலும் வித்தியாசப்படுகின்றன. அவ்வாறே ஜீவனுக்கடுத்த விஷயத்திலும் காணப்படுகின்றது. வற்றாத ஒரே ஜீவ ஊற்றிலிருந்தே அனைத்து ஜீவன்களும் வெளிப்படுகின்றன. கடலில் கிடைக்கும் சிப்பிக்கு ஜீவன் உள்ளது. ஆனாலும் செங்கல், சூரியனின் வெளிச்சத்தை வெளிப்படுத்தக்கூடாத தன்மையைப் பெற்றிருப்பதைப்போல் சிப்பியின் வடிவமைப்பும் அதிக ஜீவனைப்பெறவும்



உபயோகிக்கவும் முடியாத தன்மையைப் பெற்றிருக்கிறது. அதுபோலவே மிருகங்கள், பறவைகள், மீன்கள் போன்றவைகளும் அதிக ஜீவனை உபயோகிக்க முடியாத தன்மையைப் பெற்றிருக்கின்றன. சூரிய வெளிச்சம் பட்டு பிரகாசிக்கின்ற பலவகையான கண்ணாடிகளைப் போல் இந்தப் பலவிதமான ஜீவன்களும், தாங்கள் பெற்றிருக்கின்ற ஜீவனுக்குரிய வல்லமைகளை வெவ்வேறுவிதமாகக் காட்டுகின்றன.

சூரிய ஒளியைப் பெறும் பட்டை தீட்டப்பட்ட வைரக்கல்லானது, தன்னில்தானே ஒளியைப் பெற்று, பிரதிபலிப்பதுபோலவும், தானே ஒரு சிறு சூரியனைப் போலவும் விளங்குகிறது. "தேவ தூதரிலும் சற்று சிறியவனாக" உண்டாக்கப்பட்ட தேவனுடைய மேன்மையான சிருஷ்டிகளில் ஒருவனான மனிதனும் அவ்வாறே இருக்கின்றான். தேவன் ஏற்பாடு செய்திருக்கின்ற வழிமுறைகளின்படி ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும், அதைத் தற்காத்துக்கொள்ளவும், அந்த ஜீவனின் ஒளி மங்கிவிடாதபடி காத்துக்கொள்ளக்கூடியவாறு மனிதன் அற்புதமாக உருவாக்கப்பட்டான். ஆதாம் பாவத்தில் விழுவதற்கு முன்பாக பூமிக்குரிய சிருஷ்டிகள் அனைத்தைக்காட்டிலும் மேலான உயிரினமாக இருந்தாலும், உயிர் கொள்கையில் எந்தவிதமான வித்தியாசமுமில்லை. ஆனால், சூரிய ஒளி வைரத்தின் மீது படாவிட்டால் எந்தவொரு ஒளியையும் பிரதிபலிக்காததுபோலவே மனிதனுக்குள் உயிர் தொடர்ந்து இருக்கும் வரை மட்டுமே வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மனிதன் தன்னில்தானே ஜீவனுடையவனல்ல. எவ்வாறு வைரம் ஒளியின் ஊற்றாக இல்லையோ அதுபோலவே மனிதனும் ஜீவ ஊற்றல்ல. நாம் நமக்குள்ளாக வற்றாத ஜீவனை உடையவர்கள் அல்ல என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் உண்டு. அல்லது, வேறு வார்த்தையில் கூறுவோமாகில், நாம் அழியாமை வாய்ந்தவர்கள் அல்ல. பாவம் நுழைந்ததுமுதல் மனுக்குலத்தார் அனைவர் மேலும் மரணம் ஆட்கொண்டிருப்பதே அதற்கான சாட்சியாகும்.

ஏதேனிலிருந்த மனிதன் ஜீவ விருட்சங்களை பயன்படுத்தும் உரிமையை தேவன் ஏற்பாடு செய்திருந்தார். அவன் வைக்கப்பட்டிருந்த பரதீசு, "பார்வைக்கும் அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களால்" நிறைந்திருந்தது. (ஆதி.2:9,16,17) உண்ணுவதற்கு தேவன்

கொடுத்திருந்த பலவகை ஜீவ விருட்சங்களுள் ஒரு மரத்தின் கனி மாத்திரம் உண்ணக்கூடாது என்று தடை செய்யப்பட்டிருந்தது. நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை அப்போதைக்குமட்டும் புசிக்க வேண்டாம் என்று தடை செய்யப்பட்டிருந்தபோதிலும், அவன் ஜீவனோடு வாழும் பொருட்டு மற்ற எந்த மரத்தின் கனியையும் புசிக்கத் தடை செய்யப்படவில்லை. அவன் மீறுதலுக்குட்பட்ட பிறகு அந்த ஜீவ விருட்சங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, அதனால் மரணதண்டனையானது நிறைவேறும்படி செய்யப்பட்டது. (ஆதி. 3:22)

வைரக்கல் தொடர்ந்து பிரகாசிப்பது தொடர்ச்சியான சூரிய ஒளி வழங்கப்படுவதை சார்ந்தே இருப்பதுபோல், மனுக்குலத்தாரின் மகிமையும் அழகும் ஜீவ வல்லமை தொடர்ந்து அளிக்கப்படுவதையே சார்ந்திருக்கிறது. பாவத்தில் மனுக்குலம் வாழும் உரிமையை இழந்ததால், ஜீவனுக்குரிய நன்மைகள் நிறுத்தப்பட்டது. உடனடியாக மனிதன் தன் அறிவுக்கூர்மையையும் அழகையும் இழந்து இறுதியில் விழுந்துபோன தன் இறுதி அடையாளத்தை கல்லறையில் இழக்கிறான். அவனது வடிவ அழகு, பொட்டரிப்பைப்போல் அழிந்துபோகிறது. (சங். 39:11) தன்மேல் படும் ஒளியை நிறுத்தும்பொழுது, தன் அழகையும் பிரகாசத்தையும் வைரம் இழந்துவிடுவதைப்போல் மனிதனும் ஜீவ வல்லமையை தேவன் எடுக்கும்போது மரித்துப்போகிறான், "மனுப்புத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே?" (யோபு 14:10) "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான். அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களை கவனியான்." (யோபு 14:21) "நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." (பிரச. 9:10) ஆனால், மீட்கும்பொருள் கொடுக்கப்பட்டு, நம் மீட்பரால் மரண தண்டனைக்கு ஈடாக பலி செலுத்தி, தீர்ப்பை நீக்கினபடியால் சம்பத்தின் (மனிதன்) அழகு மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, நீதியின் சூரியன் தன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தோடு உதிக்கும்போது (மல்கி. 4:2), மனிதன் மீண்டும் சிருஷ்டிகரின் சாயலைப் பூரணமாய் பிரதிபலிப்பான். கிறிஸ்துவின் பாவ நிவாரண பலியின் மூலமாக "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் எழுந்திருப்பார்கள்." அப்பொழுது அனைத்துக் காரியங்களும் முந்தின நிலைமைக்கு திரும்பக்கொடுக்கப்படும். அனைத்தும் புதுசீரமைக்கப்படும். அந்நாட்களில் இரட்சகருக்கு கீழ்ப்படிபவர்கள் அனைவரும் பரிபூரண



மனித நிலையை முடிவில் அடைய, அதற்கேற்ற வாய்ப்புக் கொடுக்கப்படும்.

இருந்தபோதிலும் மேலே கூறப்பட்ட வெகுமதி நெருக்கமான வழியின் முடிவில் கிடைக்கும் வெகுமதியல்ல என்று இயேசு குறிப்பிடுகிறார். நெருக்கமான வழியில் நடப்பவர்களுக்கு "தெய்வீக சுபாவம்" வெகுமதியாக வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருப்பதை மற்ற வேதப்பகுதிகளிலிருந்து அறிகிறோம். அதாவது தன்னில்தானே ஜீவனுடைய நிலைமை, தெய்வீக சுபாவத்தில் மட்டுமே பெற்றிருக்கக்கூடிய உன்னத நிலைமையில் உள்ள ஜீவன்–அழியாமை. எப்பேர்ப்பட்ட ஒரு நம்பிக்கை! இப்படிப்பட்ட உன்னத மகிமையை அடையத் தேடுகிறோமா? உறுதியானதும், வெளிப்படையான இப்படிப்பட்ட அழைப்பு இல்லாவிடில் ஒருவரும் இதைப் பெற்றுக்கொள்ள நாட முடியாது.

தெய்வீக சுபாவம் அல்லது அழியாமை என்பது ஆதியில் தெய்வீகத் தன்மை உடையவருக்கே உரியது என்று 1 தீமோ. 6:14–16இல் நாம் வாசிக்கிறோம். "அவர் (இயேசு), அவருடைய காலத்தில் (ஆயிரமாண்டு யுகம்) நித்தியானந்தமுள்ள ஏக சக்ராதிபதியும், இராஜாதி இராஜவும் கர்த்தாதி கர்த்தரும் ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்." மற்ற ஜீவிகளான தூதர்கள், மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மீன்கள் போன்றவை தாங்கள் பெற்றிருக்கிற ஜீவ வடிவமைப்புக்கேற்றவாறு குணநலனிலும், வல்லமையிலும், தன்மையிலும் வேறுபட்டிருந்து, தங்களைச் சிருஷ்டித்தவர் மூலமாய்ப் பெற்றிருக்கிற சகலத்திலும் அவருக்குப் பிரியமாக நடந்துக்கொள்கிறது.

ஆதியில் யேகோவா மாத்திரமே சாவாமையைக்கொண்டிருந்தார். அந்த அழியாமையாகிய தெய்வீகச் சுபாவத்தை தம் குமாரனும், நம் கர்த்தருமாகிய இயேசுவுக்கு அளித்து, எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார் என்று அறிகிறோம். ஆதலால், இயேசு தற்போது பிதாவின் சாயலை (தன்மையின் சொரூபம்) அடைந்திருக்கிறார். (எபி. 1:3) ஆகவே, "பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராக இருக்கிறதுபோல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராக இருக்கும்படி

அருள்செய்திருக்கின்றார்." (யோவான் 5:26) (சாவாமை என்பதற்கு தேவனுடைய விளக்கம் என்னவெனில், மற்ற எந்த ஆதாரத்திலுமிருந்து ஜீவனை பெறாமல், மற்ற எந்தச் சூழ்நிலையையும் சார்ந்திராமல், தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருத்தல்) நம் கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்ததிலிருந்து இருவர் சாவாமை நிலையில் இருக்கின்றனர். அப்படிப்பட்ட நிலைமையே சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுக்கப்படும் ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய சபைக்கு அளிக்கப்படும். இது மாபெரும் தேவ கிருபையே! இந்த மாபெரும் பரிசை திருச்சபையில் பெயரளவில் உள்ள திரள்கூட்டத்தார் பெறுவதில்லை. மாறாக, குருவின் அடிச்சுவடுகளை நெருக்கமாய்ப் பின்பற்றி நடந்து, ஜெயங்கொள்கிற சிறுமந்தை வகுப்பாரே பெறுவர். அவர்கள் மரணபரியந்தம் நெருக்கமான வழியில் பலியின் ஜீவியம் ஜீவித்து, அவருக்கொப்பாக இருப்பர். இவர்கள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, தெய்வீகச் சாயலையும், சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்வார்கள். நெருக்கமான வழியில் நடப்போர் இந்த அழியாமையையும், சுயாதீனத்தையும் தம்மில்தாமே ஜீவனுடையவர்களாய் இருத்தலையும், தெய்வீகச் சுபாவத்தையும் அடையும்படி வழி நடத்தப்படுவர்.

இந்த வகுப்பார் பிரேதக் குழிகளிலிருந்து மனித ஜீவிகளாக எழுப்பப்பட மாட்டார்கள். ஏனெனில், கல்லறையில் அவர்கள் ஜென்ம சரீரமாக விதைக்கப்பட்டாலும், ஆவிக்குரிய சரீரமாகவே எழுப்பப்படுவார்கள் என்று அப்போஸ்தலர் உறுதிபடக் கூறுகிறார். பூமிக்குரிய மனித சுபாவத்தை இவர்கள் அனைவரும் முதலில் தரித்திருந்ததுபோல, பரலோகத்திற்குரிய சாயலை "மறுரூபமாக்கப்படுதலின்" மூலம் அணிந்து கொள்வார்கள். ஆனால், "இனி எவ்விதமாய் இருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை." ஆவிக்குரிய சரீரம் இன்னதென்று இன்னும் நாம் அறியவில்லை. ஆனால், "அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம்." மேலும், "இனி வெளிப்படவிருக்கும் மகிமையில் அவரோடுகூட பங்கடைவோம்." (1 யோவா. 3:2; கொலோ. 1:27; 2 கொரி. 4:17; யோவா. 17:22; 1 பேதுரு 5:10; 2 தெச. 2:14)

சுபாவ மாறுதலுக்கான பரம அழைப்பு, விசேஷமாக சுவிசேஷ யுக



காலத்திற்கு மட்டுமே உரித்தானது மட்டுமன்றி, இந்த யுகத்தில் முன் வைக்கப்பட்டிருக்கும் மேலான வெகுமதி இது மட்டுமே. ஆகையால், இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் எடுத்துரைத்த நமது கர்த்தரின் வார்த்தைகளின்படி தற்போது வைக்கப்பட்டிருக்கும் ஒரே பரிசையடைய, நெருக்கமான பாதையில் செல்லாத மற்ற அனைவரும், கேட்டுக்குப் போகிற விசாலமான பாதையில் செல்பவர்களோடு சேர்க்கப்படுகின்றனர். மற்றவர்கள் இன்னும் விசாலமான வழியிலேயே தொடர்ந்து இருக்கின்றனர். நெருக்கமான வழியில் நடப்போர் மட்டுமே, இவ்வுலகத்திற்கு வரும் தண்டனையிலிருந்து தப்பித்திருக்கிறார்கள். இப்பொழுது திறந்திருக்கக்கூடிய இந்த ஒரே மார்க்க வழியில், அநேக கஷ்டங்கள் இருக்கிறபடியால், ஒருசிலர் மட்டும் இதில் நடக்க கவனம் செலுத்துகிறார்கள். மனுக்குலத்தின் பெரும்பாலனோர் பலவீனத்தில் இருக்கிற முழு மனுக்குலமும் திருப்தியடைய உதவும் விசாலமான, சுலபமான வழியையே தெரிந்துகொள்கின்றனர்.

இந்த நெருக்கமான பாதையானது, அழியாமையாகிய ஜீவனில் முடிவடைகிற போதிலும், இது ஒரு மரணவழி என்றும் அழைக்கப்படலாம். ஏனெனில், மனித சுபாவத்தை மரணபரியந்தம் பலி செலுத்துவதன் மூலம் பெறப்படும் பரிசாக இது இருப்பதால் இவ்வாறு அழைக்கலாம். இது ஜீவனுக்கான மரணத்தின் நெருக்கமான பாதையாக இருக்கிறது. இந்த யுகத்தில் தாமாகவே முன் வந்து, தங்களை தேவனுக்கென்று தத்தம் செய்தவர்கள் அல்லது தங்களுடைய மனித உரிமைகளைப் பலிச் செலுத்தினவர்கள், ஆதாமினுடைய குற்றம் மற்றும் மரண தண்டனையிலிருந்து விடுதலைப் பெற்றதாகக் கருதப்படுகின்றனர். ஆனால் ஏற்றக்காலம் வரும்போது, இவர்கள் உலகத்தின் பொதுவான மனுக்குலத்தோடு, அக்குற்றம் மற்றும் மரணதண்டனையிலிருந்து நிஜமான விடுதலையைப் பெற்றுக் கொள்வார்கள். "மனிதனாகிய கிறிஸ்து இயேசு" உலகத்தாருக்காக தமது ஜீவனையே பலிசெலுத்தினதுபோல இவர்களும் அவரோடுகூட உடன்பலிசெலுத்துபவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் பலி குறைவானது என்பதால், மற்றவர்களுடைய பலி தேவை என்பதல்ல. ஆனால், அவருடைய பலியே போதுமானதாக இருந்தபோதிலும், அவருடைய மணவாட்டியாக அல்லது உடன் சுதந்தரவாளிகளாக ஆகும்பொருட்டு, அவருக்கு ஊழியஞ்செய்யவும்,

அவரோடுகூட பாடுபடவும் மாத்திரமே இவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உலகமானது மரணத்தீர்ப்புக்குள்ளாக ஆதாமோடுகூட மரித்துக்கொண்டிருக்கும் வேளையில், இந்தச் "சிறு மந்தையானது," ஏற்கெனவே விவரித்துள்ளபடி, விசுவாசம் மற்றும் பலி செலுத்தும் முறையின் மூலமாக, அவர்கள் கிறிஸ்துவோடுகூட மரிப்பதாக எண்ணப்படுகின்றனர். மேலும் அவரோடுகூட தெய்வீக சுபாவத்தையும், மகிமையையும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, தங்களுடைய மனித ஜீவியத்தை அவரோடுகூடப் பலிசெலுத்தி மரிக்கச் செய்கிறார்கள். நாம் நம்புகிறபடி அவரோடுகூட மரித்தோமானால், அவரோடுகூடப் பிழைத்துமிருப்போம். அவரோடுகூடப் பாடுபட்டால் அவரோடுகூட மகிமையும் அடைவோம். (ரோமர் 8:17; 2 தீமோ. 2:11, 12)

இப்பொழுது நெருக்கமான வழியில் மாபெரும் பந்தயப் பரிசைப் பெற ஓடிக்கொண்டிருப்பவர்கள் ஆயிரவருட அரசாட்சியின் துவக்கத்தில் பெருமதிப்பாகிய அழியாமையைப் பெற்றிருப்பார்கள். இவ்வாறு தெய்வீகச் சுபாவத்தையும் வல்லமையையும் ஆடையாக அணிந்தவர்கள், அந்த ஆயிரவருட ஆட்சியில் உலக ஜனங்களை முந்தின சீருக்குக் கொண்டுவந்து, ஆசீர்வதிக்கும் மாபெரும் பணிக்கு தயார்படுத்தப்படுவார்கள். சுவிசேஷ யுக முடிவில் அழியாமைக்குப் போகிற நெருக்கமான வழி அடைக்கப்படும். ஏனெனில், தேர்ந்தெடுக்கப்படும் "சிறு மந்தை" வகுப்பார் பரீட்சிக்கப்படுதலும் நிரூபித்தலும் நிறைவடைந்திருக்கும். "இப்போதே அனுக்கிரக (கிரேக்கச் சொல் – டெக்டோஸ். ஏற்புடைய, அங்கீகரிக்கப்படுகிற) காலம்." இக்காலத்தில் தங்களைத் தேவனுக்கேற்ற சுகந்த வாசனையாக பலி செலுத்துபவர்கள், இயேசுவின் புண்ணியத்தில் வந்து, அவரோடுகூட மரிப்பது, தேவனுக்குப் பிரியமான சுகந்த வாசனையான ஒரு பலியாக இருக்கிறது. ஆதாமுக்குத் தண்டனையாக கொடுக்கப்பட்ட மரணம் நிரந்தரமாக என்றென்றைக்கும் அனுமதிக்கப்படாது. ஆயிரவருட அரசாட்சியில் இது நீக்கப்படும். சுவிசேஷ யுகத்தில் மட்டுமே மரணமானது ஒரு பலியாக அங்கீகரிக்கப்பட்டு அதற்குரிய பலன் அளிக்கப்படும்.

இந்த யுகத்தின் பரிசுத்தவான்கள் மட்டுமே "புதிய சிருஷ்டிகளாக"



ஜீவப்பாதையில் நடக்கிறார்கள். இப்பாதையில் மனித ஜீவிகளாக மட்டும் பலியாக அழிவுக்கென்று ஒப்புக்கொடுக்கிறோம். மனிதப் பிறவிகளாக நாம் கிறிஸ்துவோடு மரித்தோமானால், புதிய ஆவிக்குரிய ஜீவிகளாக அவரோடுகூட பிழைத்துமிருப்போம். (ரோமர் 6:8) ஆகவே, நமக்குள் இருக்கிற தேவனுடைய சிந்தையாகிய மறுரூபமடைந்த புதிய மனதானது, புதிய சிருஷ்டியின் வித்தாக துளிர்விடுகிறது.

புதிய ஜீவன் மரிப்பதற்கு ஏதுவாக எளிதில் நெருக்கப்படக்கூடும். நாம் சத்தியத்தின் மூலமாக ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு மாம்சத்தின்படி ஜீவித்தோமானால், நிச்சயமாகவே சாவோம். அதாவது, நமது ஜீவனை இழந்துவிடுவோம். ஆனால், நாம் ஆவியினாலே மாம்ச சுபாவத்தின் குணங்களை, செய்கைகளை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து நடந்தால், புதிய சிருஷ்டிகளாக நாம் பிழைப்போம். எவர்கள் தேவ ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்களே தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள் என்று பவுல் உறுதிபடக்கூறுகிறார். (ரோமர் 8:13, 14) தேவனோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்துகொண்ட அனைவருக்கும் இந்த எண்ணம் மிக முக்கியமானது. நாம் மாம்ச சுபாவத்தை பலியாக கொடுக்க தேவனோடு உடன்படிக்கை செய்திருப்போமானால் பிறகு, அந்தப் பலி அவரால் அங்கீகரிக்கப்பட்டிருக்குமானால், அந்நிலையில் மீண்டும் அதை எடுத்துக்கொள்ள முயற்சிப்பது பயனற்றக் காரியம். மனித சுபாவம் மரித்ததாக தேவனால் தற்போது கருதப்படுகிறது. நிச்சயமாகவே அது மரிக்க வேண்டும். மரித்த அது ஒருபோதும் திரும்பக்கொடுக்கப்படாது. இதெல்லாம் கிடைக்கும்போது, நாம் திரும்பி மாம்சத்தின்படி நடந்தால், அது புதிய ஆவியின் சுபாவத்தை இழந்து, பெறக்கூடிய சிறுசிறு மானிட சந்தோஷங்கள் மட்டுமே.

எனினும் தேவனோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கைச் செய்து, பரம அழைப்பின் பரிசைப்பெற விரும்புகிறவர்களில் அநேகர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தாலும், உலக கவர்ச்சிகளாலும், மாம்ச இச்சைகளினாலும், சாத்தானின் தந்திரங்களினாலும் ஓரளவு மேற்கொள்ளப்படுகிறார்கள். தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் பரிசுப்பொருளை கொஞ்சம் கவனிக்கத் தவறி தேவ தயவையும் உலக

துயவையும் இரண்டையும் தக்கவைத்துக்கொள்ளும் மத்திய வழியில் நடக்கப் பிரயாசப்படுகிறார்கள். "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை" (யாக். 4:4) என்பதை மறந்துவிடுகிறார்கள். பரம அழைப்பின் பந்தயப்பொருளைப் பெறுவதற்காக ஓடுபவர்களுக்கான புத்திமதி என்னவெனில், உலகத்தில் அன்பு கூராதிருங்கள், ஒருவர் மற்றொருவரின் கனப்படுத்துதலைத் தேடாமல், தேவனிடமிருந்து மட்டுமே வரக்கூடிய கனத்தைத் தேடுங்கள். (1 யோவா. 2:15; யோவா. 5:44)

இந்த உலகை நேசித்தப்போதிலும், கர்த்தரை முழுமையாக கைவிடாமலும் தங்கள் உடன்படிக்கையைப் புறக்கணியாமலும் இருக்கிற இவர்கள் அக்கினியாகிய தண்டனையால், துன்பத்திற்குள்ளாக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படுகிறார்கள். அப்போஸ்தலன் கூறுவதுபோல், இவர்களுடைய ஆவி (புதிதாக ஜெனிப்பிக்கப்பட்ட ஆவி) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படிக்கு மாம்சத்தின் அழிவுக்காக சாத்தானிடம் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்கள். (1 கொரி. 5:5) சிட்சையினால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு தங்களைச் சீர்ப்படுத்துவார்களானால், முடிவில் ஆவிக்குரிய நிலைமையைப் பெற்றுக்கொள்வார்கள். தேவதூதர்களுக்கு இருக்கக்கூடிய நித்திய ஜீவனை இவர்கள் சுதந்தரித்தாலும், பரிசுப்பொருளாகிய அழியாமையை இழந்துபோகிறார்கள். அவர்கள் தேவனுடைய ஆலயத்தில் அவரது சிங்காசனத்திற்கு முன்பாக தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து நின்று, அவருக்கு ஊழியம் செய்வார்கள். (வெளி. 7:9–17) அது மகிமையானதாக இருந்தபோதிலும், தேவனுடைய ஆசாரியர்களும் இராஜாக்களுமாக இயேசுவோடு சிங்காசனத்தில் அவரது மணவாட்டியாக உடன் சுதந்தரராக, அழியாமையின் கிரீடம் தரித்தவர்களாக, ஜெயங்கொண்டு உட்கார்ந்திருக்கும் சிறுமந்தை வகுப்பாரின் மகிமைக்கு ஒப்பானதல்ல.

நம்முடைய வழி கரடுமுரடாகவும் செங்குத்தாகவும், குறுகலானதாகவும் இருக்கிறது. இப்பயணத்தில் முன்னேறுவதற்கு பலம் அளிக்கப்படாவிட்டால் ஒவ்வொரு படிக்கட்டையும் கடந்து இலக்கை நாம் அடைய முடியாது. ஆனால், நமது அதிபதியின், வார்த்தை உற்சாக மூட்டுகிறது. "திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்." "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்." (யோவான் 16:33; 2கொரி.12:9) கடினமான இந்த வழி தேவனுடைய சொந்த ஜனங்கள் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட, தனியே பிரித்தெடுத்து நடத்தும் கருவியாக இருந்து, "தேவனுடைய சுதந்தரரும், இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாக" இருக்கும்படியாக மாற்றுகிறது. காரியங்களை இவ்வாறு நோக்கும்போது, விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தைப் போராடும் போது, தெய்வீக சுபாவமாகிய அழியாமையாகிய "மகிமையின் கிரீடத்தைப்" பற்றிக்கொள்ள வேண்டுமானால், "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய் தேவனுடைய கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்." (2 தீமோ. 4:8; 1 பேது. 5:4)



## பெரும்பாதையான பரிசுத்த வழி

சுவிசேஷ யுகத்தின் விசேஷமான நம்பிக்கை மகா மேன்மையும் மகிமையுமுள்ளதாக இருந்தாலும், அதன் வழி கடினமானதாய் உள்ளது. நெருக்கமானதும் தடை ஏற்படுத்துகிறதுமான அவ்வழியில் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் அபாயங்களையும் கடின அனுபவங்களையும் சகித்தும் நடக்க வேண்டியிருப்பதால், ஒரு சிலர் மட்டுமே அதைக் கண்டுபிடித்து, அதன் முடிவில் மாபெரும் பரிசை அடைவார்கள். பின்பு வரப்போகிற யுகத்தில் அது முற்றிலும் வேறுபட்ட புதிய ஒழுங்காக இருக்கும். அந்த யுகத்தில் வித்தியாசமான நம்பிக்கை கொடுக்கப்படுவதால், அதில் நடக்க வித்தியாசமான வழியும் ஏற்படுத்தப்படும். அழியாமையை நோக்கிச் செல்லும் வழியானது, மனித சுபாவத்தை நிரந்தரமாக பலியிடக்கூடிய, அதாவது, நியாயமான மற்றும் சரியான நம்பிக்கைகளையும், ஆசை இச்சைகளையும் பலிச்செலுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. ஆனால், உலக மனுக்குலம் மாம்சத்தில் பரிபூரணம் அடையும் வழியோ, அதாவது உலகத்தின் நம்பிக்கையாகிய திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களைப்பெற வேண்டுமானால் மனித உரிமைகளையோ அல்லது அதன் சலுகைகளையோ பலியிடாமல், அவைகளைச் சரியான வகையில் அனுபவிக்க, பாவத்தை மாத்திரம் தள்ளிவிடுதல் அவசியமானதும் அதுவே போதுமானதுமாகும். உலகத்தில் பாவம் பிரவேசிக்கும் முன் ஆதாம் பெற்றிருந்த தேவ சாயலை மீண்டும்

அடையும்படிக்கு இப்பெரும் பாதையில் நடக்கிற ஒவ்வொருவரும் சுத்திகரிக்கப்பட்டு முந்தின சீரை அடைவார்கள்.

பரிபூரண மனித ஜீவனை அடைவதற்கான வழி மிகவும் எளிதானதாகவும், சுலபமானதாயும் இருக்கும்படியாக ஏற்படுத்தப்படும். ஒருவனும் இவ்வழியில் தவறிவிடாதபடிக்கு தெளிவான பாதையாக அது இருக்கும். அவ்வழியில் வழிப்போக்கனும், பழக்கமில்லாதவனும் வழிதப்பிப்போக மாட்டார்கள். (ஏசா.35:8– லீசர் மொழிபெயர்ப்பு) ஒருவனும் தன் அயலானை நோக்கி, கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை. ஏனெனில் சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும் எல்லாரும் கர்த்தரை அறிந்து கொள்வார்கள். (எரே. 31:34) ஒரு சிலர் மட்டும் கண்டுபிடிக்கிற நெருக்கமான வழியைப்போல இப்பாதை இராமல், பொதுவான நெடுஞ்சாலையைப்போல் இருக்கும். இது "பெரும்பாதை" என்று அழைக்கப்படுகிறது. கரடுமுரடானதும், செங்குத்தானதும் கடினமானதுமான நெருக்கமான வழியைப்போல் இராமல், விசேஷமாக தயார்படுத்தப்பட்டு, பயணிகள் எளிதாகவும் வசதியாயும், சுலபமாயும் பயணம் செல்லும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். அது மீட்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும், அதாவது அனைவரும் பயணம் செல்வதற்காக திறக்கப்பட்டிருக்கும் செம்மையான வழியென்று எரே.31:6,9 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. கிறிஸ்து அனைவருக்காகவும் மரித்ததை உணர்ந்து, அங்கீகரித்து அவரது விலைபெறப்பெற்ற இரத்தத்தினால், கிடைத்த வாய்ப்புக்களையும், ஆசீர்வாதங்களையும், யார் ஆதாயப்படுத்திக்கொள்கிறார்களோ அவர்கள் ஒவ்வொருவரும் இந்த பரிசுத்தமான பெரும்பாதையில் சென்று, பரிபூரண மனித சுபாவம் மற்றும் நித்திய ஜீவனையும் முழுமையான திரும்பக்கொடுத்தலின் மூலம் அடைவார்கள்.

பெரும்பாதையில் செல்ல ஆரம்பிக்கும் இவர்கள் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாகவோ, பரிசுத்தத்தில் நிற்பவர்களாகவோ அல்லது பரிபூரணர்களாகவோ கருதப்படாமல், இப்பாதையில் நடக்கப் புறப்பட்டு, தங்களுடைய பெருமுயற்சியினாலும் கீழ்ப்படிதலினாலும் அப்போது ஆளுகை செய்யும் மீட்பரின் உதவியினால் நிஜமான பரிபூரணத்தை நோக்கிச் செல்வர். இவையனைத்தும் அக்காலத்தில் வல்லமையோடு



ஆட்சிசெய்துவரும் அவர்களது மீட்பரின் ஒத்தாசையால் அடையமுடியும். புதிய இராஜ்யத்தின் ஞானமும் பரிபூரணமுமான நிர்வாக அமைப்பின் வழியாக ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் அவனவன் தேவைக்கேற்றாற்போல் உதவிபெறுவான். இதுவே மீட்கும் பொருளின் உன்னத பலனாக இருக்கிறது. நமது கர்த்தரும் மனிதனுமாகிய இயேசு கிறிஸ்து அனைவருக்குமான மீட்கும்பொருளாக தம்மையே கொடுத்து எல்லோரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைந்து, அதன் மூலமாக பரிபூரண மனித சுபாவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்பினதால் ஏன் உடனேயே அனைவருக்கும் நன்மையளிக்கும் அகலமான பெரும்பாதையை உண்டாக்கக் கூடாது? ஏன் தடைகளையும் இடறுதற்கேதுவான கற்களையும், படுகுழிகளையும், கண்ணிகளையும் இப்பொழுதே நீக்கக்கூடாது? நெருக்கமான கரடுமுரடான, முட்கள் நிறைந்த, கண்டுபிடிக்கக் கடினமான, நடப்பதற்கு மிகவும் கஷ்டமான ஒரு வழியை உண்டுபண்ணி இருப்பதற்குப் பதிலாக, தேவனோடு மறுபடியும் முழு இசைவாகும்படி, பாவிக்கு ஏன் உதவி செய்யக்கூடாது? சிலர் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்பார்க்காததினால் இந்தப் பாடத்தில் குழப்பமான கருத்துக்களுக்கு வழிநடத்தப்படுகிறார்கள். தற்காலத்திலுள்ள விசேஷமானப் பரிசையடைய நடத்தும் நெருக்கமான வழியானது, கிறிஸ்துவின் சரீர அங்கமும், உடன்சுதந்தரர்களுமாகிய சிறுமந்தையை அழைத்து, சோதித்து தெரிந்தெடுக்கவும், தலையாகிய கிறிஸ்துவோடு அவர்களை உயர்த்தி, எல்லா தேசங்களையும் ஆசீர்வதிப்பதற்காகவுமே என்பதை அறியாதிருக்கின்றனர். தேவனுடைய தெய்வீகத் திட்டத்தைக் காணத்தவறி, எளிதாக ஜீவன் பெற உதவும் பரிசுத்த பெரும்பாதை, தற்கால யுகத்திலேயே இருப்பதாக, அப்படிப்பட்ட வழி இல்லாதிருக்கும்போதே, அநேகர் போதிக்க முயல்கின்றனர். தாங்கள் தவறாகப் புரிந்துகொண்ட கொள்கைகளை வேத வசனங்களோடு பொருத்தி, குழப்பமடையச் செய்து, முடிவில் தங்களுடைய பொய்யான கருத்துக்களை உண்மையானவைகளாக பொருத்துகிறார்கள். நெருக்கமான வழியில் செல்பவர்கள் தங்களைத் தாங்களே வெறுத்து, பாவமில்லாத அநேகக் காரியங்களை தியாகம் செய்வதோடுகூட, தங்களைச் சுற்றி நிற்கும் பாவங்களை எதிர்த்து, தொடர்ச்சியாகப் போராட வேண்டியிருப்பதால், இப்பாதை ஒரு தியாகப் பலியின் பாதையாக இருக்கிறது. அவ்வாறு இருக்கும் வேளையில், பெரும்பாதையான வழி விரைவில்

திறக்கப்படும்போது, அவ்வழியானது மேற்சொன்னபடி இராமல், பாவக் காரியங்களை மாத்திரமே தடைச் செய்வதினால், இப்பாதையானது நீதியின் பெரும்பாதையாக வரப்போகிற யுகத்தில் இருக்கும்.

பெரும்பாதையாகிய அந்த வழியைக்குறித்து, அடையாள மொழியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்ட மிருகம் அங்கே போவதுமில்லை; அங்கே காணப்படவுமாட்டாது." (ஏசா. 35:9) தங்கள் பாவ வழிகளை உதறித் தள்ளிவிட்டு நீதியின் மார்க்கத்தைக் கைக்கொள்வதில் சந்தோஷப்படுவோரின் வழியில் எத்தனைக் கொடிய சிங்கங்கள் தற்காலத்தில் இருக்கின்றன! பொதுவான மனித உணர்வுகளைச் சீர்கேடு அடையச் செய்யும், அதாவது உடை, வியாபாரம், வீடு போன்ற அன்றாட வாழ்க்கைச் சம்பந்தப்பட்ட விஷயங்களில்கூட மாளாட்சிக்குக் கீழ்ப்படியாமல், துணிகரமான முயற்சி மேற்கொள்ளுதலாகிய சிங்கம் அங்கே இருக்கிறது. மதுபானத்தை அகற்ற விரும்பி, முயற்சி செய்யும் ஆயிரக்கணக்கான மனிதர்களை மதுபானப்பிரியம் என்னும் சிங்கமானது மதுபானத்தைக் குடிக்கத் தூண்டுகிறது. மதுவை தடை செய்வது தற்காலத்தில் மதுவிலக்கு வாதியர்களுக்கு மிகவும் கடுமையான வேலையாக இருக்கிறது. இனிவரும் காலத்தில் உண்டாயிருக்கும் அதிகாரம் மற்றும் வல்லமையினால் மட்டுமே மதுவை அகற்ற முடியும். அதுபோலவே, நல்லொழுக்க சீர்திருத்தவாதிகள் செய்யும் தகுதியான முயற்சிகளுக்கும் இதே நிலைதான். "துஷ்ட மிருகம் அங்கே போவதுமில்லை." சுயநலத்திற்காகவும் தனிப்பட்ட நபர்களின் ஆதாயத்திற்காகவும் இயங்கி, பொது நன்மைக்கு இடையூறு விளைவிக்கும் மாபெரும் நிறுவனங்கள் இயங்க அங்கு அனுமதிக்கப்படாது. "என் பரிசுத்த பர்வதமெங்கும் (இராஜ்யம்) தீங்குச் செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை" என்று கர்த்தர் கூறுகிறார். (ஏசா. 11:9) அங்கு தீமையுள்ள சில காரியங்களுக்கு எதிராகப் போராடும் கஷ்டங்கள் இருந்தாலும், தற்கால யுகத்தின் நெருக்கமான வழியோடு ஒப்பிடும்போது அது ஒரு சுலபமான வழியாகவே இருக்கும். இடறுவதற்கேதுவான கற்கள் சேகரிக்கப்பட்டு அகற்றப்படும். ஜனங்களுக்காகச் சத்தியக் கொடி உயர்த்தப்பட்டு, நிலைநிறுத்தப்படும். (ஏசா.62:10) கடந்த காலத்தில் இருந்த அறியாமையும், மூடப்பழக்கவழக்கங்களும் கடந்து போனவைகளாகக் கருதப்பட்டு, நீதி தனக்குரிய வெகுமதியை அடையும். ஆனால், தீமையோ



சுவடில்லாமல் அகன்று விடும். (மல்கி. 3:15–18) சீர்ப்பொருந்தச் செய்வதற்கான சிட்சைகளும் பொருத்தமாக உற்சாகப்படுத்துவதும், தெளிவான போதனைகளும், மனந்திரும்பி வீடுவந்து சேர்ந்த கெட்டக் குமாரனைப்போல, மனுக்குலத்தைப் பயிற்றுவித்து, ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுப்பதன் மூலம், ஆதாம் இழந்துபோன பரிபூரண மனித சுபாவத்தை அடைவார்கள். இவ்வாறாக "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி (அழிவிலிருந்து பரிசுத்த பெரும் பாதைக்கு), ஆனந்தக் களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்." (ஏசா. 35:10) நமது கர்த்தர் இரண்டு வழிகளைப் பற்றி மட்டுமே கூறினார். ஏனெனில், மூன்றாவது வழி திறக்கப்பட ஏற்றக்காலம் இன்னும் வரவில்லை. அவ்வாறே நற்காரியங்களை அறிவிக்கும்பொழுது அவர், "இந்த வேதவாக்கியம் உங்கள் காதுகள் கேட்க இன்றைய தினம் நிறைவேறிற்று" என்று கூறின பின், "நீதியைச் சரிக்கட்டும் நாள்" ஏற்பட காலம் இன்னும் துவங்காததால் அதைக் குறித்துச் சொல்லாமல் விட்டுவிட்டார். (ஒப்பிட்டுப் பார்க்கவும் லூக்கா 4:19; ஏசா. 61:2). தற்போது நெருக்கமான வழியானது முடிவடையும் காலக்கட்டத்தை எட்டினபடியால், ஆயிரமாண்டின் விடியற்காலை வெளிச்சத்தில் நீதியின் பெரும்பாதை, நாளுக்குநாள் அதிகத் தெளிவாகக் காணப்பட துவங்குகிறது.

மனுக்குலத்தில் பெரும்பான்மையோர் தற்கால யுகத்தில் பயணம் செய்யும் "விசாலமான வழியில்" "இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய" சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு, பலவித மாயையான வழிகளால் நடத்தப்பட்டு வருகிறார்கள் என்பதை நாம் கண்டறிந்தோம். "ஒரே மனிதனுடைய கீழ்ப்படியாமையினால்" அவ்வழித் துவங்கியது என்றும், அவ்வழியில் மனுக்குலமானது வெகுவேகமாக ஓடுவதையும் நாம் அறிந்தோம். "விசாலமான வழி" மனுக்குலத்தை அழிவிற்குக் கொண்டுச் செல்கிற நிலைமையிலிருந்து மீட்கும்படி, நம் கர்த்தர் அனைவருக்குமான ஈடுபலியாக தம் ஜீவனையே கொடுத்தார். இதனால் "பரிசுத்தப் பெரும்பாதை" திறக்கப்பட இருக்கிறது; ஏற்ற வேளையில் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்கள் அனைவருக்கும் பெரும்பாதையான வழி சுலபமாகப் பின்பற்றக்கூடியதாக இருக்கும் என்று கண்டோம். அதோடு தற்காலத்திலுள்ள "நெருக்கமான வழி" கர்த்தரது

அதே விலையேறப் பெற்ற இரத்தத்தின் தகுதியினாலே திறக்கப்பட்டது என்றும், இந்த வழியானது ஒரு விசேஷமான பரிசை அடைய வழிநடத்துகிறது என்றும், அனைவருக்கும் ஆசீரை அருளும்படி விரைவில் ஏற்படுத்தப்படவிருக்கும் மகிமை நிறைந்த தேவ இராஜ்யத்தில் நம் கர்த்தராகிய இயேசுவோடு உடன் சுதந்தரரும், தெய்வீகச் சுபாவத்திற்குப் பங்குபெறும்படியாக இக்காலத்தில் நெருக்கமான வழியில் சென்று தெரிந்து கொள்ளப்படுபவர்கள், கடினமான உபத்திரங்களுக்கு உட்படுத்தப்பட்டு, ஒழுக்கத்தில் பரீட்சிக்கப்படுகிறார்கள் என்றும் நாம் அறிந்தோம். இப்படிப்பட்ட உன்னத நம்பிக்கையைப் பெற்றிருப்பவர்கள் இந்தப் பந்தயப் பரிசை அடையும் பொருட்டு, மற்ற அனைத்து நம்பிக்கைகளையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ண வேண்டும். (பிலி. 3:8–15)

• • • •

## அத்தியாயம் – 12

## யுகங்களின் திட்டத்தைக் காண்பிக்கும் வரைபடத்தின் விளக்கம்

யுகங்கள் – அறுவடைகள் – நீதிமானுக்குரிய உண்மையான நிலைமையும், நீதிமானாகக் கருதப்படும் நிலைமையும் – நம் கர்த்தராகிய இயேசுவின் ஜீவியம் – அவரது பிள்ளையார்களின் ஜீவியம் – பெயர் சபைகளின் மூன்று வகுப்பார் – அறுவடையின்போது பிரித்தெடுக்கப்படுதல் – அபிஷேகம் பண்ணப்பட்ட வகுப்பார் மகிமை அடைதல் – மகா உபத்திரக் காலத்து வகுப்பார் – பதர் சுட்டெரிக்கப்படுதல் – உலகம் ஆசீர்வதிக்கப்படுதல் – மகிமையான பலன்

உலக இரட்சிப்புக்காக தேவன் ஏற்பாடு செய்திருக்கும் தெய்வீகத் திட்டத்தை விளக்கும் படத்தை இந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் இணைத்திருக்கிறோம். இதன் மூலம் தேவனுடைய திட்டத்தின் படிப்படியான முன்னேற்றத்தையும், மனித சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு மறுரூபமடைய எடுக்கவேண்டிய படிப்படியான நடவடிக்கைகளையும் கண்களின் மூலம் சிந்தைக்கு உதவிபுரிய நாங்கள் நாடியிருக்கிறோம்.

முதலாவது, மூன்று பெரிய (காலப்பகுதிகள்) உலகங்களாகிய A, B, C என்பவை குறித்துப் பார்ப்போம். இதில் A – மனிதனுடைய சிருஷ்டிப்பு முதல் ஜலப்பிரளயம் வரை; இரண்டாவதாக, B – ஜலப்பிரளயம் முதல், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது துவங்கப்படும் ஆயிரவருட அரசாட்சி வரை; மூன்றாவதாக C அல்லது கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சி துவக்க முதல் "புகா யுகம்" வரையிலான முடிவில்லாக் காலங்கள். (எபே. 1:10; 2:7) இந்த மூன்று உலகங்களும், வேதாகமத்தில் அடிக்கடி எடுத்தாளப்படுகின்றன. A "அப்போது இருந்த உலகம்" என்றும், B "தற்போதைய உலகம்" என்று நம் கர்த்தராலும், "இப்போது இருக்கிற பொல்லாத பிரபஞ்சம்" என்று பவுல் அப்போஸ்தலனாலும், "இப்போதிருக்கிற வானங்களும் பூமியும்" என்று அப்போஸ்தலன் பேதுருவினாலும் அழைக்கப்பட்டுள்ளது. C "இனி வரவிருக்கிற நீதி



வாசமாயிருக்கும் உலகம்" என்றும் அழைக்கப்படுகிறது. இனி வரவிருக்கிற உலகமானது தற்போதைய பொல்லாதப் பிரபஞ்சத்திற்கு நேர்மாறாக இருக்கின்றது. தற்போதைய உலகில் தீமை ஆட்சி செய்து, நீதிமான்கள் துயரப்படுகிறார்கள். ஆனால் இனி வரவிருக்கிற உலகில், இந்த நிலைமை தலைக் கீழாக மாற்றப்படும். நீதி ஆட்சி செய்து, தீமை செய்வோர் துன்பப்படுவார்கள். இறுதியாக, தீமை முற்றிலும் அழிக்கப்படும்.

இந்த மூன்று உலகங்கள் அல்லது பெரிய காலப்பகுதிகள் அல்லது யுகங்கள் ஒவ்வொன்றிலும், மனிதனைக் குறித்த தேவனுடைய திட்டமானது, தனித்தன்மை உடையதும், வித்தியாசமானதுமாய் இருந்தாலும், இவை ஒவ்வொன்றும் ஒரு மாபெரும் திட்டத்தின் ஒரு பகுதியே. இத்திட்டம் முழுவதும் பூர்த்தியாகும் போது தெய்வீக ஞானத்தை வெளிப்படுத்தும். ஆனால் தனித்தனியாக ஒவ்வொரு உலகத்தின் திட்டங்களை நோக்கும்பொழுது, ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துவதில்லை. முதலாம் "உலகம்" ("வானமும், பூமியும்" அல்லது அதன் ஒழுங்குமுறைகள்) ஜலப்பிரளயத்தின் போது ஒழிந்துபோனது. "இப்போதிருக்கிற பொல்லாத உலகத்திற்கு" சாத்தான் அதிபதியாக இருப்பதாக நமது கர்த்தர் கூறியிருப்பதால் முதல் உலகம், தற்கால உலகத்திலிருந்து வேறுபட்ட முறையை உடையதாயிருந்திருக்க வேண்டும். ஆகையால் இந்த பொல்லாத உலகத்தின் அதிபதியாகிய சாத்தான், ஜலப்பிரளயத்திற்கு முன்பு ஆதிக்கம் செலுத்தும் ஆற்றலைப் பெற்றிருந்த போதும் அவன் முதல் உலகத்திற்கு அதிபதியாக இருக்கவில்லை. ஜலப்பிரளயக் காலத்தில் தேவனுடைய செயல்பாடுகள் எவ்வாறு இருந்தன என்று அநேக வேதவசனங்கள் வெளிச்சம் காட்டுவதால், அது அவருடைய முழு திட்டத்தின் ஆழ்ந்த அறிவை கொடுக்கிறது. முதல் உலகம் அல்லது ஜலப்பிரளயத்திற்கு முந்தைய யுகம் தேவதூதரின் விசேஷ ஆளுகைக்கும், மேற்பார்வைக்கும் உட்பட்டிருந்தது என்பதும் விழுந்துபோன மனுக்குலத்தை சீர்படுத்துவதற்காக இவர்களால் முடிந்தவரைக்கும் முயற்சி செய்யவே இவ்வாறு அனுமதிக்கப்பட்டிருந்தது என்பதும் இதன்மூலம் அறியப்படுகிறது. தேவனுடைய அனுமதியின் மூலமாக தேவதூதர்கள் இதை முயற்சி செய்ய ஆவலாய் இருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், சிருஷ்டிப்பின் பணி நிறைவுபெறும்பொழுது, தேவதூதர்கள் பாடிக் கெம்பீரித்ததால் பூமிக்கடுத்த காரியங்களில் அவர்கள் கொண்டிருந்த ஆர்வம்

வெளிப்பட்டது. (யோபு 38:7) முதலாம் உலகத்தில் அதிகாரம் செய்ய தேவதூதர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டபோதிலும், மனிதர்களை மீட்பதில் ஜெயங்கொள்ள முடியவில்லை என்று அந்த யுகத்தில் நடந்த நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. அதோடுகூட அப்போஸ்தலன் கடந்தகால, வருங்கால யுகங்களைப்பற்றிய தேவதிட்டங்களை தற்கால தீமை நிறைந்த யுகத்தோடு வேற்றுமைப்படுத்தி கூறும்பொழுது: "இனி வரும் உலகத்தை அவர் தூதர்களுக்கு கீழ்ப்படுத்தவில்லை" (எபி. 2:5) என்று கூறியதன்மூலம், முதல் உலகம் தேவ தூதர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததையும் இனி வரவிருக்கின்ற உலகம் நம் கர்த்தருக்கும் அவரது உடன் சுதந்தரர்களுடைய கட்டுப்பாட்டிலும் இருக்கும் என்றும் அறிகிறோம். அது தற்கால தீமை நிறைந்த உலகத்தைக்காட்டிலும் அதிக நீதியுள்ள அரசாட்சியாக இருப்பதோடுகூட, முதல் உலகத்தில் ஆட்சிசெய்த தேவதூதரின் ஆட்சியைக்காட்டிலும் அதிக வெற்றிகரமானதாக இருக்கும். தேவதூதர்கள் மனுக்குலத்தை சீர்படுத்த முடியாததால் மனிதரது தீமை அளவுக்கதிகமாக இருந்ததால் தேவன் தம் கோபத்தாலும், நீதியின் எரிச்சலினாலும், ஜலப்பிரளயத்தில் எட்டு நபர்களைத் தவிர மற்ற அனைவரையும் அழித்தார். (ஆதி.7:13)

"தற்கால பொல்லாத உலகில்," மனிதன் தன்னைத்தானே ஆளும் அதிகாரத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறான். ஆனால், விழுந்து போனதினிமித்தம் அவன் இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தானின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறான். ஜலப்பிரளயத்திலிருந்து, தற்காலம் வரையில் உள்ள நீண்ட காலப்பகுதியில் சாத்தான் தன் உபாயத் தந்திரங்களினால், தனது இரகசிய நிர்வாக இயந்திரம் மூலம் மனுக்குலத்தை ஆட்சிசெய்து வருகிறான். சாத்தானுடைய அதிகாரத்தின் கீழ் நடக்கும் இந்த மனித ஆளுகையின் முயற்சி, இதுவரை சம்பவித்திராத மகா உபத்திரவக் காலத்தில் முடிவடையும். இப்படியாக தேவதூதரின் அதிகாரத்தினால் இவ்வுலக மனுக்குலத்தைக் காப்பாற்ற முடியாது என்பதும், அவ்விதமே மனிதனுடைய சுயமுயற்சிகளாலும், திருப்திகரமான நிலைமையை அடைய முடியாது என்பதும் நிரூபணமாகும் .

தேவனுடைய தெய்வீக ஏற்பாட்டின் இரண்டாம் பெரிய உலகம் B மூன்று வெவ்வேறு யுகங்களாக பகுக்கப்பட்டிருக்கிறது. இவை



ஒவ்வொன்றும் தேவ திட்டத்தின் வளர்ச்சியில் முன்னேற்றப் பாதையின் படிக்கட்டுக்களாக இருக்கின்றது.

முற்பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுடன் தேவனுடைய விசேஷமான தொடர்புகள் இருந்ததை D யுகம் எடுத்துரைக்கிறது.

யூதயுகம் E எனப்படுகிறது. யாக்கோபின் மரணத்திலிருந்து இந்தக் காலப்பகுதி துவங்குகிறது. இந்த யுகத்தில் அவரது பின் சந்ததியார் அனைவரும் "அவரது ஜனங்களாக" தேவனால் நடத்தப்பட்டனர். அவர்களிடத்தில் விசேஷ தயவை அவர் காண்பித்துக் கூறியதாவது: "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்." (ஆமோஸ் 3:2) கிறிஸ்தவ சபையாராகிய "பரிசுத்த ஜாதியும், அவருக்குச் சொந்தமான ஜனமுமாய்" இருக்கிறவர்களுக்கு இவர்கள் (இஸ்ரவேலர்) நிழலான ஒரு ஜாதியாக இருந்தனர். அவர்களோடு செய்யப்பட்ட வாக்குத்தத்தங்கள் திருச்சபையார்களோடு செய்யப்பட்ட "மேலான வாக்குத்தத்தங்களுக்கு" நிழலாக இருந்தன. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்கள் செய்த வனாந்தர பிரயாணம் திருச்சபையாராகிய நாம், பாவமாகிய வனாந்தரத்திலிருந்து பரலோக கானானை நோக்கி பிரயாணம் செய்வதற்கு நிழலாய் இருந்தது. அவர்களது பலிகள் நிழலாக மட்டுமே அவர்களை நீதிமான்களாக்கியது, நிஜமாக அல்ல. ஏனெனில் காளைகளின் இரத்தமும், ஆட்டுக்கடாவின் இரத்தமும் பாவத்தை ஒருபோதும் போக்க இயலாதவை. (எபி.10:4) ஆனால், F என்கிற சுவிசேஷ யுகத்தில் முழு உலகத்தின் பாவங்களையும் நீக்கி ஒப்புரவாக்கக்கூடிய "மேலான பலிகளை" நாம் பெற்றிருக்கிறோம். "பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலிகளாக" கிறிஸ்துவின் மூலமாக தங்களையே ஒப்புக்கொடுத்த இராஜரீக ஆசாரியக்கூட்டத்தார் நமக்கு உண்டு. ஏனெனில், கிறிஸ்துவே நம்முடைய பிரதான ஆசாரியராக அல்லது தலையாக இருக்கிறார். (எபி. 3:1) யூத யுகத்தில் நடைபெற்ற நிழலான மதச்சடங்குகள், ஊழியங்கள் இவற்றின் நிஜத்தை இந்தச் சுவிசேஷ யுகத்தில் காண்கிறோம். (எபி.10:1)

F என்கிற சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை உலகத்திலிருந்து அழைக்கப்படுகிறது. இந்த யுகத்தில் அந்தச் சபைக்கு

விசுவாசத்தின் மூலமாக மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் அளிக்கப்படுவதோடுகூட அந்த மேலான அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, அதன் நிபந்தனைகளை நிறைவேற்றுபவர்களுக்கு ஜீவகிரீடமும் தெய்வீக சுபாவத்தில் பங்குபெறுதலும் கிடைக்கும். (2 பேது. 1:4) இவர்கள் மனித சுபாவத்தையும், அதன் உரிமைகளையும், ஆசீர்வாதங்களையும் மனப்பூர்வமாக இயேசுவின் மரணத்திற்கு ஒப்பான ஜீவபலி செலுத்துகிறார்களா என்பதை சோதித்தறியவே, தீமை இன்னும் உலகத்தை ஆளுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக இவர்கள் உயிர்த்தெழுதலின்போது இயேசுவின் சாயலில் இருக்க தகுதியுள்ளவர்கள் என்று உறுதிப்படுத்தப்படுகிறார்கள். (சங். 17:15)

தெய்வீகத் திட்டத்தில் C என்ற மூன்றாவது பெரிய யுகம் "இனி வரப்போகிற உலகத்தின்" பணி இருக்கிற காலப்பகுதிகளை உள்ளடக்கியது. இவைகளில் முதலாவதாக G என்ற ஆயிரம் ஆண்டு ஆட்சியைக் குறித்து மட்டுமே தெளிவான தகவல்களை நாம் பெற்றிருக்கிறோம். இந்த ஆயிரவருட அரசாட்சியின்போது, கிறிஸ்து "பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் முன்னுரைத்தபடி, இழந்துபோன எல்லாவற்றையும் திரும்பக்கொடுக்கும்" பணியைச் செய்து (அப். 3:19–21), பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிப்பார். அந்த யுகத்தின் போது பாவம் மற்றும் மரணம் நிரந்தரமாக அழிக்கப்படும். ஏனெனில் "எல்லாச் சத்துருக்களையும் தனது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்"– ஆதாமினால் வந்த மரணம். (1 கொரி. 15:25, 26) அது திரும்பக்கட்டுதலின் மாபெரும் காலமாக இருக்கும். கிறிஸ்துவோடு மணவாட்டியும் அவரது சரீரமாகிய திருச்சபையார் இணைந்து, ஆட்சிபுரிவர் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருப்பதை வெளி. 3:21–இல் காண்கிறோம். "நான் ஜெயங்கொண்டு, என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடுகூட உட்கார்ந்ததுபோல ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்."

மகா திரும்பக் கட்டும் காலமாகிய ஆயிரவருட அரசாட்சிக்குப் பின்வரும் H என்ற "வரவிருக்கிற யுக"மானது ஆசீர்வாதமும்



சந்தோஷமுமுள்ள பரிபூரண காலங்களாக இருக்கும். இக்காலத்தில் நடைபெறும் பணிகளைக்குறித்து வேதாகமம் எதுவும் கூறவில்லை. தெய்வீக தயவுபெற்ற அந்த யுகங்கள், மகிமையும் ஆசீர்வாதமும் அடங்கிய காலங்களாக இருக்கும் என்பதை மட்டும் இவ்வளவு கால இடைவெளிக்கு முன்பே அறிந்துகொள்வதே போதுமானது.

இந்த யுகப் பிரிவுகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு காலக்கட்டங்களில் துவங்கி, அதன் பணியில் வளர்ச்சிப் பெற்று கனிகளை வெளிப்படுத்தி ஒரு அறுவடையில் முடிவு பெறுகிறது. யூத யுகமானது நாற்பது வருட அறுவடைக் காலத்தோடு முடிவுற்றது. இது இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பத்தில் அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டதிலிருந்து கி.பி 29ல் துவங்கி, நாற்பது வருடக் காலம் நீடித்து எருசலேம் நகர் அழிவின் போது கி.பி 70ல் முடிவுற்றது. (அப். 10:37, 38) இந்த அறுவடையுடன் யூதயுகம் முடிவுபெற்று, சுவிசேஷ யுகம் ஆரம்பமாகிவிட்டது. இந்த இரு யுகங்களும் கடைசி பக்கத்தில் உள்ள படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளபடி, யூத யுகம் முடிவடையும் முன்பாகவே, சுவிசேஷ யுகம் ஆரம்பமாகி ஒன்றுக்குள் ஒன்று இணைந்துள்ளது.

இயேசு கிறிஸ்துவின் மூன்றரை வருடக் கால ஊழிய முடிவின்போது அந்தத் தேசத்தை கர்த்தர் புறக்கணித்து, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (மத். 23:38) என்று கூறினபோது, யூத யுகம் முடிவுக்கு வந்தது என்று கூறலாம் என்ற போதிலும், மேலும் மூன்றரை வருடங்கள் தயவை அவர்களுக்கு நீட்டித்து, சுவிசேஷ அழைப்பு அவர்களிடம் மட்டுமே இருக்கும்படி செய்தார். தானியேல் தீர்க்கதரிசி தானி.9:24–27–இல் 70 வாரங்கள் (490 வருடங்கள்) அவர்களுக்கு தயை காண்பிக்கப்படும் என்றும், அதன் கடைசி வாரத்தின் மத்தியில் (யூதர்களின் எழுபது தீர்க்கதரிசன வார கிருபையின் காலம் முடிவதற்கு மூன்றரை வருடத்திற்கு முன்னால்) மேசியா சங்கரிக்கப்படுவார் (மரணம்) என்றும் ஆனாலும், "தமக்காக அல்ல, கிறிஸ்து நமது பாவங்களுக்காகவே மரித்தார் என்றும்" கூறப்பட்ட வார்த்தைகளுக்கு இது பொருத்தமாயிருக்கிறது. அவரது மரணத்தில் நிழலான பலிகளையும் காணிக்கைகளையும் ஒழியப்பண்ணினார். இவ்வாறு நிஜமான பலி செலுத்தப்பட்டதினிமித்தமாக, இனி நிழலான பலிகள் யேகோவா தேவனால் அங்கீகரிக்கப்படுவதில்லை.

ஆகவே, 70 வாரங்கள் முடிந்தவுடன் அல்லது இயேசுகிறிஸ்து மரித்து மூன்றரை வருடங்களுக்குப் பிறகு யூத யுகம் முடிவுற்றது என்று தீர்மானமாகக் கூறலாம். இதன் பிறகு புறஜாதியாருக்கு நற்செய்தி பிரசங்கிக்கப்பட ஆரம்பித்து, முதலாவது கொர்நேலியுவிற்கு அறிவிக்கப்பட்டது. (அப். 10:45) யூத சபையை அங்கீகரித்து நடத்தி வந்த தேவ தயவானது இத்துடன் முடிவுற்றது. அவர்கள் தேசமானது பின்னர் ஏற்பட்ட மாபெரும் உபத்திரவக் காலத்தோடு முடிவுக்கு வந்தது.

யூத யுக அறுவடைக் காலத்தின்போதே சுவிசேஷ யுகம் துவங்கியது. "தேவனின் கிறிஸ்துவாகிய" தலையும் சபையான சரீரமும் அழைக்கப்பட்டு, வளர்ச்சியடைந்து பரீட்சிக்கப்பட வேண்டுமென்பதே இந்த யுகத்தின் நோக்கமாகும். இது ஆவிக்குரிய யுகமாக உள்ளது. ஆகையால், இயேசு தம் ஞானஸ்நானத்தின்போது "பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும்" அபிஷேகம் பண்ணப்பட்டவுடன் சுவிசேஷ யுகம் துவங்கினது என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். (அப். 10:38; லூக். 3:22; 4:1, 18) அவரது சரீரமாகிய திருச்சபைக்கு மூன்றரை வருடங்களுக்குப் பிறகு அந்த யுகம் துவங்கியது.

சுவிசேஷ யுக முடிவிலும் "ஓர் அறுவடை" இருக்கிறது. இந்த சுவிசேஷ யுக அறுவடை முடிவதற்கு முன்பே ஆயிரமாண்டு ஆட்சி அல்லது திரும்பக்கொடுத்தலின் காலங்கள் துவங்குகிறது. மாதிரியாகவும், நிழலாகவும் இருந்த யூத யுகம் எவ்வாறு படிப்படியாக முடிவடைந்ததோ, அவ்வாறே சுவிசேஷ யுகமும் படிப்படியாக முடிவுக்கு வரும். யூத யுக அறுவடையின் முதல் ஏழு வருடங்கள் மாம்ச இஸ்ரவேலருக்குள் விசேஷ கிரியை நடப்பிக்கும் தயை அளிக்கும் காலமாக அமைந்தது. அவ்வாறே சுவிசேஷ யுகத் திருச்சபைக்கும் ஏழு வருட காலங்கள் குறிக்கப்பட்டுள்ளதையும், இதன் பிறகு உலகத்தின்மேல் தீமைக்கான தண்டனையாக, ஒரு மகா உபத்திரவக்காலம் தொடர்ந்து, பின் நீதியின் ஆட்சி ஆரம்பித்தலுக்கான ஆயத்தப் பணிகளும் நடைபெறும்.

## மகிமைக்குச் செல்லும் வழி

K, L, M, N, P, R – இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு ஜீவன்



நிலைமைகளைக் குறிக்கிறது. பரிபூரண மனித சுபாவத்தை N நிலைமை குறிக்கிறது. ஆதாம் பாவம் செய்யும் முன் இந்த நிலைமையில் இருந்தார். ஆனால் கீழ்ப்படியாமல் போனவுடன் பாவநிலைமையாகிய அழிவுக்குரிய நிலைமைக்குள் விழுந்தார். R என்பது ஆதாமின் சந்ததியார் பிறக்கும் நிலைமையை குறிக்கிறது. இது அழிவுக்குச் செல்லும் "விசாலமான வழிக்கு" ஒத்திருக்கிறது. P என்பது நியாயப்பிரமாண பலிகளைச் செலுத்துவதன் மூலம் நீதிமானாகக் கருதப்படும் நிழலான நிலைமையைக் குறிக்கிறது. இது உண்மையான பரிபூரண நிலைமை அல்ல. ஏனெனில், "நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை." (எபி. 7:19)

பரிபூரண மனிதனாக இருந்த ஆதாம் பெற்றிருந்த பரிபூரண மனித நிலைமையை மட்டும் N குறிக்காமல், நீதிமான்களாக்கப்பட்ட மற்ற மனிதர்களையும் குறிக்கிறது. "வேத வாக்கியங்களின்படி கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்." இதன் பலனாக கிறிஸ்து தங்களை நீதிமானாக்குகிறவர் என்று, அவரது பூரணமான நிறைவேற்றப்பட்ட பணியை ஏற்றுக்கொள்கிற விசுவாசிகள் அனைவரும், தங்கள் விசுவாசத்தின் மூலமாக அவர்கள் ஒருபோதும் பாவம் செய்யாதவர்களைப் போலவும், பரிபூரண மனிதர்களைப் போலவும், தேவனால் நீதிமான்களாக்கப்பட்டவர்களாக கருதப்படுகிறார்கள். ஆகவே, கிறிஸ்துவை தங்கள் மீட்பராக ஏற்றுக்கொள்கிற அனைவரும், தேவனது பார்வையில் பரிபூரண மனித சுபாவ நிலைமையாகிய N-ல் இருப்பதாக கருதப்படுகின்றனர். தேவனை அணுகுவதற்கோ அல்லது அவரோடு ஐக்கியப்படுவதற்கோ, இந்த ஒரே நிலைப்பாடு மட்டுமே மனிதனுக்கு உண்டு. இந்த நிலைமையில் இருக்கிற அனைவரையும் தேவன் தமது மனிதப் புத்திரராக அழைக்கிறார். இப்படியாக ஆதாம் தேவனுக்கு ஒரு குமாரனாயிருந்து கீழ்ப்படியாததற்கு முன்புவரை அவரோடு ஐக்கியமாயிருந்தான். (லூக். 3:38) நமது கர்த்தராகிய இயேசு முழுமையாக நிறைவேற்றி முடித்த மீட்கும் பொருளின் பணிகளை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரும், ஆரம்ப காலத்து பரிசுத்த நிலைமைக்கு திரும்பச்சேர்ந்தவர்களாக கருதப்படுகிறார்கள். இதன் பலனாக தேவனோடு ஐக்கியத்தை அல்லது உறவை பெறுகிறார்கள்.

நீதிமான்கள் ஆக்கப்பட்ட மனித ஜீவிகள் சில நிபந்தனைகளுக்கு

விட்டுவிட்டு வேறு சுபாவத்திற்கு மாறக்கூடிய என்ற விசேஷமான சலுகையை தேவன் சுவிசேஷ யுகத்தில் ஏற்படுத்தியிருக்கிறார். அவர்கள் பூமிக்குரிய மனித சுபாவத்திலிருந்து பரலோகத்திற்குரிய ஆவிக்குரிய ஜீவிகளாக தங்கள் மீட்பராகிய கிறிஸ்துவைப் போன்று ஆகிறார்கள். நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளில் சிலர், தங்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டதினால் மகிழ்ச்சியும், சமாதானமும் அடைந்ததே போதும் என்று திருப்திப்பட்டு அதற்கும் மேலான நிலைமையை அடைய அழைக்கும் தேவனது சத்தத்திற்குச் செவிகொடாமற் போகிறார்கள். பாவத்திலிருந்து ஈடுபலி கொடுத்து தங்களை மீட்ட தேவனது அன்பால் ஏவப்பட்ட மற்றவர்கள், தாங்கள் தங்களுடையவர்கள் அல்ல என்றும், கர்த்தரால் விலைக்கொடுத்து வாங்கப்பட்டவர்கள் என்றும் உணர்ந்து, "கர்த்தாவே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் ?" என்று கேட்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பவுல் மூலமாக அளிக்கப்படும் கர்த்தரின் பதில் என்னவெனில், "நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை என்பதாகும்." (ரோமர் 12:1) நம்மை ஜீவபலிகளாகக் கொடுக்க வேண்டுமென்று பவுல் அப்போஸ்தலன் வலியுறுத்துவதன் நோக்கம் என்ன ? நாம் நமது ஆற்றல், நாம் பெற்றிருக்கிற தாலந்துகள் ஆகியவற்றை தேவனுடைய ஊழியத்திற்காக அர்ப்பணித்து இனிமேல் நமக்கென்றோ நண்பர்களுக்காகவோ, குடும்பத்திற்காகவோ, உலகத்திற்காகவோ அல்லது மற்ற எந்தக் காரியத்திற்காகவும் ஜீவிக்காமல், அவரது ஊழியம் செய்வதற்குக் கீழ்ப்படிந்தவர்களாக தமது விலைபெறப்பெற்ற இரத்தத்தை சிந்தி நம்மை மீட்டவருக்கென்றே ஜீவிக்க வேண்டுமென்றே விரும்புகிறார்.

தேவன் அபூரணமான அல்லது குறையுள்ள பலிகளை, நியமான நியாயப்பிரமாணத்தில் அங்கீகரிப்பதில்லை. அப்படியிருக்கையில், ஆதாமின் பாவத்திற்குள்ளாகப் பிறந்த பாவிகளாகிய நாம் எப்படித் தேவனுக்குப் பிரியமானப் பலிகளாக இருக்கமுடியும் ? நாம் பரிசுத்தராய் இருப்பதினால் மட்டுமே தேவனுக்குப் பிரியமானப் பலிகளாக இருக்க முடியும். சபிக்கப்பட்ட மனுக்குலமாக இருக்கிற நாம், பாவமே அறியாத இயேசுவைப் போல பரிசுத்தர்கள் அல்ல. நாம் பரிபூரண நடக்கையை



அடைவதில் இன்னும் முழு வெற்றிக் காணவுமில்லை. ஏனெனில், நாம் அழைக்கப்பட்ட அழைப்பின் பரிபூரணத்தை இன்னும் அடையவில்லை என்றும் உணர்கிறோம். ஆனாலும் நமது சுயபலத்தினால் அல்ல, நாம் இறுதியாக அடையும் பரிபூரண நிலையின் மகிமையை தேவ தயவினால் காணமுடியும் என்று அறிவதற்காக இந்தப் பொக்கிஷத்தை (கசியும் தன்மையுடைய, எளிதில் உடையக்கூடிய) மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். கிறிஸ்து நமக்காகத் தந்த பலியின்மேல் நாம் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகத் தேவன் நம் அனைத்து பாவங்களிலிருந்து விடுதலையாக்கி, நீதிமான்களாக்கினதன் மூலமே நமது பரிசுத்தமும், தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பலிகளையும் செலுத்தும் தகுதியும் வருகிறது.

இந்த அழைப்பை மதித்து அதற்குக் கீழ்ப்படிகிறவர்கள் எத்தனைப்பேரோ, அத்தனைப்பேர்களும், கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்தையை சுமக்கத் தகுதியானவர்களாகக் கருதப்படுவதில் சந்தோஷமடைகிறார்கள். இவர்கள் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளாகிய "ஜீவகிரீடத்தையும்" "கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரம அழைப்பின் பந்தயப் பொருளையும்," "இனி நம்மிடத்தில் வெளிப்படப்போகும் மகிமையையும்" நோக்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் தேவனோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்தது முதற்கொண்டு, மனிதர்களாக எண்ணப்படாமல், தேவனால் சத்திய வசனத்தின் மூலம் ஜெநிப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய பிள்ளைகளாகக் கருதப்படுகிறார்கள். இப்பொழுது இவர்கள் விசுவாசிக்கத் தொடங்கினபோது இருந்ததைக் காட்டிலும் பரிசுப்பொருளைப் அடைய ஒரு படி நெருங்கியிருக்கிறார்கள். ஆனாலும் இவர்களது ஆவிக்குரிய ஜீவன் இன்னும் பரிபூரணத்தை அடையவில்லை. இவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, ஆவியில் இன்னும் பிறக்கவில்லை. இவர்கள் M நிலைமையில் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிற கருவில் உருவான ஆவிக்குரிய பிள்ளைகள். இவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பதால் மனித ஜீவிகளாக அல்ல, ஆவிக்குரியவர்களாகவே கருதப்படுகிறார்கள். முன்பு இவர்கள் இருந்த நீதிமானாக்கப்பட்ட மனித சுபாவம் தற்போது மரித்ததாகக் கருதப்பட்டு, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக தங்களைத் தாங்களே

ஒப்புக்கொடுக்கிறார்கள். தற்போது கிறிஸ்து இயேசுவுக்குள் இவர்கள் புதிய சிருஷ்டிகள்; இப்போது பழையவைகள் (மனித நம்பிக்கைகள், மனித ஆசைகள், சித்தம்) ஒழிந்துபோயின, அனைத்தும் புதிதாயின; ஏனெனில் "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருந்தால், நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்." (2 கொரி. 5:17; ரோமர் 8:9) நீங்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தால், நீங்கள் (மனித ஜீவிகளாக) மரித்தீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது."

L என்னும் நிலைமை ஆவிக்குரிய பரிபூரண ஜீவிகளைக் குறிப்பிடுகிறது. ஆனால் இந்த L நிலைமையை அடைவதற்கு முன்பாக நமது உடன்படிக்கையின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். நாம் மனித சுபாவத்துக்கு உண்டான அனைத்துக்கும் மரிக்க வேண்டும் என்பதே தேவனோடு செய்துகொள்ளும் உடன்படிக்கையின் ஒரு காரியம். அதோடுகூட நமது பூமிக்குரிய ஜீவியம் முழுவதும் நம் சுய சித்தத்தை செய்யாதவாறு நம் சரீரத்தை அடக்கி, கர்த்தரின் சித்தத்தை மாத்திரமே செய்ய வேண்டும் என்பது மற்றொரு காரியமாக இருக்கிறது. L என்னும் நிலைமைக்கு வந்து சேருதல், ஆவியில் பிறத்தல் அல்லது ஆவிக்குரிய ஜீவிகளாக ஜீவனுக்குள் பிரவேசித்தல் என்று அழைக்கப்படுகிறது. சுவிசேஷ யுகத்தின் முடிவில், அதாவது "அறுவடையின்" காலத்தில் உலகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு ஒன்றுசேர்க்கப்பட்ட முழுத்திருச்சபையும் இந்த நிலைமைக்குள் நுழைகிறார்கள். "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்." அதன் பின்பு உயிரோடிருக்கிற நாம் ஒரு நொடிப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம். பரிபூரண ஆவிக்குரிய ஜீவிகளாக கிறிஸ்துவின் மகிமையான சரீரத்திற்கொப்பாக மாற்றப்படுவோம். ஏனெனில், "அழிவுக்கேதுவாகிய இது அழியாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும்." பின்பு பூரணமானது வரும்போது, குறைவானது (நாம் இப்பொழுது இருக்கிற ஜெநிப்பிக்கப்பட்ட மாம்சத்தின் பல்வேறு தடங்கலுடனான நிலைமை) பின் மறைந்து போகும்.

ஆனாலும் பின்னர் அடையவிருக்கும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் மேலான "பின்வரும் மகிமையைக்" குறிக்கும் K என்ற நிலைமையை



பூரணமாக அடைய இன்னும் ஒருபடி உயர வேண்டும். இங்கு நாம் குறிப்பிடுவது ஒரு தனிப்பட்ட நபருடைய மகிமையல்ல, மாறாக அது ஒரு ஸ்தானத்தின் (அ) அதிகாரத்தின் மகிமையாகும். L என்ற நிலைமையை அடைவது, தனிப்பட்ட முழுமையான மகிமையை கொண்டு வருகிறது. அதாவது கிறிஸ்துவுக்கு ஒப்பான மகிமையான ஜீவியாக. இவ்வாறு நாம் நமது கர்த்தரும் தலையுமாயிருக்கிற இயேசுவைப் போல் பரிபூரணப்படுத்தப்பட்டு, முழுமையடைந்த பிறகு, அவரது சிங்காசனத்தில் அவரோடுகூட இணைந்து செயலாற்றப்போகிறோம். அவர் உயிர்த்தெழுதலின் போது பூரணமடைந்து உன்னதத்தின் வலதுபக்கத்தில் உயர்த்தப்பட்டதுபோல, நாமும் அவரோடு நித்திய மகிமையின் நிலைமையான Kயை அடைவோம்.

நாம் இப்போது வரைபடத்தை கவனமாய் ஆராய்ந்து தேவனுடைய திட்டத்தின் பல்வேறு அம்சங்களையும் அதனைப் பற்றிய விளக்கங்களையும் குறித்து ஜாக்கிரதையாக ஆராய்வோம். இங்கு பரிபூரண நிலைமையைக் காண்பிப்பதற்காக கூர்நுனிக் கோபுரத்தை (பிரமிடு) பயன்படுத்துகிறோம். ஏனெனில் அது பரிபூரண நிலைமைக்குப் பொருந்துவதாலும், வேதாகமத்தில் பல வசனங்கள் இதற்கு ஆதாரமாய் இருப்பதாலுமே இவ்வாறு பயன்படுத்துகிறோம்.

பிரமிட் a பரிபூரண மனிதனாகிய ஆதாமைக் குறிப்பதோடு, பரிபூரண மனித நிலைமையைக் குறிக்கின்ற N கோட்டின்மேல் இருப்பதைக் கவனிக்கவும். R கோடு விழுந்துபோன அபூரணமான பாவநிலைமையைக் குறிக்கும். இதில் மேற்கூம்பு இல்லாத பிரமிட் ஒரு அபூரணத் தோற்றத்தை உடையதாயிருந்து, ஆதாம் மற்றும் அவனது சபிக்கப்பட்ட பாவத்தில் விழுந்துபோன சந்ததியைக் குறிக்கும்.

N கோட்டில் விசுவாசத்தினால் தேவனோடு சஞ்சரிக்கும்பொருட்டு நீதிமான்களாக்கப்பட்ட ஆபிரகாமும், அந்நாட்களில் ஜீவித்த மற்றவர்களும் பிரமிட் (c)யைக் குறிக்கிறார்கள். ஆபிரகாம் விழுந்துபோன மனுக்குலக் குடும்பத்தில் ஒரு அங்கமாக இருந்ததால், இயல்பாகவே R என்ற நிலைமையில் மற்றவர்களோடு சேர்ந்திருக்கிறார். ஆனால் பவுல்

அப்போஸ்தலன் ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டார் என்று கூறுகிறார். அதாவது தன் விசுவாசத்தின் மூலமாக ஒரு பாவமற்ற பரிபூரண மனிதனாக தேவனால் கருதப்பட்டார். இவ்விசுவாசமே தேவனுடைய மதிப்பீட்டில் விழுந்துபோன மனுக்குலத்தாரிலிருந்து அவரை N நிலைக்கு உயர்த்திற்று. அவர் இன்னும் அபூரண நிலையிலேயே தொடர்ந்து இருந்து வந்தாலும், ஆதாம் இழந்துபோன தயவைப் பெற்றிருந்தார். அதாவது தேவனுடைய "சிநேகிதன்" என்று கூறுமளவு அவரோடு ஐக்கியமாயிருந்தார். (யாக். 2:23) N என்ற கோட்டில் பரிபூரண நிலைமையிலுள்ள (பாவமில்லாத) அனைவரும் தேவ சிநேகிதர்களே. அவரும் அவர்களுக்கு சிநேகிதராய் இருந்தார். ஆனால் R கோட்டில் இருக்கும் பாவிகள் தேவனுக்கு விரோதிகளாய் "துன்மார்க்கக் கிரியைகளால் சத்துருக்களானார்கள்."

ஜலப்பிரளயத்திற்குப் பிறகு உலக மனுக்குலம் (d –ஆல் குறிப்பிடப்பட்டு வரைபடத்தில்) R நிலைமையில் தொடர்ந்து சத்துருக்களாகவே இருக்கிறார்கள். இந்நிலை சுவிசேஷ யுகத் திருச்சபை தெரிந்தெடுக்கப்படும் வரையிலும், ஆயிரமாண்டு ஆட்சி துவங்கும் வரையிலும் நீடிக்கும்.

யூத யுகத்தில் "மாம்சீக இஸ்ரயேலர்" நியாயப்பிரமாண பலிகளாகிய காளை, வெள்ளாடு இவைகளின் இரத்தத்தால் நிழலாக சுத்திகரிக்கப்பட்டனர் (நிஜமாக அல்ல). ஏனெனில், "நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை." (எபி. 7:19) இவர்கள் (e) நிழலாக நீதிமான்களாக்கப்பட்டதினால் P நிலைமையில் இருந்தார்கள். இது நிழலாக நீதிமான்களாக்கப்பட்ட நிலைமை ஆகும். இந்நிலைமையானது சீனாய் மலையின்மேல் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதிலிருந்து துவங்கி, இயேசு நியாயப்பிரமாணத்தைத் தன் சிலுவையில் அறைந்து நிறைவு செய்யும் வரையில் நீடித்திருந்தது. அங்கு யூதர்கள் நிழலாகச் செலுத்தி வந்த பலிகளுக்குப் பதிலாக "மேலான பலிகள்" ஏற்படுத்தப்பட்டவுடன், நிழலான நீதிமான்களாக்கப்படுதலும் நிழலான பலிகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. இம்மேலான பலிகள் (better sacrifices) "உலகத்தின் பாவத்தைப் போக்கவும்," "பலி செலுத்த



வருகிறவர்களைப் பூரணப்படுத்துகிறதுமாய் (நிஜமாகவே) இருக்கின்றன." (எபி.10:1)

இயேசு தம் முதலாம் வருகையில், இப்பூமியில் பிரசன்னமாய் இருந்தபொழுது மாம்ச இஸ்ரயேலருக்கு நேரிட்ட உபத்திரவங்களும் சோதனைகளுமாகிய அக்கினியின் மூலம் பெயரளவில் இருந்த யூதர்களிலிருந்து "உத்தம இஸ்ரயேலராகிய" கோதுமை வகுப்பாரைப் பிரித்தெடுத்தார். கோதுமை மணிகளைப் பிரித்தெடுத்தப் பிறகு, "பதரை (நிராகரிக்கப்பட்ட அந்த அமைப்பு) அவியாத அக்கினியால் சுட்டெரித்தார்." இவ்வாறு பதர் சுட்டெரிக்கப்பட்டதை f விளக்குகிறது. அந்த மகா உபத்திரவக் காலத்திலிருந்து தங்களை காத்துக்கொள்வதற்குத் தேவையான பெலனின்றி இருந்தனர். காண்க (லூக். 3:17, 21, 22; 1 தெச. 2:16).

இயேசு தம் 30–ஆம் வயதில், பரிபூரணமும் மனப்பக்குவமும் அடைந்த மனிதருமாய் இருந்தார் (g). தேவனுடைய கிருபையினால் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிப்பார்க்க வேண்டியது தேவசித்தமாய் இருந்தபடியால், தம் ஆவிக்குரிய மகிமையான நிலைமையைவிட்டு மனிதனானார். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், ஜீவனுக்கு ஜீவன் என்கிற தேவனுடைய நீதியின் சட்டம் பூரணமானது. மனுக்குலத்திற்காக ஒரு பரிபூரண மனிதன் மரிக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. ஏனெனில், வேறெந்த வழியிலும் நீதியைச் சரிக்கட்ட முடியாது. காளை, வெள்ளாட்டுக்கடா இவற்றின் மரணம் எப்படி மனிதனுடைய பாவத்தை நீக்க முடியாதோ, அவ்வாறே ஒரு தேவதூதன் மரித்து, தண்டனையைச் செலுத்தி மனிதனை விடுவிக்க முடியாது. ஆகையால், "தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதி" என்று அழைக்கப்படுகிற அவர், மனிதனாக மாம்ச சரீரம் எடுத்து மனுக்குலத்தை மீட்கும்படி மீட்கும் பொருள் (சரிநிகர் சமான விலை) செலுத்தினார். அவர் ஒரு பரிபூரண மனிதராக இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதிருந்தால் விழுந்துபோன மனுக்குலத்திலிருந்து வந்த ஒரு மனிதன் எப்படி விலைக்கிரயம் அளிக்க முடியாதோ அவ்வாறே அவராலும் தந்திருக்க முடியாது. "அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய் இருந்தார்." பாவிகள் பெற்றிருக்கிற அதே

சாயலை "பாவ மாம்ச சாயலான" மனிதத்தன்மையை எடுத்தார். ஆனாலும் அவர் அடைந்திருந்த சாயல் பரிபூரணமானது. அவரது ஊழியத்தின்போது சிலருடைய நோய், துயரங்களை தாம் சுமந்து, அவர்களது வேதனைகள் பலவீனங்களில் தமது சுகத்தையும், பலத்தையும், ஜீவனையும் கொடுத்தாரே தவிர, பாவமாம்சத்தின் பாவத்திலோ அதன் அபூரணத்திலோ பங்கடையவில்லை. "அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்" (ஏசா. 53:4) என்றும், "அவரிடத்திலிருந்து வல்லமை (ஜீவன், சக்தி) புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கிற்று" (மாற். 5:30; லூக். 6:19; மத். 8:16, 17) என்றும் எழுதியிருக்கிறது.

பரிபூரணமும் நாகரீக மனிதனுமாக இருந்தாலும் இயேசு தன்னைத் தாழ்த்தி மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தார். தேவனிடத்தில் தம்மை அவர் ஒப்புக்கொடுத்து, "புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறபடி தேவனே, உம்முடைய சித்தத்தின்படிச் செய்ய இதோ வருகிறேன்" என்று கூறி தன்னுடைய ஞானஸ்நானத்தால் தேவனோடு உடன்படிக்கைச் செய்து அதை அடையாளப்படுத்தினார். அவர் இவ்வாறு தம் ஜீவனை உடன்படிக்கையின் மூலம் ஒப்புக்கொடுத்தார். அந்த ஜீவபலியானது பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமானதாயும் இருந்தது. இப்பலியை தேவன் அங்கீகரித்ததை பரிசுத்த ஆவி அவர்மேல் வந்து அவரை அபிஷேகம் செய்து தம் ஆவியினாலும் வல்லமையினாலும் அவரை நிரப்பியதன் மூலம் காண்பித்தார்.

இவ்வாறு ஆவியினால் நிரப்பப்பட்டது புதிய தெய்வீகச் சுபாவத்தினால் ஜெநிப்பிக்கப்படுதல் ஆகும். அவர் தமது மனித சுபாவத்தைப் பலியிட்டு அப்பலியை அவர் முழுமையாக நிறைவேற்றி முடிக்கும்பொழுது, அந்தப் புதிய சுபாவம் முழுவளர்ச்சி பெற்றிருக்கும் அல்லது புதிதாகப் பிறந்திருக்கும். இவ்வாறு ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதலானது மனித சாயலின் நிலைமையைவிட ஒருபடி உயர்வானது. இதை M என்ற நிலைமையிலுள்ள h என்ற பிரமிடு காண்பிக்கிறது. இயேசு இந்த நிலைமையில் மூன்றரை வருடங்கள் அதாவது அவர் சிலுவையில் மரிக்கும்வரை தம் ஜீவனை கழித்தார். இறந்து மூன்று நாட்களுக்குப் பிறகு ஆவிக்குரிய பரிபூரண ஜீவியத்திற்கு



உயிர்த்தெழுப்பப்பட்டார் (L நிலைமையில் i பிரமிடு). "ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்." இயேசு அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு இனி எந்த வகையிலும் மனித ஜீவியாக அல்ல, ஒரு ஆவியாக, ஒரு ஆவிக்குரிய ஜீவியாக ஆனார்.

அவர் உயிர்த்தெழுந்தப் பிறகு மனிதனாக தோன்றவும் மறைவதற்குமுரிய வல்லமையைப் பெற்றிருந்தது உண்மையே. தாம் இன்னும் மரணநிலையில் இருக்கவில்லை என்பதை தம் சீஷர்களுக்கு நிரூபித்துக் காட்டவும், அவர்களுக்குப் போதிக்கவுமே மனிதனாக அவர்களுக்குமுன் தோன்றினார் என்றாலும் அவர் ஒரு மனிதரல்ல. மனிதனுக்குரிய கட்டுப்பாடுகளுக்கு அவர் உட்பட்டவரும் அல்ல. காற்று எவ்வாறு கதவு பூட்டியிருந்தாலும் உள்ளே போவதும் வருகிறதுமாக இருக்கிறதோ அவ்வாறே அவர் எங்கே இருந்து வந்தார்? எங்குச் சென்றார் என்று ஒருவராலும் கூறமுடியாதபடி இருந்தது. "ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்." (யோவா. 3:8 ஒப்பிட்டுப்பார்க்க 20:19, 26)

பலி செலுத்துவதற்காக தம்மை ஞானஸ்நானத்தில் ஒப்புக்கொடுத்த நொடியிலிருந்து, அவரது மனிதச் சுபாவம் மரித்துவிட்டதாகவும் புதியச் சுபாவம் துவங்கியதாகவும் கருதப்படுகிறது. அவர் ஆவிக்குரிய பரிபூரண சுபாவத்தை L நிலையில் அடைந்தபொழுது, அதாவது உயிர்த்தெழுதலின்போது ஆவிக்குரிய சரீரம் எழுப்பப்பட்ட போது இந்தப் புதியச் சுபாவம் முழுமைப் பெற்றது.

அவர் உயிர்த்தெழுந்து 40 நாட்களுக்குப் பிறகு K கோட்டில் உன்னதங்களில் தெய்வீக மகிமை நிலைமைக்கு (பிரமிடு k) உயர்த்தப்பட்டார். சுவிசேஷ யுகத்தின்போது l என்ற மகிமை நிலைமையிலிருந்து பிதாவோடுகூட தம் சிங்காசனத்தில் அமர்ந்து பூமியிலுள்ள அவரது திருச்சபைக்குத் தலையாகவும், இயக்குனராகவும், வழிகாட்டியாகவும் இருந்துவருகிறார். இச்சுவிசேஷ யுகம் முழுவதும் முழு திருச்சபையும் பரீட்சையிலும் ஒழுக்கத்திலும் வளர்ச்சியடைந்து, இறுதியில் அல்லது அந்த யுக அறுவடையின்போது கிறிஸ்துவின் மணவாட்டியாகவும்

உடன் சுதந்திரர்களாகவும் ஆகும். அவரது பாடுகளில் அது இக்கியப்பட்டிருப்பதால் ஏற்றவேளை வரும்போது அவரோடுகூட மகிமையடைவதும் (K நிலை).

மகிமையடைவதற்காக திருச்சபையார் செல்லும் படிகள் அவர்களது கர்த்தரும் தலைவருமான இயேசு நடந்த அதே பாதைகளே ஆகும். "அவர் தம்முடைய அடிச்சுவடுகளைப் பின்தொடரும்படி நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்." இதில் ஒரேயொரு வித்தியாசம் என்னவெனில், திருச்சபையார் தாழ்ந்த நிலைமையிலிருந்து தங்கள் பயணத்தை ஆரம்பிக்கின்றனர் என்பது மட்டுமே. நமது கர்த்தர் பரிபூரண மனித நிலைமையில் (N) இவ்வுலகத்திற்கு வந்தார். ஆனால், ஆதாமின் சந்ததியாராகிய நாம் அனைவரும் தாழ்ந்த நிலைமையிலேயே இருக்கிறோம். R நிலைமையில் பாவம் மற்றும் அபூரணத்திற்குட்பட்டு தேவனுக்கு விரோதிகளாக இருக்கின்றோம். ஆகவே, தற்போது நமக்குத் தேவையான முதற்காரியம் என்னவெனில், நீதிமான்களாக்கப்பட்டு N என்ற நிலைமையை அடைவதே ஆகும். எவ்வாறு இதை அடைவது? நற்கிரியைகளைச் செய்வதினாலேயா? அல்ல. பாவிகள் எந்த நற்கிரியைகளையும் செய்ய முடியாது. நமக்கு நாமே தேவனிடம் சென்று சேர முடியாது. ஆகவே, "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோமர் 5:8) கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்து "அவரது இரத்தத்தின்மேல் நாம் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக" நம்மை மீட்டு உயர்த்தினபடியால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். அல்லது, ஆதாமுக்குள்ளாக விழுந்துபோன நிலைமையிலிருந்து மனித பரிபூரண நிலைமையை அடைகிறோம். "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம்" (N என்ற நிலைமைக்கு உயர்த்தப்படுகிறோம்). "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." (ரோமர் 5:1) நாம் இனி தேவனால் சத்துருக்களாக எண்ணப்படாமல் நீதிமான்களாக்கப்பட்ட புத்திரர்களாகவே மதிப்பிடப்படுகிறோம். நிஜமாக பரிபூரணத்தில் இருந்த ஆதாமும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் இருந்த இந்த நிலைமையில் நிஜமான



பரிபூரணராக நாம் இராமல், அவ்வாறு இருப்பதாக தேவனால் கருதப்படுகிறோம். "நீங்கள் விலைகொடுத்து வாங்கப்பட்டீர்கள்," "மீட்கப்பட்டீர்கள்," "எல்லாவற்றிலிருந்தும் இலவசமாய் நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்ற தேவனுடைய வார்த்தைகளினால் உண்டாகும் விசுவாசத்தினால் நீதிமான்களாகக் கருதப்படுகிறோம் என்ற நிச்சயம் நமக்கு உண்டாயிருக்கிறது. விசுவாசத்தினால் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரங்கள் நமக்கு உடுத்தப்பட்டதினால் நாம் தேவனுக்கு முன்பாக கறைதிரையற்றவர்களாக, குற்றமற்றவர்களாக, பரிசுத்தர்களாக நிற்கிறோம். நமது பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டதினால் நமக்கு வரவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார். இதனால் நமது நிமித்தமாக அவர் பாவியாகக் கருதப்பட்டு மரித்தார். ஆகவே அவரது மீட்பை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்கும் அவரது நீதி சாட்டப்பட்டு, பாவம் இவ்வுலகில் நுழையும் முன்னர் மனிதன் பெற்றிருந்த ஆசீர்வாதங்கள், உரிமைகள் ஆகியவற்றை மீண்டும் அடையும்படிச் செய்கிறது.[1] இது நமக்கு ஜீவனையும் தேவனுடனான ஐக்கியத்தையும் திரும்ப கொடுக்கிறது. விசுவாசத்தின் வழியாக நாம் இந்த ஐக்கியத்தை அடையலாம். தேவனுடைய "ஏற்றவேளையில்" ஜீவனும், முழு ஐக்கியமும் மகிழ்ச்சியும் நமக்கு நிச்சயப்படுத்தப்பட்டிருக்கின்றன.

நீதிமான்களாக்கப்படுதல் ஓர் ஆசீர்வாதமான காரியமென்றாலும் இது நமது சுபாவத்தை* மாற்றுவதில்லை என்பதை நாம் நினைவில்

---

[1] நீதிமானாக்கப்படுதலைப் பற்றிய அதிகப்படியான விளக்கங்களுக்கு, ஆறாவது தொகுதியில் ஆசிரியரின் முன்னுரையில் பக்கம் (iii), (iv)ல் பார்க்கவும்.

*ஒரு மனிதன் கெட்ட சுபாவமுடையவன் என்று சொல்லும்போது, சுபாவம் என்ற வார்த்தை இணக்கமான அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. சரியாக சொல்லப்போனால், அவன் இயற்கையிலே கெட்டவன் அல்ல. மனித சுபாவம் என்பது தெய்வீக சுபாவத்தின் மாம்சீக சாயலாக "மிகவும் நல்லது" என கண்டதாக இருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு மனிதனும் நல்ல சுபாவமுடையவன். அவனது நல்ல சுபாவம் சீர்கெட்டிருக்கிறது. ஆகையால் ஒரு மனிதன் தீயவன், சீர்கெட்டவன் என்று சொல்லுதல் இயற்கைக்கு மாறானது. அவனது இயற்கையான சுபாவம் தேவ சாயல். சுபாவம் என்ற வார்த்தையை மேலே பிரதானமான அர்த்தத்தில் பயன்படுத்துகிறோம். கிறிஸ்துவினால் நீதிமானாக்கப்பட்டு, தேவனுடைய பூமிக்குரிய சாயலுக்கும், மனித சுபாவத்தின் அனைத்து சலுகைகளுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் திரும்புகிறான்.

வைத்திருக்க வேண்டும். நாம் இன்னும் மனித ஜீவிகளாகவே இருக்கிறோம். பாவத்தின் இழிவான நிலைமை மற்றும் தேவனிடமிருந்து விலகி இருப்பதிலிருந்து இரட்சிக்கப்பட்டு, பாவ மனிதர்களாக அல்லாமல் மனித புத்திரர்களாக இருக்கிறோம். தற்போது நாம் புத்திரர்களாக இருக்கிறபடியால் தேவன் நம்மோடு பேசுகிறார். சுவிசேஷ யுகத்தின் போது "உடன் சுதந்தரர்களாகிய" "சிறுமந்தையை" அழைத்து, "என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா" என்று கூறுகிறார். அதாவது இயேசு உனக்கு முன்மாதிரியை காண்பித்தபடி, "உன்னை ஒப்புக்கொடு, உன் அனைத்து பூமிக்குரிய வல்லமைகள், அதிகாரங்கள் உன் சித்தம், உன் தாலந்துகள், உன்னிடமுள்ள அனைத்தையும் எனக்குக்கொடு; அவ்வாறு செய்வாயானால், நான் உன்னை மனித நிலைமைக்கு மேலாக உன்னத நிலைமைக்குரிய மகனாக உயர்த்துவேன் என்கிறார். ஓர் ஆவிக்குரிய மகனாக, "பிதாவின் தன்மையின் சொரூபமாயிருக்கிற" இயேசுவின் உயிர்த்தெழும்பப்பட்ட ஆவிக்குரிய சரீரத்தில் உன்னை உயர்த்துவேன். நீ பூமிக்குரிய நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், குறிக்கோள்கள், இலக்குகளை விட்டு, மனித சுபாவத்தை முழுமையாக தத்தம் செய்து, அதை என் ஊழியத்திற்காக பயன்படுத்துவாயானால், உன் சந்ததியாரைக் காட்டிலும் உன்னத சுபாவத்தை நான் உனக்குக் கொடுப்பேன். "கிறிஸ்துவுடனேகூட நீங்கள் மகிமைப்படும்படி அவருடனேகூடப் பாடுபட்டால்," உங்களை தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாக்கி, "தெய்வீகச் சுபாவத்தில் பங்கடையச் செய்வேன்" என்றும் கூறுகிறார்.

சுவிசேஷ யுகத்தில் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள பரிசை சரியாக நிதானித்து மதிப்பீடு செய்தவர்கள், அதை ஜெயிப்பதற்காக பாரமான யாவற்றையும் சந்தோஷத்துடன் ஒதுக்கித் தள்ளிவிட்டு தங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஓட்டத்தைப் பொறுமையோடு ஓடுகிறார்கள். நாம் நீதிமான் நிலைமையைத் தக்கவைத்துக்கொள்வதற்காக நமது கிரியைகள் தேவைப்படுவதில்லை. அதற்குத் தேவையான அனைத்தையும் நமது கர்த்தராகிய இயேசுவே செய்து முடித்தார். நாம் விசுவாசத்தின் மூலமாக அவரது நிறைவேற்றப்பட்டப் பணியை அங்கீகரிப்பதினாலேயே நாம் நீதிமான்களாக்கப்பட்டு N நிலைமைக்கு உயர்த்தப்பட்டோம். ஆனால்



இந்நிலையை அடைந்தப் பிறகு நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டுமானால் கிரியை செய்யாமல் முன்னேறிச் செல்ல முடியாது. மெய்யாகவே நமது விசுவாசத்தை இழக்கக்கூடாது. இல்லையென்றால் நீதிமானாகுதலை இழந்துவிடுவோம். ஆனால் நீதிமான்களாக்கப்பட்டு விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தோமானால் (ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு அதன் மூலம் கிடைத்த கிருபையினால்) தேவனுக்குப் பிரியமான கனிகளைக் கொடுக்கும்படி கிரியை செய்கிறவர்களாயிருப்போம். ஏனெனில் நாம் செய்த உடன்படிக்கையின்படி இந்த பலியைசெலுத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். நாம் நம்மிடமுள்ள அனைத்தையும் கொடுத்து நம்மையும் தத்தம் செய்வதன் மூலம் அந்த மாபெரும் பரிசுப்பொருளை மிகவும் மதிக்கிறோம் என்று காண்பிக்கும்படி தேவன் விரும்புகிறார். கிறிஸ்துவின் மூலமாக நாம் செலுத்தும் புத்தியுள்ள ஆராதனையாகிய பலி, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமானது. (ரோமர் 12:1) இது மனிதருக்கல்ல, தேவனுக்கே செலுத்தப்பட வேண்டும்.

நாம் இவைகளை எல்லாம் அர்ப்பணிக்கும்போது "கர்த்தாவே நான் என்னுடைய பலியையும், நேரத்தையும், தாலந்தையும், ஆஸ்தியையும் எப்படி உமக்கு செலுத்த வேண்டுமென விரும்புகிறீர் ?" என்று கேட்கிறோம். இதற்கு விடை காணும்பொருட்டு தேவனது வசனத்தை ஆராய்ந்துப் பார்க்கும்பொழுது, நமது கர்த்தர் செய்ததைப்போல் நமக்குள்ளதெல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்து, நமக்குக் கிடைக்கும் சமயத்திற்கேற்ப எல்லா மனுஷருக்கும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்யவும், ஆவிக்குரிய ஊழியங்களைச் செய்தோ அல்லது மாம்ச உணவுக்கேற்றவைகளைச் செய்தோ, கிறிஸ்துவின் நீதியில் அவர்களை உடுத்தியோ அல்லது பூமிக்குரிய ஆடைகளைக் கொடுத்தோ, நமது ஆற்றலுக்கேற்ப அல்லது அவர்களது தேவைக்கேற்ப ஊழியம் செய்ய வேண்டும் என்கிற அவரது சத்தத்தை நாம் கேட்போம். நமக்குள்ளதனைத்தையும் அர்ப்பணித்த பிறகு நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டு M நிலையை அடைகிறோம். நம்மை நேசித்து, தம் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நம்மை விலைக்கு வாங்கினவரின் அதிகாரத்தினாலும், ஆவியினாலும் இப்போது தொடர்ந்து

கொடுக்கப்பட்டுள்ள வல்லமையின் மூலம், அதை நாம் முழுமையாக உபயோகித்தோமானால், நமது உடன்படிக்கையை முற்றிலுமாக நிறைவேற்றி ஜெயங்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் ஆவோம். இவ்வாறு இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும்பொழுது,

"வெற்றியடைந்துவிட்டோம் என்று ஒருபோதும் எண்ணாதே.
எண்ணி அசதியாய் அமர்ந்துவிடாதே.
உன் கிரீடத்தை பெறும்வரைக்கும்
இந்தக் கடினமான பணி முடிவடையாது."

நமது உண்மையும் உத்தமுமான சகோதரர் பவுலைப்போன்று நல்லப் போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடித்த பிற்பாடுதான் கிரீடத்தைப் பெறமுடியும். அதுவரைக்கும் நமது பலியின் ஜுவாலையும் நறுமணமுமாகிய உழைப்பும் வழிபாடும் அனுதினமும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்திற்கு சுகந்த வாசனையாக மேலே எழும்ப வேண்டும்.

மரண நித்திரையிலிருக்கிற ஜெயங்கொள்ளுகிற வகுப்பாரைச் சேர்ந்த பரிசுத்தவான்கள் ஆவிக்குரிய ஜீவிகளாக உயிர்த்தெழுப்பப்பட்டு L நிலைமையை அடைவார்கள். கர்த்தருடைய வருகையின்பொழுது உயிரோடிருப்பவர்களும், மீந்திருப்பவர்களுமாகிய அதே வகுப்பைச் சேர்ந்தவர்கள் நித்திரையில் ஒரு கணம்கூட தாமதியாமல், பூமிக்குரிய சரீரத்தினைக் களைந்து ஆவிக்குரிய ஜீவிகளாக மறுரூபமடைகிறார்கள். மறுரூபமாக்கப்படும்பொழுது இந்த மண்ணான சரீரம் அழிய வேண்டியது அவசியமாகிறது. பெலவீனமானதும், பூமிக்குரியதும் அழிவுக்கேதுவானதும் மரிக்கும் தன்மை வாய்ந்ததுமாகிய இந்தச் சரீரம் மரித்து பரத்துக்குரிய, ஆவிக்குரிய, அழியாத, மரிக்கக்கூடாத நிலைமையைச் சுதந்தரிக்கும். (1 கொரி. 15:44, 52)

அவர்கள் மறுரூபமடைந்த பிறகு அல்லது ஆவிக்குரிய ஜீவிகளாக பூரணப்படுத்தப்பட்ட பிறகு (L நிலைமை) அந்த வகுப்பாரின் முழு எண்ணிக்கையும் நிறைவடைந்தவுடன் கர்த்தருடைய வல்லமையிலும் மாபெரும் மகிமையிலும்(K நிலைமை) ஒன்றாக இணைக்கப்படுவதற்கு



முன்பாக எவ்வளவு காலம் L நிலைமையில் நிலைத்திருப்பார்கள் என்று கூறமுடியாது. முழு சரீரமும் தலையாகிய கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டு முழு மகிமையடைவதைத்தான் நாம் "ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்" என்று புரிந்து கொள்கிறோம். அப்பொழுது மணவாட்டி தன் கர்த்தரின் சந்தோஷத்துக்குள் உட்பிரவேசிப்பாள்.

தெய்வீக ஏற்பாட்டின் வரைபடத்தில் n, m, p, q என்ற நான்கு தனித்தனியான விசேஷ வகுப்பாரைக் குறித்து பார்ப்போம். இந்த நான்கு வகுப்பாரும் ஒன்றுசேர்ந்து, கிறிஸ்துவின் சரீரம் என்று தங்களைக் கூறிக்கொள்கிற பெயரளவான சுவிசேஷ சபையைக் குறிக்கிறது. n மற்றும் m வகுப்பார் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட M நிலைமையில் உள்ளனர். சுவிசேஷ யுகம் முழுவதும் இந்த இரண்டு வகுப்பாரும் தொடர்ந்து ஒன்றாகவே இருந்துவருகின்றனர். இவர்கள் தங்கள் சரீரங்களை ஜீவபலியாக செலுத்துவதாக தேவனோடு உடன்படிக்கைச் செய்திருக்கிறார்கள். இரு வகுப்பாரும் "பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு," "புது சிருஷ்டிகளாக" ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கிடையே உள்ள வித்தியாசம் என்னவெனில், n நிலைமையிலுள்ளோர் கிறிஸ்துவோடு பூமிக்குரிய சித்தம், குறிக்கோள்கள் மற்றும் ஆசைகளுக்கு மரித்து உடன்படிக்கையை நிறைவேற்றினவர்கள். ஆனால், m வகுப்பார் தேவனோடு உடன்படிக்கை செய்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட திரள்கூட்டத்தாரைக் குறிக்கும். ஆனாலும், இவர்கள் தங்கள் உடன்படிக்கையை நிறைவேற்றுவதிலிருந்து பின்வாங்கி பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டனர். கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கப்போகிற ஜெயங்கொண்டவர்களே n வகுப்பார். இவர்கள் கர்த்தரோடுகூட அவரது சிங்காசனத்தில் உட்கார்ந்து K நிலைமையில் மகிமையடைவர். இந்தச் சிறுமந்தைக்குத்தான் தம் இராஜ்யத்தைக் கொடுக்க பரலோகத்தின் பிதா பிரியமாயிருக்கிறார். (லூக். 12:32) மனித சித்தத்துக்கு மரிக்காமல் m வகுப்பார் பின்வாங்குகின்றனர் என்றாலும், தேவன் தொடர்ந்து இவர்களை நேசிக்கிறபடியால் பரிபூரண ஆவியின் நிலைமையாகிய L நிலைமைக்கு உபத்திரவங்களின் மூலமாகக்கொண்டு வருகிறார். ஆனால் அவர்கள் ஜெயங்கொள்ளாதபடியால் சிங்காசனத்தில் அமரும் மகிமையை, அதாவது

K நிலைமையை இழந்துவிடுகின்றனர். நாம் பிதாவின் அன்பை மதித்து, நமது கர்த்தரின் அங்கீகாரத்தைப் பெற விரும்புவோமானால், அவரது சரீரத்தின் அங்கங்களாயிருக்கவும் அவரது மணவாட்டியாகி அவரது சிங்காசனத்தில் அமரவும் வேண்டுமானால், நமது பலியின் உடன்படிக்கையை மனப்பூர்வமாகவும் உண்மையாகவும் நிறைவேற்ற வேண்டும்.

p என்ற பகுதி பெரும்பாலான பெயர் சபையினரைக் குறிக்கிறது. இவர்கள் M நிலைமையில் அல்ல மாறாக, N நிலைமையில் காணப்படுகிறார்கள் என்பதைக் கவனிக்கவும். இவர்கள் நீதிமான்களாக்கப்பட்டிருந்தாலும் பரிசுத்தமாக்கப்படவில்லை. இவர்கள் தங்களை தேவனுக்கென்று முழுமையாக தத்தம் செய்யாததால் ஆவிக்குரிய ஜீவிகளாக ஜெநிப்பிக்கப்படாதிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் பாவங்களுக்கு மீட்கும்பொருளாக இயேசுவை ஏற்றுக்கொண்டிருப்பதனால், உலக ஜனங்களின் நிலைமையைக் காட்டிலும் மேலான நிலைமையில் இருக்கிறார்கள். ஆனாலும் தேவனது ஆவிக்குரிய குடும்ப அங்கத்தினர்களாவதற்கான இந்தச் சுவிசேஷ யுகத்தின் பரம அழைப்பை ஏற்றுக்கொள்ளாதவர்கள். இவர்கள் தங்கள் விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருந்து, கிறிஸ்துவின் இராஜ்யத்தின் நீதியுள்ள கட்டளைகளுக்கு தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்தார்களானால், திரும்பக்கொடுக்கும் காலங்களில் பூமிக்குரிய பரிபூரண மனிதனான ஆதாமின் சாயலை இறுதியாக அடைவார்கள். ஆதாம் மூலமாக இழந்துபோன அனைத்தையும் திரும்பப் பெற்று முழுமையாகச் சீர்பொருந்துவார்கள். இவர்கள் ஆதாம் தனது விழுகைக்கு முன்பு ஒழுக்கத்திலும், சிந்தையிலும், உடலிலும் பெற்றிருந்த பரிபூரண மனித நிலைமையை அடைந்து, மீண்டும் தேவசாயலுக்குத் திரும்புவார்கள். ஏனெனில் இவைகள் அனைத்தையும் பெறவே அவர்கள் மீட்கப்பட்டார்கள். N நிலைமையிலுள்ள இந்த நீதிமானாகும் நிலைமை கிறிஸ்துவின் மூலமாக உண்டான இரட்சிப்பைக் கேட்டு விசுவாசித்ததினால் ஏற்பட்டது. பொதுவான உலக மனுக்குலம் ஆயிரமாண்டு ஆட்சியில் துல்லியமான சத்திய அறிவுக்குக்கொண்டு வரப்படுதலின் மூலம் அடையவிருக்கும் ஆசீர்வாதங்களை, விசேஷ ஆசீர்வாதமாக இவர்கள் உலக ஜனங்கள்



பெற்றுக்கொள்வதற்கு முன்பாகவே சீக்கிரமே அனுபவிப்பார்கள். இருந்தபோதிலும் இவர்கள் உலக ஜனங்களுக்கு முன்பாகவே சரியான கோணத்தில் நடக்க ஆரம்பித்து முன்னேறும் சலுகையை அடைவார்கள். ஆனால் p நிலையிலுள்ள வகுப்பாரோ தற்காலத்தில் இந்த விசுவாசத்தினால் வரும் பலன்களைப் பெற்று, நீதிமான்களாக வளர்ச்சியடைவதில் தோல்வியைச் சந்திக்கிறார்கள். “கிறிஸ்துவின் சரீர” அவயவங்களாக வேண்டும் என்ற விசேஷ நோக்கத்திற்காக, சிலரை தற்காலத்தில் நீதிமான்களாகும்படிச் செய்து, தேவனால் ஏற்கும்படியான பிரியமான பலிகளைச் செலுத்துவதற்கு அவர்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. இந்த p வகுப்பார் நீதிமான்களாகும் தேவ தயவை “விருதாவாய்ப்” பெறுகிறார்கள். (2 கொரி. 6:1) தேவன் பலிகளை அங்கீகரித்து ஏற்கும் தற்காலத்தில், இவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தவறி பிரியமான பலிகளைச் செலுத்தாதவர்கள். இந்த வகுப்பாரைச் சேர்ந்தவர்கள், “பரிசுத்தவான்கள்” என்றோ “உடன்படிக்கை செய்த சரீர அங்கங்கள்” என்றோ பவுல் அப்போஸ்தலனால் அழைக்கப்படாமல் “சகோதரர்கள்” என்றே அழைக்கப்படுகின்றனர். (ரோமர் 12:1) முழு மனுக்குலத்தாரும் தங்கள் ஆதி நிலைமைக்கு சீர்பொருந்தின பிறகு, இதே அடிப்படையில் வேறுபட்ட சுபாவத்தில் கிறிஸ்துவுக்கு சகோதரர்களாகவும், தேவனுக்குப் பிள்ளைகளாகவும் இருப்பார்கள். ஒவ்வொரு சுபாவத்திலும், ஒவ்வொரு நிலைமையிலும் தேவனுக்கு இசைவாக இருக்கிற அனைவருக்கும் அவர் தகப்பனாயிருக்கிறார்.

இயேசு பாவத்திற்காகப் பலியானார் என்பதை விசுவாசிக்காததால் நீதிமான்களாக்கப்படாத இன்னுமொரு வகுப்பார் (N நிலைமையிலிராத) பெயர் சபையில் உண்டு. இவர்கள் N கோட்டுக்குக் கீழான நிலைமையில் (q) இருப்பவர்கள். இவர்கள் “ஆட்டுத்தோல் போர்த்தின ஓநாய்கள்.” ஆனாலும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். இவர்கள் பெயர் சபையில் உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் தங்கள் மீட்பராக கிறிஸ்துவை உண்மையாக விசுவாசிக்கிறவர்கள் அல்ல. இவர்கள் R நிலைமையில் இருக்கிறார்கள். உலகத்தின் ஒரு பாகமாக இருக்கிற இவர்கள், உண்மைத்

திருச்சபைக்குப் புறம்பாக இருந்து சபைக்குப் பெரும் காயங்களை உண்டாக்குகிறார்கள். n, m, p, q ஆகிய நான்கு வகுப்பார் ஒருவரோடொருவர் கலந்து இருப்பதால் அனைவரும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்கின்ற நிலைமையில், திருச்சபையானது சுவிசேஷ யுகம் முழுவதிலும் இருந்து வந்திருக்கிறது. நம் கர்த்தர் முன்னுரைத்தபடி, பெயரளவில் மட்டும் இருக்கும் பரலோக இராஜ்யம் (பெயர் சபை) கோதுமையும் களையும் விதைக்கப்பட்ட நிலத்திற்கு ஒப்பாயிருக்கிறது. யுக முடிவுவரை அதாவது "அவை இரண்டையும் அறுப்புக்காலம் வரைக்கும் வளர விடுவேன்" என்று கர்த்தர் கூறியிருக்கிறார். அறுப்புக் காலத்தில் அறுவடையாளர்களை நோக்கி: "களைகளைப் பிடுங்கி சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்" என்று சொல்லுவார். (மத். 13:38, 41, 49)

இந்த யுகம் முழுவதும் கோதுமை, களை ஆகிய இரண்டும் ஒன்றாக வளர வேண்டும் என்றும், இவைகள் பெயர் சபை அங்கங்களாக புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்றும் கர்த்தர் தம் நோக்கத்தை வெளிப்படுத்தினாலும், இந்த வேறுபட்ட பிரிவுகளுக்கிடையே ஒரு பிரிவினைக் காலம் வந்து, உண்மை சபையாகிய அவரது பரிசுத்தவான்கள் (n) தேவனது உடைமையாக அங்கீகரிக்கப்பட்டு, வெளியரங்கமாக்கப்பட வேண்டும் என்பது அவரது நோக்கமாயிருந்ததையும் அவரது வார்த்தையிலிருந்து அறிகிறோம். (மத். 13:30)

சுவிசேஷ யுகத்தின்போது, நல்ல விதையும் அதோடுகூட களைகளும் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. "நல்ல விதை இராஜ்யத்தின் புத்திரர்." "n" மற்றும் "m" வகுப்பார் ஆவிக்குரிய புத்திரராயிருக்கின்றனர். ஆனால் "களைகளோ பொல்லாங்கனின் புத்திரர்." "ஒருவனும் இரண்டு எஜமானுக்கு ஊழியம் செய்ய முடியாது." "யாருக்கு நீங்கள் ஊழியம் செய்கிறீர்களோ அவர்களுக்கு நீங்கள் அடிமைகளாயிருக்கிறபடியினால்" q வகுப்பாரும் மற்றும் p வகுப்பாரில் அநேகரும் களைகளாயிருக்கின்றனர். p வகுப்பில் உள்ளவர்கள் தங்கள் தாலந்துகளையும், ஊழியத்தையும் தங்களை விலைக்கொடுத்து மீட்ட கர்த்தருக்கென்று அர்ப்பணிப்பதில்லை. அவர்கள் தங்கள் நேரத்தையும், திறமைகளையும் உண்மையில் தேவனுக்கு



எதிராக செலவழிப்பதால் அவர்கள் விரோதியின் ஊழியத்தில் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இனி சுவிசேஷ யுகத்தின் முடிவு அல்லது அறுவடையை வரைபடத்தில் காண்போம். யூத யுகத்தின் அறுவடைக்கு ஒத்தாற்போல சுவிசேஷ யுகத்திலும் 33 வருடங்கள் ஒரு பாகமும் ஏழு வருடங்கள் மற்றொரு பாகமுமாக மொத்தம் இரண்டு பாகங்கள் உள்ளதைக் காணலாம். இந்த அறுவடை, யூதருடையதைப்போன்றே திருச்சபையாருக்கு முதலாவதாக சோதனையின் காலமாகவும் அதன்பின் தரம் பிரித்து எடுத்தலும் நடைபெறும். பிறகு கோபாக்கினையின் காலம் அல்லது "கடைசி ஏழு வாதைகள்" உலகத்தின்மேலும் பெயர் சபைகளின்மேலும் ஊற்றப்படுகிற காலமாயிருக்கிறது. சுவிசேஷயுக சபை ஆவிக்குரிய நிலையில் அனுபவிக்கிற அனைத்துக் காரியங்களுக்கும், மாம்ச நிலையில் இருந்த யூத சபை ஒப்பனையாயும் நிழலாயும் இருக்கிறது. யூத சபையார் அந்த யூத யுக அறுவடையின்போது அப்போது கொடுக்கப்பட்டிருந்த சத்தியத்தினால் சோதித்துப் பார்க்கப்பட்டனர். அப்பொழுது யூதருக்குக் கொடுக்கப்பட்ட சத்தியம் அரிவாளாக இருந்து யூதரின் பெயர் சபைகளிலிருந்து உத்தம இஸ்ரவேலர்களைப் பிரித்தெடுத்தது. தேவத் திட்டங்களின்படியே நடப்பதுபோல் காண்பித்துக்கொண்ட ஏராளமானவர்களுக்கு மத்தியில் உண்மை கோதுமை மணிகள் ஒருசிலரே இருந்தனர். அவ்வாறே இந்த யுகத்தின் அறுவடையிலும்[2] நடக்கும். யூத யுகத்தைப் போன்றே சுவிசேஷ யுக அறுவடையும், அவ்வேளையில் பிரசன்னமாகியுள்ள பிரதான அறுவடையாளரும், கர்த்தருமான இயேசுவின் கண்காணிப்பின்கீழ் நடைபெறும். (வெளி. 14:14) இந்த யுகத்தின் அறுவடையின் முதல் பணியாக நமது கர்த்தர் உண்மைச் சபையைப் போலி பெயர் சபைகளிலிருந்து தனியே பிரித்தெடுக்கிறார். பெயர் சபையானது இரண்டும் கலந்த கலவையாக இருப்பதால், அவளை "பாபிலோன்" அதாவது குழப்பம் என்று பொருள்பட கர்த்தர் அழைக்கிறார்.

---

[2]வேதாகமப் பாடங்கள் 3, உமது இராஜ்யம் வருவதாக, ஆசிரியரின் முன்னுரை பக்கம் 13-ஆம் பத்தியில் காண்க. சுவிசேஷ யுகத்தின் அறுவடை நீண்டகாலப்பகுதியைக் கொண்டது என்று ஆசிரியர் காண்பித்திருக்கிறார்.

அறுவடையானது பெயர் சபைகளிலுள்ள பதரப்பட்ட வகுப்பாரைப் பிரித்தெடுத்து அவர்களை முதிர்ச்சியடையச் செய்து, பூரணப்படுத்துகிற காலமாயிருக்கிறது. அவ்வேளையில் களைகளிலிருந்து கோதுமை மணிகளையும், முதிர்ச்சியடைந்த கோதுமையை முதிர்ச்சியடையாத கோதுமையிலிருந்தும் பிரித்தெடுப்பார். கோதுமை மணியின் முதற்பலன்களே n வகுப்பார் ஆவர். அவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட பிறகு ஏற்ற வேளையில் கிறிஸ்துவின் மணவாட்டியாகி அவரது கர்த்தரைப் போலாகி அவரோடுகூட என்றென்றைக்கும் இருப்பார்கள்.

s என்பது சிறுமந்தையை பாபிலோனிலிருந்து பிரித்தெடுத்தலைப் பற்றிக் காண்பிக்கப்பட்டுள்ளது. கர்த்தரோடு அவள் ஒன்றித்திருக்கும்படியும், அவரது நாமத்தைத் தரித்துக்கொண்டு, அவரது மகிமையில் பங்குபெறுவதற்காகவும் தன் வழியில் முன்னேறிக் கொண்டிருக்கிறாள். w என்பது தலையும் சரீரமுமாகிய, மகிமையடைந்த கிறிஸ்துவைக் காண்பிக்கிறது. t, u, மற்றும் v ஆகிய பாகங்கள் பெயர் சபையாகிய பாபிலோன் மாபெரும் "உபத்திரவக் காலத்தின்" போது, "நமது கர்த்தரின் நாளில்" விழுந்து, துண்டு துண்டாகச் சிதறுவதைக் குறிக்கிறது. இது ஒரு திகிலுண்டாக்குகிற காரியமாகத் தோற்றமளித்தாலும், அனைத்து உண்மையான கோதுமை மணிகளுக்கும் பெரும் நன்மைக்கேதுவாகவே அமையும். தன்னை உண்மையான கிறிஸ்தவ சபை என்று கூறிக்கொண்டபடி பாபிலோன் இல்லாததே அதன் விழுகைக்குக் காரணம். உலகத்தின் பார்வையில் பெயர் சபைப் பெற்றிருக்கும் அதிகாரங்கள் மற்றும் மேன்மைகளில் பங்குபெறும்படி, மற்ற மாயக்காரர்கள் தங்களை அத்துடன் இணைத்துக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் தங்கள் நடக்கைகளில் பாபிலோனை ஒரு துர்நாற்றமானதாக உலகத்தார் மத்தியில் விளங்கப்பண்ணுகிறார்கள். அவர்களது உண்மையான குணநலன்களை கர்த்தர் என்றும் அறிந்திருக்கின்றபடியால், அறுவடை வரைக்கும் தமது நோக்கம் நிறைவேறும்படி அவர்களை தனியே விட்டுவிடுகிறார். "அவர்கள் அவருடைய இராஜ்யத்தில் (களைகளைக் கட்டுக்களாகவும், மெய்த் திருச்சபையைத் தனியாகவும்) இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். (பெயர் சபை அமைப்புகளுக்கு உபத்திரவம் மற்றும் அழிவு). அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.



அப்பொழுது நீதிமான்கள் (n வகுப்பார்) தங்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள். (மத். 13:41 – 43 ) தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாக ஆவி உலக நம்பிக்கை (Spiritism), அவிசுவாசம் ஆகியவற்றை பெருமளவில் பல்வேறு வழிகளில் பாபிலோன் கடைப்பிடித்து வருவதினால், உண்மைத் திருச்சபையாருக்கு பெருமளவில் துன்பங்கள் நேரிடுகிறது. யூத யுக அறுவடையின்போது, மகிமையையும் அதிகாரத்தையும் எதிர்பார்த்திருந்த யூதருக்கு, கிறிஸ்துவின் சிலுவை மரணம் எப்படி இடறுதலின் கல்லாகவும், உலக ஞானிகளாகிய கிரேக்கருக்குப் பயித்தியமாகவும் தோன்றியதோ, அவ்வாறே சுவிசேஷ யுக அறுவடையின் போதும் அது இடறுதலின் கல்லாகவும், விழுவதற்கேதுவான கன்மலையுமாயிருக்கும்.

சத்தியமாகிய பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் ஆகியவற்றாலும், அதற்கேற்ற குணங்களாலும் கிறிஸ்துவின்மேல் கட்டாத ஒவ்வொருவரும், அக்கினியாகிய கோபாக்கினையின் காலத்தில் கடுமையான துன்பத்திற்குள் அகப்படுவான். ஏனென்றால், மரம், புல், வைக்கோல் போன்ற போதனைகளும், கிரியைகளும் எரிந்து சாம்பலாகும். முறையாகக் கட்டியவர்கள், அங்கீகரிக்கத்தக்க குணங்களைப் பெற்றிருந்தவர்கள் s ஆல் குறிக்கப்படுகிறார்கள். t என்பது ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட "திரள் கூட்டத்தாரைக்" குறிப்பிடுகிறது. இவர்கள் மரம், புல், வைக்கோலால் கட்டுகிறார்கள். இவர்கள் கோதுமை வகுப்பாராக இருந்தபோதிலும் முதற்பலன்களைக் (s) கூட்டிச்சேர்க்கும் காலத்தில் முழுமையான வளர்ச்சியடையாதிருக்கிறார்கள். ஆகவே இவர்கள் (t) சிங்காசனத்தின்மேல் அமரும் பரிசையும் தெய்வீகச் சுபாவத்தையும் இழக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் தெய்வீகச் சுபாவத்திற்குக் கீழான நிலையிலுள்ள ஆவிக்குரிய ஜீவிகளாக இறுதியில் வந்து சேருகிறார்கள். இவர்கள் உண்மையாகவே ஞானஸ்நானத்தில் தங்களை ஒப்புக்கொடுத்தப் போதிலும், உலக ஆவியினால் மேற்கொள்ளப்பட்டதினால் ஜீவபலி செலுத்தாமல் தோல்வியடைகிறார்கள். "அறுவடை" காலத்தில், பிற வகுப்பாரிலிருந்து மணவாட்டிகளாகிய ஜீவனுள்ள அங்கங்கள் சத்தியத்தினால் பிரிக்கப்படும் வேளையிலும், பிறரது காதுகள் t வகுப்பாரையும் சேர்த்து கேட்க மனமின்றி மந்தமாக இருக்கும்.

பிரிக்கப்படும் காலத்தில் அவர்கள் விசுவாசிப்பதிலும், செயல்படுவதிலும் அசதியாக இருப்பார்கள். மணவாட்டி வகுப்பாரின் எண்ணிக்கை நிறைவடைந்து அவர்கள் கர்த்தரோடு இணைந்துவிட்டார்கள் என்று உணர்ந்தப் பிறகு, தங்களது அலட்சியத்தினாலும், உலக ஆசைகளினாலும் ஆட்கொள்ளப்பட்டு, மாபெரும் பரிசை இழந்துவிட்டோம் என்று துக்கப்படுவார்கள். ஆனாலும் தங்களுக்கும், உலகத்தாருக்கும் தேவன் தம் திட்டத்தில் வைத்திருக்கும் அற்புதமான அன்பின் அழகினைப் புரிந்துகொண்டு, தங்களை துக்கத்திலிருந்து விடுவித்துக்கொண்டு, "அல்லேலூயா! சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் இராஜ்யபாரம் பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்." (வெளி. 19:6, 7) என்று ஆர்ப்பரிப்பார்கள். கர்த்தருடைய அபரிதமான கிருபையை இங்கு கவனிக்கவும். ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாக நீங்கள் தகுதியடையாது போனாலும், திருமண விருந்துக்கு நீங்கள் வரலாம் என்று அழைப்புச் செய்தி அவர்களுக்கு அனுப்பப்பட்டது. "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்." (வெளி. 19:9) இந்த வகுப்பார் ஏற்றக் காலத்தில் கர்த்தருடைய சிட்சைகளின் மூலமாக, அவரது திட்டத்திற்கும் அவருக்கும் முழு இசைவுள்ளவர்களாகி, அவர்களது நீதியின் வஸ்திரங்களைக் கழுவி, மணவாட்டிக்கு (y) அடுத்த ஸ்தானமாகிய ஆவிக்குரிய ஜீவன் நிலைமையை அடைவார்கள் (L நிலைமை). (வெளி. 7:14, 15)

உபத்திரவ காலத்தில் பாபிலோன் சீர்குலைந்து விழுந்த பிற்பாடுதான் உலகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நீதியின் ஆட்சி இவ்வுலகத்தில் ஸ்தாபிப்பதற்கு ஆயத்தமாகவே அனைத்து மனித சமுதாயங்களையும், அரசாங்கங்களையும் கவிழ்த்துப்போடும். புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் கைவிடப்பட்டிருந்த மாம்ச இஸ்ரயேலர்கள் (e) உபத்திரவக் காலத்தின் போது தேவதயவைப் பெற்று சீர்பொருந்துவார்கள். அதேசமயம் ஆவிக்குரிய இஸ்ரயேலாகிய சுவிசேஷ திருச்சபை நிறைவடைந்து, மகிமைப்படுத்தப்பட்டிருக்கும் ஆயிரவருட யுகத்தின்போது இஸ்ரயேல் தேசமானது பூமியிலுள்ள அனைத்துத் தேசங்களுக்கும் தலைமையாகவும் முக்கியமானதாகவும் இருக்கும். அவ்வேளையில் கீழ்ப்படிகிற



அனைத்துத் தேசத்தாரும் இஸ்ரயேலரோடு ஒன்றாக இசைந்திருக்கும்படியாக படிப்படியாக இழுக்கப்படுவார்கள்.

அவர்களும் உலகத்தார் அனைவரும் பரிபூரண மனித சுபாவத்தை அடைவது படிப்படியாக நிறைவேறும் பணியாக இருக்கிறபடியால், இது நிறைவேற ஆயிரவருட யுகம் முழுவதும் தேவையாயிருக்கிறது. அந்த ஆயிரவருட கிறிஸ்துவின் அரசாட்சியில், ஆதாமினால் உண்டான மரணம் படிப்படியாக விழுங்கப்படும் அல்லது அழிக்கப்படும். அதன் பல்வேறு நிலைகளாகிய – நோய், வலி, பலவீனம், மரணம் ஆகியவை மாபெரும் மீட்பருடைய வல்லமைக்குக் கீழ்ப்படிவதினால் அழிக்கப்பட்டுவிடும். அந்த யுகத்தின் முடிவில் நமது வரைபடத்திலுள்ள பிரமிடு நிறைவடைந்திருக்கும். தலையும் சரீரமுமான கிறிஸ்து (x) அந்த யுகத்தின் முடிவில், எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்து அதாவது திரள்கூட்டத்தார், தேவதூதர்கள், மனிதர்களாகிய அனைவருக்கும் தலைவராக இருப்பார். இயேசு கிறிஸ்து மற்றும் திருச்சபைக்கு அடுத்த ஸ்தானத்தில் திரள்கூட்டத்தாரும், ஆவிக்குரிய ஜீவிகளும் (y), அடுத்து தேவதூதர்களும், அதையடுத்து உலகதேசங்களுக்கு தலைமையாக இருக்கும் உத்தம மாம்ச இஸ்ரயேலரும் (z) இருப்பர். அதற்குப் பின்பு ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பிருந்த பரிபூரண நிலைக்குக் கொண்டுவரப்பட்ட உலக மனிதர்களும் (w) இருப்பர். இவ்வாறாக ஆயிரவருட அரசாட்சியின்போது அதாவது திரும்பக்கொடுத்தலின் காலங்களில் (அப். 3:21) சீர்படுத்துதல் படிப்படியாக நிறைவேற்றப்படும். இதில் சிலர் மனித ஜாதியிலிருந்து அறுப்புண்டுபோவார்கள். முதலாவதாக, முழு வெளிச்சமும் போதிய வாய்ப்பும் பெற்றிருந்தும், நீதியையும், பூரணத்தையும் அடைய நூறு வருடங்கள் தவணைக்காலங்கள் கொடுக்கப்பட்டும், மனந்திருந்தாதவர்களின் அழிவு (ஏசா. 65:20); இரண்டாவதாக பரிபூரணத்தை அடைய முன்னேறியவர்கள் ஆயிர வருட அரசாட்சி முடியும்போது நடக்கும் இறுதிப் பரீட்சையில், அவிசுவாசிகளாகத் தீர்க்கப்படுகிறவர்களின் அழிவு (வெளி. 20:9) இப்படிப்பட்டவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவதால் இதிலிருந்து மீட்போ, உயிர்த்தெழுதலோ கிடைப்பதற்கான வாக்குத்தத்தங்கள் எதுவும் இல்லை.

ஒவ்வொரு நபருக்கும் ஒரு தனிப்பட்ட பரீட்சை மட்டுமே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரேமுறை ஈடுபலி கொடுக்கப்பட்டது. இனி கிறிஸ்து ஒருபோதும் மரிக்கமாட்டார்.

திருச்சபையாரை முதலாவது உயர்த்துவதும், அதன் மூலமாக இஸ்ரயேலரையும் பூமியிலுள்ள அனைத்துக் குடும்பங்களையும் மறுசீரமைத்து அனைத்தையும் பரிபூரண நிலைக்குக் கொண்டுவந்து ஆசீர்வதிப்பதுமான நம் பரலோகத் தந்தையின் மாபெரும் திட்டத்தினை நாம் நோக்கும்போது, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்று பாடின தேவதூதர்களின் பாடல் நம் நினைவுக்கு வருகிறது. "கிறிஸ்துவுக்குள் சகலமும் கூட்டப்பட வேண்டும்" என்பதே தேவனுடைய திட்டத்தின் உச்சக்கட்ட நிறைவேறுதலாக இருக்கும். அவ்வாறு அனைத்தும் பரிபூரணப்படுத்தப்பட்ட நிலையில், தேவனுடைய திட்டம் தோல்வியடைந்த ஒன்று என்று யாரால் கூறமுடியும்? தீமையை நன்மைக்காகவும், மனிதருடைய கோபத்தையும், சாத்தானின் கோபத்தையும் தமது மகிமை விளங்கும்படி அவர் நடப்பிக்கவில்லை என்று யார் அப்பொழுது கூறமுடியும்?

பிரமிடு படம் பரிபூரண நிலையை அடைந்த ஜீவிகளை பிரதானமாக வலியுறுத்துவதை மட்டும் நோக்கமாகக் கொண்டிராமல், முழு சிருஷ்டியும் ஒருமைப்பாட்டிற்குள் வருவதற்கான வழிமுறைகளுக்கு விடைகளைச் சொல்வதையும் அடையாளப்படுத்துகிறது. கிறிஸ்துவை தலையாகக்கொண்டு, அவரது சரீரமாகிய திருச்சபையார் மட்டுமல்ல, பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய சகலமும் ஒன்றுக்கூட்டப்படும்போது, அனைத்தும் இசைவாயும் பரிபூரணமாயும் நிறைவேறியிருக்கும். (எபே. 1:10)

கிறிஸ்து இயேசு இம்மாபெரும் கட்டிடத்திற்கு "ஆரம்பமும்," "தலையாகவும்" "தலைக்கல்லாகவும்," "பிரதானமான மூலைக்குத் தலைக்கல்லாகவும்" இருக்கிறார். இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த உச்சிக்கல்லின் கோணங்களுக்கும், அமைப்புக்கும் ஏற்றவாறு அதன் கீழ்க் கற்கள் ஒவ்வொன்றும் கட்டப்பட வேண்டும். ஆனாலும் இந்தக் கட்டிட



அமைப்பில் எத்தனை வகையான கற்கள் இடம் பெற்றிருக்கின்றன என்பதும் பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள தேவபிள்ளைகளுக்குள் அநேக வெவ்வேறு விதமான சுபாவங்கள் உள்ளன என்பதும் ஒரு காரியமல்ல. அவர்கள் அனைவரும் நித்தியத்துக்கும் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், அவரது குமாரனின் சாயலுக்கு ஒப்பாக இசைவாக இருக்க வேண்டும். இந்தக் கட்டிடத்தில் சேர விரும்புகிறவர்கள் அனைவரும், தேவனுக்குக் கீழ்ப்படிகிற ஆவியில் பங்குபெற்று, அவரிடத்திலும் அவரது சிருஷ்டிகள் அனைவரிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும் முழு சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதைப்போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்பதே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. இந்த அன்பு கிறிஸ்துவினிடத்தில் பூரணமாய் இருந்தது.

பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய சகலமும் ஒரே தலையாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்று சேர்க்கப்பட வேண்டும் என்ற தேவதிட்டத்தின்படி, முதலாவதாக தலையாகிய கிறிஸ்து தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாவதாக அவரது சரீரமாகிய திருச்சபை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்கு அடுத்த நிலையில் தேவ தூதர்களும் மற்ற ஆவிக்குரிய வகுப்பாரும் இருப்பார்கள். அடுத்து இஸ்ரயேலரின் முற்பிதாக்கள் மற்றும் உலகத்தாரும் இருப்பார்கள். உன்னதத்திலிருந்து துவங்கி, ஒருமைப்பட்டு இசைவாக இருக்கும்படி கொண்டுவரப்படுகிறவர்கள் அனைவரையும் வரிசைப்படுத்துவது தொடர்ந்து நடக்கும்.

இந்த பரீட்சிக்கப்பட்ட, பிரதானமான, மூலைக்குத் தலைக்கல் முதலாவதாக நாட்டப்பட்டு அஸ்திபாரக் கல் என்றழைக்கப்பட்டதே ஒரு தனிச்சிறப்பாகும். தேவனிடத்தில் வைக்கும் அனைத்து நம்பிக்கைகளுக்கும், அவரது நீதிகளுக்குமான அஸ்திபாரம் பூமியில் அல்ல, பரலோகத்திலேயே போடப்பட்டது என்பது இதில் விளக்கப்பட்டுள்ளது. பரலோகத்தில் உள்ளவைகளாலும் பிரமாணங்களாலும் கவரப்பட்டு, இந்தப் பரலோக அஸ்திபாரத்தின்கீழ்

கட்டப்பட்டு இணைந்திருக்கிறார்கள். இந்தக் கட்டிட முறை பூமிக்குரிய கட்டிடம் கட்டுவதற்கு நேர் எதிரான முறையாகும். இருந்தபோதிலும் அந்தத் தலைக்கல்லிற்கு ஒத்தவாறு முழுக்கட்டிடமும் இருக்கக் காணும்படி அக்கல் (இயேசு) முதலாவதாக நாட்டப்பட வேண்டியிருந்தது. நமது அஸ்திபாரம் மேல் நோக்கிச் செல்லவே நாட்டப்பட்டது. கீழ் நோக்கியல்ல என்பதையும், ஜீவனுள்ள கற்களாகிய நாம் "அவருக்குள் எல்லாவற்றிலும் கட்டப்பட்டவர்களாக" இருக்கிறோம் என்பதையும் அறியும்போது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது. ஆயிரவருட அரசாட்சியில், பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள வெவ்வேறு சுபாவமுள்ள ஒவ்வொரு சிருஷ்டியும் பரிபூரணமாய்க் கீழ்ப்படிதலுக்குட்பட்டு இசைவாகி, தேவனை ஸ்தோத்தரித்து அவருக்கு ஊழியம் செய்யும் வரைக்கும், இந்த பணிகள் நீடிக்கும். அதன்பின்பு, அகில உலகங்களும் (Universe) பரிசுத்தமாகும். அந்த நாளில், "அந்தத் தீர்க்கதரிசியின் சொல் கேளாதவன் எவனோ அவன் ஜனத்திலிராதபடிக்கு (இரண்டாம் மரணத்தில்) நிர்மூலமாக்கப்படுவான். (அப். 3:22, 23)

## வனாந்தரத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆசரிப்புக்கூடாரம்

யுகங்களைப்பற்றிய தேவனுடைய தெய்வீகத் திட்டத்தைக் காண்பிக்கும் வரைபடத்தில் உள்ள அதே பாடங்கள், வனாந்தரத்தில் தெய்வீகக் கட்டளைப்படி கொடுக்கப்பட்ட நிழலான ஆசரிப்புக்கூடாரத்திலும் கற்பிக்கப்படுகிறது. மகா பரிசுத்த ஸ்தலத்தைச் சென்றடைவதற்குப் பலவிதமான படிகள் இருக்கின்ற காரணத்தினால், யுகங்களுக்கடுத்த வரைபடத்தில் *ஆசரிப்புக்கூடாரத்தையும் இணைத்துக் காண்பித்திருக்கிறோம். இவை இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்து, தெய்வீகத் திட்டத்தின் மேன்மையை எளிதில் விளங்கிக்கொள்ள இது உதவும். ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்திற்கு (Court) வெளியே, முழு உலகமும் பாவத்தில் விழுந்துபோன நிலைமையில் (R) இருக்கிறது. வாசல் வழியாக பிரகாரத்தில் நுழைகின்றபோது நாம் (N) நிலைமையில் விசுவாசிகளாகிறோம் அல்லது நீதிமான்களாக்கப்பட்டவர்களாகிறோம்.

*ஆசரிப்புக்கூடார நிழல்கள் பற்றிய அதிகமான விளக்கத்திற்கு விசேஷித்த பலிகளின் ஆசரிப்புக்கூடார நிழல்கள் என்ற புத்தகத்தை பார்க்கவும்.



அதற்கு அடுத்த கட்டத்திற்கு முன்னேறுபவர்கள், ஞானஸ்நானம் செய்து ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த திரைக்கதவுக்கு முன்னேறிச் சென்று, M நிலைமையில் ஆசாரியராகிறார்கள். இவர்கள் "சமூகத்தப்பங்களால்" திடனடைந்து "குத்துவிளக்கினால்" வெளிச்சம் பெற்று, "பொன்னாலான பலிபீடத்தில்" இயேசுவின் மூலமாக செலுத்தும் பலி தேவனுக்கேற்ற நறுமணமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இறுதியாக முதலாம் உயிர்த்தெழுதலில் பரிபூரண ஆவிக்குரிய நிலைமை அல்லது மகாபரிசுத்த ஸ்தலத்தை (L நிலைமை) அடைகிறார்கள். பிறகு அவர்கள் தேவ இராஜ்யத்தின் மகிமையில் இயேசுவோடு K நிலைமையில் இணைகிறார்கள்.

## ஆசீர்வாதமான நம்பிக்கை

"சிறிது காலத்திற்குள் பூமியில் நடக்கும் சண்டைகள் முடிவுக்கு வரும்;
சிறிது காலத்திற்குள் அவளது கண்ணீர் யாவும் துடைக்கப்படும்;
சிறிது காலத்திற்குள் யேகோவாவின் மகிமை
இந்த இருளைக் கிழித்து
ஆயிரமாண்டு வெளிச்சத்தைக் கொணரும்.

"சிறிது காலத்திற்குள் மனிதனை தற்போது சூழ்ந்தடுத்து வருகிற
கொடுமையான இசைவற்ற காரியங்கள்
கடந்த காலத்து அனுபவங்களாக மறைந்துபோகும்;
சிறிது காலத்திற்குள், முன்பு அவர்களை மீட்டெடுத்த அன்பு
அவர்களது அழுகையை ஆனந்தப் பாடலாக மாற்றும்.

"சிறிது காலத்திற்குள் சமீபமாகக் கிட்டிச் சேர்க்கும்
மகிமை நிறைந்த நாளில் அதிகரிக்கும் விடியற்காலை வெளிச்சம்
தேவனுக்கு ஸ்தோத்திரம்
ஒவ்வொரு மணிநேரமும் பிரகாசமாக வளர்ந்தோங்கும் வெளிச்சம்,
நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கும்."

* * * *

# அத்தியாயம் – 13

## இவ்வுலக இராஜ்யங்கள்

முதலாவது ஆளுகை – அதனை இழந்துபோகுதல் – அதன் மீட்பும், திரும்பக்கொடுத்தலும் – நிழலான தேவ இராஜ்யம் – அபகரிப்பவன் – தற்கால ஆளுகையின் இரு நிலைமைகள் – தேவனால் நியமிக்கப்பட்ட அதிகாரங்கள் – அவைகளைப்பற்றிய நேபுகாத்நேச்சாரின் பார்வை – தானியேலின் தரிசனமும் அதன் விளக்கமும் – இவ்வுலக இராஜ்யங்களை வேறு நிலைப்பாட்டிலிருந்து காணுதல் – தற்கால அரசாங்கங்களுக்கும், திருச்சபைக்குமுள்ள முறையான உறவு – இராஜாக்களின் தெய்வீக உரிமையை சுருக்கமாக ஆராய்தல் – போலி கிறிஸ்தவ மண்டலத்தின் தவறான உரிமைக்கோரல் – ஐந்தாம் உலகப்பேரரசின் மேலான நம்பிக்கை.

தெய்வீக வெளிப்பாட்டின் முதலாம் அத்தியாயத்தில், பூமிக்குரிய சிருஷ்டிப்பையும் அதன் ஆளுகையையும் குறித்த தமது நோக்கத்தைத் தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார். "பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்." (ஆதி. 1:26 – 28)

இவ்வுலகத்தை ஆளக்கூடிய உரிமை, முதல் மனிதனும் கர்த்தரால் முழு தகுதியாக்கப்பட்டிருந்த பரிபூரண மனிதனுமாகிய ஆதாமின் கையில் கொடுக்கப்பட்டது. அவ்வேளையில் அவன் மனுக்குலத்திற்கு தலைவனாகவும், இவ்வுலகை ஆளும் இராஜாவாகவும் இருந்தான். பலுகிப்பெருகி பூமியைக் கீழ்ப்படுத்தி நிரப்பி ஆளுகை செய்யும்



பணியானது ஆதாமுக்கு மட்டுமல்ல – முழு மனுக்குலத்திற்கு ஆகும். "அவர்கள் ஆளக்கடவர்கள்" என்று கட்டளையிடப்பட்டது. மனுக்குலத்தார் பரிபூரணமாகவும், பாவமில்லாமலும் இருந்திருந்தால் இந்த ஆளும் உரிமை அவர்கள் கைகளிலிருந்து பறிபோயிருக்காது.

ஒவ்வொரு மனிதனுக்கும் சக மனிதன்மேல் ஆளுகை செய்யும் அதிகாரம் அளிக்கப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். மாறாக பூமியின்மேல் ஆளுகை செய்து நிலத்தைப் பண்படுத்தி, அதன் விளைச்சல்களை பொது நன்மைக்காகப் பயன்படுத்துமாறு முழுச் சந்ததிக்கும் உரிமை அளிக்கப்பட்டது. கனிம வளங்களும் தாவர வர்க்கங்களும் மனிதனது அதிகாரத்திற்கு கட்டுப்பட்டதோடு மட்டுமல்ல, பல வகையான மிருகஜீவன்களும்கூட அவனுக்கு ஊழியம் செய்யவும், அவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிறது. மனுக்குலம் பரிபூரணமாக இருந்து, சிருஷ்டிகரின் திட்டத்திற்கு ஆதியில் கீழ்ப்படிந்திருக்குமானால், அதிகமதிகமாக மனிதர்கள் பெருகும்போது அவர்கள் ஒன்றுகூடி கலந்து ஆலோசித்து அவர்களது முயற்சிகளை ஒழுங்குபடுத்தி, பொதுவான ஆசீர்வாதங்களைப் பெற்று, அதை நீதியோடும், ஞானத்தோடும் பகிர்ந்தளிக்க வழிவகைகளைத் தீர்மானிக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கும். இவ்வாறு காலங்கள் செல்லச் செல்ல, மக்கள் தொகை அதிகரித்துவருவதினால், கலந்து ஆலோசிப்பது கூடாதகாரியம் ஆகிவிடும். ஆகவே, பல்வேறு வகுப்பாரிலுமிருந்து அவரவர் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து, தங்களது பொதுவான உணர்வுகளையும் குறைகளையும் எடுத்துச் சொல்லி, அவர்களுக்காக செயல்படச் செய்திருப்பர். எல்லா மனிதர்களும் மனரீதியாகவும், ஒழுக்கரீதியாகவும், உடல்ரீதியாகவும் பரிபூரணர்களாய் இருந்திருப்பார்களானால், தேவனையும் அவரது ஒழுங்குகளையும் பிரதானமாக எண்ணி, ஒவ்வொரு மனிதனும் அவரை நேசித்திருப்பார்களானால், தன்னைப்போல் தன் அயலானையும் நேசித்திருப்பார்களானால், இந்த ஏற்பாட்டினைச் செயல்படுத்துவதில் எவ்விதத் தடையோ கஷ்டமோ இருந்திருக்காது.

சிருஷ்டிகர் முன்தீர்மானித்திருந்த பூமிக்குரிய அரசாங்கம், மக்களாட்சி முறையிலிருந்தது என்று காணப்படுகிறது. இந்த அரசாங்கத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் அங்கம் வகிக்க முடியும்.

அதிலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஒரு சுதந்திரமான இராஜாவைப் போலிருந்து தனக்காகவும் பொது நன்மைக்காகவும் ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்ற தகுதிப் பெற்றிருந்திருப்பான்.

தேவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட இந்த ஆளுகை நித்தியத்துக்கும் நிலைத்திருக்க சில நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்தத் தெய்வீக ஆளுகையானது இப்பரந்த பிரபஞ்சத்தை ஆண்டு நடத்தும் பிரதான ஆட்சியாளரோடு இசைவாக எப்பொழுதும் இயங்க வேண்டுமென்பதே அந்த ஒரே நிபந்தனையும் சட்டமும் ஆகும். சுருக்கமாகக் கூறின், அந்த நிபந்தனை "அன்பே" "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கிறது." "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக." (ரோமர் 13:10; மத். 22:37–40)

மனிதனுக்கு அருளப்பட்ட இந்த மாபெரும் தயவைக்குறித்து தாவீது தேவனை நன்றியோடு ஸ்தோத்திரித்துக் கூறுகிறதாவது: "நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனுக்கு ஆளுகை தந்தீர்." (சங். 8:5–6) முதல் மனிதனாகிய ஆதாமின் வழியாக இந்த ஆளுகை மனுக்குலத்திற்குக் கொடுக்கப்பட்டு பூமியில் தேவ இராஜ்யம் முதலாவது ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு தேவனது பிரதிநிதியாக இருந்து மனிதன் ஆளுகை செய்தான். ஆனால், சர்வசிருஷ்டிக்கும் உன்னத ஆட்சியாளராக இருப்பவருக்குக் கீழ்ப்படியாமற்போனதினாலே தனது ஜீவனை மட்டுமல்ல, இப்பூமியில் தேவ பிரதிநிதியாக ஆளுகை செய்யக்கூடிய உரிமை, அதிகாரங்கள், ஆசீர்வாதங்கள் அனைத்தையும் இழந்துபோனான். இழந்த அந்த நாள் தொடங்கி, அவன் இராஜாவுக்குரிய அதிகாரம் பறிக்கப்பட்டு மரண ஆக்கினையைப் பெற்ற கலகக்காரனானான். இவ்வாறாக பூமியில் தேவனுக்குரிய இராஜ்யம் அதிவிரைவாக முடிவுற்றது. இஸ்ரயேலில் நிழலாகக் குறுகிய காலம் மட்டுமே செயல்பட்ட அந்த இராஜ்யம் தவிர அதன் பிறகு இன்று வரையிலும் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படவில்லை.



தேவனுடைய ஏற்றக்காலம் வரும்வேளையில், அதாவது தம்முடைய விலைக்கிரயத்தினால் ஆளுகையைப் பெறும் உரிமைக்காரரானவர் வரும்மட்டும், ஆக்கினைக்குள்ளான ஜீவனோடு இருக்கும் மனிதன், அவனுடைய சொந்த யோசனைகளாலும், ஆற்றலாலும் இப்பூமியின்மேல் ஆளுகைப்புரிய அனுமதி நீட்டிக்கப்பட்டுள்ளது. ஏதேனில் மனிதன் தன் ஜீவனுக்கான உரிமையையும் இவ்வுலகை ஆளுகின்ற உரிமையையும் இழந்துபோனாலும் இவையனைத்தும் உடனுக்குடன் அவனிடத்திலிருந்து எடுக்கப்படவில்லை.

நமது கர்த்தர் தம் மரணத்தினால் மனிதனை மீட்டு, விலைக்கு வாங்கினதோடு மாத்திரமல்ல, இவ்வுலகை ஆளும் உரிமையையும் அவன் ஆதியில் பெற்றிருந்த முழுச் சுதந்தரத்தையும் மீட்டார். அவ்வாறு விலைக்கு வாங்கினதின் மூலம் அவரிடத்திலேயே உரிமைப் பத்திரம் இருக்கிறது. தற்போது அவரே உண்மையான சுதந்தரவாளி. ஏற்றவேளையில் சீக்கிரமாக அவர் விலைக்கு வாங்கினதை தமக்குச் சொந்தமாக்குவார். (எபேசி. 1:14) மனிதனை அடிமைப்படுத்துவதற்காக விலைக்கு வாங்காமல், அவனை முந்தின பூரண நிலைக்கு சீர்பொருந்தச் செய்ய வாங்கினது போலவே இவ்வுலகை ஆளுகை புரியும் அதிகாரத்திலும் இருக்கும். மனிதன் தேவ சித்தத்திற்கு இசைந்து இவ்வுலகில் ஆளுகைசெய்யும் தகுதியை மீண்டும் அடையும்பொழுது மனிதனுக்குரிய முந்தைய அனைத்து ஆசீர்வாதங்களையும் ஆளுகையையும் அவனுக்கு திரும்ப கொடுப்பதற்காகவே வாங்கியிருக்கிறார். இதன் காரணமாக மேசியாவின் ஆட்சி இவ்வுலகில் நித்தியத்திற்கும் இருக்காது. அனைத்து கலகம் மற்றும் கீழ்படியாமையும் தமது பலத்த இரும்புக்கோல் அரசாட்சியால் ஒடுக்கிக் கீழ்ப்படுத்தி, விழுந்துபோன சந்ததியாரை முந்தைய பூரணநிலைக்குக் கொண்டுவந்து, தேவன் தாம் ஆதியில் ஏற்பாடு செய்திருந்த ஒழுங்குக்கு இசைய பூமியை ஆளுகை செய்யும் முழுத் தகுதியை அடையும்வரைக்கும் அவரது ஆட்சி தொடரும். இவ்வாறு தேவனால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியாகிய மனிதனுக்குக் கீழாக பூமியில் மறுபடியும் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

யூத யுகத்தில் தேவன் இஸ்ரயேலரை தமது இராஜ்யமாக மோசே மற்றும் நியாயாதிபதிகளின் கீழ் அமைத்தார். ஒரு மக்களாட்சியாகவே

அதை அமைத்தார். ஆனாலும் அது நிழலான இராஜ்யமாகவே இருந்தது. அதன் பின்பு ஏற்படுத்தப்பட்ட, விசேஷமாக தாவீது மற்றும் சாலொமோனால் ஆளப்பட்ட ஏதேச்சாதிகார அரசு, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியாவின் அரசாட்சிக்கு சில வகைகளில் நிழலாக அமைந்தது. இஸ்ரவேலர் தங்களைச் சுற்றியிருந்த மற்ற ஜாதியாரைப்போல் அல்லாமல், யேகோவாவைத் தங்கள் இராஜாவாகக் கொண்டு அவர்களை ஆட்சிசெய்த இராஜாக்கள் தேவனுக்கு ஊழியஞ்செய்தார்கள் என்று நாம் சங்கீதம் 78:70–71–இல் வாசிக்கின்றோம். 2 நாளாகமம் 13:8; 1 நாளாகமம் 29:23–லும் இவ்வுண்மை வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் “தேவனுடைய இராஜ்யம்” என்றும், “சாலொமோன் தன் தந்தையாகிய தாவீதின் ஸ்தானத்தில் கர்த்தருடைய சிங்காசனத்தில் வீற்றிருந்தான்” என்றும் உறுதியாகக் கூறப்பட்டிருக்கிறது. தாவீதுக்கு நாற்பது வருடத்திற்கு முன்னர் முதல் இராஜாவாகிய சவுல் அதே சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சிபுரிந்தான்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு எதிராகப் பாவஞ்செய்தபொழுது அவர்களைப் பலமுறை தண்டித்து, முடிவாக அவர்களது அரசாட்சியை முற்றிலுமாக அகற்றினார். தாவீதின் சந்ததியில் கடைசி இராஜாவாக ஆட்சிப்புரிந்த சிதேக்கியாவின் நாட்களில் இராஜரீக அதிகாரம் நீக்கப்பட்டது. அவ்வேளையில் நிழலான தேவராஜ்யம் கவிழ்க்கப்பட்டது.

இதே சம்பவத்தைக்குறித்த தேவனுடைய தீர்மானம் என்ன என்பதை தேவ வசனங்கள் கூறுவதைப் பார்ப்போம். “இஸ்ரவேலை ஆளுகிற அசுபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்திற்கு முடிவு வருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது... அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்.” (எசேக். 21:25–27) இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக பாபிலோன் இராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாக வந்து, அவர்களது இராஜாவை அரியணையிலிருந்து அகற்றி, ஜனங்களைச் சிறைப்பிடித்துச் சென்றான். அதன்பிறகு பெர்சியனாகிய கோரேசின் மூலம் இத்தேசம் திரும்பக் கட்டப்பட்டபோதிலும், அதன் பிறகு வந்த பேரரசுகளான மேதோ பெர்சியா,



கிரேக்கம், ரோம் ஆகியவற்றிற்குக் கீழ்ப்பட்டவர்களாகவும், அவர்களுக்கு வரிச் செலுத்துபவர்களாயும் இருந்து, இறுதியில் கிபி 70–இல் தேசமே அழிக்கப்பட்டு, அவர்கள் அனைத்து தேசங்களுக்கும் சிதறடிக்கப்பட்டனர்.

மனிதன் விழுந்துபோன பிறகு தேவன் இஸ்ரவேல் இராஜ்யத்திற்கு மட்டுமே அரசாங்கத்தையும், சட்டங்களையும் கொடுத்து தம்முடையதாக அங்கீகரித்தார். அவர்களோடேகூட ஏராளமான தேசங்கள் இருந்தபோதிலும், அந்தத் தேசத்தார் தேவனே தங்களது தேசத்தை உண்டாக்கினவர் என்றும், தங்களது இராஜாக்களை அவரே ஏற்படுத்தினார் என்றும் உரிமைபாராட்டவில்லை. சிதேக்கியாவிடம் இருந்து இராஜ்யபாரம் அகற்றப்பட்டு இஸ்ரவேல் இராஜ்யம் கவிழ்க்கப்பட்டபொழுது இவ்வுலகத்தின் நீதியுள்ள சுதந்தரவாளியான கிறிஸ்து வந்து தம்முடையதாக உரிமைபாராட்டும்வரை அது கவிழ்க்கப்பட்டிருக்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டது. இவ்வாறாக தேவனுடைய இராஜ்யம் இவ்வுலகில் மீண்டும் ஆரம்பிக்கப்படும்வரை அதிகாரத்தில் இருக்கும் அனைத்து ராஜ்யங்களும் “இப்பிரபஞ்சத்தின் அதிபதியின்” கீழுள்ள “இவ்வுலக ராஜ்யங்கள்” என்று அழைக்கப்படுகிறது. இக்காரணத்தினால் இந்த இராஜ்யங்களில் ஏதோ ஒன்று தான் தேவனுடைய இராஜ்யமென்று உரிமைகொண்டாடினால் அது உண்மையான கருத்தல்ல. கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போதும் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படவில்லை. (லூக். 19:12) அந்தக் காலந்துவங்கி, கிறிஸ்துவோடு சிங்காசனத்தில் உடன் சுதந்தரர்களாக ஆளுகை செய்யும் தகுதியுள்ளவர்களாக இருக்கப் போகிறவர்களை தேவன் உலகத்திலிருந்து தேர்ந்தெடுத்து வருகிறார். கிறிஸ்து தன் இரண்டாம் வருகைக்கு முன்பாக தமது இராஜ்யம் வல்லமை மற்றும் , மகிமையை எடுத்துக் கொண்டு ஆளுகை செய்யமாட்டார்.

இஸ்ரவேல் இராஜ்யத்தைத் தவிர மற்ற இராஜ்யங்கள் “புறஜாதியாரின் இராஜ்யங்கள்” என்றும், “இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய” சாத்தானின் கீழுள்ள “இவ்வுலகத்தின் இராஜ்யங்கள்” என்றும் வேதத்தின்படி அழைக்கப்படுகின்றன. சிதேக்கியாவின் நாட்களில் இருந்த தேவனுடைய இராஜ்யம் அகற்றப்பட்ட பிற்பாடு, தேவனால் அங்கீகரிக்கக்கூடிய அல்லது அவரது சட்டங்களையோ அல்லது அவரால் விசேஷமாக மேற்பார்வையிடப்படுகிற ஆட்சி முறையையோ உள்ள எந்த

அரசாங்கமும் உலகத்தில் இருந்ததுமில்லை. ஆனால் தேவராஜ்யம் இவ்வுலகத்தில் இல்லாத காலத்தில் எருசலேமும், உலகமும் புறஜாதியாரின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் என்று இயேசு வெளியரங்கமாக அறிவித்தபடியால் (லூக். 21:24) புறஜாதியாரின் அரசாங்கங்களைத் தேவன் மறைமுகமாக அங்கீகரித்தார் என்று எண்ணலாம்.

தேவராஜ்யம் இல்லாத இந்தக்காலம் அல்லது தேவனுடைய செங்கோலும், அரசாங்கமும் எடுக்கப்பட்ட காலம் துவக்கி, கிறிஸ்துவின் மகிமையிலும் மாபெரும் வல்லமையிலும் ராஜ்யம் திரும்பவும் அமைக்கப்படும் காலத்திற்கும் இடைப்பட்டக்காலம், வேதாகமத்தில் "புறஜாதியாரின் காலங்கள்" என்றழைக்கப்படுகிறது. "இவ்வுலகின் இராஜ்யங்கள்" ஆளுவதற்கு குறிப்பிட்ட "காலங்கள்" அல்லது வருடங்கள் அனுமதிக்கப்படுகின்றன. அவ்வாறே மேசியாவின் கீழான தேவனது இராஜ்யத்தின் காலமும் வேதத்தில் குறிக்கப்பட்டு இருக்கிறது.

"புறஜாதியாரின் அரசாங்கங்கள்" தீமை நிறைந்தவைகளாக இருந்தபோதிலும் தேவனால் ஞானமான நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டன அல்லது அனுமதிக்கப்பட்டன. (ரோமர் 13:1) மனிதர்களது அபூரணத்தன்மையும், அநீதியான ஆட்சிமுறையும் பாவம் பெருகியிருப்பதனை வெளிக்காண்பிப்பதற்கு அடையாளமாகவும், பொதுவான படிப்பினையாகவும் இருப்பதோடு விழுந்துபோன மனிதன் தனக்குத்தானே மனநிறைவோடு தன்னை ஆண்டுகொள்ள முடியாது என்பதையும் நிரூபிக்கிறது. அவர்களது சொந்த நோக்கங்களின்படி தங்களால் முடிந்தவை செய்வதற்கு தேவன் அனுமதிக்கிறார். ஆனால் அவைகளால் தமது திட்டத்திற்கு இடையூறு ஏற்படும்போது தேவன் அவர்களுடையதை ரத்து செய்கிறார். அனைத்துக் காரியங்களும் நன்மைக்கேதுவாகவே கிரியை செய்யும்படியும், முடிவில் "மனிதனுடைய கோபமும் அவருடைய மகிமையை விளங்கப்பண்ணும்படியும்" தேவன் வடிவமைத்து நடத்தி வருகிறார். (சங். 76:10) நன்மை செய்யாமலும், போதனைகளை கற்பிக்காமலும், ஒரு நோக்கமும் இல்லாமலும் உள்ளவைகளை அவர் கட்டுப்படுத்துகிறார்.

ஒரு பரிபூரணமான அரசாங்கத்தை மனிதனால்



ஏற்படுத்தக்கூடாததற்குக் காரணம் விழுந்துபோன பாவ நிலைமையினால் உண்டான பலவீனம்தான். இந்த பலவீனங்கள் ஒரு பரிபூரண அரசாங்கத்தை ஏற்படுத்தும் மனித முயற்சிகளுக்கு தடைக்கற்களாய் இருக்கின்றன. உன்னத இராஜாவாகிய தேவனுக்கு விரோதமாக முதல் மனிதனை கீழ்ப்படியாமைக்குள் வீழ்த்திய சாத்தான், இவைகளை தனக்கு சாதகமாக்கிக்கொள்கிறான். மனிதனது பலவீனங்களை தொடர்ந்து தனக்குச் சாதகமாக்கிவரும் சாத்தான் தீமையை நன்மையாகவும் நன்மையைத் தீமையாகவும் காணும்படிச் செய்து, தேவனது திட்டங்களையும் குணாதிசயங்களையும் தவறாக அறிவித்து சத்தியத்தைக் காணாதபடி மனிதனது மனக்கண்களையும் குருடாக்கிவருகிறான். இவ்வாறு கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் அவன் கிரியை செய்து (எபே. 2:2) தனது சித்தத்தை நிறைவேற்றும்படிக்கு அவர்களை அடிமைப்படுத்தியிருக்கிறான். நம் கர்த்தரும், அப்போஸ்தலர்களும் அழைக்கிறபடி அவன் தன்னை உலகத்தின் அதிபதியாக உயர்த்திக்கொண்டான். (யோவா.14:30; 12:31) உரிமையின்படி அவன் இவ்வுலகத்தின் அதிபதியல்ல, வஞ்சகத்தினாலும், ஏமாற்று வித்தையினாலும் விழுந்துபோன மனிதரைத் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்து அவர்களுடைய சுதந்தரத்தைப் பறித்து இவ்வுலகத்தின் அதிபதியாயிருக்கிறான். அவன் அபகரிப்பவனாக இருப்பதினால் அவன் திடீரென தள்ளப்படுவான். இவ்வுலகின் அதிபதிக்குரிய உண்மையான உரிமையை அவன் பெற்றிருப்பானாகில் இவ்வாறு தள்ளப்பட மாட்டான்.

தற்காலத்தில் நடைபெற்றுவருகிற பூமியின் ஆளுகையில் காணப்படுகிறதும், காணப்படாததுமாகிய இருவித ஆளுகையின் பிரிவுகள் உள்ளதை காணலாம். இதில் காணக்கூடாதவைகள் ஆவிக்குரியவைகளாகவும் காணக்கூடியவைகள் மனிதனுக்குரியவைகளாகவும் இருக்கிறது. காணக்கூடிய பூமியின் அரசாங்கங்கள் ஆவிக்குரிய அதிகாரப் பிரபுவாகிய சாத்தானின் கட்டுப்பாட்டில் ஒரு குறிப்பிட்ட அளவில் உள்ளது. இவ்வாறு சாத்தான் இந்த அதிகாரத்தைப் பெற்றிருந்ததால்தான், தனது ஆளுகைக்குட்பட்டு நம் கர்த்தருக்கு இவ்வுலகின் ஆளுகையை அளிப்பதாகக் கூறினான். (மத். 4:9) புறஜாதியாரின் காலம் நிறைவடையும்போது தற்கால இருவித ஆளுகையும்

(ஆவிக்குரிய, பூமிக்குரிய) அகற்றப்படும். அப்பொழுது சாத்தான் கட்டப்பட்டு இவ்வுலகின் இராஜ்யங்கள் கவிழ்க்கப்படும்.

விழுந்துபோன, குருடாக்கப்பட்ட, தவிக்கின்ற சிருஷ்டிகள் நூற்றாண்டுகளாக அதன் தேய்ந்துபோன வழியில் வருந்திச் செல்ல முயற்சித்து, ஒவ்வொரு அடி முன்வைக்கும் போதும் தோல்வியைத் தழுவி, நல்ல முயற்சிகளை எடுத்தும் அதற்குரிய பலன் கிடைக்காமல் தவித்து வந்தபோதிலும், தங்களுடைய தத்துவ ஞானிகள் கனவு கண்ட பொற்காலம் சமீபித்திருக்கிறது என்ற நம்பிக்கையில் இருந்து வந்திருக்கிறது. அவர்கள் எதிர்பார்த்திருப்பதற்கும் அவர்கள் நம்பியிருக்கிறதும், ஏக்கத்தோடு தவிக்கிறதற்கும் மேலான மாபெரும் விடுதலையானது, அவமதிக்கப்பட்ட நசரேயனும் அவரது பின்னடியார்களும் தேவபுத்திரர்களாக கூடிய விரைவில் இராஜ்யத்தின் வல்லமையில் வெளிப்பட்டு அவர்கள் மூலமே அந்த விடுதலைப் பெறுவார்கள் என்பதை அறியாதிருக்கிறார்கள். (ரோமர் 8: 22,19)

தற்கால தீமையான அரசாங்கங்கள் தேவனால் அனுமதிக்கப்பட்டிருப்பதையும், இந்த இராஜ்யங்களால் நிறைவேற்றப்பட வேண்டும் என அவரால் குறிக்கப்பட்ட காரியங்கள் நடந்தேறினவுடன் அவைகள் நீக்கப்பட்டு, கடைசியாக ஒரு நல்ல அரசாங்கத்தை கொண்டுவரும்படியான அவரது திட்டத்தைப் பற்றியும் தமது பிள்ளைகள் அறியாதிருந்து, இருளில் தவிக்க தேவனுக்கு மனமில்லை. தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலமாக இவ்வுலக இராஜ்யங்களைக் குறித்த பல்வேறு காட்சிகளை நமக்குத் கொடுத்திருக்கிறார். சமாதானப் பிரபுவாகிய மேசியாவின் நீதியான நித்திய இராஜ்யம் ஏற்படுத்தப்படும்பொழுது இவ்வுலகத்தின் இராஜ்யங்கள் அகற்றப்படும் என்று நமக்குக் காண்பித்து நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

மனிதன் தற்காலத்தில் ஆட்சிசெய்து வருவது யேகோவாவின் சித்தத்திற்கும், வல்லமைக்கும் எதிரானதல்ல. இது தம்மால் அனுமதிக்கப்பட்டதே என்று காண்பித்திருக்கிறார். தேவன் நேபுகாத்நேச்சாருக்கு கொடுத்த செய்தியில், நான்கு மாபெரும் இராஜ்யங்களான பாபிலோன், மேதோ- பெர்சியா, கிரேக்கம், ரோம்



ஆகியவை கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்வரை ஆட்சிசெய்ய தேவன் அனுமதித்திருந்தார் என்று காண்பித்திருக்கிறார். (தானி. 2:37-42) இது இந்த உலக இராஜ்யங்கள் எப்பொழுது முடிவுக்கு வருமென்று காண்பிக்கிறது.

இந்த தீர்க்கதரிசன கருத்துகளை நாம் தற்போது கண்ணோக்குகிறபடி, நிழலான கர்த்தரின் இராஜ்யமாகிய இஸ்ரயேல் இராஜ்யம் கவிழ்க்கப்பட்டவுடன், முதலாவது ஆட்சி பாபிலோனுக்குக் கொடுக்கப்பட்டதை நினைவுபடுத்துவோமாக.

## பூமிக்குரிய இராஜ்யங்களைக்குறித்து நேபுகாத்நேச்சார் கண்ட தரிசனம்

தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியும்படி கட்டளையிடப்பட்டிருக்கிற நமக்கு "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது." (ரோமர் 15:4; 13:1) இவ்வாறு எழுதப்பட்டவைகளில் நேபுகாத்நேச்சார் கண்ட கனவும் அதற்கு தீர்க்கதரிசியின் மூலமாகக் கொடுக்கப்பட்ட தெய்வீக விளக்கமும் அடங்கியுள்ளது. (தானி. 2:31-45)

தானியேல் கனவை விவரித்துச் சொன்னதாவது: "இராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர்; அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது; அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், "அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது."

"அப்பொழுது அந்த இரும்பும், களிமண்ணும், வெண்கலமும், வெள்ளியும், பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைக்காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஓர் இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டுபோயிற்று; சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியெல்லாம் நிரப்பிற்று.

"சொப்பனம் இதுதான். அதின் அர்த்தத்தையும் இராஜ சமுகத்தில் தெரிவிப்போம். இராஜாவே, நீர் இராஜாதி இராஜாவாயிருக்கிறீர்; பரலோகத்தின் தேவன் உமக்கு இராஜரிகத்தையும், பராக்கிரமத்தையும், வல்லமையையும், மகிமையையும் அருளினார். (அப்போதுதான் புறஜாதியாரின் இராஜ்யங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது). சகல இடங்களிலுமுள்ள மனுப்புத்திரரையும், வெளியின் மிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படிச் செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே.

"உமக்குப் பிறகு உமக்குக் கீழ்த்தரமான (வெள்ளி) வேறொரு இராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் இராஜ்யம் ஒன்று எழும்பும். நாலாவது இராஜ்யம் இரும்பைப்போல உரமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கி சின்னாபின்னமாக்குகிறதோ, அப்படியே அது நொறுக்கிப்போடுகிற இரும்பைப்போல் அவைகளையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப்போடும். பாதங்களும், கால்விரல்களும் பாதி குயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த இராஜ்யம் பிரிக்கப்படும்; ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதில் இருக்கும். கால் விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாய் இருந்தது என்னவென்றால், அந்த இராஜ்யம் ஒரு பங்கு உரமும், ஒரு பங்கு நொறுங்குவதுமாய் இருக்கும்."

பூமியில் முன்பு ஆட்சிசெய்த சிறுசிறு பேரரசுகளைக் குறித்தும், தானியேல் கூறின நான்கு பேரரசுகளைப் பற்றியும் வரலாறு படிக்கும் மாணவர்கள் சுலபமாகப் புரிந்துகொள்வார்கள். அந்த இராஜ்யங்கள் அகில



உலகப் பேரரசுகள் என்றழைக்கப்படுகின்றன. அதில் முதலாவது பொன்னினாலான தலை பாபிலோன் இராஜ்யம் (38–வது வசனம்); மேதோ பெர்சியர்கள் இதைக் கைப்பற்றி இரண்டாவது ஆட்சியைப் பிடித்தனர். மேதோ பெர்சியர் மார்புப்பகுதியாகிய வெள்ளியைக் குறிக்கும். மேதோ பெர்சியரைத் தோற்கடித்த கிரேக்கர்கள் மூன்றாவது ஆட்சியைப் பிடித்தனர். கிரேக்கர் வெண்கலத்தால் ஆன உடலின் வயிற்றுப் பகுதியைக் குறிக்கிறது. அடுத்து வந்த ரோமப் பேரரசு நான்காவதாக உறுதியான ஆட்சியாக இருந்தது. இவர்கள் பலமுள்ள இராஜ்யமாக, இதன் கால்கள் இரும்பும், பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாகக் கலந்திருந்தது. இதில் முதல் மூன்று பேரரசுகள் அகன்றுபோயின. நான்காவதாக ரோமப் பேரரசு நமது கர்த்தரின் பிறப்பின்போது, உலகளவில் அதிகாரஞ் செலுத்தியது என லூக்கா 2:1–ஆம் வசனத்திலிருந்து அறியலாம். "உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது."

இரும்புப் பேரரசாக விளங்கிய ரோம், முந்தய பேரரசுகளைவிட அதிக பலமிக்கதாகவும், அதிகக்காலம் நீடித்தும் இருந்தது. ரோமப் பேரரசு தற்கால ஐரோப்பா தேசங்களில் இன்னும் தொடர்ந்து ஆட்சிப்புரிந்து வருவதை உண்மையாகவே நாம் காண்கிறோம். தற்கால ஐரோப்பா தேசங்கள் சிலையின் பத்து விரல்களைக் குறிக்கின்றன. களிமண் இரும்போடு கலந்திருக்கிற நிலைமையானது சபையும், அரசாங்கமும் (மதமும், அரசியலும்) சேர்ந்திருப்பதைக் குறிக்கிறது. இவ்வாறு கலந்திருப்பதை வேதாகமம், "பாபிலோன்," "குழப்பம்" என்று கூறுகிறது. உண்மையான தேவராஜ்யத்திற்கு அடையாளமாக கல் இருக்கிறது என்பதை நாம் இனி பார்க்கப்போகிறோம். ஆனால் குழப்பம் நிறைந்த பாபிலோன் களிமண்ணாக இருந்தாலும், பார்ப்பதற்குக் கல் போன்ற தோற்றம் அளிக்கின்றது. இவ்வாறு களிமண்ணாகிய பாபிலோன், இரும்பாகிய ரோம இராஜ்யத்தில் சிறுசிறு பகுதிகளாக சேர்ந்திருக்கிறது. சபையும், அரசாங்கமும் கலந்த இந்த அமைப்பு இவ்வுலக இராஜ்யங்களோடு திருமணம் செய்து கொண்டதற்கு ஒப்பாக உள்ளது. பெயர் கிறிஸ்தவ சபைகளைக் கர்த்தர் பாபிலோன் – குழப்பம் என்று அழைக்கிறார். இது தன்னை கிறிஸ்தவ தேசங்கள்– கிறிஸ்துவின் இராஜ்யம் என்று அழைத்துக் கொண்டது. தானியேல் விளக்குகிறதாவது: "நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக்

கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தம் கலப்பார்கள்; ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள். அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஓர் இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த இராஜ்யம் வேறே ஜனத்திற்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி தானோ என்றென்றைக்கும் நிற்கும்." (தானி. 2:43, 44)

புறஜாதியாரின் அரசாங்கங்கள் எப்பொழுது முடிவடையும் என்று தானியேல் இங்குக் கூறவில்லை. ஆனால் இது பற்றி வேதாகமத்தில் வேறு பகுதிகளில் காண்கிறோம். முன்னுரைக்கப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியும் முடிவு சமீபமாயிற்று, வாசலருகே நிற்கிறது என்று காண்பிக்கிறது. பரலோகத்தின் தேவன், தாம் ஏற்படுத்துவதாக வாக்குத்தத்தம்பண்ணின இராஜ்யம் இதுவே என்றும், இந்தத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்படியாகவே மற்ற அனைத்து இராஜ்யங்களையும் தகர்த்து அழித்ததாகவும் போப்பு மார்க்கம் தன்னை உயர்த்தி உரிமைப்பாராட்டினது. ஆனாலும் உண்மை என்னவென்றால், இரும்பும் களிமண்ணும் சேர்ந்ததுபோல் பெயர்சபையானது பூமிக்குரிய பேரரசுகளுடன் இணைந்தது. போப் மார்க்கம் ஒருக்காலும் தேவனுடைய உண்மையான இராஜ்யமாக இருந்ததில்லை. மாறாக போலி இராஜ்யமாகவே இருந்தது. போப் மார்க்கம் பூமிக்குரிய இராஜ்யங்களை அழித்து ஒழிக்கவில்லை என்பதற்குச் சிறந்த உதாரணம் என்னவென்றால், அவர்கள் இன்னும் நிலைக்கொண்டிருப்பதுதான். களிமண் தற்போது காய்ந்து நொறுங்கிவிடும் தன்மையில் உள்ளதால் ஒட்டிக் கொள்ளும் தன்மையை இழந்து, இரும்பும் களிமண்ணும் உடைபடக்கூடிய அடையாளங்கள் வெளிப்படுகின்றன. உண்மை இராஜ்யமான "கல்" மோதும்போது அவைகள் விரைவில் நொறுக்கப்படும்.

தானியேல் தொடர்ந்து தன் விளக்கத்தைக் கூறுவதாவது: "ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்து,



இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி தானோ என்றென்றைக்கும் நிற்கும். இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகாதேவன் இராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான்." (தானி. 2:44–45)

கையால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து வந்து புறஜாதியாரின் வல்லமைகளையும், அதிகாரங்களையும் நொறுக்கினது. அக்கல் தேவராஜ்யமாகிய உண்மை திருச்சபையைக் குறிக்கிறது. சுவிசேஷ யுகத்தின்போது இந்தக் கல்லாகிய இராஜ்யம் மனிதக் கைகளினால் அல்ல, சத்திய ஆவியின் வல்லமையினாலும், காணக்கூடாத யேகோவா தேவனின் வல்லமையினாலும் அதன் வருங்கால நிலைமைக்காகவும், மேன்மைக்காகவும் வடிவமைக்கப்பட்டு, செதுக்கப்பட்டு, மெருகேற்றப்படுகிறது. முழுவதும் வெட்டப்பட்டு முடிந்தவுடன் அது இவ்வுலக இராஜ்யங்களை அடித்து நொறுக்கும். ஜனங்களையல்ல, சிலையில் உருவகமாகக் கூறப்பட்ட அரசாங்கங்களையே அழிக்கும். ஜனங்களோ மீட்கப்படுவார்கள். மனிதனது ஜீவனை அழிக்க நம் கர்த்தராகிய இயேசு வராமல், இரட்சிக்கவே வந்தார். (யோவா. 3:17)

கல், ஆயத்தமாக்கப்படும் வேளையில், வெட்டப்படும்பொழுது வருங்காலத்திற்குத் தயாராகும் சின்னஞ்சிறு மலைக்கு ஒப்பாகக்கூறலாம். அவ்வாறே சபையும் சில சமயங்களில் தேவராஜ்யத்திற்கு ஒப்பிட்டு சொல்லப்படுகிறது. கல்லானது சிலையின்மேல் மோதும்வரை அது பர்வதமாவதில்லை. அவ்வாறே "கர்த்தருடைய நாளும்," தேசங்களின்மேல் வரும் "கோபாக்கினையின் நாளும்" அல்லது "உபத்திரவக்காலமும்" முடிந்தப்பிறகே, சபையாகிய தேவனுடைய இராஜ்யம் முழு உலகத்தையும் நிரப்பும். மேலும் அந்த இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, மற்ற எல்லா அதிகாரங்களும் சபையின் கீழாகக் கொண்டுவரப்படும்.

கிறிஸ்துவின் சபையில் ஜெயங்கொள்பவர்களுக்கு நம் கர்த்தர் ஏற்படுத்தின வாக்குத்தத்தத்தை இப்பொழுது நினைவுகூருவோம்: "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில்

என்னோடேகூட உட்காரும்படி அருள்செய்வேன்." "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தும் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக் கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். (வெளி. 3:21; 2:26, 27; சங். 2:8–12) இருப்புக் கோலானது அழித்து ஒழிக்கும் பணியைச் செய்து முடித்தப் பிறகு, அந்தக் கரம் இனி அரவணைத்து குணப்படுத்தத் திரும்பும். ஜனங்கள் கர்த்தரிடத்திற்குத் திரும்புவார்கள். அவர் அவர்களைக் குணப்படுத்துவார். அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துக்கப்படுகிறவர்களுக்கு ஆனந்தத்தைலத்தையும், ஒடுங்கின ஆவியுடையவர்களுக்கு துதியின் உடையையும் கொடுத்து அவர்களைக் குணப்படுத்துவார். (ஏசா. 19:22; எரே. 3:22, 23; ஓசி. 6:1; 14:4; ஏசா. 2:3)

## தானியேல் கண்ட பூமிக்குரிய இராஜ்யங்களின் தரிசனம்

நேபுகாத்நேச்சார் கண்ட தரிசனத்தில் பூமிக்குரிய பேரரசுகளானது பொன்னிலிருந்து இரும்புக்கு மாறி, இறுதியில் களிமண்ணாக மேன்மை நிலையிலிருந்து தரம் குறைந்து வந்திருப்பதாகக் காண்பிக்கப்பட்டது என்றாலும், உலகத்தின் பார்வையில் அந்த இராஜ்யங்கள் மனித மகிமையையும், சிறப்பையும், வல்லமையையும் எடுத்துக் காண்பிக்கின்றன.

உண்மைத் திருச்சபையாராகிய "கல்" வகுப்பார், தெரிந்தெடுக்கப்படும் வேளையில் அல்லது மலையிலிருந்து வெட்டி எடுக்கப்படும்பொழுது, இவ்வுலகத்தின் பார்வையில் மதிப்பற்றதாகவே இருந்தது. அது மனிதரால் தள்ளப்பட்டதும், அற்பமாய் எண்ணப்பட்டதுமாய் இருந்தது. அவர்கள் விரும்பும்படியான எந்த அழகும் அதினிடத்தில் இல்லை. இந்த மாபெரும் சிலையினால் குறிக்கப்பட்ட அரசாங்கங்களினால் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டும், துன்புறுத்தப்பட்டும், ஏமாற்றப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்தாலும் இவ்வுலகம் அதின் ஆட்சியாளர்களை நேசித்து, வியப்படைந்து, புகழ்ந்தும் வந்திருக்கிறது. அவர்களுக்குச் சாதகமாகவும் இருந்து வந்திருக்கிறது. இந்தச் சிலையின் மாபெரும் வெற்றிகளைக் கண்ட பிரதிநிதிகளாகிய அலெக்சாண்டர்களையும், சீசர்களையும், நெப்போலியன்களையும் உலகம் உரைநடைகளிலும், சித்திரங்களிலும் இடம்பெறச் செய்து வானளாவப் புகழ்ந்திருக்கிறது. ஆனாலும் அவர்களுடைய மாண்புகளெல்லாம் தங்கள் உடன் சகோதரராக இருந்தவர்களைக் கொன்று குவித்ததினாலும், அதிகார இச்சையினால் இலட்சக்கணக்கானோரை விதவைகளாகவும், அநாதைக் குழந்தைகளாகவும் ஆக்கினதில் அடங்கியுள்ளது. இப்போதும் அதேவிதமான எண்ணங்களே சிலையின் "பத்து விரல்களான" இராஜ்யங்களில் நாம் காண்கிறபடி, பன்னிரண்டு மில்லியனுக்கும் மேற்பட்ட மனிதருக்குப் பயங்கரமான நவீன ஆயுதங்களைக் கொடுத்து அதேவிதமான அதிகார வல்லமையினால் ஒருவரையொருவர் கொன்று குவிக்கும்படி கட்டளை இடப்பட்டு வருகிறது.



"இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம். தீமைச் செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்." (மல். 3:15) அதன் பின்பு கல் சிலையின்மேல் மோதி அதை நொறுக்கி தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, ஒடுக்கப்படுகிறவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவதை நாம் காணாமல் இருக்க முடியுமா? இந்த மாறுதலின்போது சிலகாலம் துன்பமும், வேதனையும் விளைந்தாலும் இறுதியில் நீதியின் சமாதான பலன்களைக் கொடுக்கும்.

இனி இந்த பூமியின் நான்கு உலகப் பேரரசுகள் தேவனுடைய பார்வையிலும், அவரோடு இசைந்திருக்கிறவர்கள் பார்வையிலும் எப்படிப்பட்டவை என்று பிரியமான தானியேல் தீர்க்கதரிசிக்கு தேவன் தரிசனமாகக் காண்பித்ததை இப்பொழுது பார்ப்போம். இந்த இராஜ்யங்கள் இழிவானதாகவும் மிருகத்தன்மை உள்ளதாகவும் நாம் எண்ணுவதுபோலவே, நான்கு உலகப் பேரரசுகளை, நான்கு பெரிதும், கொடியதுமான மிருகங்களாக தானியேலுக்குக் காண்பிக்கப்பட்டது. தானியேல் கண்ட காட்சியில் வரவிருக்கிற தேவராஜ்யம் (அந்தக் கல்) மகா மேன்மையானதாக நேபுகாத்நேச்சார் கண்டதைக் காட்டிலும் பிரமாண்டமானதாக இருந்தது என்று தானியேல் கூறுகிறதாவது: "இராத்திரி காலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்: இதோ, வானத்தின் நான்கு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின் மேல் அடித்தது. அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நான்கு

பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின. முந்தினது சிங்கத்தைப்போலிருந்தது; அதற்கு கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது... பின்பு கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்... அதன்பின்பு சிவிங்கியை (சிறுத்தை) போலிருக்கும் வேறொரு மிருகத்தையும் கண்டேன். ...அதன்பின்பு இராத் தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன். அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப் பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் வேற்று உருவமாயிருந்தது. அதற்குப் பத்துக்கொம்புகள் இருந்தது." (தானி. 7:2–7)

முதல் மூன்று மிருகங்களின் விவரங்கள் (சிங்கமாகிய பாபிலோன், கரடியாகிய மேதோ பெர்சியா, சிறுத்தையாகிய கிரேக்கம்) அதின் தலைகள், கால்கள், சிறகுகள் போன்ற விவரங்கள் அனைத்தும் அடையாள மொழியில் கூறப்பட்டுள்ளன. இவை தற்போது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததில்லை. ஆதலால் இவற்றை தற்போது விளக்க முற்படாமல் நான்காவது மிருகமாகிய ரோம் பற்றி நாம் முக்கியமாக ஆராய்வோம்.

இந்த நான்காம் மிருகமாகிய ரோம் பற்றி தானியேல் கூறுகிறார். "அதற்குப் பின்பு இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன். அது கெடியும், பயங்கரமும், மகா பலத்ததுமாயிருந்தது. ...அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது. அந்த கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கிடையிலே வேறொரு சின்னக்கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷர் கண்களுக்கு ஒப்பான கண்களும், பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது." (தானி. 7:7–8)

இங்கே ரோமப் பேரரசு காண்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பத்துக் கொம்புகள் அப்பேரரசின் ஆட்சி அதிகாரப் பிரிவுகளைக் குறித்துக் காண்பிக்கிறது. கொம்பு என்பது அதிகாரத்திற்கு அடையாளமாக உள்ளது. இதற்கிடையில் எழும்பின ஒரு சின்னக்கொம்பு, அவைகளில்



மூன்று கொம்புகளின் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றி மற்றவைகளின் நடுவே ஆட்சி செய்தது. இது போப்புவின் ஆட்சி அதிகாரம் அல்லது சின்னக்கொம்பு, அதாவது ரோம சபையின் வல்லமை சிறிய அளவில் ஆரம்பித்து, படிப்படியாக வளர்ச்சியடைந்ததைக் காண்பிக்கிறது. இவ்வாறு தன் ஆதிக்கத்தை அதிகரிக்கும் வேளையில் ரோமப் பேரரசின் ஆட்சி அதிகாரங்கள் அல்லது கொம்புகளாகிய மூன்று பிரிவுகள் ஹெருலி, கீழ் எக்சார்கேட், ஆஸ்டிரோ கோத்ஸ் (The Heruli, The Eastern exarchate and the Ostrogoths) ஆகிய பகுதிகள் பிடுங்கப்பட்டது. எதற்காகவெனில், தன்னை ஒரு சமுதாய அதிகாரத்திற்கு (கொம்பு) உயர்த்திக் கொள்ளவே. கடைசியாக மற்றும் விசேஷமாகக் குறிப்பிடப்படும் இந்தச் சின்னக் கொம்பாகிய போப்பு மார்க்கம், அதன் கண்களின் பெருமையும், தன்னை ஞானியாகக் கூறிக்கொண்டு பெருமையானவைகளைப் பேசும் வாயும் அதாவது பேச்சுக்களும், உரிமைப்பாராட்டுதலும் அதன் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

ரோமப் பேரரசைக் குறிக்கும் இந்த நான்காம் மிருகத்திற்குக் குறிப்பிடும்படியான எந்தப் பெயரையும் தானியேல் சூட்டவில்லை. ஆனால் மற்றவைகளோ சிங்கத்தைப்போலவும், கரடியைப்போலவும், சிறுத்தைக்கு ஒப்பாகவும் என்று வர்ணிக்கப்பட்டிருக்க, நான்காவது மிருகம் பயங்கரமானதும் கொடிய மிருகமுமாகப் பூமியிலுள்ள எந்த மிருகத்தோடும் ஒப்பிட முடியாதவாறு இருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதிய யோவான், இந்த மிருகத்தை (அரசாங்கம்) காட்சியாகக் கண்டு அதை விளக்கும்போது, அதற்கு ஒரு குறிப்பிட்ட பெயரை கொடுக்க முடியாமல் பல பெயர்களைக் கொடுக்கிறார். மற்ற பெயர்களுடன் "பிசாசு" என்ற ஒரு பெயரால் அழைக்கிறார். (வெளி. 12:9) அவர் நிச்சயமாகவே பொருத்தமானப் பெயரையே தெரிவு செய்திருக்கிறார். ஏனெனில் ரோமப் பேரரசு பரிசுத்தவான்களைக் கொடூரமாகத் துன்பப்படுத்தி, இரத்தம் சிந்தினதைக் கண்ணோக்கும்போது, மற்ற பூமிக்குரிய அரசாங்கங்களைப் பார்க்கிலும், இது மிகவும் கொடிய பேய்த்தன்மை உடையதாக இருந்திருந்திருக்கிறது. அஞ்ஞான ரோம், போப்புவின் ரோமாக மாறின பின்னரும், சாத்தானின் பிரதான குணங்களில் ஒன்றை வெளிப்படுத்தி வந்தது. சாத்தான் ஒளியின் தூதனாக வேஷந்தரித்திருப்பதுபோல் (2 கொரி. 11:14) ரோம் அஞ்ஞான

நிலைமையிலிருந்து தன்னை மாற்றிக்கொண்டு கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் இராஜ்யமாக தன்னைப் பிரகடனப்படுத்தியது.*

இந்தக் கடைசியான மிருகமாகிய ரோமப் பேரரசை விசேஷமாக சின்னக் கொம்பாகிய போப்பு மார்க்கத்தின் ஆட்சி அதிகாரத்தைப் பற்றிய சில விவரங்களை தானியேல் கூறின பிறகு, இந்தக் கொம்புக்குரிய நியாயத்தீர்ப்பு நடக்குமென்றும், அது தனது ஆளுகையை இழந்துவிடுமென்றும், இந்த அழிவு படிப்படியாக அதிகரித்து இறுதியில் மிருகம் முற்றிலுமாக அழிக்கப்படும் என்றும் கூறுகிறார்.

இந்த மிருகம் அல்லது ரோமப் பேரரசு அதன் கொம்புகளுடன் அல்லது அதன் பிரிவுகளுடன் இன்னும் நிலைத்திருக்கிறது. பரலோக இராஜ்யத்தின் ஆயத்தப்பணிகளுக்கான "கர்த்தருடைய நாளில்" பெருந்திரளான ஜனங்கள் அப்பேரரசிற்கு விரோதமாக எழும்பி, அரசாங்கங்கள் கவிழ்க்கப்படுவதால் இந்த மிருகம் கொல்லப்படும். நாம் பார்க்கப்போகிற வேறு அநேக வசனங்களின் மூலம் இது தெளிவாகக் காண்பிக்கப்படுகிறது என்றபோதிலும், போப்புவின் கொம்பு அழிக்கப்படுதல் முதலாவது வரவேண்டும். நெப்போலியன் போப்புவை சிறைக் கைதியாக பிரான்சிற்கு கொண்டுசென்றபோது இதன் வல்லமையும், அதிகாரமும் மங்கத் துவங்கியது. போப்புகளின் சாபமோ அல்லது அவர்களது ஜெபங்களோ, நெப்போலியன்போனபார்ட்டின் வல்லமையிலிருந்து அவர்களை விடுவிக்க முடியாததால் தெய்வீக அதிகாரத்தையும், வல்லமையையும் தாங்கள் பெற்றிருப்பதாகக் கூறிவந்த போப்பு மார்க்கத்தின் கூற்று ஆதாரமற்றது என்பது தேசத்து ஜனங்களுக்கு சாட்சியாயிற்று. அதன் பிறகு போப்பு மார்க்கத்தின் உலகத்திற்குரிய அதிகாரங்கள் மிகவும் குறைந்து போய், கிபி 1870 செப்டம்பர் மாதத்தில்

*பிசாசு என்று ரோமப் பேரரசு அழைக்கப்படுவது தனி நபராக பிசாசுடன் ஒப்பிடுவது தவறு என நிரூபிக்க முடியாது. ஏனெனில் சிங்கங்கள், கரடிகள், சிறுத்தைகள் போன்றவை அதனதன் குணாதிசயங்களோடு அறியப்பட்டிருக்கிறபடியால், அந்த அரசாங்கங்கள் அந்த மிருகங்களுக்கு ஒத்தக் குணத்தைத் தரித்திருந்தன என்பதே பொருள். அதுபோல சாத்தான் ஒருவன் உண்டென்று அவனது குணாதிசயத்தோடு அறியப்பட்டிருக்கிறபடியால், நான்காவது மிருகமாகிய உலகப்பேரரசு அவனை ஒத்திருக்கிறது.



விக்டர் இம்மானுவேல் என்ற அரசனால் முழுமையாகப் பறிக்கப்பட்டது.

ஆனாலும் இதன் வல்லமை படிப்படியாய் குறைந்துவரும் காலத்தில்கூட, உன்னதமானவருக்கு விரோதமான, தூஷணமான மற்றும் பெருமையான பெரிய பெரிய வார்த்தைகளைப் பேசியது. கிபி 1870–இல் அது கவிழ்க்கப்படுவதற்கு முன்பாகப் பேசின மாபெரும் தூஷணம் போப்புகள் "தவறுசெய்ய முடியாதவர்கள் (Infallibility)" என்பதாகும். இவையனைத்தும் முன்பதாகவே தீர்க்கதரிசனத்தில் குறிக்கப்பட்டிருந்தது. "அப்போது (அந்தக் கொம்புக்கு எதிரான தீர்ப்புக்குப்பின், அதாவது அதன் அழிவு ஆரம்பமான பிற்பாடு) நான் பார்த்தேன் –அந்தக் கொம்பு பெருமையான பேச்சுக்களை பேசினது." (தானி. 7:11)

இப்படியாக நாம் வாழும் தற்காலம்வரை நிகழ்ந்த சரித்திர சம்பவங்களை தானியேலின் தரிசனம் நமக்குக் காண்பித்து, இனி இப்பூமியின் பேரரசுகளின் முழுமையான அழிவையே நாம் எதிர்நோக்க வேண்டியவை என்று முன்கூட்டியே உரைக்கிறது. இதற்கடுத்து நடைபெறப்போகும் சம்பவம் பின்வரும் வார்த்தைகளில் கூறப்பட்டுள்ளது. "அந்த மிருகம் கொலை செய்யப்பட்டது. அதின் உடல் அழிக்கப்பட்டு எரிகிற அக்கினிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது." மிருகம் கொலை செய்யப்பட்டு அதின் உடல் தகனிக்கப்பட்டது என்பவை அடையாளங்களாக (Symbolic) உள்ளதுபோன்றே, தற்கால ஒழுங்குப்படுத்தப்பட்ட அரசாங்கங்களும், நம்பிக்கையிழந்து முற்றிலுமாக அழிக்கப்படும் என்பதும் அடையாளங்களில் காட்டப்பட்டுள்ளது. நான்காவது மிருகத்தின் முடிவுக்கும், அதற்கு முந்தைய மிருகங்களின் முடிவுகளுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பன்னிரண்டாம் வசனத்தில் தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார். அந்த மூன்று மிருகங்களான பாபிலோன், மேதோ–பெர்சியா, கிரேக்கம் ஆகியவற்றின் ஆளுகை அவைகளிடமிருந்து எடுக்கப்பட்டது. உலகத்தை ஆளுகின்ற வல்லமை அவைகளிடமிருந்து நீக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் ஒரு தேசமாயிருப்பதை உடனடியாக இழந்துவிடவில்லை. கிரேக்கம், மேதோ–பெர்சியா போன்ற பேரரசுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உலகையே ஆளும் அதிகாரம் நீக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு இன்றும் சிறிதளவு ஜீவன் இருக்கிறது. ஆனால் மிருகங்களில் நான்காவதும் இறுதியானதுமான

ரோமப் பேரரசுக்கோ அவ்வாறு இல்லாமல், தனது ஆளுகையையும் ஜீவனையும் ஒரே சமயத்தில் இழந்து முற்றிலும் நாசமடையும். அதோடு சேர்ந்து மற்றவைகளும் அழிந்துவிடும். (தானி. 2:35)

என்ன காரணத்திற்காக அல்லது எதைக்கொண்டு அந்தப் பேரரசுகள் அழிக்கப்பட்டது என்பது முக்கியமல்ல. ஆனால் இவ்வாறு இராஜ்யங்கள் விழுவது ஐந்தாம் உலகப்பேரரசாகிய தேவராஜ்யம் உரிமைக்காரராகிய கிறிஸ்துவின் கீழ் ஸ்தாபிக்கப்படுவதற்காகவே "தேவனால் முன் குறிக்கப்பட்ட" ஏற்ற வேளையின்போது நான்காவது மிருகத்திடமிருந்து ஐந்தாவது இராஜ்யமாகிய மேசியாவின் கீழ் மாற்றப்படுவதை தீர்க்கதரிசி விவரிக்கிறார்: "இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார், அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்கு (முழுமையடைந்த தலையும், சரீரமுமான கிறிஸ்துவுக்கு) கர்த்தத்துவமும், மகிமையும், இராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம், நீங்காத கர்த்தத்துவமும், அவருடைய இராஜ்யம் அழியாததுமாயிருக்கும்." இந்த வார்த்தைகளுக்கு தேவதூதன் கூறின விளக்கம் என்னவென்றால்: "வானத்தின் கீழெங்குமுள்ள இராஜ்யங்களின் இராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய இராஜ்யம் நித்திய இராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்." (தானி. 7:13, 27)

இவ்வாறு நாம் பார்த்த விதமாக பூமிக்குரிய ஆளுகையானது நீண்ட ஆயுளை உடையவரும், "சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினவருமான" யேகோவா தேவனால் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்படும். (1 கொரி. 15:27) இவ்வாறாக தேவராஜ்யத்தின்மேல் ஆளும் அதிகாரம் பெற்ற கிறிஸ்து, யேகோவா தேவனின் சித்தத்திற்கும் சட்டத்திற்கும் விரோதமான அதிகாரங்கள் மற்றும் வல்லமைகளை அகற்றும்வரை ஆளுகை செய்ய வேண்டியது. இம்மாபெரும் பணியை நிறைவேற்றி முடிப்பதற்கு முதலாவது புறஜாதியாரின் அரசாங்கங்கள் அகற்றப்படுவது அவசியமாகிறது. ஏனெனில், "இப்பிரபஞ்சத்தின்



தேவனை" போல "இவ்வுலக இராஜ்யங்களும்" தாங்களாக அமைதியாக சரணடையமாட்டார்கள். ஆனால் அவை வலுக்கட்டாயமாகக் கட்டப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட வேண்டும். "அவர்களுடைய இராஜாக்களை சங்கிலிகளாலும் அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும் -இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்" என்று எழுதப்பட்டுள்ளது. (சங். 149:7, 9)

தற்போது இருக்கும் அரசாங்கங்களை நமது கர்த்தரும், தானியேல் தீர்க்கதரிசியும் காண்கிறவிதமாக நாம் காணும்போது அந்த இராஜ்யங்கள் சுயநலமுள்ள மிருகத்தனமான அழிவுக்குரிய கொடூரமான குணங்களைப் பெற்றிருப்பதை அறிகிறோம். ஆகவே புறஜாதியாரின் காலங்கள் எப்பொழுது முடிந்து, நாம் ஆவலோடு எதிர்பார்க்கின்ற ஆசீர்வாதமானக் காலம் எப்பொழுது துவங்குமென்று நம் இருதயம் வாஞ்சிக்கிறது. அப்பொழுது தற்கால யுகத்தின் ஜெயங்கொள்ளுகிறவர்கள் தங்கள் தலையாகிய கிறிஸ்துவோடுகூட முடிசூட்டப்பட்டு, தவித்துக்கொண்டிருக்கிற மனுக்குலத்தை ஆளுகை செய்து, ஆசீர்வதித்து சீர்படுத்துவார்கள். தேவப்பிள்ளைகள் அனைவரும் தங்கள் கர்த்தரோடு சேர்ந்து, "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று மனதார ஜெபிக்கலாம்.

சிலை மற்றும் மிருகங்களை அடையாளமாகக் கொண்ட அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் உலகப் பேரரசுகளாவதற்கு முன்னரே ஒரு சிறு இராஜ்யமாக இருந்து வந்திருக்கிறது. உண்மையான தேவனுடைய இராஜ்யத்தின் விஷயத்திலும் இவ்விதமே நடக்கும். தேவனுடைய இராஜ்யமானது உலகத்திற்கு அப்பாற்பட்டதாக, தற்காலத்திலேயே இவ்வுலகை ஆள முயற்சிக்காமல், நீண்ட ஆயுசுள்ளவர் முன்குறித்த வேளை வரும்வரை காத்திருக்கிறது. மேலும் மற்ற மிருகங்களைப்போல், தனக்கு முந்தின இராஜ்யமாகிய மிருகத்தை எதிர்க்கொண்டு அழிக்க தன் வல்லமையைச் செயல்படுத்துவதற்குமுன், அது தனக்கு நியமித்த பணியைப் பெற்றுக்கொண்டு அதிகாரத்துக்கு வரவேண்டும் அல்லது உயர்த்தப்பட வேண்டும். ஆகையால், "அந்த இராஜாக்களின் நாட்களிலே

(அவர்களுக்கு இன்னும் வல்லமை இருக்கும்போதே) பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஓர் இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்" (வல்லமையும், அதிகாரத்தையும் நிலைநாட்டுதல்); அது நிலைப்படுத்தப்பட்ட பிறகு "அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி தானோ என்றென்றைக்கும் நிற்கும். (தானி. 2:44) ஆகவே நாம் எந்த வகையில் பார்த்தாலும், இவ்வுலக இராஜ்யங்கள் விழுவதற்கு முன்னரே, தேவனது இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும், தேவனுடைய இராஜ்யத்தின் வல்லமை அவைகளை நொறுக்கி கவிழ்க்கும் என்றும் எதிர்பார்க்க வேண்டும்.

## தற்கால அரசாங்கங்களை வேறுகோணத்திலிருந்து பார்த்தல்

இவ்வுலகத்தை ஆளும் உரிமையை தேவன் யாருக்கு அனுமதித்திருந்தாலும் எல்லாவற்றையும் ஆளும் உரிமையும், அதிகாரமும் சிருஷ்டிகராகிய யேகோவா தேவனுக்கே என்றென்றைக்கும் உரியது. இராஜாதி இராஜாவினிடத்தில் நேர்மையும், உண்மையுமற்றவனாக ஆனதினால் ஆதாம், தன் அபூரணத்திற்கும், பெலவீனத்திற்கும் ஆட்பட்டு, சீக்கிரத்தில் பெலவீனனாயும் உதவியற்றவனாயும் ஆனான். ஆரம்பத்தில் ஆதாம் இராஜாவிற்குரிய வல்லமையையும், அதிகாரத்தையும் பெற்றிருந்தபோது, அவனது மனப்பலத்தினால் அவனுக்குக் கீழ்மட்டத்திலிருந்த மிருகங்கள் அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருந்தது. அவ்வல்லமையை அவன் இழக்க ஆரம்பித்தான். அவன் தன் சுயக்கட்டுப்பாட்டையும் இழந்ததால் நன்மை செய்ய தீர்மானிக்கும்போதும் அவனது பெலவீனம் குறுக்கிடுகிறது. அவனுக்குள் தீமை வாசம் செய்வதனால், அவன் விரும்புகிற நன்மையைச் செய்யவிடாமல், விரும்பாத தீமையையே செய்யத் தூண்டுகிறது.

ஆகவே தேவ நீதிக்குக் கீழ்ப்படியாத கலகக்காரர்களாகிய நம் சந்ததியாருக்காக மன்னிப்புக் கோராமலாமல் அவர்கள் தங்களைத் தாங்களே ஆளுகை செய்ய முயற்சிக்கும் வீண் முயற்சிகளுக்காயும், தங்களது சுய நன்மைகளுக்காக செய்யும் ஏற்பாடுகளுக்காகவும் நாம் இரக்கப்படலாம். இந்த வழிகாட்டுதலின்படி நடந்து உலகம் சில வெற்றிகளை அடைந்திருக்கிறது என்று கூறலாம். ஏனெனில் இந்த



மிருகங்களுக்கொத்த அரசாங்கங்களின் உண்மை குணநலன்களை நாம் அறிந்துகொண்ட போதிலும், ஊழல் நிறைந்தவர்களாய் அவர்கள் இருந்தபோதிலும், அரசாங்கமே இல்லாதிருந்தால் ஏற்படும் சட்டம் ஒழுங்கின்மை மற்றும் அராஜகத்தைக் காட்டிலும் இது மேலானது. ஒருவேளை, "இவ்வுலகத்தின் அதிபதியாகிய" சாத்தானுக்கு இக்கூட்டங்கள் பிரியமாக இருந்தபோதிலும், அவனது ஜனங்களுக்கு அது விரும்பத்தக்கதாய் இராது. சுய ஆற்றலைப் பயன்படுத்தி அவனது அதிகாரங்கள் மனுக்குலத்தின்மேல் முழுமையாகச் செலுத்தப்படாதவாறு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவனுடைய கொள்கைகள் மனிதனது உணர்வுகளுக்கும், தப்பெண்ணங்களுக்கும், யோசனைகளுக்கும் பெருமளவு இசைந்திருக்க வேண்டும். தேவனிடமிருந்து விலகி சுயாதீனமாய் தனித்த அரசாங்கம் ஏற்படுத்துவதே மனித நோக்கமாகும். இத்திட்டத்தை சோதித்துப் பார்க்கவே, தேவன் மனிதனுக்கு அனுமதியளித்தபோது சாத்தான் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி தன் ஆதிக்கத்தையும், ஆளுகையையும் விரிவுபடுத்தத் துவங்கினான். இப்படியாக, தேவனை மனிதன் மறக்க விரும்பப்பட்டதால் (ரோமர் 1:28) கண்ணுக்குத் தெரியாத, நயவஞ்சகமும், வல்லமையும் உடைய சத்துருவின் பிடியில் தானாகவே அகப்பட்டுக்கொண்டான். ஆகவே அக்காலம் துவக்கி, சாத்தானின் தந்திரங்களுக்கும் தன் சொந்த பெலவீனங்களுக்கும் எதிராக போராட வேண்டியதாயிற்று.

இப்படிப்பட்ட நிலையில், விழுந்துபோன மனுக்குலம் தேவனிடமிருந்து விலகி, சுதந்தரமாக தங்களைத் தாங்களே ஆளுகை செய்யும் முயற்சியில் ஈடுபட்டதை மனதில்கொண்டு, இவ்வுலக இராஜ்யங்களை ஆராய்வோம். தனிப்பட்ட நபரின் ஊழல், சுயநலம் ஆகியவற்றினால் நீதி மறைக்கப்பட்டு தலை கீழானதினால், இவ்வுலக இராஜ்யங்களின் கீழுள்ள ஜனங்களில் ஒருவருக்காவது முழுமையாக செய்யப்படவில்லை என்றாலும் மனிதரிடத்தில் ஏற்படுத்தப்பட்ட அனைத்து அரசாங்கங்களும், மனிதனது நன்மைக்காகவும், நீதியை நிலைநாட்டவுமே ஆகும்.

இன்னுமொரு கேள்வி என்னவெனில், இந்த நோக்கம் எவ்வளவு தூரம் நிறைவேறி இருக்கிறது? என்பதாகும். ஆனால் அனைத்து அரசாங்கங்களும் இதனையே தங்கள் நோக்கமாகக் கூறிவருகின்றனர்.

இந்த நோக்கங்களுக்காகவே ஜனங்களும், அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்து ஆதரவுகொடுத்து வந்திருக்கிறார்கள். நீதி நியாயம் எங்கு மறுக்கப்படுகிறதோ அங்கு ஜனங்கள் குருடாக்கப்பட்டும் ஏமாற்றப்பட்டும் இருந்தார்கள் அல்லது அநீதியின் பயனாக போர்களும் புரட்சிகளும் குழப்பங்களுமே நேரிட்டிருக்கிறது.

உலக இராஜ்யங்களை ஆளுகைசெய்த கொடுங்கோல் அரசர்களின் இருளான அக்கிரம செய்கைகள், அவர்களது அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த சட்டத்திட்டங்கள் மற்றும் அரசாங்க அமைப்புகள் அனைத்தையும் மறைத்து தங்களது அதிகாரத்தை அக்கிரம நோக்கங்களுக்காகப் பயன்படுத்தினர். இதனால் அவர்களுடைய இராஜ்யங்களுக்கு மிருகங்களுக்குரிய குணலட்சணங்கள் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு இராஜ்யத்திலும் நீதியும், நியாயமும், ஞானமும் நன்மையுமுள்ள சட்டங்கள், உடைமைகளையும் ஜீவனையும் பாதுகாப்பதற்காகவும், வர்த்தக நோக்கங்களைப் பாதுகாக்கவும், குற்றம் இழைத்தவருக்குத் தண்டனையளிக்கவும் இருந்தன. வழக்குகளுக்காக முறையிடுவதற்கு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஓரளவுக்காவது நீதி கடைப்பிடிக்கப்பட்டது. நீதிபதிகள் ஆபூரணர்களாயிருந்தபோதிலும் அவர்களது தீர்ப்புகள் சிலசமயம் தவறாயிருந்தாலும், இப்படிப்பட்ட அமைப்புகள் இருப்பது அநுகூலமாயும், அவசியமாயுமிருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த இராஜ்யங்களின் செயல்பாடுகள் குறையுள்ளவைகளே என்றாலும், இவை இல்லாவிடில் சமுதாயத்தின் கட்டமைப்பில் தீமைகள் அதிகரித்திருக்கிறபடியால், இத்தீமைகள் மேலோங்கி நீதியையும் நன்மையுள்ளவைகளை மேற்கொண்டிருந்திருக்கும்.

விழுந்துபோன மனிதனின் பலவீனங்களானது, அழிவுக்குரிய எண்ணங்களையும், ஆலோசனைகளையுமே விரும்பினதால், சாத்தான் அவைகளைப் பயன்படுத்தி தன் வஞ்சகத்தாலும், சூழ்ச்சியினாலும் அநீதியுள்ள அநேகரை ஆளுகைக்கு உயர்த்தியதன் மூலம், இந்த இராஜ்யங்கள் மிருகத்தன்மையை அடைந்தன என்றாலும், இந்த ஏற்பாடுகளின் மூலம் விழுந்துபோன எளிய மனுக்குலத்தை ஆட்சி செய்ய பெருமுயற்சி எடுத்தார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்கிறோம். ஒவ்வொரு நூற்றாண்டிலும் அடுத்தடுத்து மனுக்குலம் தங்கள்



எண்ணங்களை நிறைவேற்ற முயற்சிக்கவும், அதனால் உண்டாகும் பலன் என்னவென்றும் பார்க்கவும் தேவன் அநுமதித்து வருகிறார். பல நூற்றாண்டுகள் இவ்வாறு அநுபவங்களைப் பெற்ற நிலையில் நடைபெறும் சம்பவங்கள், முந்தைய நூற்றாண்டுகளைக் காட்டிலும் திருப்தியற்றதாகவே இருக்கிறது. உண்மையாகவே இந்த அதிருப்தி சர்வசாதாரணமானதாகி, முந்தைய காலகட்டங்களைக் காட்டிலும் தற்காலத்தில் அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம் அநீதியும் அடக்குமுறையும் அதிகரித்ததால் அல்ல, மாறாக தேவனுடைய ஏற்பாட்டின்படி அறிவுப் பெருக்கத்தினால் மனிதக் கண்கள் திறக்கப்பட்டு வருவதேயாகும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு இராஜ்யங்களை ஆண்ட ஜனங்கள் சமாரான ஆற்றலை வெளிப்படுத்தி தங்களைத் தாங்களே ஆண்டுகொண்டனர். கொடுங்கோலர்கள் ஆட்சிபுரிந்த போதிலும் ஒரு சிறந்த இராஜ்யத்தை ஏற்படுத்தி அதை ஆதரிக்க ஜனங்களால் கூடாத காரணத்தினால், அக்கொடுங்கோல் ஆட்சியை சகித்துக்கொண்டனர் என்பதையே காண்பிக்கிறது.

இன்றைய உலக நிலைமையை முந்தைய நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஜனங்களிடையே உணர்வு மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. சுதந்தரத்தின் ஆவி இன்று உலகெங்கும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஆட்சியாளர்களாலும், அரசியல்வாதிகளாலும் மனிதன் எளிதில் குருடாக்கப்படுவதோ, எளிதில் ஏமாற்றுவதோ, வஞ்சிக்கப்படுவதோ முடிவதில்லை. ஆகவே அவர்கள் முந்தைய நாட்களில் நடந்தவாறு அடிமைத்தனத்தின் நுகத்தில் அகப்படுவதில்லை. மனிதர்களிடத்தில் ஏற்பட்ட இந்த உணர்வு மாற்றங்கள் மனிதன் தன்னைத்தானே ஆண்டுகொள்ளும் முயற்சியில் ஈடுபட்ட ஆரம்பக் காலத்திலிருந்து படிப்படியாக அடைந்ததல்ல. மாறாக பதினாறாம் நூற்றாண்டிலிருந்துதான் ஆரம்பித்து கடைசி ஐம்பது ஆண்டுகளில் மிகவும் அதிவேகத்தில் வளர்ச்சியடைந்து வருகிறது. ஆகவே இந்த மாற்றமானது கடந்த யுகங்களின் அநுபவங்களால் விளைந்ததல்ல. ஆனால் தற்காலத்தில் மனித சமுதாயத்தில் அதிகரித்துவரும் அறிவுப் பெருக்கத்தால் ஏற்பட்ட விளைவேயாகும். கி.பி. 1440–இல் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு, ஏராளமான புத்தகங்களும் செய்தித் தாள்களும்

அதிகரித்ததால் இந்த அறிவுப் பெருக்கம் ஆரம்பித்தது. இக்கண்டுபிடிப்பு ஏற்படுத்திய தாக்கத்தை பொதுவாக உலக ஜனங்கள் 16–ஆம் நூற்றாண்டில்தான் உணர ஆரம்பித்தனர். அக்காலம் முதல் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை அனைவரும் அறிந்திருக்கிறோம். மனிதர்களிடையே பொதுவான கல்வி மிகவும் பிரபலமாயிருக்கிறது. ஒவ்வொரு நாளும் புதிய கண்டுபிடிப்புகள் வெளிவருவது சர்வசாதாரணமாகிவிட்டது. மனிதர்களிடையே ஏற்பட்டிருக்கும் இந்த அறிவுப் பெருக்கம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது. அவர் முன்குறித்தவாறு ஏற்றவேளையில் நடந்தேறும் அறிவுப் பெருக்கத்தினால், சாத்தானின் ஆதிக்கத்தைக் குறைத்து, அவனைக் கட்டுவதும் பூமியில் தேவ இராஜ்யத்தை ஸ்தாபிப்பதுமான, "ஆயத்தநாளின்" பணிகள் பலமாய் நடந்துவருகிறது.

அறிவு எல்லா விதத்திலும் அதிகரிப்பதினால் மனிதர்களிடையே சுயமதிப்பின் உணர்வும் தங்களது இயற்கையான மற்றும் மாற்றமுடியாத உரிமைகளைப்பற்றிய உணர்வும் எழும்புகிறது. உணர்வுகளைத் தூண்டுகிறது. இந்தச் சுபாவ உரிமைகள் இத்தனைக் காலமாக புறக்கணிக்கப்பட்டும், அலட்சியப்படுத்தப்பட்டும் வந்ததுபோல, இனிவரும் காலங்களிலும் நடக்காதபடி காத்துக்கொள்ளவும் அவர்களைத் தூண்டுகிறது. அவ்வாறு காத்துக்கொள்ளாவிடில் எதிர்த்திசையில் செல்ல நேரிடும். தேசங்கள் தங்கள் அதிருப்தியை எழுதி வைத்திருக்கிறதை முந்தின நூற்றாண்டுகளின் இரத்தக் கறைபடிந்த வரலாற்று ஏடுகளைப் புரட்டிப்பார்த்தால் அறிந்துகொள்ளலாம். அறிவுப் பெருக்கத்தின் காரணமாக இன்னும் ஒருமுறை உலகெங்கும் பொதுவான திருப்தியின்மை ஏற்பட்டு, முடிவில் உலகப்புரட்சியாக வெடிக்கும் என்றும், உலகெங்கும் சட்டம் ஒழுங்கு கவிழ்க்கப்படுமென்றும், இதிலும், மனக்கவலையும் அனைத்து வகுப்பார் மேலும் வருமென்றும் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருக்கின்றனர். ஆனாலும் இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் பரலோகத்தின் தேவன் சகல ஜாதிகளின் விருப்பத்தையும் திருப்திபடுத்துகிற தம் இராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அவர்களது மாபெரும் முயற்சிகள் அனைத்தும் குழப்பத்தைத் தந்து தோல்வியடைவதால் முடிவில் களைப்படைந்து மன தைரியத்தை இழந்துபோவதால் பரலோக அதிகாரத்திற்குத் தலை வணங்கி, அதன் பலமான, நீதியான இராஜ்யத்தை அறிந்து, உணர்ந்து அதை வரவேற்று சந்தோஷத்துடன்



ஏற்றுக்கொள்வார்கள். இவ்வாறாக மனிதனது தோல்விகளையும், நம்பிக்கையற்ற நிலைமையும் தேவன் தமது கிருபையை அருளும் வாய்ப்பாக ஆக்கிக்கொள்கிறார். "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்." ஆம் வல்லமையும் மாபெரும் மகிமையும் வாய்ந்த தேவராஜ்யம் வரும். (ஆகாய் 2:7)

தேவனுடைய இந்த நோக்கத்தை இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் அறிந்திருந்தபடியால், பூமிக்குரிய அதிகாரங்களில் எவ்விதத்திலும் தலையிடவில்லை. அதற்கு மாறாக பூமிக்குரிய ஆட்சியாளர்கள் தவறாக தங்களது அதிகாரத்தை பிரயோகித்து திருச்சபையாரைத் துன்பப்படுத்தினாலும், அவர்களுக்கு அடிபணிந்திருங்கள் என்று திருச்சபையாருக்கு போதித்தார்கள். மேலும் இவ்வுலக இராஜ்யங்களின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கவும், அதிகாரத்திலுள்ளவர்கள் மதிப்புக்குப் பாத்திரர்களாக இல்லாதவர்களாய் இருந்தபோதிலும் அவர்களது பதவிகளுக்கு மரியாதைச் செலுத்தவும், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வரியைச் செலுத்தவும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டங்கள், தேவனுடைய சட்டங்களுக்கு விரோதமாக இராதிருக்குமானால் அவைகளுக்கு எதிர்த்து நிற்க வேண்டாம் (அப். 4:19; 5:29) என்றும் போதித்தார்கள். (ரோமர் 13:1–7; மத். 22:21) நமது கர்த்தராகிய இயேசுவும், அப்போஸ்தலர்களும் ஆரம்பக்காலத் திருச்சபையார் அனைவரும் இவ்வுலக இராஜ்யங்களிலிருந்து பிரிந்திருந்தாலும் அந்த இராஜ்யங்களில் எந்தப் பங்கும் பெறாதிருந்தும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள்.

இவ்வுலக இராஜ்யங்களின் அதிகாரங்கள் எவ்வளவாக இருந்தாலும், அந்த இராஜ்யங்களுக்குக் கீழாக மனிதன் அவசியமான அனுபவங்களை அடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக, அவைகள் தேவனால் ஏற்படுத்தப்பட்டன அல்லது நியமனம் செய்யப்பட்டன. வரவிருக்கின்ற தேவராஜ்யத்தில் பங்குபெற விரும்பும் உடன்படிக்கை செய்துகொண்ட திருச்சபையார், இவ்வுலக இராஜ்யங்களின் கனத்தை விரும்பவும் கூடாது, அதன் அதிகாரங்களை எதிர்க்கவும் கூடாது. அவர்கள் பரலோக இராஜ்யத்தின் சுதந்தரரும், நகரத்தாருமாக இருக்கிறபடியால் (எபே. 2:19), இவ்வுலக இராஜ்யங்களின் உரிமைகள் மற்றும் தனிப்பட்ட சலுகைகளை

ஒரு அயல் நாட்டினரைப் போலவே கோர வேண்டும். உலகத்திற்கு உதவிசெய்து, அதன் தற்கால நிலைமையை மேன்மைபடையச் செய்வதும் அதன் காரியங்களில் தலையிடுவதும் இவர்களது வேலையல்ல. அவ்வாறு முயற்சிப்பது வீணான முயற்சியே; ஏனெனில் உலகத்தின் நடைமுறையும் அதன் முடிவும் வேதாகமத்தில் தெளிவாக எழுதப்பட்டிருப்பதோடு அது ஏற்றக்காலத்தில் நமக்கு இராஜ்யத்தைக் கொடுக்க இருப்பவரது கட்டுப்பாட்டின் கீழ் முழுவதும் அடங்கியிருக்கிறது. இவ்வுலக அனுபவத்தில் பார்க்கும்போது, உண்மைச் சபையின் ஆதிக்கம் தற்போதும் முன் எப்பொழுதும் மிகக் குறைவாகவே இருந்திருக்கிறது. அது மகா பெரிதானதாகத் தோற்றமளித்தாலும் நாம் நம் கர்த்தருடைய மற்றும் அப்போஸ்தலருடைய முன்னுதாரணங்களையும் போதனைகளையும் பின்பற்ற வேண்டும். இவ்வுலகம் தன் சுயபலத்தால் தன்னைத்தானே ஆளுகை செய்ய முடியுமா என்று சோதித்தறிந்து கொள்வதற்காக தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்று உண்மைச் சபை அறிந்திருக்கிறபடியால், அது இவ்வுலகிலிருந்தாலும் இவ்வுலகத்திற்கு உரியவர்களாக நடந்துகொள்ளக்கூடாது. பரிசுத்தவான்கள் உலகத்திலிருந்து பிரிந்திருப்பதன் மூலமும், தங்களிடமுள்ள வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வதன் மூலமாகவுமே தங்கள் ஆதிக்கத்தை உலகத்திற்குத் தெரியப்படுத்தலாம். இவ்வாறு அவர்களது ஜீவியத்தின் மூலமாக சத்திய ஆவி உலகைக் கண்டித்து உணர்த்தும். இவ்வாறாக உலக அரசியலோடு இணைந்து எல்லோராலும் பின்பற்றப்படுகிற நடைமுறையின்படி, உலக அதிகாரங்களுக்காகப் போராடாமல் சமாதானம் உள்ளவர்களாகவும், நீதியான ஒவ்வொரு சட்டத்திற்கும் கட்டுப்பட்டு கீழ்ப்படிபவர்களாயும், பாவத்தையும் ஒழுங்கீனத்தையும் கண்டித்து உணர்த்துபவர்களாயும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவராஜ்யத்தையும், அதன் மூலம் அடையப்போகிற ஆசீர்வாதங்களையும் சுட்டிக்காண்பிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும். போர்களுக்கும், பாவங்களுக்கும் இழுப்புண்டு பின்வாங்கிப் போகாமல், சமாதானப் பிரபுவின் மணவாட்டியாக மகிமையினாலும், கற்பினாலும் நன்மை செய்வதில் வல்லவர்களாகவும் நம்மை அலங்கரித்துக்கொண்டு, கர்த்தரின் பிரதிநிதிகளாக இவ்வுலகத்தில் இருப்போம்.

தேவனுடைய திருச்சபை தேவராஜ்யத்தைப் பற்றிப் பிரசங்கிக்கவே



முழு முயற்சியும் கவனமும் செலுத்த வேண்டும். வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள தேவதிட்டத்தின்படி தேவராஜ்யத்தின் வளர்ச்சியிலேயே கருத்தாய் இருக்க வேண்டும். இது உண்மையாய்ச் செய்யப்படுமேயானால் தற்கால அரசாங்க அரசியலில் தலையிட நேரமோ அல்லது விருப்பமோ இருக்காது. நம் கர்த்தருக்கும், அப்போஸ்தலர்களுக்கும் அவ்வாறு செய்வதற்கு நேரம் இருக்கவில்லை. மற்ற பரிசுத்தவான்களும் அவர்களது மாதிரியையே பின் பற்றினார்கள்.

ஆரம்பகால திருச்சபை, அப்போஸ்தலர்கள் மறைந்த சிறிது காலத்திற்குப் பிறகு, இதே சோதனைக்கு இரையானது. வரவிருக்கும் தேவராஜ்யத்தைப் பிரசங்கிப்பதும், அது பூமியிலுள்ள அனைத்து இராஜ்யங்களையும் மாற்றியமைக்கப் போவதை எடுத்துரைப்பதும், சிலுவையில் அறையுண்ட இயேசு தாமே அந்த இராஜ்யத்தின் சுதந்தரவாளி என்று பிரசங்கிப்பதும் ஆளுநர்களுக்குப் பிரியமற்றக் காரியமாயும், அவ்வாறு பிரசங்கிப்பது உபத்திரவம், நிந்தை, அவமானத்தை வருவிக்கின்றதாயும் இருந்தது. ஆனால் சிலர் தேவ திட்டத்தை மேம்படுத்துவதாக எண்ணிக்கொண்டு, துன்பத்திற்குப் பதிலாக உலகத்தால் தலைபெறும்படியான நிலையில் திருச்சபையை அமைக்க வேண்டுமென எண்ணினர். பூமிக்குரிய அதிகாரங்களோடு சேர்ந்ததினால் அவர்கள் வெற்றிப் பெற்றனர். இதன் பலனாக போப்பு மார்க்கம் வளர்ச்சியடைந்து சில காலங்களுக்குள் தேசங்களின் அரசியானது. (வெளி. 17:3–5; 18:7)

இக்கொள்கையால் அனைத்தும் மாற்றமடைந்தன. துன்பத்திற்குப் பதிலாக கனமும், மனத்தாழ்மைக்குப் பதிலாக மனமேட்டிமையும், சத்தியத்திற்குப் பதிலாகத் தவறுகளும் வந்தன. உபத்திரவங்களைத் தான் அடைவதற்குப் பதிலாக அவளது அநீதியான கரம், மகிமைகளை கண்டனம்செய்தவர்களை உபத்திரவப் படுத்துகிறவளானாள். சிறிது காலத்திற்குள் அவள் புதிய கொள்கைகளையும் ஏமாற்றுப் போலி நியாயங்களையும் ஏற்படுத்தி, தன்னை நீதிமான்போல காண்பித்தாள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சி வந்துவிட்டது என்றும், அவளது போப்புகளே கிறிஸ்து இராஜாவின் பிரதிநிதிகள் என்றும், அவர்கள் கிறிஸ்துவுக்குப் பதிலாக இப்பூமியில் இராஜாக்களாக ஆளுகிறார்கள் என்றும் விசுவாசத்தைப் புகுத்தி,

முதலாவதாக தன்னைத்தானேயும், பிற்பாடு தேசங்களையும் வஞ்சித்தாள். அவள் பாராட்டின உரிமைகளை உலகம் முழுவதும் ஏற்றுக்கொண்டதினால் அவள் வஞ்சகத்தால் உலகை ஜெயித்தாள். அவளது தவறான போதனைகளைப் பற்றி வேதம் கூறுகிறதாவது: "அவளது வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகள் வெறிக்கொண்டிருந்தார்களே." (வெளி. 17:1) அவளது உரிமைகளை எதிர்த்தவர்கள் நித்திய வாதையினால் நரகத்தில் துன்பப்படுவார்கள் என்று போதித்து பயமுறுத்தினாள். விரைவில், அவளுடைய கட்டளைகளாலும், அதிகாரங்களாலும் ஐரோப்பிய அரசர்கள் அரியணை ஏறுவதும் அதிலிருந்து தள்ளப்படுவதும் நடைபெறலாயிற்று.

இவ்வாறாக தற்கால ஐரோப்பிய இராஜ்யங்கள் தாங்கள் தேவகிருபையின் மூலம் போப்புவின் அதிகாரத்தினாலோ அல்லது புராட்டஸ்டன்ட் பிரிவுகளின் அதிகாரத்தினாலோ தங்களது ஆட்சி நடைபெறுகிறது என்று உரிமைப் பாராட்டி வருகின்றனர். சீர்திருத்தவாதிகள் சபையைக் குறித்த போப்பு மார்க்கத்தின் உரிமைகள் பலவற்றைக் கைவிட்டிருந்தாலும், பூமியின் இராஜாக்களை கிறிஸ்துவத்தோடு இணைத்து அவர்களது ஆளுகையை ஆதரித்து வந்தனர். ஆகவே சீர்திருத்தவாதிகளும் போப்பு மார்க்கம் செய்த அதே தவறைச் செய்து, சர்வாதிகாரத்தைக் கையிலெடுத்து இராஜாக்களை ஏற்படுத்துவதும், அரசாங்கங்களை "கிறிஸ்துவின் ராஜ்யங்கள்" அல்லது "கிறிஸ்தவ இராஜ்யங்கள்" என்றும் கூறி வந்தனர். நாம் இன்றைக்கும் "கிறிஸ்தவ உலகம்" என்று சத்திய விதிகளுக்கு முரண்பாடான வார்த்தைப் பேசப்படுவதை நாம் கேட்கிறோம். நம் கர்த்தர் தம் சீஷர்களுக்குக் கூறியதாவது: "நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல." பவுலும் புத்திமதியாக –"இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாதிருங்கள்" என்று கூறுகிறார். (யோவா. 17:16; ரோமர் 12:2)

கிறிஸ்துவின் பெயரால் இவ்வுலக இராஜ்யங்கள் அழைக்கப்படுவதை தேவன் ஒருக்காலும் அங்கீகரிக்கவில்லை. பெயர் சபைகளால் ஏமாற்றப்பட்ட இந்த தேசங்கள், தாங்கள் அடைந்திராத உரிமைகளைக்கொண்டு தவறான கொடியின் கீழ் பயணித்து வருகிறார்கள். இவர்களுக்கு ஜனங்கள் உரிமையளித்ததைத் தவிர வேறு விசேஷ உரிமை கிடையாது. தேவன் நேபுகாத்நேச்சாருக்குக்



கூறினதுபோல, தேவராஜ்யத்தின் உரிமைக்காரர் வரும்வரைக்கும் இவர்களுக்கு ஒரு எல்லைக்குட்பட்டு உரிமையளிக்கப்பட்டிருக்கிறது.

ஆரான சட்டங்களையும் வருலத்தையுமுடைய துன்மார்க்க ஆட்சியாளர்களைக் கொண்ட இந்த ஆரான இராஜ்யங்கள், தாங்கள் "நமது கர்த்தருடையதும், அவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவருடையதுமான இராஜ்யங்கள்" என்று உரிமைப் பாராட்டுகிறார்கள். இந்த உரிமைப் பாராட்டலானது, இப்படிப்பட்ட இராஜ்யங்களனைத்தையும் அகற்றிவிட்டு, வரப்போகிற கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கும், அதன் "சமாதானப் பிரபுவிற்கும்," நீதியுள்ள அதன் அதிகாரிகளுக்கும் விரோதமாக களங்கம் ஏற்படுத்தும் காரியமாக உள்ளது. (ஏசா. 32:1)

இந்தத் தவறினால் ஏற்படும் இன்னுமொரு தீவிரமான காயம், தேவனுடைய பிள்ளைகளது கவனத்தை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரலோக இராஜ்யத்திலிருந்து வெளியே திசைத்திருப்புவதாகும். மேலும் பூமிக்குரிய இராஜ்யங்களை தவறாக அங்கீகரிக்கும்படியும் அதனுடன் நெருக்கமாகும்படியும் வழிநடத்தப்படுகின்றனர். இவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தின் நன்னடக்கைகளையும் கிருபைகளையும் காட்டுமிராண்டித்தனமான இவ்வுலக பக்கோடு ஒட்டவைக்க வீண்முயற்சி செய்கிறார்கள். இதனால் உண்மையான இராஜ்யம் மற்றும் அதை மையப்படுத்தியுள்ள நம்பிக்கைகளைப்பற்றிய விசேஷத்தை புறக்கணிக்கவும் வழிநடத்தப்படுகின்றனர். இப்படிப்பட்ட வஞ்சனையில் அகப்பட்ட சிலர், தேவனுடைய நாமத்தை அரசியல் அமைப்போடு இணைத்துக்கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடுகள் கிறிஸ்துவின் இராஜ்யமாக மாறினதாக என்னுகின்றனர். இவ்வாறு தேவ நாமத்தைத் தரித்துக்கொண்ட இராஜ்யங்கள் கிறிஸ்துவின் இராஜ்யங்கள் அல்ல என்று கூறி மறுசீரமைக்கப்பட்ட பிரெஸ்பிடேரியன் சபையார் இந்த அரசாங்கத்திற்கு வாக்களிக்கவும் அதற்கு கீழாக அலுவலகத்தை வைத்துக்கொள்ளவும் பல வருடங்களாக மறுத்துவிட்டனர். இவ்வாறு கிறிஸ்தவர்கள் மற்ற உலக அமைப்புகளோடு சேர்ந்து ஒழுங்கின்மைக்கு பங்குதாரர் ஆவதை அங்கீகரிப்பதில்லை. இந்த உணர்வுப் பூர்வமான சிந்தைக்கு நாம் பெரிதும் இரக்கங்கொள்கிறோம். ஆனாலும் அரசியல் அமைப்பில் தேவநாமத்தை முன் நிறுத்துவதன் மூலம், இவ்வுலக இராஜ்யம் கிறிஸ்துவின் இராஜ்யமாக மாறுகிறது என்று கூறுவதும், அந்த இராஜ்யத்திற்காக வாக்களித்து

ஆளுவதற்கு அவர்களுக்கு சுதந்தரம் அளிப்பதும் அதற்கு கீழாக அதுவலகைப் வைத்துக்கொள்வதும் ஏற்க முடியாதது. அவர்கள் எவ்வளவு புத்திபற்றவர்களாய் இருக்கிறார்கள்! இதே போலவே இவர்கள் ஐரோப்பிய இராஜ்யங்கள் சாத்தானிடமிருந்து கிறிஸ்துவுக்கு மாற்றப்பட்டதாகவும், அவைகள் "கிறிஸ்தவ இராஜ்யங்களாயின" என்றும் கூறி உரிமைப்பாராட்டுவது பெரிய வஞ்சனையே. "வேசிகளின் தாய்" எல்லா தேசங்களையும் இவ்வாறாக மதுவைக்கொடுத்து வெறிகொள்ளச் செய்தாள். (வெளி. 17:1)

இவ்வுலக தேசங்களில் மிக உயர்ந்ததும் மிகத் தாழ்ந்ததுமான நாடுகள் அனைத்தும், "இவ்வுலகத்தின் இராஜ்யங்களே" என்பதை நாம் அறிய வேண்டும். அந்த நாடுகளுக்குத் தேவன் அளித்தக் காலம் முடிவடையப் போகிறபடியால், இப்பூமியின் ஐந்தாம் உலகப் பேரரசாகிய, மேசியாவின் இராஜ்யத்திற்கு இடங்கொடுக்க வேண்டும். (தானி. 2:44; 7:14, 17, 27) இந்தக் கண்ணோக்கத்தில் நாம் காணும்போது, அது தவறுகளை அகற்றிவிட்டு சத்தியத்தை நிலைநிறுத்தும்.

ஆனால் இவ்வுலக இராஜ்யங்கள் போப்பு மார்க்கம் மற்றும் புராட்டஸ்டண்ட் சீர்திருத்தவாதிகளால் அங்கீகரிக்கப்பட்டு, கிறிஸ்தவ ஜனங்களிடையே பிரபலமாயின. கொடுக்கப்பட்ட காலம் முடிவடையப் போகிறதால் விழுந்துகொண்டிருக்கும் போலியான கிறிஸ்தவ இராஜ்யங்களை தாக்கி நிறுத்த தொடர்ந்து முனைப்போடு முயன்று வெற்றி பெறும் தளபதிகளாக இருப்பதாக இவர்கள் எண்ணுகிறார்கள். இவர்களது அனுதாபம் உரிமையையும் சுயாதீனத்தையும் விரும்புகிறவர்கள் பக்கம் இல்லாமல் கொடுங்கோன்மையின் பக்கமும், வரப்போகிற உண்மையான கிறிஸ்துவின் ராஜ்யத்தின் பக்கம் இல்லாமல் இந்த உலகின் ராஜ்யத்தின் பக்கமும் இந்த உலகத்தின் அதிபதியின் பக்கமும் சார்ந்திருக்கிறது. (வெளி. 17:14; 19:11–19)

"இவ்வுலக இராஜ்யங்கள்" கிறிஸ்துவின் தன்மையைப் பிரதிபலிக்காதிருப்பதால் இவ்வுலகை ஆளுகிறவர்கள் கிறிஸ்துவால் நியமிக்கப்பட்டவர்களா என்ற கேள்விக்குறி ஜனங்கள் மத்தியில் தற்போது வேகமாக வளர்ந்து வருகிறது. நீதியின் தேவனுடைய நாமத்தின் பேரிலும், சமாதானப்பிரபுவாகிய இயேசுவின் நாமத்தின் பேரிலும் ஆட்சி செய்வதாக, இவ்வளவு நாட்களாக நம்பவைத்து வஞ்சித்திருக்கிறார்கள் என்பதை ஜனங்கள் தங்கள் பகுத்தறிவின் வல்லமையால் உணர்ந்து, திடநம்பிக்கைக் கொண்டு தாங்கள் உண்மையென்று ஏற்றுக்கொண்டவைகளுக்காக எதிர்த்துப் போராடுகிறார்கள். உண்மையாகவே, கிறிஸ்தவம் என்பது அஸ்திபாரம் இல்லாததும், நிலையில்லாததுமானது என்றும் இவர்கள் சமுதாய அரசியல்



ஆட்சியாளர்களோடு சேர்ந்து ஜனங்களது சுதந்தரத்தை அடக்கி ஆண்டு வருகிறார்கள் என்றும் அநேகர் தீர்க்கமாக முடிவெடுக்கிறார்கள்.

மனிதர்கள் ஞானவான்களாக இருந்து, கர்த்தருடைய திட்டங்களையும், செய்கைகளையும் புரிந்துகொள்ள தங்கள் இருதயங்களில் முயற்சித்தால் எவ்வளவு நலமாயிருக்கும். இவ்வாறு மனிதரிடையே விழிப்புணர்வு ஏற்பட்டிருக்குமானால், தேவநீதி நியாயமும், சத்தியமும் வியாபித்திருப்பதன் மூலம் தேவநீதி இப்பூமியில் முழுமையாக ஸ்தாபிக்கப்படும்வரை, சீர்திருத்தத்தின்மேல் சீர்திருத்தமும், சுயாதீனத்திற்கு மேல் சுயாதீனமும் ஏற்பட்டு, இவ்வுலக இராஜ்யங்கள் மெழுகுபோல படிப்படியாக உருகிப்போகும். ஆனால் ஜனங்கள் இவற்றைச் செய்யமாட்டார்கள். ஏனெனில் விழுந்துபோன நிலைமையில் அவர்கள் இதை செய்யக்கூடாதிருக்கிறார்கள். ஆகவே சுயநலத்தினால் ஏவப்பட்டு ஒருவர்மேல் ஒருவர் ஆதிக்கம் செலுத்த முற்படுவதன் மூலம், முன்பு ஒருபோதும் தோன்றியிராத மகா உபத்திரவக் காலம் வந்து, இவ்வுலக இராஜ்யங்கள் அகன்றுபோகும். விழுந்துபோன இராஜ்யங்கள் உரிமைக்காரரான கர்த்தருடைய உடைமையாகிவிட்டது என்று உணராமல், அவர்கள் அதைத் தக்கவைக்கப் போராடுவது வீண் முயற்சி என்றும், அவர்கள் தமக்கெதிராகவே போராடுகிறார்கள் என்றும் நிச்சயமாகத் தோல்வியைச் சந்திப்பார்கள் என்றும் கர்த்தர் கூறுகிறார் அவர் கூறுகிறதாவது:

"ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் இராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி, அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள். பரலோகத்தில் வீற்றிருப்பவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார். அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார். நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் என்னுடைய இராஜாவை அபிஷேகம் பண்ணி வைத்தேன் என்றார்." "இப்போதும் இராஜாக்களே, உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள். பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள்; நடுக்கத்துடனே களிகூருங்கள். குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தம் செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்கிற யாவரும் பாக்கியவான்கள்." (சங். 2:1–6, 10–12)

## இராஜ்யம் சமீபம்

"ஜாமக்காரனே, இரவு பற்றிக்கூறு –
அதன் வாக்குத்தத்தத்தின் அடையாளங்கள் என்ன?
வழிப்போக்கனே, மகிமையின் ஒளி நிறைந்த நட்சத்திரம்,
அதோ அந்த மலையின் உச்சியில் தெரிவதைப்பார்!
ஜாமக்காரனே, மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் முன்னறிவிக்கிற
அழகான கதிர்கள் இவைகள் அல்லவா?
வழிப்போக்கனே. ஆம் இஸ்ரவேலருக்கான வாக்குத்தத்தத்தின் நாளை–
இந்நாள் கொண்டுவருகிறது.

"ஜாமக்காரனே, அந்த நட்சத்திரத்திற்கு மேல்,
இன்னும் உயரத்தில்
இருக்கிற அந்த இரவு பற்றிக்கூறு.
வழிப்போக்கனே, ஆசீர்வாதமும் வெளிச்சமும்,
சமாதானமும் சத்தியமும் அவற்றை முன்னறிவிக்கின்றன.
ஜாமக்காரனே, தான் பிரகாசித்த கதிர்களுக்கு
தங்கமுலாம் பூச தனித்து அதனால் கூடுமா?
வழிப்போக்கனே, யுகங்கள் அதனுடையவைகள்; அதன் மகிமை
பூமியை நிரப்பியிருப்பதைப் பார்.

"ஜாமக்காரனே, சீயோனின் மகிமையான அழகின் விடியலின்
காலை வேளையை எங்களுக்குக் கூறமுடியுமா?
வழித்தடங்களின்மேல் வருகின்ற அடையாளங்களின் முத்திரையை
அவைகள் பெற்றிருக்கிறதல்லவா?
வழிப்போக்கனே, ஆம்: எழுந்திரு! உன்னைச் சுற்றிலும் பார்!
ஒளியானது ஆகாயத்தில் பிரகாசமாகின்றது!
விடியலின் காலை மலர்ந்துவிட்டது! எழுந்திரு! எழுந்திரு!
மணவாட்டியின் வஸ்திரத்தைத் தரித்துக்கொள்!"

* * * *

## அத்தியாயம் 14

# தேவனுடைய இராஜ்யம்

இப்பாடத்தின் முக்கியத்துவம் – இராஜ்யத்தின் பண்புகள் – சுவிசேஷ யுகத்தின்போது இராஜ்யத்தின் நிலை – பவுலால் திருத்தப்பட்ட தவறான சிந்தனைகள் – இராஜ்யத்தைக் குறித்துத் தவறான கருத்துக்களின் விளைவுகள் – தேவராஜ்யத்தின் இரு பாகங்கள் – ஆவிக்குரிய பாகமும் அதன் செயல்பாடுகளும் – பூமிக்குரிய பாகமும் அதன் செயல்பாடுகளும் – இவைகளின் இணக்கமான செயல்பாடுகள் – பூமிக்குரிய பாகத்தின் மகிமை – பரலோகத்திற்குரிய பாகத்தின் மகிமை – இந்த கிளைகள் வரும் உடன்படிக்கையின் வேர் – பூமிக்குரிய இராஜ்யத்தின் பாகம் இஸ்ரவேலருடையது – இழந்த கோத்திரங்கள் – பரலோக எருசலேம் – நிழலான ஜனங்களாகிய இஸ்ரவேல் – இஸ்ரவேல் இழந்துபோனதும் திரும்பப் பெறுவதும் – தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார்கள் – இராஜ்யத்தின் சுதந்தரர்கள் – இருப்புக்கோல் ஆட்சி – ஆயிரவருட அரசாட்சியின் நோக்கத்தின் உதாரண விளக்கம் – பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இராஜ்யம் – தேவனுடைய பூர்வீகத் திட்டம் முழுமையாக நிறைவேறித் தீருதல்.

வேதாகமத்தையும், ஒத்து வாக்கிய அகராதிகளையும் (Concordance) சேர்ந்துபடித்து, தேவ ராஜ்யத்தின் விஷயங்களை இதுவரை கவனமாக ஆராய்ந்துப் பார்க்காதவர்கள், அவ்வாறு ஆராயும்போது வேதாகமத்தில் தேவ இராஜ்யத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறப்பட்டுள்ளதைக் கண்டு ஆச்சரியமடைவார்கள். பழைய ஏற்பாட்டில் தேவராஜ்யம் மற்றும் அதன் இராஜாவாகிய மேசியாவை மையமாகக்கொண்டு ஏராளமான தீர்க்கதரிசனங்களும், வாக்குத்தத்தங்களும் கூறப்பட்டுள்ளன. மேசியாவின் கீழ் தங்களது தேசத்தை தேவன் தம் ஜனங்களாக உயர்த்துவார் என்பதே ஒவ்வொரு இஸ்ரவேலரின் நம்பிக்கை. (லூக். 3:15) நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவ இராஜ்யத்தைப் பூமியில் ஸ்தாபிக்கவே, கர்த்தர் அவர்களது இராஜாவாக அவர்களிடத்தில் வந்தார்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த



யோவான் ஸ்நானனும் "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்ற அறிவிப்புடன் தன் ஊழியத்தைத் துவக்கினார். (மத். 3:2) நமது கர்த்தரும் யோவான் ஸ்நானனைப் போலவே, அதே அறிவிப்போடு தம் ஊழியத்தைத் துவக்கினார். (மத். 4:17) அதே செய்தியைப் பிரசங்கிக்கவே அப்போஸ்தலர்களும் அனுப்பப்பட்டனர். (மத். 10:7; லூக். 9:2) நமது கர்த்தர் ஊழியத்தைத் தொடங்கினபோது மட்டும் இராஜ்யத்தின் சுவிசேஷம் பிரதானமாக இராமல், அவரது எல்லாப் பிரசங்கத்திலும் இராஜ்யத்தைப் பற்றிய உபதேசங்களே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. (லூக். 8:1; 4:43; 19:11) அவருடைய மற்றப் பாடங்கள் அனைத்தும் இது தொடர்பானதாகவோ அல்லது இதை விளக்குவதாகவோ அமைந்தது. அவர் பேசின உவமைகளில் பெரும்பாலானவை இராஜ்யத்தின் பல்வேறு நிலைப்பாடுகள் பற்றியதும், அதன் பல்வேறு அம்சங்களை விளக்குகிறதுமாயிருக்கிறது. அதோடுகூட, தேவராஜ்யத்தில் பங்குபெறுவதற்கு அவரோடுகூட உடன்படிக்கைச் செய்து ஒப்புக்கொடுக்க வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. மேலும் யூதர்கள் மாம்சத்தின்படி ஆபிரகாமின் பிள்ளைகளாயிருக்கிறபடியினாலும், தங்களுக்கே தேவராஜ்யம் நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தாங்களே வாக்குத்தத்தத்தின் வாரிசுகள் என்றும் கொண்டிருந்த தப்பான எண்ணத்தைத் திருத்தவுமே இவ்வுவமைகள் கூறப்பட்டன.

நமது கர்த்தராகிய இயேசு தம் பின்னடியார்களிடத்தில் வரப்போகிற தேவராஜ்யத்தைக்குறித்த அவர்களது எதிர்பார்ப்புகளைப் பலப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் அவர்களிடத்தில் கூறினதாவது: "ஆகையால், என் பிதா எனக்கு ஓர் இராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் இராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார்." (லூக். 22:29, 30) மேலும், "பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தை கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." (லூக். 12:32) ஆனால் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இராஜாவோ, சிங்காசனத்தில் வீற்றிருப்பதற்குப் பதிலாகச் சிலுவையில் அறையப்பட்டபொழுது, அவரது சீஷர்கள் மிகவும் ஏமாற்றமடைந்தார்கள். இதனை வெளிப்படுத்தும் விதமாக அவர் உயிர்த்தெழுந்து

வழிப்போக்களாக சீஷர்களோடு சேர்ந்து எம்மாவூருக்குச் செல்லும் வழியில் இரண்டு சீஷர்கள் கூறியதாவது: "அவரே இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பார் என்று நாங்கள் நம்பியிருந்தோம்." ரோமருடைய அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, இஸ்ரவேலை வல்லமையும், மகிமையுமுள்ள தேவ இராஜ்யமாக ஸ்தாபிப்பார் என்று எதிர்பார்த்தனர். ஆனால் அதன் பின்பு சில நாட்களாய் நடந்த மாற்றங்களால், மிகவும் குழப்பட்டு ஏமாற்றமடைந்தனர். இயேசுவோ தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக தாம் பலியாக வேண்டியதன் அவசியத்தை அநேக வேதவாக்கியங்களின் மூலம் எடுத்துக்காண்பித்து, அவர்களது மனக்கண்களைத் திறந்தார். (லூக். 24:21, 25–27)

தேவன் மனிதனுக்காக ஈடுபலிச் செலுத்தாமலேயே, இயேசுவுக்கு இராஜ்யத்தை ஆளும்படிச் செய்திருக்கலாம். "உன்னதமானவர் மனுஷருடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார்." (தானி. 4:32) ஆனால் இப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்றுவதைக் காட்டிலும், மகா மேன்மையான திட்டத்தைத் தேவன் நிர்ணயித்திருந்தார். ஒருவேளை ஈடுபலிச் செலுத்தாமல் இயேசுவுக்கு இராஜ்யத்தைக் கொடுத்திருப்பாரானால், நன்மையையும், ஆசீர்வாதத்தையும் கொண்டுவந்திருக்கும் என்றாலும், மனுக்குலம் முழுவதும் மரண சாபத்திலிருப்பதால் அது தற்காலிகமாகவே இருந்திருக்கும். இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் நித்தியத்துக்கும் நிலைத்திருக்கவும், முழுமையானதாகவும் இருக்க வேண்டுமானால், முதலாவதாக ஆதாமினால் மனுக்குலத்திற்கு வந்த மரண தண்டனையிலிருந்து சட்டப்பூர்வமாக மீட்கப்பட வேண்டும்.

இயேசு உயிர்த்தெழுந்து பரத்திற்கு ஏறுவதற்கு முன்பாக, "ஆண்டவரே இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலருக்குத் திரும்பக்கொடுப்பீர்?" என்று ஆண்டவருடைய சீஷர்கள் கேட்டதினால் இயேசு தீர்க்கதரிசனங்களை விவரிக்கும்போது, வரப்போகிற இராஜ்யத்தைப் பற்றிய நம்பிக்கையை புதுப்பித்தார் என்பது தெளிவாகிறது. அவர்களது கேள்விக்கு இயேசு அளித்த பதில், அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு முரண்பாடாக இல்லாமலும், நேரடியாகப் பதில் சொல்லாததாகவும் அமைந்தது. அவர் கூறியதாவது: "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல." (அப். 1:6–7)



தற்காலத்தில் அநேகர் தேவராஜ்யம் பரலோகத்திற்கு மட்டுமே உரியது என்று தவறாக எண்ணுகிறதுபோல, முழு யூத தேசத்தாரோடு சேர்ந்து, சீஷர்களும் ஆரம்பத்தில் தேவராஜ்யம் பூமிக்கு மட்டுமே உரியது என்று தவறுதலாக எண்ணியிருந்தனர். இப்படிப்பட்ட தவறான எண்ணங்களை ஏற்றக்காலத்தில் சரிப்படுத்துகிறதற்காகவே நமது கர்த்தராகிய இயேசுவால் அநேக உவமைகளும் மறைபொருள்களும் உரைக்கப்பட்டன. ஆனால் இப்பூமியில் ஸ்தாபிக்கப்படும் இராஜ்யத்தில், மனிதரால் ஆளப்படும் அரசாங்கமே இருக்கும் என்பதை எப்பொழுதும் வலியுறுத்திப் பேசினார். தேவராஜ்யத்தில் பங்குபெற வேண்டுமென்ற நம்பிக்கையை மட்டும் அவர்களிடத்தில் எழுப்பினதோடு, அது ஸ்தாபிக்கப்பட ஜெபிக்கவும் வேண்டுமென்று கற்பித்தார். "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறதுபோல பூலோகத்திலும் செய்யப்படுவதாக." (மத். 6:10)

யூதர்களிடையே இருந்த உலக ஞானிகளுக்கு, நமது கர்த்தர் மதவெறியராகவும், ஏமாற்றுக்காரராகவும் காணப்பட்டார். அவரது சீஷர்களையும் ஏமாற்றுக்காரர்களாகவே அவர்கள் எண்ணினர். அவருடைய ஞானம் மற்றும் புத்திக்கூர்மை, அவர் செய்த அற்புதங்கள் ஆகியவைகளை நியாயமானதாக நிதானிக்கவும், அதற்கு மறுப்புக் கூறவும் முடியாமற்போயிற்று. மேலும் அவர்தாமே இவ்வுலகிற்குச் சுதந்தரவாளி என்றும், அவரே சாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்யத்தை ஸ்தாபித்து ஆளுகை செய்பவர் என்றும், ஏழ்மையான நிலைமையிலிருந்து வந்த அவருடைய சீஷர்கள் அந்த இராஜ்யத்தில் அவரோடு சேர்ந்து ஆளுகை செய்வார்கள் என்றும் இயேசு கூறியது, அவிசுவாச நிலைப்பாட்டிலிருந்த அவர்களுக்கு அபத்தமாகக் காணப்பட்டது. ரோமப் பேரரசானது போர் பயிற்சியில் தேறின போர் வீரர்களும், திறமையான தளபதிகளும் எண்ணிலடங்கா சொத்துக்கள் உள்ளதும், உலக அதிபதியாக இருந்து அனுதினமும் தன் வல்லமையை அதிகரித்துக்கொண்டே வந்தது. இப்படிப்பட்ட நிலையில் யார் அந்த நசரேயன்? யார் இந்த மீன் பிடிப்பவர்கள்? பணமும் செல்வாக்கும் இல்லாதவர்களும் சாதாரண

மனிதர்களிலிருந்து வெகு சிலராக உள்ள இவர்களால் இப்பூமி முன்னொருபோதும் அறிந்திராத மகா உன்னதமானதும், வல்லமை மிகுந்ததும், நீண்டக்காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்ததுமான இராஜ்யத்தை ஸ்தாபிப்பதாகப் பேசுகின்ற இவர்கள் யார் ?

பரிசேயர் இயேசு போதித்த இராஜ்யத்தைப் பற்றிய உபதேசங்களில் அவர்களுக்குப் பலவீனமாகத் தெரிந்தவைகளை வெளியரங்கமாக்கி பெரிதுபடுத்துவதில் நம்பிக்கையாயிருந்து, அவரது சீஷர்கள் இயேசுவின் வார்த்தையில் வஞ்சிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தோடு, பின்வரும் கேள்விகளைக் கேட்டார்கள்; நீங்கள் பிரசங்கிக்கிற தேவராஜ்யம் எப்பொழுது தோன்ற ஆரம்பிக்கும் ? உங்களது படைவீரர்கள் எப்பொழுது வந்து சேருவார்கள் ? இந்த தேவனுடைய இராஜ்யம் எப்பொழுது காணப்படும் ? (லூக். 17:20–30) அவர்கள் இயேசுவுக்கு விரோதமாக தப்பெண்ணம் கொண்டிருந்தாலும், தங்கள் போலி ஞானத்தால் குருடாக்கப்பட்டிருந்தாலும்கூட அவர் கூறிய பதில் ஒரு புதிய கருத்தாக அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். அவர்கள் எதிர்பார்த்த விதமாக தேவராஜ்யம் ஒருபோதும் தோன்றாது என்பதே, இயேசுவின் பதிலாய் அமைந்திருந்தது. அவருடைய சீஷர்கள் உடன்சுதந்தரர்களாகும்படி அழைக்கப்பட்டதும், அவரால் பிரசங்கிக்கப்பட்டதுமான தேவராஜ்யம் கண்ணால் காணப்படாத இராஜ்யமாக இருக்கிறபடியால், அவர்கள் அதைக்காண எதிர்பார்க்கக்கூடாது. "தேவனுடைய இராஜ்யம் பிரத்தியட்சமாய் (வெளியரங்கமாகக் காணும்படி) வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; தேவனுடைய இராஜ்யம் உங்களுக்குள்* (உங்கள் நடுவில்) இருக்கிறதே

---

*ரோதர்ஹாம் மற்றும் டயக்ளாட் மொழிபெயர்ப்புகளில், "உங்கள் மத்தியில் இருக்கிறது" (among you) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த விளக்கமும், "உங்களுக்குள் இருக்கிறது" என்ற வார்த்தையும் ஒரே பொருளையே தருகின்றன. இயேசு போதித்த இராஜ்யம் பரிசேயரின் இருதயங்களில் ஸ்தாபிக்கப்படும் என்ற கூற்று ஏற்றுக்கொள்ள முடியாதது. ஏனெனில் அவர் அவர்களை, மாயக்காரரே என்றும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்றும் வருணித்திருக்கிறார். ஆனால் இந்த இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்பொழுது, அவர்களுக்குள்ளும் அனைத்துத் தரப்பு மக்கள் மத்தியிலும் இருந்து அனைவரையும் ஆளுகை செய்து நிலைத்திருக்கும்.



(இருக்கும்) என்றார்." தாம் பிரசங்கித்த தேவராஜ்யம் வரும்போது எல்லா இடங்களிலும் இருக்கும் மற்றும் எல்லா இடங்களிலும் வல்லமையுள்ளதாயிருக்கும் என்றாலும், எந்தவொரு இடத்திலும் கண்களால் காணமுடியாத வகையில் இருக்கும். இவ்வாறாக ஆவிக்குரிய இராஜ்யத்தைப் பற்றிய உட்கருத்தை அவர் பிரசங்கித்தப்போதிலும், அவர்களால் ஏற்றுக்கொள்ளவோ அதற்கு தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளவோ கூடாமற் போயிற்று. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவராஜ்யத்தைக்குறித்த யூதரது எதிர்பார்ப்பிலும் ஓரளவு உண்மை இருந்தது. அது ஏற்றக்காலத்தில் அனைவராலும் உணரப்பட்டு, கண்களுக்குத் தெரியும்படி காண்பிக்கப்படும். ஆனால் கண்களால் காணக்கூடாத ஆவிக்குரிய இராஜ்யத்தின் பாகம் நம் கர்த்தரால் இங்கு விளக்கப்பட்டுள்ளது. மேலும் இராஜ்யத்தின் ஆவிக்குரிய பாகம் முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்டாலும், அதன் பிரசன்னம் காணக்கூடாததாய் இருக்கும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அது புரிந்துகொள்ள முடியாததுமாயும் இருக்கும். தேவராஜ்யத்தின் இந்த ஆவிக்குரிய பாகத்தின் சுதந்தரவாளிகளாகும் இந்த விசேஷமான வாய்ப்பு அப்போது முன்வைக்கப்பட்டது. அப்பொழுது துவங்கின சுவிசேஷ யுகம் முழுவதும் இந்த அழைப்பே நம்முடைய ஒரே நம்பிக்கையாய் இருந்து வருகிறது. ஆகையினால்தான் இயேசு அதை மட்டுமே குறிப்பாகச் சுட்டிக் காண்பித்தார். (லூக். 16:16) நாம் தொடர்ந்து செல்லச் செல்ல, இது மிகத் தெளிவாகக் காணப்படும்.

இவ்விஷயத்தில் பொதுவாக ஜனங்களிடையே விசேஷமாக பரிசேயரிடையேயும் நேரெதிரான எண்ணங்கள் இருந்துவந்ததால், இப்படிப்பட்ட பரிசேயருடைய எண்ணங்கள் நிக்கொதேமுவின் மனதைப் பாரமாக்கியிருந்தாலும், அதை வெளிப்படையாகக் காண்பிப்பதில் வெட்கப்பட்டதினால், இயேசுவை சந்திக்க இரவு நேரத்தில் வந்து, இந்த இராஜ்யத்தைக் குறித்த இரகசியங்களை அறிந்து தீர்வுக்காண பேராவல் கொண்டார். கர்த்தருக்கும் நிக்கொதேமுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்கள் முழுமையாக இடம்பெறாமல், சிறிதளவே இடம்பெற்றபோதிலும் (யோவான் 3), தேவராஜ்யத்தின் தன்மையும் அதன் குணாதிசயங்களைப் பற்றிய ஆழமான காரியங்களும் நமக்கு ஓரளவு விளங்கியிருக்கிறது. அவர்களிடையே நடைபெற்ற உரையாடல்களிலிருந்து

கூறப்பட்டிருக்கிற சில முக்கியமான கருத்துக்களைக்கொண்டு முழு உரையாடலும் எவ்வாறு நடந்திருக்கும் என்று நியாயமான முறையில் யூகித்து, அதைப் பின்வருமாறு விளக்குகிறோம்:

நிக்கொதேமு: "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று நாங்கள் அறிந்திருக்கிறோம்; ஏனெனில், ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்." ஆனாலும் நீர் கூறுகிற காரியங்களில் சிலவற்றை என்னால் புரிந்துகொள்ள மிகவும் கடினமாய் இருக்கிறது. ஆகவேதான் இதன் விளக்கங்களைக் கேட்க உங்களிடத்தில் நான் வந்திருக்கிறேன். உதாரணமாக நீரும் உம்முடைய சீஷரும், "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கின்றது" என்று பிரசங்கிக்கிறீர்கள். ஆனால் உங்களிடத்தில் படைபலமோ, பணபலமோ, அதிகாரங்களோ எதுவும் இல்லாதபடியால் நீர் கூறிவருகிற விஷயங்கள் பார்வைக்குப் பொய்யாய்த் தோன்றுகிறது. இவ்விஷயத்தில் நீர் ஜனங்களை ஏமாற்றுவதுபோல் தோன்றுகிறது. பொதுவாக பரிசேயர் உம்மை ஒரு மோசம் போக்குகிறவராக எண்ணுகிறார்கள். ஆனால் நீர் போதித்துவருகிற போதனைகளில், சத்தியம் ஏனவாவது கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று நான் நிச்சயிக்கிறேன். "ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்." நீர் பிரசங்கிக்கிற இந்த இராஜ்யம் எத்தன்மை வாய்ந்தது? எப்பொழுது எப்படி ஸ்தாபிக்கப்படும்? எங்கிருந்து இந்த இராஜ்யம் வரும் என்பதை கேட்டு அறிந்துகொள்வதே நான் இங்கு வந்து உங்களைச் சந்தித்ததின் நோக்கமாகும்.

இயேசு: பரலோக இராஜ்யம்பற்றி முழுமையாகப் நீ புரிந்துகொள்ளும் வகையிலும், உன்னை திருப்தியளிக்கும் வகையிலும் பதிலுரைக்க இப்பொழுது முடியாது. அதுபற்றி எனக்கு முழுவதும் தெரியாததினால் அல்ல. நான் இப்பொழுது முழுமையாக விவரித்து கூறினேனாகில், தற்போதைய நிலைமையில் உன்னால் புரிந்துகொள்ளவோ அதை மதிக்கவோ கூடாது. "உன்னதத்திலிருந்து ஒருவன் *ஜெநிப்பிக்கப்பட்டாலொழிய அவன் தேவனுடைய இராஜ்யத்தைக்

*கிரேக்கச் சொல்லான ஜெனோ (Gennao) சில இடங்களில் ஜெநிப்பித்தல் (Begotten) என்றும், சில இடங்களில் பிறத்தல் (Born) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



காணமாட்டான்." (கிரேக்கச் சொல், ஈதோன், † அறிதல், அல்லது தெரிந்திருத்தல்)

என் சீஷருங்கூட நாங்கள் பிரசங்கிக்கிற தேவ இராஜ்யத்தைக்குறித்து தெளிவற்றப் பார்வையைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வாறு அதன் காரண காரியத்தை விளக்கினாலும் விளங்கிக்கொள்ள முடியாதோ, அவ்வாறே உனக்கும் கூற முடியாது. அதே காரணத்தினாலே அவர்களும் புரிந்துகொள்ளமுடியாது. ஆனால்

இந்த மூலச்சொல்லுக்கு இந்த இரண்டு அர்த்தங்களுமே பொருந்தும் என்றாலும், மொழிபெயர்க்கும்போது இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை மட்டுமே அந்தப் பகுதி இடம்பெறும் சூழ்நிலைக்கேற்ப அமைக்க வேண்டும். இந்த இரண்டு கருத்துக்களாகிய, ஜெநிப்பித்தல் மற்றும் பிறத்தல் ஆகியவை எப்பொழுதும் அந்த மூலச்சொல்லோடுகூட இருக்கிறபடியால், ஒருபொருளை எடுத்துரைக்கும்போதே மற்றொரு பொருளும் அதனுள் மறைந்துள்ளது. ஏனெனில் பிறத்தலுக்கு முன்பாக ஜெநிப்பித்தல் நடைபெறுவதும், அவ்வாறே ஜெநிப்பித்த பிறகே பிறத்தல் நடைபெறுவதும் இயல்பானது. ஜெனோ என்ற சொல் ஓர் ஆண்பாலுக்கு வரும்போது ஜெநிப்பித்தல் என்றும், பெண்பாலுக்கு வரும்போது பிறத்தல் என்றும் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இவ்வாறாக 1 யோவான் 2:29; 3:9; 4:7; 5:1, 18 ஆகிய வசனங்களில் (ஜெனோ) ஜெநிப்பித்தல் என்றே இடம்பெற வேண்டும். ஏனெனில் தேவன் ஆண்பாலாக எண்ணப்படுகிறார்.

ஆண்பாலாயிருந்தாலும், பெண்பாலாயிருந்தாலும் சில சமயங்களில் செயலின் தன்மையைச் சார்ந்தே மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும். இவ்வாறாக ஒரு வார்த்தையையும் மற்றொரு வார்த்தையையும் இணைக்கும் இணைச்சொல்லான கிரேக்கச்சொல் – ek – இதன் பொருள் – இதன் மூலம்," "இதிலிருந்து" என்று இணைக்கப்பட்டு, பிறத்தல் என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும். ஆகவே யோவான் 3:5, 6 வசனங்களில் இடம்பெற்றுள்ள ஜெனோ என்ற சொல், 'ek' என்ற இணைச்சொல்லுடன் சேர்த்து, "ஜலத்திலிருந்தும்," "மாம்சத்திலிருந்தும்," "ஆவியிலிருந்தும் பிறத்தல்" என்றே மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

†இந்தக் கிரேக்கச்சொல், ஈதோன் (eidon) அப். 15:6இல் ஆலோசனைபண்ணும்படி (Consider) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "அப்போஸ்தலரும், மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனைபண்ணும்படிக் கூடினார்கள்." இதே கிரேக்கச் சொல், ரோமர் 11:22–இல், ஆகையால் (Behold) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது." "ஆகையால் (Behold) தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார்" மேலும், 1 யோவான் 3:1–இல், "பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (Behold அறியுங்கள், ஆராய்ந்து பாருங்கள், புரிந்துகொள்ளுங்கள்).

நிக்கொதேமுவே, அதிக வெளிச்சத்தைப் பெறுவதற்குமுன் ஏற்கெனவே பெற்றிருந்த வெளிச்சத்திற்கு கீழ்ப்படிவதே தேவனது அணுகுமுறையாயிருக்கிறது. தேவராஜ்யத்தில் பங்குபெறும் தகுதியை அடைவதற்கு விசுவாசத்தை வெளியரங்கமாக்குவதே தேவையாய் இருக்கிறது. தேவனுடைய வழிநடத்துதலை மனப்பூர்வமாய் பின்தொடர்கிறவர்களாக அவர்கள் இருந்து படிப்படியாக வழிநடத்தப்பட்டு, அடுத்தபடியைத் தேட ஆவலாய் எதிர்பார்த்துக் காத்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். இவர்கள் தரிசித்து நடவாமல் விசுவாசத்தின்படி நடப்பார்கள்.

நிக்கொதேமு: நீர் சொல்வதன் பொருளை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. "ஒரு மனுஷன் முதிர்வயதாய் இருக்கையில் எப்படி பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாம் தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ?" அல்லது "யோவான் ஸ்நானன்" மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கித்த தண்ணீர் ஞானஸ்நானத்தை அடையாளமான பிறப்பு என்று கூறுகிறீரா? உங்களது சீஷர்களும் இதுபோன்றே பிரசங்கித்து, ஞானஸ்நானம் கொடுப்பதை நான் கவனித்திருக்கிறேன். உங்களது இராஜ்யத்தில் பிரவேசிக்கவும், அதைக் காணவும் விரும்புகிறவர்களுக்கு இப்படிப்பட்ட புதிய பிறப்பு அவசியமா?

இயேசு: நமது தேசம் தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட தேசம், உடன்படிக்கையின் மக்கள். அவர்கள் அனைவரும் எகிப்தைவிட்டுப் புறப்பட்டபொழுது, சமுத்திரத்தினாலும், மேகத்தாலும் மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். சீனாய் மலையில் உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய மோசேக்குள்ளாக தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டார், ஆனால் அவர்களோ தங்களது உடன்படிக்கையை மறந்துபோயினர். சிலரோ ஆயக்காரரும், பாவிகளும் போல வெளியரங்கமாக ஜீவிக்கிறார்கள். மேலும் அநேகரோ சுய நீதியின்படி மாயக்காரராய் ஜீவிக்கிறார்கள். ஆதலால் "மனந்திரும்புதலைக்" குறித்து என் சீஷர்களுடைய மற்றும் யோவான் ஸ்நானனின் பிரசங்கங்களும், தேவனிடத்திற்கும் தாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கையை அங்கீகரித்தலுக்கும் திரும்புதலுக்காகவே ஆகும். யோவான் ஸ்நானனின்



ஞானஸ்நானமோ தங்கள் இருதயத்திலும் தங்கள் ஜீவியத்திலும் சீர்திருந்தப்பெற்று மனம் மாறவே கொடுக்கப்பட்டது. மாறாக, அது புதிய பிறப்பைக் காண்பிப்பதில்லை. இதைக் காட்டிலும் அதிகமாய் நீ செய்யாவிடில் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டாய். யோவான் ஸ்நானனால் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட மனந்திரும்புதலோடுகூட ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டு, பிறவாவிடில் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டாய். மனந்திரும்புதல் நம்மை நீதியான நிலைமைக்குத் திரும்பச் செய்யும். அந்த நிலைமைக்கு நீ வரும்போது நானே மேசியா என்றும், நிஜமான மோசே நானே என்றும் அறிந்துகொள்ள முடியும். இவ்வாறாக, எனக்காக உன்னை ஒப்புக்கொடுக்கும்போது, புதிதான ஜீவனுக்கும், தெய்வீகச் சுபாவத்திற்கும் பிதாவாகிய தேவனால் ஜெநிப்பிக்கப்படுவாய். இதில் வளர்ச்சியடைந்து நிலை நிற்பாயானால் புதிய சிருஷ்டியாகவும், ஓர் ஆவிக்குரிய ஜீவியாகவும் முதலாம் உயிர்த்தெழுதலில் பிறக்கும் நிச்சயத்தை அடைவாய். இப்படியாக இராஜ்யத்தைப் பார்ப்பதோடுகூட அதில் பங்கு பெறுவாய்.

நிக்கொதேமுவே, ஆவியினால் புதிதாகப் பிறத்தலின் மாற்றம் என்பது மெய்யாகவே மகா உன்னதமானது. ஏனெனில் மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். அதாவது நீ உன்னதத்திலிருந்து மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட வேண்டும் என்று முன்பு புரிந்து கொண்ட என் வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்படாதே. "நீ மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக்குறித்து ஆச்சரியப்பட வேண்டாம்." உன் தற்போதைய நிலைமையாகிய மாம்சத்தால் பிறப்பதற்கும், நான் பிரசங்கித்த தேவராஜ்யத்தில் நுழையும் தகுதியை அடைய ஆவியினால் பிறக்கும் நிலைமைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் மிகப்பெரியது. இதற்கு உதாரணமாக ஒரு விளக்கத்தை உனக்குக் கூற விரும்புகிறேன். இதிலிருந்து ஆவியின் சரீரத்தில் இருக்கும் ஜீவிகளைப் பற்றிய சில கருத்துக்களை உன்னால் கிரகிக்க முடியும். "காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ

"அவனும் அப்படியே இருக்கிறான்." காற்று இங்கும் அங்கும் வீசுவதை உன்னால் காணமுடிகிறது. ஆனாலும் உன்னைச் சுற்றிலும் அது இருக்கிறது. அது எங்கிருந்து வந்தது, எங்கே போகிறதென்றும் நீ அறியாய். உயிர்த்தெழுதலின்போதும், ஆவியினால் பிறந்து நான் தற்போது பிரசங்கித்துவருகிற தேவராஜ்யத்தில் பிரவேசிக்கப் போகிறவர்களைக் குறித்து நான் கூறுகிற நல்ல உதாரணம் இது. அவர்கள் அனைவரும் காற்றைப்போல கண்ணால் காணக்கூடாதவர்களாய் இருப்பார்கள். அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்றும், எங்கே போகிறார்கள் என்றும், ஆவியில் பிறவாத மனிதர்கள் அறியமாட்டார்கள்.

### நிக்கொதேமு: காணப்படாத ஜீவிகளா! இது எப்படிச் சாத்தியம்?

இயேசு: "நீ இஸ்ரயேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?" ஆவியின் ஜீவிகள் பிரசன்னமாயிருந்தாலும் அவர்களைக் காணமுடியாது என்று அறியாயா? எலிசாவும் அவனது ஊழியக்காரர்களும் மற்றும் பிலேயாமின் கழுதை மற்றும் வேதம் கூறும் அநேக சம்பவங்களிலும் ஆவிக்குரிய ஜீவிகள் மனிதர்களிடையே காணக்கூடாத நிலையில் பிரசன்னமாக முடியும் என்றும் நீ படித்ததில்லையா? மற்றவர்களுக்குப் போதிக்கவில்லையா? அதோடுகூட தேவதூதர்கள் ஆவிக்குரிய ஜீவிகளாய் இருக்கிறார்கள் என்று விசுவாசிக்கிற பரிசேயரில் நீயும் ஒருவனல்லவா? ஆனால் இது நான் உனக்கு முதலில் சொன்னதை விளக்குகிறது: ஒருவன் பரலோகத்திலிருந்து பிறவாவிடில் தேவனுடைய இராஜ்யத்தையோ அதைச் சார்ந்த பல்வேறு காரியங்களையோ காண (அறியவோ, தெரிந்துகொள்ளவோ, பகுத்துணரவோ) முடியாது.

நான் பிரசங்கித்து வருகிற அந்த இராஜ்யத்தில் என்னோடேகூட உடன்சுதந்தரராக ஆவதற்குப் படிப்படியாக ஒளியைப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு நீ செய்யும்போது அதிக வெளிச்சத்தைப் பெறுவாய். நீ எவ்வளவு சீக்கிரம் ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படுகிறாயோ, அவ்வளவு சீக்கிரம் அதிக வெளிச்சம் உனக்குக் கொடுக்கப்படும். நீ அறியும் வண்ணமாக நான் தற்போது பிரசங்கித்து வருகிற இக்காரியங்களையும், செய்துவருகிற அற்புதங்களையும் நான் தேவனிடத்திலிருந்து வந்த போதகரென்றும், நீ



அறிந்து ஏற்றுக்கொள்கிறாய். ஆனாலும் உன் விசுவாசத்தை வெளிப்படையாகக் காண்பிக்கவும், என் சீஷனாகி என்னைப் பின்பற்றாதிருக்கிறாய். நீ அறிந்து கொண்டவைகளுக்கு உண்மையாயிருந்து அதற்கேற்றபடி நடவாதிருந்தால், இதைக்காட்டிலும் கூடுதலான வெளிச்சத்தைக் காணமாட்டாய். மாறாக அவ்வாறு செய்வாயானால் தேவன் அதிக வெளிச்சத்தையும் அடுத்தபடியை அடைவதற்கான அத்தாட்சியையும் தருவார். "மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சிக் கொடுக்கிறோம். நீங்களோ (பரிசேயர்) எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. பூமிக்கடுத்தக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை நான் உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" பரலோகக் காரியங்களைக்குறித்து நான் உங்களுக்குப் போதித்தவைகளைக் நீங்கள் ஏற்றுக்கொள்ளாமலும், என் பிரசங்கம் உங்களுக்கு அதிகப் பைத்தியமாயும் காணப்படுகிறபடியால், நான் உங்களுக்குச் சொல்வது பயனற்றதாயிருக்கும். பூமிக்குரிய காரியங்களை நீ அறிந்திருக்கிற பூமிக்குரிய சம்பவங்களோடு தொடர்புபடுத்திப் போதிக்கும்போது, உன்னால் அறிந்து உணரமுடியும் என்ற போதிலும், என் சீஷனாக என்னைப் பின்பற்றும்படி உனக்குப் போதுமான நம்பிக்கையும், திடனையும் அவைகள் கொடுக்காதக் காரணத்தினால், நீ அறியாத பரலோகத்தின் காரியங்களைப்பற்றி உனக்குக் கூறினால் உன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனும் இல்லாதபடியினால், என்னைக்குறித்து சாட்சிக்கொடுக்க ஒருவனும் இல்லை. பரலோகத்திலிருந்து இறங்கின நான் மட்டுமே பரலோகக் காரியங்களை அறிந்திருக்கிறேன். "பரலோகத்திலிருந்து இறங்கின *மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை." ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட பின்பே பரலோகக் காரியங்களைப்பற்றி

---

*"பரலோகத்திலிருக்கிறவருமான" என்ற வார்த்தை (வசனம் 13) பழைய மூல பிரதிகளில் காணப்படவில்லை.

அறியும் அறிவு ஒருவனுக்கு உண்டாகும். அதன்பின்பு, ஆவியின் ஜீவியாக ஆவியில் பிறக்கும்பொழுது அவர்களே பரலோகக் காரியங்களுக்குரியவர்களாவார்கள்.

தேவராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தைக்குறித்துத் தவறுதலாகக் கற்று, புரிந்துகொண்டிருந்ததால் அவர்களது பார்வை தெளிவற்றிருந்தது. ஆகையினால் கர்த்தர் ராஜ்யத்தின் சுபாவத்தை அறிவிப்பதில் மிகுந்த பொறுமையைக் காண்பிக்க வேண்டியிருந்தது. இவ்வாறு இருந்தபோதிலும், மேசியாவின் இராஜ்யத்தில் பங்கு பெறுவதற்காக தகுந்த ஒரு வகுப்பாரை தெரிவு செய்தல் தொடர்ந்தது. இஸ்ரவேலிலிருந்து, அவர்களுக்காக மட்டுமே கொடுக்கப்பட்ட காலமாகிய ஏழு வருடங்களில், வெகு சிலரே இவ்வகுப்புக்கு தெரிவு செய்யப்பட்டனர். இஸ்ரவேலில் பெரும்பாலானோர் அவ்வகுப்பில் சேருவதற்குத் தாயராக இல்லாததை தேவன் முன்னறிந்திருந்தார். அவர்கள் மேசியாவின் இராஜ்யத்தில் பங்குபெறும் சிறப்புத் தன்மையைக் குறித்த அழைப்பைப் புரிந்துகொள்ளமுடியாமலும் அதன் நிபந்தனைகளுக்கு இணக்கமாக இல்லாமலும் இருந்ததால், தேவஜனங்களுக்குரிய அந்த வாய்ப்பு ஏற்றுக்கொண்ட வெகுசிலரைத் தவிர, புறஜாதியாருக்கு "தமது நாமத்திற்கென்று ஒரு ஜனத்தை தெரிந்துகொள்ளும்படியாக" வந்தது. யூதரிலும், புறஜாதியாரிலும் இருந்து தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு "சிறுமந்தையே" இந்த அழைப்பை மதித்து நடந்து, அவரது மகிமையிலும் இராஜ்யத்திலும் உடன் சுதந்தரராகும் தகுதியடைகிறார்கள்.

பெயர் கிறிஸ்தவ சபையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தவறு என்னவெனில், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட இராஜ்யம் தற்போதைய பெயர் கிறிஸ்த சபையே என்றும், இதன் பணிகள் விசுவாசிகளின் இருதயத்தில் நிகழும் கிருபையின் பணி மட்டுமே என்றும் கூறி வந்ததே ஆகும். இந்தத் தவறு அநேகர் மத்தியில் பிரபலமாகி தற்கால பெயர் கிறிஸ்தவ சபை உலகத்தோடு சேர்ந்து செய்யும் சிக்கலான ஆட்சியே இப்பூமியில் தேவனுடைய ஆட்சி என்று அநேகரால் தவறாக நம்பப்படுகிறது. தற்போதைய உண்மையான சபை தேவனுடைய இராஜ்யம் என்பதும் அதன் விசுவாசிகளின் இருதயங்களில் கிருபையின் பணி தற்போது நடைபெற்று வருகிறது என்பதும் உண்மையே. ஆனால்



இவைகளையெல்லாம் சிந்திக்கும்போது, முழு வானங்களுக்கு கீழாக எதிர்காலத்தில் ஒரு உண்மையான தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதையும், அதில் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல தேவசித்தம் செய்யப்படும் என்பதையும், ஏற்க மறுப்பது அர்த்தமற்றதும், வீணானதுமாயும் இருக்கிறது. நாம் இவ்வுலகை ஜெயிப்பதற்காகவும் நம்மை உற்சாகப்படுத்துவதற்காகவும், நம் கர்த்தராலும், அப்போஸ்தலர்களாலும், தீர்க்கதரிசிகளாலும் தீர்க்கமாக எழுதிவைக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை ஏற்க மறுப்பதும் அர்த்தமற்றதாய் இருக்கிறது.

நம் கர்த்தரால் கூறப்பட்ட உவமையில், திருச்சபையானது இராஜ்யத்திற்கு ஒப்பாக அடிக்கடி கூறப்பட்டுள்ளது. கிறிஸ்து தற்போது ஆட்சிசெய்து வருகின்ற இராஜ்யம் திருச்சபையே என்றும், தேவன் நம்மை இருளின் இராஜ்யத்திலிருந்து அவரது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு மாற்றினார் என்றும் அப்போஸ்தலர்கள் பேசியிருக்கிறார்கள். கிறிஸ்து இராஜ்யத்தின் உரிமையை கிரயத்திற்கு வாங்கினதை இப்பொழுது ஏற்றுக்கொள்கிற நாம், அவர் இவ்வுலகில் பலவந்தமாய் தம் இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்குமுன் நாமாக முன்வந்து கீழ்ப்படிதலையும், நன்றியுணர்வையும் அவருக்குக் காணிக்கையாக்குகிறோம். அவரால் ஏற்படுத்தப்படப்போகிற நீதியின் சட்டங்களுக்கும் இவ்வுலக அதிபதியினால் தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிற அநீதியுள்ள இருளின் இராஜ்யத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசங்களை நாம் புரிந்துகொள்கிறோம். இவ்விதமாய் நாம் தேவனது வாக்குத்தத்தங்களின் பேரில் வைக்கும் விசுவாசமானது, நமது கடமையுணர்வை மாற்றியமைக்கிறது. நாம் இனி புதிய இராஜாவின் ஆளுகைக்குட்பட்டவர்களாக, அவரது தயவினால் ஏற்படுத்தப்படவிருக்கும் மகிமையும், வல்லமையுமுள்ள இராஜ்யத்திற்கு உடன்சுதந்தரராக நம்மை மாற்றுவார் என்றும் எண்ணுகிறோம்.

ஆனால் இந்த உண்மை, வாக்குதத்தங்களை அர்த்தமுள்ளதாக்குகிறது. கிறிஸ்துவின் இராஜ்யம் "ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கிப் பூமியின் எல்லை வரைக்கும்" இருக்கும். (சங்.72:8) சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும். வானோர்

பூதலத்தோருடைய முழங்கால்கள் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும். (தானி. 7:27; பிலி. 2:10) ஆனால் இதற்கு மாறாக, தற்போது நடந்து வருகிற "சிறுமந்தையின்" தெரிந்தெடுத்தல் அந்த வாக்குத்தத்தங்களை உறுதிப்படுத்தி வருகிறது.

நமது கர்த்தர் பேசின உவமைகளைக் கவனமாய் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, வரப்போகிற அல்லது ஸ்தாபிக்கப்படப்போகிற தேவராஜ்யம் வருங்காலத்திற்குரியது என்றும், இராஜா வருமுன் இவைகள் நடைபெறாது என்றும் போதிப்பதைக் கண்டுகொள்ளலாம். இவ்விதமாக பிரபுவாகிய ஒருவன் ஓர் இராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பிவரும்படி தூர தேசத்திற்குப்போன உவமை முதலியன. (லூக். 19:11–15) கிறிஸ்து (இரண்டாம் வருகையில்) திரும்பி வரும்போதுதான் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பதைத் தெளிவாய்க் காண்பிக்கிறது. இந்த உவமையைக்கூறி அநேக வருடங்கள் சென்றபின்பு, திருச்சபைக்குக் கர்த்தரால் அனுப்பப்பட்ட செய்தி என்னவெனில்; "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" என்பதே. (வெளி. 2:10) அவரோடு ஆட்சி செய்யப்போகும் இராஜாக்கள், தற்கால வாழ்க்கையில் முடிசூட்டப்படவோ, ஆட்சிபுரியவோ மாட்டார்கள் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

ஆகையால் திருச்சபை தற்போதைய நிலைமையில், வல்லமையிலும், மகிமையிலும் ஏற்படுத்தப்பட்ட தேவராஜ்யமாக இராமல், தொடங்குகிற நிலையில் கருவில் உள்ளது போல இருக்கிறது. இதே கருத்தையே புதிய ஏற்பாட்டிலுள்ள தேவராஜ்யத்தைக்குறித்த அனைத்து வசனங்களும் போதிக்கின்றன. இவ்வுலகத்தினால் தற்போது பரலோக இராஜ்யம் துன்பப்படுத்தப்படுகிறது. அதன் இராஜா அவமானப்படுத்தப்பட்டு சிலுவையில் அறையப்பட்டபடியே அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்கள் ஏதாவது ஒருவகையில் உபத்திரவங்களையும், தீமைகளையும் அனுபவிக்க வேண்டும். இது உண்மை திருச்சபையாரிடத்தில் நடைபெறுமே தவிர, பெயர் கிறிஸ்தவ சபைகளில் நடந்தேறாது என்பது கவனிக்கத்தக்கது. ஆனால் நாம் (திருச்சபை கருவாக உள்ள இராஜ்யம்) தற்போது கிறிஸ்துவோடேகூட துன்பப்பட்டால்,



ஏற்றவேளையில் அவர் மாபெரும் வல்லமையில் இராஜ்யபாரத்திற்கு வரும்போது மகிமையடைந்து அவரோடுகூட ஆளுகையும் செய்வோம் என்ற வாக்குத்தத்தம் வைக்கப்பட்டிருக்கிறது.

நமது கர்த்தர் போதித்ததற்கு இசைவாக யாக்கோபு அப்போஸ்தலனும் கூறும்போது, இவ்வுலகத்தின் பார்வையில் ஏழைகளாகவும், அசட்டைபண்ணப்பட்டவர்களாகவும் இருந்தவர்களையே தேவன் தெரிந்தெடுத்தார் என்றும், தற்போது அரசாளுவதற்கல்ல. "தாம் வாக்குத்தத்தம் பண்ணின இராஜ்யத்தின் சுதந்தரர்களாக" தேர்ந்தெடுத்திருக்கிறார் என்று கூறுகிறார். (யாக். 2:5) "ஐசுவரியவான்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" என்று நம் கர்த்தர் கூறுகிறார். (மாற். 10:23) உலகத்துடன் தற்போது ஆளுகைசெய்துகொண்டிருக்கிற பெயர் சபைகளைக்குறித்து இவ்வாறு அவர் கூறவில்லை என்பது தெளிவாகிறது. ஏனெனில் ஐசுவரியவான்கள் பெயர் சபைகளோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். விசுவாசம், பொறுமை, விடாமுயற்சி, நற்குணம் ஆகியவற்றை உடையவர்களாயிருங்கள் என்று இராஜ்யத்தைச் சுதந்தரிக்கப்போகிறவர்களுக்கு பேதுரு புத்திமதி கூறுகிறார். "சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாய் இருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை." இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்திற்கு உட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" என்கிறார். (2 பேது. 1:10, 11)

ரோமர் 14:17–இல், பவுலால் கூறப்பட்டிருப்பது உருவகமான இராஜ்யமென்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் அந்த வசனம் எழுதப்பட்டதன் சூழ்நிலையை வெளிச்சத்தில் பார்க்கும்போது, அந்தப் பகுதியானது பின்வருமாறு கூறுவதை அறிந்துகொள்ள முடியும். சகோதரரே, தேவனுடைய அன்பின் குமாரனின் இராஜ்யத்திற்கு மாற்றப்பட்டுள்ள நமக்கு, உணவுக்கடுத்த விஷயங்கள் போன்றவற்றில் சில குறிப்பிட்ட சுதந்திரங்கள் உண்டு. நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிற யூதர்களைப் போன்றவர்களல்ல (14ஆம் வசனம்); இதை உணர்ந்திராத சகோதரர்கள் இடறி, தங்கள் மனசாட்சியை மீறாதபடிக்கு

சுயாதீனத்தை அடைந்த யூதர்கள், இதை உபயோகிக்க வேண்டாமென்று அறிவுறுத்தப்பட்டார்கள். ஆகவே உணவுக்கடுத்த விஷயங்களில் நமது சுதந்திரத்தில் நம் சகோதரன் இடறலடையாதபடிக்கு நடந்துகொள்வோமாக. ஏனெனில் கிறிஸ்து அவனுக்காகவும் மரித்தாரே. இப்பொழுதும், வருங்காலத்திலும் இராஜ்யத்தின் சிறப்புரிமைகள் உணவுக்கடுத்த சுயாதீனத்தைக் காட்டிலும், மாபெரும் ஆசீர்வாதங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதை நினைவுகூரக்கடவோம். உதாரணமாக, நீதியை நடப்பிக்கும் சுதந்தரம், தேவனுடைய பரிசுத்த ஆவியில் பங்குபெறுவதில் நமது மகிழ்ச்சி, கிறிஸ்துவின் மூலமாக தேவனோடு சமாதானம் ஆகியவை தற்காலத்திலும், வருங்காலத்திலும் கொடுக்கப்படுகின்ற இராஜ்யத்தின் சுதந்தரமானது மகா மேன்மையானதாக இருக்கிறபடியால், உணவுபோன்ற அற்ப சுயாதீனங்களை நம் சகோதரரின் நன்மைக்காக தற்காலத்தில் தியாகம் செய்துவிடலாம் என்பதே அப்போஸ்தலன் கூறிய வார்த்தைகளின் அர்த்தமாகும்.

இவ்விதமாக வேதாகம வசனங்களை எக்கோணத்தில் நாம் பார்த்தாலும், இராஜ்யத்தின் வாக்குத்தத்தங்கள் தற்காலத்தில் நிறைவேறிவருவது, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் கட்டுக்கதைகளோடுகூடிய வஞ்சனைகள் என்ற கொள்கைகளுக்கு விரோதமாக இருக்கிறது.

நம் ஆண்டவருக்கு உடன்சுதந்தரராக ஆகும் இராஜ்யத்தின் மேன்மையான வாக்குத்தத்தங்கள், விசுவாசத்தை ஊக்குவிப்பதற்காக அளிக்கப்பட்டிருப்பதால் தற்கால சோதனைகளையும், உபத்திரவங்களையும் சகிப்பதில் உண்மையாக இருக்கும்படியும், இதனை எதிர்பார்த்திருக்கும்படியும் ஆதிகாலத் திருச்சபையார் முன்னெச்சரிக்கப்பட்டிருந்தனர். வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு சபைகளுக்குக் கொடுக்கப்பட்ட ஆறுதலும், உற்சாகமுமான வார்த்தைகளில், கீழ்க் கண்ட வார்த்தைகள் அதிகத் தெளிவாகவும், உறுதியான வெளிச்சத்தையும் தருகின்றது. "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்தில் அவரோடுகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில்



என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்." "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன்."

இந்த வாக்குத்தத்தங்களானது தற்காலத்தில் இருதயத்தில் நடக்கும் கிருபையின் பணி என்றோ, தற்காலத்தில் தேசங்கள்மேல் ஆட்சி செலுத்துவதென்றோ தவறாகப் பொருள்கொள்ளக்கூடாது. மாறாக அவ்வாறு ஜெயங்கொள்ளுகிறவர்கள் தங்கள் ஊழியத்தில் மரணபரியந்தம் உண்மையாய் இருந்து நிறைவேற்றி முடித்தபிறகே, இராஜ்யத்தின் கனத்தைச் சுதந்தரித்துக் கொள்கிறார்கள். (வெளி. 20:6)

ஆனால் மனித சுபாவமோ துன்பப்படுதலைத் தவிர்த்து, கனத்தையும், அதிகாரத்தையுமே எப்போதும் தேடமுற்படுகிறது. அப்போஸ்தலர் காலத்திலுங்கூட திருச்சபையாரில் சிலர் வருங்கால மேன்மையையும், வல்லமையையும் கொண்ட வாக்குத்தத்தங்கள் தற்கால வாழ்வில் நடப்பதாகவும், சபைக்கு உலகம் கீழ்ப்படியவும் கனத்தைச் செலுத்தவும் காலம் வந்துவிட்டது என்றும் எண்ணி நடக்க ஆரம்பித்தார்கள். திருச்சபையாரிடத்தில் இப்படிப்பட்ட கருத்துக்கள் மனமேட்டிமையை வளர்த்து தியாக மனப்பான்மையிலிருந்து வழிவிலகச்செய்யும் என்று அறிந்த அப். பவுல், தன் நிருபத்தில் வலியுறுத்தி உருவகமாக எழுதுகிறதாவது: "இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாய் இருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே." இப்படி பேசிய பிறகு வாஞ்சையுடன் தொடர்ந்து எழுதுகிறார்: "நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உங்களுடனேகூட நாங்களும் (துன்பப்படும் அப்போஸ்தலர்கள்) ஆளுவோமே." (1 கொரி. 4:8) கொரிந்து சபையில் அநேகர் கிறிஸ்தவர்களென்று உரிமைப் பாராட்டிக்கொள்ளவும், அதே சமயத்தில் கிறிஸ்தவ மார்க்கத்தைவிட்டு வெளியேறி இவ்வுலக மேன்மையை அடையவும் முயற்சித்தனர். அவர்கள் கர்த்தருடைய பின்னடியார்களாக விசுவாசத்தில் நிலைத்திருப்பார்களேயானால் அப்படிப்பட்ட நிலைமையில் இருந்திருக்கமாட்டார்கள் என்று அப்போஸ்தலர் நன்கு அறிந்திருந்தார். ஆதலால் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த ஆளுகையானது தொடங்கியிருக்குமேயானால், அவர்களைக்காட்டிலும்

தான் குறைவுள்ளவனாயிராததால், ஆளுகையில் அவர்களோடு தானும் பிரவேசித்திருப்பேன் என்றும், தான் சத்தியத்திற்காகத் தொடர்ந்து விசுவாசத்தோடு பாடுபட்டுவருவதால், அந்த ஆளுகை இன்னும் வரவில்லை என்பதற்கு இதுவே அத்தாட்சியாக இருக்கிறது என்றும், இது மகிமையை வருவிப்பதைக் காட்டிலும் கண்ணியையே பிறப்பிக்கும் என்றும் எழுதினார். பின்பு உருவகமாகக் கூறுகிறார்: "நாங்கள் (அப்போஸ்தலரும் உண்மையுள்ள ஊழியரும்) கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள், நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர்" என்று எழுதியிருக்கிறார். உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, உங்களை எச்சரிக்க வேண்டுமென்கிற மேன்மையான நோக்கத்துடன் இதைச் செய்கிறேன். ஏனெனில் தற்கால உலகின் மகிமையான பாதை, வெளிப்பட இருக்கும் மகிமைக்கும், கனத்திற்கும் வழிநடத்தவில்லை. இடுக்கமான பாதையாகிய சுயத்தை வெறுத்தலும், தற்காலப் பாடுகளுமே இராஜ்யத்தின் கனம், மகிமை, அழியாமையை அடையவும், உடன்சுதந்தரர் ஸ்தானத்தையும் அடையவும் செய்யும். "ஆகையால் என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். என்னோடேகூட ஜீவகிரீடத்தைப் பெறும்பொருட்டு இப்பொழுது துன்பம், நிந்தைகளாகிய பாடுகளை அநுபவியுங்கள். "நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்." (1 கொரி. 4:10-17; 2 தீமோத். 4:8)

ஆதிகால சபை அநேக பாடுகளை உண்மையாய் சகித்தப்பின்னர், அதற்கடுத்து வந்த நாட்களில் கர்த்தரின் இரண்டாம் வருகைக்கு முன்னரே இவ்வுலகை ஜெயித்து, இப்பூமியில் பரலோக இராஜ்யத்தை ஸ்தாபித்து தேசங்கள்மேல் ஆட்சிபுரிவதே திருச்சபையின் பணி என்ற கொள்கைகள் பரவ ஆரம்பித்தன. இக்கொள்கைகள் உலகத்தைப் பயமுறுத்தி, அடிமைப்படுத்தி, ஆதிக்கம் கொள்ளச்செய்து, சபையில் நடைபெற்றுவருகிற ஆடம்பரமான காட்சிகள் மற்றும் சடங்குகளுக்கும், உலக தந்திரங்களுக்கும், பெருமைக்கும், பகட்டான காரியங்களுக்கும் அஸ்திபாரம் போட்டது. இதுபோன்ற காரியங்கள் படிப்படியாக வளர்ந்து போப்பு மார்க்கம் தேடிய பெரிய உரிமைகளை அடையும்படி வழிநடத்திற்று.



பூமியில் தானே தேவராஜ்யமாயிருக்கிறபடியால், ஒவ்வொரு தேசமும், ஜனங்களும், தன் சட்டங்களுக்கும், அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிய வேண்டுமென்றும் நிர்பந்தம் செய்து, தன் பொய்யான உரிமைகளால் மற்றவர்களை மட்டுமல்ல, தன்னையும் வஞ்சித்துக்கொண்டது. போப்பு மார்க்கத்தின் அதிகாரத்தால் ஐரோப்பாவில் சில காலம் அந்தபோப்பு மார்க்கமே இராஜாக்களை நியமித்து முடிசூட்டியும், கீழே தள்ளியும் வந்தது. இவ்வதிகாரம் இன்னும் தனக்குரியது என்று கூறிவந்த போதிலும், இப்பொழுது அவ்வதிகாரத்தைச் செயல்படுத்த முடியாதிருக்கிறது.

போப்பு மார்க்கத்தின் மூலமாக புராட்டஸ்டண்ட் மார்க்கத்திற்கும் இதே எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இம்மார்க்கம் ஆட்சி வளர்ந்து கொண்டிருக்கிறது என்று மிகவும் தெளிவில்லாமல் கூறி வந்தது. கொரிந்தியரைப் போலவே இம்மார்க்கத்தைச் சேர்ந்தவர்களும் நம் கர்த்தரால் மிகத் துல்லியமாக முன்னுரைத்தபடி, ஐசுவரியவான்களும், திருப்தியடைந்தவர்களும் இராஜாக்களைப்போல் ஆளுகிறவர்களுமாய் இருக்கிறார்கள். (வெளி. 3:17-18) இவ்வாறாக பெயர் சபைகளின் அங்கத்தினர்கள் உண்மையாக மனமாற்றம் அடையாதவர்களும், உண்மை கோதுமை மணியாக இராமல் அதன் சாயலை மட்டும் கொண்டிருக்கும் களைகளாக இருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் உண்மையான சீடர்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமாய் இருக்கிறார்கள். இவர்கள் சுயத்தை வெறுக்கவும், உண்மையாகப் பலி செலுத்தவும் எதிர்த்துநின்று, சத்தியத்தின் நிமித்தம் வரும் துன்பங்களை அநுபவிக்காமல், உபவாசம் போன்ற வெளிப்படையான பாவனைகளை கைக்கொண்டு வருகிறார்கள். இவர்கள் உண்மையாகவே இவ்வுலகத்தோடு சேர்ந்து ஆளுகைசெய்து, நம் கர்த்தரால் அவரது இரண்டாம் வருகையில் ஸ்தாபிக்கப்பட இருக்கிற உண்மையான இராஜ்யத்தில் பங்குபெறுவதற்கு வேண்டிய ஆயத்தப்பணிகளைச் செய்யாதிருக்கிறார்கள்.

இயேசுவும் மற்றும் அப்போஸ்தலர்களும் இராஜ்யத்தைக்குறித்து போதித்ததற்கும் இந்த கொள்கைக்கும் இடையே இசைவில்லாத கருத்தைக் கவனிக்கிற அனைவரும் அறிந்துகொள்ளலாம். இராஜா

வரும்வரை இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட முடியாததென்று அவர்கள் போதித்தார்கள். (வெளி. 20:6; 3:21; 2 தீமோ.2:12) பரலோக இராஜ்யம் மகிமையிலும், வல்லமையிலும் ஸ்தாபிக்கப்படும் காலம்வரை பரலோக இராஜ்யத்தைச் சுதந்தரிப்போர் துன்பப்படுவார்கள்.

## தேவராஜ்யத்தின் இரு பாகங்கள்

தேவனது பரலோக இராஜ்யம் துவங்கும் காலத்தில் எல்லோரும் காண்கிறபடி வெளிப்படையாக இருக்காது என்று நமது கர்த்தர் கூறியது உண்மையாய் இருந்தபோதிலும், ஏற்றவேளையில் அனைவராலும் வெளிப்படையாகத் தெரியும்படியும், தவறாய் அர்த்தங்கொள்ள முடியாத அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்படும். தேவனுடைய இராஜ்யம் பரிபூரணமாய் ஸ்தாபிக்கப்படும்போது, அது இரண்டு பகுதிகளைக்கொண்டதாக அதாவது ஆவிக்குரியது அல்லது பரலோகத்துக்குரியது மற்றும் பூமிக்குரியது அல்லது மனிதனுக்குரியதுமாக இருக்கும், ஆவிக்குரிய நிலையானது எப்பொழுதும் மனிதக் கண்களால் காணக்கூடாததாய் இருக்கும். ஆவிக்குரிய நிலையில் உள்ளவர்கள் மனிதரால் காணமுடியாதவர்களாயும், அல்லது ஒருபோதும் கண்டிராத, காணக்கூடாத, ஆவிக்குரிய தெய்வீகச் சாயலை உடையவர்களாயும் இருப்பார்கள். (1 தீமோ. 6:16; யோவான் 1:18) அவ்வாறு இருந்தபோதிலும் பரலோக ராஜ்யத்தின் பிரசன்னமும், அதிகாரமும் அதின் பூமிக்குரிய பாகத்தின் பிரதிநிதிகளாகிய மனிதர்கள் மூலமாகத்தான் வல்லமையாக வெளியரங்கமாக்கப்படும்.

தேவராஜ்யத்தின் ஆவிக்குரிய பாகத்தைச் சுவிசேஷ யுகத்தில் ஜெயங்கொண்டவர்களாகிய பரிசுத்தவான்கள் மகிமைப்படுத்தப்பட்டு தங்கள் தலையாகிய கிறிஸ்துவுடன்கூட இணைந்து ஸ்தாபிப்பார்கள். இவர்களது உயிர்த்தெழுதலும் அதிகாரத்திற்கு உயர்த்தப்படுவதும், மற்ற அனைவருக்கும் முன்னதாக இருக்கும். ஏனெனில், இவர்கள் மூலமாகவே மற்ற எல்லா இனங்களும் ஆசீர்வதிக்கப்பட வேண்டியிருக்கிறது. (எபி.11:39, 40) இவர்களுடையதுதான் முதலாம் உயிர்த்தெழுதல் ஆகும். (வெளி. 20:5)*

*இந்த வசனத்தில் இடம்பெற்றுள்ள "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிர வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை" என்ற வார்த்தைகள் கூட்டிச்சேர்க்கப்பட்ட பகுதி. மிகப் பழமையானதும் நம்பத்தகுந்ததுமான கிரேக்க மூலப் பிரதிகளாகிய, சினாய்டிக்,



அபிஷேகம் பண்ணப்பட்ட மகிமை நிறைந்த கிறிஸ்துவாகிய இவ்வகுப்பாருக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருக்கும் மாபெரும் பணியை நிறைவேற்றுவதற்கு இவர்கள் தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்படுவது அவசியமாகிறது. தெய்வீக வல்லமையினால் தவிர வேறெதுவும் அதை நிறைவேற்ற முடியாது. அவர்களுடைய மாபெரும் பணியானது இவ்வுலகத்திற்குரியது மட்டுமல்ல, பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய அனைத்திலும் ஆவிக்குரிய ஜீவிகள் மற்றும் மனித ஜீவிகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி நடைபெறுவதாக இருக்கும். (மத். 28:18; கொலோ. 1:20; எபே. 1:10; பிலி. 2:10; 1 கொரி. 6:3)

பூமிக்குரிய பாகத்தில் தேவராஜ்யத்தின் பணியானது இப்பூமி மற்றும் மனிதரிடம் மட்டுமே நடைபெறும். அந்தப் பூமிக்குரிய தேவராஜ்யத்தில் ஆளுகையில் பங்குபெறுவதற்காக அதிகமாக சுளப்படுத்தப்பட்ட முற்பிதாக்கள், மற்ற எல்லா மனிதரைக் காட்டிலும் தேவனால் மிகவும்

வாட்டிகன் எண்கள் 1209, 1160, சீரியக் ஆகியவற்றில் இடம்பெறவில்லை. தற்கால வேதாகமங்களில் காணப்படும் அநேக வார்த்தைகள் கூடுதலாக சேர்க்கப்பட்டவையே. இவைகள் மூல வேதாகமப் பிரதிகளில் இல்லாதவையவை என்பதை நாம் நினைவில் வைக்கவேண்டும். வேதவசனத்தோடு ஒன்றையும் கூட்டாதே என்ற கட்டளை அளிக்கப்பட்டிருப்பதால், இப்படிப்பட்ட கூடுதலாக சேர்க்கப்பட்ட பகுதிகள் என அறிவைப் பூரணமுடன் நிரூபிக்கப்பட்டவுடன் அதை உடனடியாக ஒதுக்கிவிட வேண்டியது நமது கடமையாகிறது. ஐந்தாம் நூற்றாண்டில் எதிர்பாராதவிதமாக மூல வார்த்தைகளோடு சேர்க்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் அதற்கு முந்தைய காலத்தின் கிரேக்க, சீரியக் கையெழுத்துப் பிரதிகளிலும் இந்த வார்த்தைகள் இடம்பெறவில்லை. ஒரு வேதாகமப் புத்தகத்தின் பக்கங்களில் ஒருவர் குறிப்புக்கென்று எழுதிவைத்த வார்த்தைகளை வேதாகமத்தை நகல் எடுத்த மற்றொருவர் இதுவும் புத்தகத்தின் ஒருபாகம் என்று எண்ணி சேர்த்திருக்க வாய்ப்புண்டு.

ஆயினும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ள இச்சொற்றொடரில் கூறப்பட்டிருக்கிற காரியம், தேவத்திட்டத்திற்கு அவசியமில்லாததாகையால், இதற்கு நாம் மதிப்பளிக்காதிருக்கிறோம். உலக இனங்களில் மரணமடைந்த மற்றவர்கள் உயிரடையவில்லை என்பதன் முழு அர்த்தம் என்னவெனில், ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பாக ஜீவித்திருந்தான். பாவம் செய்தவுடன் "சாகவே சாவாய்" என்ற தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளானான். பரிபூரண ஜீவன் என்பது பலவீனமில்லாத பரிபூரணமான வாழ்க்கை – என்ற ஒரே அர்த்தத்தை தேவன் அங்கீகரித்திருந்தார். அவ்வாறு இந்த நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்போது, முழு உலகமும் ஜீவனை ஏற்கெனவே இழந்துவிட்டது. அதாவது மரித்த நிலையில் உள்ளது. இன்னும் தெளிவாக உரைப்போமானால், ஜீவனைக் காட்டிலும் மரணமே ஆளுகை செய்துவருகிறது. (2 கொரி. 5:14; மத். 8:22)

உன்னதமும் கனமுமான நிலைமைக்கு மகிமைப்படுத்தப்பட்டிருப்பார்கள். இந்த வகுப்பாரைக்குறித்து அத்தியாயம் 8–இல் (பக்கம் 176) கூறப்பட்டபடி, இவர்களது நியாயத்தீர்ப்பு சுவிசேஷ யுகத்திற்கு முந்தையது. இவர்கள் சோதிக்கப்பட்டு உண்மையுள்ளவர்களென்று நிரூபிக்கப்பட்டபடியால், உயிர்த்தெழுப்பப்படும்போது மீண்டும் நியாயந்தீர்க்கப்படாமல் அவர்களது விசுவாசத்திற்குப் பரிசாக, பரிபூரண மனித சுபாவத்திற்கே நேரடியாக மற்றும் உடனடியாக உயிர்த்தெழுப்பப்படுவார்கள். (ஆயிரவருட அரசாட்சியில் இவர்களையும் ஆவிக்குரிய வகுப்பாரையும் தவிர மற்றவர்கள் படிப்படியாக பரிபூரணத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள்). இவ்வாறாக மீதமுள்ள மனுக்குலத்தைச் சீர்பொருந்தச் செய்து ஆசீர்வதிக்கும் மாபெரும் பணியை செய்ய இந்த வகுப்பார் கிறிஸ்துவின் மனிதப் பிரதிநிதிகளாய் உடனே தயாராக இருப்பார்கள். கிறிஸ்துவின்

---

உயிர்த்தெழுதல் என்ற வார்த்தை (கிரேக்கச் சொல் – அனஸ்டாசிஸ்) எழுந்துவருதல் என்று அடையாளப்படுத்துகிறது. இதை மனிதனுக்குப் பொருத்திப்பார்க்கும்பொழுது, அவன் விழுந்துபோன நிலைமையிலிருந்து மனித பரிபூரணத்திற்கு எழுந்துவருவதைக் குறிக்கின்றது. பரிபூரணத்திலிருந்து விழுந்துபோன நமது சந்ததி, மீண்டும் அதே பரிபூரணத்தை ஆயிரவருட அரசாட்சியின்போது படிப்படியாக அடைய மறுசீரமைக்கப்படுவார்கள், அல்லது உயிர்த்தெழுப்பப்படுவார்கள் (எழுந்துவருதல்). ஆயிரவருட அரசாட்சியானது “மீட்பரின் யுகம்” மட்டுமல்ல, ஆசீர்வாத யுகமுங்கூட. ஜீவன் அடைவதற்காக உயிர்த்தெழுப்பப்படும்போது அல்லது மறுசீரமைக்கப்படும்பொழுது, அவர்கள் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற வாய்ப்பை அறிந்து உணர்ந்து, மனப்பூர்வமாகக் கீழ்ப்படிபவர்களுக்கு இழந்துபோன அனைத்தும் திரும்பக் கொடுக்கப்படும். உயிர்த்தெழுதலின் செயல்பாடு படிப்படியாகவே நிகழும் ஒரு காரியமாகும். இதன் பணிகள் முழுமையடைய ஆயிரவருட யுகமே தேவைப்படுகிறது. வெறும் ஜீவனுடைய உறக்கத்திலிருந்து உணர்வுள்ள நிலைக்கு எழுப்பப்படுவது, தற்போது நம்முடைய அனுபவத்தைப்போலவே தூக்கத்திலிருந்து எழுவதுபோல் ஒரு இமைப்பொழுதில் அல்லது குறுகிய நேரத்தில் நடைபெறும் காரியமாகவே இருக்கும். இதன் தொடர்ச்சியாக ஆயிரமாண்டு ஆட்சி முடியும் வேளையில், மனுக்குலம் ஆதாம் இழந்துபோன ஜீவனுக்கான முழு பரிமாணத்தையும் திரும்ப அடைந்திருக்கும். அவ்வேளையில் பரிபூரண ஜீவனுக்குக் குறைவாய் உள்ள எந்தவொரு நிலைமையும், மரண நிலையின் ஒரு பகுதியாக எண்ணப்படுவதால், இந்த அர்த்தத்தின் அடிப்படையில் அப்படிப்பட்ட நிலைமை தேவ ஆவியில் ஏவப்பட்டு எழுதின வேதவசனத்தில் இடம்பெறவில்லையெனினும், ஆயிரமாண்டு அரசாட்சியின் முழுமையாக திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதக் காலத்தில், மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரமாண்டுக் காலம் முடிவடையும்வரை உயிரடையவில்லை என்பதும் ஒருவிதத்தில் நிச்சயமான உண்மையே. இழந்துபோன பரிபூரண ஜீவனின் முழு பரிமாணத்தையும் மீண்டும் பெறமுடியாத நிலை).



பணியை நிறைவேற்றுவதற்கு ஆவிக்குரிய சுபாவம் எவ்வாறு அவசியமானதோ அவ்வாறே மனிதரிடையே வருங்கால பணிகளைச் செய்து முடிப்பதற்குப் பரிபூரண மனித சுபாவம் அவசியமாயிருக்கிறது. இந்தப் பரிபூரண ஜீவிகள் (முற்பிதாக்கள்) மனிதர்களால் காணப்படும்படியாக இருந்து அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்கள். அவர்கள் அடைந்திருக்கிற பரிபூரணத்தின் மகிமை மற்ற மனிதருக்கு நிலையான முன் உதாரணமாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருந்து, அதே பரிபூரணத்தை அடையும்படி பெருமுயற்சி எடுக்க அவர்களைத் தூண்டும். இந்த முற்பிதாக்கள் மனித நிலைமையிலுள்ள இராஜ்யத்தில் மனுக்குலத்தாரால் காணப்படுவார்கள் என்று இயேசு பூமியில் இருந்தபோது, அவரை மறுதலித்த அவிசுவாசிகளான யூதருக்குக் கூறின வார்த்தைகள் சாட்சி கூறுகிறது. “நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய இராஜ்யத்தில் காண்பீர்கள்.” ஆனால் ஆபிரகாமுடன் தம்மையோ (இயேசு) அல்லது அப்போஸ்தலர்களையோ மனிதக் கண்களுக்குத் தெரியும்படி காணமுடியும் என்று அவர் கூறவில்லை என்பதையும் கவனிக்கவும். உண்மையாகவே பூமிக்குரிய இராஜ்யத்தை மனிதர் கண்டு அதோடு இணக்கமாவார்கள். ஆனால் ஆவிக்குரிய இராஜ்யத்தின் பாகத்தை அவர்களால் காண இயலாது. ஆனால் இப்படிப்பட்ட மேலான கனத்தைப் புறக்கணித்ததற்காக சிலர் அக்காலத்தில் பெரும் வேதனையடைவார்கள்.

பரலோக இராஜ்யத்தின் இந்த இரண்டு பாகங்களும் எப்படி ஒருங்கிணைந்து செயல்படும் என்பதற்கான தெளிவான தகவல்கள் நமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனாலும் தேவன் தம் பிரதிநிதிகளாகிய மோசே, ஆரோன், யோசுவா மற்றும்சாட்சி தீர்க்கதரிசிகள் மூலமாக எவ்வாறு இஸ்ரயேல் ஜனங்களை வழிநடத்தினாரோ, அதுபோலவே நடக்கும் என்பது முன் உதாரணமாக சம்பவித்தவைகளைக்கொண்டு அறியலாம். ஆனால் இனிவரும் யுகத்தில் மரித்த அனைவரையும் உயிர்த்தெழுப்பி, கீழ்ப்படிபவர்களைப் பரிபூரண நிலைக்கு மீண்டும் திரும்பக்கொண்டுவருதலாகிய பணிகள் நடைபெறுவதில் நிழலைக்காட்டிலும் பலமடங்கு அதிக தெய்வீக வல்லமை வெளிப்படுவதைக் காணமுடியும். இப்பணியின் அடுத்தக்கட்டமாக பரிபூரண அரசாங்கத்தை மனிதரிடையே ஸ்தாபிப்பது அவசியமாகக்

காணப்படுவதால், பரிபூரண மனிதர்களின் கட்டுப்பாட்டில் அது இருக்கும்போது, ஜனங்களுக்குச் சரியான கட்டளைகளைக் கொடுத்து அவர்களை மேம்படுத்த முடியும். மனிதரிடையே அன்பையும் அதன் பல்வேறு வழிமுறைகளையும் ஒவ்வொரு நற்குணத்திற்கான சரியான போதனைக்கான வசதிகளையும் ஏற்பாடு செய்வதும் அவசியமாக்கப்படும். மனுக்குலத்தை மேம்படுத்தும் உறுதியும், நிச்சயமுமான வழிமுறைகளைக் கண்களால் காணக்கூடாத அதே இராஜ்யத்தின் ஆவிக்குரிய அங்கங்களின் வழிகாட்டுதலின் கீழ், முற்பிதாக்கள் செய்து முடிப்பார்கள். இந்த மேன்மையும் உன்னதமுமான பணியைச் செய்வதற்கே அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வுலகின் அதிபதியாகிய சாத்தான் கட்டப்பட்டு இவ்வுலக இராஜ்யங்கள் முழுவதுமாக அழிவுக்குள்ளானவுடன் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களாகிய முற்பிதாக்கள் இப்பணியைச் செய்ய ஆயத்தப்பட்டவர்களாக வருவார்கள். பரலோக இராஜ்யத்தின் பிரதிநிதிகளாக தேவனால் கனப்படுத்தப்பட்ட இவர்கள் எல்லா மனிதருடைய ஒத்துழைப்பையும், கனத்தையும் சீக்கிரத்தில் பெற்றுக்கொள்வார்கள்.

தேவராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தில் ஒரு ஸ்தானத்தை அடைவது, பரிபூரணமான மனித இருதயத்தின் எல்லா விருப்பங்களையும், ஆசைகளையும் நிறைவடையச் செய்யும். அது ஆரம்பமுதல் மகிமையையும், மனநிறைவையும் தரும். காலம் செல்லச்செல்ல அதின் ஆசீர்வாதப் பணிகள் வளர்ச்சியடைந்து மகிமையின்மேல் மகிமையடையும். ஆயிரவருட அரசாட்சி முடிவடையும்போது இந்த நேர்மையான உடன் வேலையாட்கள் (முற்பிதாக்கள்) வழியாக திரும்பக்கொடுத்தலாகிய மாபெரும் பணியைச் செய்வது, மகிமையடைந்த தலையும் சரீரமுமாகிய கிறிஸ்துவினால் நிறைவடையும். (மத். 25:46; வெளி. 20:9) இவ்வாறு முழு மனுக்குலமும் (திருத்தமுடியாத ஒருசிலரைத் தவிர) கறைதிரையற்றவர்களாக யேகோவா தேவனின் சமுகத்தில் அங்கீகரிக்கப்பட்டவர்களாய் நிற்பார்கள். இந்தப் பணி செய்வதற்கு உறுதுணையாய் இருந்தவர்கள் (முற்பிதாக்கள்), தங்கள் உடன் சகோதரர்களின் மத்தியிலும், தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் முன்பாகவும், தேவதூதர்களுக்கு முன்பாகவும் "நட்சத்திரங்களைப்போல என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்." (தானி. 12:3) இவர்கள் செய்த அன்பின் ஊழியமும் கிரியைகளும் இவர்களது



உடன்சகோதரர்களால் நன்றியோடு ஏற்கப்பட்டு, ஒருபோதும் மறக்கப்படாமல் நீடித்து நிலைக்கும். இவர்கள் நித்தியத்திற்கும் நினைவுகூரப்படுவார்கள். (சங். 112:6)

இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தைச் சுதந்தரிக்கப்போகிற பரிபூரண மனிதர்களின் மகிமை பெரியதாக இருக்கும்போது, பரலோகத்திற்குரிய மகிமையானது இதைக்காட்டிலும் அதிக மேன்மையுடையதாய் இருக்கும். முந்தினவர்கள் நட்சத்திரங்களைப்போல என்றென்றைக்கும் பிரகாசித்தாலும், பிந்தினவர்களோ வானமண்டலத்தின் ஒளியாகிய சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள். (தானி. 12:3) பரலோகத்தின் மேன்மையும், பூமியின் மேன்மையும் கிறிஸ்துவின் பாதத்தின்கீழ் வைக்கப்படும். வரும் நித்திய காலங்களில் கிறிஸ்துவில் வெளிப்படவிருக்கும் அளவற்ற மகிமையை மனித எண்ணங்களினால் அளவிடமுடியாது. (ரோமர் 8:18; எபே. 2:7–12)

இராஜ்யத்தின் இந்த இரண்டு பாகங்களின் மூலமாகவே ஆபிரகாமுக்குக்கொடுத்த வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படும். "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் "ஆசீர்வதிக்கப்படும்." உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப்போலவும் கடற்கரை மணலைப்போலவும் இருக்கும்." பூமிக்குரிய வித்தும் பரலோகத்திற்குரிய வித்தும், தேவனுடைய கருவிகளாயிருந்து உலகை ஆசீர்வதிக்கும் என்று ஆபிரகாமுக்கு முன்னுரைக்கப்பட்டது. இந்த இரண்டு பாகங்களின் வாக்குத்தத்தங்களும் தேவனால் ஆதியிலேயே திட்டமிடப்பட்டு தெளிவாகக் காண்பிக்கப்பட்டபோதிலும், ஆபிரகாம் பூமிக்குரியதை மட்டுமே கண்டிருந்தார். தேவன் மாம்ச இஸ்ரவேலரிலிருந்து ஆவிக்குரிய வகுப்பாரில் முதன்மையானவர்களாகிய அப்போஸ்தலர்களையும் மற்றும் சிலரையும் தெரிந்தெடுத்து ஆவிக்குரிய பாகத்திற்கான முதன்மையான ஆசீர்வாதத்தைப் பரலோக அழைப்பாக அந்தேசத்தார் அனைவருக்கும் முதலாவதாகக் கொடுத்தார். ஆனால் ஆபிரகாம் தனக்குக்கொடுத்த தலைமேல் தலைபெறும் உடன்படிக்கையில் இந்தப் பரம அழைப்பு இருப்பதைக் கண்டுணரவில்லை.

பவுல் அப்போஸ்தலன் ரோமர் 11:17–இல், ஆபிரகாமின்

உடன்படிக்கையை வேருக்கு ஒப்பாகவும், மாம்ச இஸ்ரவேலர் அந்த வேரிலிருந்து இயற்கையாக வளர்ந்த கிளைகள் என்றும், இந்த மாம்ச இஸ்ரவேலர் அவிசுவாசத்தினால் முறித்துப்போடப்பட்டதால், புறஜாதிகளிலிருந்து அநேகர் விசுவாசிகளாகி, அதில் ஒட்டவைக்கப்பட்டார்கள் என்றும் கூறுகிறார். பூமிக்குரியதும், பரலோகத்திற்குரியதுமான இரண்டு வித்துக்கள் வளர்ச்சியடைந்து உருவாகப்போகிற இராஜ்யத்தின் இரண்டு பாகங்கள், வாக்குத்தத்தத்தின் இரண்டு நிறைவேறுதலுக்கு சாட்சியாக இருக்கிறது. வேர் ஆகிய இந்த உடன்படிக்கையானது வேறுபட்டதும் தனித்தன்மை வாய்ந்ததுமான இரண்டு கிளைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. உயிர்த்தெழுதலில் இவை அதற்குரிய தனித்தன்மையில் இராஜ்யத்தின் வல்லமை நிறைந்த பரிபூரணமான மனித நிலைமையிலும், ஆவிக்குரிய நிலைமையிலும் கனிகளைப் பெற்றிருப்பார்கள். வளர்ச்சியடைவதில் முதலாவதாக மாம்சத்திற்குரிய (பூமிக்குரிய) ஆட்சியாளர்களும், அடுத்ததாக பரலோகத்திற்குரிய ஆட்சியாளர்களும் இருக்கிறார்கள். ஆனால் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது இராஜ்யத்தின் மகிமையிலும், மேன்மையிலும் ஆவிக்குரியவர்கள் முதலாவதாகவும், அடுத்ததாக மாம்சத்திற்குரியவர்களும் இருப்பார்கள். ஆகவே முந்தினோர் அநேகர் பிந்தினோராகவும், பிந்தினோர் அநேகர் முந்தினோராகவும் இருப்பார்கள். (மத்.19:30; லூக்.13:30)

ஸ்தேவான் குறிப்பிடுகிறதும் (அப்.7:5) இஸ்ரவேலர் நம்பியிருந்ததுமான, ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் பூமிக்குரியதாயிருந்தது அது நிலத்தைக் குறித்தது. "இதைச் சுதந்திரமாய் உனக்குத் தருவேன்" என்று தேவன் அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். மேலும் தேவன் ஆபிரகாமை நோக்கி, "உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன். ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால் உன் சந்ததியும் எண்ணப்படும். நீ எழுந்து தேசத்தின் நீளமும், அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி; உனக்கு அதைத் தருவேன்" என்றார்.



(ஆதி. 13:14–17) தேவன் ஆபிரகாமுக்கு, "இதிலே (இந் தேசத்தில்) ஓர் அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாததினால்" இவ்வாக்குத்தத்தம் இனிமேல்தான் நிறைவேற வேண்டியதாயிருக்கிறது என்று ஸ்தேவான் எடுத்துரைக்கிறார்.

பவுல் அப்போஸ்தலனும், ஆபிரகாம் மற்றும் முற்பிதாக்கள் அனைவரையும் குறித்து எழுதும்போது, ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் இன்னும் நிறைவேறவில்லை என்று ஸ்தேவான் கூறிய கருத்துக்களுக்கு இசைவாகவே எழுதியிருக்கிறார். மேலும் அவர் தொடர்ந்து எழுதுகிறார்: தலையும் சரீரமுமாகிய கிறிஸ்துவைப் பற்றின பரலோகத்திற்குரிய வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதற்கு முன்பாக பூமிக்குரிய வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படாது, நிறைவேறாது என்று உறுதியாக எடுத்துக் காண்பிக்கிறார். "இவர்கள் எல்லோரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் (நிறைவேறுதல்) விசுவாசத்தோடே மரித்தார்கள். அவர்கள் நம்மையல்லாமல் (தலையும், சரீரமுமாகிய கிறிஸ்து) பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருக்கிறார்." (எபி. 11:13, 39, 40) எல்லாருக்காகவும் தம் மாம்ச ஜீவனைப் பலியாக ஒப்புக்கொடுத்த நம்முடைய மீட்பரும், நம்மைச் சீர்பொருத்துபவருமான இயேசு ஆவிக்குரிய நிலைமையிலிருப்பதால், அவர் வழியாகவும், அவர் மூலமாக யாரெல்லாம் அவருடைய கருவிகளாக அல்லது பிரதிநிதிகளாக ஆவிக்குரிய வகுப்பாராக உன்னதத்திற்கு உயர்த்தப்படுவார்களோ அவர்கள் வழியாகவுமே எல்லா ஆசீர்வாதங்களும் வரவேண்டுமென்றும் மீண்டும் தெளிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. (ரோமர் 12:1; கலா. 3:29)

தேவராஜ்யத்தின் பூமிக்குரிய பாகம் இஸ்ரவேலருக்கே உரியது என்று நாம் இப்பொழுது பார்த்தோம். தேவதிட்டத்தின்படி, இவ்வுலகம் வருங்காலத்தில் ஆசீர்வதிக்கப்படும்பொழுது, இந்த தேசம் பெறவிருக்கும் மேன்மை, கனம், முக்கியத்துவத்தைப்பற்றிய உண்மையை அநேக தீர்க்கதரிசனங்களின் தொகுப்பு விளக்கிக் காண்பிக்கிறது. அவ்வாறு அவர்கள் மேன்மையை அடையும் வேளையில், விழுந்துபோன தாவீதின் கூடாரம் மீண்டும் நிலை நிறுத்தப்பட்டு எருசலேம் முழு உலகத்தின்

போற்றுதலுக்குள்ளாகும். திரும்பக்கொடுத்தலின் காலங்களில் அனைத்து தேசங்களின் மத்தியில் இஸ்ரயேல் தேசமே ஏற்படுத்தப்படவிருக்கும் புதிய ஒழுங்குமுறையின்படி முதலாவது இசைவாகும் என்று தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும் கூறுவதிலிருந்து தெளிவாகிறது; பூமிக்குரிய எருசலேம் ஆதியில் கொண்டிருந்த அரசாட்சிமுறைக்கு திரும்பவும் கட்டப்பட்டு மேன்மை தங்கின நகரமாகும் என்றும், மீண்டும் அவர்கள் முன்பு நியாயாதிபதிகளின் கீழும், அதிபதிகளின் கீழும் ஆரம்பத்தில் இருந்ததைப்போல் சீர்பொருத்தப்படுவார்கள் என்றும் தெளிவாகிறது. (ஏசா. 1:26; சங். 45:16; எரே. 30:18) இஸ்ரயேலர் தங்கள் முற்பிதாக்களையும், தீர்க்கதரிசிகளையும் முதலாவதாக ஏற்றுக்கொண்டு சந்தோஷமடைவார்கள் என்பதையும், அவர்கள் நீண்டகாலமாக நியாயப்பிரமாணங்களைக் கேட்டு அந்த ஒழுங்கிற்கு உட்பட்டிருந்ததால் இராஜ்யத்தின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியவும் அதன் பாதைகளை எளிதாகக்கண்டு ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகவும் இருப்பார்கள் என்பதையும் நாம் நியாயமாக எதிர்பார்க்கலாம் அல்லவா? இஸ்ரயேல் தேசமே முதலாவதாக அறிந்து உணர்ந்து அங்கீகரிக்கப்பட்டு, ஆசீர்வாதத்தைப் பெறும் என்றும், அந்த தேசத்தைக் குறித்து, “கர்த்தர் யூதாவின் கூடாரங்களை முதலில் இரட்சிப்பார்” என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரயேலில், “இழந்துபோன கோத்திரங்கள்” யார் யார் என்று கண்டுபிடிப்பது தொடர்பாக நாம் வாக்குவாதங்களில் ஈடுபடுவது அவசியமற்றது என்று நாம் கருதுகிறோம். இழந்துபோன கோத்திரத்தாரை தற்காலத்திலுள்ள சில நாகரீகமடைந்த தேசங்களிலிருந்து கண்டுபிடிக்க முடியுமென்று சில ஆதாரங்களைக் காண்பித்து, நிரூபிப்பதில் உண்மை இருந்தாலும் இருக்கலாம். அவற்றில் சில ஆதாரங்கள் ஏற்றுக்கொள்ள முடியாததாய் இருந்தாலும், மொத்தத்தில் அவை யூகத்தின் அடிப்படையில் வந்தவைகளே. ஆனாலும் சில நாகரீகமடைந்த தேசங்களே இழந்துபோன கோத்திரங்களின் சந்ததியார் என்று தெளிவாக வருங்காலங்களில் ஒருவேளை நிரூபிக்கப்பட்டாலும், இஸ்ரயேல் தேசம் தள்ளப்பட்டு யூதர், கிரேக்கர் என்ற வித்தியாசமின்றி அடிமைக்கும், சுயாதீனனுக்கும் வித்தியாசமின்றி, பரம அழைப்பின்கீழ் அனைவரும் சமமாகக் கருதப்படுவதால், அந்த நிரூபணத்தால் எந்தவித பலனும் விசேஷ



யூகத்தில் இல்லை. இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட கோத்திரங்களைப் பற்றிய உண்மைகள் தெளிவாக நிரூபணமாகுமேயானால், அது இந்த தேசத்தைக் குறித்த வாக்குத்தத்தங்களோடும், தீர்க்கதரிசனங்களோடும் இசைவாக பரிபூரணமாகப் பொருந்தும். இனி நிறைவேறக் காத்திருக்கிற அந்தத் தீர்க்கதரிசனங்கள் பூமிக்குரிய இராஜ்ய பாகத்தில் நிறைவேறித் தீரும்.

இஸ்ரயேலர் நீண்ட காலமாக நிறைவேறாமலிருக்கும் வாக்குத்தத்தங்களின்மேல் வைத்திருக்கிற நம்பிக்கையும் இயல்பான பற்றும், அவர்களது அனைத்து இயற்கையான எண்ணமும், இஸ்ரயேலை ஆளப்போகும் புதிய அதிபதிகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தை உண்டாக்கியிருக்கும். அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு ஓரளவு கீழ்ப்படிந்திருந்ததால் ஏற்பட்ட பழக்கவழக்கங்கள், ஏற்படப்போகும் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எளிதில் இசைந்துபோகக்கூடிய ஒரு வாய்ப்பாக இருக்கும்.

எருசலேம் முன்பு நிழலான இராஜ்யத்தின் தலைநகராக இருந்ததுபோல், மீண்டும் “அதுவே மகாராஜாவின் நகரமாக” தன் முந்தைய ஸ்தானத்தைச் சுதந்தரிக்கும். (சங். 48:2; மத். 5:35) ஒரு நகரம் என்பது ஓர் இராஜ்யத்தையோ அல்லது ஆட்சியையோ அடையாளமாகக் குறிக்கின்றது. அவ்வாறே புதிய எருசலேம் என்பது தேவனுடைய இராஜ்யத்தை அடையாளப்படுத்துகின்றது. இந்தப் புதிய ஆட்சியானது பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கிவருகிறது. அதன் ஆரம்பக் கட்டத்தில் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய ஆவிக்குரிய வகுப்பாரை மட்டுமே உடையதாக இருந்ததையும், அது படிப்படியாக மேலிருந்து இறங்கி பூமியை வந்தடைந்ததையும் யோவான் காட்சியில் கண்டார். அதாவது கர்த்தருடைய நாளில் தற்கால உலக சாம்ராஜ்யங்கள் தூள்தூளாக நொறுக்கப்பட்டு, தேவராஜ்யம் படிப்படியாக அதிகாரத்துக்கு வரும். ஏற்ற வேளையில் பூமிக்குரிய நிலைமையிலுள்ள இந்த நகரம் அல்லது இந்த அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, இதன் அங்கங்களாக முற்பிதாக்கள் இருப்பார்கள். இவ்விரண்டு நகரங்களும் (பரத்துக்குரிய, பூமிக்குரிய) வெவ்வேறான இரண்டு நகரங்களோ அல்லது அதிகாரங்களோ அல்ல. மாறாக ஆபிரகாம்

எதிர்பார்த்திருந்த "அஸ்திபாரங்களுள்ள ஒரு நகரமாகிய" பரலோக அரசாங்கமாகும். இந்த அரசாங்கம், மீட்பராகிய கிறிஸ்துவின் நீதியின் உறுதியான கன்மலையின்மேல் அஸ்திபாரமிடப்பட்டுள்ளது. அவர் கொடுத்த மனிதனின் மீட்கும் பொருளின் மதிப்பும், இந்த தெய்வீக நீதியும் மீட்கப்பட்டவர்களை இனி ஆக்கினைக்குள்ளாக தீர்க்காது. எப்படியெனில் பூர்வ பாவங்களை மன்னிக்கிறதற்கு மேலாக இரக்கம் பாராட்டும். (ரோமர் 8:31–34; 1 கொரி. 3:11)

சமாதானத்தின் நகரத்தின் மகிமை! அந்த மகா நகரத்தின் மதில்கள் அதில் பிரவேசிப்பவர்கள் அடையும் இரட்சிப்பு, பாதுகாப்பு, ஆசீர்வாதங்களைப்பற்றி குறிப்பிட்டுக் காண்பிக்கிறது. நீதியினால் அஸ்திபாரமிடப்பட்ட இது ஒருபோதும் அசையாதபடி தேவனால் வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பட்டது. தேவனுடைய மகிமையான நகரத்திலிருந்து புறப்படும் வெளிச்சத்தில், ஜனங்கள் பரிபூரணமடைந்து தேவனோடு இசைவாகும் வரை, பெரும்பாதையான பரிசுத்த வழியில் நடப்பார்கள். (வெளி. 21:24*)

ஆயிரவருட அரசாட்சியின் இறுதியில் மனுக்குலம் பரிபூரண நிலையை அடைந்து, தேவராஜ்யத்தின் அங்கங்களாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். அப்பொழுது தேவன் ஏதேனில் மனிதனுக்காக நியமித்த ஏற்பாட்டின்படி, பூமியை முழுவதும் ஆளுகின்ற இராஜாக்களாக, சுயாதீனர்களாக ஒவ்வொருவரும் இருப்பார்கள். இது யோவானால் உருவகமாகவும், தீர்க்கதரிசனமாகவும் தெளிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது (வெளி. 21:24–26). ஏனெனில் அவரது தரிசனத்தில் ஜனங்கள் ஒளியில் நடப்பதைக் கண்டதோடு மட்டுமல்லாமல், இராஜாக்கள் மகிமையயில் பிரவேசித்ததையும் கண்டார். ஆனாலும் தீட்டுப்பட்டவர்கள் ஒருவரும் அதில் நுழைய முடியாது.

---

*வெளி. 21:24–ஆம் வசனத்தில் இடம்பெற்றுள்ள, "இரட்சிக்கப்படுகிற ஜனங்கள், கனத்தையும்," ஆகிய வார்த்தைகள் மிகவும் நம்பத்தகுந்த பழங்கால வேதாகம மூலப்பிரதிகளில் இடம்பெறவில்லை. 26–ஆம் வசனத்தில், "கனத்தையும்" என்ற சொல் மூலப்பிரதிகளில் இடம் பெறவில்லை. நவீன கால ஆராய்ச்சியின்படி, "கனத்தையும்" என்ற வார்த்தை மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.



முழுவதும் பரீட்சிக்கப்படாதவர்கள் அந்த நகரத்தில் (இராஜ்யத்தில்) காணப்படுவதில்லை. அநீதியுள்ளவர்களும், ஏமாற்றுபவர்களும், அன்பின் கிரியை செய்யாதவர்களும் இராஜ்யத்தில் இடம்பெறமாட்டார்கள். நித்திய ஜீவன் பெறத் தகுதியுள்ளவர்கள் என்று ஆட்டுக்குட்டியானவரால் பெயரெழுதப்பட்டவர்களும், "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்று அழைக்கப்படுபவர்கள் மட்டுமே அந்த இராஜ்யத்தில் இருப்பார்கள்.

பழைய நகரமாகிய எருசலேம் திரும்பக் கட்டப்பட்டு ஒருவேளை அது உலகிற்குத் தலைநகரமாக ஏற்படுத்தப்பட்டாலும், எருசலேமையும் அது வருங்காலத்தில் அடையவிருக்கும் மகிமையையும் பற்றிக்கூறும் அநேகத் தீர்க்கதரிசனங்கள் மகாமேன்மையாக ஸ்தாபிக்கப்படவிருக்கின்ற தேவராஜ்யத்திற்கு அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

எருசலேமை அடையாளப்படுத்தி சொல்லப்பட்ட தேவராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தின் மகிமையை தீர்க்கதரிசிகள் புகழ்ந்து பாடும்போது "எருசலேமின் பாழான ஸ்தலங்களே, முழங்கி ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடுங்கள்; கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு ஆறுதல் செய்து எருசலேமை மீட்டுக்கொண்டார்." "இதோ எருசலேமைக் களிகூருதலாகவும் அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன்." "எருசலேமோடுகூட சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; அவளுடைய மகிமையின் பிரகாசத்தினால் மனமகிழ்ச்சியாகுங்கள். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ சமாதானத்தை ஒரு நதியைப்போலவும் ஜாதிகளின் மகிமையைப் புரண்டுவருகிற ஆற்றைப்போலவும் அவளிடமாய்ப் பாயும்படி செய்கிறேன்." "அக்காலத்தில் எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்; சகல ஜாதியாரும் அதனிடமாய்ச் சேருவார்கள்." "திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து: நாம் கர்த்தரின் பர்வதத்திற்கும், (இராஜ்யத்திற்கும்) யாக்கோபின் தேவனுடைய ஆலயத்திற்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதையில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும் (ஆவிக்குரிய பாகம்)

எருசலேமிலிருந்து (பூமிக்குரிய பாகம்) கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசா. 52:9; 65:18; 66:10–12; எரே. 3:17; ஏசா. 2:3)

இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட எதிர்காலத்திற்குரிய அருமையான வாக்குத்தத்தங்களை நினைவுகூரும்போது, அவை அந்த ஜனங்களிடத்தில் துல்லியமாக நிறைவேறித் தீரும் என்று எதிர்பார்க்கிறோம். இஸ்ரவேலர் நிஜமான ஒரு தேசத்தாராக இருப்பதோடுகூட, அவர்கள் அடையாளமான ஜனங்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஒருவகையில் பார்க்கும்பொழுது முழு உலக மனுக்குலத்திற்கும் நிழலாக அவர்கள் இருக்கிறார்கள். ஆயிரமாண்டு அரசாட்சியிலும் அதன்பின் வரவிருக்கின்ற யுகாயுகங்களிலும் உலகில் ஏற்படுத்தப்படவிருக்கிற புதிய உடன்படிக்கைக்கு கீழ்ப்படிவதினால் ஜீவனைக் கொடுக்கும், இஸ்ரவேலின் நியாயப்பிரமாண உடன்படிக்கை நிழலாக உள்ளது.

ஆசாரியனால் நிழலாகச் செய்யப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையின்படி பாவநிவர்த்தியின் இரத்தம், இஸ்ரவேல் தேசத்தாரின் பாவங்களை நீக்குவதற்கென்று உபயோகிக்கப்பட்டது. இதன் நிஜமாக ஆயிரமாண்டு ஆட்சியின்போது இராஜரீக ஆசாரியத்துவத்தின் புதிய உடன்படிக்கையின் இரத்தமானது முழு உலகத்தாரும் சுத்திகரிக்கப்படவும், ஆசீர்வதிக்கப்படவும் உபயோகிக்கப்படுகிறது. இவ்வாறாக அவர்களுடைய ஆசாரியத்துவம் கிறிஸ்துவுக்கு நிழலாக உள்ளது. மேலும் "முழு உலகமும்" "ஒவ்வொருவரும்" ஆசீர்வாதங்களைப் பெறும்படியாகவே நிஜமான பலி கிறிஸ்துவால் செலுத்தப்பட்டது. ஆசீர்வாதத்தைப் பெறப்போகின்ற இவர்களுக்கு நிழலாக இஸ்ரவேல் தேசம் உள்ளது.

கடந்த காலத்தைப்போலவே வருங்காலத்தில் வரவிருக்கின்ற ஆசீர்வாதங்களும், முதலாவது யூதர்களுக்கும் பிறகு புறஜாதிகளுக்கும் அளிக்கப்படும். தேவ தயவாகிய அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் காலத்தில் மட்டுமே அவர்கள் மற்றவர்களை முந்திக்கொள்வார்கள். நியாயப்பிரமாணத்தின்படி அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, அதனால் அடைந்த இயல்பான பலனானது



ஏற்றகாலத்தில் கிறிஸ்துவினிடத்தில் சேர்க்கும் நோக்கங்கொண்டது என்று நாம் முன்னரே கண்டோம். இயேசுவின் முதலாம் வருகை ஒருசில பித்தவர்களை மட்டுமே அவரிடத்தில் கொண்டு வந்திருந்தாலும், இரண்டாம் வருகை அவர்களை ஒரு ஜனங்களை கிறிஸ்துவண்டையில் கொண்டுவந்து சேர்க்கும். அவர்கள் அவருடைய பிள்ளைகளாக இருந்து தேசங்களிடையே அவருக்கு முதற்பலன்களாக இருப்பார்கள். தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாருக்கு உரிய வாக்குத்தத்தங்களைத் தவிர, இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த ஒவ்வொரு ஆசீர்வாதங்களும் உண்மையாகவே அவர்களில் நிறைவேறுவதோடு நில்லாமல், அவர்கள் முன்னடையாளமாய் இருந்த பூமியின் அனைத்து மனுக்குலத்திலும் நிறைவேறும். அந்த அரசாங்கத்தின்கீழ் இருந்து, "தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும், கனமும், சமாதானமும் உண்டாகும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை." (ரோமர் 2:6, 10–11)

இஸ்ரவேலருக்கு வருங்காலத்தில் தேவன் வைத்திருக்கின்ற நிச்சயமான வாக்குத்தத்தங்களையும், அவர்கள் தங்கள் அவிசுவாசத்தினால் இழந்து போனதையும் பவுல் அப்போஸ்தலன் நமது கவனத்திற்குக் கொண்டுவருகிறார். மேலும் என்ன தயை இன்னும் அவர்களுக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடுகிறார். அவர்கள் ஒரு தேசமாக இருந்து, தெய்வ தயவிலும், ஊழியத்திலும் முதன்மையான இடத்தைத் தேடினாலும், அவர்களது மனமேட்டிமை, பெருமை, அவிசுவாசம், கடின இருதயம் ஆகியவற்றினால் அவர்கள் தேடினதை அடையாமற்போனார்கள் என்று பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். இங்கு பவுல், ஆபிரகாமிலிருந்து பின்வந்த அனைத்து சந்ததிகளையும் குறிப்பிடாமல், இயேசுவின் முதலாம் வருகையின்போது ஜீவித்த இஸ்ரவேல் சந்ததியாரையே குறிப்பிடுகிறார். மேலும் சுவிசேஷ யுகம் முழுவதிலும் ஜீவித்த இஸ்ரவேல் சந்ததியார் அனைவருக்கும் பவுலின் இந்த வார்த்தைகள் பொருந்துகிறது. இந்தச் சுவிசேஷ யுகத்திலேயே பிரதானமான தேவதயவாகிய பரம அழைப்பும், இயேசுவோடு தெய்வீகச் சுபாவத்தில் பங்குபெற்று, உடன்சுதந்தரராகும் வாய்ப்பும் முன் வைக்கப்பட்டிருந்தது. இஸ்ரவேலர் தேவஜனங்களாயிருந்து இந்த தயவை

அறிந்துணரவும், பற்றிக்கொள்ளவும் தவறிவிட்டனர். தேவன் சுவிசேஷத்தின் மூலமாக புறஜாதிகளிடத்திலிருந்து அநேகரை அழைத்தபோதிலும், இவர்கள் மாம்ச இஸ்ரவேலரைப் போலவே பரலோகத்திற்குரிய பரிசாகிய தெய்வீகச் சுபாவத்தை அடையத் தவறுவார்கள். இருந்தபோதிலும் அழைக்கப்பட்டவர்களில் மீதமாயிருக்கிற ஒருசிலராகிய சிறு மந்தை வகுப்பாரே அழைப்புக்குச் செவிசாய்த்து, சுயத்தை தியாகம் செய்து கீழ்ப்படிதலினால், தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ளுகிறார்கள். இவ்வாறாக இஸ்ரவேலரும், பெயர் கிறிஸ்தவ சபைகளும் அடையத் தவறினதை, தெரிந்து கொள்ளப்பட்ட உண்மையுள்ள வகுப்பாராகிய "கிறிஸ்துவின் சரீரத்திற்கு" அந்த ஆசீர்வாதம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதலின் மூலமாகவும், சத்தியத்தை விசுவாசிக்குதலினாலும், பிதாவாகிய தேவனது முன்னறிவின்படியே அவர் முன்குறித்த அந்த வகுப்பாருக்குக் கொடுக்கப்படுகிறது. (2 தெச. 2:13; 1 பேது. 1:2)

மேசியாவை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து, தாங்கள் பெற்றிருந்த எல்லா விசேஷித்த தயவையும் இழந்தபோதிலும், அவர்கள் இதினிமித்தம் தேவ தயவிலிருந்து முற்றிலுமாக அறுப்புண்டு போகவில்லை என்று பவுல் அப்போஸ்தலன் காண்பிக்கிறார். ஏனெனில் அழைப்பு கொடுக்கப்பட்ட காலத்திலேயே அவர்கள் விசுவாசத்தை ஏற்றுக் கொண்டிருந்திருந்தால், கிறிஸ்துவுடன் ஒட்ட வைக்கப்படுவதோடு, மற்ற மனுக்குலம் அனுபவிக்கும் ஆவிக்குரிய தயவுகளை பெறக்கூடிய சிலாக்கியம் இன்னும் அவர்களுக்கு இருந்தது. இஸ்ரவேலர் அவிசுவாசத்தைவிட்டு, விசுவாசத்திற்குள் வருவார்களேயானால் அவர்களைக் காட்டு ஒலிவ மரக்கிளைகளை ஒட்ட வைப்பதுபோல ஒட்டவைப்பதற்கு, தேவன் வல்லமை உள்ளவராக இருக்கிறார் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். (ரோமர் 11:23, 24)

எல்லாவற்றிற்கும் மேலாக, இஸ்ரவேலர்கள் தேவராஜ்யத்தில், அவர்கள் தேடின பிரதானமான இடத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதத்தை இழந்த போதிலும், அந்த ஜனங்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள மாபெரும் வாக்குத்தத்தங்கள் இன்னும் நிறைவேற



வேண்டியதாயிருக்கிறது என்று பவுல் காரணகாரியத்தோடு விவரிக்கிறார். தேவனுடைய ஈவுகள், அழைப்புகள், உடன்படிக்கைகள், வாக்குத்தத்தங்கள் நிறைவேறாமல் போகாது. உலகத்தோற்றமுதல் முடிவுவரை தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முன் அறிந்திருக்கிறவர். இஸ்ரவேலர் மேசியாவை மறுதலித்துப் புறக்கணிப்பார்கள் என்று அவருக்குத் தெரியும். இதை அறிந்திருந்தும் அவர்களுக்குத் தெளிவான வாக்குத்தத்தங்கள் கொடுத்திருப்பதால் இஸ்ரவேலை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று பயன்படுத்தவிருக்கிறார் என்பதும், "இஸ்ரவேலர் தேடுகிறதை அடையாதபோதிலும்" இப்பூமியை ஆசீர்வதிக்க கர்த்தரது கருவியாக அவர்களை உபயோகிப்பார் என்பதும் நிச்சயமாகிறது. இஸ்ரவேலருக்குத் தேவன் கொடுத்த வாக்குத்தத்த உடன்படிக்கைகள் எப்படிப்பட்ட சுபாவத்திற்குரியது? அவர்கள் பரலோகத்திற்குரிய வித்தாக அழைக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது பூமிக்குரிய வித்தாகவா? அவர்கள் உயர்ந்த ஸ்தானத்தை சுதந்தரித்துக்கொள்வார்களா? அல்லது தாழ்ந்த ஊழியத்தையா? என்று வாக்குத்தத்தத்தில் வரையறுத்து அறிந்துகொள்ளாதவாறு இருந்ததாக பவுல் கூறுகிறார். ஆவிக்குரிய உன்னதமான கிருபையை ஏற்றகாலம் வரும்வரை, தேவன் இரகசியமாக வைத்திருக்கிறார். ஆவிக்குரிய வாய்ப்புகளில் முதலாவது வாய்ப்பு அவர்களுக்கு அளித்திருந்தபோதிலும், பூமிக்குரிய கிருபை மட்டுமே அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்விதமாக அவர்களுக்கு உடன்படிக்கை பண்ணியிருந்ததற்கும் அதிகமான ஆவிக்குரிய வாய்ப்பையும் முதலாவதாக அவர்களுக்கு அளித்திருந்தார். ஒரே வார்த்தையில் கூறவேண்டுமானால் பரத்திற்குரிய வாக்குத்தத்தங்கள் பூமிக்குரியவைகளில் மறைந்திருந்தன. மறைவாயிருந்த தயவை தேவன் அவர்களுக்கு முதலாவது அறிவித்ததை இஸ்ரவேலர்கள் அறியாமையினால் தள்ளிப்போட்டதினால், வாக்குத்தத்தத்தின் மற்ற பாகங்கள் முறிந்துவிடவோ, மதிப்பிழந்துவிடவோ இல்லையென்று அப்போஸ்தலன் கூறுகிறார். யூதர்களிடத்திலிருந்தும், புறஜாதிகளிடத்திலிருந்தும் கிறிஸ்துவின் மணவாட்டி தெரிந்துகொள்ளப்படும் காலத்தில், இஸ்ரவேல் தேசம் தள்ளிவிடப்பட்டிருந்த போதிலும், ஏற்றவேளை வரும்போது மீட்பராகிய இயேசு தலையும், சரீரமும் சேர்ந்து முழுமையடைந்தவுடன் மாம்ச இஸ்ரவேலருக்கு தெய்வீக கிருபை மீண்டும் திரும்ப அளிக்கப்படும்.

தன்னையும் பரிசுத்தப்படுத்திக்கொள்கிறான். இது பரிசுத்தமான நோக்கமென்றும், நிஜமான, முழுமையான பரிசுத்தமென்றும் எண்ணப்படுகிறது என்பதை நாம் ஏற்கெனவே காண்பித்திருக்கிறோம். நாம் மாம்சத்தின்படி நடவாமல், ஆவிக்கேற்றபடி நடக்கும்பொழுது, கிறிஸ்துவினால் சாட்டப்பட்ட இந்த பரிசுத்தமானது, நமது குறைகளையும், தவிர்க்க முடியாத பலவீனங்களையும் ஈடுகட்டுகிறது.

தேவனுடைய இராஜ்யத்தின் இரண்டு பாகங்களில் எதில் பிரவேசித்தாலும் பரிசுத்தம், உண்மை, தேவனுக்கென்று முழுமையாக ஒப்புக்கொடுத்தல் ஆகியவற்றைக் கடைபிடித்தல் அவசியம் என்பதை மறந்துவிடக்கூடாது. கிறிஸ்துவின் கீழ் பூமிக்குரிய இராஜ்யத்தை சுதந்தரிக்கப்போகிற முற்பிதாக்களுக்கும் அப்படியே இருந்தது. அவர்கள் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்தார்கள். பலவீனத்தால் தவறு செய்யும்போதும், குற்றம் செய்தபோதும் மனம் வருந்தி துக்கமடைந்தார்கள். சுவிசேஷ யுகத்திலுள்ள விசுவாசிகளும் அவ்வாறே மனம் வருந்தி துயரப்பட்டார்கள். ஆயிரவருட அரசாட்சியிலும் தேவ ஆவியாகிய சத்திய ஆவி மாம்சமான யாவர்மேலும் ஊற்றப்படும்போதும் அப்படியே எல்லோரிடத்திலும் நடக்கும். அந்த யுகத்தில் ஜெயங்கொள்ளுகிறவர்கள் தேவ ஏற்பாட்டின்படி உலகத்தோற்றத்திற்கு முன்பே அவர்களுக்காக தயார்படுத்தப்பட்டிருக்கிற இராஜ்யமாகிய நகருக்குள் பிரவேசிக்க வேண்டுமானால் ஜீவியத்திலும், இருதயத்திலும் பரிசுத்தமுள்ளவர்களாக மாறுவதற்கு உண்மையாக உழைப்பது அவசியமாகிறது. இழந்துபோன ஆளுகையை திரும்பக் கொடுத்தல் இவ்வாறே நடைபெறுகிறது.

## இருப்புக்கோல் ஆட்சி

கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சி ஆரம்பிக்கும்பொழுது, அதன் ஆட்சியால் ஒவ்வொருவரும், மிகவும் பிரியப்பட்டு மகிழ்ந்திருப்பர் என்று அநேகர் தவறாக எண்ணுகிறார்கள். ஆனால் நடைமுறையில் அப்படியிராது. அதன் ஒழுங்குகள் முந்தைய அரசாங்கங்களைக் காட்டிலும் மிகவும் கட்டாயமானவைகளாகவும், துல்லியமானவைகளாகவும் இருக்கும். மேலும் ஜனங்களின் சுயாதீனம் குறிப்பிடத்தக்க அளவு கட்டுப்படுத்தப்படுவதால், அநேகரிடத்தில் கசப்புணர்வு ஏற்பட்டு, அதிக சுயாதீனம் வேண்டி



போராட்டத்திற்கு வழிவகுக்கும். மற்றவர்களை வஞ்சிப்பதற்கும், காரியங்களைத் தவறாகக் காண்பிக்கவும், தந்திரமாய் ஜெயிக்கவும், ஏமாற்றவும் உபயோகப்படுகிற சுயாதீனங்கள் அனைத்தும் முழுமையாக நீக்கப்படும். உண்பதிலும், குடிப்பதிலும் அல்லது வேறு எந்த வகையிலாவது நன்னடக்கையைக் கெடுப்பதிலும், தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்ளவோ, பிறரைக் கெடுக்கவோ சுயாதீனம் ஒருவருக்கும் இராது. எவ்வகையிலும் கெடுதல் செய்யும் சுயாதீனம் அல்லது உரிமை எவருக்கும் வழங்கப்படாது. தேவனது புத்திரர் என்கிற உண்மையும், மகிமையுமுள்ள ஒரே சுயாதீனமே அனைவருக்கும் அளிக்கப்பட்டு, தங்களுக்கும், பிறருக்கும் எல்லாவிதத்திலும் நன்மை செய்யும் சுயாதீனமே கொடுக்கப்படும். ஆனால் பரிசுத்த இராஜ்யத்தில் தீங்கு செய்யவோ கேடு செய்யவோ அனுமதிக்கப்படமாட்டார்கள். (ஏசா. 11:9; ரோ. 8:21) அந்த ஆளுகையானது கடுமையானதாக அநேகருக்கும் இருக்கும். ஜனங்களது முந்தைய பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் ஒழிக்கப்பட்டு, தற்கால அமைப்புகள் உருவாக்கின போலி பழக்கவழக்கங்களும், சுயாதீனத்தைக்குறித்த போலிக்கொள்கைகளும் ஒழிக்கப்படும். இராஜ்யத்தின் அந்த ஸ்திரத்தன்மையாலும், பலத்தினாலும் அது இருப்புக்கோல் ஆட்சி என்று உருவகமாக அழைக்கப்படுகிறது. "அவர்களை அவர் இருப்புக்கோலால் அரசாளுவார்." (வெளி. 2:26, 27; சங். 2:8–12 மற்றும் 49:14–ஐ ஒப்பிட்டுப்பார்க்கவும்) இப்படியாக, "நான் நியாயத்தை நூலும், நீதியை தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தை கல்மழை (நீதியான நியாயத்தீர்ப்பு) அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் (சத்தியம்) அடித்துக் கொண்டுபோகும்." மறைபொருள்கள் அனைத்தும் வெளியாக்கப்படும். (ஏசா. 28:17; மத். 10:26)

பரிபூரணமும் நேர்மையுமான இந்த ஆட்சிக்கு எதிராக அநேகர் கலகக்காரர்களாக மாறும் எண்ணமுடையவர்களாக இருப்பார்கள். ஏனெனில், இவர்கள் கடந்த காலத்தில் இப்பொல்லாத பிரபஞ்சத்தின் அதிபதியின் ஆட்சின் கீழ், தங்கள் சக மனிதர்கள்மேல் ஆணவத்தோடு அதிகாரம் செலுத்தியவர்கள். பிறரது உழைப்பிலும், வாதியத்திலும் ஜீவித்து, அதற்கு ஈடாக ஊழியம் செய்யாதவர்கள். சுயநலவாதிகளாகவும் தற்பெருமையையும் நாடும் மனப்பாங்கிலிருந்து படிப்படியாக இராஜ்யத்தின் நீதி, நியாயம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றைக் கற்றுக்கொள்வதற்கு

முன்பாக, அநேகர் கடுமையான, அநேக அடிகளைப் பெறவேண்டியதிருக்கும். (சங். 89:32; லூக். 12:47, 48) இந்த இராஜ்யத்தின் பாடங்கள் முதலாவது உயிரோடிருக்கும் சந்ததியாருக்கு வரும். அந்தக்காலம் மிகவும் சமீபித்திருக்கிறது (யாக். 5–ஆம் அதிகாரம்).

ஜீவாதிபதி தமது இரும்புக்கோல் ஆட்சியின் மூலமாக, நீதியும், சமத்துவமும் நிறைந்த சட்டங்களை நடைமுறைப்படுத்தும்பொழுது திரளான ஜனங்கள்: "நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" என்பதைக் கற்றுக்கொள்வார்கள். முடிவில் அனைவரும் தேவனுடைய திட்டங்களும், நியாயப்பிரமாணங்களுமே சிறந்ததும், நன்மையானதும் என்று கற்றறிந்து, முடிவாக நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கக் கற்றுக்கொள்வார்கள். (சங். 45:7; எபி. 1:9) அந்த ஆட்சியின்கீழ் நீதியை நேசிக்கக் கற்றுக்கொள்ளாதவர்கள் நித்திய ஜீவன் பெறத் தகுதியற்றவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டு ஜனத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவார்கள். (அப். 3:23; வெளி. 20:9; சங். 11:5–7)

## நித்திய இராஜ்யம்

"கர்த்தர் பூமியின் மீதெங்கும் இராஜாவாயிருப்பார்." (சக. 14:9) கிறிஸ்துவின் கரங்களால் ஆயிரவருட அரசாட்சியில் யெகோவா தேவனால் ஸ்தாபிக்கப்பட இருக்கும் இராஜ்யம் யெகோவாவின் இராஜ்யமாகும். ஆனாலும் அது அவருடைய பிரதிநிதியாகிய கிறிஸ்துவின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் இருக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏற்பட்ட கலவரத்திற்குப்பின் தென் பகுதியிலுள்ள நாடுகள் எவ்வாறு அரசாங்கத்தால் நடத்தப்பட்டதோ, அவ்வாறே இவ்வுலகம் கிறிஸ்துவால் ஆளப்படும். தென்பகுதி நாடுகள் தங்கள் ஆட்சியாளர்களைத் தாங்களே தெரிந்தெடுத்து, சுயமாக அரசாளும் அதிகாரத்தை அவர்களுக்கே கொடுத்துவிட்டால், அமெரிக்க ஐக்கிய அரசாட்சிக்குட்பட்ட சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கமாட்டார்கள். ஆகையால், அந்நாடுகளை ஆளுவதற்கு ஐக்கிய நாடுகளின் அரசாங்கமே அதிகாரிகளுக்கு முழு அதிகாரத்தையும் அளித்து நியமித்து, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மத்திய அரசாங்கத்தோடு முழு இணக்கமாகும்படி செய்ய அனுப்பப்பட்டார்கள். இவ்வாறாக பூமியின்மேல் கிறிஸ்துவின்



விசேஷித்த ஆளுகை குறிப்பிட்ட சில காலங்களுக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக இருந்து, அந்த நோக்கம் நிறைவேறினவுடன் முடிவுக்கு வரும். மனிதன் யெகோவாவின் சட்டங்களுக்கு இசைவாக சுய ஆட்சி போன்ற தேவன் கொடுத்த உரிமைகளை தனது கலகத்தினால் இழந்து போனான். தேவன் கிறிஸ்துவின் மூலமாக அனைத்து உரிமைகளையும் திரும்ப மீட்டு, மனிதன் தன் ஆதி நிலைமையை அடையும்படி மாத்திரமல்ல இப்பூமிக்கு இராஜாவாக இருக்கும் உரிமையையும் பெற்றுத்தந்தார். ஆனால் மனிதனைத் திரும்பவும் முந்தின சீருக்குக்கொண்டுவருவதற்கு, தேவன் ஏற்பாடு செய்திருக்கிற தற்காலத்தில் கிடைக்கும் அனுபவங்கள் மூலம் பாடம் கற்று, தன் மீட்புக்காக அவரவருடைய சுய முயற்சி தேவை என்பதையும், இதனை நிறைவேற்றுவதற்கு ஒரு பரிபூரணமும், பலமும் உள்ள அரசாங்கம் தேவைப்படுகிறது. கிறிஸ்து தம் ஜீவனைக் கொடுத்து உரிமையைப் பெற்றுத் தந்ததற்கு ஈடாக மனிதனைச் சீர்ப்படுத்தும் பணியை நிறைவேற்றும் கனம் அவருக்கு அளிக்கப்படுகிறது. "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது." அவரை அங்கீகரிக்காதவர்களும், கனப்படுத்தாதவர்களும் அவருக்குக் கீழ்ப்படியாதவர்களும் இல்லாமற்போகும்வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது. அவர் மனிதர்களை மறுசீரமைத்து ஒழுங்குபடுத்தும் ஊழியம் முடிவடைந்தபின், பிதாவாயிருக்கிற தேவனிடத்தில் இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். மனிதராகிய கிறிஸ்து இயேசு மத்தியஸ்தம் செய்து ஒப்புரவாகும் பணி முழுமையாக முடிவடைந்த பிறகு, ஆதியில் இருந்தவாறே, மனிதர்கள் யெகோவா தேவனோடு நேரடித்தொடர்பு கொண்டிருப்பார்கள். (1 கொரி. 15:25–28)

பிதாவினிடத்தில் இராஜ்யம் ஒப்புக்கொடுக்கப்பட்ட பிறகும், தேவராஜ்யமாகவே அது நீடிக்கும். அதே கட்டளைகளே தொடர்ந்து இருக்கும். முழு மனுக்குலமும் பரிபூரணமாக சீர்பொருந்தினவுடனே ஆவியிலும், எழுத்திலும் பரிபூரணமாகக் கீழ்ப்படியும் மனநிலையை அடைந்திருப்பார்கள். ஆனால் இப்பொழுதோ தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சி செய்தல் அல்லது ஆவியில் கீழ்ப்படிதல் மட்டுமே மனிதனால் கடைப்பிடிக்கக் கூடியதாயிருக்கிறது. ஏனெனில் அந்த பூரணபிரமாணத்தின் முழு எழுத்தானது, உடனே

அவர்களை மரணத்தண்டனைக்கு உள்ளாக்குகிறது. (2 கொரி. 3:6) தற்பொழுது கிறிஸ்துவின் மீட்கும்பொருளின் மூலமாக மட்டுமே நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம்.

உண்மையான பரிபூரண நிலையை அடையும் வரைக்கும், "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும்." (எபி.10:31) இப்பொழுதும் உண்மையான பரிபூரணத்தை அடையும்வரைக்கும் துல்லியமான நீதி நியாயத்தின் முன்பாக நிற்க ஒருவனாலும் முடியாது. ஆகையால் கிறிஸ்துவின் புண்ணியம் மற்றும் தியாக பலியின் கீழ் இலவசமாய் ஏற்பாடு செய்து வைத்திருக்கின்ற இரக்கங்கள் அனைவருக்கும் தேவை. ஆனால் கிறிஸ்து தம் பிதாவினிடத்தில் இராஜ்யத்தை ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை அவருக்கு முன்பாக குற்றமற்றவர்களாகவும், யேகோவா தேவனின் பூரணபிரமாணத்திற்குக் கீழாக நித்திய ஆசீர்வாதங்களைச் சந்தோஷமாய் அனுபவிக்கும் தகுதியையும், ஆற்றலையும் உடையவர்களாக இருப்பர். அப்பொழுது பயங்கள் அனைத்தும் அகற்றப்பட்டிருக்கும். யேகோவா தேவனும் அவருடைய சீர்படுத்தப்பட்ட சிருஷ்டிகளும், ஆதியில் இருந்ததுபோல் பரிபூரண இசைவுடன் இருப்பார்கள்.

ஆயிரவருட அரசாட்சியின் முடிவில், பிதாவினிடத்தில் கிறிஸ்து பூமிக்குரிய ஆளுகையை ஒப்படைக்கும்போது, ஆதியிலேயே இந்தக் கனத்திற்கு முன் குறிக்கப்பட்டிருந்த பிதாவின் பிரதிநிதிகளாகிய மனுக்குலத்திற்கே மீண்டும் அதை ஒப்புக்கொடுப்பார். (1 கொரி. 15:24; மத். 25:34) இவ்விதமாக தேவராஜ்யம் என்றென்றைக்கும் நீடித்து நிலைக்கும். நமது கர்த்தரும் அவ்விதமாகவே கூறுவதைக் காண்போம்: "அப்பொழுது இராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: (ஆயிரவருட அரசாட்சியின்போது கீழ்ப்படிதலினாலும், இசைவாக இருந்து, தயவு பெற்றவர்களைப்பார்த்து), வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே (என் பிதா உங்களை ஆசீர்வதிக்க திட்டம் பண்ணியிருக்கிறார்) உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்பார்."

மனிதனுக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட இந்தப் பூமிக்குரிய



இராஜ்யத்தையும், அதன் மேன்மையையும், கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்குமென்று, அவர்களது மகிமைக்காக உலகத்தோற்றத்துக்கு முன்பே ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கின்ற, அதைக்காட்டிலும் மேலான இராஜ்யத்தோடு சேர்த்துப் பார்த்துக் குழப்பமடையக் கூடாது. (1 கொரி. 2:7) நாம் உலகத் தோற்றத்துக்கு முன்பே கிறிஸ்துவினால் இதற்கென்றே தெரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றோம். முன்னரே எடுத்துரைத்தவாறு, இப்பூமியின் காரியங்களில் கிறிஸ்து தலையிட்டு, உலக முடிவுவரை விசேஷமாக ஆட்சி செய்தபோதிலும், அதன்பின்பு கிறிஸ்துவின் மகிமை, ஆதிக்கம், வல்லமை இப்பூமியின்மேல் முடிவுக்கு வருமென்று நாம் தீர்மானித்துவிடக்கூடாது. யேகோவா தேவனின் தயையினால் கிறிஸ்து அவரது வலதுபாரிசத்தில் தெய்வீக மகிமை, வல்லமையோடு வீற்றிருந்து என்றென்றைக்கும் இணைந்து இருப்பார். அவருடைய மணவாட்டியும், உடன்சுதந்தரருமானவர்கள் மென்மேலும் பெருகுகின்ற அவருடைய மகிமையில் என்றென்றைக்கும் பங்குபெறுவார்கள். யேகோவாவினால் உன்னதத்திற்கு உயர்த்தப்பட்ட அவரது பிரதிநிதியின் (இயேசு) வல்லமையினால் மற்ற உலகங்களில் என்னென்ன அதிசயங்கள் நடைபெறும்? என்று நாம் ஆராயாமல், தெய்வீக வல்லமையின் எல்லையில்லாத, நித்தியமான தன்மையை மட்டும் நினைவுகூருவோமாக.

உண்மையாகவே இராஜ்யத்தின் எந்தப் பாகத்தின்மேல் நமது விருப்பங்கள் மையங்கொண்டிருந்தாலும், அது "எல்லா தேசங்களும் விரும்புகிறதாய் இருக்கிறது." அதன் கீழ் எல்லாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆதலால்தான், அந்த இராஜ்யம் ஸ்தாபிக்கப்படவிருக்கும் காலத்திற்காக அனைவரும் வாஞ்சையோடு காத்திருக்கலாம். மேலும், "உமது இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று எல்லோரும் ஜெபிக்கலாம். தீமையை ஒழித்து, எல்லா தேசங்களையும் குணப்படுத்தி ஆசீர்வதிக்கும் இராஜ்யமாகிய தேவனுடைய புத்திரர்கள் வெளிப்படுவதற்கு, சர்வ சிருஷ்டியும் அறியாமையில் ஏங்காய்த் தவித்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்கிறது. (ரோமர் 8:19; 18:20)

* * * *

## அத்தியாயம் 15

## யேகோவாவின் நாள்

"யேகோவாவின் நாள்" – "பழிவாங்கும் நாள்" – "கோபத்தின் நாள்" – மகா உபத்திரவக்காலம் அதன் காரணம் – வேதாகமத்தில் அதைக்குறித்த சாட்சியம் – அதன் அக்கினியும் புசலும், அது அசைக்கப்பட்டு உருகுதல், அடையாளங்கள் என்று காண்பித்தல் – தானியேலின் சாட்சி – வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதிய ஆசிரியரின் சாட்சி – தற்கால சூழ்நிலை மற்றும் எதிர்கால தோற்றம் பற்றிய எதிரான வகுப்பாராகிய முதலாளி மற்றும் தொழிலாளியின் பார்வை – தோல்வியில் முடியும் ஒரு தீர்வு – ஏற்றவேளையில் திரை நீக்கப்பட்டு வெளிச்சம் அருளப்பட்டது – இதற்கான ஆதாரங்கள் – ஆபத்துக் காலத்தில் பரிசுத்தவான்களின் நிலைமையும் அது குறித்த அவர்களது சரியான அணுகுமுறையும்.

"யேகோவாவின் நாள்" என்பது இப்பூமியில் தேவனுடைய இராஜ்யம் கிறிஸ்துவின்கீழ் படிப்படியாக ஸ்தாபிக்கப்படும் காலத்தின் பெயராகும். அந்த சமயத்தில் இவ்வுலகத்தின் இராஜ்யங்கள் அகற்றப்பட்டு, மனிதர்களின்மேல் சாத்தான் கொண்டுள்ள வல்லமையும், அதிகாரமும் கட்டப்படும் வேலை நடைபெறும். வேதாகமத்தில் இந்நாளைக்குறித்து அநேக இடங்களில், மனுக்குலத்திற்கு ஆபத்து, துன்பம், மற்றும் நெருக்கடியும் ஏற்படுகின்ற இருளான நாள் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட அநேக பிரமாண்டமான மாற்றங்கள் மாபெரும் விளைவுகளை ஏற்படுத்தி, துன்பத்தினை உண்டாக்கும் என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஒவ்வொரு யுகத்திலும் சிறு புரட்சிகள் ஏற்பட்டு உபத்திரவத்தை வருவித்தன. ஆனால் இது மற்ற யுகங்களில் நடந்ததைக் காட்டிலும் மாபெரும் உபத்திரவத்தை உண்டாக்கி "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவக் காலமாக" அது இருக்கும். (தானி. 12:1; மத்.24:21, 22)

கிறிஸ்து இராஜரீக அதிகாரத்தோடும், வல்லமையோடும் யேகோவா தேவனின் பிரதிநிதியாக வீற்றிருந்து, அந்த உபத்திரவக்காலத்தின்போது



அனைத்து நடவடிக்கைகளையும் நிர்வகித்து வந்தபோதிலும், அவர் அக்காலத்தில் சமாதானப் பிரபுவாயிருந்து அனைவரையும் ஆசீர்வதிக்காமல் அனைத்தையும் ஜெயித்து, தமக்குக் கீழ்ப்படுத்தும் யேகோவாவின் தளபதியாகவே இருப்பதால் அது "யேகோவாவின் நாள்" என்று அழைக்கப்படுகிறது. இதற்கிடையே தவறான மற்றும் அபூரணமான கொள்கைகள் முறைமைகள் அகற்றப்பட்டு, ஒழிந்துபோகும்போது, புதிய இராஜாவின் கொடி எழும்புவதன் மூலம், அவர் இராஜாதி இராஜாவாக அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவார். கிறிஸ்துவின் ஆளுகை இவ்வாறாக, யேகோவாவின் கிரியையாக செயல்படுத்தப்படுவதை தீர்க்கதரிசிகளும் முன்னுரைத்துள்ளனர். "ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்." (சங். 2:8) "அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்." (தானி. 2:44) நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்... இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்... சகல இராஜ்யங்களும் அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவம் கொடுக்கப்பட்டது. (தானி.7:9, 13, 14, 27) இவ்வசனத்திற்கு இசைவாகவே பவுல் அப்போஸ்தலனும் கூறுகிறார் – கிறிஸ்து தம் ஆளுகையின் நோக்கத்தை நிறைவேற்றின பிறகு, "குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் (பிதாவுக்கு) கீழ்ப்பட்டிருப்பார். (1 கொரி. 15:28)

இந்தக்காலம், "நம்முடைய தேவனின் நீதியைச் சரிக்கட்டும் நாள்" என்றும், "கோபத்தின் நாள்" என்றும் அழைக்கப்படுகிறது. (ஏசா. 61:2; 63:1–4; சங். 110:5) ஆனாலும் கோபம் என்னும் வார்த்தை வன்மத்தைக் குறிப்பதாக எண்ணுவது தவறு. தேவன் சில கட்டளைகளை ஏற்படுத்தி, அதற்கு இசைவாகவே செயல்பட்டு வருகிறார். இவைகளுக்கு எதிராக ஏதாவது காரணத்திற்காக எதிர்த்து வருபவர்கள், தங்களது சொந்த நடக்கையினால் தேவ கோபத்திற்கு அல்லது தண்டனைக்கு ஆளாவார்கள். தேவனுடைய ஆலோசனையை ஒருசிலரைத் தவிர மனுக்குலம் முழுவதும் தொடர்ந்து நிராகரித்தே வந்திருக்கிறது. நாம் முன்பு காண்பித்தவாறு அவர்கள் தங்கள் சொந்த வழியைத் தெரிந்துகொண்டு,

அவரையும், அவரது ஆலோசனைகளையும் அவர்கள் புறக்கணிக்க தேவன் விட்டுவிட்டார். (ரோமர் 1:28) தேவன் பிறகு தமது வழியையும், தம் ஊழியத்தையும் ஆர்வத்தோடு தேடின ஆபிரகாமுக்கும், அவர் சந்ததியாருக்கும் தம் விசேஷப் பராமரிப்பையும், பாதுகாப்பையும் காண்பித்தார். ஆனால் ஒரு தேசமாக அவர்களது மனக்கடினமும், தேவனுக்கு முன்பாக அவர்களது இருதயத்தின் நேர்மையின்மையுமே, அவர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்வதில் இயல்பான தடையாக இருந்ததுமன்றி, அவர்களது தேசமே இராதபடி, அவர்களை உபத்திரவத்திற்கு ஆயத்தப்படுத்தி, அதில் கொண்டுசென்றது.

சுவிசேஷ யுகத்தில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிற கிறிஸ்துவின் உண்மை திருச்சபையாராகிய பரலோகத்தில் பெயரெழுதப்பட்ட வகுப்பார் நன்மைக்கும் தீமைக்கும், நீதிக்கும் அநீதிக்கும் உள்ள வித்தியாசத்தையும் இதில் ஒரு வகுப்பார் வெகுமதிகளை அடைவார்கள் என்றும், மற்றொரு வகுப்பார் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும், இதற்கான காலம் சமீபித்திருக்கிறது என்றும், இந்த நாகரீக உலகில் சாட்சியளித்து, வெளிச்சம் கொடுத்துவருகிறார்கள். (யோவா. 16:8–11; அப். 24:25) கர்த்தருடைய போதனைகளுக்கு அவர்கள் செவிசாய்த்து இருந்தார்களேயானால், அவர்களுக்கு மிகுந்த நன்மையும், பலனும் கிடைத்திருக்கும். ஆனால் எப்பொழுதும் நடந்துகொள்வதுபோல் முரட்டாட்டம் உள்ளவர்களாக, அவர்கள் வேதத்திலுள்ள புத்திமதிகளால் பயனடையவில்லை. இவ்வாறு அலட்சியப்படுத்தியதால், கர்த்தரின் நாளில் உபத்திரவம் அவர்கள்மேல் வரும். மேலும் தேவனுடைய ஆலோசனைகளை மனிதர் அவமதிப்பதாலும், அநீதியின் பலனாகவும், தேவ கோபம் அவர்கள்மேல் வருவதாகக் கூறப்படுகிறது. என்றபோதிலும் இன்னுமொரு வெளிச்சத்தில் பார்த்தோமானால், உலகத்தின்மேல் வரும் உபத்திரவமானது பாவத்திற்கான, இயல்பான, நியாயமான பலனாகும். இதை தேவன் முன்னரே அறிந்திருந்தார். தேவனுடைய ஆலோசனைகளை மனிதர்கள் பின்பற்றியிருந்தால் அவை அதிலிருந்து அவர்களை பாதுகாத்திருக்கும்.

திருச்சபைக்கு தேவன் தந்த செய்தி என்னவெனில், "உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதாகும்." (ரோமர்



12:1) உலக ஜனங்களுக்கு அவருடைய செய்தி, "உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளை கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக்காத்துக்கொள்; தீமையைவிட்டு விலகி, நன்மைசெய்; சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்." (சங். 34:13–14) இவ்விரண்டு செய்திகளுக்கும் சிலர் மட்டுமே செவிசாய்த்தனர். ஒரு சிறுமந்தை மட்டுமே பலிச் செலுத்தினது. "நேர்மையே உயர்ந்த கொள்கை" என்று பிரபலப்படுத்தியிருந்தபோதிலும், உலக ஜனங்களோ அதைக் கடைப்பிடிக்காமல் அலட்சியப்படுத்தினர். இவ்வுலக ஐசுவரியத்தையும் மேன்மை மற்றும் கனத்தையும், அதிகாரத்தையும் உன்னால் முடிந்தவரைக்கும் சம்பாதித்துக்கொள். அதற்காக எந்த வழிமுறையைக் கையாண்டாலும் பரவாயில்லை. உன் இலாபத்தினால் யார் நஷ்டமடைந்தாலும் அதைப் பொருட்படுத்தாதே என்ற பேராசையின் சத்தமே உலக ஜனங்களின் காதுகளில் அதிகமதிகமாய் ஒலிக்கிறது. சுருங்கக் கூறின், தேவனுடைய பிரமாணங்களின் கொள்கைகளை அவர்கள் ஒரு குறிப்பிடத்தக்க அளவு கடைப்பிடித்திருப்பார்களேயானால், கர்த்தரின் நாளின் இந்த உபத்திரவம் ஒருக்காலும் வந்திருக்காது. அந்தத் தேவனுடைய பிரமாணத்தைச் சுருக்கமாகக் கூறுவோமாகில், "உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் அன்பு செலுத்துவாயாக, உன் அயலானை உன்னைப்போலவும் நேசிப்பாயாக" (மத். 22:37–39) என்பதாகும். தேவனுடைய இந்தப் பிரமாணத்தை விழுந்துபோன மாம்சீக சிந்தை எதிர்ப்பதாலும், இதற்குக் கீழ்ப்படிய மறுப்பதாலும், அதன் இயல்பான பலனாக விதைப்புக்குப் பின் அறுப்பு நடைபெறுவதுபோல், உபத்திரவம் அவர்கள்மேல் வரும்.

விழுந்துபோன மாம்சீக சிந்தையானது, தன்னைப்போல் பிறனையும் நேசிப்பதற்குப் பதிலாக, எப்பொழுதும் சுயநலத்தோடும், பொருளாசையோடும் மற்றவர்களுக்குச் சொந்தமான உடைமைகளை அபகரிப்பதற்காக அடிக்கடி வன்முறையில் ஈடுபட்டு கொலை செய்யுமளவுக்குக்கூட அடிக்கடி நடத்திச் செல்கிறது. சுயநலத்தை எவ்விதத்தில் கையாண்டாலும், பிறப்பின் சூழ்நிலை, கல்வியறிவு மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளினால் அடக்கிக் கட்டுப்படுத்தப்படாவிடில், ஒருபோதும் மாறாத தன்னலக்கொள்கையாகவே இருக்கும். இவ்வுலகத்தின் எல்லா யுகங்களிலும் இவ்வாறே சம்பவிக்கிறது.

மேசியாவின் இரும்புக்கோல் ஆட்சியின் உந்துதலினாலும், அதன் வல்லமையினாலும் ஏவப்பட்டு, அன்பினால் எது சரியென்று தீர்மானித்து அதை வலியுறுத்தும் வரைக்கும் இப்படியே தான் நடைபெறும். இது மேசியாவின் பராக்கிரமமோ, பேராசையோ அல்ல. அப்பொழுதுதான் மனிதரது சுயநலம் மற்றும் பராக்கிரமம் நிறைந்த அரசாட்சியையிட நீதியும், அன்பும் நிறைந்த ஆட்சியின் நன்மைகளை ஒப்பிட்டுப்பார்த்துக் கற்றுக்கொள்ள ஏதுவான காலம் எல்லாருக்கும் உண்டாயிருக்கும். சத்தியம் மற்றும் நீதியின் சூரிய ஒளியினால், சுயநலமுள்ள கல்லான இருதயமானது, ஆதியில் "நல்லது" என்று தேவனால் காணப்பட்ட சதையான இருதயமாக மீண்டும் மாறும். (எசே. 36:26)

கடந்து வந்தப் பாதையை திரும்பிப்பார்ப்போமேயானால், தேவசாயலிலும், அன்பிலும், இரக்க சுபாவத்திலும் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன், சுயநலமும், கடினமுள்ள இருதயமுடையவனாக மாறினதை வெகுளையமாகக் காணமுடியும். சுயநலத்தை உயர்த்த மனிதன் கீழ்ப்படியாமையினால் எதிர்த்ததினால் தெய்வீக தயவை இழந்து தன் ஏதேன் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டான். அந்த வீட்டில் அவனுக்கு அவசியமான அனைத்தும் அபரிதமாக அருளப்பட்டிருந்தன. சபிக்கப்பட்ட நம் ஆதிப்பெற்றோர் ஏதேனிலிருந்து வெளியேறி, தாங்கள் நீண்ட காலம் ஜீவிக்கவும், இறுதி எல்லை வரைக்கும் நீடிக்கவும் தேடும்படி வாழ்க்கைப் போராட்டங்களைத் துவங்கின வேளையில், அவர்கள் கண்களில் முள்ளும், நெரிஞ்சியும், குருக்கும், தரிசு நிலமுமே எதிர்ப்பட்டன. இவைகளோடு போராடுவதின் மூலம், களைப்பும், முகத்தில் வியர்வையும் உண்டானது. இதை தேவன் முன்னரே சாபமாக உரைத்திருந்தார். போதிய பயிற்சியின்மையால் மனரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் மனிதன் படிப்படியாக குறையத் தொடங்கினான். ஆனால் கீழ்த்தரமான குணங்களோ இடைவிடாத பயிற்சியினால் முழுமையாகவும், சீராகவும் வளர்ச்சியடைந்தன. வாழ்க்கையின் பிரதானமான குறிக்கோள் மற்றும் நோக்கம் வாழ்வாதாரமே என்னும் நிலை ஏற்பட்டது. உழைப்பே இதைச் சம்பாதிப்பதற்கான விலை என்ற நிலையாகி, அதை வைத்தே மற்ற எல்லாக் காரியங்களும் நிர்மாணிக்கப்படுவதுடன், ஐசுவரியமே மனிதர்களுடைய எஜமானனாகிவிட்டது. இப்படிப்பட்டதொரு சூழ்நிலையில், மனுக்குலத்திலுள்ள ஒவ்வொருவரும் முதலாவது தன் சுய



தேவைகளுக்காகவும், இரண்டாவதாக ஐசுவரியத்தால் கிடைக்கும் சுகம், செல்வாக்கு இவைகளை நாடித் தேடி சுயநலமிக்கவர்களாகவும், பொருளாசையும், பேராசையும் நிறைந்தவர்களாக ஆனதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. இயல்பாக உருவாகும் இந்தச் சுபாவங்களை சாத்தான் தனக்கு சாதகமாக பயன்படுத்தி வருகிறான்.

கடந்த யுகங்களில், அறியாமை, இனப்பாகுபாடு மற்றும் உயர்ந்த தேசத்தான் என்கிற மனப்போக்கு ஆகிய பல்வேறு ஆதிக்கங்களின் காரணமாக, உலகின் பெரும்பாலான வளம், ஜனங்களை ஆளுகின்ற ஒருசில ஆட்சியாளர்களின் கைக்குள் வந்தது. இவர்களை திரளானவர்கள் தங்கள் தேசத்தின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, இவர்களுக்கு அடிமைத்தனமான கீழ்ப்படிதலைக் காண்பித்தனர். அவர்களது உடைமைகளை மக்கள் தங்களுக்கு சொந்தமாகக் கருதி, பெருமையும், உரிமையும் பாராட்டினார்கள். ஆனால் மேசியாவைக்கொண்டு உலகத்தை மறுசீரமைத்து, ஆசீர்வதிக்க யேகோவா தேவன் நிர்ணயித்திருந்தக்காலம் சமீபித்தபோது, ஜனங்களை மறைத்துக்கொண்டிருந்த அறியாமை, மூடப்பழக்க வழக்கங்களை நவீன கண்டுபிடிப்பு மற்றும் வசதிகள் மூலம் நீக்கிவிட அவர் துவங்கினார். இதனால் பூமிக்குரிய ஆட்சியாளர்களின் வல்லமை படிப்படியாகக் குறையவும், மனிதர்களின் பொதுவான நிலைமை மேம்படவும் தொடங்கியது. இன்றைய நாளில் உலகத்தின் ஐசுவரியம் இராஜாக்களின் கைகளில் இல்லை. அதில் வாழ்கின்ற ஜனங்களிடமே இருக்கின்றது.

ஐசுவரியம் ஏராளமான தீமைகளைக் கொண்டுவந்தாலும், சில ஆசீர்வாதங்களையும் அது கொண்டுவருகிறது. ஐசுவரியவான்கள் சிறந்த கல்வி பயின்று, ஏழை ஜனங்களைக் காட்டிலும், அறிவில் சிறந்தவர்களாக உயர்ந்து, பிரபுக்கள் வம்சத்தோடு ஒன்று சேருகிறார்கள். இந்தப் பின்னணியில், பேராசையினால் தூண்டப்பட்டு பணத்தினாலும், கல்வியினாலும் எவற்றையெல்லாம் சம்பாதிக்க முடியுமோ அவற்றைச் சம்பாதிக்கவும், தங்களை எல்லாவிதத்திலும் முதன்மைப்படுத்திக்கொள்ளவும் பிரபுக்களின் வகுப்பார் முயற்சிக்கின்றனர்.

ஆனால் தற்போது ஏராளமாய் பெருகிவரும் கல்வி கற்றும்

வசதிகளை ஜனங்கள் பயன்படுத்துவதினால் அறிவுப்பெருக்கம் ஏற்பட்டு, தாங்களே சுயமாக சிந்திக்கத் துவங்குகிறார்கள். சில சமயங்களில் அபாயகரமான காரியங்களை விளைவிக்கக்கூடிய முடிவுகளை அவர்களுக்குள் இருக்கும் சுயமேன்மை மற்றும் சுயநலத்தினால் தாங்கள் பெற்ற சொற்ப அறிவினால் அணுகி, எல்லா மனிதர்களின் விருப்பங்களும், விசேஷமாக அவர்களுடைய சொந்த விருப்பங்களும், சூழ்நிலைகளும் தற்போது ஐசுவரியவான்களாக இருக்கின்ற சிலரைத் தாழ்த்துவதன் மூலம் உயர்த்தப்படும் என்று எண்ணி, அதற்கேற்ற வழிகளைத் தாங்கள் காண்பதாக எண்ணுகின்றனர். இவர்களில் அநேகர் சொத்து ஒரு பக்கமும், தாங்கள் ஒரு பக்கமும் நின்று உலகப்பொருளை வணங்குவோரின் முரண்பாடுள்ள விருப்பங்களை நேர்மையாகவும், எளிதாகவும் சரிக்கட்ட முடியும் என்று நம்புகின்றனர். மேலும் தங்களுக்கு அதிக சொத்துக்கள் இருக்குமானால், தாராள சிந்தை உடையவர்களாய், தங்களைப்போல் பிறரையும் நேசிக்க மனப்பூர்வமாய் ஆவல் கொண்டவர்களாயும் இருந்திருப்பார்களென்று தங்களைக் குறித்து எண்ணிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்களென்று நிரூபணமாகிறது. ஏனெனில் அவர்களுடைய தற்கால நிலைமையில் ஒருசிலரே இப்படிப்பட்ட சிந்தனையை வெளிப்படுத்துகின்றனர். இவ்வுலகப் பொருட்களில் சிறிதானவில் உண்மையாய் இராதவன், அதிகப் பொருட்களிலும் உண்மையாய் இருக்க முடியாது. உண்மையில் சூழ்நிலைகள் இதை நிரூபிக்கிறது. ஏனெனில் ஐசுவரியவான்களில் கடின இருதயம் உடையவர்களையும், சுயநலமுள்ளவர்களையும் இருப்பவர்கள் யாரெனில், மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்து, தொழில்களைச் செய்து திடீரென்று முன்னேறினவர்களே.

சுயநல நோக்கமும், பேராசையும் கொண்ட அனைத்து வகுப்பாரையும், எவ்விதத்திலும் மன்னித்துவிடாமல், கண்டித்து சீர்பொருந்தச் செய்வது நமது கடமையாக இருந்தபோதிலும், நோயாளிகள், உதவியற்றவர்கள், ஏழைகள், மருத்துவமனைகள், ஏழை விடுதிகள், தர்ம மடங்கள், அனாதை இல்லங்கள், பொது நூலகங்கள், கல்விக்கூடங்கள் மற்றும் மனிதரது நன்மைக்கும் பாதுகாப்புக்குமென உதவும் பல்வேறு அமைப்புகள் ஐசுவரியவான்களின் வரியினாலும், நன்கொடைகளினாலுமே



நடத்தப்பட்டு வருகின்றன என்பதையும் கவனித்திருப்பது பொருத்தமாயிருக்கும். இந்த அமைப்புகள் இரக்கமுடைய, தாராள மனப்பான்மையை உடைய ஐசுவரியவான்களாலேயே முழு அளவில் நிர்வகிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட காரியங்களை எளிமையான ஜனங்கள் வெற்றிகரமாக இயக்குவதற்கு நேரமோ, ஆர்வமோ, போதுமான கல்வியறிவோ கிடையாது.

இருந்தபோதிலும், இன்றைய நாளில் ஐசுவரியவான்களுக்கும் தொழிலாளர் வகுப்பாருக்குமிடையே எதிர்ப்புகள் வளர்ந்துவருகிறது. அதாவது தொழிலாளர்களிடையே வளர்ந்து வரும் கசப்புணர்வுகளிலிருந்து உறுதியான சட்டம் மட்டுமே தங்களது உரிமைகளைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையை ஐசுவரியவான்கள் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக ஐசுவரியவான்கள் அரசாங்கத்திற்கு நெருக்கமாகிறார்கள். மேலும் தினக்கூலி பெறும் தொழிலாளர்கள் பெருங்கூட்டமாக இணைந்து இந்தச் சட்டங்களும், அரசாங்கங்களும் ஏழைகளை அடக்கி, ஒடுக்கி ஐசுவரியவான்களுக்கு உதவுவதற்காகவே வடிவமைக்கப்பட்டது என்று சிந்திக்கத்தொடங்கி, கம்யூனிசம், அராஜகம் போன்றவைகளால் தங்களுடைய நிலைமை முன்னேற்றமடையும் என்று எண்ணி, அரசாங்கமே இல்லாத நிலைமையைப் பார்க்கிலும், மோசமான அரசாங்கமோ அல்லது வீண் செலவு செய்கின்ற அரசாங்கமோ மேன்மையானதென்று எண்ணத் தவறுகின்றனர்.

தற்காலத்தில் உள்ள சமுதாயம், மதம் மற்றும் மக்கள் சார்ந்த அமைப்புகள் ஆகிய அனைத்து ஏற்பாடுகளும், அழிந்துபோகிற அளவுக்கு உபத்திரவத்தின் தன்மை இருக்கும் என்றும் மனிதனின் மனரீதியான, ஒழுக்க ரீதியான, உடல் ரீதியான பெலவீனத்தாலும் அறிவுப் பெருக்கமும், அதிகளவு சுயாதீனமும் உண்டாவதினாலும் ஏற்படும் விளைவு இப்படிப்பட்டதாக இருக்கும் என்றும் அநேக வசனங்கள் தெளிவாகக் காண்பிக்கின்றன. ஏற்றவேளையில் இந்த வசனங்கள் எடுத்துக் கூறப்படும். அந்த அநேக வசனங்களில் சிலவற்றை மட்டுமே இங்கு எடுத்துக்கூறி விழிப்புணர்வூட்ட விரும்புகிறோம். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட அநேக தீர்க்கதரிசனங்களில் எகிப்து, பாபிலோன், இஸ்ரவேல் போன்றவை அதிகமாக இடம்பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல், அதன்

சொல்லர்த்தமான, நேரடியான நிறைவேறுதலும், இரண்டாவதான நிழலான மற்றும் மாபெரும் நிறைவேறுதலும் நிறைவேறவிருப்பதைக் கூறுகிறது என்பதை இதனை வாசிக்கின்றவர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். உதாரணமாக, சொல்லர்த்தமான பாபிலோனின் ஞான அர்த்தத்தை நாம் அறியாமலிருந்தோமானால், பாபிலோனின் வீழ்ச்சி குறித்த முன்னறிவிப்புகளுக்கு பொருள் தெரியாமல், இது மிகைப்படுத்தி, வருணித்து கூறப்பட்டவைகள் என்று எண்ண வேண்டியதாயிருக்கும். சொல்லர்த்தமுள்ள பாபிலோன் அழிந்து நீண்டகாலத்திற்கு பின்னர், வெளிப்படுத்தின விசேஷத்தில் பாபிலோனைக் குறித்த முன்னறிவிப்புகள் அடையாளங்களாகக் கூறப்பட்டுள்ளன. ஆகவே இது உருவகமான பாபிலோனுக்கே பொருந்துவதாக இருக்கும் என்பது வெளிப்படையான சாட்சியாய் உள்ளது. சொல்லர்த்தமான பாபிலோனைக் குறித்து நேரடியாக உரைக்கப்பட்டதற்கு ஒத்ததாக தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் உரைக்கப்பட்டிருந்தாலும், அவைகள் ஞான அர்த்தமுடைய பாபிலோனைப் பற்றிக் கூறப்பட்ட விசேஷித்த விளக்கங்களே. இதனடிப்படையில் பார்க்கும்போது, எகிப்து என்ற சொல் இவ்வுலகத்தையும், பாபிலோன் என்பது கிறிஸ்தவ மண்டலம் என்று அழைக்கப்படுகின்ற பெயர் சபையையும் குறிக்கின்றது. இவ்வாறே நாம் முன்னர் எடுத்துரைத்துள்ளவாறு, இஸ்ரவேல் நீதிமானாக்கப்பட்ட நிலையிலுள்ள முழு உலகத்திற்கு அடையாளமாகவும், அதாவது அதன் மகிமை நிறைந்த இராஜரீக ஆசாரிய கூட்டத்தையும், பரிசுத்த லேவியர்களையும், மற்றும் பாவநிவாரண பலியினாலே நீதிமானாக்கப்பட்டு, விசுவாசமும் தேவ ஆராதனைக்கு உட்பட்டு தேவனோடு ஒப்புரவாக்கப்பட்ட ஜனங்களையும் குறிப்பதாக இருக்கிறது. இஸ்ரவேலருக்கு ஆசீர்வாத வாக்குத்தத்தங்களும், எகிப்தியருக்கு வாதைகளும், பலம் வாய்ந்த பாபிலோனுக்கு ஆச்சரியமானதும், முழுமையும் நித்தியமுமான கவிழ்த்தலும் உண்டாயிருக்கும் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது. "சமுத்திரத்தில் எறியுண்ட இயந்திரக் கல்லைப்போல" (வெளி. 18:21), ஒருபோதும் மீண்டுவராதபடி நித்திய இகழ்ச்சியில் மூழ்கடிக்கப்படும் என்று பாபிலோனைப்பற்றி உரைக்கப்பட்டுள்ளது.

இந்த உபத்திரவக்காலத்தைக் குறித்து யாக்கோபு அப்போஸ்தலன்



முதலாளிக்கும், தொழிலாளிக்கும் இடையே ஏற்படும் பூசல்கள் மற்றும் வித்தியாசங்களினால் அது உண்டாகும் என்று கூறியிருக்கிறார். மேலும் அவர் கூறுவதாவது: "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, (அதன் மதிப்பை இழந்து) உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும், வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாக சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல மாம்சத்தைத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் (அதாவது நீங்கள் மலைபோல குவித்து வைத்திருப்பதினால்) அநியாயமாகப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது. அறுத்தவர்களுடைய கூக்குரல், சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது." (யாக். 5:1–4) மேலும் உபத்திரவத்திற்குள்ளாகும் வகுப்பார் ஆடம்பரமாக வாழ்ந்தவர்கள் என்றும், அவைகளெல்லாம் பிறரது உழைப்பால் சம்பாதித்தவைகள் என்றும், அவ்வாறு உழைத்த வகுப்பாரில் சிலர் நீதிமான்கள் என்றும், அவர்கள் எதிர்த்து நிற்காததின் காரணமாக, அவர்களது ஜீவன் நசுக்கப்பட்டது என்றும் அப்போஸ்தலன் கூறுகிறார். அப்படிப்பட்ட சகோதரர்களைப் பார்த்து அப்போஸ்தலன், அவர்களுடைய பங்கு எதுவாயிருந்தாலும் பொறுமையோடு சகித்து, பின் வரப்போகிறவைகளை நோக்கிப்பார்த்து, கர்த்தரிடத்திலிருந்து விடுதலை வரும் என்று நோக்கிக் காத்திருக்க வலியுறுத்துகிறார். இப்படிப்பட்ட காரியங்கள் நெருங்கிவருகிற நிலைமையை நாம் காண்கிறோம். உலகத்தில் விழித்திருக்கிறவர்களாகிய சிலரிடத்தில், "பூமியின்மேல்வரும் ஆபத்துக்களுக்கும் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகும்" என்பதன் நிறைவேறுதலைக் காண்கிறோம். இன்றைய நாட்களில் தொழிலாளிகளுக்கு அளிக்கப்படும் குறைந்த வருமானம் பற்றிய விழிப்புணர்வு தொழிலாளர் சங்கங்கள் மற்றும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் மூலமாகவே உண்டாயின என்பதை அனைவரும் அறிவர். தற்காலத்தில் ஜீவிக்கும் ஜனங்களின் உணர்வுகளானது, சகிப்புத்தன்மையின் அடிமட்ட எல்லையை விரைவில் எட்டவிருக்கிறது. என்பதையும் இதன் காரணமாக கலகம் நிச்சயமாக வரும் என்று அனைவராலும் அறியமுடிகிறது. இது முதலீட்டாளர்களை விழித்தெழச் செய்து, எச்சரிக்கை உணர்வுடன், வியாபாரங்களிலும், உற்பத்தித்

துறைகளிலும் முதலீடு செய்திருக்கிற சொத்துக்களையும், பணத்தையும் விலக்கி மீட்டுக்கொண்டு, பாதுகாப்பு அறைகளிலும், பெட்டகங்களிலும் குவித்து வைக்கப்படும். எதற்கும் உபயோகிக்கப்படாமல் விருதாவாயிருக்கும் அச்சொத்துக்களைப் பராமரிக்க ஆகும் செலவுகளால், அத்தொகை குறைந்துகொண்டே வருவது, அதன் உரிமையாளருக்கு பெரும் பயத்தை வருவிக்கும். இதன் விளைவாக திவாலா நிலையும், நிதித்துறையில் பெரும் அச்சமும், வர்த்தக வீழ்ச்சியும் உண்டாகும். ஏனெனில் தற்போது அனைத்து வியாபாரங்களும், அதிகமாகக் கடன்பெற்றுத்தான் நடத்தப்படுகின்றன. இவைகளெல்லாம் சம்பவிப்பதன் காரணமாக சாதாரணமாக விளைவது என்னவெனில், அனுதினமும் தங்களுடைய ஆகாரத்துக்காக உழைத்துப் பெற்று வந்த சம்பளம், வேலை இழந்ததின் காரணமாக நின்றுபோகும். இதனால் அரசாங்க சட்டங்களால் தீர்த்துவைக்க முடியாதபடி குறைபாடுள்ள கலகக்காரர்களால் இவ்வுலகம் நிறைந்திருக்கும். தீர்க்கதரிசி அந்நாளைப்பற்றி குறிப்பிடும்போது, "கொள்ளுகிறவன் சந்தோஷப்படாமலும், விற்கிறவன் துக்கப்படாமலும் இருப்பான். ஏனெனில் அதின் திரளான ஜனங்கள்மேலும் உக்கிரம் இறங்கியிருக்கும். அங்கே சொத்துக்களுக்குப் பாதுகாப்பு இருக்காது. அப்பொழுது எல்லாக் கைகளும் துவண்டுபோய், உபத்திரவத்தை மாற்ற சக்தியற்றுப் போகும். தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள். அவர்களுடைய பொன் வேண்டா வெறுப்பாயிருக்கும். கர்த்தருடைய கோபத்தின் நாளில் அவர்களது பொன்னும், வெள்ளியும் அவர்களை விடுவிக்க மாட்டாது. (எசே. 7:10–19)

இஸ்ரவேல் ஒரு தேசமாக இருந்த அதன் கடைசி நாற்பது வருடங்கள் அந்த தேசத்தாருக்கு உபத்திரவக்காலமாக இருந்தது என்பதையும், அந்நாட்கள் அந்த ஜனங்கள்மேல் "பழிவாங்கும் நாளாகவும்," அவர்களது தேசம் முற்றிலுமாகக் கவிழ்க்கப்பட்டதோடு உபத்திரவக்காலம் முடிவுற்றது என்பதையும் மறந்துவிடக் கூடாது. இஸ்ரவேல் தேசத்துக்கு நேரிட்ட அந்த உக்கிர கோபத்தின் நாள், பெயர் கிறிஸ்தவ சபைகளுக்கு நேரிடப்போகும் அதைவிடப் பெரிதான மற்றும் விரிவான உபத்திரவத்திற்கு நிழலாக அல்லது அடையாளமாக இருக்கிறது. அவ்வாறே தேவ ஜனங்களாக தயவுபெற்றிருந்த அதே ஜனங்களுடைய கடந்தகால வரலாறு, சுவிசேஷ யுகத்திற்கு நிழலாக உள்ளதையும் மறந்துவிடக்கூடாது. கர்த்தரின்



நாளைக்குறித்த தீர்க்கதரிசனங்கள் ஏன் இஸ்ரவேலருக்கும், எருசலேமிற்கும் நேரடியாகக் குறிப்பிட்டு உரைக்கப்பட்டுள்ளன என்பதையும், இவை முழு மனுக்குலத்திற்காக கூறப்பட்ட முழுமையான நிறைவேறுதல்களே என்பதை நடைபெறவிருக்கும் சம்பவங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

இன்னும் ஒரு தீர்க்கதரிசன சாட்சியை செப்பனியா 1:7–9, 14–18இல் காணலாம். "கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார். (வெளி. 19:17–ஆம் வசனத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கவும்) கர்த்தருடைய யாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும், இராஜ குமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன். வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும், வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற (கொள்ளைக்காரர்) யாவரையுங்கூட தண்டிப்பேன். இந்த மாபெரும் உபத்திரவக்காலத்திலே அவரவர் சம்பாதித்த மாபெரும் ஐசுவரியங்களும், அதிகாரங்களும் அழிக்கப்படுவதோடு, தற்போதைய உலக அமைப்புகளை உடைப்பதற்கு, பரலோகத்தின் கருவிகளாக அச்சமயத்தில் உபயோகிக்கப்படுபவர்களும்கூட, தங்களுடைய அநீதியான, அநியாயமான கிரியைகளுக்காக தண்டிக்கப்படுவார்கள். ஏனெனில் வரப்போகிற உபத்திரம் அனைத்து வகுப்பாருக்கும் பொதுவானதாக இருந்து, திரளான மனுக்குலம் முழுவதற்கும் மனக்கவலையை உண்டாக்கும்.

"கர்த்தருடைய பெரிய நாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்து வருகிறது; "கர்த்தருடைய நாள் என்கிற சத்தத்திற்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான். அந்த நாள் உக்கிரத்தின் நாள்; இது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள் (தற்கால துன்பத்தையும், வருங்காலத்தில் நடைபெறவிருக்கும் உபத்திரவங்களின் நிச்சயமற்ற நிலைமையையும் முன்கூட்டியே உரைக்கும் இக்கட்டான நாள்); அது மப்பும் (உபத்திரவம்) மந்தாரமுமான நாள். அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் (பலம் வாய்ந்த அரசாங்கங்கள்) விரோதமாக எக்காளம் (இந்த உபத்திரவத்தின் நாள் முழுவதும் ஒலிக்கின்ற, கர்த்தருடைய நாளின் நிகழ்வுகளை உள்ளடக்கிய

தேவ எக்காளமாகிய உருவகமான ஏழாம் எக்காளம்) தொனிக்கிறதுமான (கலகம் செய்வதும், உரத்த சத்தமிடுவதும், நிந்திக்கிறதுமான) நாள். மனுஷர் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப்போல் நடக்கும்படி (எவ்வழியில் நடப்பதென்று அறியாமல், தட்டுத்தடுமாறி நடக்கும்படி) நான் அவர்களை வருத்தப்படுத்துவேன்; அவர்கள் இரத்தம் புழுதியைப்போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும். (முன்பு ஐசுவரியம் அனைத்து உல்லாசங்களையும், சுகபோகங்களையும் கொடுத்தபோதிலும்), கர்த்தருடைய உக்கிரத்தின் நாளில் அவர்கள் வெள்ளியும், அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்க மாட்டாது. அவருடைய எரிச்சலின் அக்கினியால் தேசமெல்லாம் அழியும். தேசத்தின் (பணக்காரர்களை) குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்." ஐசுவரியவான்களில் அநேகரை அழிக்கும் இந்த அழிவு எவ்வாறு நடைபெறும் என்றால், அவர்களது ஐசுவரியம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு, ஐசுவரியமற்ற நிலைக்கு வருவார்கள். மேலும் அனைத்து வகுப்பாரிலும் ஏராளமானோர் உயிர்ச்சேதமடைவார்கள்.

அந்த நாளின் உபத்திரவத்தைக்குறித்து தீர்க்கதரிசிகள் பல்வேறு கோணங்களில், பல விஷயங்களை விவரமாக முன்னுரைத்திருப்பினும், அவற்றை நாம் தீவிரமாக ஆராய்ந்து பாராமல், மேலே கடைசியாக தீர்க்கதரிசி கூறிய சிந்தனையை மட்டும் சுருக்கமாகப் பார்க்கலாம். தேவனுடைய வைராக்கியத்தின் அக்கினியால் பூமி முழுவதும் விழுங்கப்படும் என்று கூறிய அத்தீர்க்கதரிசி, இதே அக்கினியைக்* குறித்து மேலும் கூறுவதாவது: "நான் கொள்ளையிட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்: என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் (அரசாங்கங்களின்மேல்) சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், இராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன் (அனைத்து தேசத்திலுள்ள ஜனங்களையும், வளர்ந்து வருகிற தற்கால அரசாங்கங்களுக்கு எதிராக ஒன்று திரட்டுவதன் மூலம், ஒரு பொது பாதுகாப்பின் பொருட்டு தேசங்கள் ஒன்று சேர்வார்கள். ஆகவே அனைத்து தேசங்களின் மேலும் உபத்திரவம் வந்து அனைவரும் விழுந்துபோவார்கள்); பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும் இந்த தற்போதைய தேசங்களின் அரசாங்கங்கள்



அழிக்கப்பட்ட பிறகு, தற்கால சமுதாய அமைப்புகள் உபத்திரவத்தின் அக்கினியால் அழிக்கப்பட்ட பிறகு), அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக (மனித பாரம்பரியத்தினால் அசுத்தமாக்கப்படாத, சுத்தமான சத்தியத்தினால்) மாறப்பண்ணுவேன். (செப். 3:8–9)

தேவனுடைய வைராக்கியத்தின் அக்கினி என்பது, முழு பூமியையும் அழிக்கும் உக்கிரமான உபத்திரவத்தைக் குறிக்கும் பலமான அடையாளமாய் இருக்கின்றது. சிலர் எண்ணுகிறபடி இது சொல்லர்த்தமான அக்கினியல்ல என்பது, இதற்குப்பின்பு மீதமாயிருக்கிற ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதிலிருந்து நிரூபணமாகிறது. சிலர் எண்ணுவதுபோல், மீதியான ஜனங்கள் பரிசுத்தவான்களல்ல. மாறாக, அவர்கள் கர்த்தருக்கு ஊழியஞ்செய்யும்படியாக அவ்வேளையில் மனந்திருப்பப்படுகின்ற, உயிரோடிருக்கும் உலக ஜனங்களாவர். ஆனால் பரிசுத்தவான்களோ ஏற்கெனவே மனந்திரும்பினவர்கள் ஆவர்.*

வேதாகமம் முழுவதும் பூமியானது சமுதாயத்தை அடையாளமாக குறிக்கும்படியாக உரைக்கப்பட்டுள்ளது. மலைகள் இராஜ்யங்களையும், வானங்கள் ஆளுகிற ஆட்சி அதிகார கட்டுப்பாட்டினையும், கடல் கொந்தளிக்கிற கடல் நிலையற்ற துன்மார்க்கமான உலக மனுக்குலத்திற்கும் அடையாளமாக குறிப்பிடுகின்றன. அக்கினியானது

*அக்கினி உண்மையான அக்கினியென்று சொல்லர்த்தமாகப் பொருள்கொண்டு, உண்மையாகவே பூமி வெந்துருகிப்போகும் என்று வாதிடும் சிலருக்கு எதிராகவே இதை நாம் சுட்டிக்காட்டுகிறோம். இவர்கள் தங்களுடைய தத்துவமே சரியானது என்று நிரூபிப்பதற்காக, "ஜனங்கள்" என்று கூறப்பட்டிருப்பது பரிசுத்தவான்களைக் குறிக்கும் என்றும் அவர்கள் பூமி வெந்துருகி குளிர்ந்த பிறகு, பூமிக்குத் திரும்பி வந்து வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருந்து திராட்சத் தோட்டங்களை நட்டு, அவைகளின் கனிகளைப் புசித்து தங்கள் கைகளின் பிரயாசத்தை நீடித்த நாட்களாய் அனுபவித்திருப்பார்கள் என்றும் கூறுகிறார்கள். தற்காலத்திலுள்ள சொற்ப வருஷங்கள் பரிசுத்தவான்கள் பயிற்றுவிக்கப்பட்டு ஆயத்தப்படுவதற்கென நியமிக்கப்பட்ட காலம் என்று இவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் இவர்களது கொள்கையின்படி, பூமி குளிர்ந்துபோவதற்கு ஆயிர வருடங்களோ அல்லது அதற்கு மேலும் தேவைப்படுவதால் அதற்குள் அவர்களுடைய பாத்திரத்திற்குரிய அனுபவங்களில்

எரிந்துபோகும் தன்மையுடைய களைகள், கசடுகள், பூமி (சமுதாய அமைப்புகள்) போன்ற அழிக்கப்படக்கூடிய எந்த ஒன்றின் அழிவையும் உருவகமாகக் குறிக்கின்றது. அக்கினியோடு கந்தகம் சேர்க்கப்படும்பொழுது, அது முற்றிலும் முழுமையான அழிவையும் உருவகமாக காண்பிக்கிறது. ஏனெனில் கந்தகத்தைக் காட்டிலும் கொடிய உயிர்க்கொல்லி வேறொன்றுமில்லை.

இந்தச் சிந்தனையை மனதில்கொண்டு, அந்த உக்கிரமான நாளைக் குறித்து, பேதுரு அப்போஸ்தலன் உருவகமாகக் கூறின தீர்க்கதரிசனத்திற்கு நம் கவனத்தைத் திருப்புவோமானால், மேற்கண்ட தீர்க்கதரிசிகளின் சாட்சியங்களுக்கு இது பரிபூரணமாக ஒத்திருப்பதைக் காணலாம். அவர் கூறுகிறதாவது: "அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்தது. (சொல்லர்த்தமான பூமியும், வானங்களும் இல்லாமற்போகவில்லை. ஜலப்பிரளயத்திற்கு முன்பிருந்த யுகம் அல்லது ஏற்பாடுகள் அகற்றப்பட்டன). ஆனால் இப்பொழுதிருக்கிற வானங்களும், பூமியும் (தற்காலத்திலுள்ள யுகம் அல்லது ஏற்பாடுகள்) அந்த வார்த்தையினாலேயே (தெய்வீக அதிகாரம்) அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது." (2 பேது. 3:6–7) இங்கு ஜலம் என்பது நேரடியான அர்த்தம் உடையதை கவனித்து சிலர், அக்கினியும் அவ்வாறே நேரடி அர்த்தம் கொண்டதாக இருக்கும் என்று நம்புகின்றனர். ஆனால் அவ்வாறு யூகத்தின் அடிப்படையில் பொருள் கொள்ளுதல் கூடாது. தேவனுடைய ஆலயம் அக்காலத்தில் சொல்லர்த்தமான கற்களால் கட்டப்பட்டது. ஆனால் உண்மையான தேவாலயமாகிய திருச்சபை, பூமிக்குரிய பொருட்களால் அல்ல, ஆவிக்குரிய மாளிகையாக ஜீவனுள்ள கற்களைக்கொண்டு எழும்புகிறது என்பதை தவறு என்று ஒதுக்கிவிட முடியாது. நோவாவின்

---

இந்த பயிற்சி முழுவதும் மறக்கப்படும் என்பதை இவர்கள் உணர்வதில்லை. இது மிகப்பெரும் தவறு. இது நமது கர்த்தர், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் போன்றவரது உவமைகள், அடையாளங்கள், கருகலான மறைபொருள்கள் ஆகியவற்றை ஒரு எல்லைக்கு மீறி சொல்லர்த்தமாக பயன்படுத்துவதால் விளைந்ததாகும். இந்த தவறான கொள்கையைப் பின்பற்றி, அக்கினி மற்றும் மலைகள், கடல் ஆகியவைகள் அடையாளமான பாஷையில் கூறப்பட்டுள்ளது என்று எண்ணாமல், அவைகள் அக்கினிக்குப் பின்பு இல்லாமற்போகும் என்று கூறுகிறார்கள்.



பேழைகூட சொல்லர்த்தமாக அமைந்திருந்தது. ஆனால் அது கிறிஸ்துவையும், முழு மனுக்குலத்தையும் மீண்டும் புதுப்பித்து ஒழுங்குபடுத்தும் அவருடைய வல்லமையையும் அடையாளப்படுத்தியது.

"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் (கண்களால் காணக்கூடாதபடிக்கு) வரும்; அப்பொழுது வானங்கள் (ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தானை தலைவராகக்கொண்ட கண்ணுக்குப் புலப்படாத தற்கால ஆவிக்குரிய அதிகாரங்கள்) மடமடவென்று (சீற்றத்தோடு) அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் (சமுதாய அமைப்புகள்) அதிலுள்ள கிரியைகளும் (பெருமை, அந்தஸ்து, இராஜரீகம், பிரபு வகுப்பார்) எரிந்து அழிந்துபோம். வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம் என்றாலும் அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் (புதிய ஆவிக்குரிய அதிகாரமாகிய கிறிஸ்துவின் இராஜ்யம்), புதிய பூமியும் (வல்லமையினாலும், அடக்குமுறையினாலும் அல்ல, மாறாக அன்பினாலும், நீதியினாலும் அமையவிருக்கும் புதியமுறையின்படியான பூமிக்குரிய சமுதாய அமைப்புகள்) உண்டாகுமென்று காத்திருக்கிறோம். (2 பேது. 3:6–7, 10–13)

அப்போஸ்தலர்களில் சிலர் தீர்க்கதரிசிகளாகவும் இருந்தார்கள். அவர்களுள் பேதுரு, யோவான், பவுல் போன்ற குறிப்பிடத்தகுந்தவர்கள் இருந்தார்கள் என்பதை நினைவில்கொள்ளவேண்டும். அவர்கள் அப்போஸ்தலர்களாக, திருச்சபையின் நன்மைக்கென்று பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் உரைத்த தீர்க்கதரிசனங்களுக்கு விளக்கமளிக்கும் தேவனது கருவிகளாக இருந்தார்கள். அதோடுகூட இனிவரப்போகிற காரியங்களை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசிகளாகவும் தேவன் அவர்களை உபயோகித்தார். அவ்வாறு முன்னறிவித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறித் தீரும்காலங்கள் வந்தவுடன் விசுவாச வீட்டாருக்கு ஆகாரங்கொடுக்கிற ஏற்றவேளையாக அது இருந்தது. அந்த ஆகாரத்தைக் கொடுக்கும்படி தேவன் தாம் தீர்மானித்திருந்த காலத்தில், தகுதியுள்ள ஊழியக்காரர்களை எழுப்பப்பண்ணினார் இவ்வுண்மையைக் குறித்து நம் கர்த்தர் கூறின வார்த்தைகளை மத்தேயு 24:45–46இல் பார்க்கவும். தீர்க்கதரிசிகளாக அப்போஸ்தலர்கள் தங்கள் காலத்தில் நிறைவேறாத காரியங்களை, பழைய

ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் போலவே அறிந்து உணரமுடியாதவர்களாயிருந்து பிறருடைய உபயோகத்திற்கென எழுதப்படும்படி ஏவப்பட்டார்கள் (1 பேது. 1:12–13), என்றபோதிலும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப்போலவே அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளும், விசேஷித்த தேவ பராமரிப்புக்கும், வழிநடத்துதலுக்கும் உட்பட்டிருந்தபடியால், அவர்கள் எழுதின வார்த்தைகளில் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியிருந்தாலும், அவைகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியாதிருந்தது. இவ்வாறாக தேவனாலேயே அவரது வழிகளாக அல்லது தேவனுடைய வார்த்தைகளை எடுத்துரைப்பவர்களாக யார் இருந்தபோதிலும், சபையானது அவரால் என்றைக்கும் போஷிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக தேவ வசனத்தின்மேல் நம்பிக்கை வைத்து, அவரது வாயின் வார்த்தைகளாக இருந்த சிலரது அபூரணத்தை கவனிக்காமல், அவ்வார்த்தைகளை ஆழ்ந்து நோக்குவது மிகுந்த நம்பிக்கையையும், நிச்சயத்தையும் உண்டாக்கும்.

மல்கியா தீர்க்கதரிசி கர்த்தரின் நாளைக் குறித்து இதே அடையாள பாஷையில் கூறுகிறார்; "இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும். (மல். 4:1)கர்த்தரின் நாளில் மாபெரும் உபத்திரவத்தினாலும், ஆயிரவருட அரசாட்சிக்குபின் வரும் ஒழுங்குகளினாலும் பெருமையும் இதனால் வரக்கூடிய ஆணவமும், கொடுமையும் மற்ற அனைத்தும் அழிந்துவிடும். இதில் கடைசியானது வெளிப்படுத்தல் 20:9இல் விளக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் பாவமும், அருவருப்பும் நிறைந்த பெருமையானது முற்றிலுமாக வேரோடு அறுப்புண்டுபோகும் அதேவேளையில், ஆணவமும், துன்மார்க்கமும் உள்ள அனைவரும் அழிக்கப்பட்டுப்போவார்கள். என்றாலும், இந்த வகுப்பாரை மீண்டும் குணப்படுத்துவதற்கு நம்பிக்கை ஏதுவுமில்லை என்று தீர்மானித்து விடக்கூடாது. தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. தேவனுடைய இந்த நீதியின் கோபாக்கினைப் பற்றியெரியும்போது, ஒருசிலர் அக்கினியிலிருந்து மீண்டு இரட்சிப்படைய, நியாயாதிபதி ஒரு வாய்ப்பை அருளுவார் (யூதா 23). அந்த வாய்ப்பையும்



மறுதலிப்பவர்கள் மட்டுமே தங்கள் பெருமையோடு சேர்ந்து அழிந்துபோவார்கள். ஏனெனில் பெருமையை தங்கள் குணநலன்களோடு ஒன்றாக்கி குணப்பட மறுக்கிறார்கள்.

இந்த நாளைக்குறித்து இதே தீர்க்கதரிசி இன்றுமொரு விளக்கம் அளித்திருக்கிறார். (மல். 3:1–3) இதில் கர்த்தருடைய பிள்ளைகள், அவர்களது குற்றங்களாகிய கசடு சுட்டெரிக்கப்படுவதினால் பரிசுத்தமாக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவர். பின்பு அவருக்கு அருகில் கொண்டுவரப்படுவார்கள் என்று அக்கினியை உருவகமாக வைத்து மீண்டும் பேசுகிறார். "நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனானவர் இதோ வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் (பரீட்சையில்) நிலை நிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போல இருப்பார்.... அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டு சுத்திகரித்துக் கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரை (விசுவாசிகளை – பிரதானமாக இராஜரீக ஆசாரிய வகுப்பார்) சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாய் இருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும், வெள்ளியைப் போலவும் புடமிடுவார்." (மல். 3:1–3)

பவுல் அப்போஸ்தலன் இதே அக்கினியைக் குறித்து, கர்த்தருடைய நாளில் விசுவாசிகளைப் புடமிடும் முறைகளைப் பற்றிப் பேசுகிறார். இந்த உருவகமான அக்கினி ஒவ்வொரு குற்றங்களையும் சுட்டெரித்து, விசுவாசத்தில் பரிசுத்த நிலைமையை ஏற்படுத்தும் என்றுகூறி, அக்கினியைப் பற்றிய அனைத்துச் சந்தேகங்களுக்கும் தெளிவைத் தந்திருக்கிறார். போடப்பட்டிருக்கிற ஒரே அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவின் மீட்கும் கிரியையின்மேல் தங்கள் விசுவாசத்தைக் கட்டியெழுப்புபவர்களையே இங்குக் குறிப்பிடுவதாக கூறிய பவுல், "ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் (தெய்வீக சத்தியங்களும் அதற்கு இசைவான குணநலன்களும் அல்லது) மரம், புல், வைக்கோல் (பாரம்பரியமான தவறான உபதேசங்களும், அதற்கு இசைவான உறுதியில்லாத குணநலன்களும்) ஆகிய இவைகளைக் கட்டினால் அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்;

நாளானது அதை விளங்கப் பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு (2பேதுரு.1:5–11 வசனங்களில் காண்க) எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும்." (1 கொரி. 3:12, 13) ஆவிக்குரிய கிரியைகளை பரிசோதிக்கும் இந்த அக்கினி, சொல்லர்த்தமானது அல்ல என்று தவறான எண்ணமுடையோரும் ஒப்புக்கொள்வர். மரம், புல், வைக்கோல் போன்றவைகளின் கிரியைகளும், குணங்களும் முற்றிலுமாக அழிக்கப்படுவதற்கு அக்கினி ஒரு பொருத்தமான அடையாளமாக இருக்கிறது. கன்மலையாகிய கிறிஸ்துவின் மீட்கும்பொருளின் அஸ்திபாரத்தின்மேல் தெய்வீக சத்தியம் என்னும் பொன், வெள்ளி, விலையுயர்ப்பெற்ற கற்களால் கட்டப்பட்ட விசுவாசம் மற்றும் குணாதிசய கட்டடத்தை அக்கினி அழிக்க சக்தியற்றது.

அப்போஸ்தலன் இதைக் காண்பித்து கூறுவதாவது: "அதின்மேல் (கிறிஸ்துவின்மேல்) ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். (உண்மையான குணநலன்களில் அபிவிருத்தியடைய சத்தியத்தைப் பயன்படுத்தி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்வதில், எவ்வளவு உண்மையுள்ளவனாய் இருக்கிறானோ அதற்கேற்ற பலனையடைவான்). ஒருவன் கட்டினது வெந்து போனால் அவன் நஷ்டமடைவான் (உண்மையற்றவனாய் இருப்பதினால் வெகுமதியை இழந்துவிடுவான்); அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியில் அகப்பட்டு (சுருங்கி, கருகி, திகிலடைந்து) தப்பினது போலிருக்கும்." (1 கொரி. 3:14, 15)

கிறிஸ்துவின் மீட்கும்பொருளாகிய கன்மலையின்மேல் அஸ்திபாரமிட்டுக் கட்டுகின்ற அனைவரும் உறுதியான நிச்சயத்தோடு இருக்கிறார்கள். அவருடைய நீதியின்மேல் நம்பிக்கையாயிருக்கிற எவரும், தங்கள் நீதியின் வஸ்திரங்களை அலங்கோலமாக்கமாட்டார்கள். ஆனால் சத்தியத்தை அறிகிற அறிவை பூரணமாகவும், தெளிவாயும் அடைந்த பின்பும், மனப்பூர்வமாக அவரையும், அவரது கிரியைகளையும் மறுதலிப்பவர்கள் இரண்டாம் மரணத்தில் பங்கடைவார்கள். (எபி.6:4–8; 10:26–31)

கர்த்தரின் நாளின் உபத்திரவம் இன்னுமொரு அடையாளமான



பாஷையில் விளக்கப்பட்டுள்ளது. சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஆரம்பம் கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின் துவக்கத்தில் உலகத்தாருக்குப் புதிய உடன்படிக்கையாக ஏற்படுத்துவதற்கு அடையாளமாக உள்ளது என பவுல் அப்போஸ்தலன் (எபிரெயர் 12:26–29) விளக்கிக் காண்பித்திருக்கிறார். தேவனது சத்தம் சொல்லர்த்தமான பூமியை ஒரு தரம் அசையப்பண்ணினது. ஆனால் இப்போதோ அவர் வாக்குத்தத்தம் பண்ணி கூறுகிறதாவது: "இன்னும் ஒருதரம் (இறுதியாக) நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன்." இதைக்குறித்து அப்போஸ்தலன் விளக்குவதாவது: "இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது, அசையாதவைகள் (சத்தியமும், நீதியுமான காரியங்கள் மட்டும்) மாத்திரம் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள்போல (உண்மையல்ல, பொய்யாக உண்டாக்கப்பட்டவைகள்) மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது. ஆதலால் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்குப் பிரியமான ஆராதனை செய்யும்படிக்கு கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். (எழுதியிருக்கிறபடி) நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே." (எபி. 12:27–29) அப்போஸ்தலர் கர்த்தரின் நாளில் நடக்கும் உபத்திரவத்தை அடையாளப்படுத்த கடலில் கொந்தளிக்கும் புயலை உபயோகிக்கிறார். அவரும், மற்றவர்களும் மற்ற இடங்களில் அக்கினியை அடையாளமாக மேற்கோள் காட்டுகின்றனர். அக்கினியை அடையாளமாகக் கொண்ட அதே சம்பவங்கள், தேவனுடைய தெய்வீக திட்டத்தைப் பற்றியும், குணநலன்களைப் பற்றியும், அவருடைய வார்த்தைகளைக் குறித்தும் அதோடுகூட உலகத்திலுள்ள சமுதாய மற்றும் பண்பாடுகள் ஆகியவற்றைப் பற்றிய தவறான எண்ணங்களும், தவறுகளுமாகிய அனைத்துப் பொய்களும் விசுவாசிகளிடத்திலிருந்தும், உலகத்திலிருந்தும் அகற்றிப்போடுவது இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதனது விழுந்துபோன சிந்தையின் விருப்பங்களால் ஏவப்பட்டதாலும், அத்துடன் நீதிக்கு எதிராளியான தந்திரமுள்ள சாத்தானின் நயவஞ்சகத்தாலும், உருவாக்கப்பட்ட இந்தக் கட்டுக்கதைகளும், பொய்களும் அகற்றப்படுவது அனைவருக்கும் நன்மை பயக்கும். ஆனால் இவைகள் அகற்றப்படும்போது இவைகளோடு தொடர்புடைய அனைவருக்கும் பெரும் நஷ்டத்தை

விளைவிக்கும். அவர்கள் வீசி எறியப்படுவார்கள். ஒருபோதும் அசைக்கப்படாத நீதியுள்ள இராஜ்யம் மகா உன்னதமான அந்த நீதியின் சூரியன் வல்லமையோடு ஒளிரும் வேளையில், நோயுற்றதும், மரித்துக்கொண்டிருக்கிறதும், ஆனால் மீட்கப்பட்டதுமான மனுக்குலத்துக்கு ஆசீர்வாதத்தையும், குணமளித்தலையும் கொண்டுவரப்போகிற அந்த ஆயிரமாண்டு ஆட்சிக்கு முன்னதாகக் கொடூரமும், தனலோடு எரிகின்ற அக்கினியும், பேரச்சம் ஏற்படுத்தும் புயலும், காரிருளாகிய உபத்திரவமும் உண்டாயிருக்கும். (ஒப்பிட்டுப்பார்க்க மல். 4:2; மத். 13:43)

தேவன் தீர்க்கதரிசியாகிய தாவீதின் மூலம் சங்கீதங்களின் வாயிலாக, நம் கர்த்தரின் முதலாம் வருகையைக்குறித்து அதிகமதிகமாய் முன்னறிவிக்க சித்தம் கொண்டார். கர்த்தரின் மகிமையான ஆட்சியை ஏற்படுத்தும் இந்த உபத்திரவத்தின் நாளைக்குறித்துப் பிரகாசமுள்ள வெளிச்சத்தையும், அதே தாவீது விவரித்திருக்கிறார். மேலும் அக்கினி, புயல், இருள் போன்ற பல்வேறு அடையாளப் பாஷைகளையும் தம் சங்கீதங்களில் மாறிமாறியும் ஒன்றுக்குப்பதிலாக மற்றொன்றையும் அவர் உபயோகிக்கிறார். உதாரணமாக, சங்கீதம் 50:3இல் அவர் கூறுகிறதாவது: "நம்முடைய தேவன் வருவார், மௌனமாயிரார்; அவருக்கு முன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாய் இருக்கும்." சங்கீதம் 97:2–6 வசனங்களில்: "மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது; நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம். அக்கினி அவருக்கு முன் சென்று, சுற்றிலும் இருக்கிற அவருடைய சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது. அவருடைய மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி அதைக் கண்டு அதிர்ந்தது. கர்த்தரின் பிரசன்னத்தினால் பர்வதங்கள் மெழுகுபோல் உருகிற்று, சர்வ பூமியினுடைய ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப்போயிற்று. (புதிய) வானங்கள் அவருடைய நீதியை (அப்பொழுது) வெளிப்படுத்துகிறது; சகல ஜனங்களும் அவருடைய மகிமையைக் காண்கிறார்கள்." சங்கீதம் 46:6இல் "ஜாதிகள் கொந்தளித்தது, இராஜ்யங்கள் தத்தளித்தது; அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று." மேலும், சங்கீதம் 110:2–6இல், "நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகை செய்யும்... உம்முடைய வலது பாரிசத்திலிருக்கிற ஆண்டவர், தமது



கோபத்தின் நாளிலே இராஜாக்களை வெட்டுவார். அவர் ஜனங்களுக்குள் நியாயந்தீர்ப்பார், எல்லா இடங்களையும் பிரேதங்களால் நிரப்புவார், விஸ்தாரமான தேசங்களின்மேல் தலைவர்களாய் இருக்கிறவர்களை (ஆட்சியாளர்களை) நொறுக்கிப்போடுவார்." மேலும், சங்கீதம் 46:1–5 வசனங்களில், "தேவன் நமக்கு அடைக்கலமானவர்... ஆகையால் பூமி (சமுதாயம்) நிலைமாறினாலும், மலைகள் (இராஜ்யங்கள்) நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும் (கொந்தளிக்கும் ஜனத்திரள்களால் அழிவுற்றாலும்), அதன் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி (கடுங்கோபங்கொண்டு) அதின் பெருக்கினால் பர்வதங்கள் (ஆதிக்க சக்திகள்) அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்... (ஆயிரவருட அரசாட்சியின்) அதிகாலையில் தேவன் அதற்கு (மணவாட்டிக்கு – அதாவது விசுவாசிகளான சிறுமந்தைக்கு) சகாயம் பண்ணுவார்." அதே சங்கீதத்தில் 6 முதல் 10 வசனங்களில் இதே சம்பவங்கள் வேறு அடையாளங்களின்மூலம் மீண்டும் விளக்கப்பட்டுள்ளது. "ஜாதிகள் கொந்தளித்தது, இராஜ்யங்கள் தத்தளித்தது; அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார்; பூமி (சமுதாயம்) உருகிப்போயிற்று. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்." அந்த உபத்திரவக் காலத்தில் நடைபெறவிருக்கும் சம்பவங்களின் முடிவை முன்கூட்டியே காண்பதாக எண்ணி சங்கீதக்காரன் கூறுகிறார்: "பூமியிலே பாழ்க்கடிப்புக்களை நடப்பிப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்துபாருங்கள்... (ஆ ஜனங்களே, உங்கள் பழைய வழிகளை விட்டுவிட்டு) நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் (உண்மையான தேவ அறிவுக்குள் வந்து சேருங்கள்); ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்." ஏற்படுத்தப்படவிருக்கும் "புதிய பூமியும்" அல்லது புதிய சமுதாய அமைப்பின் சட்டங்களும், ஒழுங்குகளும், தேவனையும் அவருடைய நியாயப்பிரமாணங்களையும் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, மனுக்குலத்தார் அனைவரையும் அவரது பிரமாணங்களுக்குக் கீழ்ப்படுத்தும்.

கர்த்தருடைய நாள் மகா உபத்திரவத்தின் நாளாக இருக்கும் என்றும், தீமை எந்த வடிவில் இருந்தாலும் அதனை அழித்து ஒழிக்கும் என்றும் (ஆனாலும் சொல்லர்த்தமான பூமி எரிந்து போகிற காலமல்ல)

காண்பிப்பதற்கு, வேதத்தின் கடைசி தீர்க்கதரிசனத்தில் உருவகமாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தைக் குறிப்பிட்டு கர்த்தர் ஆட்சி புரிய தம் மாபெரும் வல்லமையை எடுக்கும்பொழுது, வரும் புயல் மற்றும் அக்கினியைப் பின்வருமாறு விளக்குகிறது. "ஜாதிகள் கோபித்தார்கள் அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது." (வெளி.11:17, 18) மீண்டும், வெளிப்படுத்தல் 19:15,19–20 வசனங்களில், "புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக் கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிரக் கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். பின்பு (அடையாளமான) மிருகமும், பூமியின் இராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும், அவருடைய சேனையோடும் யுத்தம் பண்ணும்படிக்குக் கூடிவரக் கண்டேன். அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது. கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்."

இங்கே உருவகமாகக் கூறப்பட்டுள்ள "மிருகம்," "கள்ளத்தீர்க்கதரிசி," "அக்கினிக் கடல்," "குதிரை" போன்றவற்றின் அர்த்தம் என்ன என்று இப்பொழுது நாம் ஆராய்ந்துப்பார்த்தோமானால், முக்கியமாகக் கூறவந்த கருத்திலிருந்து விலகிச்சென்றுவிடுவோம். ஆகவே இவற்றின் விளக்கங்கள் இதற்கடுத்த வேதாகம விளக்க உரைகளில் கூறப்பட்டுள்ளதை வாசித்து அறிந்து கொள்ளுங்கள். மாபெரும் உருவகமாக சொல்லப்பட்ட யுத்தமும், பூமியிலுள்ள திராட்சப்பழங்களை அறுவடை செய்வதும், தற்கால யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்து ஆயிரவருட அரசாட்சியை ஆரம்பித்து வைக்கும் (வெளி. 20:1–3) இதே மாபெரும் உபத்திரவங்களைக் குறித்த சம்பவங்களை உருவகமாக அக்கினி, புயல், பூமியதிர்ச்சி போன்ற அடையாளங்களாகக் கூறப்பட்டுள்ள மற்றப் பகுதிகளையும் ஆராய்ந்துப் பார்ப்போம். வெளிப்படுத்தலில் கூறப்பட்டுள்ள யுத்தம் மற்றும் திராட்சப்பழம் பிழியும் ஆலை ஆகியவைகள், யோவேல் 2:9–16 மற்றும் ஏசாயா 13:1–11 ஆகிய வசனங்களில் கூறப்பட்ட அதே உருவக வார்த்தைகளும், சம்பவங்களும் ஒரே தொடர்புடையதாகவும், இசைவாகவும் இருப்பதை கவனியுங்கள். இவ்வாறாக பல்வேறு அடையாளங்கள் மூலம் கூறப்பட்டுள்ள கர்த்தரின்



பெரிதும் பிரசித்தமான நாளின் தன்மைகளையும், பண்புகளையும் அறிந்து உணர்ந்துகொள்ள நமக்கு உதவுகின்றது.

## தற்கால சூழ்நிலை

கர்த்தரின் அந்த நாளைக்குறித்து தீர்க்கதரிசனங்கள் கூறும் வசனங்களை விட்டு விட்டு, உலகத்தில் தற்போது சம்பவித்துவரும் நிகழ்வுகளின் நோக்கங்களை, நாம் குறிப்பாகக் கண்டுகொள்ள விரும்புகிறோம். வேகமாக நெருங்கிவரும் சச்சரவு அதன் உச்சக்கட்டத்தை எட்டின நிலைக்கு வந்தபிறகு, சிறிது காலமே நீடித்திருக்க வேண்டியது அவசியம். இல்லாவிடில் மனுக்குலமே சர்வ நாசமாகிவிடும். இந்த யுத்தத்தில் ஈடுபடும் இரண்டு எதிராளிகள் யார் யார் என்று ஏற்கெனவே வெளிப்பட்டிருக்கிறது. ஐசுவரியமும், ஆணவமும், பெருமையும் ஒரு புறமும், மறுபுறத்தில் பரந்துவிரிந்திருக்கின்ற வறுமையும், அறியாமையும், மதவெறியும், இழைக்கப்பட்டு வரும் அநீதி குறித்த கோபவெறியும் இருக்கின்றன. இருதிறத்தாரும் சுயநல நோக்கங்களால் தூண்டப்பட்டு, நாகரிகமடைந்த உலகம் முழுவதிலும் தற்போது தங்கள் வல்லமைகளின் சக்திகளை ஒன்றிணைத்து வருகிறார்கள். கடலும் அலைகளும் சீறிப்பாய்ந்து மலைகளின்மேல் மோதி நுரை தள்ளுவதை, சத்தியத்தால் அபிஷேகம் பண்ணப்பட்ட நமது கண்களால் நாம் எங்கும் காண்கிறோம். கடலும் அலைகளும் கலகக்காரர்களாகிய திருப்தியடையாத ஜனங்களின் பயமுறுத்தல்களுக்கும், அவர்களது போராட்ட முயற்சிகளுக்கும் அடையாளமாயுள்ளன. போராடும் இவர்களது எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணமாய் உள்ளன. சமுதாயத்தில் தோன்றியிருக்கும் பல்வேறு கட்சிகளுக்கிடையே பிரிவினைகள் அதிகரிப்பதால், பூமியில் (சமுதாய அமைப்பு) அக்கினி பற்றி எரிவதும், பூதங்கள் (காரணிகள்) ஒன்றோடொன்று உரசி மோதிக்கொள்வதால் உண்டாகும் வெப்பத்தினால், அவை வெந்துருகி, நாசமாகும் நிலைக்கு தீவிரமாய்க் கிட்டிச்சேரும் என்று தீர்க்கதரிசிகள் முன்மொழிந்ததை இன்று நாம் நேரில் காண்கிறோம்.

இந்த முரண்பாடு எந்த பிரிவினரின் பக்கம் இருந்தாலும், அது ஜனங்களுக்கு துன்பத்தைகொடுத்து அவர்களுடைய சொந்த விருப்பங்கள், பழக்கவழக்கங்கள், கல்வி ஆகியவற்றிற்கு எதிராகவும் இது

இருக்கும் ஐசுவரியவான்களது எண்ணமோ, உலகத்திலுள்ள பொருட்களில் தங்களுக்கு சேர வேண்டிய பங்கைக்காட்டிலும் கூடுதலைக் கதந்தரிக்கும் உரிமையுண்டு என்றும், தொழிலாளி மற்றும் விலைபெறப் பெற்ற பயனுள்ள பொருட்களை மலிவான விலைக்கு வாங்குகிற உரிமையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளின் உந்துதல்களால் மற்றவர்களுக்கு வரும் கஷ்ட நஷ்டம் பாராமல், வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளுக்காக கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் வேலையில், தங்களுடைய உழைப்பு, புத்திக்கூர்மை மற்றும் திறமையினால் கிடைக்கும் பலனை அடையும் உரிமையும், தங்களுக்குரிய இலாபத்தை ஈட்டவும், திரளான ஐசுவரியங்களை தங்களுக்கென சேமித்து வைக்கவும், அதை அதிகரிக்கவும் உரிமை உண்டு என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். அதற்காக அவர்கள் தரும் விவரம் பின்வருமாறு: இது தவிர்க்க முடியாதது. தேவை– வழங்குதல் சட்டம் ஆளுகை செய்ய வேண்டும். ஐசுவரியவான்களும், தரித்திரரும் உலகில் இருந்துகொண்டே வந்திருக்கிறார்கள். காலை வேளையில் ஐசுவரியங்கள் அனைத்தும் சரிபாகமாகப் பிரிக்கப்பட்டாலும், சிலர் வீண் செலவு செய்தும், உல்லாசமாக ஜீவித்தும் இரவு வருவதற்கு முன்பாகவே தரித்திரர் ஆகிவிடுகின்றனர். ஆனால் மற்றவர்களோ அதிக விவேகத்துடனும், ஜாக்கிரதையாகவும் ஜீவித்து ஐசுவரியவான்களாகின்றனர். அதோடுகூட இன்னும் அவர்களது வாதம் பலமாக எழுகிறது. என்னவெனில் நன்கு சிந்திக்கும் திறனையுடையவர்கள், ஆயிரக்கணக்கான மனிதர்களை வேலைக்கு அமர்த்தி, இலாபமும், ஆதாயமும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் இன்றி, பெரும் நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று பிரமாண்டமான நிறுவனத்தை யாராவது துணிவோடு தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாமா ?

இதற்கு நேரெதிராக தொழிலாளிகளும், கைவினைஞர்களும் கூறுவதாவது: தொழிலாளர்கள் கடந்த நாட்களைப்போல் இல்லாதபடி, இன்றைக்கு ஏராளமான சலுகைகளை அனுபவித்து வருகிறார்கள். அதிக சம்பளம் கிடைக்கிறது. ஆகவே அதிகப்படியான வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடிகிறது. இவையனைத்தும் நியாயமாக எங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளே. இவற்றை நாங்கள் அனுபவிக்கக் கூடாதபடிக்கு நீண்டகாலமாக ஒரு குறிப்பிட்ட எல்லைவரை



தடையிருந்துவந்தது. ஆனால் இன்றைய நமது நாட்களில், புதிய கண்டுபிடிப்புகள், அறிவுப்பெருக்கம் மற்றும் புதிதாக உண்டாக்கப்பட்ட நவீன சாதனங்கள் இவைகளால் பெறக்கூடிய ஆதாயங்களில் நியாயமாக பங்குபெறும் உரிமை எங்களுக்கும் உண்டு. உழைப்பு களம் பொருந்தியது என்றும், இத்துடன் கல்வி, நேர்மை, நற்குணம் மற்றும் குறிக்கோள் போன்றவைகள் இணைந்திருக்குமானால், அது மற்ற தொழிலைப் போலவே கனத்திற்கும், உரிமைக்கும் உரியது. இதற்கு எதிர்மாறாக, சோம்பேறித்தனத்தை உடையவர்கள், அவர்கள் எப்படிப்பட்ட திறமைசாலிகளாயிருந்தாலும், எந்தத் தொழில் செய்பவரானாலும், அவர்களுக்கு நிந்தையையும், அவமானத்தையும் ஏற்படுத்தும். பொதுவாக பிறருக்கு ஏதோ ஒரு வகையில், உதவியாக இருந்தால் மட்டுமே, நன்மதிப்பும், பாராட்டையும் பெறமுடியும். தற்காலத்தில் நாகரீகத்திலும், பொருளாதாரத்திலும், கூர்மையான அறிவிலும், முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் பெற்றிருப்பது உண்மையே. என்றாலும் இது சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்டது என்றே நாம் எண்ணுகிறோம். எங்களுடைய முயற்சியோ அல்லது எங்களுடைய முதலாளிகளின் புத்திக்கூர்மையினாலோ அல்ல. எங்களது நிலைமையும், மற்றவர்களது நிலைமையும் முன்னேற்றம் அடைந்ததற்கு காரணம் கடந்த ஐம்பது வருடங்களாக ஏற்பட்டிருக்கும் மாபெரும் அறிவுப்பெருக்கமும் நவீன கண்டுபிடிப்புகளுமே ஆகும் என்று நாங்கள் உணர்கிறோம். இவைகள் வெகுவேகமாக வந்ததால், தொழிலாளர்களைப் போலவே முதலாளிகளும் இந்தப் பெரும் அலையினால் மேலான அந்தஸ்துக்குக் கொண்டு வரப்பட்டார்கள். இந்தப் பெருவெள்ளத்தின் அலையானது, தொடர்ந்து உயர்ந்துகொண்டே சென்றிருக்குமானால் அனைவருக்கும் பிரயோஜனமாக இருக்குமென்று நாங்கள் திருப்திப்பட்டிருப்போம். ஆனால் காரியம் அவ்வாறு நடப்பதில்லை என்பதை நாம் காண்பதால், இப்பொழுது இளைப்பாறுதலின்றி கவலைக்குள்ளாகியிருக்கிறோம். இந்தப் பெரு வெள்ளத்தின் அலை திரும்பச் செல்ல ஆரம்பித்துவிட்டது. இதனால் அநேகர் ஐசுவரியத்திற்கு உயர்த்தப்பட்டும், ஆடம்பரம், சொத்து மற்றும் கவலையின்மை ஆகியவற்றால் பாதுகாப்பாகவும் ஸ்திரமாகவும் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் மற்ற சாதாரண மனிதர்களோ அவ்வாறு பாதுகாப்பாக நிலைத்திராமல் முன்பு ஒருபோதும் இல்லாதவாறு தாழ்ந்த நிலைமையில், தற்போது வற்றிப்போகும் நீரோட்டத்தின் கீழே

கொண்டுசெல்லப்படுவதற்கு ஏதுவான அபாயத்திலிருக்கிறார்கள். இதனால்தான் காலம் கடந்துபோவதற்கு முன்பாகவே எங்களுடைய தற்கால நிலைமையும், வருங்கால நிலைமையும் வளர்ச்சியடைவதற்கு ஏற்ற நன்மையானவற்றை உறுதிபடுத்திக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய நாங்கள் முயன்று வருகிறோம்.

இந்த விவரத்தை வேறு வார்த்தைகளில் கூறுவோமாகில், தொழிலாளர்களும், கைவினைஞர்களுமாகிய நாங்கள் காண்பது என்னவெனில், எல்லா மனுக்குலமும் அந்த நாளின் ஆசீர்வாதங்களில் அதிகமதிகமாய்ப் பங்கு பெற்றபோதிலும், வியாபாரம் பண்ணுவதற்கேற்ற திறமையை உடையவர்களாயிருந்து, அல்லது இயல்பாகவே அத்திறமையைச் சுதந்தரித்துக் கொண்டோ, அல்லது பொய் ஏமாற்றுதல் போன்ற வஞ்சகத்தாலோ இலட்சக் கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு உரிமையாளராகின்றனர். இவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் மேன்மையான அந்தஸ்தை அடைந்ததோடு, புதிதாக இயந்திரங்களைக் கண்டுபிடித்ததின் பலனாக வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் குறைந்து, இதனால் இவர்களது ஐசுவரியம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகும் நிலையில் இருக்கிறார்கள். நவீன இயந்திரங்கள் வேலையைச் சுலபமாக்குவதால், வேலை கிடைப்பது கடினமாகிவிட்டதோடு, வேலை பெறுபவர்களாகிய சிலர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த வேலைகளையும் தங்கள் வசம்கொண்டுவருவதால், அதிகரிக்கும் அவர்களது வல்லமைக்கு எதிராக பெருகிவரும் தொழிலாளர்களைக் காப்பதற்காக, ஏதாவது முயற்சி நாங்கள் செய்யாவிடில், தற்காலத்தில் நிலவும் சூழ்நிலையும், கொடூரமான தேவை மற்றும் வழங்குதல் சட்டங்களும் எங்களைக் கூடிய விரைவில் விழுங்கிவிடும் அபாயம் உண்டு. தற்கால நிலைமைகளைக் காட்டிலும், வருங்கால நிலைமை இன்னும் அதிக கேடாக இருக்குமாதலால், இந்த அபாயத்தைத் தடுப்பதற்காக நாங்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகிறோம். வெளிநாடுகளிலிருந்து வருபவர்களாலும், இயற்கையினாலும் எங்களுடைய எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்துவருவதோடு, ஆட்களில்லாமல் வேலை செய்யும் இயந்திரங்களும் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது. ஆகவே வேலை தேடும் நபர்களின் எண்ணிக்கை



அதிகரித்தும், தொழிலாளர்களின் தேவை குறைந்தும் வருகிறது. ஆகவே, தேவை–வழங்குதல் என்னும் இயற்கையான சட்டம் தடைபடாமல் தொடருமேயானால், தொழிலாளிகளை அவர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்த அவர்களுடைய பழைய நிலைமைக்கு சீக்கிரமாகக் கொண்டுவந்து, நம் காலத்தில் முதலாளிகளின் கைகளில் இப்பொழுது இருக்கிற அனைத்து வசதிகளையும் சேர்த்துவிடும். இந்த ஆபத்தைத் தடுக்கவே நாங்கள் முயன்று வருகிறோம்.

அறிவுப்பூர்வமானதும், நேர்மையானதுமான சட்டங்களாலும், விவேகத்தினாலும் அநேக உன்னதமான ஆசீர்வாதங்களைக் கட்டுப்படுத்தி, முறைப்படுத்தாவிடில், இறுதியில் காயத்தை ஏற்படுத்தும் என்று நீண்ட காலத்திற்கு முன்பே தெரிந்திருந்தது. ஆனால் வேலையைக் குறைக்கும் இயந்திரங்களை அடுத்தடுத்துப் புதிது புதிதாக தயாரிப்பதற்கு ஆரம்பத்தில் அதிகமான பணியாளர்கள் அவசியமாயிருந்ததினால், இந்த ஆசீர்வாதங்களினால் வருங்காலத்தில் வரக்கூடிய தீமை முழுவதுமாக வெளிப்படாதிருந்தது. நவீன கண்டுபிடிப்புகள் ஒன்றை அடுத்து மற்றொன்று வெளிப்பட்டபடியால் பொருட்களின் விலைமதிப்பும், வேலை செய்பவரின் ஊதியமும், முதலீடும் அறிவுப்பெருக்கமும் வீழ்ச்சியடைய ஆரம்பித்து படிப்படியாக அதிகரித்து வருகிறது.

கடந்த சில வருடங்களாக விவசாயத்துக்கடுத்த வேலைகளைச் செய்வதற்கு ஏராளமான எண்ணிக்கையில் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால், ஐந்து நபர்கள் செய்து வந்த வேலையை ஒருவர் மட்டுமே செய்ய முடிகிறது. இது இரண்டுவிதமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. முதலாவதாக மூன்று மடங்கு ஏக்கர் நிலம் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. ஆனால் ஐந்து வேலையாட்கள் செய்து வந்த வேலையை மூன்று பேர் மட்டுமே செய்ய நேரிடுகிறது. இதனால் இரண்டு நபர்கள் வேலை இழந்து வேறு வேலைத் தேடவேண்டியுள்ளது. இரண்டாவதாக முன்னர் பதினைந்து நபர்கள் இயந்திரமின்றி செய்து வந்த வேலையை மூன்றுபேர் மட்டுமே இயந்திரங்களைக் கொண்டு செய்கிறார்கள். மற்ற தொழில்களிலும் இதே மாறுதல்கள் அல்லது இன்னும் அதிகமாக ஏற்படத் தொடங்கின. இதற்கு உதாரணமாக, இரும்பு மற்றும் எஃகு உற்பத்தித் துறையைக் கூறலாம். இதன் வளர்ச்சி அரிதாக

இருந்தபோதிலும், முன்னர் பன்னிரண்டு நபர்கள் செய்த வேலையை ஒரு நபர் மட்டுமே செய்கிறார். இதனால் இதில் பணியாற்றிவந்த வேலையாட்களின் எண்ணிக்கை குறைகின்றது. ஆனால் இன்னும் சில வருடங்களுக்குள் அதிகப்படியான இரும்பு உற்பத்தி செய்யப்பட்டிருக்கும். தேவைக்கதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால், தொடர்ந்து உற்பத்தி அதிகப்படுத்துவதற்கு பதிலாக குறைக்க வேண்டியிருக்கும். ஏனெனில் இரயில் தண்டவாளங்கள் உலகம் முழுவதும் தேவைக்கதிகமாக அமைக்கப்பட்டாயிற்று. மேற்கொண்டு இதன் பராமரிப்புப் பணிகளுக்குக் குறைந்த அளவு இரும்பு மட்டுமே தேவைப்படும். இதனைத் தற்போதுள்ள ஐம்பது விழுக்காடு நிறுவனங்களில் உற்பத்தி செய்யும் இரும்புகளே போதுமானவை.

பொருட்கள் தேவைக்கு மீறி அதிகப்படியான உற்பத்தி செய்யப்படுவதினால், முதலீடும், வேலையாட்களும் குறைவாக பயன்படும் நிலைமை உலகத்தில் உருவாகும். அதே சமயத்தில் வேலையில்லாப் பிரச்சனையின் காரணமாக சிலர், ஆடம்பரமானவற்றையும், ஜனங்களுக்கு அவசியமானவற்றையும் அடையத் தேடுவதன் மூலம், அதிகப்படியான உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு பரிகாரம் பண்ண முயற்சிப்பார்கள். அதிகப்படியான உற்பத்தியும் மற்றும் வேலை இல்லா திண்டாட்டமும் அதிகரிக்கும். இதற்குத் தீர்வுகாண சமுதாய சீர்திருத்தவாதிகள் முயற்சித்து வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

பொருட்களின் உற்பத்தி தேவைக்கு மேலாக அதிகரிக்க அதிகரிக்க விற்பனை செய்வோரிடையே போட்டி அதிகமாகி, முதலீடு செய்தவருக்கு உலகமுழுவதும் இலாபம் பெருமளவு குறையவும் சில கம்பெனிகளில் லாபத்திற்கு பதிலாக நஷ்டம் உண்டாகவும் செய்யும். ஆனால் இதுவரைக்கும் அதிக இலாபம் சம்பாதித்து வந்தவர்கள் நஷ்டமடைவதும் துன்பப்படுவதும் திரளான வேலையாட்கள் கஷ்டப்படுவதைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இப்படிப்பட்ட காரணக் காரியங்களின் அடிப்படையில் கூலித் தொழிலாளர்கள் கீழ்க்கண்ட பலன்களை அடைய முயற்சிக்கிறார்கள்— சட்டபூர்வமாகவோ பொதுமக்களின் கூக்குரல் கேட்கப்படாமலும், அவர்கள்மேல் அக்கறை காட்டப்படாமலும்



இருக்கும் தேசங்களில் பலவந்தமாகவும், அராஜகத்தின் மூலமாகவோ முயற்சி செய்கிறார்கள்.

கீழ்க்கண்டவைகள் தீர்மானிக்கப்படுகின்றன: பணியாட்களின் திறமைக்குத் தக்கதாகவும் அல்லது அதிக பளுவுள்ள வேலைக்குத்தக்கதாகவும் பணிபுரியும் நேரங்கள் குறைக்கப்படவும், ஊதியம் குறைக்கப்படாமலும் இருக்க வேண்டும். அப்பொழுது பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்காமலும் அதேசமயத்தில் அதிகப்படியான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத்தரவும் ஏதுவாகும். இதனால் உற்பத்தி செய்த பொருட்களை ஜனங்கள் விலைகொடுத்து வாங்கக்கூடியதாக இருப்பதன் மூலம், அதிகப்படியான உற்பத்திக் குறைந்து சமச்சீரான நிலை ஏற்படும். பணத்திற்குக் கொடுக்கப்படும் வட்டிவிகிதம் தற்காலத்தில் வாங்குவதைவிட குறைக்கப்பட்டு, நிரந்தரமாக்கப்பட வேண்டும். இவ்வாறாக ஏழை வருப்பார் அல்லது கடன் வாங்குபவர்கள் ஆதாயம் பெறமுடியும். அவ்வாறு செய்யாதவர்களுடைய பணம் திரும்பிடிக்கும்படி செய்யப்பட வேண்டும். இரயில் இரும்புப் பாதைகள் ஜனங்களுடைய சொத்தாக ஏற்படுத்தப்பட்டு, அரசாங்க அதிகாரிகளாலும், ஊழியர்களாலும் இயக்கப்பட வேண்டும். அல்லது அதற்கு உரிமையாளர்களாக இருக்கின்றவர்களின் சுதந்தரம் கட்டுப்படுத்தப்பட்டு, பொது ஜனங்களின் நன்மைக்கேதுவாக கட்டணங்கள் முறைப்படுத்தப்பட வேண்டும். பொருள் மதிப்பு அதிகமாக்கப்பட்டிருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இரயில்வே இரும்புப்பாதைகளின் முதலீட்டுத் தொகையானது, பொருள் மதிப்பு குறைந்த பிறகு அம்மதிப்புக் குறைக்கப்படுவதற்குப் பதிலாக, முந்தைய மதிப்பைக் காட்டிலும் இரண்டு அல்ல மூன்று மடங்கு அதிகப்படுத்தப்பட்டது. இதன் காரணமாகவும் மற்றும் இந்த முதலீட்டுக்குக் கொடுக்கப்படும் வட்டியும், இலாபமும் சேர்த்து பழைய மதிப்பீட்டின்படி கணக்கிடப்படுவதாலும், இவ்வட்டித் தொகை மட்டும் இப்பொழுது அந்த இரும்புப் பாதைகள் புதிதாய் அமைப்பதற்கு எவ்வளவு செலவாகுமோ, அதற்கு நான்கு மடங்கு அதிகமாக இருப்பதாலும், பொது மக்களின் பயணச் செலவும், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செலவும் எல்லை மீறிச் சென்று துன்பத்தை உண்டாக்குகிறது. ஆகவே விவசாயிகள் தானியங்களை ஏற்றுமதி செய்வதைவிட அவைகளை எரிபொருளாக

உபயோகப்படுத்துவது இலாபமாக இருக்கிறது. இப்படியாக விவசாயிகளுக்கு அதிக ஆதாயம் அளிக்காமல் இருந்தும் உணவுப்பொருட்களின் விலை அதிகரிக்கிறது. ஆதலால் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண ஓர் ஆலோசனையை முன் வைக்கிறோம். இரயில்வே இருப்புப் பாதைகள் அமைக்கும் நிறுவனத்தார் தங்களிடத்தில் முதலீடு செய்திருக்கிற பங்குதாரர்களுக்கு, இப்பொழுது அளித்துவருகிற தற்கால மதிப்பைக் காட்டிலும், மூன்று, நான்கு மடங்கு அதிகமாக ஆரம்பகால மதிப்பின்படி நூற்றுக்கு நான்கு முதல் எட்டு சதவீதம் வட்டி கொடுக்காமல், தற்கால மதிப்பின்படி, நூற்றுக்கு நான்கு சதவீதம் கொடுக்க வேண்டும். இரயில்வே நிறுவனங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் இலாபத்தை நிர்ணயிக்கிறபடியால், போட்டியிடுவதற்கு இடமில்லாமல் போகிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒழுங்கு செய்யப்படுமானால் பொது நன்மைக்கு வழி பிறக்கும்.

தாங்கள் முதலீடு செய்த பணத்திற்கு இலாபம் குறைந்து வருவதை கண்ணால் காண்பதும், ஜனங்கள் தங்களுக்குக் கொடுத்த சுதந்தரத்தைப் பயன்படுத்தி கொள்ளையடிக்கும் உரிமைகளை இழந்துபோவதும், இரயில்வே நிறுவனங்களுக்கு துயரத்தை வருவிக்கும் என்பதால், அவர்கள் தங்களுக்கு அநியாயம் செய்யப்படுவதுபோல் எண்ணி, தொழிலாளர்களாகிய எங்களுடைய முயற்சிகளை செயலிழக்கச் செய்து, தங்களால் இயன்றவற்றைச் செய்வார்கள் என்றும் நாங்கள் அறிவோம். ஆனால் இதுவரையிலும் அவர்கள் அபகரித்த சொத்துக்களை நாங்கள் கண்டுகொள்ளாமலும், கைப்பற்றாமலும் இருப்பதற்கே அவர்கள் நன்றி பாராட்ட வேண்டும். பெரும்பாலான ஜனங்கள் தற்கால ஆசீர்வாதங்களை சமமாய்ப் பகிர்ந்துகொள்வதற்கு ஏற்றகாலம் வந்திருக்கிறது என்று நாங்கள் எண்ணுகிறோம். அதிகாரம், பணம் இவற்றினால் பெருத்துப் பேராசைக்கொண்டிருக்கும் பெரிய நிறுவனங்கள், மனிதர்களை ஒடுக்கும் செயல்பாடுகளை கட்டுப்படுத்தி பொது ஜனங்களுக்கு நியாயமான விலையில் சேவை செய்ய அரசாங்க சட்டங்களின் மூலம் கட்டாயப்படுத்த வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட முறைகளின்படி அல்லாமல் வேறு எந்த வழியிலும் பொது ஜனங்கள் இந்நாளின் ஆசீர்வாதங்களை பெறமுடியாது. மாபெரும் நிறுவனங்கள் பெரும் முதலீடுகளைச் செய்து பெரும்பாலும் நன்மையையும், ஆதாயத்தையும் அளிக்கிறது என்பது உண்மையே.



ஆனாலும் இப்பொழுது நாங்கள் காண்பது என்னவெனில், அவைகள் நன்மையைத் தருவதற்குப் பதிலாக ஜனங்களை ஆளும் அதிகாரிகளாகிறார்கள். இது தடுக்கப்படாவிடில் கூலி தொழிலாளர்களை வறுமையிலும், நிர்ப்பந்தத்திலும் ஆழ்த்தி, விரைவில் அவர்களை அடிமைகளாக்கிவிடும். வசதி படைத்த அநேக ஜனங்கள் சேர்ந்த நிறுவனங்கள் எல்லாம், அமெரிக்க பொதுஜனங்களிடமும், பிரிட்டனின் பிரபுக்களிடமும் மற்றும் ஐரோப்பா அனைத்திலும் இதே உறவை ஆக்கிரமித்துக்கொண்டு அதிக வல்லமையுடையவைகளாய் இருக்கின்றன.

தொழிலாளர்களாகிய எங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு ஓர் ஒழுங்குள்ள ஓர் அமைப்பு அவசியமானது. பொது ஜனங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படாவிடில், மாபெரும் வல்லமையும், ஆதிக்கமும் மிக்க இந்த நிறுவனங்களுக்கு எதிராக எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் தொழிற்சங்கங்களை ஏற்படுத்தினாலும் எங்களது குறிக்கோள் குழப்பத்தையும், கலகத்தையும், அநீதியையும் எந்த வகுப்பாருக்கும் எதிராக வருவிப்பதோ, அநியாயம் செய்வதற்கோ அல்ல என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். பொது ஜனங்களாகிய நாங்கள் எங்கள் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற எளிமையான நோக்கத்தை உடையவர்கள். அவ்வாறில்லாவிடில் நாங்களும், எங்களது குழந்தைகளும், அதாவது வல்லமையாலும், உடைமைகளாலும் நசுக்கப்படுவோம். அவர்களுடைய வல்லமையும், ஐசுவரியங்களும் முறையாகக் கட்டுப்படுத்தப்பட்டு, உபயோகிக்கப்படுமானால், அனைவருக்கும் அதிகமான ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும். அவர்கள் ஒரே வார்த்தையைச் சொல்லி முடிக்கிறார்கள்: "பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறாயோ அதையே நீ அவர்களுக்கும் செய்" என்ற பொன் மொழியை நாங்கள் நிலைநிறுத்துவோம்.

மேலே குறிப்பிடப்பட்ட அறிவுப் பூர்வமான எளிய வழிமுறைகள் பின்பற்றப்படுமானால் அது இருதரப்பினருக்கும் ஆரோக்கியத்தை அளிக்கும். ஐசுவரியவான்கள் தற்காலத்தில் தாங்கள் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்களோடு திருப்தியடைந்து, அனைத்துத் தரப்பு

ஜனங்களும் நிரந்தரமாக வளர்ச்சியடைய வேண்டுமென்று விருப்பங்கொண்டு, அவர்களுக்கு ஒத்துழைப்பதும், தொழிலாளர்கள் நியாயமானக் கோரிக்கைகளை மட்டும் பெற்று அளவோடு மேன்மையடைவதில் திருப்தி காண்பதும், இராஜரீகப் பிரமாணமாகிய அன்பும், நீதியும் கடைபிடிக்கப்படவும் சாத்தியமானால் மிகவும் நலமாக இருக்கும். ஆனால் தற்கால நிலைமையில் மனிதர்கள் இந்த இராஜரீகப் பிரமாணத்தை வற்புறுத்தினாலொழிய கடைப்பிடிக்க மாட்டார்கள். தொழிலாளர்களில் சிலர் நீதியும், நன்னெறியும் உள்ள கருத்துக்களைக் கொண்டிருந்தபோதிலும், பெரும்பான்மையானோர் அவ்வாறு இராமல், அறியாமையும், அடங்காதவர்களாயிருந்து புத்தியுள்ளவர்களாக நடவாமல் அவர்களது கருத்துக்களையும் கோரிக்கைகளையுமே வலியுறுத்துவார்கள். முதலாளிகள் எந்தளவு விட்டுக்கொடுக்கிறார்களோ அந்தளவுக்கு அவர்களுடைய கோரிக்கைகளும் யோசனைகளும் அதிகரிக்கும். அறிவற்ற ஏழை ஜனங்களின் திமிரும் ஆணவமும் இரண்டு மடங்கு இருக்கும் என்பது அனுபவமுள்ள யாவரும் அறிந்ததே. ஐசுவரியவான்களில் சிலர் தொழிலாளர்களுக்காக இரக்கப்படுபவர்களாகவும், அவர்களுக்கேற்ற சீர்திருத்தங்களை படிப்படியாக செயல்படுவதற்கு ஒத்துழைப்பவர்களாயும் இருப்பர். ஆனாலும் அவர்கள் ஒரு சிலராக மட்டும் இருப்பதனாலும், செயல்படுத்த வல்லமையற்றவர்களாக இருப்பதனாலும் அவர்களுடைய எண்ணங்கள் மதிப்பிழந்து போகிறது. இவர்கள் தங்களுடைய சொந்தக் காரியத்தில்கூட தங்களது சுய தீர்மானத்தின்படி செய்ய முடியாதவாறு பெரிய சங்கங்களுக்குக் கட்டப்படுகிறார்கள். இவர்கள் வியாபாரிகளாகவோ அல்லது கைதொழில் செய்யும் உரிமையாளர்களாகவோ இருந்து, வேலை செய்யும் நேரத்தை குறைக்கவோ அல்லது கூலிப்பணத்தை உயர்த்தவோ முடியாது. போட்டியாளர்கள் இவர்களுக்கு எதிராக நின்று இவர்களுக்கும், இவர்களுடைய பொருட்களுக்கும் இவர்களிடம் வேலை செய்பவர்களுக்கும் சேதத்தை விளைவிப்பார்கள்.

“யேகோவாவின் நாளில்” மகா உபத்திரவத்திற்கான காரணம் எதார்த்தமாகவே இருக்கும் என்பது நமக்கு நன்கு விளங்குகின்றது. சுயநலமும், குருட்டாட்டமும் பெரும்பான்மையான பிரச்சனைகளுக்குரிய முதலாளிகளையும், தொழிலாளிகளையும் கட்டுப்படுத்துகிறது.



தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுக்கு நலமானதைத் தேட முயற்சி செய்வார்கள். ஆனாலும் சுயநலம் அவர்களது ஐக்கியப் பிணைப்பை அறுத்துவிடும். மேலும் ஒவ்வொருவரும் தன்தன் இலாபத்தைத் தேடி, சதி ஆலோசனைகளில் ஈடுபட முயற்சி செய்வர். பெரும்பாலானோர் ஆணவத்தினாலும், அறியாமையினாலும் தங்கள் கையில் ஆளுகையை எடுத்துக்கொண்டு, புத்தியில் சிறந்தவர்களின் அதிகாரத்தைப் பறித்து, அவர்கள் ஏற்படுத்திய ஒழுங்குகளை தள்ளிவிடுவார்கள். முதலீட்டாளர்கள் எவ்வளவு இலாபம் சம்பாதிக்கிறார்களோ, அந்தளவுக்குத் தொழிலாளருக்கு அளிக்கப்பட்டாக வேண்டுமென்று வற்புறுத்தி அனைத்து கோரிக்கைகளையும் தீர்க்கச்சொல்லிப் போராடுவார்கள். முதலாளிகள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதனால் கலகம் வெடிக்கும். பொதுவான எச்சரிக்கையிலும் அவநம்பிக்கையிலும் முதலீடுகளை பொது மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து திரும்ப பெற்றுக்கொள்வார்கள். வியாபார மற்றும் பொருளாதார சீரழிவு ஏற்படும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து தூக்கியெறியப்படுவார்கள். இதன் முடிவில் விரக்தியடைவார்கள். பிறகு சட்டம் ஒழுங்கு சீரழியும். மலைகள் (இராஜ்யங்கள்) கொந்தளிக்கும் கடலில் அமிழ்ந்து போகும். இவ்விதமாகவே பூமியிலுள்ள சமுதாய அமைப்புகளும், வானமண்டல அரசாங்கங்களாகிய மதமும், அரசியலும் கலந்த அமைப்பும் வெந்து உருகிப்போம். பெருமையுள்ளவர்கள் அனைவரும், தீமை செய்கிற எல்லாரும் பதரைப்போல் ஆவார்கள். வலிமை மிக்க மனிதர்கள் மன வேதனையில் அழுது புலம்பவும், ஐசுவரியவான்கள் கதறி ஊளையிடவும், திரளான ஜனங்கள் மீது பயமும், துயரமும் வரும் காலமாக இருக்கும். இப்பொழுதும்கூட நமது கர்த்தர் முன்னுரைத்ததுபோல், உலகத்திற்கு வரும் சம்பவங்களை முன்னரே நோக்கிப்பார்க்கும் திறனுடைய ஞானிகளும், அறிவாளிகளுடைய மனம் சோர்ந்து போகிறது. (லூக். 21:26) இந்தப் பெரும் அதிர்ச்சியில் பெயர் சபைகளில் அனைத்துப் பிரிவுகளும் அரசாங்கங்களோடும், ஐசுவரியவான்களோடும் சேர்ந்து, திரளான ஜனங்களின் மதிப்பை இழந்து, இறுதியில் தற்கால அரசாங்கங்களோடு சேர்ந்து அழிந்து அகன்றுபோம் என்று சத்திய வேதாகமம் நமக்குக் காண்பிக்கிறது. இவ்வாறாக வானங்கள் (மதாதீயான ஆளுகை) வெந்துருகி, பேரிரைச்சலோடு அகன்றுபோகும்.

சுயநலமும், அறியாமையும் ஆட்சி செய்யும்வரையில் மனிதனின் திட்டங்கள் எவ்வளவுதான் ஞானமாகவும், ஒழுங்காகவும் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அவைகள் பயனற்றவைகளாய் முடியும் என்கிற விசேஷமான பாடத்தை உலகம் கற்றுக் கொள்வதற்காகவே இவையனைத்தும் சம்பவிக்கும். மனிதரிடமிருந்து கல்லான இருதயம் அகற்றப்பட்டு, ஆதியில் பெற்றிருந்த தேவ சாயலை அடையும் வரைக்கும், நீதியும், வல்லமையும் மிகுந்ததும் அனைத்துத் தரப்பினரையும் அடக்கி ஆளக்கூடியதுமான உறுதியுள்ள ஓர் அரசாட்சி ஸ்தாபிக்கப்பட்டால் மட்டுமே இத் துன்பங்கள் அனைத்தும் தீரும் என்று அப்பொழுது உலகம் உணர்ந்துகொள்ளும். இத்துன்பக் காலத்தில் தண்டனைகளையும், பாடங்களையும் யேகோவா தேவன் அனுமதித்தப் பிறகு, கிறிஸ்துவின் ஆயிரமாண்டு அரசாட்சி ஆளுகை செய்யும் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (எசே. 11:19, 36:25, 36; எரே. 31:29–34; செப். 3:9; சங். 46:8–10)

மனிதனுடைய வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட சுயநலத்தினாலேயே இயல்பாகவும், தவிர்க்க முடியாததாகவும் இந்த உபத்திரவக் காலம் அமைந்து விட்டது என்பதைக் கர்த்தர் முன்னறிந்து உரைத்திருந்தார். அவர் கொடுத்த கட்டளைகளும், போதனைகளும் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான ஜனங்களால் தள்ளிவிடப்படும் என்றும், இதன் காரணமாக வரும் துன்பக்காலத்தில், எவ்வாறு அதன் தீமையை உணர்ந்துகொள்வார்கள் என்றும், எவ்வாறு இராஜ்யத்தின் அதிகாரம் அவர்களை கீழ்ப்படியும்படி நிர்பந்தப்படுத்தும் என்றும், கர்த்தர் முன்னறிந்து தெரிவித்திருக்கிறார். வரவிருக்கின்ற கொடிய காலத்தைப் பற்றி அறிகிற அனைவரும் தங்களையும், தங்களுடைய காரியங்களையும் ஒழுங்குப் படுத்துவது அவசியமானது. மனத்தாழ்மையை அணிந்திருக்கிற உலகத்தாரில் சிலருக்கும், கிறிஸ்துவின் சரீர அங்கங்களுமாகிய சாந்த குணமுள்ள அனைவருக்கும் நாங்கள் கூறுவது என்னவெனில், "தேசத்திலுள்ள எல்லா சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை (அவரது சித்தத்தை) நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்." (செப். 2:3)



ஒருவனும் தேவ கோபத்திற்கும் முழுவதும் நீங்கலாக மாட்டான். ஆனால் நீதியைத் தேடி சாந்தகுணத்தில் சந்தோஷப்படுகிறவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் மேன்மையான நிலையில் வைக்கப்படுவார்கள். அவர்களுடைய வாழ்க்கை முறையும், பழக்கவழக்கங்களும், செய்கைகளும், சிந்தனையும், நீதியின்மேல் இரங்குகிற குணமும் தற்கால சூழ்நிலையை அறிந்து உணரக்கூடிய தன்மையையும் வேதாகமம் இந்த உபத்திரவத்தைப் பற்றியும், அதன் வெளிப்பாடுகளைப் பற்றியும் கூறுவதை உற்று நோக்கவும், மதிக்கவும் துணை புரியும். இதன் காரணமாக அவர்களுடைய துன்பம், பிறரைப்பார்க்கிலும் இலேசானதாகவே இருக்கும். விசேஷமாக திகிலும் அலைக்கழிப்பும் இருக்காது.

சத்திய வேதாகமத்தால் போதிக்கப்படாதவர்களுக்கு கர்த்தருடைய நாளில் நடைபெறும் சம்பவங்கள் வஞ்சிக்கப்படுவதற்கு ஏதுவாக இருக்கும். அக்கினி பதரை சுட்டெரிக்கும் விதமாக திடீரென்று அந்த நாள் வரும். (செப். 2:2) கடந்த யுகங்களில் காரியங்கள் மெதுவாக நடந்ததைப் போன்று இக் காலத்தில் இராது. ஆனால் சிலர் தவறாக எண்ணுவதுபோல் இருபத்து நான்கு மணி நேரத்தில் திடீரென்று வானத்தில் மின்னும் மின்னலைப்போல கர்த்தருடைய நாளின் சம்பவங்கள் நிறைவேறித் தீராது. "இரவில் திருடனைப் போல்" அந்த நாள் வரும் என்று சொல்லப்பட்டிருப்பதன் காரணம், அது சமீபமாய்க் கிட்டிச் சேர்வது இரகசியமாக இருப்பதால் உலகத்தார் கண்டுணராதிருப்பர் என்பதாலேயே ஆகும். இந்த நாளின் உபத்திரவம் கொடிய வேதனையைத் தரும். அந்நாளில் கொந்தளிப்பு வருவதும், அடங்குவதும், மீண்டும் எழுவதுமாக முடிவானது வரும் வரை இருக்கும். அப்போஸ்தலர் குறிப்பிடுகிறபடி, "கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறது போல" இருக்கும். (1 தெச. 5:2, 3) நீதி வாசமாயிருக்கும் புதிய வானமும் (கிறிஸ்துவின் ஆவிக்குரிய அதிகாரம்) புதிய பூமியும் (புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட சமுதாயம்) பிறந்த பிறகே அமைதியும், விடுதலையும் கிடைக்கும். (2 பேதுரு 3:10, 13) ஸ்தாபிக்கப்படப்போகும் புதிய ஒழுங்குமுறையில், சுயநலத்திற்கும், அதிகாரத்துக்கும் பதிலாக நீதியும், அன்புமே சட்டமாயிருக்கும்.

தற்கால அரசாங்கங்கள்மேல் திடீர் திடீரென வரும் வேதனைகள் ஒவ்வொன்றும் அதன் வலிமையையும், ஊக்கத்தையும் தளர்வுறச் செய்து

வேதனையை அதிகரிக்கும். மனித சமுதாயத்தின் மருத்துவர்களாக விளங்கும் அரசியல் பொருளாதார நிபுணர்கள், சமுதாய விடுதலைக்காக உதவும்பொருட்டு செய்யக்கூடிய நன்மையான ஒரே காரியம், வரவிருக்கும் புதிய ஒழுங்கிற்கு ஏற்றவைகளைச் செய்வதும் அதற்கேற்றவாறு படிப்படியாக அதை ஆயத்தப்படுத்துவதுமே ஆகும். இத்துன்பத்தை நீக்கிவிட முயற்சி செய்வது வீணானது. ஏனெனில் இது சம்பவிக்க வேண்டுமென்று தேவன் தீர்மானித்திருக்கிறார். மனுக்குல சமுதாயத்தின் மருத்துவர்கள், இத்துன்பத்துக்கான உண்மைக் காரணம் என்னவென்றும், அதன் அவசியம் என்னவென்றும் அது உடனடியாக நடைபெற வேண்டுவதற்கான காரணம் என்னவென்றும் அறிந்துணராதிருப்பார்கள். இதன் காரணமாக அதனைக் கட்டுப்படுத்தி குறைக்க முயற்சிப்பார்கள். ஒவ்வொரு முறையும் அதிதீவிரமாய் உபத்திரவம் ஏற்பட்டு, பின் அடங்கும்பொழுது அது மீண்டும் எழாதபடிக்கு எதிர்த்து நின்று பாதுகாக்கும் ஏற்பாடுகளைச் செய்ய முயன்றாலும், இவையனைத்தும் வேதனையை அதிகரிக்குமேயன்றி குறைக்காது. அவர்களுடைய முயற்சிகள் புதிய ஒழுங்கின் பிறப்பை தாமதிக்கச் செய்யாது. மாறாக, அவர்களுடைய தவறான நடவடிக்கை நோயாளியை அழிக்கும். ஏனெனில் பழைய ஒழுங்குகள் அழிந்து புதிய ஒழுங்கு உதயமாகும்.

அப்போஸ்தலன் உருவக மொழியில் பேசியிருக்கிறதை நாம் பின்வருமாறு எளிமையாகக் கூறலாம். முதலாளிகளுடைய கட்டுப்பாட்டிலிருந்தும், இயந்திரங்களினால் ஏற்பட்ட கேடுகளிலிருந்தும் திரளான ஜனங்கள் தங்களை விடுவித்துக்கொள்ள எடுக்கும் முயற்சிகள் வீணானதாக இருக்கும். அவர்களின் ஏற்பாடுகளும், திட்டங்களும் அரைகுறையாகவும், நிறைவில்லாததாகவும் இருந்ததன் காரணமாக, தேவைக்கேற்ப வழங்குதல் என்றும் சட்டத்தைத் தகர்க்க எடுத்த முயற்சிகள் வீணாய்போனது. தொழிலாளர்களின் முயற்சிகள் ஒவ்வொன்றும் வெற்றியடையாததைக்காணும் முதலாளிகளின் நம்பிக்கை அதிகரித்து, தங்கள் திறமையினால் அரசாங்கத்தோடு சேர்ந்துகொண்டு, அவர்களை அடக்கி ஆள்வதற்கு தங்கள் வல்லமையை பிரயோகிக்கத் தொடங்குவார்கள். இதன் காரணமாக சமுதாய அமைப்புகள் அனைத்தும் உடைந்து, சட்டம் ஒழுங்கற்ற குழப்ப நிலை உருவாகும். இதனால் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த, "உலகம் தோன்றினது முதல் இதுவரை



சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மகா உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்." "இனிமேல் இந்த உபத்திரவம் சம்பவியாது" என்று தேவன் உறுதியுடன் உரைத்திருப்பதற்கு நன்றி தெரிவிக்கிறோம்.

மோசே முன்னுரைத்த தன்னைக் காட்டிலும் பெரியவரானவரால் உலகத்தார் விடுதலைப் பெறுவார்கள் என்பதை, எகிப்திலிருந்தும் எகிப்தின்மேல் வந்த வாதைகளிலிருந்தும் இஸ்ரயேலர் விடுதலைப் பெற்று மீட்கப்பட்டது காண்பிக்கிறது. மேலும் மனிதனைப் பாவத்திற்கும், தவறுகளுக்கும் அடிமையாக வைத்திருக்க விரும்பும் சாத்தான் மற்றும் அவனுடைய கூட்டத்தாரின் கண்ணிகளிலிருந்தும் விடுதலைப் பெறுவதை இது குறிக்கும். எகிப்தியர்மேல் வந்த வாதை மீட்கப்பட்டவுடன், அவர்களுக்கு மனக்கடினம் ஏற்பட்டது. அவ்வாறே கர்த்தரின் நாளிலும் எகிப்தின்மேல் வந்த வாதைகள் ஒவ்வொன்றும் எழும்பி பின்பு அமர்ந்த போது, எகிப்தியர் தங்கள் மனதைக் கடினப்படுத்தியது போலவே, கர்த்தருடைய நாளின் துன்பம் அடங்கியிருக்கும்போது, சிலர் மனக்கடினம் அடைந்து, எகிப்தியர் இஸ்ரயேலரை நோக்கிக் கூறினதுபோலவே, "நீங்கள் சோம்பலாயிருக்கிறீர்கள், அதினால் அதிருப்தியடைந்திருக்கிறீர்கள்!" என்று ஏழையாயிருப்பவர்களிடம் சொல்லி பாரத்தை அதிகரிக்க முயல்கிறார்கள். (யாத். 5:4–23) ஆனால் இப்படிப்பட்டவர்கள் பார்வோன் கடைசி வாதையின்போது நடு இரவில் செய்ததுபோலவே, தாங்கள் ஞானமாக நடக்காததற்காகவும், அலட்சியமாக நடந்து கொண்டதற்காகவும் பின்னர் வேதனைப்படுவார்கள். (யாத். 12:30–33) மேலும் இதற்கு இசைவாக கர்த்தரின் நாளின் உபத்திரவங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் "ஏழு கோப கலசங்கள்" அல்லது "கடைசி ஏழு வாதைகள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவற்றுள் கடைசி வாதை வெளிப்படும்போது, மகா பெரிய பூமியதிர்ச்சி (புரட்சி) நிகழும். அப்பொழுது ஒவ்வொரு மலையும் (இராஜ்யம்) மறைந்து போகும். (வெளி. 16:17–20)

இந்த உபத்திரவ நாளைக்குறித்து இன்னுமொரு கருத்து என்னவெனில், தேவனால் முன்குறிக்கப்பட்ட ஏற்றசமயத்தில் அந்நாள் வந்திருக்கிறது என்பதாகும். நமது அடுத்த தொகுதியில் இந்த

உபத்திரவத்தின் நாளைக்குறித்தும், அதற்குரிய சாட்சியங்களை நியாயப்பிரமாண சாட்சியங்களிலிருந்தும், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலமாகச் சொல்லப்பட்டவைகளோடுகூட, புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களின் தீர்க்கதரிசனங்கள் மூலமாகவும், இயேசுவின் வார்த்தைகளிலிருந்தும் எடுத்துக் காண்பிக்கிறோம். இவைகள் இந்த உபத்திரவத்தின் நாள், மேசியாவின் மகிமை நிறைந்த ஆயிரவருட அரசாட்சியின் துவக்கத்தில் நிகழ்ந்தேறும் என்பதை காலக்கணக்குகள் மூலமாகத் தெளிவாகவும், எவ்விதத் தவறுகள் இல்லாமலும் எடுத்துக் காண்பிக்கின்றன. ஆயிரவருட அரசாட்சியில் நடைபெறக்கூடிய திரும்பக்கொடுத்தலின் பணிக்கு ஆயத்தமாவதற்காகவே துன்பத்தை துரிதப்படுத்துகிறது.

தீமை ஆட்சி செய்த ஆறாயிர வருடத்திற்கும், நீதியும் வல்லமையும் நிறைந்த கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் தொழிலாளர்களைக் குறைக்கும் இயந்திரங்கள் நீண்ட காலத்திற்கு முன்பாகவே கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், விழுந்துபோன மனிதனுக்கு சோம்பேறித்தனம் அதிகரித்து, அது அதிகத் தீமையை விளைவித்திருக்கும். “சோம்பேறித்தனம் எல்லா தீமைக்கும் தாய்” என்னும் பழமொழி, ஜனங்கள் அடைந்த அனுபவங்களைக் கொண்டே உரைக்கப்பட்டது. இவ்வாறாக, “நீ பூமிக்குத் திரும்புமட்டும் முகத்தின் வியர்வையில் ஆகாரம் புசிப்பாய்” என்று கட்டளையிட்ட தேவ ஞானம் இதன் மூலம் விளங்குகிறது. தேவனுடைய எல்லா ஏற்பாடுகளைப் போலவே ஞானமாக இதுவும் மனித நன்மைக்கென்றே ஏற்படுத்தப்பட்டது. கர்த்தருடைய நாளின் உபத்திரவமுங்கூட தேவனுடைய ஏற்பாடுகள் ஞானம் நிறைந்ததாய் இருப்பதை உறுதிப்படுத்துகிறது. எவ்வாறெனில் நாம் முன்னரே பார்த்தவாறு, இயந்திரங்களின் வரவால் தேவைக்கு அதிகமான உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டதாலும் இரண்டு தரப்பினரிடமும் ஏற்பட்ட சுயநலத்தால், புதிய சூழ்நிலைகளுக்கேற்ப தங்களை மாற்றி அமைத்துக்கொண்டு, இசைவாக நடக்காதபடியாலும் இத்துன்பம் ஏற்படுகிறது.

தேவன் முன்குறித்திருந்த புதியமுறைமைகள் ஏற்றவேளையில் ஏற்படுத்தப்பட்டு, அறியாமையை அகற்றி, அறிவொளியைப் படிப்படியாக



ஏற்றியும், புதிய கண்டுபிடிப்புகளை புகுத்தியும் வருவது, வேதத்தின்படி முன்னுரைத்ததும், முன்கூட்டியே இவ்வாறு நடக்கும் என்று உரைத்ததும், இப்புதிய ஒழுங்குகளை ஸ்தாபிப்பதற்கான ஏற்றவேளை இதுவே என்பதை சர்ச்சைக்கு இடமின்றி நிரூபிக்கிறது. (தானி.12:4,1) அந்த அறிவு முன்கூட்டியே வந்திருந்திருக்குமேயானால், உபத்திரவக்காலமும் முன்கூட்டியே வந்திருக்கும். சமுதாயத்தில் புயலும், அக்கினியும் ஏற்பட்ட பிறகு புதிய ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்குமானால் அது தற்காலத்தைப் பார்க்கிலும் பாவமும், அக்கிரமமும் அதிகரித்த முறைமையாக இருந்திருக்குமேயொழிய, நீதி வாசமாயிருக்கும் புதிய பூமியாக (சமுதாய ஏற்பாடுகள்) இருந்திருக்காது. தொழிலாளர்களுக்கு வேலையைக் குறைக்கும் இயந்திரங்களினால் கிடைக்கும் பயன்கள், ஏற்றவேளையில் எல்லோருக்கும் பங்கிட்டு அளிக்கப்படுமேயானால், வேலை செய்யும் நேரம் குறைந்து, விழுந்துபோன மனிதர்கள் சிற்றின்பங்களிலும், அக்கிரமத்திலும் உழன்று, தங்களது சுயாதீனத்தைப் பயன்படுத்தாமல், உடல் ரீதியாகவும், ஒழுக்கம் மற்றும் மனரீதியாகவும் முன்னேறாமல் போவார்கள். ஏனெனில் கடந்தகால வரலாறு நிரூபிக்கிறபடி, பாவமும் காமவெறியுமே விழுந்துபோன மனிதனின் அதிக விருப்பமாக உள்ளது.

திரை கொஞ்சமாக விலக்கப்பட்டிருக்கும் தற்காலம் ஆயிரக்கணக்கான வசதி வாய்ப்புகள் மனுக்குலத்திற்குக் கிடைக்க தயார்படுத்துகிறது. இது கல்வி கற்கவும், ஒழுக்க ரீதியாகவும், உடல் ரீதியாகவும் வளர்ச்சியடைவதற்கு ஏற்றகாலமாக இருக்கிறது; அதோடுகூட கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து வருபவர்களுக்கு உணவு, உடை ஆகியவற்றை அளிக்க ஆயத்தம் செய்வதற்கும் இந்த அறிவு ஏற்றகாலமாயிருக்கிறது. மேலும் மனுக்குலத்திற்கான நன்மைகள் எங்கே இருக்கும் என்பதை உபத்திரவ காலம் கண்டறியும். ஆயிரவருட அதிகாலையில் தங்களை ஆண்டு கொள்ளா அவர்களது இயலாமையை அவர்களுக்கு போதிக்கும். அப்பொழுது கர்த்தரின் நியமனத்தால், அவர்கள் அனைவரையும் மீட்டவர் இருப்புக்கோலாட்சியால் அவர்களை ஆசீர்வதிக்க ஆரம்பிப்பார். முழு அறிவு மற்றும் உதவியின்மூலம் ஆதிகால பூரணத்திற்கும், நித்திய ஜீவனுக்கும் கொண்டுவரப்படுவார்கள்.

## பரிசுத்தவான்களின் கடமையும் சலுகையும்

இந்த உபத்திரவக் காலத்தின்போது, பரிசுத்தவான்கள் ஆற்ற வேண்டிய கடமையைப் பற்றியும், தற்போது மேன்மைக்கு வந்துகொண்டிருக்கும் இரண்டு எதிரெதிரான வகுப்பாரின் விஷயத்தில் பரிசுத்தவான்களது நிலைப்பாடு எவ்விதம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் முக்கியமானக் கேள்வி எழுகிறது. இந்த உபத்திரவக் காலத்தின் பாகத்தில் பரிசுத்தவான்களில் சிலர் மாம்சத்தில் இருப்பார்கள் என்பது நிகழக்கூடியதாக தோன்றுகிறது. ஆனால் இதில் இவர்களுடைய நிலைமை மற்றவர்களுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும் வேறுபட்டதாக இருக்கும். அவர்களுக்கு அப்பமும், தண்ணீரும் குறைவுபடாதிருக்கும் என்று உறுதியாக வாக்குத்தத்தம் செய்யப்பட்டபடி, அவர்கள் அதிசயமாக காக்கப்படுவதோடு, வேத வசனங்களால் அவர்கள் உபதேசிக்கப்பட்டிருக்கிறபடி, உலகத்தில் பரவியிருக்கும் நம்பிக்கையற்றத் திகிலும், தத்தளிப்பும் இவர்களுக்கு இருக்காது. தேவ திட்டத்தின்படி முழு உலகத்தையும் ஆசீர்வதிக்கும் பணிக்காக தயார்படுத்துவதற்காகவே இந்த உபத்திரவம் அனுமதிக்கப்பட்டிருப்பதை புரிந்துகொண்டு அவர்கள், இவை அனைத்திலும் ஆறுதலும், திடனும் அடைவார்கள். சங். 91; ஏசா. 33:2–24 ஆகிய வசனங்களில் இது வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு தெய்வீக வாக்குத்தத்தங்களால் தேற்றப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற பரிசுத்தவான்களின் முதல் கடமை என்னவெனில், எங்கும் சூழ்ந்திருக்கும் துன்பங்களிலும், அதிருப்தியின் மத்தியிலும், உபத்திரவங்களையும், பாடுகளையும் இவர்களும் அனுபவித்தாலும், தேவனுடைய வசனத்தில் முன்னுரைக்கப்பட்ட, மகிமையான பலனின்பொருட்டு நம்பிக்கையும் உற்சாகமும் உடையவர்களாய் இருந்து, எப்பொழுதும் சந்தோஷமும், மகிழ்ச்சியும் உடையவர்களாக இருப்பதை உலகம் காணும்படி செய்வதேயாகும்.

"போதுமென்கிற மனதுடனேகூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்" என்று அப்போஸ்தலன் எழுதியிருக்கிறான். இது எப்போதும் உண்மையாயிருந்தாலும், கர்த்தரின் நாளில் திருப்தியின்மையே உலகத்திலுள்ள அனைத்து வகுப்பாருக்குள்ளும் இரட்டிப்பாகி,



பிரதானமான நோயாக இருக்கும். இதற்குப் பரிசுத்தவான்கள் நீங்கலாயிருந்து பிறரால் உற்று நோக்கும்படியாக இருப்பார்கள். மனநிறைவின்மை இப்பொழுது பரவியிருப்பதைப்போல் ஒருபோதும் இருந்ததில்லை. இருந்தபோதிலும் மனிதருக்கு தற்போதுள்ள அநேக தயவுகளும், ஆசீர்வாதங்களும்போல முன்பு ஒரு காலத்திலும் இருந்ததில்லை. நாம் எங்கு நோக்கினும், சாலொமோன் தன் எல்லா மகிமையின் ஐசுவரியங்களை அனுபவித்திருந்தாலும், அவர் ஒருபோதும் அறிந்திராத வசதிகளைக் கொண்ட தற்கால ஐசுவரியவான்களின் மாளிகைகளை நோக்கினும் சரி, அல்லது தற்கால சாதாரண தொழிலாளியின் பாதுகாப்பும், சுகமும், வசதியுமிக்க வீட்டை நோக்கினும் சரி, எவ்வகையில் நாம் பார்த்தாலும், வசதியான, வாழ்க்கைக்கான பொருட்களின் விநியோகம், தற்காலத்தில் அபரிதமாய் இருப்பதுபோல் சிருஷ்டிப்புக்குப் பின் எக்காலத்திலும் இருந்ததில்லை. ஆனாலும் ஜனங்கள் நிம்மதியற்று, மனதிருப்தியில்லாதவர்களாகவே இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவெனில், சீர்கெட்ட இருதயத்தின் சுயநல இச்சைகளுக்கு ஒரு எல்லையே கிடையாது. அனைவரையும் சுயநலம் ஆட்கொண்டிருக்கிறபடியால், நாம் காண்கிறபடி முழு உலகமும், செல்வத்தையும், பொருள் வளத்தையும் குவிப்பதற்காக ஒருவரையொருவர் இடித்துத்தள்ளி, ஏறமிதித்துவிட்டு, பைத்தியம் பிடித்தவர்களைப்போல நடந்துகொள்கிறார்கள். இதில் ஒரு சிலர் மட்டுமே வெற்றி பெறுகிறபடியால், மற்றவர்கள் தாங்கள் அதிர்ஷ்டசாலிகளல்ல என்று வெறுப்படைந்து, பொறாமையும், கோபமும் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் முன் எப்போதும் இராதளவுக்கு, மனநிறைவற்றவர்களாயும், துயரமிக்கவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆனால் பரிசுத்தவானோ இப்போராட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது. மகா உன்னதமான பரலோகத்தின் பரிசை அடைவதற்காக ஓடும்படி, அவன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பொருத்தனைகளை நிறைவேற்ற வேண்டும். ஆகவே அவன் வரம்பு மீறாமல் தேவைக்கேற்ப மட்டும் அடைந்து, உலகப் பொருட்களுக்காக வீணாக உழைப்பதிலிருந்தும், பூமிக்குரிய நோக்கங்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவும் வேண்டும். ஏனெனில் அவன் தன் குரு மற்றும் அப்போஸ்தலர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுகிறான்.

இவ்வாறு ஜீவிப்பதினால், போதுமென்கிற மனதுடனேகூடிய தேவ பக்தியை பரிசுத்தவான்கள் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்குக் குறிக்கோள் கிடையாது என்று இதற்குப் பொருளல்ல. மாறாக இவர்களுக்குக் குறிக்கோள் பரத்துக்குரியதாக மாற்றப்பட்டு தங்களது பொக்கிஷத்தை பரலோகத்தில் சேர்த்துவைத்து தேவனிடத்தில் ஐசுவரியவான்களாகும்படி முயற்சி செய்கிறார்கள். இதன் காரணமாகவும் வேதவசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவ திட்டத்தைப்பற்றிய அறிவினாலும், தேவன் இப்பூமியில் எந்த நிலைமையை ஏற்படுத்திக்கொடுத்தாலும் அவர்கள் திருப்தியடைவர்.

> “தேவனின் கரம் என்னை வழிநடத்துவதினால்,
> எந்த நிலைமையிலும் மனநிறைவோடிருப்பேன்”

என்று இவர்களால் மகிழ்ச்சியோடு பாடமுடியும்.

ஆனால் ஐயோ பாவம்! தேவப்பிள்ளைகள் அனைவரும் இந்த நிலைமையை அடைவதில்லை. அநேகர் இவ்வுலகத்தில் பரவிவரும் மனநிறைவின்மைக்கு ஆட்பட்டு இவ்வுலக உல்லாசங்களுக்குள் அகப்பட்டுக்கொள்கின்றனர். ஏனென்றால் இவர்கள் கர்த்தரின் அடிச்சுவடுகளை விட்டுவிட்டு, பூமிக்குரிய பொருட்களை அடையத் தேடி, நாடி, ஓடி உலகத்தாரின் திருப்தியின்மைக்குள் பங்குபெற்று, இவ்வுலகம் தரமுடியாததும், எடுத்துக்கொள்ள முடியாததுமான சமாதானத்தையும், மனநிறைவையும் பற்றி உணர்ந்துகொள்ளத் தவறியதால், இவ்வுலகத்தோடு தங்கள் பங்கை நியமித்துக்கொள்கிறார்கள்.

ஆகையால் பேராசையும், வீண் புகழ்ச்சியையும், அதினால் வரும் அதிருப்தியையும் அடையப் போராடுவதை விட்டுவிடுங்கள் என்று பரிசுத்தவான்களை வலியுறுத்துகிறோம். அதற்கு மாறாக, உன்னதமான ஐசுவரியங்களுக்காகவும், அதனால் கிடைக்கும் சமாதானத்திற்காகவும் போராடும்படி வேண்டுகிறோம். அப்போஸ்தலரின் வார்த்தைகளை அவர்களுக்கு நினைவுப் படுத்த விரும்புகிறோம்.

“போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும்கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம்



ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு (அவசியமானவைகள்) உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் (வெற்றிப் பெற்றாலும், பெறாவிட்டாலும்) சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக்கேட்டிலும், அழிவிலும், அமிழ்த்துகிற மதிகேடும், சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை (ஐசுவரியவான்களாகிலும், தரித்திரராகிலும்) எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும், தேவபக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்த குணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக (மேன்மையான உடன்படிக்கை) நல்ல அறிக்கை பண்ணினவனுமாய் இருக்கிறாய்.” (1 தீமோ.6:6–12)

இவ்வாறாக, போதுமென்கிற மனதும், எப்போதும் சந்தோஷமாயிருப்பதும், வரப்போகிற நன்மையின் காலத்தைக் குறித்த உறுதியான நம்பிக்கையினால், தற்கால உபத்திரவங்களுக்கு தங்களை மகிழ்ச்சியோடு ஒப்புக்கொடுத்ததுமாகிய அப்படிப்பட்ட பரிசுத்தவான்களின் ஜீவனுள்ள மாதிரியானது மட்டுமே உலகத்தாருக்கு விலையேறப்பெற்றப் பாடங்களாக இருக்கின்றன. இந்த முன்மாதிரியோடுகூட, தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு பரிசுத்தவான்களின் ஆலோசனையானது தங்களுடைய விசுவாசத்திற்கு இசைவானதாக இருக்க வேண்டும். அது பரிமளத் தைலத்துக்கும், குணமளிக்கும் பிசின் தைலத்திற்கும் ஒப்பாயிருக்க வேண்டும். உலகில் நிகழும் சூழ்நிலைகளின் தன்மையை சாதகமாக்கிக்கொண்டு, உலகத்தாருக்கு வரப்போகிற நன்மைகளை எடுத்துக்காட்டி, இனி வரவிருக்கிற தேவராஜ்யத்தைப் பிரசங்கித்து தற்கால துன்பங்களின் உண்மையான காரணத்தையும், அவைகளிலிருந்து விடுதலையளிக்கும் நிவாரணத்தையும் எடுத்துக்காண்பிக்க வேண்டும். (யாக்.3:14; எபி. 13:5; பிலி. 4:11)

பரிதபிக்கின்ற மனுக்குலமானது பெருகிவருகிற தீமையின் உண்மைக் காரணங்களினால் மட்டுமல்ல, அவர்களாக உண்டாக்கிக்கொள்ளும் தீமையினாலும் தவித்து வேதனைப்படுகின்றனர். விசேஷமாக தங்களுக்கு முழுவதும் மனநிறைவைத் தராத, சுயநலத்தினாலும், பெருமை நிறைந்த ஆசை இச்சைகளால் வரும் திருப்தியின்மையால் துயரமும், வேதனையும் அடைகின்றனர். ஆகவே இரு தரப்பிலிருந்து காரியங்களை ஆராய்வதால், கேட்க மனதுள்ளவர்களுக்கு அவர்கள் பெற்றிருக்கிறவைகளே போதுமென்று மன நிறைவடைந்து இருக்கவும், தேவனது ஏற்றவேளையிலும், அவரது வழியின் மூலமும், அவரது அன்பும், ஞானமும் நிறைந்த பல ஆசீர்வாதங்களை அவர்களுக்குக் கொண்டுவரும்வரை பொறுமையாகக் காத்திருக்கவும் ஆலோசனை சொல்வோமாக.

உண்மையாகவே பரவியுள்ள தீமையினாலோ தாமாக வருவித்துக்கொண்ட தீமையினாலோ ஏற்பட்ட காரியங்களைச் சோதனைச் செய்து அனல் மூட்டி எரியச் செய்வதன் மூலம், நாம் உதவிசெய்து ஆசீர்வதிப்பதற்கு மாறாக, அவர்களுடைய காயங்களை அதிகரித்து, அவர்களுடைய அதிருப்தியையும், உபத்திரவங்களையும் அதிகரிக்கிறோம். ஆனால் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பணியை நிறைவேற்றி, அனைவருக்குமாகக் கொடுக்கப்பட்ட ஈடுபலியையும், அதனால் அனைவருக்கும் வரக்கூடிய ஆசீர்வாதங்களையும் பற்றிய நற்செய்தியை பிரசங்கிப்பதால், நாம் இராஜ்யத்தின் உண்மையான செய்தியை அறிவிக்கிறவர்களையும், அதன் ஸ்தானாதிபதிகளையும் இருப்போம். அதைக்குறித்து இவ்வாறாக எழுதப்பட்டுள்ளது: "சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் இராஜரீகம்பண்ணுகிறார் என்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் (கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கங்கள்) மலைகளின்மேல் (இராஜ்யங்களில்) எவ்வளவு அழகாயிருக்கின்றன." (ஏசா. 52:7)

"யேகோவாவின் நாளில்" நேரிடும் இந்த உபத்திரவங்கள், வரப்போகிற நன்மையானக் காரியங்களைச் சுவிசேஷமாக பிரசங்கிப்பதற்கு



வாய்ப்பை ஏற்படுத்தித்தரும். நம் குருவின் அடிச்சுவடுகளைப் பின் தொடர்ந்து, காயங்களில் எண்ணெயும் ஆறுதலையும் உற்சாகத்தையும் தரும் திராட்சரசமும் வார்த்து காயங்களைக் கட்டுகிற நல்ல சமாரியர்கள் பாக்கியவான்கள். அப்படிப்பட்டவர்களின் உழைப்பு வீணாய்ப் போகாதென்று நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில், "கர்த்தரின் நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்." (ஏசா.26:9)

கர்த்தருடைய பிள்ளைகளின் இரக்கம், அவர்களின் பரலோகப் பிதாவைப் போலவே அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெறுவதற்காக போராடி தவிக்கிற சிருஷ்டியோடு அதிகமாக இசைந்திருக்க வேண்டும். தீமையை எதிர்த்துப் போராடி, நீதியையும், நியாயத்தையும் விரும்புகிற வகுப்பாருக்கு, அவர்களுடைய விழுந்துபோன சுபாவத்தினால் உண்டாகும் பெலவீனங்கள் மாத்திரமல்ல, அவர்களுடைய வாழ்க்கையின் சுற்றுப்புற சூழ்நிலைகளும், மற்றவர்களோடு அவர்களுக்குள்ள ஐக்கியமும், சார்ந்திருத்தலும் அவர்கள் எடுக்கும் நன்முயற்சிகளுக்கு பெரும் தடையாக உள்ளதை நினைவுகூர்ந்து, தங்கள் பிதாவைப் போலவே அவர்கள்மேல் இரக்கம் காண்பிக்க வேண்டும். ஆனால் கர்வம், திருப்தியடையாத ஆசை, மற்றும் முயற்சி உடைய எந்த வகுப்பாருக்கும் கர்த்தருடைய பிள்ளைகள் பரிதபப்படக்கூடாது. அவர்கள் பேசும் சொற்கள் சாந்தமாயும், அடக்கமாயும் தங்கள் குறிக்கோள்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தாமல் எப்போதும் சமாதானத்துக்கடுத்ததாகவும் இருக்க வேண்டும். இது கர்த்தருடைய யுத்தம் என்றும், அரசாங்கம் மற்றும் சமுதாயத்துக்கடுத்த பிரச்சனைகள் அனைத்திற்கும், தேவனுடைய வசனத்தில் முன்னறிவித்திருக்கிறபடியே அன்றி, வேறு எவ்வகையிலும் உண்மையான தீர்வைத் தரமுடியாது என்றும் அவர்கள் நினைவில்கொள்ளவேண்டும். ஆகவே தேவனோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்து கொண்டவர்களின் கடமை என்னவெனில், அவர்கள் யேகோவாவின் இரதம் வருகிற பாதையில் நிற்காதவாறு பார்த்துக்கொள்வதும், அடுத்ததாக இந்தப் போராட்டத்தில் பங்கேற்பது தங்களுடைய பணியல்ல என்றும், மாறாக இவைகள் வேறு பிரதிநிதிகளினால் நிகழும் கர்த்தருடைய செயலே என்றும் உணர்ந்து, " நின்று கொண்டு தேவனுடைய இரட்சிப்பைப் பார்ப்பதே" ஆகும். (யாத். 14:13) இப்படிப்பட்ட எந்தச் சம்பவங்களிலும்

அவர்கள் தலையிடாமல், தங்களுடைய சொந்த ஊழியத்தில் தொடர்ந்து முன்னேறி, அனைத்து வகுப்பாருக்கும் ஒரே நிவாரணமும் நம்பிக்கையுமாக இருக்கிற பரலோக இராஜ்யம் சமீபமாய் இருக்கிறது என்பதை அவர்கள் வெளியரங்கமாக அறிவித்துக் கொண்டிருக்க வேண்டும்.

■ ■ ■ ■

# அத்தியாயம் – 16

## முடிவுரை

சத்தியத்தின் பேரில் நமது கடமை – அதன் விலையும், மதிப்பும், பலனும்

சர்வவல்லமையும், ஞானமும், நீதியும், பேரறிவும்கொண்ட தேவன் அனைத்தையும் படைத்தவர் என்றும், அவரே அனைத்தின்மேலும் அதிகாரமும், உரிமையுமுடைய கர்த்தரென்றும், ஜீவனுள்ள, ஜீவனற்ற படைப்புகள் அனைத்தும் அவரது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவைகள் என்றும், நாம் இயற்கை வெளிப்படுத்தும் வெளிச்சத்திலிருந்தும் முந்தைய அதிகாரங்களிலிருந்தும் கண்டோம். மேலும் வேதாகமமே அவரது குணாதிசயங்களையும், திட்டங்களையும் மனிதர்களுக்கு வெளிப்படுத்துகிற புத்தகமென்றும் நாம் பார்த்தோம். தேவனது சில சிருஷ்டிப்புகளிடையே தீமை ஆதிக்கம் செலுத்திவந்தபோதிலும், ஒரு குறிப்பிட்டக் காலங்களுக்கு மட்டுமே அது நீடித்திருக்கும் என்றும், அத்தீமை வரைமுறைக்குட்பட்ட அளவே அவரால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதன் முடிவு தேவன் தீர்மானித்திருக்கிறபடியே ஞானமாக முடிவடையும் என்றும் நாம் கற்றுக்கொண்டோம். இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடிக் கொண்டிருந்தாலும், தேவ வெளிச்சமானது ஏற்றவேளையில் இருள் அனைத்தையும் அகற்றி, முழுப் பூமியையும் அவரது மகிமையால் நிரப்பும் என்றும் நாம் கற்றறிந்தோம்.

தேவனது மாபெரும் திட்டம் நிறைவேறுவதற்குப் பல யுகங்கள் தேவைப்பட்டன என்றும், அத்திட்டம் முழுமையடைவதற்கு இன்னும் ஒரு யுகம் தேவைப்படுகிறது என்றும் நாம் கண்டோம். கடந்துபோன இருண்ட யுகங்களில் தேவன் தம் சிருஷ்டிகளை மறந்துவிட்டார் என்பது போன்ற தோற்றம் ஏற்பட்டிருந்தபோதிலும், அந்த இருண்ட யுகங்களின்போது அவரது திட்டம் மனிதருக்கு ஞானமாக மறைக்கப்பட்டிருந்தபோதிலும், மனுக்குலத்திற்கான வருங்கால ஆசீர்வாதங்கள் அமைதியாகவும் அதேசமயத்தில் மகத்துவமாகவும் நிறைவேறிக்கொண்டே



வந்திருக்கின்றது. உலகத்திற்கு விரைவில் விடியவிருக்கும் அந்த நாள் அல்லது யுகம், உலகத்திற்கான நியாயத்தீர்ப்பாகவும், அல்லது பரீட்சையாகவும் இருக்கும் என்றும் நாம் பார்த்திருக்கிறோம். ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் நித்திய ஜீவனுக்கான பரீட்சை வைக்கப்படும்பொழுது, முழு மனுக்குலமும் அந்தத் தயவைப் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே, முன்பு அனைத்து ஆயத்தமாக்கும் பணிகளும் செய்யப்பட்டன. நீண்ட காலப்பகுதியாகிய ஆறாயிரம் வருடத்தில் மனுக்குலம் பழுகிப் பெருகியிருக்கிறது. அதன் தீமையின் ஆட்சியின் கீழ் அவர்கள் அடைந்த மற்றும் போராட்டங்களின் அனுபவம் நியாயத்தீர்ப்புக்கு அவர்கள் கொண்டுவரப்படும்பொழுது, மிகுந்த நன்மைகளை அடைவதற்காகவே ஆகும். மனுக்குலம் முழுவதும் ஆறாயிரம் வருடங்களாக பாடுகளை அனுபவிக்க அனுமதிக்கப்பட்ட போதிலும், ஒவ்வொருவரும் தங்கள் ஜீவியத்தை வருத்தி ஓடின ஓட்டம் மிகக் குறைந்த வருடங்களே.

மனுக்குலம் இவ்வாறாக அவசியமான தேவ சிட்சைக்கு உட்பட்டு இருந்தபொழுது அவர்களை மீட்பதற்காக ஏற்றவேளையில் தேவன் தம் குமாரனை உலகத்திற்கு அனுப்பினார். ஆனால் அக்காலத்திலிருந்தவர்களில் பெரும்பாலனோர் தாழ்ந்த நிலையில் இருந்த மீட்பரை அறிந்துகொள்ளவில்லை. தங்களை விடுவிப்பதற்காக தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் இப்படிப்பட்ட நிலைமையில் வருவார் என்று விசுவாசிக்கவில்லை. ஆனாலும் அவர்களிலும் சிலர் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கையாயிருந்து, தங்கள் இருதயத்தை தேவனுக்கு நேராகத் திருப்பினவர்கள். தேவன் கடந்தக் காலங்களில் அவரது இராஜ்யத்தின் மேன்மை, கனத்தை சுதந்தரித்துக்கொள்ள இரண்டு வகுப்பாரை தேர்வு செய்து வந்தார் என்பதை விசுவாசித்தார்கள். தெய்வீகத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அவர்களைப் பங்குப்பெறச் செய்வதே அந்தத் தேர்ந்தெடுத்தல் ஆகும். தெரிந்தெடுக்கப்பட்ட அந்த இரண்டு வகுப்பார், நாம் முன்னரே பார்த்தபடி தேவராஜ்யத்தின் இரண்டு பாகங்களை அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவர்கள் ஆவர். இந்த இராஜ்யம் பூமியில் கூடிய விரைவில் ஸ்தாபிக்கப்படும் என்று தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளிலிருந்து நாம் அறிகிறோம்; ஞானமும், நீதியுமுள்ள அந்த அரசாட்சியில் பூமியிலுள்ள குடும்பங்கள் அனைத்தும் நித்திய ஜீவன்பெற

தகுதியுள்ளவர்களா ? என்று சோதிக்கப்பட்டு, அவ்வாய்ப்பைப் பயன்படுத்தி தேறினவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்; கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்டதின் பலனாக பரிசுத்த வழியாகிய பெரும்பாதை திறக்கப்படும். கர்த்தரால் மீட்கப்பட்ட அனைவரும் (அதாவது முழு மனுக்குலமும் — எபி. 2:9) அவ்வழியில் நடக்கலாம்; பரிசுத்தமும், தூய்மையும் ஆக விரும்புகிற அனைவருக்கும் இது ஒரு பொது வழியாக சுலபமானதாக இருக்கும். கண்ணிகள், தடைகள் யாவும் அகற்றப்படும். வசீகரங்களும், படுகுழிகளும் நீக்கப்படும். நித்திய ஜீவனுக்கும், பரிபூரணத்துக்கும் இவ்வழிமுறையின்படி போகிற அனைவரும் பாக்கியவான்கள்.

யேகோவா தேவன் உலகத்திற்கு நியாயாதிபதியாகவும், ஆட்சியாளராகவும், நியமித்திருக்கிற கிறிஸ்து மீண்டும் வரும்வரை இந்த அரசாட்சி அல்லது நியாயத்தீர்ப்பு ஆரம்பமாகாது என்பது வெளியரங்கமாக இருக்கிறது. இந்த இரண்டாம் வருகையானது மறுபடியுமாக ஏழ்மைக் கோலத்தில் இராமல் மகிமையும், வல்லமையும் பலம் பொருந்தினதாக இருக்கும். இவ்வுலகத்தை மறுபடியும் மீட்பதற்காக அல்ல, மாறாக நீதியாய் நியாயந்தீர்த்து அரசாட்சி செய்யவே. முன்கூட்டியே ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், ஏற்றவேளையில் நியாயாதிபதி நீதிமன்றத்தின் நடுவே நியாயாசனத்தில் அமர்ந்தால்தான் நியாயந்தீர்க்கும் விசாரணைகள் சாத்தியம். அவ்வேளையின்போது, இராஜாவானவர், சிங்காசனத்தின்மேல் மகிமையில் வீற்றிருப்பார். அனைத்து தேசத்து ஜனங்களும் அவர் முன்பாக கூட்டிச்சேர்க்கப்படுவர். வேதாகம புஸ்தகங்கள் திறக்கப்பட்டு, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கிற அந்த யுகத்தில், அவரவர் தம்தம் கிரியைகளின்படியே நியாயந்தீர்க்கப்படுவர். அவர்களுக்கு முழுவதும் தேவையான உதவிகளையும் செய்து பின்னர் வரப்போகிற மகிமை மற்றும் மகிழ்ச்சியும் உடைய யுகத்தில் நித்திய ஜீவனுக்குத் தகுதியுடையவர்கள் யார் என்று அவரால் தீர்மானிக்கப்படுவர். (மத். 25:31; வெளி.20:11–13)

இப்படியாக நாம் பார்த்திருக்கும் காரியங்களனைத்தும் பூமியில் தமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கான மேசியாவின் இரண்டாம் வருகையானது அனைத்து தரப்பு ஜனங்களும் நம்பிக்கைகொள்ளும்படியாக இருக்கும்.



இந்த மேன்மையை முழுமையாகப் புரிந்துகொள்ளும்போது, மகிழ்ச்சியும், பேரானந்தமும் அனைத்து மனிதர்களின் இருதயங்களிலும் குடிகொள்ளும். இந்த நாளின்போது கர்த்தரின் "சிறுமந்தை" வகுப்பாராகிய தங்களையே ஒப்புக்கொடுத்த பரிசுத்தவான்கள் மாபெரும் சந்தோஷத்தில் களிகூருவர். இந்த மகிழ்ச்சியான நாளின்போது, கற்புள்ள கன்னிகையாகிய திருச்சபையார் மகிழ்ச்சியுடன் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாவார்கள். அந்நாளில் அவள் வனாந்தரத்திலிருந்து வெளியேறி தன் நேசரின் அரவணைப்பில், அவரது மகிமையின் சுதந்தரத்திற்குள் பிரவேசிப்பாள். அந்நாளில், உண்மைத் திருச்சபை தன் தலையாகிய கிறிஸ்துவுடன் மகிமையடைந்து தெய்வீக அதிகாரத்தையும், வல்லமையையும் அணிந்துகொண்டு, இவ்வுலக மக்கள் இழந்துபோன அனைத்தையும் திரும்பக்கொடுக்கும் மாபெரும் பணியைச் செய்யத் தொடங்குவாள். மாபெரும் விரோதியாகிய சாத்தான் கட்டப்படும்பொழுதும், ஆறாயிரம் வருடங்களாக, மனுக்குலத்தைக் கட்டிப்போட்டிருந்த விலங்குகள் உடைக்கப்படும்பொழுதும், சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்பொழுதும் அது உலகிற்கு ஒரு சந்தோஷமான நாளாயிருக்கும்.

இந்தக் காரியங்களைப் பற்றிய அறிவும், அவை வாசலருகே வெகு சமீபத்தில் இருக்கிறது என்பதற்கான சாட்சியங்களும் அனைவருக்குள்ளும் உறுதியான தாக்கத்தை உண்டாக்க வேண்டும். விசேஷமாக, தெய்வீகச் சுபாவமாகிய பரிசை அடையத்தேடும் தேவனுடைய பிள்ளைகளாகிய உடன்படிக்கைச் செய்துகொண்டவர்களிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் தங்கள் மீட்பு சமீபமாகிவிட்டதை உணர்ந்து தங்கள் தலைகளைச் சந்தோஷமாய் உயர்த்தி, தங்களைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு, தாங்கள் துவக்கின விசுவாச ஓட்டத்தைப் பொறுமையோடு ஓட வேண்டுமென்று வலியுறுத்துகிறோம். சுயத்தைவிட்டு பார்வையை விலக்கி தவிர்க்க முடியாத பலவீனங்கள், அபூரணத் தன்மைகள் ஆகியவைகளை எண்ணாமல், அப்படிப்பட்ட பலவீனங்கள் நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் கொடுக்கப்பட்ட மீட்கும்பொருளின் புண்ணியத்தினால் முற்றிலுமாக மூடப்பட்டுவிட்டன என்று

அறிந்துணர்ந்தவர்களாய், அதோடுகூட உங்களுடைய பலிகளும் சுயத்தை வெறுத்தலும் நமது மீட்பரும் கர்த்தருமானவர் மூலமாக மட்டுமே தேவனால் அங்கீகரிக்கப்படுகின்றன என்றும் அறிந்திருக்கவேண்டும். தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறபடி தம் திருவசனங்களின் மூலமாக ஏற்பாடு செய்திருக்கின்ற பலமும், ஆற்றலும் "ஜெயங்கொள்வதற்குப்" போதுமானவை என்பதை நினைவுகூருவோமாக. ஆனால் இந்த மாபெரும் ஆற்றலை அடைவதெப்படி? அவரது குணநலன்களையும், திட்டங்களையும், அதின் பங்காளிகளாவதற்கு விதிக்கப்பட்டிருக்கிற நிபந்தனைகளையும் அறிகிற அறிவினாலேயே அடைய முடியும். அவ்வாறே பேதுரு அப்போஸ்தலன் அறிவுறுத்துகிறார். "தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினால் ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அருளப்பட்டிருக்கிறது." (2 பேது. 1:2–4)

பரலோகப் பரிசை அடைவதற்காக ஓடுகிற ஒவ்வொருவருக்கும் தேவன் இப்பேராற்றலையும், அறிவையும் அளிக்கச் சித்தமானார். ஆனால் இவற்றைப் பெறுவதற்கு அவரவர் செய்த உடன்படிக்கையின் பொருத்தனைகளை உண்மையும், உத்தமுமாக நிறைவேற்றுகிறார்களா என்று பரிசோதிக்கப்படுவார்கள். கர்த்தருக்கென்று உன் முழு நேரத்தையும், உன் அனைத்துத் திறமைகளையும் தத்தம் செய்திருக்கிறாய். ஆனால் அதில் நீ எந்தளவுக்கு கர்த்தருக்குச் செலுத்துகிறாய்? என்பதே கேள்வி. நீ செய்துகொண்ட பரிசுத்தமான உடன்படிக்கையின்படி உன்னுடைய அனைத்தையும் கொடுத்துவிட இன்னும் மனதார விரும்புகிறாயா? தேவனது மாபெரும் திட்டத்தையும், வழிமுறைகளையும் ஏற்றுக்கொண்டு அவரது பணியைச் செய்வதற்காக, உன் சுய திட்டங்களையும், சுய கொள்கைகளையும் விட்டுவிட விரும்புகிறாயா? இவ்வாறு செய்யும்பொழுது பூமிக்குரிய நண்பர்களையும், சமுதாய உறவுகளையும்



அற்பமாக எண்ணி விட்டுவிட சம்மதமா? உண்மையாக தேவனோடு ஞானஸ்நானம் செய்துகொண்டோருக்கு இருதய சந்தோஷத்தைத் தருகிற தேவனது மகிமையானத் திட்டங்களை ஆராய்ந்து கண்டுபிடிப்பதற்காக, நேரத்தைச் செலவிட உன் சுயத்தை வெறுத்துவிடுவாயா? நீ கர்த்தரிடம் எல்லாவற்றையும் கொடுத்தபோது, எல்லாம் அர்ப்பணிக்கப்படவில்லையென்றால் அல்லது அரை மனதோடு கொடுத்திருந்தால், முந்தைய காலத்தைக் காட்டிலும் தற்காலத்தில் (ஆயிர வருட யுகத்தின் விடியலில்) அதிகமாக இருக்கும் அனைத்து விசுவாச சோதனைகளுக்கும் தேவையான பலத்தைப்பெற மறைக்கப்பட்டுள்ள புதையலுக்காக அவரது வசனத்தை ஆராய்வதற்கு தேவையான நேரத்திலும் முயற்சியிலும் அதிருப்திகொள்வாய்.

ஆனால் இதை ஆராய்வதற்கு தேவையான நேரத்தையும், ஆற்றலையும் மட்டும் கொடுத்தால் மட்டும் போதுமானது என்று எண்ணவேண்டாம். "சிறுமந்தையாகிய" ஜெயங்கொண்ட திருச்சபையில் அங்கத்தினராகும் தகுதி பெறுவதற்கு, சுயத்தை வெறுத்தலில் உண்மையும், உத்தமுமாக இருக்கிறோமா என்று முழுவதும் பரிசோதிக்கப்படும். இதில் தேர்ச்சிப் பெற்றோரே இராஜ்யத்தின் மகிமையை அடைவார்கள். நீ சத்திய வசனத்தில் ஆர்வம் காட்டி அதன் சத்தியங்களை உடன்படிக்கைச் செய்துகொண்ட நல்லதும், உண்மையுமான உன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டால், அது தேவனது அன்பிலும், அவரது திட்டத்திலும் உன்னை ஜெழுப்பிக்கும். இப்படியாக நற்காரியங்களை சுவிசேஷமாய்ப் பிரசங்கிக்கும் பேரார்வத்தை உண்டாக்கி, அதுவே உன் ஜீவியம் முழுவதும் உன்னை இயக்கும் சக்தியாகும். இவ்வாறாக உலகிலிருந்தும் அநேக பெயர் கிறிஸ்தவ சபைகளிலிருந்தும் உன்னை ஆவியில் பிரித்தெடுத்து அவர்களிலிருந்து முற்றிலும் பிரியும்படி அது உன்னை நடத்திச் செல்லும். அவர்களோ உன்னை அன்னியனைப் போல எண்ணி, அவர்களது நட்புறவிலிருந்து விலக்கிவிடுவர். இதனால் நீ கிறிஸ்துவினிமித்தம் புத்தியீனனாகக் கருதப்பட்டு வெறுத்து ஒதுக்கப்படுவாய். ஏனெனில் அவர்கள் கர்த்தரை அறியாததைப் போலவே நம்மையும் அறியவில்லை. (1 கொரி. 3:18; லூக். 6:22; 1 யோவா. 3:1; 2 கொரி.4:8–10)

உனக்கு நேரிடும் நற்கீர்த்தியிலும், துர்க்கீர்த்தியிலும், கர்த்தரை அறியவும் அவரைப் பின்பற்றவும் மனதாயிருக்கிறாயா? உன் சுய விருப்பங்களையும், நண்பர்களின் விருப்பங்களையும் விட்டுவிட்டு, தேவனது வசனத்தால் வழிநடத்தப்பட்டு, அவரைப் பின் தொடருவதற்காக அனைத்தையும் துறந்துவிட பிரியமாயிருக்கிறாயா? இந்தப் புத்தகத்தைப் படிக்கிற, அநேக உடன்படிக்கை செய்த சகோதரர்கள் தெய்வீகத் திட்டத்தைப் பற்றிய தெளிந்த அறிவைப் பெற்று, ஆவியில் திடன்கொண்டு, வைராக்கியத்தில் புத்துணர்வு அடைந்து, "தேவ கிருபையினால் கர்த்தரை அறியவும் அவருக்கு ஊழியஞ்செய்யவும், அதற்காக எப்படிப்பட்ட தியாகத்தைச் செய்ய நேரிடினும் நான் செய்து முடிப்பேன்" என்று கூறுமளவுக்கு திடமடைவர் என்று நம்புகிறோம். பெரோயா பட்டணத்து நற்குணசாலிகளைப் போல் (அப். 17:11), முந்தைய பக்கங்களில் எடுத்துக் காண்பித்தவைகளை நிரூபிக்கும்படியாக தங்களை தயார்படுத்துவார்களாக. முரண்பாடான மனிதப் பாரம்பரியங்களாலும், மனிதப் போதனைகளாலும் அல்ல, மாறாக தெய்வீக அதிகாரம் பெற்றதும், நிலையானதும், பிழையற்றதுமாகிய தேவனுடைய வசனத்தின்படியே நிரூபிப்போமாக. இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை எளிதாக செய்வதற்காகவே ஏராளமான வேதவசனங்களை நாம் எடுத்துக் காண்பித்திருக்கிறோம்.

வேதப் போதனைகளென்று இதுவரை நிரூபிக்கப்படாமல் முன்னர் நிலவிவந்த பலவிதமான மனித அபிப்பிராயங்களோடு இங்கே கூறப்பட்ட தெய்வீகத் திட்டத்தை பொருந்தும்படி முயற்சி செய்வதில் எவ்வித பயனும் இருக்காது. தெய்வீகத் திட்டமானது முழுமையானதும், ஒன்றுக்கொன்று ஒவ்வொரு பகுதியும் இசைவாகப் பொருந்துவதாகக் காணப்படுகிறதுடன், அத்திட்டமானது வேதாகமத்தின் மாபெரும் ஆசிரியராகிய நம் தேவனைப் பற்றி வேத வசனங்கள் கூறும் குணநலன்களுடன் பரிபூரணமாக இசைந்திருக்கிறது. இது ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகியவைகளின் ஆச்சரியமான வெளிப்படுத்தலாகும். மேலும் மனித சக்திக்கு எட்டாததும், மனிதக் கண்டுபிடிப்புகளின் வல்லமைகளுக்கு அப்பாற்பட்டதுமான உன்னதமான தெய்வீக வடிவமைப்பு என்று தனக்குத்தானே சாட்சியம் கூறுகிறது.

இங்கே கூறப்பட்ட தெய்வீகத் திட்டத்தின் பல காரியங்களைக்



குறித்த சரியானத் தீர்வைக் காண்பதற்குக் கேள்விகள் எழும் என்பதில் ஐயமில்லை. கவனமாகவும், கருத்தோடும் வேதாகமத்தைக் ஆராயும்போது அநேக சந்தேகங்களுக்கு தீர்வை உடனே அது தரும். நம் மனதில் எழும் எத்தகைய கேள்விகளுக்கும் விடை இங்குக் காண்பித்த விஷயங்களில் உள்ளது என்றும், அதோடு முழு இசைவாகப் பொருந்துகிறது என்றும் உறுதியாகக் கூறலாம். ஒரே தெய்வீகத் திட்டத்தின் பல்வேறு பிரிவுகளைக் குறித்து இனி வரவிருக்கின்ற வேதாகம விளக்கவுரை தொகுதிகளில் விவரமாகத் தரப்பட்டுள்ளது. சத்தியத்திற்கு மட்டுமே உரித்தான நிகரில்லா இசைவை ஒவ்வொரு படியிலும் அது வெளிப்படுத்துகிறது. மற்ற எந்த இறையியல் கோட்பாட்டுடன் சத்திய வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் இசைவாகப் பொருத்தி, தங்கள் கொள்கைக்கு இசைவாக்க முயன்றதில்லை. ஆனால் நமது கொள்கைகளோ இசைவாய்ப் பொருந்தியிருக்கிறது. இந்த ஒற்றுமையானது வேதாகமத்தோடு மட்டுமல்ல, தெய்வீகக் குணாதிசயத்தோடும், தெளிந்த புத்தி அறிவிற்கும் சிறிதளவும் வேறுபடாமல் இருப்பதும் சுத்த மனசாட்சியுடன் வாசிப்பவரது கவனத்தை ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறே இதை வாசிக்கும்பொழுது, உறுதியானத் தீர்மானமும், தெய்வ பயமும் ஏற்படும். இத்திட்டமானது ஆச்சரியமானதாயுள்ளபோதிலும், தேவனுடைய அனந்த ஞானத்தையும், நன்மை பொருந்திய திட்டத்தையுமே சத்தியமாக நாம் எதிர்பார்க்கலாம்.

இவ்வாறாக வேதாகமம் தெய்வீகத் திட்டத்தின் அதிசயங்களை வெளிப்படுத்தி வரும்போது (சங். 119:18) மனிதரின் பாரம்பரியம் மற்றும் பல்வேறு விசுவாசப்பிரமாணங்களின்மேல் உள்ள வெளிச்சம் அவைகளுக்கு எதிராக நின்று அவைகளைப் பாதிப்புக்குள்ளாக்குகிறது. அந்தக் கொள்கைகளை ஆராதிக்கிறவர்கள்கூட அவைகள் தவறான ஆதாரமானவைகள் என்றும், சீர்கேடானவை என்றும் புரிந்துகொண்டுள்ளபடியால் அவற்றை விட்டுவிடுகின்றனர். இன்னும் அநேகரோ தொடர்ந்து அவற்றைக் கடைபிடித்து வந்தாலும், அவற்றைக் குறித்துப் பேசினால் அவமானத்துக்குள்ளாக நேரிடும் என்றறிந்து வெளிப்படையாய்ப் பேசாதிருக்கின்றனர். சிலர் வேதாகமத்தைப் பற்றிப் பேசவே வெட்கப்படுகின்றனர். காரணம் என்னவெனில், மனிதப் பாரம்பரியங்களாலும், பழக்கவழக்கங்களாலும் சீர்கெட்டுப்போன இந்த கொள்கைகளுக்கு பரிசுத்த வேதாகமமே காரணம் என்று அவர்கள்

என்றுகூறுகின்றனர். முற்போக்கு சிந்தனையாளர்களாக தங்களைக் கூறிக்கொள்பவர்கள், தங்களுடைய சுயாதீனத்தினால் வேதத்திலுள்ள அநேகப் பகுதிகள் தங்களுடைய கருத்துக்களுக்கு ஒத்துப்போகிறதில்லை என்று எண்ணி அவைகளை மறுக்க ஆரம்பிக்கின்றனர். தேவ வழிநடத்துதலினால் அவரது உண்மையான மகிமையும், இசைவானதுமான திட்டத்தின் வெளிச்சம் என்று அவரது பிள்ளைகளுக்கு இக்காலத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது எத்தனை மேன்மையானது. அந்தத் தெய்வீகத் திட்டத்தின் ஒவ்வொரு பகுதியும் தேவனது வசனத்தோடு இசைவாய்ப் பொருந்துகிறதே தவிர ஒன்றையும் மறுப்பதில்லை. சத்தியமானது ஏற்றவேளையில், விசுவாச வீட்டார் உட்கொண்டு வளர்வதற்காக கொடுக்கப்படுகிற பலமான ஆகாரம் ஆகிறது. (மத். 24:45) சத்தியத்தோடு தொடர்புகொள்ளும் எவரும், அதன் குணாதிசயத்தை உணர்ந்து, அதற்குப் பொறுப்பாளிகளாக தங்களை ஆக்குகின்றனர். இதை ஒருவர் ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கலாம் அல்லது ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்து அலட்சியம் பண்ணலாம். சத்தியத்தைப் புறக்கணிப்பவர்கள் தங்களுடைய பொறுப்பிலிருந்து விடுதலையாவதில்லை. அதை நாமே ஏற்றுக்கொண்டால் அதன் பேரில் அதிகப் பொறுப்பாளிகள் ஆகிறோம். ஏனெனில், சத்தியம் விசுவாச வீட்டார் அனைவருக்கும் அது உரியது. அதை ஏற்றுக்கொள்கிற ஒவ்வொருவரும் அதற்கு கடனாளிகளாகின்றனர். உண்மையும், உத்தமமுமுள்ள ஊழியக்காரனோ அதைப் பெற்று, தேவனது குடும்பத்திலுள்ள மற்ற அங்கங்களுக்கு பகிர்ந்துகொடுக்கிறவனாகிறான். உன் ஒளி பிரகாசிக்கட்டும்! அந்த ஒளி மங்கி இருளானால் அந்த இருள் எவ்வளவு காரிருளாக இருக்கும். "ஒளியை உயர்த்துங்கள்! ஜனங்களுக்கு ஒரு கொடியை உயர்த்துங்கள்!"

* * * *



## தெய்வீக நெசவு

"பாரும்! மறைவான மாபெரும் கல்வ நெசவாளர்
பரலோக மீது அமர்ந்துள்ளார் அவர்தம் தறியோ பூமியாகும்!
மேலும் கீழும் நெசவுக்கட்டை, அழுத்தி அழுத்தி நெய்கின்றார்.
உலகின் இருண்ட காலங்களை பாவாய் கொண்டு நெய்கின்றார்.
வடிவமைப்பாக பிரபுக்கள், ஞானிகள் அரசர் பாவலரும்
அவர்தம் வாழ்க்கைப் பக்கங்களை அமைத்து வான நிலைகளிலும்
அவரே எடுத்துக் கையாண்டு அழகாய் தொடுத்து நெய்கின்றார்!
அவர்தம் ஓடும் கட்டையிலே, நூல்கட்டு என்பது அரியணைகள்!
சேனைகள் குறுக்கு நெடுக்காக ஓடும் ஓடும் விரைந்தோடும்
தேசங்கள் மேலும் கீழும் சென்று வடிவமைப்பாக வலை பின்னும்
நெசவாளர்தம் ஆணைப்படி அவையும் ஆங்கே அமைந்தோடும்!

"முன்னும் பின்னும் ஓடும் கட்டை வீசும் ஞான நெசவாளர்
உற்றுநோக்கி பழுதில்லா, ஆழ்ந்த மனக் கண்ணால் பார்.
ஜுரம், கடல்கள், போர்முனைகள், போட்டி வந்தே சேர்ந்திடினும்
நெசவுக்காரர் அறிவாரே ஒவ்வொரு அசைவும் சந்தடியும்.
எத்தனை கட்டளி குழப்பங்கள் இருந்தபோதும் இறுதியிலே
மாபெரும் திட்டம் காட்டிடுமே மகத்தான தேவன் யார் என்று!

"தேவனின் நெசவு எத்தனை மகிமை, ஒடுக்குக்கெல்லாம் புரியாதுள்ளமை
கட்டுக்கதை எனப் பகிர்ந்திடும்
விசுவாசமிருந்தால் விந்தையைக் காண்பாய்
வரலாற்றிடையில் ஞானிகள் நடத்தும்
அனைத்து தேவனின் படைப்பைக் காணும்
கண்களின் அழகிய பெருமைகளும்.
தேவ தூதரே நடக்கத்தக்கதாய் விருதுவாய் இறைவாம் பரந்து விரிந்ததாய்
ஒதுங்கிய வளைவுகள் வைத்தால் ஆடி
ஒவ்வொரு படைப்பும் கல்வரியின் சாட்சிகளாய்
வெண்மைக் கொண்டு பிரகாசமாக
ஆன்மிக அறிவொளி ஏற்றிவைத்து
புதிராய் மறைந்தார் எங்கோ கை வல்லவர்.
சிந்தனையின் வடிவம் தேவனின் திட்டம்
வையகம் மீண்டும் எதிரொலித்திடுமே.

"என்பது பழமொழி (நீண்ட) ஏற்ற பழமும்,
பரத்திலிருந்து மின்னிடும் சூரியன்
மாபெரும் தேவன் அவரே நெய்வார்.
எல்லோரும் ஏமாம் நம்பியே வாழலாம்
உலகிலிருண்ட இரகசியம் அனைத்தும்
அவரே கொணர்ந்தார் வெளிப்படையாக்குவார்.
விசுவாச வெளிச்சம் வரலாற்றின் ஒளியில்
வடிவமை குழப்பங்கள் நெய்து முடிக்க
மாபெரும் முழுமையுடன் மகிமை நெருங்க
ஞானிகள் நீக்கார் முன்னுரைப்படியே
காலங்கள் தவளிடும் – அது பொற்காலம்.

# யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டம்
## வேத வசன அட்டவணை


**ஆதியாகமம்**

1:26–28 ........ 309
1:27 ........ 210
1:31 ........ 215
2:4 ........ 167
2:9,16,17 ........ 290
2:17 ........ 169, 188
3:15 ........ 60, 113
3:22 ........ 143, 281
5:1 ........ 249
7:13 ........ 277
12:3 ........ 61
13:14–17 ........ 372
18:1,2 ........ 226
18:18 ........ 61
19:24 ........ 129
19:36–38 ........ 41
22:18 ........ 61
28:14 ........ 61
38ம் அதி ........ 42
49:10 ........ 42
49:28 ........ 86

**யாத்திராகமம்**

5:4–23 ........ 428
12:30–33 ........ 428
12:49 ........ 61
14:13 ........ 434
18:13–26 ........ 47
19:17–25 ........ 56
21:26, 27 ........ 54
22:21–24 ........ 54
22:25 ........ 50
23:4,5 ........ 51
23:9 ........ 54
23:12 ........ 52
24:12 ........ 55
26:30 ........ 55

**லேவியராகமம்**

1:1 ........ 56
19:13 ........ 54
19:14 ........ 54
19:17 ........ 56
19:32 ........ 54
19:33, 34 ........ 51, 54
24:22 ........ 51
25:9, 13–23, 27–30 ........ 50
25:36, 37 ........ 50

**எண்ணாகமம்**

11:16,17,24–30 ........ 47
26:52–56 ........ 50

**உபாகமம்**

1:15 ........ 47
1:16,17 ........ 49
1:17 ........ 48
5:1–5 ........ 56
9:9–11 ........ 55
12:19 ........ 53
14:27 ........ 87
16:15 ........ 87
18:15, 18 ........ 61
22:10 ........ 52
24:14 ........ 54
25:4 ........ 52
28:5 ........ 88
31:9,27 ........ 43
31:10–13 ........ 51

**நியாயாதிபதிகள்**

3:9–11 ........ 172
6:11–22 ........ 228
13:20 ........ 226

**1 சாமுவேல்**

8:6–22 ........ 48
15:3 ........ 131

**1 இராஜாக்கள்**

18:4,10,17,18 ........ 58
18:40 ........ 57
19:10 ........ 56

**1 நாளாகமம்**

16:16,17 ........ 88
16:31–34 ........ 178
29:23 ........ 313

**2 நாளாகமம்**

13:8 ........ 313

**நெகேமியா**

8:7 ........ 58





**யோபு**

14:10 ........ 261
14:21 ........ 261
38:7 ........ 277

**சங்கீதம்**

1:1 ........ 22
2:1–6,10–12 ........ 342
2:8 ........ 390
2:8–12 ........ 323, 384
5:4 ........ 141
8:4–8 ........ 239
8:6–8 ........ 311
8:5–8 ........ 215, 221
11:5–7 ........ 385
16:10 ........ 63
17:15 ........ 279
24:3, 4 ........ 362
25:14 ........ 209
30:5 ........ 1
34:20 ........ 60
34:7 ........ 225
34:13,14 ........ 392
37:9 ........ 72
37:35 ........ 73
39:11 ........ 261
45:7 ........ 385
45:16 ........ 373
46:1–5 ........ 410
46:6 ........ 409
46:8–10 ........ 423
48:2 ........ 374
49:7,8,15 ........ 210
49:14 ........ 83, 384
50:3 ........ 409
50:5 ........ 171
67:6 ........ 298
72:7 ........ 72
72:8 ........ 358
76:10 ........ 316
77:18 ........ 209
78:70, 71 ........ 319
89:32 ........ 385
91ம் அதி ........ 429
97:2–6 ........ 412
97:11 ........ 15
98:9 ........ 172
110:1 ........ 105
110:5 ........ 390
110:2–6 ........ 412
112:6 ........ 370
119:18 ........ 444
119:105 ........ 15
149:7, 9 ........ 330

**நீதிமொழிகள்**

4:18 ........ 15
15:3 ........ 175

**பிரசங்கி**

1:4 ........ 74
7:29 ........ 210
9:10 ........ 123, 261
11:3 ........ 123
12:4 ........ 176

**ஏசாயா**

1:18 ........ 15, 61
1:19 ........ 72
1:26 ........ 373
2:3 ........ 323, 377
8:20 ........ 200
11:9 ........ 61, 271, 384
13:1–11 ........ 411
14:14 ........ 234
14:24–27 ........ 70
19:22 ........ 323
21:12 ........ 16
26:9 ........ 434
28:17 ........ 384
28:21 ........ 65
32:1 ........ 340
33:2–24 ........ 429
35:1 ........ 239
35:1–6 ........ 197
35:8 ........ 269
35:8–9 ........ 255
35:9 ........ 271
35:10 ........ 272
40:5 ........ 61
42:1–7 ........ 61
42:7 ........ 22
45:11, 12, 18 ........ 238
45:17 ........ 71
46:9–11 ........ 70
49:8 ........ 61
52:7 ........ 433
52:8 ........ 377
53:3–6 ........ 60
53:4 ........ 269
53:8, 9, 11 ........ 60
53:10 ........ 155
53:11 ........ 158
53:12 ........ 60
55:8, 9 ........ 2
55:11 ........ 110
60:2–3 ........ 12
61:1 ........ 192
61:2 ........ 272, 390
62:10 ........ 271
63:1–4 ........ 390

65:18 — 377, 390
65:20 — 174, 304
66:10–12 — 377

### எரேமியா

3:17 — 377
3:22–23 — 323
16:19 — 61
24:5–7 — 128
30:18 — 373
31:8, 9 — 269
31:28 — 128
31:29, 30 — 128, 173
31:29–34 — 423
31:31 — 171
31:34 — 61, 269
32:40–42 — 126
33:6–16 — 128
36:6 — 56

### எசேக்கியேல்

7:10–19 — 390
11:19 — 423
16:48–54 — 132
16:48–63 — 130, 133
16:55 — 134
16:60–63 — 133
18:4 — 153, 173
21:25–27 — 313
36:25, 36 — 423
36:26 — 363
37:11–14 — 127

### தானியேல்

2:31–45 — 316
2:35 — 329
2:37–43 — 318
2:43, 44 — 321
2:44–45 — 322
2:44 — 341, 390, 391
4:32 — 347
7:2–7 — 325
7:7–8 — 325
7:13, 27 — 329
7:11 — 328
7:14 — 341
7:14, 17, 27 — 341
7:9, 13, 14, 27 — 390
7:27 — 358
9:24–27 — 280
9:26 — 60
10:6, 10, 15, 17 — 226
10:13 — 227
12:1 — 389
12:3 — 369, 370
12:1, 4, 10 — 205

### ஓசியா

6:1 — 323
14:4 — 323

### யோவேல்

2:9–16 — 411

### ஆமோஸ்

3:2 — 112, 278

### மீகா

5:2 — 60

### ஆபகூக்

2:1–3, 13, 14 — 65
3:2–11 — 65

### செப்பனியா

1:7–9, 14–18 — 400
2:2 — 424
2:3 — 423
3:8–9 — 402
3:9 — 423

### ஆகாய்

2:7 — 336

### சகரியா

9:11 — 132
11:12 — 60
14:1, 6, 7 — 65
14:9 — 385

### மல்கியா

1:11 — 61
3:1–3 — 406, 406
3:16 — 72, 324
3:16–18 — 272
4:1 — 75, 405
4:2 — 261, 409

### மத்தேயு

1:2–16 — 41
1:21 — 125
3:2 — 348
3:16, 17 — 221
4:8 — 316
4:17 — 346
5:35 — 374
6:10 — 348
7:13, 14 — 255
7:15 — 57
8:16, 17 — 289





8:22 — 192, 387
10:5, 6 — 78, 112
10:7 — 348
10:26 — 364
11:23 — 129
11:24 — 129
12:40 — 65
13:39 — 299
13:41–43 — 302
13:36, 41, 49 — 299
13:43 — 97, 409
13:52 — 20
14:5 — 67
15:2–8 — 57
15:24 — 78, 112
16:27 — 120
19:30 — 371
22:21 — 336
22:37–39 — 392
22:37–40 — 311
23:38 — 78, 280
24:21, 22 — 389
24:14 — 104
24:38, 39 — 65
24:45 — 445
24:45–46 — 404
25:31 — 439
25:31–46 — 169, 174
25:34 — 387
25:46 — 169
26:64 — 106
28:18 — 366
28:20 — 101

### மாற்கு

3:22–27 — 74
5:30 — 289
10:23 — 350
12:30, 31 — 45

### லூக்கா

2:1 — 320
2:10 — 121
2:10, 11 — 125
2:30, 31 — 125
2:32 — 61
3:14 — 432
3:15 — 345
3:17, 21, 22 — 288
3:22 — 281
3:23, 31, 33, 34 — 43
3:38 — 282
4:1, 18 — 281
4:18 — 272
4:43 — 346
6:19 — 289
6:22 — 442
8:1 — 348
8:10 — 153
9:2 — 348
10:27 — 163
12:32 — 78, 286, 346
12:42 — 20
12:47, 48 — 385
14:11 — 235
14:23 — 241
16:16 — 350, 371
17:20–30 — 349
17:26 — 65
17:29 — 129
19:10 — 219
19:11 — 346
19:11–15 — 359
19:12 — 314
19:42 — 38
21:24 — 315
21:28 — 422
21:34, 35 — 103
22:29, 30 — 346
24:21 — 88
24:21, 25–27 — 347

### யோவான்

1:9 — 121
1:14 — 219
1:18 — 385
1:29 — 120, 192
3 — 350
3:5 — 224
3:5, 6 — 352
3:9 — 290
3:16 — 121
3:17 — 322
3:36 — 125
5:22 — 165, 171
5:26 — 231, 283
5:28, 29 — 178
5:44 — 267
12:31 — 316
14:3 — 102
14:26 — 89
14:30 — 73, 316
15:5 — 92
16:8–11 — 393
16:12, 13 — 18, 89
16:13 — 3
16:33 — 268
17:5 — 252
17:16 — 339
17:22 — 263
19:36 — 60

20:19, 20 — 290

அப்போஸ்தலர்

1:6, 7 — 69
2:31 — 61
3:19 — 188
3:19–21 — 79, 101, 127, 198, 237, 279
3:21 — 108, 304
3:22 — 87
3:23 — 128, 385
3:22, 23 — 307
4:12 — 118
4:19 — 336
5:29 — 338
6:31 — 171
7:5 — 371
9:7 — 227
10:28 — 24
10:37, 38 — 280
10:38 — 91, 281
10:45 — 281
11:1–3 — 24
11:1–8 — 62
11:9 — 89
15:8 — 352
15:14 — 105
15:14–16 — 90
17:11 — 443
17:31 — 168, 188
24:25 — 391
26:9 — 5
26:24 — 97

ரோமர்

1:28 — 332, 391
2:6, 10–11 — 378
2:14 — 117
3:10 — 15, 118
3:19 — 117
3:20 — 117
5:1 — 281
5:8 — 291
5:10, 12, 17–21 — 198
5:12 — 210
5:12, 18, 19 — 149, 154
5:14 — 148
5:17 — 65
5:17, 19 — 61
6:17–19 — 157, 381
5:18, 19 — 128, 190, 219
6:6 — 251, 266
6:10, 11 — 245
6:23 — 153
8:9 — 285
8:11 — 244
8:13, 14 — 266
8:1 — 62, 97, 243, 265
8:18 — 370
8:19 — 388
8:19, 21, 22 — 99
8:19–22 — 198
8:21 — 384
8:21, 22 — 176
8:23, 25 — 245
8:24 — 125
8:28–31 — 240
8:30 — 240
8:31–34 — 375
8:33, 34 — 192
9:18 — 235
9:20 — 232
9:20, 21 — 236
10:13 — 117
10:14 — 119
11:17 — 371
11:22 — 352
11:23, 24 — 379
11:25–33 — 381
11:25, 26 — 127
11:26, 29 — 134
11:28–33 — 127
12:1 — 171, 244, 283, 294, 298, 372, 391
12:2 — 246, 339
13:1 — 315, 318
13:1–7 — 336
13:10 — 311
14:9 — 171, 182
14:17 — 360
15:4 — 318
16:20 — 113, 388

1 கொரிந்தியர்

2:7 — 388
2:6–14 — 94
2:8 — 95
2:13 — 225
2:14 — 224
3:11 — 376
3:12, 15 — 407
3:14, 15 — 407
3:16 — 442
4:8 — 382
4:10–17 — 383
5:5 — 287
6:2 — 176
6:3 — 386
12:12–28 — 91
14:1–6 — 57
15:13–22 — 94





15:21 — 220
15:22 — 124, 155
15:24 — 387
15:25, 26 — 145, 279
15:25 — 174
15:27 — 329
15:28 — 390
15:25–28 — 388
15:38–44 — 237
15:36–49 — 224
15:44 — 248
15:49 — 245
15:52 — 249
15:44, 52 — 205
15:53–54 — 231

2 கொரிந்தியர்

1:21 — 91
3:8 — 387
4:17 — 253
4:8–10 — 442
5:14 — 367
5:17 — 285
6:1 — 298
6:2 — 167
8:12 — 173
11:3 — 65
11:14 — 326
12:2–4 — 75
12:7 — 73
12:9 — 288

கலாத்தியர்

1:4 — 71
2:2 — 24
2:11–14 — 24
2:2, 12, 14 — 89
3:15–18 — 95
3:27–29 — 95
3:29 — 92, 109, 111, 372

எபேசியர்

1:4–6 — 239
1:9, 10 — 23
1:10 — 275, 306, 386
1:12 — 80, 205
1:13, 14 — 245, 251
1:14 — 312
1:20, 21 — 181
1:23 — 92
2:2 — 73, 316
2:7 — 275
2:7–12 — 370
2:8 — 118
2:19 — 338
3:4–6 — 23
3:9 — 99
4:11–16 — 4
5:25–30 — 91
6:12 — 73

பிலிப்பியர்

2:7–8 — 219
2:8–9 — 94, 220, 221
2:9–11 — 105
2:10 — 358, 368
3:8–15 — 273
3:21 — 106
4:11 — 432

கொலோசெயர்

1:16 — 82, 245
1:20 — 388
1:25 — 85
1:27 — 90, 283
3:4 — 97

1 தெசலோனிக்கேயர்

2:16 — 288
5:2, 3 — 424

2 தெசலோனிக்கேயர்

2:13 — 379
2:14 — 263

1 தீமோத்தேயு

2:4 — 123
2:3–6 — 151
2:4–6 — 157
2:5, 6 — 122
2:8 — 220
2:14 — 85, 147, 148
4:10 — 124
5:24 — 175
6:6–12 — 432
6:14–16 — 282
6:15 — 168
6:16 — 231, 365

2 தீமோத்தேயு

1:10 — 18, 253, 257
2:11, 12 — 97, 265
2:12 — 243, 364
2:13 — 140
3:1, 13 — 82
3:1–4 — 102
3:12 — 73
3:15 — 16
3:15, 17 — 21
4:8 — 288, 383

**தீத்து**

1:12 — 57

**எபிரெயர்**

1:3 — 262
1:3–5 — 218
1:4 — 253
1:14 — 226
1:9 — 385
2:5 — 71, 277
2:7 — 215, 216
2:7–9 — 221
2:9 — 112, 121, 439
2:14 — 145, 231
2:16 — 219
3:1 — 276
3:5, 6 — 176
3:6, 9 — 167
4:1 — 242
5:14 — 20
6:4–8 — 407
6:6 — 245
6:18 — 140
7:19 — 282, 287
9:11 — 362
9:11–20 — 68
10:1 — 278, 288
10:4 — 278
10:8–18 — 88
10:16 — 171
10:20 — 257
10:26–31 — 407
10:31 — 387
10:38, 39 — 128
11:13, 39–40 — 372
11:19 — 189
11:32–38 — 56
11:39–40 — 365
11:40 — 107
12:1 — 22
12:26–29 — 408
12:27–29 — 408
13:5 — 432

**யாக்கோபு**

1:18 — 170, 241, 244
2:5 — 360
2:10 — 118
2:23 — 289
4:4 — 267
5ம் அதி — 385
5:1–4 — 398

**1 பேதுரு**

1:2 — 379
1:3 — 89, 244
1:10 — 94
1:10–13 — 23
1:11 — 88
1:12 — 8, 60
1:12–13 — 405
1:19 — 120
2:4–6 — 93
2:9 — 51
2:21 — 20, 243
3:15 — 21
3:18 — 190
3:20 — 65
5:4 — 268
5:5–6 — 94
5:10 — 263

**2 பேதுரு**

1:2–4 — 441
1:4 — 231, 253, 279
1:5–11 — 407
1:10, 11 — 380
1:19 — 21
2:1 — 57
2:9 — 120
2:19 — 65
3:6 — 71
3:6–7, 10–13 — 403, 404
3:7 — 71
3:10, 13 — 424
3:13 — 71

**1 யோவான்**

1:9 — 191
2:1 — 165
2:2 — 192
2:15 — 267
2:27 — 91
2:29 — 352
3:1 — 96, 352
3:2 — 224, 248, 293
3:9 — 352
4:7 — 352
4:8 — 121
5:1 — 352
5:18 — 244
5:1, 18 — 352

**யூதா**

11 — 65
23 — 405

**வெளிப்படுத்தல்**

1:3 — 25
1:7 — 103
2:10 — 359





2:26–27 — 328, 384
3:17–18 — 384
3:21 — 323, 104, 279, 384
4:11 — 140
5:12 — 63
7:9–17 — 267
7:14, 15 — 303
8:7 — 338
10:6 — 98
11:15 — 74
11:17, 18 — 411
12:9 — 65, 328
14:1 — 242
14:14 — 300
16:17–20 — 426
17:1 — 341, 336
17:3–5 — 338
17:14 — 242, 341
18:21 — 387
19:6, 7 — 303
19:7 — 98, 113
19:9 — 303
19:11–19 — 341
19:15, 19–20 — 411
19:17 — 400
20:1–3 — 411
20:2 — 65, 74
20:3 — 177
20:4 — 79, 104
20:5 — 365
20:6 — 245, 364, 382
20:9 — 304, 389, 385, 405
20:11–13 — 439
20:15 — 174
21:1 — 76
21:3–5 — 196
21:4 — 79, 238
21:8 — 174
22:17 — 113, 111, 192
21:24 — 375
21:24–26 — 376
22:12, 20 — 102